ITHIHASA MANJARI SERIES.

உ

வேலுமயிலுந்துணை.

கந்தபுராணவசனம்.

யுத்தகாண்டம், தேவகாண்டம், தட்சகாண்டம்,

உபதேசகாண்டம்.

இவை

திருமயிலை - வித்வான்,

சண்முகம்பிள்ளையவர்களால்

பரிசோதிக்கப்பட்டு,

ப - மு - செல்வராஜமுதலியாரவர்களால்

தமது

சென்னை அமெரிக்கன் அச்சுக்கூடத்தில்

பதிப்பித்துப்பிரசுரிக்கப்பட்டன.

1891

Copyright Reserved.

அட்டவணை

கந்தபுராணத்தில்

யுத்தகாண்டம், தேவகாண்டம், தட்சகாண்டம், உபதேசகாண்டம்

ஆகிய நான்குகாண்டங்களும் அடங்கியிருக்கின்றன.

	பக்கம்.
அக்கினிமுகன்வதைப்படலம்	௩௫
அசமுகிவரலாற்றுப்படலம்	௨௪௫
அடிமுடிதேடுபடலம் ...	௧௫௮
இரண்டாநாள் சூரபதுமன் யுத்தப்படலம் ...	௨௨
இரணியன்யுத்தப்படலம் ...	௩௩
இந்திரபுரிப்படலம் ...	௪௫
உபதேசகாண்டம் ...	௨௨௮
உபதேசப்படலம் ...	௭௫
உமைகயிலைநீங்குபடலம் ...	௮௮
உமைதவம்புரிபடலம் ...	௯௨
உபதேசகாண்டம் ...	
காளிந்திப்படலம் ...	௯௨
சிங்கமுகன்வதைப்படலம் ...	௪௨
சிவமுனிவர் முதலியோர் வரலாற்றுப்படலம் ...	௨௫௫
சூரபதுமன்வதைப்படலம் ...	௪௭
சூராதிகளொடுக்கப்படலம்	௨௨௮
தக்கன்சாலைசெய்படலம் ...	௧௦௪
தக்கன்சிவபூசைசெய்படலம்	௧௪௨
தக்கன்திருக்கயிலைசெல்படலம்	௯௯
தட்சகாண்டம் ...	௭௫
ததீசிப்படலம் ...	௧௦௯
ததீசியுத்தரப்படலம் ...	௧௧௦

	பக்கம்.
தருமகோபன்வதைப்படலம்	௩௯
திருமணப்படலம் ...	௯௫
தெய்வயானையம்மை திருமணப்படலம் ...	௫௭
தேவகாண்டம் ...	௫௭
பானுகோபன்வதைப்படலம்	௪௦
பிரமன்யாகப்படலம் ...	௧௦௧
மாயைவரலாற்றுப்படலம்...	௨௩
மீட்சிப்படலம்	௫௪
முசுகுந்தன்கந்தவிரதப்படலம்	௧௪௩
முதனாள்பானுகோபன்யுத்தப்படலம்	௧
மூவாயிரவர்வதைப்படலம்...	௩௭
மூன்றாநாள்பானுகோபன்யுத்தப்படலம்	௩௦
யாகசங்காரப்படலம் ...	௧௫௦
யுத்தகாண்டம்	௧
வரவுகேள்விப்படலம் ...	௯
வள்ளிநாயகியார் திருமணப்படலம்	௧௮௩
விண்குடிபெயர்படலம் ...	௯௩
வீரபத்திரப்படலம் ...	௧௮௩
வேள்விப்படலம்	௧௪௫

உ

முருகன் றுணை.

யுத்தகாண்டம்.

ஏமகூடப்படலம்.

நாரண னென்னுந் தேவு நான்முகத் தவனு முக்கட்
பூரணன் றானு மாகிப் புவிபடைத் தளித்து மாற்றி
ஆரண முடிவுந் தேரு வாதியா யுயிர்கட் கெல்லாங்
காரண னாய மேலோன் கழலிணை கருத்துள் வைப்பாம்.

வலியுள்ளாராகிய அரக்கரை வெற்றிகொள்ள வேற்படையேந்திய குமர நாயகனேசெல்லுகின்றான், தேவர்களோ அப்பெருமானைப்புடைசூழ்ந்துசெல்கின்றனரோ, துண்ணென்று யானும் போகாதொழிவது சூழ்ச்சியன்றென்றெண்ணித் தோன்றுவான்போலச் சூரியனும்வந்துதயமானான். இவ்வாறுசூரியன் உதயமலையினிடத்தே தோன்றியபோது சிங்காசனத்தில் எழுந்தருளியிருக்கும் சண்முகங்கொண்ட சதுரப்பெருமான் பிரமன் மா லிந்திரன் முதலிய தேவர்கள் பிறரும் கேட்க வீரவாகு தேவனைநோக்கிப் பாவமே செய்துழலுகின்ற சூரபதுமன் முதலிய அவுணர்கள் முடிவாராக; தேவர்க ளிடுக்கணீங்க நாம் மகேந்திரநகரத்துக் கிப்போதே போகவேண்டும், அதற்காகவிரைந்து நீ தேரைக்கொண்டுவரக் கட்டளையிடவேண்டுமென்றான். அதைக்கேட்ட பிரமன் மா லிந்திரன்முதலிய தேவர்கள் ஆனந்தக்கடலி லழுந்தி எங்கள் துயர மின்றோடே தீர்ந்தது தீர்ந்ததென்றே சொல்லி யாடிப்பாடி அக்குகப்பெருமானது பாத தாமரையைத் தமது முடிமேற் சூடிக்கொண்டனர். அப்போது கயிலையைக் காவல்செய்யும் நந்தியம்பெருமானது கணத்தலைமைபூண்ட வீரவாகுதேவரும் மகாபாக்கியமென்றே நமது சரவணப்பெருமானுடைய தேர்ச்சாரதியாகிய வாயு பகவானை யழைத்துத் தேரைக்கொண்டுவரக் கட்டளையிட்டார். அவனும் அக்கட்டளையைச்சிர மேற்கொண்டு அத்தேரைக் கொண்டுவந்து சண்முகங்கொண்ட தயாநிதியாகிய இறைவனது சந்நிதானத்தின் முன்னே நிறுத்தினான். அதைக் கருணையால்நோக்கிய கடவுட்பெருமான் வேதங்கள் துதிக்கச் சிங்காசனத்தினின்று மிழிந்து மேருமலையிற் பன்னிரு சூரியரும் ஒருங்கே பிரகாசித்தாற்போல அத்தேரில் எழுந்தருளிச்சூரபதுமனைச் சங்கரிக்கவெழுந்தருளுகின்றோம், நீங்களும் வெகு சீக்கிரமாக உங்கள் வாகனங்களி லேறி நம்முடன் வாருங்கோளென்று கட்டளையிட்டனன். அதைக்கேட்ட பிரமன் அன்னமும், திருமால் கருடனுமேறியும், இந்திரன் விமானத்தும், மற்றதேவர்கள் தத்தம் வாகனங்களிலு மேறிப்

பின்றொடர்ந்தனர். அதன் பின்னே வீரவாகுதேவரோ முதலிய இலக்கத்தொன்பதின்மரும் தத்தம்தேர்களிலேறிப் பின்றொடர்ந்தனர்.

பின்னே சுப்பிரன், மேகமாலி, சுவேதசிரிடன், கபாலி, அப்பிரசித்து, சித்திராங்கன், சுவாலதாலு, வச்சிரன், வீமன், உக்கிரன், உக்கிரோசன், பிப்பிலன், நந்திசேனன், பிரமசன், பிரமசேனன், பதுமன், கராளன், தண்டன், பத்திரன், பரிகசேம், உதங்கன், புட்பதந்தன், உருத்திராகாரன், வீரன், மதிசயன், சேதுமாலி, வக்கிரன், பிரமகேசி, அதிபதி, கலிங்கன், கோரன், அச்சுதன், அசலன், சாந்தன், சித்திரசேனன், பூரி, சுசீலன், மாசயன், சிங்கன், உத்தரசிங்கன், உபதிட்டன், சயன், ஈசன், மத்தகன், மதங்கன், சண்டி, மகாபலன், சுவேதன், நீலபத்திரன், சுவாகு, வண்டாபரணன், காகபாதன், பிங்கலன், சமானன், மாயன், நிகும்பன், கும்பன், சங்கபாலன், விசாகன், சதநாதன், அயக்கிரீவன், சகத்திரவாகு, அயுதத்தன், அனந்தன், வாமன், மங்கலகேசன், சோமன், வச்சிரமாலி, கண்டன், அஃமுகன், சரபன், குந்தன், ஆடகன், கவந்தன், மேகன், விசயன், வித்துருமன், தண்டி, வியாக்கிரமன், காலபாசன், தசமுகன், குமுதன், பானு, தனஞ்செயன், இடபருபன், சிசுமுகன், அனலசேகன், சுபத்திரன், கேது, மோகன், மந்தன், உன்மத்தன், நந்தி, மனோபவன், வாயுவேகன், சகத்திரபாதன், பானுகம்பன், பதங்கன், சித்தன், அனிகன், சீதன், அனுதன், ஏகமாலி, மாலி, அத்திரி, அசுராந்தகன், அரிகேசன், சுவாலகேசன் என்று சொல்லப்பட்ட இந்நூற்றெட்டுப்பேரும் பூதவெள்ளத்தின் தலைவரென்று சொல்லப்படுவர். அவரோ மிக்க கோபம்படைத்துடையவர், உலகமுழுதும் வெல்லக்கட்டளையிட்டால் ஒருநொடிப்போதிலே வெற்றிகொள்ள வல்லவர், வெற்றித்திருவுடையவர், பெருவலிபடைத்துடையவர், இவர்களும் பிள்ளையாரைச் சூழ்ந்தே சென்றனர். இவ்வாறு இவர்கள் சூழ்ந்து செல்லவே, இதைக்கண்ட பூதவீரரோ இரண்டாயிர வெள்ளந்தொகையினையுடையாராய் உலகமு மலைகளு நடுநடுங்க ஆரவாரித்துச்சென்றனர். தேவர்களோஇறைவன் போர்க்கோலங்கொள்ளப் படையெடுத்தது கண்டு பூமழைபொழிந்தனர், பூத வெள்ளத்தின்ஆரவாரமோ மண்ணும்விண்ணும் திசையுஞ்செவிடுபட்டன, சமுத்திரமுங் கொந்தளித்தது, மேகம் வருந்தியது, அண்டமும் நெக்குப்பட்டுடைந்தது. பேரி, கரடிகை, துடி, எக்காளம், சல்லரி, திமிலை, தக்கை, மத்தளம், கடகம், சங்கு, உடுக்கை, ஊதுகொம்பு, குடமுழா முதலிய வாத்தியங்களையும் பல பூதங்களு முழக்கிச்சென்றன.

இவ்வாறு தேன்பெருக்கெடுத் தோடுகின்ற மலர்மாலையணிந்த தோளையுடைய பூதப்படை வெள்ளம் அங்கே செல்வதனால் விரிந்த புழுதியின் தொகுதி சுடர்களைமாற்றி அகிலமுந்தானேயாய்க் கடலினைத் திடராக்கிவிட்டது, இங்ஙனஞ் சென்ற பூதவெள்ளம் வேற்படையேந்திய வித்தகன் சேவடியைத் துதித்துக்கொண்டுசூழ்ந்து மலைகள்போருந்தன்மைபோற்சென்றுதத்தந்தலைவருடன் கடற்கரையையேயடைந்தன. சிங்கம்போன்ற தோளாற்றலையுடைய பூதவெள்ளமோ. வீரகண்டைகாலிற்சத்தித்தலால் அலைகள்கொந்தளிக்கக்கட

லேவழியாக நடந்தன, இவ்வகையாகத் தமதுபூதவீரர் கடல்வழியே சாரவும் தமது தம்பியருடன் பிரமனும் மாலும் இந்திரனும் தேவர்களும் சூழ்ந்துவரவும் ஆறுமுகங்கொண்ட பெருமான் தாம் தேரிலே யெழுந்தருளி ஆகாயமே வழியாகக் கொண்டெழுந்தருளினான். தம்மொடு மாறுபட்டவர் மேன் மிக்க வெற்றியையுடைய பூதவீரர்செல்லவே கடலோ அலமந்து தெளிவதன்று சேறுபட்டதன்றி நீறுபட்டெழுந்து எவ்வுலகமு நிமிர்ந்துசென்றுசூழ்ந்தது. இவ்வாறுகுமரநாயகனே இரண்டாயிரவெள்ளம் பூதவீரர்தம்மைப்புடைசூழ்ந்துவரக் கடன்முகமாகச் சென்று முன்னே தூதாகச் சூரபதுமனிடமனுப்பிய வீரவாகுதேவரால் வருந்திக்கிடந்த இலங்கையையும் கடந்து மகேந்திரநகரை யுமடைந்தான்.

அவ்வாறு குகப்பெருமான் எழுந்தருளவே, அயலிற்சென்று கைகூப்பிப் பிரமனு மாலு மிந்திரனும அன்பொடு செலவாராயினர். இதுவே சூரபதுமனுடைய மகேந்திரநகரமாகும், இதுவே கொடிய மாபாவிகள் வசித்தற் கிடமாயிருப்பது, அதனால் இந்நகரத்திற் பொருந்தியிருப்பது முறையேயன்று, இதற்கடுத்த வெல்லையாகிய இவ்விடத்தில பாசறை சமைத்து வசிப்பதே தகுதியென்றும், வேண்டியவற்றை விரையநாடிச் செய்துகொள்ளலாமென்றும் வேண்டிக்கொள்ள, அதைத்தாம்திருச்செவிசாத்தியதனாலன்றே தன்னருட் கட்டளைசாத்தியருளித் தெய்வத்தச்சனையழைத்துப் பாசறை சமைத்துத்தர வேண்டுமென்று கட்டளையிட, அதைக்கேட்டு மகாபாக்கியமென்று தலைமேற்கொண்டு அத்தெய்வத்தச்சனும் இளைய பிள்ளையாரைப் பணிந்து இதோ ஒரு நொடிப்போதிற் சமைக்கின்றேனென்று விடைபெற்றுக்கொணடு மாடங்களும் கூடங்களும் மண்டபங்களும் சோலைகளும் வாவிகளும் கோபுரங்களும் வீதிகளும் கோடிகோடியாகச் சமைந்தான்; இவ்வாறு அவனே நகரமொன்றுண்டாக்கி அதற்கேமகூடமென்று பெயருமிட்டு இறைவனிடத்திற் சமைத்து முடிந்ததென்றும்விண்ணப்பித்தான். கந்தப்பெருமானே தன்மனத்தால்வெகு சித்திரமாகத் தெய்வத்தச்சன் செய்துமுடித்த அப்பாசறையைக்கண்டு மனமகிழ்ந்து அதிலெழுந்தருளினான், தேவர்கள்யாவரும் மூவிருமுகத்து அம்முதலவனைப் பலவகையாகத் துதித்துநின்றனர். பின்பு இறைவன் தனதுதிருத் தேரினின்றுமிழிந்து தமக்காகச் சமைத்திருக்கும் மந்திரத்தையடைந்தருள வெண்ணி அளவிலலாத பூதசேனைகளுக்கு அவரவர் தரத்துக்கேற்ற ஆவணத்திலிருத்திப் பின்புபிரமன்மால்முதலிய தேவர்கள் தன்னை வழிபடவெழுந்தருளியிருந்தான்.

ஏமகூடப்படலம்

முற்றிற்று.

வரவுகேள்விப்படலம்.

ஏக நாயகனாகிய இறைவன் இவ்விடத்தி லெழுந்தருளி யிருக்கையில் தேவர்பாலன்புவைத்துள்ள நாரதமுனிவரோ அவற்றையாராய்ந்து ஆகாயமளாவிய கோபுரஞ்சூழ்ந்த மகேந்திரநகரத்திற் சென்று சூரபதுமனைக்கண்டு மூங்கிலேபோல இத்தீயவனாகிய சூரபதுமன் இறக்கநினைத்து தம்வாயால் தக்க ஆசிகள்கூறிநின்றார். அதைக்கண்ட சூரபதுமன் நாரதமுனிவரைப்பார்த்து நீர் எங்கிருப்பது,இங்கேவந்தகாரணமென்ன? நீர்யாரென்றுசொல்ல, அதற்கு நாரதமுனிவரும் நான் மங்கையோர்பாகத்துப் பரமசிவன் அன்பாய் எழுந்தருளியிருக்கும் கயிலையில் வசிப்பவன், உங்குலம் தலைமையேயடைய எப்போதும் தவஞ்செய்கின்றவன், வஞ்சமோ பேசியறியேன், காமமுதலிய அறுவகைப் பகைகளையு நீக்கி மெய்த்தவஞ் செய்துவருவேன், தேவர்களுக்கே துன்பத்தினைச் சூழ்வேன், குற்றமற்ற சுக்கிராசாரியாரோடு பெருநண்புடையேன், உன்னிடத்தே யடைந்தே யொன்றுசொல்லவந்தேன், நானே நாரதனென்னும் பெயருள்ளேன், நின்னைச்சிந்தும்படி மதிமுடிபுனைந்த கண்ணுதலேயடுதல் செய்ய முருகனைத் தன் நெற்றிமேலொற்றை நாட்டத்தினின்றும் தோன்றுந் தீப்பொறிகளால் அளிக்க அவ்வாறுவந்த அம்முருகனிடத்தே உன்பணிசெய்துவரும் தேவர்களெல்லாரும் சென்று குற்றேவல்செய்துவருகின்றனர். தன்னை அப்படி சேவித்துழலும் தேவர்கள் நீ செய்த கொடுந்துயரமெல்லாம் எடுத்துச்சொல்லிவிண்ணப்பித்தனர் அதைத்திருச்செவிசாத்தியருளியமுருகப்பெருமானே நீங்கள் அஞ்சவே வேண்டாமென்று சிவனருள் மேற்கொண்டு பூதவெள்ளத்துடன்தானெழுந்தருளி உன் தம்பியாகிய தாரகனைக் கிரவுஞ்சமலையொடும் மாயாபுரியிற் கொன்றுகளைந்தான். அப்படிசெய்த பின்பு அம்மாயாபுரியைக் கடந்து செந்திலென்றும் சீரலைவாயென்றும் சந்தநாசலமென்றும் சொல்லப்படும் திருப்படை வீட்டையடைந்து உன் பால் வீரவாகு தேவனென்னும் தூதனைவிடுத்தான், அவன்வந்து மீண்டபின் அறிவாறுடிக் கடலையுங்கடந்து தன்பானெருங்கிய சேனையுடனே புறப்பட்டு இந்நகர்க்கு வடபாலில்சேனையை இறுத்தெழுந்தருளியிருக்கின்றான். அப்படியெழுந்தருளிய குமரநாயகனே தனக்குப் பாடிவீடொன்று சமைத்துக்கொண்டமையால் சேனைகளெல்லாம் அவனைச்சூழவிருக்கின்றன, இதுதான் நடந்தவண்ணமென்று நாரதமுனிவரெடுத்துச்சொல்ல அதைக்கேட்ட சூரபதுமன் நெருப்பேபோன்றுசீறிநகைத்திவற்றைச் சொல்லலாயினன்.

முனிவர்பெருமானே! என் மகேந்திரநகரை இந்திரனுடைய அமராவதிபோலவும், திருமாலினது வைகுந்தநகரம்போலவும், பிரமனுடைய மனோவதிநகரம்போலவும் எண்ணிவிட்டானே! ஆயிரகோடி யண்டங்களையும் அரசாண்டுவருகின்ற என் இராசதானிமேல் ஒருசிறுபாலகன் போர்செய்யப்புறப்பட்டுவந்திருக்கின்றானே! குகையிலிருக்கும் சிங்கத்தைவெல்ல நினைந்து யானைக்கன்று, மான், கலைமுதலிய மிருகங்கள் போர்செய்ய வந்தனபோலிருக்கின்றதன்றோ! அக்குழந்தையாகிய முருகனும் தன்சேனையுடன் இங்கே

வந்தமுறைமை! அவனோ சமுத்திரமுங்கடந்து என்னாணையுமிகழ்ந்து பூத சேனையுடன் கவர்வானும்! நானோ அவன்பாலனென்றேவிடமாட்டேன், அவனுடன் போர்செய்வதனாற் பழிவருமென்பதும் பாரேன்; முன்னே யொருதந்திரத்தால் என்தங்கையாகிய அசமுகியினுடையகையைச்சிதைத்த அப்பகைவர்களாகிய தேவர்களெல்லாரும்பிழைத்துவிட்டார்களோ! இக்குமரனோஎன் தம்பியாகிய தாரகனைக் கிரவுஞ்சமலையுடன் வென்றதை யெண்ணியே தன்னுயிர்போவதறியாமல் இம்மகேந்திர நகரினும்வந்து சேனையையிறுத்தான். என்பெயரை யெடுத்துச்சொன்னாலும் மாலே யயனே இந்திரனேமுதலிய தேவர்களெல்லாரும்அஞ்சிமறைவார்களே! அப்படியிருக்கபூழிமலரைமுடித்த சடாமகுடத்தையுடைய சிவகுமாரனோ பகைத்து என்னோடும் போர்செய்ய வல்லவன். அந்தச் சூரியனைத் தொட்டிலில் விளையாட்டிக் கொண்டிருந்த காலத்தே பாய்ந்து சிறைப்படுத்திய என்மகனாகிய பானுகோபனைக்கொண்டு பூதவீரரையும் இலக்கத்தொன்பதின்மரையும்முடிப்பித்து அவனையும்வெற்றிக் கொள்வேன், இன்று நீயே பார்க்கப்போகிறாய்! என்று சூரபதுமன்சொல்ல, நாரதமுனிவர் அதைக்கேட்டு இது நன்றாயிருக்கின்றது! நன்றாயிருக்கின்றது! நீ தாமதிக்கவேண்டாம், இந்நகரத்தைச் சூழ்ந்துகொண்ட குமரநாயகனுடன் போர்செய்ய விரைவாக உன்சேனையையேவுதலே தகுதி நானும் உங்களுக்கே வெற்றியுண்டாவதாகத் தவஞ்செய்யச் செல்கின்றேனென்று ஆகாயமார்க்மாகவே போனான்.

நாரதமுனிவனோ இவ்வாறு சொல்லிவிட்டு ஆகாயமார்க்கமாகப் போய் விடவே,சூரபதுமன் விரைந்து தன்னயலிலேநின்ற கோரன்உற்கோரனென்று சொல்லப்படும் தூதுவரை நோக்கி வருணனைக் கொண்டுவாருங்களென்று கட்டளையிட்டான்.அதைக்கேட்டதூதுவரிருவருமோடி அவ்வருணனிடத்தே சென்று அவனை யழைத்துக்கொண்டுவந்து அவனெதிரே நிறுத்தினர். வருணனும் மனநடுங்கி கைகூப்பிக்கொண்டு பயந்து நின்றான். அவ்வாறுவந்த வருணனை நெருப்பெழ நோக்கிப் பிரமன் மால் என்னுமிருவராலு மறிவரிய நம்பெருமான் மகனாகிய முருகனையும் அவனைத்தொடர்ந்துசெல்லும் பூதவீரரையும் நமக்குமாறாக எவ்விதம் நமது நகரத்திற்கேபுக விட்டனையென்று சொல்ல, அதைக்கேட்ட வருணனோ • இறைவ! அக்குமரநாயகன் பிரமன் மா லிந்திரன் இலக்கத்தொன்பதின்மராகிய வீரர்கள் தேவர்கள் என்னுமிவர்கள் தன்னைப்புடைசூழ ஆகாயமார்க்கமாகவே எழுந்தருளினான். இவ்வாறு குமரநாயகனைப் புடைசூழ்ந்து வீரர்களும் தேவர்களும் ஆகாயமார்க்கமாகப் போகக்கண்டு பூதவீரர்கள்என்பால்நடந்தேசென்றனர். நான் அவர்களுடைய காற்பரட்டளவாகவே யிருந்தேனென்றால் என்னால் அவர்களைத்தடைசெய்ய வல்லமையுண்டோ! ஊழிகாலத்துமழியாதபூதவீரர் விரைந்துசெல்லஅவர்கள் பாதத்திலெழும் தூசியால் சேறுபட்டு இடையறாமல் புலம்பாநிற்கின்றேன். நானோ ஆழமுடைமையால் ஆழியென்று சொல்லப்பட்ட பேருமிழந்தேன், வசையும்பெற்றேன்; அவர்கள் அகத்தியர் கையால்வாரி யுள்ளுறக்கொண்டது போல் என்னை விரைந்துண்பார்கள்போலாம்,அக்குமரநாயகனோடும் கூட்டமா

கச்சென்ற பூதவீரர்களில் ஒவ்வொருவரோ யொருகுடங்கையா லள்ளிக்குடிக் கச்சகியேன் ; ஆகையால் நான் பிழைத்தேனல்லது வேறல்லேன் ; உலகத்தில் இடியை நாகமும் விலக்கவல்லதோ! சிங்கத்தை யானையும் வெல்ல வல்லதோ ! விதியை மதியும் கடக்கவல்லதோ ! நானும் அப்பூதவீரனைத் தடுக்கவல்லேனோவென்றுநடுங்கியெடுத்துச்சொல்லிக்கொண்டிருக்கையில் சில தூதுவரோடிவந்து நமது நகரத்திற்கு வடபால் பிரமன் மாலிந்திரன் தேவர்கள் இலக்கத்தொன்பதின்மர் பூதவீரர் இரண்டாயிரம்வெள்ளம் தன்னைப் புடைசூழ முருகனே வந்துவிட்டு தனக்குத்தெய்வக்கம்மியன் பாசறைசெய்து கொடுக்கப்பெற்று அப்பாசறை நடுவிலே ஏமகூடமென்னும் பெயருள்ள நகரமொன்றுண்டாக்கிக்கொண்டு அதில் வசித்துக்கொண்டிருக்கின்றான், நாங்கள் அதைக்கண்ணாரக்கண்டு உமது சந்நிதானத்தில் தெரிவித்துவிட்டோம், இனி நீர் செய்யத்தக்க முயற்சிகளைச் செய்யவேண்டுமென்று சொல்லினர். அதைக்கேட்ட சூரபதுமன் அண்டமும் புவனங்களும் அலமரும்படித் தீப் போற்கொதித்துப்புண்விளங்கினாற்போன்றகண்ணுடையானாகிஇவற்றைச்சொல்லத் தொடங்கினன்.

வரவுகேள்விப்படலம்.

முற்றிற்று.

முதனாள்பானுகோபன்யுத்தப்படலம்.

தூதர்களே ! நீங்கள் விரைந்து சென்று என்மகனாகிய பானுகோபனை யழையுங்கோள் யான்முருகன்பேராற்றலும், பூதராற்றலும் தூதுசொல்லவந்தவனுடையஆற்றலும் மற்றவீரர்களாற்றலும் தொலைப்பேன்! என்று சொல்ல, அதைக்கேட்டதூதர்கள்பானுகோபனுடையமாளிகையையடைந்து அவனைக் கண்டு அவன் தந்தையிட்ட பணியைத் தெரிவித்தார்கள். பானுகோபனோ அதைக்கேட்டுச் சிங்காசனத்தினின்றுமிழிந்து தன் தந்தை நகரத்திற்குப்போகும்படி துணிய, அதையறிந்த மந்திரத்தலைவரும்சுற்றத்தாரும் சேனைத்தலைவரும்பார்த்து அவனைப் புடைசூழ்ந்து சென்றனர். இடியோசைபோலும் பல வகையான வாத்தியங்களும்ஆரவாரித்தன. பதாதிசூழ்ந்தன. அத்தருணத்தில் பானுகோபன் ஓராழியுடைய தேரிலெழுந்தருளி ஆயிரகோடி வீதிகளையும் கடந்து தன்னைக் கண்டவீரர்களிற் பலரும் வணங்கச்சென்று தன் பிதாவாகிய சூரபதுமனுடைய நகரமடைந்து தன்தேரை விட்டிழிந்து தன் பிதாவினது திருமாளிகையினுட்புகுந்து அவனை எட்டுறுப் புநிலமுறப்பணிந்து தேவரீர் அடியேனையழைத்த காரிய மென்னவென்று கேட்டான் ; அதற்குச் சூரபதுமனும் சொல்லத்தொடங்கினன். என்மகனாகிய பானுகோபனே ! உன் சிறிய தந்தையாகிய தாரகனையும் கிரவுஞ்சமலையுடன் வெற்றிகொண்ட கந்தனோ செந்திற்பதியையகன்று சமுத்திரத்தையுங்கடந்து நந்திதேவருடைய கணத்தலைவரும் பூதகணங்களும் புடைசூழ இந்நகரத்தின்வடபால் வந்திருக்கின்றனும், அவனைச் சூழ்ந்து பிரமன்மாலிந்திரன் முதலிய தேவர்களுமிருக்கின்

றார்களாம், ஏழைகளாகிய அத்தேவர்களும்சிவகுமாரனும் நந்திகணத்தவரும் பூதவீரரும் விரைந்து வந்தடைவதற்கு எளிதாகவாய்விட்ட தல்லவோ நமது நகரம்; இது நன்றாயிருக்கின்றது; என்தம்பியையும் கிரவுஞ்சத்தையும் வச்சிரவாகுவையு முடித்த பகைவரைக் கொன்று களைவதென் கடனாயிருக்க அப்படியே யான் செய்யாதிருந்தது மன்னவர் மன்னவனாகிய முறைமை பற்றியென்றே துணியவேண்டும். இந்திரன் வேண்டுவதற்கிரங்கிப்பரமசிவனே தன் குமரனைக்கொண்டு பூதவீரரையுந் துணைகூட்டி என்னுடன் போர்செய்ய விடுத்தான்; ஆகையால் நானும் என் மகனாகிய உன்னைக்கொண்டே அவர்களைக்கொன்றுகளைந்துவெற்றிபெறுவதுவழக்காகும்; இனி உன் படையுடன் சென்று போர்க்களமடைந்து நந்திகணத்தவரையும் பூதவீரர் இரண்டாயிர வெள்ளத்தையும் முருகனுடன் வெற்றிகொண்டு என்முன் வரவேண்டுகின்றேன், நீ விரைந்துபோவென்று கட்டளையிட்டான்.

இப்படிசொல்லிய சூரபதுமன் கட்டளையை யறிந்த பானுகோபன் தன் தோள்மலையினும் வீங்கவுடல் புளகமரும்ப நின்று தன் தந்தையை வணங்கி நான் சிவகுமாரனை அவனுடன்வந்த பூதவீரர்களுடன்கொன்றுகளைந்துவருவதோ எனக் கொருபொருளன்று, இதைக்கருதியே இப்படிசொல்லவேண்டும், நான் அப்படிவெற்றிகொண்டு பிரமன் மாலிந்திரன்முதலிய தேவர்களையும் இமையோரையிற் பற்றிகொண்டுவந்து உமது சந்நிதானத்தில் விடுகின்றேன்; நீரோ தகுதியானவற்றைச் செய்யலாமென்றுசொல்லி வணங்கினான், சூரபதுமனும் நன்று நன்றென்று அம்மகனுக்கு விடைகொடுக்க, அதனையேற்றுத் தன்தேரின்மேலேறித் தன்னைப் பரிசனப்புடைசூழ அநேகம் துணைவரும் நெருங்கப் பலவாத்தியமுமுழங்கத் தன்மாளிகையையடைந்து தேரினின்று மிழிந்து தன்மருங்கிருந்த தூதரையழைத்து நமதுசேனைமுழுவதும் இங்கே கொண்டுவாருமென்று கட்டளையிட்டுத் தன்னாயுதசாலையிற்சென்று பூசனை செய்து கச்சணிந்துவயிரவாளைமருங்கிற்சேர்த்துப் பொன்னுடையைத்தரித்து வீரக்கழலையணிந்து மார்பிற்கவசம்பூண்டு விற்கோதையைக்கையிற்சுற்றி யம்புப்புட்டிலைக்கட்டிக்கொண்டு நெற்றியில் வீரபட்டிகையைச்சேர்த்துப் பலவாபரணங்களையும் புனைந்துபோர்க்கெழுமாலையாகியதும்பைமாலையை முடியிலே சூடி எனக்குவெற்றியுண்டாகவேண்டுமென்று வில்லைக்கையிலேந்தி யாவரையும்வெல்லுவதாகிய மோகனாஸ்த்திரத்தையுமெடுத்துக்கொண்டு புறப்பட்டான், அவுணவீரரிடம்தூதுவர்களோடிச் சென்றழைத்தவுடனே அவர்களும் போர்க்குரிய ஆயுதமுதலியவற்றையெல்லாமெடுத்துக்கொண்டு அந்நகரவாசலின்முன் வந்துநின்றார்கள். அவனைச்சூழ்ந்தவீரர்களோவிசயன், நேமியன், மாயன், முசலி, கண்டகன், முரன், கரன், மூர்க்கன், தசமுகன், கனலி, சண்டன், விகண்டன், அதுமுகன், மகிடன், அக்கிரவாகு, விசயசேனன், விடசேனன், விமோகன், சோமதன், மது, சசிசித்து, சுகிமுகன், அசனி, சூனியகேது, அசுரசேனன் முதலானவர்கள், பலதெய்வப்படைக்கலங்களையேந்திக்கொண்டுசூழ்ந்தார்கள். அப்போது பதினாயிரவெள்ளம் தானவப்படைகள் கடலுநாணமடைய வாரவாரித்துக்கொண்டு சிலை, கதை, தோமரம், சூலம், சக்கரம், வேல், வாள்,

வில்முதலிய படைகளையேந்திக்கொண்டு நடந்து சென்றனர். தேர், குதிரை, யானை, வீரர்களில் பதினாயிரம்வெள்ளம் சென்றன. இப்படி இருபதினாயிர வெள்ளஞ்சேனை புடைசூழ்ந்து மனோவேகமும் பின்னடையச்சென்றன. இவ்வாறுசென்ற படைவிரைந்துசென்று பானுகோபனை வணங்கப் பானுகோபனும் தன்னேவலனொருவனை நோக்கித் தேரைவிரைந்துகொண்டுவரக்கட்டளையிட்டான். அக்கட்டளையைச்சிரமேற்கொண்ட அந்தவேவலாளனும்அவ்வாறே தேரைக் கடிதிற்கொண்டுவர அத்தேரிலேறினன். அதைக்கண்ட தானவர் சேனை யாரவாரித்தன, சிலர் சாமரையிரட்டினர், சிலர் குடைகள்கவித்தனர், சிலர் அடப்பை, கோடிகம், வாள், பீலி, களாசி முதலியவற்றை யேந்திக் கொண்டுவந்தனர். இவ்வாறுவரக்கண்ட பானுகோபன் தன்மருங்கேயிருந்த ஒற்றரைக்கூவியழைத்து சேமத்தேர் ஒருகோடி கொணருங்களென்று சொல்ல, அவ்வாறே கொண்டுவந்து நின்றனர். பின்பு பானுகோபன் தன் சாரதியைப்பார்த்து நமது தேரை முருகனிருக்கையைநோக்கிச் செலுத்த வேண்டுமென்று கட்டளையிட்டான். அக்கட்டளையை மேற்கொண்ட சாரதியோ முப்பதினாயிரம் பரிகள்பூண்ட அத்தேரை விரைவாகச்செலுத்தினன். சேனையும் ஆரவாரித்தன. பேரிகை, சங்கம், காகளம், ஊதுகொம்பு, சல்லரி, தடாரி, மத்தளம், தக்கைமுதலிய வாத்தியங்களும் முழங்கப்பட்டன; தேர், குதிரை, யானை, சேனை, துவசம், சண்டை, அணிகள் இவைகளுமார வாரித்தன. அந்நகரமுமாரவாரித்தது; அப்போது பூமியுமதிர்ந்தது; நாகங்களுமலைந்தன, தாரகைகளுமுதிர்ந்தன, தேவர்களு மூலைந்தனர், மேகங்களும் பிதிர்ந்தன, மேருமலைவிண்டுபிளந்தது, சத்தகுலவரைகளும் பிதிர்ந்தன, இவ்வாறு பானுகோபன் தன்சேனையொடும்வரக்கண்ட சூரியனேபயந்து ஆகாய முழுதும் புழுதிமூடத்தான் அதின் மறைந்துபோயினன். நாரதமுனிவரோ பானுகோபன் சேனையுடன்வரக்கண்டு அகன்று ஆகாயமே வழியாகக்கொண்டு பூதர்விரும்பிச்சூழ்ந்திருக்கின்றபாசறையாகியஏமகூடத்தையடைந்து தேவர் சேனாதிபதியாகிய சண்முகத்தெந்தயாகிதியையடைந்து தரிசித்து அவருக்கு விண்ணப்பிக்கலாயினர். இறைவனே! தேவரீர் பூதவெள்ளத்தூடன் விரைந்தெழுந்தருளியிருக்கின்றதன்மையை தூதரால் சூரபதுமன்கேட்டறிந்துவெகுண்டு பானுகோபனை உம்மேல் போர்செய்ய விடுத்திருக்கின்றான். அவனோ அக்கட்டளையை மேற்கொண்டு போர்க்கோலங்கொண்டு தன்னோடு கடற்பெரும்படைசூழ்ந்துவரப் புறப்பட்டான். இவனோடு போர்செய்யவல்லவர் தேவரீரும் முக்கண்படைத்த முதல்வருமேயல்லது வேறியாவர்? அவனோடும் போர்செய்துலகமுண்ட பெருவாயனாகிய கள்ளமாயப்பிரமனும் புறந்தந்துபோனானென்றால் வெல்வதரிதாகும். கணக்கெண்பரிய போர்களைச்செய்து மிக்ககீர்த்தியை மேற்கொண்டவன், எண்ணப்படாத பலமாயைகளும் வல்லவன், நாகராசனினு மிக்க வலிபடைத்தவன், பிரமனாலளிக்கப்பட்டபெரும்படைகள் பெற்றவன்,இவனே திருமால்கரத்திலிருக்கின்ற செஞ்சுடராழியைப் பறித்தேயிருப்பான்; அதைத்தன் சிறியதாதையாகிய தாரகன்பறித் தணிந்துகொண்டமையாலே தான் அவன்கவராதிருந்தான்போலும்;

ஆகையால் அவனை யான்கொண்டுவிளைந்து வெற்றிமாலை சூடிக்கொள்வதோ துர்லபம், தேவரீரோ பூதசேனையுடன் போர்செய்ய எழுந்தருளுவது தகுந்த செய்கையென்றுசொல்ல, அதைக்கேட்ட முருகப்பெருமானே புன்முறுவல்செய்து தன் தம்பியாகிய வீரவாகுதேவரை யழைத்தருளி நாம் பூதவீரர்களுடன் இங்கே எழுந்தருளிய தன்மையையறிந்த சூரபதுமன் தன்மகனாகிய சேனையுடன் பானுகோபனை நம்முடன்போர்செய்ய அனுப்பியிருக்கிறான், நீயோ இலக்கத்தெண்மருடன் ஆயிரவெள்ளம்புடைசூழ்ந்துவரச்சென்று பானுகோபனை அவன்சேனையுடன்வென்றுவரவேண்டுமென்று அருளிச்செய்து நாரதமுனிவனைநோக்கி சிறுபுட்கூட்டத்தைச் சிங்கங்கள் வெல்லவல்லவோ! அவைமாய்ந்துபோமேயல்லது வேறன்றே, நாமுடிவுகாட்டுவோம் நீயேமுடிவு காண்பாயென்றனன். வீரவாகுதேவரோ குமரப்பெருமானிடத்திலே விடைபெற்று மேருமலைபோன்ற வில்லொன்றைக்கையிலேந்திக்கொண்டுதேரிலேறிப் புறப்பட்டு இலக்கத்தெண்மரு தன்னைப்புடைசூழ்ந்துவர இந்நகரத்திற்செல்லப் புயங்குலுங்கநகைத்துப் பானுகோபனை யெதிர்த்தார். பின்பு இளையபிள்ளையாரோ தாம் ஏமகூடத்திலேயே இனிதெழுந்தருளியிருந்தார். வீரவாகுதேவரவ்வாறுசென்று அப்பானுகோபனையெதிர்த்து நீ சேனையுடன்போர்க்குவருவதையறிந்தே குமரநாயகன் உன்னுடன்போர்செய்ய அனுப்பினான், இனிமேற் போர்செய்யலாமென்றுசொல்லிவிட்டுநிற்க, பானுகோபனோ தன்பகைவராகிய பூதர்சேனையும் தூதனும் குமரனும் என்னுடன்போர்செய்தே தொலைந்துபோனாலும் நான்கொண்டகோபந்தணியவல்லேனோ! நான் அவர்களைவிடவேமாட்டேன். அவர்கள் எங்கேபோயொளித்துக்கொண்டாலும் தொடர்ந்தே கொல்வேனென்று சொல்லிக்கொண்டிருக்கையில் பூதவீரரும் அவுணருடன் போர்செய்துவந்தனர். அவுணரும் சூலம் வேல் முசுண்டி தோமரம் மழு தண்டு கொண்டுபோர்செய்தனர். அவர்களைவிடாமற் பூதரும் அவுணர்விடும்எத்திறப் படையு நாசமாக்கினதல்லது அவரையும் நாசமாக்கினர். இதற்குள் குமரநாயகனும் அனுப்பிய படைவந்துநெருங்கிற்று, காற்றுநெருப்புங்கலந்தாலொத்த தன்மையையுடைய பானுகோபன்கண்டு தன்வில்லைவளைத்து மழையினு மும்மடங்கு பாணங்களைத்தொடுத்துவிட அவை அப்பூதவீரர்தோளிற புற்றினிடத்தேபுகுகின்ற பாம்புபோலப்போயூடுருவின; பின்னும் அப்பானுகோபனும் தன் வில்லினின்றும் ஆக்கினேயாஸ்திரத்தைவிட அதைக்கண்ட சிங்கனென்னும்பேர்கொண்ட பூதவீரன் நீயெங்கே பிழைத்தோடிப்போகவிருக்கின்றாய்! என்று மிக்க கோபங்கொண்டு தன்கையில் தண்டேந்தி அவனைச்சாடினான். பானுகோபனுடைய சாரதியால் செலுத்தப்பட்ட முப்பதினாயிரம் குதிரை பூண்ட அத்தேரானது ஓடாமல் அப்படியே நின்றுவிட்டது; இதுநிற்க, குதிரைகள் அடைந்த நிலைமைகண்ட அக்கினியென்னும் பெயரோன் கோபமேற்கொண்டு தன்கையில்வில்லைவாங்கி அதிற்பாணங்களைத்தொடுத்து இதுசொல்லத்தொடங்கினான், பிறராலும் தடுப்பதரிதாகிய இப்பாணத்தைப்பிரயோகஞ்செய்து உன்னுருயிரைவாங்கித் தென்றிசை நமனுக்குவிருந்திடாவிட்டால் என்கையில் இனிமேற்போர்க்களத்தில் வில்லெடுத்துச் சண்டைசெய்யாதவனே

யாவேனென்று சபதஞ்செய்துகொண்டு அவன்மேனிமுழுதும் பாணவருஷம் பொழிந்து மறைத்துவிட்டான். இப்படிமழைபோலும்விட்ட பாணங்களால் உடன்முழுதும் மறைவதுகண்டு இனியேனும் நெஞ்சம்கலங்காமலும் துன்பத் தழுந்தாமலும் பொறுமையுடனே விரைந்துசென்று பூமியிலிருந்த சேமத்தே ரொன்றிலேறிக்கொண்டு நீரைமுகந்துண்டகார்மேகம்போல வில்லைக்கையிலே வாங்கிக்கொண்டு பூமியின்மேற்பதைப்பதைப்புறவீச அதைக்கண்டு வலதுகையினால் தண்டொன்றுதாங்கித் தன்வில்லைக் கையினின்றும் வாங்கிக்கொண்ட சிங்கன் தலைமேன்மோதவே தானவர்கள் ஆரவாரித்தனர். தேவர்களோ அதைக்கண்டு ஆரவாரித்தனர். இவ்வாறடித்த தண்டுடன் அனலியின்கையைப் பற்றிக் கொண்டு மற்றொருகையால் அவனது மார்புபிளந்துபோக மும்மடங்கு வருத் தினான். அப்படியெற்றிய அனலியென்பவன் அளவிடப்படாத துன்பமடை யச்செற்றமிக்க சிங்கனும் தன் செங்கையிற்பற்றிய தண்டத்துடன் அப் பாதகனைச்சுற்றி வானந்துணுக்கமுற வாரவாரித்தான். மாறுபடாத அவுண னைத் தன்வன்மையாகிய கையாற் சூறைக்காற்றேபோல் அச்சிங்கன் சுழற்ற லும் கட்குடியனேபோலத் தெளிவற்ற சிந்தையுடையனாயிருந்தான். அது கண்டு சிங்கன் தேரைவிட்டுக்குதித்துப் பூமியிலேமோதப் பதைபதைத் திறந்துபட்டான். அவன் இறந்துபட்டதுகண்டு மனக்கவலை மேற்கொண்டு தீயைப்போலும் சுழலுகின்ற கண்களையுடைய சண்டனென்பவன் யாவரா லும்தடுப்பதற்கரிய படைகளைத் தன்கையிற்கொண்டு இவனுயிரை இப்போதே வாங்குகின்றேனென்று அவன்மேற்போர்க்குச்சென்றான், இவன் வரவுகண்ட அனலியென்பவன் தன்கையிலிருந்த தண்டையேந்தித் தீயெனவிழித்துப்பார்த் தநுமனுமஞ்ச அவன்தேரின்மேற்பாய்ந்து அவன் தோள்மேலேமோதினான். அப்படி மோதவே பெருமூச்செறிந்து தேரிலேவிழுகின்ற சண்டனும் தன் செங்கையிலெடுத்த தண்டினால் எதிரேபுகுகின்ற சிங்கனது மார்பிலடித்தான். அப்படி போர்செய்கையில் அவுணரில் மாயனென்போன் குப்புறுந்தேரொடும் குறுகிப்பூதரில் தனக்கொப்பிலலாத நீலன்மேல் கதையேந்திமோதினான், அது முப்புரம் பொடிபடுத்த முன்னவன் பாணமேபோல் விளங்கிற்று. இவ்வண்ண மெறிந்த தண்டமாயனென்பவன் மார்பிலேபட மாய்ந்தானென்று சொல் லிக்கொள்வதுபோல நின்று வருந்தப்பட்டுத் தன்கையிலேந்தியிருந்த சூல மொன்றை மார்பேயிலக்காக வீசியெறிந்தான். அப்படியெறியவே அம்மார்பி லிருந்தும் உதிரம் பெருக்கெடுத்தோடியது, நீலனுமயர்ந்து பின்புதேறித் தன் கடகமணிந்த கையான்மோத அதனால் மாயனுந்துன்பமடைந்தான்; நீலனோ நாகம்போற்சீறி அவன்வருந்துமாறு செய்யவெண்ணி மந்தரமலையைச்சுற்றிய வாசுகிபோல மாயனென்பவனது தோளைத் தன்னிரண்டுகையாலும் பிடித்துக் கொண்டு தன்பல்லாற்கவ்வி அவனது வீராவேசத்தால் செந்நீரைக்குடித்தான். அதனால் நீலனும் கோபந்தணிந்து நின்றான், எமன் மாயன் உயிர்கொண்டு சென்றமையால் அவனிறந்துபட்டான், சண்டனும் சிங்கனும் போரில்வருந் தியவருத்தநீங்கிப் பின்னும் போர்செய்பலாயினர், தேரைக்கிட்டினர், கிடந்த தண்டினையேந்திக் கீழ்சென்று நெருங்கினர், ஒருவர்மேல் ஒருவர்பகைத்து

முட்டினர், இருபக்கங்களிலும் முறைமுறையே பெயர்ந்து, வட்டணைவருவர், இவ்வாறு பலவகையாக யுத்தஞ்செய்கையிற் பூதவீரன் அவுணவீரன் கையிலுள்ள கதையைப் பொடிப்பொடியாகப்போகச் செய்துவிட்டான். தண்டினால் சிங்கன்மோத அவுணர்களெல்லாம் பெருமூச்செறிந்தனர், இதுவென்னைகொலென்று நினைத்தனர், இடியேறுபோலக் கோபித்தனர், இப்படி நிகழ்கையில் சண்டனென்னும் பெயருள்ள போர்வீரன் சொல்லலாயினான். என்கையில் தண்டொன்று பொடிப்பொடியாகப் போய்விட்டதென்று நீகர்விக்கவேண்டாம், என்னுடைய தோளாக்கங்கொண்டது மதுவேயல்லவா! முன்னாளில் எமபுரத்தையும் பழயவண்டங்களையும் வருத்திய நானோ உனக்கஞ்சுவேன்! என்னோடு போர்செய் யாப்போமென்று தன்பலம்பொருந்திய கைகளைக்கொண்டேற்றான். இவ்வாறு போர்செய்கையில் சிங்கன் நீயாற்றலையுடையாயென்றெண்ணவேண்டாம்! இதோ நான் ஓச்சுகின்ற தண்டத்தைப் பொறுத்துக்கொள்ளென்று அவன்மேற்செலுத்தி எமனும் அஞ்சும்படி தோள்கொட்டி யாரவாரித்தான். அப்படி யாரவாரித்துக்கொண்டு நின்று சிங்கன் விரைந்து அவன் புயமொடியும்படி புடைக்கத் தோள்முரிந்ததுமல்லால் அந்தத் தண்டும் பலதுண்டுகளாகச் சிதறிப்போயின. இப்படி தன் தோள்முரிந்ததையொருபொருளாகக்கருதாமல அயராமலே மற்றொருகையால் தண்டேந்திப் போர்செய்தான். தேவர்களும்பயந்து பார்த்துக்கொண்டிருந்தனர். தன்கையில்விளங்குகின்ற தண்டினால சண்டன் சிங்கனது மார்பின்மோத அச்சிங்கன் கைக்கொண்டேற்றானென்று தன்பாதங்கொண்டே அவனது மார்பாகிய தடவரையைச்சாய்த்தான். சண்டன்சாயவே கையெடுத்து தேவர்களெல்லாரும் நீயல்லது சண்டனையுதைப்பார்யார்? இவனுயிரைக் கைக்கொள்வதே தகுதியென்று குறையிரந்தனர். அதைக்கேட்ட சண்டனோ சிங்கனைத் தீப்போற் கோபித்துக் கையாற் கதுப்புடையும்படி மோதலினால் அவன் ஒலிக்கின்ற மேகம்போல் வீழ்ந்தான்.

இவ்வாறு சண்டனிறந்தமையால் யமதூதர்கள் அவனைநெருங்குவதற்கே பயப்படுவதுகண்டு சிங்கனென்னும் பூதவீரன் அவர்களைப்பார்த்து இவனுயிரைக்கொண்டுபோகலாம், அஞ்சவேவேண்டுவதில்லையென்றுசொல்ல; அவனுயிரைக்கைக்கொண்டுபோயினர். இச்செயலைக்கண்ட அசமுகனென்னும் அவுணவீரன் சிங்கனெதிர்வந்து உன்னுயிரை இதோவாங்குகிறேன், மற்றவர்களைப்போலஎன்னைநீ நினைக்கவேவேண்டாமென்று தன்தேரைச்செலுத்தினின்றான். இப்படி அசமுகனணையும்பொழுது மதுவென்போன் எங்கே நீயோடிப்போகிறாய்! நீயிறந்தேபோவாயென்று கோபத்தோடும் விரைவா யிடையிற்புகுந்தான். அசமுகனென்பவன் இப்படி முற்பட மதுவென்போன் எதிர்கொள்ளும் அந்தகனோடு காலனும் போர்செய்ய முன்னேவந்து எதிரிலெதிர்கின்ற தன்மையையொத்திருக்கும். இருவருமணுகி அசமுகன் அப்போது தன்வில்லைக் குணத்தொனிபண்ணிப் பாணவருஷம் பொழிந்தான். அதுகண்ட பூதவீரன் தன்கையிற்பழுமரம்பற்றிப் பாணங்களைச்சொரிந்து பகைவனதுதேரில் கருமுகில்போல் ஆரவாரித்தான். அதைக்கேட்ட அசமுகன் அயர்வடைந்து

தேரிலும் நிலத்திலும் சிலையொடு பாணங்களைச்சொரிந்து வேர்த்துவருந்தினன். அதைக்கண்ட மதுவென்பவன் நீ வீரனுமல்ல, கெடாதபோர்செய்து வல்லமைபெறச் சூரனுமல்ல, சூரனிலையைக்காணு மீசனுமல்ல, நீ போர் செய்கின்றாய் நின்னுருயிர் கொண்டுசெல்லென்று பூமியிற்சென்றான்.

இப்படி பூதவீரன் நிலத்திலேநிற்க அசமுகனென்னுமவுணவீரன் வெட்கமடைந்து பெருமிதமகன்று போரில் பயந்தேனென்று ஒருகுற்றமேயடைந்திருக்கின்றேன், யர்ரிடத்தேதாவது தீர்த்துக்கொள்வேனென்று மனங்கலங்கி அவ[redacted]ன் போர்செய்யாமற் போயினன், ஐயோ பொன்றுதலினிதென்று காயத்தின் மானக்கனல்சுடவும் மனம்நோகவும் தீயெனக்கோபித்துப்போரின் முயற்சியைப்பெற்று விரைந்தவன்சென்று கொல்லுவன் இனி யெங்கேயடைந்தாலுமகலாமல்நில்லுநில்லென்றுமேகம்போலும்தன்பகுவாயால்திசைசெவிடுபடவாரவாரித்தான். மதுவென்போன் அசமுகன்சொல்லைக்கேட்டு நீ கற்றுதிற்சிலபேசினாய்? வீரமும் பெற்றாயல்லை! என்னைநாடிப்பெயருவது பிழையேயாயினும் கீர்த்தியைப்பெற்றாயல்லை! எனக்குப் பழியுந்தருவாயானாய்! என்று பலவாறு பேசுகின்றவன் எதிரிலே பகைத்துச்சென்று வில்லைவளைத்துப் பிறைமுகக்கணைகள் பலசெலுத்திக் கோபிக்கின்றான். அப்படி பாணப்பிரயோகஞ்செய்யவும் மதுவென்பவன் சிறிதும்வருந்தாமல் சூலமுசலமுதலிய படைகளையெல்லாமெறியப் பூதவீரன் மனந்தளர்ந்து தானவவீரன்தேரைவிரைந்து தன்கையிலெடுத்துக் கடற்மேற்செல்ல விடுத்தான். அத்தானவவீரனோ தான்இலாகவத்தால்தப்பித்துக்கொண்டு பூமியில்வந்து அவனொடு மற்போர்செய்யத்தொடங்கப் பூதவீரன் அவனையெடுத்து ஆகாயத்தில்விட்டெறிந்தான். அவனோ அவ்வாகாயத்தினின்றுகொண்டு தானொரு வஞ்சகநினைந்து திருமாலிடத்தே தான் வரத்தாற்பெற்ற சக்கரமொன்றைக் கையிலேந்திப் பூதவீரன்மேல்விடுக்க அவன் நிராயுதனாக விருந்தமையால் மீண்டும் அத்தானவவீரனது தலையையரிந்துசென்றது. அசமுகனென்னும் தானவவீரனோ இடியேறு பூமியில்வீழ்ந்தாற்போலும்விழத் தானவர்களும் மனம்வருந்தினர். அச்சக்கரமோ அத்திருமாலிடமேசென்றுசேர்ந்தது. பின்பு அவர்கள் தங்கள் நாற்படையுடனே பூதவீரர்களைவளைக்க, அப்பூதவீரர்களோ இரியல்போயினர். அதைக்கண்ட இலக்கவீரரில் தண்டகனென்னும் வீரன் யமனைப்போன்ற தன் வில்லைவளைத்து அவுணவீரர்மேற் சரமழைபொழிந்தான். அச்சரமழை அவுணர்மேற்பட இரத்தவெள்ளம் பெருக்கெடுத்தோடியது. எண்ணிலாத தோளழிந்தன, குதிரைகளழிந்தன, யானைகள்பட்டன, அவுணப்பதாதிகளுமிறந்தொழிந்தன, இவ்வாறழியவே மற்றையோர் மனநொந்துதங்களுயிர் காப்பதற்கே நினைந்து எட்டுத்திக்கினும் பூமியினும் ஆகாயத்தினுமாக வலசைவாங்கியோட வாரம்பித்தார்கள். கெடாத அவுணப்படை இவ்வாறு இறந்துபட்டமையும் பலவோட்டெடுப்பதையுங்கண்ட பானுகோபன் இந்திரன்முதலிய தேவர்களைச் சுவர்க்கத்திற்சென்று வெற்றிகொண்ட நம்முடைய படைவீரர்கள் இன்று நம்மீசன்மகனாகிய கந்தன்விடுத்த படைகளால் இறந்துபட்டனரோ யன்றோ! சூரியனைச்சிறையிலிட்ட நானுயிரோடுமிருக்க நமதுபகைவராற்றலே

யுடையராய் நமதுசேனாவீரனைவெல்லுவது நன்றாயிருக்கின்றது! சிங்கமானது கொலைத்தன்மையில்லாமே கோபமில்லாதிருக்கவு மிருப்பதாயின் யானைக்கூட்டம் வெற்றிகொள்ளாதிருக்குமோ! நமதுபகைவரால் இரண்டாயிரவெள்ளத்தினுமேற்படவே நமது சேனாவீரர் இறந்துபட்டிருக்கலாம்! என்னைச்சூழ்ந்திருக்குந்தொகையோ ஆயிரவெள்ளமிருக்கலாம்! மற்றவையெல்லாம் ஓடிப்போயிருக்கலாமெனத்துணிந்து நானோ ஒற்றைவில்லாளியாயிருந்தும் நமது பகைவரை வெற்றிகொள்ளாதிருக்கின்றேன்; இதுஎன்னை! முன்னாளிலே அநேகம்பேரையும் கொல்வித்தேன், அவர்களை நானே போர்செய்யவுமனுப்பியிருந்தேன், கூழையிலும் நின்றுகொண்டிருக்கின்றேன். இது ஒருபொருளென்றும் நினையாதிருக்கின்றேன், நீரும்செய்கையை நினைந்தாலென்ன ஆகப்போவது! ஒருவன் இனி முடிவதற்குள்ளாகவே நமது பகைவரொன்றும் பேரில்லாமலே போர்செய்து வெற்றிகொள்ளாவிட்டால் நானும் சூரன்மகனோவென்று சபதஞ்செய்துகொண்டு தன்தேரிலேறிப் பாகன் தேரைச்செலுத்தச் சேனைக்கடலுடன்சென்று தன் புருவமாகியசிலையுடன் தன்கைச்சிலையினையும் வாங்கி வளைத்து அத்தமித்தலில்லாமல் சூரியனுக்குமுன்னே உதயமாகும் வெள்ளிசோதியிலே யாட்சியாக வருகிறகாலத்திற் கருக்கொண்டு மேகம் பூமியிலே மழைசொரிந்தாற்போலக் கோபங்கொண்டடையும் பூதப்படைமேற் சரவருஷம் வருஷித்தான். இவ்வாறு பொழிகின்ற காலத்திலே பூதர்கள்பார்த்துத் தங்கள் சூழ்கின்றகண்ணில் நெருப்புப்பொறிசிதற அஷ்டகுலாசலங்களொழிய மற்ற மலைகளையெல்லாம் வேருடன் பிடுங்கியெறிந்து யுகாந்தகாலத்திடிபோல் ஆரவாரித்துநின்றார்கள். பானுகோபனோ தன்னைப் பூதவீரர்கள்மலைகள் பலவற்றையும் வேருடன்பிடுங்கி யெறிந்ததைக்கண்டு ஒவ்வொருவர்மேலும் ஒருகோடி பாணங்களையேவியவருத்தி மலைகளையும் பொடிப்பொடியாக்கினான். அலைகள் பிளந்துபோய்ச் சுவர்க்கத்திற்செல்பவர் மேனிமேற்பட அவர்கள் விண்ணிடையுள்ள கங்கையிற்சென்று நீராடினர்.

பின்பு பானுகோபனோ தன்னொற்றைவில்லாலே அப்போர்க்களமுழுதும் காற்றாடிபோலச்சுழன்று தன் வில்லினின்றும் பலபாணங்களைச்சொரிந்து பூதகணங்களைத் தொலைக்கத்துணிந்து சிலரைத் தோளைத்தொளைத்தும் சிலரை வாழ்நாளைக்கெடுத்தும் தன்பாணத்தால் போர்செய்தான், பூதவீரர்கள் வெற்றிவேற்கரத்து விமலனோ அங்கே யெழுந்தருளியிருக்கின்றான், வீரவாகுதேவரோ பிற்படையிலிருக்கின்றனர், பிறவீரர்களோ யாருமறிந்திலர்; முன்னணியிலிருக்கின்ற நம்மையோ இவன் இப்படி வருத்துகின்றானென்று பூதவீரர்கள் இரிந்துபோய் தம்படைக்கீற்றினிற்கின்ற வீரவாகுதேவர்பக்கமே முறையிடச் சென்றனர். அதைக்கண்ட உக்கிரனென்னுஞ்சேனாவீரன்கண்டுதன்கையிலேந்திய கதையைக்கொண்டே பானுகோபனை யெதிர்த்தான். பானுகோபனோ தன்வில்லினின்றும் அநேகமாயிரங்கோடி பாணங்களைச்சொரிந் தாரவாரித்தான். அப்பாணங்களோ பூதப்படைத்தலைவன்மேற்பட்டு முனைமாய்ந்துபோய் ஒன்றுஞ்செய்யாதனவாயிருக்கக்கண்ட பானுகோபன் இவனைவெல்வதெவ்வாறென்று வானைத்தொடுவதாகிய முசலமொன்றைக் கைப்பற்றிச் சுழற்றி

யெறிந்தான். அதையும் தன்கையிலுள்ள கதையினாலேயே சிதைத்துவிட்டு அவன்தேரை நெருங்கிக் குதிரைகளைப்புடைத்துப் பூமியில்வீழ்த்த அதைக் கண்ட தேவர்களெல்லாருமிகவு மாரவாரித்தார்கள். பானுகோபனோ தன் தேரிற்கட்டிய குதிரைகளிறக்கக்கண்டு கோபித்துத் தான் வேறொருதேரி லேறிக்கொண்டு தன் வில்லைவளைத்து உக்கிரனேந்திய அக்கதைமுரிந்துபோக நூறுபாணங்களை யேவினான். அவைகளால் அவன் கையிற்பிடித்திருந்த கதை சிறுதூசிகளாகப் போய்விட்டன. உக்கிரனென்னும் பூதப்படைத்தலை வன் பானுகோபனேறிய தேரையெடுத்து ஆகாயத்தில்விட்டெறிந்தான். அத் தேரோ சூரியமண்டலம்வரையிலும் சென்றது. அதைக்கண்ட சூரியனோ நம்மை முன்னாளிலும் இப்போது அதிகமாகப்பிடிக்கமுயல்கின்றான் போலும்! இவன்மேற்கொண்ட வஞ்சனையறியேன், இவன் நெருங்குவதற்குமுன்னே என் னால் முடியுமோவென்று மனத்திலெண்ணிப் பயங்கொண்டோடினான். தேரு டன்சென்ற பானுகோபனோ அங்கேநின்று மீண்டும்வருவது காருடன் வானி லிருந்து தவறிப்போன காமர்வல்லிபடர்ந்த கற்பகத்தருவேருடன் பூமியில் வீழ்ந்தாற்போலிருந்தது.

பானுகோபனோ அத்தேர்விட்டிழிந்து உக்கிரனென்னும் பூதவீரனையணு கித் தன்கையாலெடுத்து மேலேழுலகிற்கு மப்பாலேபோய்விழ வெறிந்ததன்றி வேறொருதேரிலேறித் தனக்குப்பிரமன்கொடுத்திருந்த சூலமொன்றை அவன் கீழேவீழ்வதற்குமுன் அவன்மார்பிலெறிய அதுபட்டு மிக வருந்தியதனாற் சிறிதயர்ந்தான். அதுகண்டு தன்கையிலெடுத்த குன்றுடனே தண்டியென் னும்பெயருள்ள பூதத்தலைவன் அதை அவன்மேற்சுழற்றியெறிந்தான். பானு கோபனோ தன்வில்லினின்றும் ஆயிரம்பாணங்களைத்தொடுத்து அவன்கையிற் பிடித்திருந்த மலையையோர்கணத்திற் கண்டதுண்டமாக்கினான். அப்படி தன் னால் வீசப்பட்டமலை தூளாயிற்று; பின் ஆகாயமளாவிய மராமரமொன்றை வேருடன்பிடுங்கிக் கையிலேந்திஅதைத் தன்வலிகொண்டு நின்று அவன் ஏறி யிருந்ததேரிற்கட்டியிருந்த குதிரைகளையடித்தான். அவ்வடிபட்டவுடனே அக் குதிரைகள் எல்லாம் கீழேவீழ்ந்திறந்தன. அதற்குமுன்னமே பானுகோபன் அநேகமாயிரம் பாணங்களைத் தண்டியென்னும் படைத்தலைவனது நெற்றியே யிலக்காகவிடுத்து உதிரமாரிசொரியச்செய்தான். அதனால் தண்டியோ மிக மெலிந்துநின்றான். அதைக்கண்ட பினாகியென்னும் பெயருள்ள வேறொரு பூதவீரன் மலையொன்றைப்பிடுங்கி வீசமுயன்றான்; பானுகோபனதைக் கண்டு ஆயிரம்பாணங்களைத் தன்வில்லிற்றொடுத்து அவன் மார்பிற்பட்டு வருந்தும்படி செய்தான். அதனால் அவனோ மிகவுஞ்சோர்ந்து விழுந்தான். பின்னே பூதவீரர்களோ தத்தம்பலங்கொண்டு அப்பானுகோபனை யெதிர்த் தும் அவன்விடும் பாணங்களுக்காற்றாமல் உடைந்துபோயினர். இவ்வாறு பூதவீரர்கள் உடைந்துபோவதுகண்டு காபாலி, அண்டலோசனன், நிரஞ்ச னன், உருத்திரன், அகண்டன், தண்டகன்முதலிய இலக்கத்தவர்கள் தங்கள் தேரைச்செலுத்தி அப்பானுகோபன்முன்னேசென்று தங்கள் வில்லைவளைத்து க்குணத்தொனிசெய்தனர். அதனால் ஐராவதம் அடைந்த துன்பத்தைச்

சொல்லியாவதென்ன? விநாயகரால் முன் பாரதமெழுத ஏடாயிருந்த மேரு மலையுஞ்சலித்தது. வையமும் திசையும் வானமுஞ்செவிடுபட்டன; பானு கோபனோ அதைக்கண்டு சிறுநகைபுரிந்து பருத்தவில்லொன்றை யெடுத்துத் தோளளவும் வளைத்து அண்டங்களெல்லாம்பயப்படத் தேர்க்கீழேவிழும்படி படுத்துக் குணத்தொனிசெய்து நின்றான். திரண்டகல்போன்ற தோளை யுடைய இலக்கத்தவரும் ஒருங்கே தாம வலத்திற்பிடித்த வில்லினிடத்திற் கூரியதாயுள்ள பாணங்களைததொடுத்து மேகம் பூமியில்வந்து மழையைப் பொழிவதேபோலப் பானுகோபன்மேற் பெருமழைபொழிந்தனர். இவனும் இவ்வாறு போர்த்தொழிலசெய்ய இலக்கத்தவரும வேறுவேறாகநின்று புங் கானுபுங்கமாகச்சொரிந்து எண்ணிலலாப் பேராறுகள்வரிசையாகநின்று நிலத் தைச்சூழ்ந்திருக்குங் கடல்மேற்செலவனபோலெதிர்ந்தனர்.

இலக்கத்தவர்விட்ட கணைமழையால் அவுணர்களெல்லாம் கலக்கம டைய வருவது கண்டு பானுகோபன் கொலைத்தொழில்வாய்ந்த தன் வில்லை வளைத்து அநிலாயிரங்கோடி பாணங்களைத்தொடுத்துப் பிரயோகஞ்செய்து அவைகளையறுத்ததன்றி மற்றுமோராயிரங்கோடிபாணங்களையும தொடுத்துக் கோபத்தொடும பிரயோகிக்க, இலக்கத்தவரும் அவற்றிற் கெழுமடங்குபாண ங்களை விடுத்தறுத்தொழித்தனர். அதனாற் பானுகோபன் கோபித்து வயிரக் கட்டுகளமைந்த பாணங்களைவிட்டு அவர்கள் கையிற்பிடித்திருந்த விற்களையும் அழித்தான், வில்லழியவே, வீரர்கள்தேரில்வைத்திருந்த சேமவிற்களைக்கையி லெடுத்துவாங்கி அவைகளில் பல கணைகளைத்தொடுத்து அவன் விடுகின்ற பாணங்களையெல்லாம் நடுவது பாதியிற்கண்டித்தனர். அவன் தேர்மேலும குதிரைகள்மேலும் கொடியின்மேலும் ஆயிரம் பாணங்களை யேவிப்பின்னும் ஆயிரம் பாணங்களைச் சாரதியின்மேலுஞ் செலுத்தினார்கள். தேரும் குதிரை யும் பாகனும்துவசமும் அழிந்துபோயின, அதுகணடு பானுகோபன் வேறொரு சேமத்தேரிலேறினான். இலக்கத்தவர்தேரும் வில்லுமழிய நூறாயிரம் பாணங் களைத் தன் வில்லினின்றுஞ்செலுத்தி அவர்களுடமபைபு ோவச்செய்தான். இலக்கத்தவரும் உடன்மெலிந்து முன்னை வலியின்றிப் போர்செய்ய நினை யாராய்ப் பின்னிடைந்தனர்.

அத்தருணத்தில் நவவீரருள் வீரகோளரியென்னு மொருவீரன்கண்டு பானுகோபனையெதிர்த்து தன்விலலைவளைத்துச் சோனைமழைபோல இலக்கம் பிறைமுகப் பாணங்களைச்சொரிந்தான். இவ்வாறு சொரிவதுகண்டு பானுகோ பனே தன் சிரத்தையசைத்து இவனாற்றலும திறமையும் வில்வித்தையின் நேர்மையு நன்றாயிருக்கின்றதென்று பேசிக்கொணடு .வில்வளைத்துநின்றான். தேவர்கள் நடுக்கங்கொண்டார்கள். தன்விலலைவளைத்த பானுகோபன் அவ்வில் லில் கூர்மையுள்ளதாய்க் கழுகிறகு பூண்டு தங்கக்கட்டுகளமைந்த நூறாயிரங் கோடி பாணங்களைச்செலுத்தித் தன்னொடுதனித்துஎதிர்ந்த வீரகோளரிவிட்ட பாணங்களைச் சிதைத்ததல்லாமல் தோள்மேலும ஆயிரம்பாணங்களைவிடுத்து வருத்தினான். வீரகோளரியும் அவன் ஏவிய அமபுகளையெலலாம் தடுத்து

அவன் மார்பும் சாளரமாக ஆயிரம்பாணங்களைவிடுத்தான். அப்படிவிடுக்கவே
பானுகோபனும் மனம் நொந்துவருந்தி இவனை வில்லால் வெல்வதரிதென்றே
நினைத்து நாராயணாத்திரமெடுத்து ருச்சபித்து விட்டான், அது வீரகேசரி
விட்ட பாணங்களையெல்லாம் கவர்ந்து முருகப்பெருமானது வேற்படை
யாணையால் அவ்வீரனது உயிர்கொள்ளவஞ்சி அவன் மார்பிற்புகுந்து சிறிது
வன்மையைக்காட்டி விரைந்து கடனீராடி மீண்டது, வீரகேசரியோ மாண்
டானென்னும்படி மயங்கிவிழுந்தான், அதுகண்ட வீரமார்த்தாண்டன் வில்லை
வளைத்து கோபத்துடனெதிர்த்தான். அவன் எதிரவே அவன் கையிற்பிடித்
திருந்தவில்லை யாயிரம்பாணத்தால் துண்டமாக்கியதன்றி மேலுமாயிரம்
பாணங்களையே வியவனெற்றியிலுமழுந்தச்செய்தான். தேவர்களும் வருத்த
மடைந்தனர். வீரமார்த்தாண்டனும் வேறொருசேமவில்லையெடுத்துவளைத்து
முன்னமே அதையுமிருதுண்டாக்கியதன்றி அவனேறியிருந்த தேரையும் குதி
ரையுமழித்துத் தோளிலும் எழுநூறுபாணங்களையேவி வருத்தினான். தேரும்
வில்லும் அழிந்து வீரனென்னும் பெயருமழிந்து தன்னந்தனியனாய் நின்ற
தனால் உளர்கோளழிந்த சூரியன்போல விளங்கினதுகண்டு பானுகோபன்
மேகமுனடுங்க ஆரவாரஞ்செய்தான். அதுகண்ட வீரமார்த்தாண்டன் அப்
பானுகோபன்மேல் சூரியன் இராகுவின்மேற் பாய்ந்தாற்போலப்பாய்ந்து
அவன் பிடித்திருந்த வில்லையு மிருதுண்டமாக்கி யெறிந்துநின்றான். பானு
கோபனோ வாளையுருவி யவன்மார்பிற்குற்ற அதைப்பொறாது தன்னுடை
வாளையுருவி அவன் மார்பிற்பூண்டிருந்த கவசமிற்றிடத்தள்ளிநின்றான். பானு
கோபனும் தன்னுடைய வாளால் அவ்வீரமார்த்தாண்டனது நெற்றியிற்குற்றி
னான். அதனாற் காற்றின்மோதப்பட்டுவிழுந்த கற்பகம்போல மண்ணில்விழுந்
தான். இவன் இறந்துபட்டானென்று தன்மனத்திலெண்ணிய பானுகோபன்
வில்லையெடுத்துக்கொண்டு தன்னை எம்மருங்கும் கடற்சேனைகள்சூழ்ந்துவரக்
கண்ட வீரராக்கதனென்னும் வீரன் வெகுண்டு தன் துணைவர்தொலைந்தமை
யும் மனத்திற்கொண்டு தன் வில்லைவளைத்து ஆயிரம் பாணங்களைத் தெரிந்
தெடுத்துப் பானுகோபன்மேற்செலுத்த அம்புகளைத் தடுத்து நூறுபாணங்க
ளால் தேர்ச்சாரதியையும் கொன்றான். வீரராக்கதனோ வேறொருபாகனைத்
தன் தேரைச்செலுத்த வமைத்துக்கொண்டு சண்முகப்பெருமான் சேவடித்
தியானபலத்தால் அப்பானுகோபன்மகுடத்தை யாயிரங்கணையெய்துபொடிப்
பொடியாக்கினான். அதனால் பானுகோபனும் நாணமடைந்து மிக்க கோபங்
கொண்டு வேறொருமகுடமணிந்து வீரராக்கதன் விடுகின்ற பாணங்களையெல்
லாம் தடுத்து ஆயிரம் பாணங்களால் அவன் வில்லையும் இருதுண்டமாக்கி
னான். தன் வில்லொழியவே அவன் வேறொரு சேமவில்லெடுத்து வளைத்துப்
பானுகோபன்மேல் ஆயிரம்பாணங்களை யேவி வீரராக்கதனுடைய தேர்க்
குதிரைகளையுமழித்தான். குதிரை இறந்துபோகவே வீரராக்கதன் வேறொரு
சேமத்தேரிலே பாய்ந்தபொழுது பானுகோபனோ அவன் கையிலிருந்தவில்லை
யாயிரம் பாணங்களைவிட் டறுத்துத்தள்ளினான். அதுகண்டு வீரராக்கதன்
அவன்மேல் வேற்படையொன்றேவினான்.

அவர் விடுத்த அம்பின்மேல் நூறுபாணங்களைத்தொடுத்து விடுத்தழிக்கத்திடத்தின் மேம்பட்ட வீரராக்கதன் அதுதெரிந்து தேரினின்று மிழிந்து அறைகூவித் தனிபோய்ப் பானுகோபனிரதத்தை யெடுத்தெறிந்தான். எறிபு மெல்லையில் பானுகோபன் விண்ணெழுந்து பிரமன்கொடுத்த வேலைப் பகைவனுயிரை யுண்ணவிடுத்தலும் அதுசென்று வீரராக்கதன்மேற்பட அவனும் வீழ்ந்தான். அப்படி தரையில்வீழ்ந்த வீரராக்கதன் மிகவும் தளர்ந்தும் முருகனருளால் அவனுயிர்போகாமலிருந்தது; பானுகோபனைச் சக்கரத்தால்தடுத்தவனுமெழுந்து போர்செய்யும் வல்லமையில்லாமல் இடைந்துபின் போய்விட்டான். போனகாலத்தில் வேறொருதேரிற்புகுந்து பானுகோபன் வில்லை வளைத்துக் கணைமழைபொழிந்து மற்ற வீரர்களையும் வெற்றிகொள்ளும்படி யெதிர்ந்தான், அப்போது வீராந்தகன் வீரமகேசன் வீரதீரன் வீரமகேந்திரன் வீரபுரந்தரன் ஆகிய ஐவரும் வில்லையெடுத்துக்கொண்டு பானுகோபன்மேல் சரமழை பொழிந்தார்கள். அவ்வாறு பொழிந்து அளவில்லாத போர்த்தொழிலையுஞ்செய்து நின்றனர். பானுகோபனே தன் பாணங்களால் இருவரை மெய்ம்முழுதும் புதைத்தனன், இருவரைத்தடுத்தனன், இருவரைச் சிலையையழிக்க நொந்தேபோயினர்.

இவ்வகையாகப் பானுகோபன் வீரர்களையெல்லாம் வேறுவேறாகநின்று போர்செய்து வெற்றிகொண்ட சமயத்தில் வல்லமையிலலாமல் முதுகிட்டோடிய அவுணர்களுடையசேனைகள் முழுதும் நாற்றிசையிலும் அவனைச்சூழ்ந்துகொண்டன. பின்னிட்டசேனைகளெலலாம்தன்னயலில்மீண்டும்வந்துசூழ்ந்து போர்செய்ய பானுகோபன் வருதலகண்டு இவனாற்றல் நன்றுநன்றென்று வீரவாகுதேவர் பிரமன்மாலறியாப் பெற்றியோனாகிய சிவகுமாரனுடைய உபயபாதங்களையு மனத்திலெண்ணித்துதித்துப்போர்செய்யமனங்கொண்டு செருப்புற்றிய நெஞ்சமுடைய அக்கொடியவனாகிய பானுகோபன் முன்சென்று தன் வில்லைவளைத்துக் குணத்தொனிசெய்யத் தேவர்களும் வெருக்கொண்டனர். இவ்வாறு குணதொனிசெய்து போரக்கெழுந்தருளப் பானுகோபன் வீரவாகுதேவரை நோக்கி நீயோ வேலினால தாரகனையட்ட குமரனுமலலை, ஆதிவராகமாய்ப் பூமியைக் கிளைத்திடு மரியுமல்லை, நான்முகனு மல்லை, இந்திரனுமல்லை, தூதனாகிவந்த நீயோ என்னுடன்போர்செய்யவலலை, இழைத்தமாயையால முற்பகற்போந்தனை, எங்கோனை முன்னே பழித்திறஞ் சிலபேசினை, என் தம்பியையுங்கொன்றனை, இம்மாநகரையுமழித்தனை, யானதையுமறிந்திலேன், அதனால் பிழைத்தனை, இனியேனும் இங்கேபிழைத்திடப் பெறுவாயோ, மேலும்போர்செய்துவெற்றிகொண்டுனனுயிரையும யமனுலகத்திற்புகுவிப்பேன், உண்மையிது, சிறுகாலத்தில் சூரியனைச்சிறையிலிட்ட பானுகோபன் ஒருதூதனைப்படுத்தானென்ற பழியொன்று கொள்வதலலாமல் புகழையடைவேனோ, இன்னும் என்னுடன்போர்க்குவந்த உன்றுணைவரையும் வெற்றிகொண்டேன், பூதங்களையும் போரில்வென்றேன். சேனைப் பெருக்கத்துடன்வந்த உன்னையு முடிப்பேன், உன்னையனுப்பிய முருகனையுமழித்து இந்திரனையுஞ் சிறையிலிடுவேன் என்றபோது வீரவாகுதேவர் எவரேனும் எதிர்ந்து போர்செய்வாரை

வெற்றிகொள்வதே திறலாம், பின்னிடுவோனை யடுவதே வசைசெயல்லாமற்சிறி துண்டோ, வெற்றியடைபவர் தம்பெருமிதம் தாமே எடுத்துச்சொல்வதோர விரைந்து போர்செய்யென்றான்.

அப்போது பானுகோபன் தன்வில்லிற் பத்துக்கணைகளைச்சொரியவீர வாகுதேவரும் விரைந்து அத்தனைப்பாணங்களைவிட் டவற்றை யறுத்துத்தள்ளிப் பின்னும் நூறுபாணங்களைவிடுக்க அவனும் அத்தனை பாணங்களைவிட்டுக் கண்டித்துப் பின்னும் ஆயிரம்பாணங்களைச்சொரிந்தான். தான் ஆயிரங்கணைகளைத்தூண்டி அவற்றையு மறுத்துத்தள்ளினன். வீரவாகுதேவரும் பதினாயிரம்பாணங்களைவிட பானுகோபனும அத்தனை பாணங்களைவிட்டவற்றையழித்து இலட்சம் பாணங்களைப் பிரயோகஞ்செய்தான். வீரவாகுதேவரும் அத்தனைபாணங்களையும் தூண்டியறுத்துப் பத்துநூறாயிரம் பாணங்களையுமவிடுத்தனர். சூரன்மகனும் அத்தனைவிட்டழித்து நூறுநூறாயிரம பாணங்களைவேவ அவற்றையுமவிட்டழித்து நின்றனன. வஞ்சகனாகிய பானுகோபன் விட்ட பாணங்களையொழித்து வீரவாகுதேவா நூறாயிரங்கோடி பாணங்களைவிடப் பிரமாஸ்திரம் பிரயோகஞ்செய்தான. அதனால அவ்விருவா போர்செய்த பார் மறைந்தும் திசைகளெல்லா மறைந்தும் கடலமறைந்தும குலகிரிமறைந்தும மேகமறைந்தும் ககனமுமறைந்தும சூரியனதுதேர் மறைந்துமபோயின. பாரிவட்டமும மாதிரவட்டமும கடலவட்டமும நேமிவட்டமும ஆகாயவட்டமும் அண்டவட்டமும முடுகி அவாகளுடைய தேர்சாரிவட்டமாகத் திரிந்துகொண்டேயிருந்தன. இவ்வாறு பாணங்களை முறைமுறை சொரிதலால் மறைவார்கள்; அவைகளையழிக்கும்போது தோனறுவா. இமையோரையில வேறு வேறாக இத்திறமசெய்யும வீராகள சூறவளிபோற்சுழன்று உலகமெல்லாஞ் சுற்றித்திரிவார்கள். இவாகள் ஏவுமபாணஙகள் சூரியனதுதேரிலும அத்தேரிற் கட்டிய குதிரைகள்மேலும சந்திரன்விமானததுப புறஞ்சூழ் கரிகள்மேலும விண்ணிலுலாவும் தேவர்கள்மேலுமபோய்ப்படும. இவ்வாறிருவரும் கோபங்கொண்டு போர்செய்வதனால இன்னதிசையெனமீற அங்கே நாடுவதோவரிது. பாணங்களனந்தம்வானெலலாமபோய்மூடிக்கொணடன, தேவர்கள்நம்மேலும வருமென்றெசொல்லி தேவாகள்இங்கேநிற்பதுகூடாதென வோடிப்போயினா, அனல்பூமியைக்சூழிக்கும் அண்டங்களைத்தொளைக்குமகடலேழையும்பருகும; புவனங்களெல்லாம கடக்கும, போர்த்தொழிலிற்சிறந்தா யாவரும தடுத்தற்கரியவடவைக்கனல்போலழிப்பர்தற்கறிமி. இவ்வாறிருக்கையில்வீரவாகுதேவரும் பானுகோபனும்செய்தபோர்த்திறலை யார்தானெடுததுச்சொல்லவலலவா. இவர்கள் தங்களால் கூடியவரையிலும மிகுந்த பாணமழையையே பொழிந்து வருதற்கவர்கைவிற்களும் கள்ளமாமாயப்பிரானது சக்கரம்போல்வளைந்திருந்தன. பானுகோபனோ வீரவாகுதேவர் விடும் பாணவருஷங்களைத் தடுத்து அவர் கையிலிருந்த வில்லையும் ஆயிரம்பாணங்களா லறுத்துத்தள்ளினன். அதைக்கண்ட வீரவாகுதேவரும் வேறொருவில்லைக் கையில்வாங்கிக்கொண்டு மிக்க கோபத்தால் அதைவளைத்து ஆயிரம்பாணங்களைத் தூண்டி ஒருமுகூர்த்தத்தில் அவன் வில்லையுமொடித்துத்தள்ளினர். அதனால் பானுகோபன் மிக்க

கோபங்கொண்டு கையில் வேறொருவில்லை யெடுத்துக்கொண்டு வளைத்துக் குணத்தொனிசெய்து ஆயிரம்பாணங்களால் அவர் மார்பில்பட வருத்த வீர வாகுதேவரும் ஏழுபாணங்களைவிடுத்து அவன் மணிமுடியைத் தகர்த்தார். இவ்வாறு நவரத்தினமயமான செம்பொன்செய்முடி தகரக்கண்ட பானு கோபன் மீளவும் வேறொரு மணிமுடி யணிந்துகொள்ளத் தொடங்குமுன் ஆயிரம்பாணங்களைப் பிரயோகஞ்செய்து அடுத்த சாலிகை சிந்தினர். அவ் வாறு சிந்தியமாத்திரத்தால தருமதேவதையு நடனஞ்செய்தது. இந்திரன் பகைவனாகிய பானுகோபனு நகைத்தான். சூர்மகனாகிய பானுகோபன் ஆயிரம்பாணங்களை விடுத்து வீரவாகுதேவர் நெற்றியில தாக்க அவர்நெற்றி பிளந்து மேற்றிசையிலிட்ட செவ்வானம்போல் விளங்கிற்று. நெற்றியில் ஆயிரம்பாணங்களை நெறியேபடுதலும் சற்றும வலி சுருங்காமலிருந்தனர், பின்னும் வீரவாகுதேவர் தம அங்கையாற்பற்றிப் பறித்துவீசினர். அதனால் அவன்விட்ட பாணங்களழிந்தன. சண்முகப்பிரான் தம்பியாகிய வீரவாகு தேவர் பகைவனதுமுகத்தில் ஆயிரம மார்பிலாயிரம் தோளிலாயிரம் கைகளி லாயிரமாகப் பாணங்களைத் தொடுத்து விடுத்தனர். அவை சூரபதுமன் மக னாகிய பானுகோபன் உறுப்புகடோறுமபட்டு வருத்தஅவசமாயினன். தேக முழுதும் உதிரமும்பெருகிற்று ; அதனால் மிக்ககோபங்கொண்டு அக்கினி மலைபோல் விளங்கினன். அப்போது அவுண வீரர்களெல்லாம் பானு கோபன் வலியோய்ந்திருப்பதுகண்டு நாலவகைச் சேனை சமுத்திரத்துடன் முன்சென்று வீரவாகுதேவனை வளைந்துகொண்டு சூலம் தண்டு எழு மழு சக்கரம் பாணமுதலிய ஆயுதங்களையெல்லாம் பொழிந்தார்கள். அதைக் கண்ட வீரவாகுதேவர் தமது கையிலிருந்த வில்லைவளைத்து ஆயிரகோடி பாணங்களைத்தொடுத்து அக்கொடியவர்விட்ட படைகளையெல்லாம் பொடிப் பொடியாகச் செய்தனர். அதுவோ இருட்படலங்கீறும் சூரியனைபோலத் தோன்றிற்று, அப்பாணங்கள் நால்வகைப்படைகளையும் தலைதடுமாறச்செய் யவே, பூதவீரர்களோ பானுகோபன் நொந்து தன்னந்தனியே நிற்பதையும் அவன் நாற்படையும அழிந்திருப்பதையும கண்டு வீரவாகுதேவர் பக்கத்தே வந்து சூழ்ந்துகொண்டனர். அப்போது உணர்ச்சி நீங்கியிருந்த பானுகோ பன் முன்னை யுணர்வுபெற்றுத் தன் சேனைமுழுதுங் காணாய் வீரவாகுதே வர் நின்ற நிலைமையைக்கண்டு நமது நாற்படையு மழித்துவிட்டான், இவன் சேவகமே சேவகமெனத் துணிந்து வியந்து என்னையெதிர்ந்து போர்செய்த வீரனைவருமாண்டனர், இவனொருவனே நிற்கின்றான். வெற்றியைப்பெறி னும் பெறுவான், பானுகோபன் வலிமை நன்றாயிருக்கின்றதென்றான்.

பின்னை பானுகோபனுங் கடிகையொன்றில் நம்முருகப்பெருமானுடைய தூதன் சரீரத்தைச் சின்னபின்னம் படச் செய்வேன், அப்படி செய்யாவிட் டால் பின்னுயிர்வாழ்க்கை விரும்பேன், யான் பிறப்பெடுத்தேனு மல்லேன், என் வில்லுடன் யானெரியிற்குளிப்பேனென்றான். இவ்வாறு பானுகோபன் வஞ்சினம்பேசி மனத்தின் மானமும் கோபத்தீயு மிகுதியாயோங்க முன்னா ளில் இறைவன் முன்னே சென்ற ஆலவிடம்போலத் தான் வீரவாகுதேவர்

முன்னே நெருங்கிச் சென்றான். அவ்வாறு சென்று தன்கையிலிருந்த வில்லை வளைத்து முத்தலெக்கணைக ளாயிரம் தொடுத்துவிடுக்க அதுகண்ட வீரவாகு தேவரும் அத்தனைப் பாணங்களையும்விட்டொழித்தனர். பிறகு பானுகோபன் ஆயிரம் பாணங்களைத் தூண்டி அவர்விட்ட பாணங்களை விலக்கிப் பதினாயிரம் பாணங்களால் அவர் தேரையும் பாகனையும் குதிரைகளையு மழிக்கும்படி விடுக்க அதைக்கண்ட தேவர்களெல்லாம் வருத்தமடைந்தனர். வீரவாகு தேவரும் வேறொரு தேர்மேல் வில்லொடும்பாய்ந்து பதினாயிரம்பாணங்களை விட்டுப் பானுகோபன் தேர்பாகன் குதிரை இவைகளைத் தேவர்கள் மகிழ் சிறக்கத் துண்டஞ்செய்தான். பானுகோபன் வேறொரு தேரிலேறிக்கொண்டு வில்லைவளைத்து ஏழுநூறு பாணங்களைப்பூட்டி வீரவாகுதேவர் மார்பைத் தொளைசெய்தான். தன்னுடம்பில் பாணங்கள் தைத்தமையால் வில்லையு மறுத்து பின்னு மாயிரம் பாணங்களால் இரதத்தையும் குதிரையோடழித்து நூறுபாணங்களால் பானுகோபன் மார்பையும் பிளந்தான். அதற்குப் பானு கோபன் வருந்தாமல் ஆயிரம் பாணங்களையேவி அம்பறாத் தூணியை யறுத் துத்தள்ளினான். அதனாற் பானுகோபன் இதென்ன அதிசயம்! நமது பகை வன்கற்றவித்தையே வில்வித்தை யெனமதித்துஇவனையோவெல்வதரிதென்று மோகனாஸ்திரத்தை யெடுத்து அபிமந்திரித்து மனத்தினா லர்ச்சனைசெய்து தன்சேனையுடன் பகைவனையடைந் துணர்வைக் கலக்கி வரவேண்டுமென்று விடுத்தான், பூதசேனைகளும் பூதவீரரும் பயந்தனர். மோகனப்படை வர வைக்கண்டு அதை வேறு படைவிடுத்து வெல்லலாமென்றெண்ணி வேறொரு செய்கையறியாமற் சிந்தித்தான். இப்படையைக் கண்டு வீரவாகுதேவரை யொழிந்த இலக்கத் தெண்மரும் கலங்கினர். வீரவாகுதேவரும் நிலத்திற் பட்ட கந்துபோலநின்றான் ; பானுகோபனோ எனக்கெதிரானவர்யாவருளர்? நாம் நன்று நினைந்தோமென்று நகைத்துக்கொண்டிருந்தான். இவ்வாறு பானு கோபன் மகிழ்ச்சியோடிருந்து இவ்வீரர்களனைவரும் முன்னை யுணர்ச்சியில் லாமற் கலங்கியிருக்கின்றனர். என் வில்லாற்றலால் இவர்களை விரைந்து கொல்வேனென்று மதித்து வில்லைவளைத் துணர்வுசிதைந்திருந்த வீரர்கள் மேல் பாணஞ்சொரிந்தான்.

அத்தருணத்தில் சண்முகங்கொண்ட சதுரப்பெருமான் வீரவாகுதே வர் முதலானோர் நீங்காத மயக்கங்கொண்டு பானுகோபனால் வருந்தியதறிந்து அமோகப்படைவிடுத்து அதனோடு சொல்லுகின்றான். நீ சென்று மோகனப் படையை வெற்றிகொண் டிங்கேவாவென்று கட்டளையிட அவ்வமோகப் படை போர்க் களத்தில்வந்து அம்மோகனப்படையின் வலியைச் சிதைத்து விட்டது, மோகனப்படையும் பூதசேனையை விட்டகன்று போய்விட்டது, வீரவாகுதேவரு மற்றவீரரும் தம்மயக்கமகன்று குமரநாயகன்விட்ட வமோ கப்படையைக்கண்டு மகிழ்வடைந்து நாம் வருந்தியிருப்பதுநோக்கிக் கருணை நெடுங்கடலாகிய சரவணப்பெருமான் இவ்வகைப்படையைவிடுத்து நமக்குணா ர்ச்சியை யளித்தானென்று அவர்களெல்லாம் அப்பெருந்தகையை வாழ்த்தித் துதித்தனர், அப்போது அக்கடவுட் பெருமான்விட்ட படையும் அவ்விட

நீங்கிச் சென்றது, அப்படை மீண்டவுடன் வீரர்களெல்லாம் மீளவும் போர்க்கோலங்கொண்டனர். வீரவாகுதேவரும் மானமும் கோபமுமோங்க முன்னே நம்மையெல்லா மயக்கிவிட்டானல்லவா? இப்போதே அவனை வெல்லவேண்டு மென்றெண்ணிச் சிவாத்திரத்தைவிடத் துணிந்தான். அதைக்கண்ட அசுரேசன் மகன் மோகனப்படை மீண்டதும் இறைவன் படைசென்றதும் வீரவாகுதேவர் செய்கையும் ஆராய்ந்து நாமோ இங்குள்ளாரையெல்லாம் வெற்றிபெற்றோம், அவர்களோ மீளவுந் தோன்றினர், இதெல்லா மிறைவன் செய்கையாகவே தோன்றுகின்றது, நாமென்ன செய்வது? வீரவாகுவோ சிவாத்திரம்விடத் துணிந்து கையிலெடுத்திருக்கின்றான். அதைத் தொடுப்பானாயின் நாமிறந்துபடுவது நிச்சயம், நாம் நமது நகர்க்கேசென்று தெய்வதப் படைகள் கொண்டுவந்து போர்செய்ய வேண்டுமென்றே பானுகோபன் தன்னுருக்கரந்து மாயையினாற் றன்னூர்க்குச் சென்றான். பானுகோபன்மறைந்து போனதைக்கண்டு அவுணர்களும் தொலைந்துபோயினர். தேவர்களும் வெற்றி நமதென்றே பூமழைசொரிந்தனர். பானுகோபன் பயந்து முதுகிடக்கண்டு யாவரும் நாமவனைப் பற்றிக்கொண்டு வரவேண்டுமென்றுசொல்ல, வீரவாகுதேவரும் பேடிசெய்கையைப்போலப் பெரிதுமுள்ளழிந்தே ஓடிய பகைவனை நாம் நாடித்திரிவது நலமோ! இனி அவன் போர்க்குவந்தாற் காணவேண்டுமென்றுசொல்ல யாவரும் நன்று நன்றெனறனர். பூதவெள்ளமும் மிகமகிழ்ச்சியுடனாரவாரித்தன, சூரியனும் இன்றுதான் நமதுபகைவன் புறமுதுகிட்டோடினான், இனி அங்கே வீரனு நிற்கமாட்டானென்று நீங்குவான் போலச் சூரியனும் மேற்கடலை நோக்கி யோடினான். இருள் வரவேயெங்கும் தாரகணங்கள் தோன்றின; சந்திரனும் பண்டுள்ள தாருகாவனத்துமுனிவர் பரமன்மேல் விட்ட வெண்டலையே போலத் தோன்றினான்.

வீரவாகுதேவரும் இலக்கத்தெண்மரும் பூதவீரரும் பிறரும் தன்னைச் சூழ்ந்துவர மீண்டும்பாசறையுட்புகுந்து பிரமன்மாலறியாப் பெற்றியோனாகிய பரமசிவனருளிய பாலசுப்பிரமணியனை யடைந்து வணங்கியெழுந்து பின்னவ் வள்ளற்பெருமானறியப் பானுகோபன் போர்செய்ததும் அவனச்சத்துடனகன்றதுமுதலாகிய யாவுஞ் செப்பத் திருச்செவிசாத்தியருளிய கந்தப்பெருமான் இற்றைப் பகலெல்லாம் போர்செய்தலால் துன்பமடைந்தனை, இற்றையிரவு நின்னிருக்கைக்கு உன் துணைவரோடு போவென்றான். வீரவாகுதேவரும் விடைபெற்றுத் தன்னிருக்கைசென்றடைந்தான்.

இங்கே புறந்தந்தும்பானபானுகோபனும் போரிலழிந்துமுன்னரே யோடியும் தன்னுள்ளத்தில் மிக்கதுயரமும்பழியும் மானமும் நீண்டுபெருமித நீங்கித் தன்றந்தை மாளிகையணுகாமல் தன்னகரமடைந்து. தாழ்ச்சியடைந்தார் போல மனந்தளர்ந்து மந்திரிமாருடன் மருவாமலும் தந்திரத்தரொடுஞ் சாராமலும் சிங்காதனத்திவிராமலும் நாடகமர்தர் நாடகத்தை விரும்பாமலும், பாடன் மாதனைப்பாராமலும், கூடுமெங்கையர் கூட்டத்தை நோக்காமலும், ஊடுமாதரோடுடன் புணர்தல் விழையாமலும், இராக்காலமெல்லாமெண்ணமிட்டுக் கொண்டேயிருந்து முருகப்பெருமான் படைவீரரைப்போ

ரில் வெற்றிகொள்வதற்குத் தன்னெஞ்சொடு மனோராச்சியம் பண்ணிக்கொண்டேயிருந்தான், தூதுவர்களோ சூரபதுமனிருக்கையை யடைந்து உமது குமாரனாகிய பானுகோபனோவீரவாகுவோடுபோர்செய்து பூதவீரரையெல்லாமிருகண்டு மீண்டுமடைந்தான். விஜயமேதேனுமுண்டோ அதனையியாமறியமாட்டோம், அதை இனிமேலறி! வீரவாகுதேவரும் தன்சேனையுடன் பாசறை சென்றனர் என்றனர். அதைக்கேட்ட சூரன்தன்மகன் மாற்றார்முன் வலியிலனாகிச் சென்றதனால் கோபமாய் கண்களிற் றீப்பொறியெழப் பெருமூச்செறிந்து மிகுதியும் நகைத்து அரசனொன்று சொல்வான். மைந்தரும் சுற்றத்தவரும்துணைவரும் தந்திரத்தலைவரும் போர்செய்ய நாளைபோகார்கள். நாளை நானே நால்வகைச்சேனையுடன் சென்று கந்தனை வெற்றிகொண்டுமீள்வேன், இப்போது போங்களென்று சொல்லத் தூதுவரும் போயினர். சூரபதுமனோ பகைவரை வெற்றிகொள்வதே நாட்டமாக யாதுமெண்ணாதவனாயிருந்தான். இதுநிற்க, சூரியனுமுதயமானான்.

முதனாட்பானுகோபன்யுத்தப்படலம்.

முற்றிற்று

இரண்டாநாள்சூரபதுமன்யுத்தப்படலம்.

சூரியோதயத்துக்கு முன்னே சூரபதுமன் துயினீங்கி யெழுந்து முறையாகச்செய்யவேண்டிய காலைக்கடனை முடித்துக்கொண்டு சிங்காதனத்திலிருந்துகொண்டு நேற்றுத் தன்மகன் போர்க்களத்திலடைந்த விசையினை நினைந்து தன்னுள்ளத்திற் பெருங்கோபமிக இனிப் போர்த்தொழிற் கியாரையும்விடுக்கேன், சேனையோடுசென்று நானே போர்செய்து வாகைமாலை சூடிக்கொள்வேன் என்று தெளிந்து தேறித் தூதர் பலரையுமழைத்து இவ்வுலகமுழுதுங் கிடக்கின்ற சேனைவெள்ளத்தை யழைத்துக்கொண்டு வாருங்களென்றான். அப்படியே அவர்கள் தங்களரசன் கட்டளையையறிவிக்க, யானை தேர் குதிரை யென்பவற்றையூர்ந்து முன்னை நாளில் வெற்றிகொண்ட நூறாயிரவெள்ளமென்னுந் தொகையினையுடையவரா யவர்கள் சூலம் மழு தண்டு தோமரம் வயிரம் வில் வாள் பலகை வட்டம் குந்தம் வேல் நாஞ்சில் பிண்டிபாலம் முசுண்டிமுதலிய படைகளையேந்திக்கொண்டு சென்றார்கள். இவ்வாறு ஆயிரவெள்ளம்சேனை சூழ்ந்துவர மகேந்திரநகரமுழுதுமாரவாரிப்பதை மேருமலையினுச்சியிற் கண்டனன், கதிர்நுழையாத மேகம்போன்ற சேனையின்கூட்டங்கண்டு சிந்தையிற்கொண்ட வலிய துயரமெல்லா நீக்கி வன்மையைப்பெற்றுப் பகைவரைப் போர்செய்து வெற்றி யெய்தினவன்போல நின்றான். அழிகின்ற காலத்தில் சமுத்திரம்போற் கோஷித்துச்செல்லும் அச்சேனையைக் கண்டுவிரைந்து போர்க்கேசெல்லநினைந்து சூரியனைமதியமாக்கும் இரத்தினங்கள்பதித்த மாடங்களின் சிகரத்தினின்றுமிழிந்து வில்லையேந்து ஏனைய படைகளையும் தேவர்களா லுதவப்பட்ட அஸ்திர சஸ்திரங்களையுங்கொண்டு கையில்கோதையைப்பிடித்து முதுகிலம்பறாத்தூணிகட்டிவிரல்களில் அடித்த

பொற்புட்டில்சேர்த்துமுடியிற் போர்க்குரிய தும்பைமாலைசூடி மேருமலையோ அல்லது மந்திரமலையோ வென்னப் புறப்படும் தேரிலேறித் தன்னைக் குதிரைக் கூட்டங்களும் யானைக்கூட்டங்களும்தேர்க்கூட்டங்களும் காலாட்களும் பின்றொடர மந்திரிமார்கள் பக்கத்தேநடந்துவர இராசவீதிகடந்து சென்றான். அந்தருணத்தில் சிங்கமுகன் மகனாகிய அதிசூரனென்பவனும், தாரகன்மகனாகிய அசுரேந்திரனென்பவனும்போய் சூரபதுமனையடைந்துவணங்கினர். அவரைக் கண்டுசூரபதுமன் சொல்லத்தொடங்கினான். கடல்போல நிறைந்த கோட்டகம் கரையில்லாதவிடத்துச் சிறிதுடைந்து விடுவதுபோலப் போர்செய்கின்ற நால்வகைப்படை பலவுளவாயினும் அதைக்காக்கு மரசரில்லாதவழி நில்லா தழியும். ஆகையால் இனி நீங்களிருவரும் இப்பெருஞ்சேனைக்குத் தலைவராய் முன்னே போங்களென்றுசொல்ல அக்குமாரிருவரும் இதுவே மகா பாக்கியமென்றுவணங்கி அக்கட்டளையைமேற்கொண்டு அச்சேனைகளை அணிபெறவகுத்து தானைத்தலைவிராய் சென்றனர். அதைநோக்கிய நூறாயிரவெள்ளத்து மறவோரும் போர்க்களத்தை நாடி. ஆதிசேடனு மற்ற நாகராசரும் மனநடுங்கப் போயினர். சூரபதுமனும் விடந்துனிநடந்து போவதைப்போலத் தேவர்கள் நடுங்கத் தேரிற்போனான். தொண்டகம் துடி பம்மை தூரிய முருடு படகம் மொந்தை திமிலை தடாரி தக்கை கண்டை ஆகுளி பீலி காகளம் உடுக்கை பதலை சங்கம் குடமுழா முதலிய வாத்தியமும் கறங்கின. சூரபதுமன் ஆகாயமார்க்கமாகவே தேரேறிவருவதை இந்திரனறிந்து கடம்பணியுபத்துப் பெருந்தகையையடைந்து கைதொழுது வணங்கிச்சொல்லலாயினான். முன்னாளிற் பரம்பரனை நோக்கித் தவஞ்செய்தபோது அத்தனிமுதல்வனளித்தசகல விதப் படைகளையுங்கொண்டு சூரபதுமன் இன்று போர்செய்ய வருகின்றான். அவனைவென்று எங்கட்குச் சீரருளவேண்டுமென்றான். அவ்வகையாக அவன் சொல்ல அவனுக்கருள்செய்து சிங்காதனத்தைவிட்டிழிந்து வாயுதேவனாகிய பாகனையழைத்து தேரைக்கொண்டுவரக் கட்டளையிட அவனுமவ்வாறே மலைபோன்ற தேரைக் கொண்டுவந்து சந்நிதானத்தில் நிறுத்த வேற்படையுடைய விசாகனதிலெழுந்தருளத் தேவர்கள் பூமழைபொழிந்தனர். இவ்வாறெழுந்தருளவே பூதர்களும் புறப்பட்டாரவாரித்தனர். தக்கை உடுக்கை துடி சல்லரி தடாரி மத்தளம் குடமுழா பேரி காளை புள்ளாங்குழல் ஆம்பல் கொக்கரைமுதலிய வாத்தியங்கள்முழங்கின. கின்னரர் தும்புருநாரதர்பாடினர். தேவர்களு முனிவர்களும் இறைவனை வாழ்த்தி வணங்கினர். சண்முகப்பெருமானுடைய ஆணையால் வீரவாகுதேவரும் இலக்கத்தெண்மரும் பூதகணத்தலைவரும் தேர்மேலேறித் தத்தம்படைகளுடன் சேனையுடன் செல்வாராயினர். இவ்வாறு தம்மைப் பூதப்படைகள்சூழச்சென்று குமரநாயகன் போர்க்களமடைந்தனன். பூமியிலு மாகாயத்திலுமாகிவரும் சூரபதுமனுடைய அவுணர்சேனையைப் பூதப்படைகள் வளைந்துகொண்டு பெரியதோ ராரவாரஞ்செய்து மரங்களும் மலைகளும் தண்டுகளும் கழுமுட்களும் சக்கரமும் கவண்கல்லும்வேலும் காஞ்சிலும் அவுணர்கள்மேற் பூதவீரலெறிந்தனர். அவுணர்களும் கோபித்து வில்லினின்றும் விடப்படு மம்புகளுடன் மழு வாள் காஞ்சில் சூலம் முசலம்

முற்கர முசுப்பணமுதலிய ஆயுதங்களைப்பூதப்படைமேல்எறிந்தனர். பூதரோ இரதமோராயிரமெடுத்துயானையாயிரந்தள்ளமோதியும்யானையோராயிரமெடுத்துக் குதிரையோராயிரமழியப் பூமியில் மோதுவார்கள், பதினாயிரங் குதிரைகளைக் கையிற்கொண்டு ஆயிரகோடி யவுணர்களைப் பூமியில் விழச்செய்வர். குதிரைவீரர் யானைவீரர் தேர்வீரர் காலாட்கள் இவர்கள் பூதர்களை வளைத்துக்கொண்டு பாணங்களாலும் படைகளாலுங் கொல்லத்தொடங்கினர். இவ்வாறு பகைத்துப் போர்செய்கையில் பூதகணத்தலைவர் ஊக்க மிகுந்து போர்செய்கையில் அவுணவீரர் மாண்டார்கள். பிணக்காடுண்டாயதேயன்றி உதிரவாறும் பெருக்கெடுத்தோடின. அனந்தங்கோடி கவந்தங்கள் நாம் வேற்படைவிசாகன் சந்நிதானத்தின்முன் இறந்துபட்டோமாதலால்இனிக் கொடியவெம்பாசத்தாலாகிய பிறவிவேற்களையப்பெற்றோமென்று கூத்தாடுவது போலிருந்தது இங்கே அவுணப்படையில் பூதப்படைகள்செய்யும் வெற்றியை நோக்கி அதிசூரனென்பவன் தேராயிரமாயிர மொருபுறத்தே சேமத்தேராகச் செல்லவும் ஆயிரம்யானைகள்சார்ந்துவரும்படி இரண்டாயிரங்குதிரைக்கட்டியிழுக்கும் தேர்மேல் அதிசூரன் ஏறிக்கொண்டு வில்லைவளைத்து பாணங்களைச்செலுத்தி அநேகம் பூதரைக்கொன்றுகுவித்துவருகையில் பூதர்களவனைப்பார்த்து இவன் ஒற்றைத்தேராளியாகத் தன்னந்தனியே போர்செய்கின்றான் இவனேதான் வில்லாளியோவென்று சொல்லிக்கொண்டு பூதவீரர் தலைவரிலொருவனாகிய உக்கிரனென்பவன் சலந்தரனுடலங்கீண்ட சக்கரப்படையை யுண்டுமிழும் பூதவீரனும்தானவர் முதல்வனாகிய அசுரேந்திரனென்பவன் செய்யும் போர்த்திறங்கண்டு தண்டுகொண்டெறிய நேரே குறுகியேசென்று மார்பில்மோத அவுணப்படைகள் அவனிறந்துபட்டானென்றே பயந்து சொல்லிக்கொண்டனர். உக்கிரனேவுதலும்வருகின்றதண்டு அவன்மார்பின் உளதாகிய சாலிகை சிந்தக் கொதித்துவந்து பருந்துகள் தங்கியிருக்கும் போர்க்களத்தில் இவனைப் பலியூட்டுவேனென்று நூறாயிரம்பாணங்களை ஒருதொடையிற்செலுத்தினான். கொடியனவாகிய பாணங்களை உக்கிரன்மேல் அதிசூரன்பெய்ய உடன்முழுதும் குருதியாறு சொரியக்கண்டு அவன் பெரியதோர் மலையைப்பிடுங்கி யெறிந்தான். அதனால் அவ்வதிசூரனேறியிருந்த குதிரைபூட்டியதேர் பிதிர்ந்துபோகவும் பூமிமேற்படர்தல் பிழையாமென்று நினைத்துப் பொன்மலை போன்றதேரில் நீலக்கதிர்போல் விரைந்து பாய்ந்தான். அப்படி பாயும் பொழுது அப்பன்மணித்தேரை யிழுத்துக்கொண்டு செல்லும் குதிரைகள் அழியும்படி மறத்தொழில்செய்யும் உக்கிரன் சிங்கம்போற் போயுதைத்தான். அவ்வாறுதைக்கவே அவ்வதிசூரனுடைய தேரிற்கட்டியிருந்த குதிரைகள் பூமியில் புதைந்து வீழ்ந்தன, அதனால் மிக்ககோபங்கொண்டு அவன் மேல் புதைய நூறுபாணங்களைத் தூண்டினான். அப்படி பாணங்களெல்லாம் தன்னெதிரே வருந்தன்மையையறிந்த உக்கிரன்கதையைக் கைக்கொண்டு வருவது கண்டு வேறொரு தேரிலேறித் தெய்வதப் படைகளைவிட்டு உன்னை இறந்துபடச் செய்வேனென்று எல்லா வழிபாடுகளையு மந்த்ரங்களையுஞ்செய்து விட்டு அக்கினியாத்திரம் வாங்கி வணங்கிவீசினான். இவ்வாறவன்விட்ட

அக்கினிபாத்திரம அக்கினிப் பொறிசிதறும்படிவர அப்படிவிட்ட பாணத்தினது
வேகத்தைக்கண்டு சண்முகப்பெருமான் சேவடித்தியான பலத்தால் அதைப்
பிடித்து விழுங்கிவிட்டான், அப்படி விழுங்கக்கண்டுவருணாத்திரம்விட அவ்
வாறேயதனையுமருந்தினான், வாயுவாஸ்திரமேவினான், அதையும்பற்றி விழுங்
கினான், பிரமாத்திரத்தையேவ அதையும பற்றி விழுங்கினான். பின்பவன்கள்
ளமாமாயப்பிரானிடமபெற்றநாராயணாத்திரத்தையேவினான், அப்போதுசிங்க
முகாசுரன்மகனாகிய அதிசூரன் இனி யாமென்செயத்தக்கது! இவன்பிரமனோ!
கள்ளமா மாயப்பிரானோ! கறைமிடற்றொருவனோ! கண்டறியேனேயென்றும்
மும்மைப் பெருந்தேவரல்லது பிறரால இப்படி செய்யவும் வல்லமையுண்
டோவென்றும் அம்மும்மைப்பெருந்தேவரிலிவனுமொருவனாவானோவென்றும்
அதிசூரனினைந்து கூறினான். கோபமிகுதியாகவுடைய அவுணர்கள் உக்கிரனு
டைய ஏற்றங்கண்டுஇனியென்ன செய்வோமென்று கூற்றுவன் கைக்கொண்ட
வுயிர்போலக்கலங்க இந்திரன்முதலியதேவர்கள் இவ்வதிசயங்கண்டு தாமனாயி
லெழுந்தருளிய நான்முகப்பெருமானைப்பணிந்து எங்களால்தரப்பட்ட அஸ்திர
சஸ்திரங்களும் நாராயணாத்திரமும் உமது பேராலாகிய பிரமாஸ்திரமும்
இவனொருங்குவாயிற்பெய்யத்தக்கபேராற்றலெவ்வாறுபடைத்தனனென்றனர்.
அதைக்கேட்ட நான்முகத்தொருவன் இவனோ மதிச்சடைபொறுத்தமாசிலா
மணிவரம்பெற்றுள்ளான், கந்தன் கழலிணை மறவாக்கவின்பெறுஞ் செல்வத்
தான், எவ்வெவ்வகையுமாற்றவல்லான்'அவனருளாலேயவன்றாள்வணங்கி' என்
றவாறு அப்பரம்பரனருளால் மும்மையும் தொழுமுத்திபெற்றான். இவனோ
எம்மினும் பெரியான், என்று மீறிலாதவனேயாவான், கருங்கடல் வண்ண
னாகிய திருமாலேவியசக்கரத்தையுமுண்டவன்மையுடையோன், இன்னுமிருந்
திறல் படைத்தவன், வெற்றியிற்சிறந்தவன், உக்கிரனென்னும் பெயர்வாய்ந்
தவன், இவன் நாமெல்லாம்கொடுத்தபடைகளையுண்டமைதானோபெரிது, நான்
கண்டஅண்டங்களையுஞ் சிதையத்தாக்குவன், இவன்புகழுங் கூறமுடியுமோ
வென்றுசொல்லத் தேவர்கள் கேட்டுத்தலையையசைத்து இவனுக்கின்னும்வலி
மையுண்டாகவெனக் கூறினர்.

இவ்வாறு ஆகாயத்தில் நடக்கையில் அவுணர் சேனைத்தலைவனாகிய அதி
சூரன் உக்கிரனென்னும் பூதவீரனை நோக்கி உனனைச் சிதைப்பேன் உனன
மாகியபடை விடுகின்றேனென்றெண்ணுதை! ஞானநாயகமாகிய சிவாத்தி
ரத்தைத் தொடுப்பேனென்று. மனத்தினால் பூசனைமுதலியவற்றை வகுத்துச்
சிந்தையின் மிக்ககோபத்துடன் அவ்வத்திரத்தைப் பிரயோகிக்க அது சங்
கார கருத்தாவைப்போ லுருக்கொண்டு விளங்கிற்று. அது அழலைச்சொரியும்
நாகமும் யமனுருவும் பஞ்சபூதங்களும் கணங்களும் வேறுபல்படையும் அக்
கினியும் பேரற்ற எவ்வுலகமு மஞ்சநடந்துவர உக்கிரன் கண்டு தன்கையிலிரு
ந்த தண்டினை நீக்கிப் பவமகற்றும் திருவஞ்செழுத்தை விதிமுறை யுச்சரித்
துக் கைகுவித்து இறைவனடியைச்சிந்தித்தான். இவ்வாறுஉக்கிரன்வணங்கித்
துதித்துக்கொண்டிருக்க இவனை நாமடுவதுகலமன்றெனத் துணிந்து தான்
இவனைக்கொல்லுதல்தகுதியன்றென, சிவபெருமானதுபடைக்கலம் விளாங்கு

சென்றது. இப்படிவந்த தன்மையைக்கண்டுசிவனே வென்றயிர்த்து அதிரூ
ரனடங்கினன்; பூதர்கள் சிறந்தார்கள். தேவர்கள் மலர்மழை பொழிந்தனர்.
பகைவர் விழிவழி நீர்பொழிந்தனர். நீங்குகின்ற தானவர் கூட்டத்தைநோக்கி
நீங்கள் ஏங்குவதை விடுங்களென்று தேரினின்று மிழிந்து தன்கரத்திருந்த
தண்டைக் கையிலேந்திக் கோபத்துடன் அதிரூரனைத் தாக்கினன்; அவ
னே பூமியில் பதைத்துவிழுந்தான்; நமனுமவனுயிரைக் கைக்கொண்டு சென்
றான். உக்கிரனென்னும் பூதவீரனால் அதிரூரன்மாண்டமையையறிந்தஅசுரேந்
திரன் நெஞ்சுவிடமெனக் கொதித்துஅழலெழ நகைத்துப் பூதக்கூட்டத்தின்
மேல்விரைந்து சென்றனன். இவ்வாறு சென்ற அசுரேந்திரன் இந்திரன் கையி
லுள்ள நீண்ட வில்லினும் இரண்டாயிரமடங்கு நிமிர்ந்த வில்லேந்தி வளைத்துக்
குணத்தொனிசெய்துசரமழை பொழிந்தான்.பூதர்கள் அதுகண்டு தண்டுகளை
யும் மலைகளையும் கொண்டு போர்செய்தனர். அவற்றைத் தன்பாணங்களால்
விலக்கிப் பின்னும் பாணங்களைச்சொரிந்துமுடியும் கைகளுமுடலும் முகமுந்
தோளுமழுந்த வருத்தினன். இவ்வாறு பூதர்களைச் சின்ன பின்னம் படக்
கொல்லவே, வீரரிற் கனகனென்பவன் எதிர்ந்தான். தன்னை யெதிர்ந்தகனக
னென்னும் வீரனைப் பாணவருடம்பொழிந்து வருத்த, அவ்வீரன் உதிரவாரி
யோடு அவன் தேர்மேல் அடைந்து பாகனையும் தான் உயிர் நீங்கவுதைத்து
அவன் வில்லினைக் காகம்போலத் தன் வெண் பற்களைச்சிதைக்கறைசேர்ந்த
மேகம் பூமியிலிழிந்தாற்போலவு மீண்டுஅசுரேந்திரன்மேல் பெரியமலையொன்
றை வாங்கியெறிய அது வில்லையொடித்தது; அசுரேந்திரன் வேறொரு வில்லை
யெடுத்துக்கொண்டு பூதர்கள் பயங்கொள்ள வளைத்து எட்டுப் பாணங்களைத்
தொடுத்து அவன்விட்ட மலையைத்துகளாக்கிஆயிரம்பாணங்களாற்புயங்களும்
வருந்தும்படிசெய்தான். அதனைக்கண்ட மத்தனென்பவன் இவன் செருக்
கைக்கண்டு எதிர்ந்தான். அவன்மேலும் அசுரேந்திரன் பலபாணங்களை
யேவி வருத்த மந்தனென்பவனும் அசுரேந்திரனோ டெதிர்ந்தான். அவனையும்
ஆயிரம்பாணங்களால்வருத்த மந்தனுமயர்ந்தான். சிங்கனென்பவன் அதன்
பின்னர்மிகக் கொடும் போர்செய்ய அவனு நொந்து நிற்கக்கண்டு பூதவீரர்க
ளெல்லாரும் போர்செய்திளைத்தனர். இவர்கள் இவ்வாறாக இதைக்கண்ட
இலக்கத்தவரில்தண்டகனென்பவன் ஆயிரங்கணைகளை அவன்நெற்றியிலேஉதிர
மெழவருத்தவயர்ந்தான். அதைக்கண்ட தாரகனிளையமகனாகியசோமுகனெ
ன்பவன் ஆயிரம் பாணங்களைச் சொரிந்து அவ்ன் தேரை யழித்தான். தேர
ழியவே சோமுகனும்கோபமாய்வேறொருதேரிலேறி அவனுயிரைவாங்கும்படி
விட அத்தண்டகனும் தளர்ந்தான். அப்போது விசயனென்பவன் சோமுகன்
கையிற்பிடித்தவில்லை யாயிரம்பாணங்களாற் றுண்டித்தான். வில்லழியவே
சோமுகன் விசயன்மேல் தண்டைத் திரித்துவிட்டான். அதனாற் கலக்க
முறவே இலக்கத்தவரும் தனித்தனியேவந்து போர்செய்தனர். இவ்வாறு
போர்செய்திளைக்கக்கண்ட சோமுகன் வீரவாகுதேவரை யெதிர்ந்தான். வீர
வாகுதேவரும் தெய்வசிகாமணியாகிய சண்முகத்தொருவனைத் தாள்பணிந்து
வில்லைவளைத்து நாணேற்றித் தேவரும் பிறரும் வியக்கவும்; அவுணர்க ளயா

வும் பாணமழையால் அச்சோமுகனை மறைத்தனர். அவ்வாறு மறைத்தத னால் தன்னுடல் முழுதும் உதிரவெள்ளம் பெருகக்கண்டு தன் கையிலிருந்த வில்லைவளைத்து பிறைமுகக்கணையையழுத்தினான், அதனால்பொருதஇருவரும் இளஞ்சூரியனை யொத்திருந்தனர். சோமுகனே ஏழுபாணங்களை விடுத்து வில்லைத் துண்டித்தான். வீரவாகுதேவரும் வேறொருவில்லைக் கையிலெடு த்துவளைத்து ஆயிரம்பாணங்களை யேவினர். அப்படி செய்வதுகண்டமரர் சோமுகனை வீரவாகுதேவர் வெற்றிகொள்வாரோ இச்சோமுகனே யானை மகன் அவ்வீரவாகுவோ சிம்புளின்மகன், இருவர் போரும் வெகு அற்புதமெ ன்றே பேசிக்கொண்டனர். பின்பு சோமுகன் வேறொருதேரிலேறி வீரவாகு தேவரேறிய தேரையழித்தான். வீரவாகுதேவரோ சண்முகப்பெருமானைச் சிந்தித்துத் தன்கையிலிருந்த வாளை யுறையினின்றும் கழற்றி அவன் கரத் தைத் துண்டித்தனர். பின்பு வேறொருகையில் தண்டுகொண்டடித்தான். வீரவாகுதேவரோ அவன் தலையைக் காலாலுதைக்க மீண்டுஞ் சோமுகனும் பின்னுந்தொடர அவனைக்கொன்றனர். அவுணருமஞ்சியோட்டெடுத்தனர். இதைக்கண்ட சூரபதுமன் பூதவெள்ளத்தின்மேல் கோபத்துடனெதிர்த்தான். அவ்வாறெதிர்த்து வில்லைவளைத்து நாணேற்றிப் பலபாணங்களை யெறிந்தனன். சிலபூதர்கள் இறந்துபட்டனர். சிலர் இரியல்போயினர். சிலர் திகைத்தனர். சிலர் நொந்தனர். இவன் வில்லைக்குனித்து நாணேற்றிய வோசை பன்னிரண் டாண்டுவரையிலும்சலிப்பறவொலித்துக்கொண்டிருந்ததென்றால் இவன்விற்றி றலைச் சொல்லத்தக்கவர்கள் யார்? பின்பு பூதத்தலைவர்கள் நெருங்கிப்போர் செய்யவும் அவர்களை அநேகமாயிரம் பாணங்களால் வருத்தி யயரச்செய் தான். பிறகு இலக்கத்தவர்கள் போர்செய்தனர். அவர்கள் கையிலிருந்த விற் களை யொடித்தெறிந்து அநேகம் பாணங்களைவிடுத் தடலையு மிளக்கச்செய் தான். இவ்வாறாக நவவீரரில் வீரதிவாகரனென்பவன் சூரபதுமனைப் பல பாணங்கள்விடுத்து அவ்வீரதிவாகரன் கைபிற்பிடித்த வில்லையொடித்து அவ னுரத்தையும்பிளக்க விழுந்தான். வீரராக்கதன் சூரபதுமனோடெதிர்த்து வா ளொடுசூரபதுமனிருக்கிறதேரினையணுகி அவன்வில்லைத் துணிக்க அ... ன்வில் லொடிந்ததில்லை, வீரராக்கதனை யோர்தாளினு லவன்செல்ல வுந்துதலும் விரைந்து பாரில்விழுந்தான். இப்படி விழுந்ததை வீரமகேந்திரன்கண்டு பல பாணங்களை யேவச் சூரபதுமனும் நூறுபாணங்களைவிட்டு அவனையும் பூமி யில் வீழ்த்தினான். பிறகு வீரதீரன் விரைந்துவந்து சூரபதுமன்மேற் சின ந்து பதினொன்கு பாணங்களால் அவனையும் விழச்செய்தான். வீரமகேசன் சூரபதுமனோடெதிர்ந்து வேலாயுதமொன்றைவிடுக்க அவ்வேல் சூரன்மார்பிற் பட்டுப் பொடிப்பொடியாயிற்று, சூரபதுமனே ஏழுபாணங்களைத்தோள்மே லேவி அவனையும் பூமியில்விழச்செய்தான். இதை வீரகேசரிகண்டு பலபாண ங்களைத்தொடுத்துச் சூரபதுமன்மேலேவ, சூரபதுமன் அவனை யொருகை யால் கடலில்விட்டெறிய அவனும் பின்பு சேனையைவந்துகூடினான். இதைக் கண்ட வீரபுரந்தரன் யமாஸ்திரத்தைவிடுக்க அது சூரன்மேற்பட்டுப் பொடிப் பொடியாகவே, அநேகமாயிரம் பாணங்களைவிடுத்துவீரபுரந்தரனையு மிளைக்கச்

செய்தான். பிறகுவீரர்தகள்விரைந்துவந்துபலகணைகள்விடுத்தனர்; அவற்றை யும்விலக்கிச் சூரபதுமன் அவனையுமாயிரம்பாணங்களால் அவன்பிடித்தவில் லும் ஏறியதேரும்அழித்து மார்பையும்பிளக்க அயர்ந்து விழுந்தான். இவ்வாறு நிகழ்வதை வீரவாகுதேவர்கண்டு தன்மேற்சீறிவந்தெதிர்க்கக்கண்டு சூரபது மன் இவன் மனத்திலே தூதுவனென்பதெண்ணி இனைமுமெனமுன்னே தூதனெனவந்தாயானால் துன்பமடையமாட்டாய்; வில்லைப்பிடித்தெதிர்நிற்பை யாயின்உன்னுயிர்வாங்கிவிடுவேனென்றான். அதற்குவீரவாகுதேவரோ சூரனை நோக்கி நான் தூதனுமமைச்சனுமாவேன், வீரத்தைக்கொண்ட பகைவர் மேற் போர்க்குஞ்செல்வேன், வெற்றிவேற்கரத்தையுடைய விசாகனுக்குரிய வேண்டிய பணியுஞ்செய்வேன், யானே முற்றும் வல்லமையுடையேன், என் னோடு போர்செய்யென்ன, சூரபதுமனும கோபமாய் ஆயிரங்கோடி பாணங் களை வீரவாகுதேவர்மேற் சொரிந்தான். வீரவாகுதேவரும அளவில்லாத கணைகளைச்சொரிந்து சூரன்விட்டபாணங்களத்தனையுமொருசேரவழிக்கப்பின் ஒருநூறுபாணங்களைவிட்டு நெற்றியைப்பிளக்க அவற்றையும் விலக்கி நூறம்பு தொடுத்து வீரவாகுதேவரையும வருத்தினன். பின்னும வீரவாகுதேவரநேக கம்பாணங்களைத் தேர்மேல்விட்டுப்பாகனையுமவருத்தினார். இவ்வாறு செய் யவே சூரபதுமன் வீரவாகுதேவரேறியதேரைச்சிதைக்க அவரும் வேறொரு தேரிலேறினர். அவ்வாறு தேரிலேறி அக்கினியாத்திரம யமாத்திரம நிருதி யாத்திரம் இந்திராத்திரம் பிரமாத்திரம விஷ்ணுவாத்திரம தொடுத்துவிடுக்க, சூரபதுமன்மேல் அவைவந்துவந்துபட்டு மட்டற்றதுகளாயின. இவ்வாறுகக் கண்டு வீரவாகுதேவரும வொத்திரத்தை விடுக்க சூரபதுமனும அதை வேறுவிட்டு விலக்கிப் பதினைந்து பாணங்களைத்தொடுத்து வீரவாகுதேவர் கையிற்பிடித்த வில்லையொடித்தான். வீரவாகுதேவருக்குக் கோபமுண்டு வேற்படையொன்றைவிடுக்க அது அச்சூரன்மேற்பட்டொழியச் சூரனும் தன்வேலொன்றை வாங்கி வீரவாகுதேவா மார்பே யிலக்காகவிட அதுபட்டு உதிரஞ்சொரிந்துகொண்டு தேரினமேற் சாய்ந்தனர். இச்செய்கையெல்லாம அறிந்த சரவணோற்பவன் சூரபதுமனேரேசென்றெதிர்க்க, அவா வருகை யைக்கண்ட சூரபதுமன் அவா திருமேனியினழகை முற்றுநோக்கி மிக்க கோபமாய் நம்பெருவள்ளலாகிய முருகப்பிரானோடுஞ்சொல்லலாயினன். உன் னொடுவந்த சேனையாவுமொழிந்தன, அதன்படைத்தலைவனாகிய வீரவாகுவும துயரத்தோடும் வீழ்ந்தான். நேற்றுப்பிறந்த பச்சைப்பசும்பாலகனாகிய நீயா என்னொடு போர்செய்யவல்லை, நின்வல்லமையை யொருகணத்திலொழிக்கின் றேன் பாரென்றான். அதைத்திருச்செவிசாத்தியருளிய சண்முகப்பெருமான் என்னை இளங்குழந்தையென்றெண்ணிக் கொண்டிருக்கின்றாயே! நமது பெரு வாழ்வாகிய சிவபெருமானது நெற்றியிற்றோன்றும் தீப்பொறியொன்றன்றோ கடைநாளில் உலகத்தை முழுதுமழிப்பது; நீயோ விவேகஞ்சிறிதேனுமில்லாத பேதை! உலகத்திலே வீரர்களாவார் பாலரென்றும் பெரியாரென்றும் பேசுவார் களோ. யாரேனும்போர்செய்யவருவாரானால் எதிர்த்துப்போர்செய்வார்கள்; இனி ஆண்மையொடு மிகுந்த நின்சேவகத்தன்மையைக்காட்டு, பார்ப்போம் மிகப்

பசும்பாலனென்ற என்வலிமையால் கெடுத்து விடுவேனென்று சொல்லினர்; பின் கோபத்துடன் பலபாணங்களைச் சூரபதுமன்விட அவற்றையெல்லாம முருகப்பெருமான் தடுத்தனன், அவ்வாறு தடுத்ததுமல்லாமல அச்சூரபதுமனை தோள்மேற் பதினான்கு பாணங்களைவிட்டு அவையெல்லாம முற்றுமொழித்தனர். பின்னும் வேறுமோராயிரம் பாணங்களைவிட்டு அச்சூரன் கையிலவில்லையொடித்தெறிந்தனர், பின்பவன் வேல்விட்டெறிய அதையும் பதினான்கு பாணங்களைவிட்டுக் கண்டித்தனர். சூரபதுமனோ வேறொருவில்லையெடுத்துக குகப்பெருமான்விட்ட பாணங்களை நூறியெழுபாணங்களைத் தோளிலெய்யவும் அவைதுகளாகவும் மிகக் கோபித்துப் பத்துக்கணைகளா லச்சூரபதுமன் கையிற்பிடித்திருந்தவில்லைக்கண்டித்து ஆயிரம்பாணங்களால்அவனேறியிருந்த தேரையுமழித்துவிட்டு அதுவுமல்லாமல் சேமதேர் நூற்றினையுமழித்தனன். சூரபதுமன் தன்கையிலிருந்தவில்லழிந்ததல்லாமல தேருமழியவே, பூமியில்விழுந்து தான்சூலப்படையேவ, அவற்றையும் பன்னிருபாணங்களை விட்டுக்கண்டித்துவிட்டுப் பின்னும் பலபாணங்களைத்தூவி அவனணிந்த மதாணிப் பதக்கத்தையு மறுத்தனன். இதைக்கண்ட அவுணர்களெல்லா மங்கேயுடைந்து எமது முத்துக்குமாரப் பெருமானை வளைந்துகொண்டு போர்செய்ய அவனும் ஒரு சக்கரத்தையேவ அதுசேனைமுற்றுமழித்துவிட்டு அப்பெருமான் கையிலேவந்தடைந்தது. சூரபதுமனோ பிரமாத்திரத்தையும் விஷ்ணுவாத்திரத்தையும்விட அவற்றையெல்லாம் குகப்பெருமானது வேற்படையே விழுங்கிற்று பிறகு சூரனோ சிவாத்திரத்தைத்தொடுக்க அதைத்தமது திருக்கரத்தினாலேபிடித்துக் கொண்டு அவனுக்குத்தக்க புத்திமதிகளைச்சொல்லவும் அச்சூரபதுமன்கேளாமல் இனி நாளைமட்டில்லாத சேனையுடனேவந்துபோர்செய்யலாமென்று மாயமாய்மறைந்து போயினான். முன்னே போர்க்களத்திலே மயர்ந்து வீழ்ந்திருந்த சேனைவீரரும சண்முகப்பெருமானை வந்தடைந்தனர். சிலபூதவீரர் சூரபதுமனுடைய வடக்குவாயலிற்சென்று அதிசூரனொடும்போர்செய்து அவனையவன் சேனையுடன் கொன்று மதிலையுமிடித்துக் கோபுரத்தையுமிடித்துத் தகர்த்துக் கடலில்விட்டு அரக்கரைமுழுதும் மழித்துவிட்டதல்லாமல முருகப்பெருமானையும்வந்தடைந்தனர். பின்பு சண்முகப்பெருமானும பூதவீரரும் .இ லக்கத்தொன்பதின்மரும் தம்மைப் புடைசூழ்ந்துவரத் தாமோ பாசறையுட்புகுந்து தமது மாளிகையையடைந்து சிங்காதனத்திலமர்ந்துவிற்றிருந்தனன்; சூரியனும் அந்தரமும் பூமியும் இருளும்படி மேற்கடலின்மறைந்தனன். இவ்வாறு அப்பூதர்கள்வந்து வடக்குவாய் தலையழித்துப்போயினா எனறுதூதர் சொலலக்கேட்ட பானுகோபன் சிலரையழைத்து நமது மரபின் தச்சனாகிய மயனென்பவனை வெகு சீக்கிரமாயழைத்து வாருமென, அவ்வாறே அவர்களழைத்துவந்துவிட அவனும் பானுகோபனைவணங்கினின்றான். அவனைநோக்கி நமது நகரத்தின் வடகோபுரத்தை முன்போலப் புதுக்க வேண்டுமென்றுசொல்ல; அவ்வாறே புதுக்கிப்போயினான். பானுகோபனோ மாகாயனென்பவனைநோக்கி நீசென்று வடக்குக் கோபுரவாயிலைக் காத்திருவென்றுசொல்லி யனுப்பினான். அவனும் அவ்வாறே செய்யச்சென்றான். இதுகிடக்க;

இரண்டாநாட்சூரபதுமன்யுத்தப்படலம்
முற்றிற்று.

மூன்றுநாள்பானுகோபன்யுத்தப்படலம்.

வைகறையிலெழுந்து பானுகோபன் காலைக்கடனை முடித்துக்கொண்டு தான் போரில் அபசயப்பட்ட காரியத்தைச் சிந்தித்து வருந்தித் தன்தாயை யீன்ற தாயாகிய மாயையைநினைத்தான். அவன் நினைத்தலும் அவள் அவன் கட்புலனுக்குத் தோன்றினாள். அவனே பிதாமகியைவணங்கிநின்று சண்முகப்பெருமான் தூதனாகிய வீரவாகுவால நான் மானமிழந்து மிகவருந்தினேன்; இங்கே பகைவரோடுபோர்செய்து முடிவிற்புறமுதுகிட்டோடுவோர்நிலைமையை யடைந்தேனென்றான். அதைக்கேட்ட பிதாமகியாகிய மாயையோ அப்பா! நீ வேதநெறி பிறழ்ந்தாய், தேவர்களைச் சிறையிலிட்டனை! தேவேந்திரனையு முறைமைகெடச் செய்தாய், முனிவர்செய்யுந தவத்தையழித்தனை, தேவரையும் பகைத்தனை; நீஎப்படியுய்யலாம், அழியாத தன்மையுள்ள உயிர்களெல்லாமவணங்குமமுமமைப்பெருந்தேவரோ நின்பகைவரொன்றால் எங்ஙனம் உயிர்வாழ்வை! கெட்டவழியில் மிகுதியுநடப்பதல்லாமல் பழித்திறம் பூண்டாய், பகைவர் இந்நகரத்தை யழித்துப் போர்செய்ய அவர்களுக்குத்தோற்று விட்டாய்! விதியையாரேவெல்லவல்லவா எனப்பலபலபேசி இனியாவதென்னவிருக்கின்றது, போராற்றல் படைத்த என்மகனாகிய சூரபதுமனது அருந்தவச் செலவமே! நீ வேண்டுவது கேள் தருகிறேனென்றாள். அதைக்கேட்ட பானுகோபன் நேற்றுப் போர்விருமபிச்செய்த வீரவாகுவை இனறு நான சேனையுடன்சென்று வெற்றிகொள்ள ஒன்றொருபடைக்கல மளிக்கவேண்டுமென்றான். மிக்கவலிபெற்ற சூரபதுமன் மகனாகிய பானுகோபன் இவ்வாறு சொன்னதையெல்லாம் மாயைகேட்டு மாயாத்திரம் விதித்துக்கொடுத்து அவனுடன்சொல்வாளாயினாள். இதை நீ விடுப்பையானால முருகப்பெருமான் தூதனையேனும பிறரையேனும உணர்வையழித்துச்சுற்றும்; வாயுவினொழிலையுஞ்செய்யும; இற்றைநாள் உனக்கே வெற்றியுளதென்றாள். மாயை இவைகளைச்சொல்லி வானின்வழியே சென்றபிறகு வரத்தினாற்பெற்ற மாயாத்திரத்தை கையில்தாங்கி நேற்றென்னை வெற்றிகொண்டு சென்ற வீரவாகுவை வெற்றிகொள்ள வேண்டுமென்று துணிந்து அம்பறாத் தூணியைத்தாங்கியுற்ற ஆயுதங்களெல்லாமெடுத்துக்கொண்டு விலமேலேந்தி இருபதினாயிரவெள்ள மவுணசேனை தன்னைப் புடைசூழப்புறப்பட்டான். அப்போது முரசு துடி குடமுழா சல்லரி கரடிகை மத்தளமகாகளம் உடுக்கை இரலை முதலிய வாத்தியங்கள்முழங்கின. யானை தேர் குதிரை காலாட்படையென்னும நால்வகைச் சேனையுஞ்சூழ்ந்துவர மகேந்திரநகரவாயிலைக்கடந்து குமரநாயகன் எழுந்தருளியிருந்த போர்க்களத்தையடைந்து தன்தூதனை நோக்கி நீ ஏமகூடஞ்சென்று பாசறையை யடைந்து வீரவாகுவைநோக்கி இன்றுன்னைப் படுத்தல்லது மீளேனென்று பானுகோபன் சொல்லியனுப்பியதாக விளம்புதியென அனுப்பினான். அதைக்கேட்ட வீரவாகுதேவர் நான் பானுகோபனை யுயிர்வாங்கவருகிறேனென்றுசொல்லியனுப்பினார். அவ்வாறு சொல்லிவிட்டுப் பூதவீரரும் இலக்கத்தெண்மரும் தன்னைச்சூழ்ந்துவரக் குமரநாயகன் சந்நிதானமடைந்து எங்குமாகி யிருந்திடும் இறைவனது பாத

மலனை அட்டாங்கமாகப்பணிந்தெழுந்து கைகூப்பிநிற்க அவனைநோக்கியருளி அங்குநடந்ததை முழுதுமறிந்து முருகப்பெருமான் சொல்வதாயினன். வீரவாகுவே! நீ அவனோடும் போர்செய்யும்போது அவனெய்த அம்பு விடுகின்றனே அதற்கெதிர் அம்புதொடுத்து அவற்றை நீக்கவேண்டுகிறேன். அவன் மாயைசெய்யத் தொடங்குவானேல் நமது ஞானசத்தியாகிய வேற்படையை விடுகிறேன்; அது அம்மாயையை நீக்கிவிடும் நீ விரைந்துபோவென்றான்; அவ்வாறுசொல்லிய முருகப்பெருமானை வணங்கி விடைபெற்றுப் போர்க்களங் குறுகினான். பூதவீரரும் அவுணவீரரும் தம்மிற் கைகலந்தனர். அவர்கள் முத்தலைச்சூலம்முசலம் கதை மழு சக்கரம் மலை மரங்களாகிய இவற்றாற் போர்செய்யவே; அங்கே யொழுகிய உதிரவாற்றில் மிதந்துவரும் மாமிசத்தையருந்தப் பறவைகள் ஆகாயத்தில் நெருங்கின. இவ்வாறு போர்செய்கையில் சிலர் கைகள் துணிந்தன, தோள்துணிந்தன, தலைதுணிந்தன, மார்புபிளந்தன, கழற்கால் துணிந்தன, சிலர் மெய்பிளந்தன, பூதர் இறந்துபட்டனர், அங்கே சில அவுணரும் அவ்வாறாயினர். பூதத்தலைவரோடும் அவுணத்தலைவரும் நெருங்கிப் போர்செய்தனர். இலக்கத்தெண்மரும் தத்தம் வில்லையேந்தி அவுணர்களிற் பலரைக்கொன்றனர், அவுணரிற்பலபேர் இறந்துபட்டதைக்கண்ட பானுகோபன் தானொருவில்லையெடுத்துத் தேர்ப்பாகனைத் தேரைத் தூண்டக் கட்டளையிட்டுச் சாரதப்படையுட்புகுந்துசென்றனன்; வீரவாகுதேவரும் தமது துணைவருமுடன்வரத்தாமெதிர்ந்துபாணங்களைச்சொரிந்தனர். அப்பாணமோ மேகங்களைக்கடந்து சென்றன, தேவர்கள் விரும்பி வசிக்கும் சேணையிற் புகுந்தன, அமராவதிமுதலிய எண்டிசைநகரங்களிலும் சென்றுலாவும், மலைகளெல்லாம்போயுலாவும், அவை மேகத்தின் மேலனவோ! பூமியை நாடுவனவோ! வைகுந்தத்திற் செல்வனவோ! கடலிற் சேர்வனவோவென்று தேவர்கள் தம்மில் நினைந்தனர். அத்தேர்களிலிருக்கும் பாகர்கள் குதிரைகளைத்தூண்டிச்சூரியன்முதலிய கிரகவரிசைவரையிலுஞ்சென்றனர். தேவர்களும் இரியல்போயினர். பானுகோபனோ தன்வில்லில் ஆயிரம்பாணங்களைத் தொடுத்து வீரவாகுதேவர் மார்பிலெய்தான். அவை தன் மார்பிலழுந்த வீரவாகுதேவர் கோபங்கொண்டு தான் ஆயிரம்பாணங்களைத் தன் வில்லினின்றும்விடுத்துப் பாகனையும் குதிரைகளையுந்தேரையும்அழித்தனர். தேரழியவே பானுகோபனும் வேறொரு தேரிலேறித் தன்கையில் வில்லையெடுத்து அவன் வில்லைவளைக்குமுன் ஆயிரம்பாணங்களைத்துரந்து அவன் மார்பைப்பிளக்க அவனும்வருந்தினன். பூதர்களெல்லாரும் ஆரவாரித்தனர். இவ்வாறுபூதர்கள் ஆரவாரிப்பதைக்கேட்ட பானுகோபன் மனம்வருந்திக் காதில் தீயவிடம்சொரிந்தாற்போலக் கோபித்துத் தெய்வப்படைகளால்இத்தூதனாற்றலைக் கெடுக்கவேண்டுமென்றெண்ணி வருணாத்திரமெடுத்து வில்லிற்பூட்டி நீ பூதவீரர்களையும் தூதனையும் இலக்கத்தெண்மரையு மழிக்கவேண்டுமென்று தொடுத்துவிடுத்தான். அது கடையுகத்தில் உலகமேழுமழியும்பரந்த எழுகடல் வெள்ளம் போலச்சென்று ஆகாயத்தையளாவி இடியோசை காட்டியது. அதைக்கண்ட தேவரும் கலங்கினர். பூதர்களும் கலக்கங்கொண்டனர்; இலக்கத்தெண்மரும்

மனம் குலைந்தனர். இதைக்கண்ட வீரவாகுதேவர் உலகமுண்டலாவிவரும்
ஆக்கினேயாத்திரத்தை விடுக்க எங்கும் புகைமூடிக்கொண்டன, வெம்மையு
மெழுந்தன, தீப்பொறி யெங்குஞ்சிதறின, தீக்கொள்ளியு மெழுந்தன, ஒளி
யெழுந்தன, சடசடவென்னும் பேரொலியெழுந்தன, வானமுந்திசையும் எங்
கும் நெருப்புமயமாயின. முடிக்கும்படிவந்த அந்தப்படைகளால் அண்டம்வெடி
க்கத்தொடங்கியது. கங்கையிலுள்ளமீனினம் வற்றித்துடிக்கவும் கங்கையும்ப்
படிமாயிற்று. சமுத்திரமும் மலைகளும்பொடிக்கலுற்றன பூமியும்தளர்ந்துபிளந்
தது. சண்முகப்பெருமானுடைய தூதன்விட்டபாணம் இவ்வாறு சென்று
ஒருமுகூர்த்தத்தில் வாருணாத்திரத்தையழித்து அவ்வெள்ளத்தையும் கிர
கித்து மேலெழுந்து போர்க்கதும்போன்றது. இப்படி தன்னைப்புறத்தே சுற்றிக்
கொண்ட வாயுவாத்திரத்தைவிடப் பானுகோபன்கண்டு அவ்வாயுவாத்திரத்
தைத்தொடுத்துவிடத்தன் மேல்வரக்கண்டுவீரவாகுதேவரும்நாகாத்திரத்தை
விடுத்தனர். அது ஆயிரம் பதினாயிரம் முதலிய கணக்கற்ற பாம்புகளாகி அவ்
வாயுவாத்திரத்தின் வலியைக்கவர்ந்தது. பானுகோபனே கருடாத்திரத்தை
விடுத்து அதன் வலியைக்கவர வீரவாகுதேவரும் நந்திதேவர் படையை
விடுத்து அதன்வலியையடக்கினார். மிக்க கோபமாய் வீரவாகுதேவர் நந்திப்
படைசெலுத்த அநேகமாயிரங்கோடி எருத்தின்வடிவங்கொண்டு, உலகமெல்
லாநெருங்கிப் பெருமூச்செறிந்தாரவாரித்தது. இப்படி நந்திமாப்படையானு
இக் காருடப்படையை வலியழித்துவிட்டது. பானுகோபனே அந்தகாத்திரத்
தைத்தொடுத்தான். அவ்வந்தகப்படையும் நந்திமாப்படையைவெற்றி கொள்
ளாததையறிந்துபிரமாத்திரத்தைப் பிரயோகஞ்செய்தான். பிரமாத்திரஞ்செ
ன்றுவிண்ணிடத்திலேநந்திமாப்படையைவணங்கிநான்நீசனேவலால் வந்தேன்;
நின்வரவைச் சிறிதேனுமறியேன், கோபங்கொள்ளாதையெனவேண்டி நின்று
விளைந்தகன்றது நந்திமாப்படையை பிரமாத்திரம் தொழுது சென்றமையை
தேவர்கள் கண்டுஆரவாரித்தனர். அதுகண்டு வீரவாகுதேவர்நாராயணாத்திரத்
தைத்தொடுத்துவிடுத்தார். அந்நாராயணாத்திரம் நந்திமாப்படையெதிரடைந்து
போர்செய்துகொண்டு நின்றது. அதுகண்டு பரமசிவன் கிம்புளாகவந்த வீர
பத்திரப்படையை விடுத்தனர். இப்படிப்பட்ட வீரபத்திரப்படையெழுந்து
சென்றபோது நந்திமாப்படைமுன் போர்செய்துமாயன்படை நீங்கியது. இவ்
வாறு விஷ்ணுவாத்திரம் தொலைந்த பின்பு இமையோரையில் அகிலமுழுது
மழிக்கும் சிவாத்திரம் தொடுக்கவெடுத்தான். குறைவில்லாததாகிய சிவாத்
திரம்விடும்படி மஞ்சனம் சந்தனம் மாலிகை மணிவிளக்கு திருவமுது முதலி
யவற்றை மனத்தினாலே தியானித்துநிரப்பி மிக விரைந்து தொடுத்துவிட்
டான், தாதையின் படையைப் பிரயோகஞ்செய்தமையைக்காதன்மாமகன்
கண்டுதானுமப்படியே ஆதிபகவன் படையையெடுத்துத் தன்மனத்தி லரு
ச்சனைசெய்துவிடுத்தனன், இவ்வாறுவழிபாடு செய்தபிறகு சூரபதுமன்மகனா
கிய பானுகோபன்விட்ட படைக்குமாறாகி மேன்மையாகவே மீளவேண்டு
மென்று வேண்டியேயல்லது மேலான இறைவன் படைசெய்த் தொடுத்
தான். வீரவாகுதேவர்விட்ட சிவாத்திரம்! பானுகோபன்விட்ட அத்திரத்

துடன் போர்செய்து கொண்டிருந்து அவற்றை விட்டவரிடமே போய்ச்சேர்தன, பொழுதும்பட்டது. பானுகோபனோவானில்மாயையால்மறைந்துகொண்டு தன்பிதாமகியாகிய மாயையால் கொடுக்கப்பட்டமாயாத்திரத்தை தியானஞ்செய்து விடுத்தான். அது விரைவில்வந்து வீரவாகுதேவருடையசேனையனைத்தையும்மயக்கிக் கட்டிக்கொண்டுகடலிலிட்டது. அதைக்கண்டு பானுகோபனுமகிழ்ச்சியடைந்துதன்பிதாவாகியசூரபதுமன்முன்னடைந்துஅன்று போர்க்களத்திினடந்ததையெல்லாஞ்சொல்லித்தன்மாளிகையை யடைந்தான்.

அதையறிந்த நாரதமுனிவர் குமாரசற்குரு சந்நிதானமடைந்து பானுகோபன் செய்துபோனதை யறிவிக்க, அதைத் திருவுளத்தடைத்த குமாரசற்குரு தன்கையிலிருக்கும்வேற்படையையேவ, அதுவிரைந்துசென்றுஅம்மாயையின் வலியையெல்லாங்கெடுத்து அவன்கையில் வந்துசேர்ந்தது. அக்கடலிற்சென்றிருந்த வீரவாகுதேவரோ யுள்ளிட்டோரெல்லாம்மயக்கமகன்றுமகேந்திரநகரையெதிரெருங்கஅவருள்வீரவாகுதேவர்சொல்லாநின்றனர். ஆகாயத்தில்மறைந்து நின்று மாயையால்நம்மை வென்றோடிப்போனகள்ளனாகியபானுகோபனைத்தலையறுத்தல்லதுநமக்குச்சகலநன்மையுந் தரும்குமாரசற்குருவினுடைய சந்நிதானத்திற் செல்லேன், என்வில்லுடன் நானும் தீயில் இறந்துபடுவேனென்று தன் சேனையுடன் மகேந்திரநகரின் மேற்புறவாயிலை யடைந்தார். அங்கே புலிமுகனென்னுமரக்கன் மாண்டான். பின்பு வீரவாகுதேவரும் ஆக்கினேயாத்திரம் வாயுவாத்திரம்இவைகளைவிடுத்து அம்மகேந்திர நகரமழியும்படி செய்யத் தேவர்கள் பகைவனாகிய சூரபதுமன் அத்தீயையவிக்கச் சத்த மேகங்களையுமேவினன். அவைகள் மிகுந்த மழைபெய்து அத்தீயை யவிப்பதை யெதிரிற்கண்டனர்.

மூன்றுநாள்பானுகோபன்யுத்தப்படலம்
முற்றிற்று.

இரணியன் யுத்தப்படலம்.

வீரவாகுதேவரோ அதைக்கண்டு கோபித்து வடவாமுகாக்கினி யாத்திரம் பிரயோகஞ்செய்தனர். அது சென்று ஆகாயத்திற்படர்ந்த சத்தமேகங்களை யெல்லாம் கிரகித்துவிடவே, அம்மேகங்கள் விழுந்து கடலிற்சென்றன. தூதுவரோ விரைந்துசென்று இதனைச் சூரபதுமனுக்கு அறிவித்தனர். அதைக்கேட்ட சூரபதுமன் மிக்ககோபங்கொண்டுநிற்க அருகேநின்ற மனந்தூயனும் ஆயிரம்வேதமுணர்ந்தானும் மெய்ந்நெறியிற் செல்பவனுமாகிய இரணியனென்னும் அச்சூரன் மகன் தன்தாதையைப்பணிந்து நான் சொல்வதைக் கேட்டருளு மென்றிதனைச் சொல்லத் தொடங்கினன். ஒளியுள்ளதாய்ச் செல்வநிரம்பியுள்ள பொன்னுலகத்திலுள்ள தேவர்கள் பலரையும் நாம் சிறையிலிட்டது பெரும்பாவமேயல்லது அறத்தாறென்று சொல்லப்படு

மோ! அவர்களையெல்லாம் நாம் வெற்றிகொண்டோமென்பது சோமசூரியா க்கினியென்னு முச்சுடரையுங் கண்களாகக்கொண்ட நமதுபரம்பொருளாகிய சிவபெருமானருளியவரத்தின் மேம்பாட்டினாலன்றி வேறொன்றாலன்று. நம் மிறைவனுடன் மாறுகொண்டாரெல்லாம் இறந்துபட்டனரேயல்லது இருந்தா ரென்பாரைக் காணேன். இப்போதோநமக்கவ்வரங்களெல்லாம்பாலித்த பரமசிவனுடைய திருக்குமாரனே நம்மொடு போர்செய்யவந்திருக்கின்றனன். அவ்வாறாகையால் நாம் அவனோடு பகைத்துப் போர்செய்வது மழகேயன்று, நாம் செய்தபிழையை நாடியே தண்டிக்க நமது குகப்பெருமா னெழுந்தருளி னான். ஆகையால் தேவர்களைச் சிறையினின்று நீக்கி அவனெதிரே சென்று நாம் பண்ணிய அபராதமனைத்தும் பொறுத்தருள வேண்டுமென்று வேண் டினால் அவனே கயிலையைநாடிப் போய் விடுவானென்றான். இவ்வாறு தன் மகனாகிய இரணியன் சொல்லியதைக்கேட்ட சூரபதுமன் மிக்ககோபத்துடன் சிலசொற்களைச் சொல்ல அதைக்கேட்ட இரணியனும் அடியேன் அபராதத் தை மனத்திற்கொள்ள வேண்டாம். இப்போதே நம்முடன் போர்செய்யவந் திருக்கும் பகைவரெல்லாரோடிப் போகும்வண்ணம் போர்செய்கிறேனென்று சொல்லிநின்றான் அதைக்கேட்டசூரபதுமன் மனமிகமகிழ்ந்தான். இரணியனோ தாதை கட்டளைபெற்றுச்சென்றுதன் மாளிகையையடைந்து வில்முதலியப டைகளையேந்திநாலாயிரம்வெள்ளம்அவுணப்படையையழைத்துகொண்டுபோ ர்க்களங்குறுகினான். முத்தலையுள்ள வச்சிரவாகு வென்பவனுக்கு மூத்தவனா கிய இரணியன் மறமேகுடிகொண்ட மனமுடைய தன்சேனையைநாற்றிசையி லும்பார்த்து பலவிதமாகவளைந்து கொள்ளக்கட்டளையிட்டுத்தான் மேற்றிசை யை நாடிநடந்தான். அதைக்கண்டவீரவாகுதேவரும்தம்முடைய சேனையை யும் அவ்வாறே யமைத்துத்தாமும் இரணியனை நோக்கி யெதிர்த்தனர். இவ் வாறெதிர்ந்தபோது பூதப்படையும் அவுணப்படையும் ஒன்றோடொன்று கை கலந்தன. சண்முகங்கொண்டதாணுவுக்கிளைய வீரவாகுதேவர்இரணியனுடன் வந்த அவுணரையெல்லாம் பாணமழைபொழிந்து கொல்லுகையில் சூரபது மன் மகனாகிய இரணியனோ ஆயிரம் பாணங்களையேவி அப்பூதப்படையை இரியல்போகச் செய்தான். அவுணவீரரில் நீலனென்னும் பூதவீரன் இரணிய னோ டெதிர்த்து அவனேறியிருந்த தேருடன் அவனை ஆகாயத்தில் விட்டெ றிந்தான். அவன் தேருடன் மீண்டபொழுது அவனைத் தன்காலா லுருளும் படி நிலத்தில்வீழ்த்தி அவன் மேற்பாய்ந்தான். அதைக்கண்ட இரணியனோ தன்மாயையினால் வேறோருருவங்கொண்டு காட்ட அதைத்தொடர்ந்து சென் றான். இதற்குள் இரணியன் மெலிவுதீர்ந்து வேறொரு தேரிலேறி நீலன்மேற் பாணமழைபொழிந்தான். அதனால்நீலன்மனவாட்டமடைந்திருந்தான். அதை க்கண்ட வீரவாகுதேவரும் தங்கையிலேந்திய வேலால்அவன்மாயையைக்கெ டுத்துவிட அவனும் வீரவாகுதேவர்மார்பின்மேல் ஆயிரம்பாணங்களையேவி னான். அவைகளோ மார்பிற்பட்டவுடன் பொடிப்பொடியாயின. வீரவாகு தேவரோ ஆயிரம்பாணங்களை இரணியன்மேலேவி அவன் முதுகிற்கட்டியிரு ந்த அம்பறாத்தூணியையும் பாணங்களையும் தேருடனழித்துவிட்டு, அவன்

சேமத்தேர்களையெல்லாம் பொடிப்பொடியாக்கினர். இரணியனோ இச்செயல்களை யெல்லாங்கண்டு நாமோ இறந்துபடுவது திண்ணம், நமது பிதாவும் இளையபிதாவும் இறந்துபடுவர், பானுகோபன் முதலானோரும் இறந்துபடுவது திண்ணம், நாம் எல்லாரும் இறந்துபடுவது திண்ணமாதலால், இவர்களுக்கு உத்தரகிரியை செய்வதற்கே யாளில்லாமற் போய்விடுமே, ஆதலால் நாம்உத்தரகிரியை செய்வதற்காகவாவது மறைந்திருக்க வேண்டுமெனத்துணிந்து அங்கே யருவமாய்மறைந்து மீனுருக்கொண்டு கடலிலொளித்துக்கொண்டனன். இரவுகழியவே சூரியனுங் கீழ்த்திசையி லுதயமானான். இவனேஇவ்வா றுருக்கரந்த செய்தியைத் தூதர்கள் சூரபதுமனிடஞ்சென்று தெரிவித்தார்கள். அதைக்கேட்டிருந்த சூரபதுமன் கோபங்கொள்ள, அங்கேயிருந்த வேறொருகுமாரனாகிய அக்கினிமுகனென்பவன்நானே சென்றுபூதப்படையைக் குமரனோடு வாட்டிவருகிறேன் கட்டளையிடவேண்டுமென்று கேட்க, அதைக்கேட்ட சூரபதுமன் மனமகிழ்ந்து நீயே சென்று வெற்றிகொண்டு மீண்டுவாவென்று சொல்லித் தன்மாளிகையை நோக்கி யடைந்தனன்.

இரணியன்யுத்தப்படலம்

முற்றிற்று.

அக்கினிமுகன் வதைப்படலம்.

அவ்வாறடைந்த அக்கினிமுகன் தன்படைக்கல மெல்லாமெடுத்துக்கொண்டு தேரேறி மிக்கசேனைகள் சூழ்ந்துவரப் பூதப்படைகள்நிறைந்திருக்கும் போர்க்களங் குறுகினான். பூதர்களும் அவுணர்களுங் கைகலந்தனர். அவர்கள் அவ்வாறு போர்செய்கையில்இருதிறத்தாரில் இலக்கத்தவர்முனைந்து அவுண வெள்ளத்தைச் சின்னாபின்னப்படுத்த அவுணர்கள் எதிர்நிற்கமாட்டாம லோடிப் போயினர். அவர்களோடக்கண்டு அவருள் மேகன் சோமன் முதலிய படைத்தலைவர் பூதப்படையை நெருங்கி மிகவு முக்கிரமாய்ப் போர் செய்தார்கள். அதைக்கண்டு நவவீரரு ளொருவனாகிய வீரபுரந்தரன் விரைந்துபோர்செய்யத்துணிந்து அச்சேனைகளையுஞ்சோமனையுங்கொன்றனன். பின்னும் அவுணர்கள் இதைக்கண்டோ டிரியல் போயினர். அக்கினிமுகன் கொதிப்புள்ள முகமுடையானாய்க் கூரிய பாணங்களையேவி அநேகம் பூதரைக் கொன்றான். வீரபுரந்தரனோ அவன்மேற் கோபமாய் எதிர்த்துக்கொலைத் தொழில்செய்யும் கூரியபாணங்களையேவ அதைக்கண்டு அக்கினி முகனும் வீரபுரந்தரன் வில்லையுந் தேரையும் அம்பறாத்தூணியையு மறுத்ததுமன்றி அவன் மார்பிலும் அழுந்த அநேகமாயிரம் பாணங்களையேவ மூர்ச்சையடைந்தான். இவன் இவ்வாறு மூர்ச்சை யடையக்கண்டு வீரபுரந்தரனும் வீரவாகுதேவருமொழிந்த வீரரெழுவரும் தத்தம் வில்லைவளைத்துப் பலபாணங்களைத் தொடுத்து எதிர்த்தார்கள். அக்கினிமுகனும்அஞ்சாநெஞ்சு படைத்தவனாய்

அவர்கள் தோளிற்பட அநேகமாயிரம் பாணங்களை யேவினன். அதைக்
கண்ட வீரரெழுவரும் தத்தம்விற்களில் அநேகமாயிரம் பாணங்களைத் தொ
டுத்து நெற்றியிலும் மார்பிலும் தோளிலும் கைகளிலும்தைக்கும்படி யெய்த
தன்றி அவனேறியிருந்த தேரையு மழித்தனர். அவ்வக்கினிமுகனே வே
றொரு தேரி லேறிக்கொண்டு வீரர்கள்மேல் பாணவருஷம்பொழிய; வீரர்களும்
அவற்றை யெல்லாம் நொறுங்க வழித்தனர். பின்பவன் சிவாத்திரத்தைத்
தன் வில்லிற்றொடுத்து அவ்வெழுவர்மேலும் விடுத்தான். அவர்கள் இது
ஆக்கிநேயாத்திர மென்றெண்ணி வருணாத்திர மேவினர். அது அக்கணையை
யும் உண்டுவிட்டு அவ்வெழுவரையுங் கொல்லவே, கடல்போல் நெருங்கி
யிருந்த பூதர்கள் இரியல் போயினர். இதைப்பார்த்துக் கொண்டிருந்த வீர
வாகுதேவர் பூதர்களைக் கையமைத்து அஞ்சவேண்டாமென்று அவனுக்கெதி
ரில் தேரைச் செலுத்தினர். அவ்விருவரும் வெகுநேரம் போர்செய்தனர். அக்
கினிமுகனே வீரவாகுதேவர் நெற்றிமேல் ஆயிரம் பாணங்களை யேவினன்.
பின்பு வீரவாகுதேவரோ தாமும் ஆயிரம் பாணங்களையேவி அக்கினிமுகன்
தேரையும் கையிற்பிடித்திருந்த வில்லையு மழித்தனர். அவ்வக்கினிமுகனே
வேறொரு தேரிலேறிக்கொண்டு ஒருதண்டைக் கைக்கொண் டெறிந்தான்.
அதை ஒருபாணத்தால் நொறுங்கப் புடைத்தனர். அக்கினிமுகன் தன்கை
யில் வில்லைப்பிடித்து வாயுவாத்திரம் யமாத்திரம் சூரியாத்திரம் இவைகளை
யேவினன். அதற்கு வீரவாகுதேவரும் அதையதை யேவித்தடுத்ததன்றிப்
பின்னும் அவ்வக்கினிமுகன் மார்பில் நூறுகணைகளை யேவினர். அவைகள்
பட்டவுடனே தான்மிகத் துன்பமடைந்து தனக்கு வழிபடுகடவுளாகியதன்
னகர்க்காளியை நினைந்து வருந்தினன். அவன் வருந்தக்கண்ட அக்காளி
அவன் கட்புலன் முன்தோன்றி நானேபகைவனைக் கொல்லுகின்றேன். நீய
ஞ்சவேண்டாமென்று பூதர்கள்மேற்சென்றாள். அவளோசென்று பூதர்கள்மேற்
சூலமொன்றை யேவினள். அது ஆலவிடம்போல் தோன்றவேவீரவாகுதேவர்
கோபங்கொண்டு ஏழுபாணங்களால் அச்சூலப்படையைத் தகர்த்துவிட்ட
னர். பின்னுமொரு சூலப்படையை யேவினள். ஆயிரம் பாணங்களால்
அதனையு மழித்தனர். பின்பு அக்காளியோ வீரவாகுதேவ ரேறிக்கொண்டி
ருந்ததேர்மேற்பாய்ந்தாள். அதைக்கண்டவீரவாகுதேவர் அக்காளியினுடைய
எட்டுக்கைகளையும் தன்னொருகையா லொருசேரப் பிடித்துக்கொண்டு மற்
றொருகையால் அவள் மார்பின்மேல் மோதினர். அதனால் அக்காளி திப்பிர
மைகொண்டு உதிரங்கக்கி மூர்ச்சையாய்விழுந்து பின்பு எழுந்து வீரவாகு
தேவரைத் துதித்துப் போயினள். அக்கினிமுகன் இதைக்கண்டெழுந்து
வில்லொன்றைக் கையிலேந்தி நூறுகணைகளால் வீரவாகுதேவ ரேறியிருந்த
தேரையழித்து வெற்றியுண்டாகத்தக்கதென்று சங்கத்தொனி செய்தான். வீர
வாகுதேவரோ பல பாணங்களால்அவ்வக்கினிமுகன்வில்லையொடித்து அவன்
தலையையு மறுத்துத் தள்ளினர். அப்பாணமோ வீரவாகுதேவர் கையில்வந்து
சேர்ந்தது. அக்கினிமுகன் இறந்தமைகண்டுஅவனொடுவந்த அளவில்லாத அவு
ணப்படை மானமும் வீரமுமிருந்து வீரவாகுதேவரை யெதிர்த்துப் பலவகை

யாயுதங்களாற் போர்செய்தனர். வீரவாகுதேவரோ அவர்கள்மேல் கோபங் கொண்டு விரைந்துபலகணைகளைத்தொடுத்தனர். அதனால் அவர்கள்படைகள் அழிந்துவிட்டன. அதன் பின்னரும் பூதர்களும்தம்பியருள்எழுவரையு நீங்க லாக மற்றதம்பியும் இலக்கத்தவரும் பூதவீரரும் வீரவாகுதேவரை நெருங் கினர். வீரவாகு தேவரோ தன்தம்பிய ரெழுவரையும் இறந்துபட்டதாக உக்கிரன் சொல்லக் கேள்விபட்டுத் தன்னிரண்டு கண்களுநீர்சொரிய நின்று அவர்களுடம்பைக்கண்டு புலம்பினர்.

இவ்வாறு துயரங்கொண்ட வீரவாகுதேவர் தன்தம்பிமாரை யெழுப்ப மனங்கொண்டு தன்முதுகிற் கட்டியிருக்கும் அம்பறாத்தூணியிலுள்ள ஒரு கணையை யெடுத்து அதன்முனையில் வீரத்துடன் தன் நகத்தால்வெற்றிவேற் பெருமானிளையவன் விடுத்ததிது ; யமன் காணக்கடவது, நீயென் தம்பியர் உயிர்கொண்டாய் ; இது உனக்குத் தகுதியோ! நீ சீக்கிரமாய் அவர்களை யனு ப்பிவிடென்று கோபமாயெழுதி அக்கணையை விலலிற்பூட்டிச் செல்ல விடுத் தனர். அக்கணை எழுகடலையுங் கடந்து யமன்முன்னேவிழுந்தது. அவனதை யெடுத்துவாசித்துப்பார்த்துமனத்தில்மிகுதியும்பயமடைந்துதன்னுலகெல்லா முழுதும் தேடிப்பார்த்தும் அங்கில்லாமையாலகயிலைமலையை யடைந்துபார்க் கையில் அங்கவ்வெழுவரும் வீற்றிருந்தனர். அவர்களைஅப்போரிலிறந்த பூதர் களுடன் வீற்றிருக்கக்கண்டு தொழுது நீங்கள் அப்போர்க்களத்தி லிராமையை நோக்கி வீரவாகுதேவர் எழுதி யனுப்பினர். நீங்கள் விரைவாக வரவேண்டு மென்று சொல்ல, அவ்வீரர்கள்மிக்க சேனையுடன் போர்க்களங் குறுகித்தத் தம் உடலிற்புகுந்து வீரவாகுதேவரை வணங்கினர். அவர்அவர்களைவிருப்பத் துடன் வாகைமாலையணிந்ததமதுமார்பிலிறுகத்தழுவிக்கொண்டுமனமகிழ்ச்சி யடைந்தனர். அப்போதுயமன் அவ்வீரவாகுதேவர்முன்னேவந்து அவரை வணங்கி என்மேல் தேவரீர் ஏன்கோபங் கொண்டீர் ; அவர்கள் கைலை வரையை யடைந்திருந்தனர். தேவரீர் எழுதியதைப்பார்த்தே நானோடிச் சென்றவர்களைக் கொணர்ந்தே னென்றனன். இதையெல்லாம் தூதர்களோ டிச்சென்று சூரபதுமனை வணங்கி அக்கினிமுகனிறந்துபட்டானென்று விண் ணப்பித்தனர். அவன் இறந்தமைகேட்டுப் புலம்புகையில் மூவாயிரவராகிய அச்சூரபதுமன் மக்கள் அவன் சமுகம்வந்தடைந்தனர்.

அக்கினிமுகன் வதைப்படலம்
முற்றிற்று.

மூவாயிரவர்வதைப்படலம்.

அவரைக்கண்ட சூரபதுமன் வாய்விட்டுப் புலம்ப அவரும் மூவாயிரம் பேரும் 'கடந்துளோர்களும் விடுவரோ மக்கள் மேற்காதல்' என்றபடி வருந் திய தந்தையைத் தேற்றி நாங்களே போர்க்களத்திற்சென்று போர்செய்கின் றோமென்று விடைபெற்று குதிரைகள் வரிசையாகப் பூட்டப்பட்ட தேரிலே றிக்கொண்டு அளவிறந்த சேனைகள் சூழ வீரவாகுதேவரும் பூதப்படையும்

நெருங்கியிருக்கின்ற போர்க்களங் குறுகினர். அவுணர்களும்பூதர்களும் போர்செய்ய பலபடைகளையேவி நிற்க இருபடைகளிலும் பலர்மாண்டனர். மூவாயிரவரும் எதிர்ந்து சென்று பாணங்களையேவிப் பூதவீரர்களை யெதிர்ந்தனர். அவ்வாறெதிர்ந்த அப்பூதவீரருடையகணைகள்சரீரத்தில்அழுந்தஅவர்கள்துன்பத்தொடு நின்றனர்; இலக்கத்தவரில் ஆயிரவர்மாண்டனர். இவ்வாறுநிகழ்வது கண்டு வீரவாகுதேவரைப் பணிந்து விடைபெற்று விரைவிற்சென்று விசயனே யாதியான வீரர் பலர்நெருங்கி அம்மூவாயிரவரையும் எதிர்ந்து பாணமழைபொழிந்தனர். இவ்வாறு போர்செய்கையில் மூவாயிரவர் அவ்வாயிர வீரர்கள் ஏறியிருந்த தேரையழித்தனர். தேரழியவே வேறு சேமத்தேரிலேறிக்கொண்டு அம்மூவாயிரவர் விற்களையுந் துண்டித்தனர். அம்மூவாயிரவரும் கைகளில் வில்லில்லாமையால் மலைகளை வேருடன் பிடுங்கிக்கொண்டு அவ்வீரர் மேலெறிந்தனர். அவற்றையெல்லாம் தாங்கள் விடுங்கணைகளால் நொறுக்கிவிட்டு அவர்களுடம்பைப் பாணங்களால்சல்லடைக்கண்ணேபோல் தொளைத்துவிட்டனர். அவ்வாறு செய்யவே அம்மூவாயிரவரும் அவ்வீரர்களேறிக்கொண்டிருந்த தேர்களை யவருடனெடுத்துக்கடலில் விட்டெறிந்தனர். அவர்களோ அத்தேர்கள் கடலில்விழுவதன் முன் இலாகவமாகக்குதித்து அவருடன் போர்செய்யத் தொடங்கினர். இவ்வாறு போர்செய்யும்போது மூவாயிரவரிற் சிலர் அவர்கையிலிருந்தவிற்களை யொடித்தெறிந்தனர். வில்லொடியவே வீரர்கள் அம்மூவாயிரவருள் சிலரை மார்பிலோங்கி யடித்ததன்றி மற்போர்செய்யவும் நேர்ந்தனர். இவ்வாறு மற்போர்செய்கையில்விசயனென்னும் வீரனொழிய மற்ற தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது வீரர்களும் அம்மூவாயிரவரால் வருந்தினர். அதைக்கண்ட விசயன் மனங்கொதித்து பலபாணங்களையேவி அம்மூவாயிரவரில் சிலரைக் கைகளையும் சிலரைக் கால்களையும் சிலரை மார்பையும் சிலரைத்தோளையும் சிலரைத் தலைகளையும் அறுத்துக் கொன்றான். இவ்வாறு விசயன்விடும் பாணங்களால்இறந்துபட்டவரும் கைகால்முதலியஉறுப்புக் குறைந்தவரும் மீண்டும் போர்செய்வதைக்கண்ட விசயன்மிக்கவும்அதிசயமடைந்து சண்முகங்கொண்ட பெருமானை யுள்ளத்தில் நினைந்து இதுஎன்ன கொள்ளையென்று தியானித்தான். அதற்கு முருகப்பெருமானும் அசரீரியாய் வானின்கண் அப்பா அன்பனே! இவ்வாறுஇறந்துபட்டும் அவர்கள் மீண்டு மெழுந்து போர்செய்வது முன்னாளில் பிரமதேவனளித்தவரமேயாம். இவர்கள் கெட்டொழிய இவ்வயிரப்படையையே வென்றளித்துச்சென்றனன். இதனை உன்மத்தனாகிய அசுரேசன் ஆராய்ந்தறிந்துமாயாஸ்திரத்தையேவ அதைக்கண்டவிசயன் வயிரக்கணையையேவினான். அது சென்று மாயாஸ்திரத்தையழித்து அம்மூவாயிரவரையும் கொன்றது. அம்மூவாயிரவரு மிறந்துபட்டதைத் தூதர்கள்கண்டு மதிமயங்கிச் சொல்லக்கண்டு சூரபதுமனும்கோவென்று அழுதுபுலம்பினான்.

மூவாயிரவர்வதைப்படலம்.

முற்றிற்று.

தருமகோபன்வதைப்படலம்.

நான்காநாளிரவில் தருமகோபன் சூரபதுமனிடஞ்சென்றுசிலபுத்திகளைச் சொல்லி நான் இதோ சென்று பூதவீரருடன் வந்தகுமரனை வெற்றிகொண்டு வருகிறேனென்று விடைபெற்று புண்டரீகமென்னுமதிசையானையின்பிடர்மே லேறிக்கொண்டு நாற்பெரும்படைசூழப் போர்க்களமருகுகின்றான். அவன் குறு கவே பூதர்களும் அவுணர்களும் ஒருவருக்கொருவர் போர்செய்தனர். இவ் வாறு போர்செய்கையில் அவுணரில் மந்திரிமாரும இலக்கத்தவரும் கைகலந் தனர். இருதிறப்படையிலும் சிலர்மாண்டனர். அவுணமந்திரிமாரில் இலக்கத் தவர் ஆற்றலிழந்தனர். இதையறிந்த வீரமார்த்தாண்டனென்பவன் சிறி துமாற்றாமல் மந்திரிமாரையெதிர்த்துக் கொன்று குவித்தான். அதைக்கண்டு போர்க்களத்து பூதர்க ளெதிர்த்துப் போர்செய்யமலைகளைப் பறித்தெயறி வே, அவுணர்கள் கண்டுதேர்மிரியல போம்படிவருத்தினர்.

இவ்வாறு போர்செய்கையில் தருமகோபனென்பவன் ஏறியிருந்த புண் டரீகமென்னும் திசையானைபொறாது சிலபூதர்களைக் காலகளாலும சிலரைக் கோட்டாலுமசிலரை வாலாலுமசிலரைத் துதிக்கையாலுமகொன்றுகுவித்தது. இப்படி செய்யவே பூதர்கள்வெருக் கொண்டோடினர். இதைக்கண்டவீரமா ர்த்தாண்டன் விரைந்து அப்புண்டரீகமென்னும் யானையின்மேல் பலபா ணங்களையேவி அதனை மூர்ச்சையடைவித்தான். தருமகோபனே அது பொறாது அவ்வீர மார்த்தாண்டன் நெற்றியிலுருவிப்போயபடி நூறுபாண ங்களையேவினன். அது அவனெற்றியில உதிரமெழும்படியே செய்கையில் தருமகோபன் அவன்மேற் கொடியவே லொன்றேவினன். அதைக்கண்ட வீரபுரந்தன் அவ்வேலைத்தடுத்து பின்னும்பலபாணங்களையவன்மேலேவினன். தருமகோபனே அவைகளைத் தன்வில்லினின்றும் தொடுத்துவிடும பாணங் களால் விலக்கி அவன்மே லொருகதையை யெறிந்தான். அதனால வீரபுரந் தரன் மூர்ச்சையடைந்தான். இதைக்கேட்டறிந்த வீரவாகுதேவர் விரைந்தே யெதிரிலவரத் தருமகோபனே அவ்வீரவாகுதேவர் மேல் பலபாணங்களையே வினன். அத்தனை கணைகளும் வீரவாகுதேவர் மேற்பட்டோடிய வீரவாகு தேவரும்தன்கையினின்றுமஒருவேற்படையை அத்தருமகோபன்மேல் விடுத் தனர். அது அவன்மார்பிலுருவமூர்ச்சையடைந்து அப் புண்டரீகமென்னும்யா னைமேல்விழுந்துகிடந்தான். அவன் மூர்ச்சையடைந்திருந்தபோது அவனேறி யிருந்த யானைமனத்திற் கோபமூண்டு வீரவாகுதேவரேறியிருந்த தேரைத் தன்காற்கோட்டாலு முயரவெடுத்து அத்தேரைச்செலுத்தும் பாகனையுமடித் தது. யானை இவ்வாறு செய்ய வீரவாகுதேவர் தாமும் வேறொரு தேரிலேறி. அவ்யானையின் துதிக்கையைப் பிடித்துக்கொண்டு அதன் கன்னத்திலறைந்து அப்புறத்துலகிலெறியவே, அதுவானளவுஞ்சென்று நிலத்தில்வீழ்ந்துமூர்ச்சை யடைந்தது. முன்னே மூர்ச்சையடைந்திருந்ததருமகோபன் மூர்ச்சைதெளிந் தெழுந்து ஒருகதையை அவர்மேலெறிந்தான். அதை வீரவாகுதேவரும் வா ளினால் துண்டப்படுத்தினர். மீண்டும் வயிரப்படையொன்றேவினன். அதைத்

தமது கையாற்பிடித்துக்கொண்டு அதனையே தருமகோபன்மே லெறிந்தார். அதுதைத்த மாத்திரத்தில் அவன் பதைபதைத்து விழுந்தனன். அவ்வாறு விழுந்தவனை வீரவாகுதேவர் காலாலுதைத்து நிற்கத் தேவர்கள் அவர்மேற் பூமழைபொழிந்து வாழ்த்தினர். அத்தருமகோபனு முயிர்நீங்கினன். எஞ்சி நின்ற அவன்படையோ தலைவிரிகோலமா யோடிப்போயின, அவனேறியிருந்த யானைமூர்ச்சை தெளிந்தெழுந்திருந்து விடைபெற்று அவரைப் புகழ்ந்து தன்றிசைநாடிச் சென்றது. பூதர்களும் பெருமகிழ்ச்சியிற்றிளைத்தனர், தருமகோபனிறந்துபட்ட செய்கையைக்கேட்ட சூரபதுமன் துன்பக் கடலிலழுந்திச் சித்திரபாவை போல்அத்தகவசைவற்றிருந்தான்.

தருமகோபன்வதைப்படலம்.

முற்றிற்று.

பானுகோபன் வதைப்படலம்.

சூரபதுமன் இவ்வாறு துயரங் கொண்டிருக்கையில் சூரியன் உதயமானான். சூரபதுமன் வருந்துவதைக்கண்ட தூதர்களோடிச்சென்று வாயுவேகம் மனோவேகம் பின்னிடப் பானுகோபனை வணங்கி நின்று வீரனொருவனை யாற் கட்டிக்கடலி லிட்டபின்பு நடந்த செய்திகளைச் சொல்லினர். பானுகோபனே பெருந்துயரமடைந்து இனி நமதுவாழ் வழியுமென்று சொல்லிக் கொண்டெழுந்து தன் பிதாவினுடைய மாளிகையை யடைந்து அவனையெட்டுறுப்பு நிலமுறப்பணிந்து நாம் அழிவது திண்ணம், இனிமுருகனையும் வீரவாகுவையும் நாம் வெல்வதருமை, ஆகையால் நாம் தேவர்களைச் சிறையினின்றும் விடுவிப்பதே நலமென்றான். அதைக்கேட்ட சூரபதுமனே நீ நெஞ்சிற் பயங்கொண்டனை! நீ உன் மாளிகைக்குச்சென்று தூங்கிக்கொண்டிருவென்ன, அதற்குப் பானுகோபனே இவன் நாஞ்சொன்னதை மனத்திற் சிறிதேனுங்கொள்ளா திருக்கின்றானென்று நினைத்து நான்செய்த சிறுபிழையைப் பொறுத்தருள வேண்டுமென்று அவனிடத்தே விடைபெற்றுப் போர்க்கோலங்கொண்டு தன்னை நால்வகைப்படையுஞ் சூழப் போர்க்களங் குறுகினான்.

இவ்வாறு பானுகோபன் போர்க்களங் குறுகவே பூதவீரரும் அவுணவீரரும் போராற்றல் கொண்டெதிர்த்துப் பலபடைகளையேவ, தூசிப்படையினின்ற பூதவீரர் தோற்றோடினர்; அப்போது பிற்படையினின்ற பூதவீரர் அவுணர்களிரியல் போம்படி போர்செய்தனர். அதைக்கண்ட பானுகோபன் தானும் பூதவீரர்கள்மேல் சுடுசரம் தூர்ந்தான். அதனால் பூதவீரர்கள் வருந்துவதைக்கண்ட வீரவாகுதேவர் அவுணப்படை திசைதோறு நாடியோட்டெடுப்பப் பாணப்பிரயோகஞ் செய்தனர். பானுகோபனே தன் தேரை வீரவாகுதேவர்க் கெதிரினிறுத்தி வில்லைவளைத்து மிகுதியுங் கூர்மையுள்ள ஆயிரம் பாணங்களை யேவினன். அவையனைத்தும் தமது மார்பிற்பட்டு முதுகிலுருவிப் போகக்கண்ட வீரவாகுதேவர் மிகுதியுங் கோபங்கொண்டு அவன்

தோள்மேல் நூறுபாணங்களை யேவினர். அவன் வருந்தித் தன்வில்லினின்றும் நூறுபாணங்களையேவி வீரவாகுதேவர் பிடித்திருந்த வில்லை யொடித்தான். தமது வில்லொழியவே வேலொன்றையெடுத்து அவனெற்றியிற் படும்படியேவினர். அதனால் நெற்றியி னின்றும் உதிரம்பெருகமூர்ச்சையாய்விழுந்தான்! வீரவாகுதேவரோ வேறொரு வில்லையெடுத்து வளைத்து அருகேயிருந்த அவுணர்க ளஞ்சும்படி வாயுவாத்திரம், ஆக்கினேயாத்திர முதலிய தெய்வப்படைகளை விடுக்க அவனும்அந்தந்தப்பாணங்களையேவித் தடுத்தான்.பானுகோபனேசூரியாத்திரம்பிரமாத்திரம் நாராயணாத்திரமுதலியவற்றைப்பின்னுமேவவீரவாகுதேவரும் அவைகளையேவிட் டவன்விட்டவைகளை மாற்றினர். பின்புபானுகோபன்மாயையால்தேருடன்மறைந்துநின்றுஊழிகாலத்திற் பெய்யும்மேகம்போற்பாணமழைபொழிந்தான்.வீரவாகுதேவர்உடம்புமுழுதும்உதிரம்பெருகவேஅவர்கோபமாய் ஞானாத்திரமேவினர் ; அதனால்அம்மாயாத்திர நீங்கிப்போயிற்று. •அவனே யாவருமிகழ ஆகாயத்தில் தெரிய நின்றான். அவனைக்கண்டு கோபங்கொண்டு நீயெங்கேயோடிப் போகின்றனை! நில் நில்லென்று தமதுதேரை ஆகாயத்திற்செலுத்தி அவன்மேற் பாணமழை பொழிந்தனர். பானுகோபனும் பின்வாங்காமற் பாணமழைபொழிய இருவருமிடைவிடாமற் போர் செய்தனர். இவ்விருவருமேறிய தேர்கள் ஒன்றோடொன்று நெருங்கிப்போம்; எண்டிசையிலும் ஆகாயத்திலு முட்டிநிற்கும், இவ்வாறு போர்செய்கையில் ஒருவரோடொருவர் இகழ்வர், தாம்செய்யும்போரைப்புகழ்வர். பாணமழை பொழிந்து தமது வெற்றிச்சங்க முழக்குவர், சபதஞ்செய்வர், இடசாரி வலசாரிவருவர், இவர்கள் விடும்பாணங்கள் மலைமேலோடும். மேகமண்டலந் தாவும், கடலிலோடும், எண்டிசையிற் செல்லும், பாதாளத்திற் செல்லும். இவ்வாறு போர்செய்கையில் பானுகோபன் இலட்சம் பாணங்களையேவி வீரவாகுதேவ ரேறியிருந்த தேரையழித்தான். வீரவாகுதேவரும் அப்போதே அப்பானுகோபனேறிய தேரை யழித்தனர். இவ்வாறே இருவரும் விற்போர்செய்து அதன்மேல் வாள்கொண்டு போர்செய்தனர். பானுகோபனே தன்னை வெட்டவரும் வீரவாகுதேவர்வாட்படையை விலக்கி அவன் தோளைவெட்டத் துணிகையில் வீரவாகுதேவர் விரைந்து அவனது வலத்தோளை வெட்டித்தள்ளினர். பானுகோபன் தன்வலத்தோள் வெட்டுண்டுபோகவே இடத்தோளால் வாள்கொண்டு போர்செய்தான். வீரவாகுதேவரோ இனி இவனை வைக்கலாகாதென்று தேவர்கள் துதிசெய்து கூத்தாட அவன் தலையை வெட்டித் தள்ளினர். இவ்வாறு பானுகோபன் இறந்ததுகண்டு தேவர்களெல்லாரும் ஆனந்தக் கூத்தாடினர். வீரவாகுதேவரோ தாஞ்செய்துகொண்ட சபத முடித்துக்கொண்டதனால் மனமகிழ்ச்சியெய்தினர். பின்பு வீரவாகுதேவர் பானுகோபன் இறந்துபட்டமையால் தம்மை இலக்கத்தெண்மரும் பூதவீரரும் சூழ்ந்துவரச் சண்முகப்பெருமான் சந்நிதானத்தை யடைந்து வணங்கி நின்றனர். சண்முகப்பெருமானே வீரவாகுதேவரை நோக்கி நீமிக வருத்தப்பட்டுப் பானுகோபனை வெற்றி கொண்டனை போலும்! என்றுகேட்க, அதற்கு வீரவாகுதேவரும் யான் தேவர்கள் பதத்

தையும் பிரமபதத்தையும் விண்டு பதத்தையும் வேண்டேன்; உனது தாமரை மலர்போன்ற சேவடியினிடத்துப் பேரன்பே வேண்டுகிறேனென்று விண்ணப்பிக்கவே. முருகப் பெருமானும் அவ்வாறே யாகுகவென்று விடைதரப்பெற்றுத் தம்மிருக்கையிற் சென்றார். இலக்கத்தெண்மரும் பூதவீரரும் தத்தமிருக்கை சென்றடைந்தனர். இதுகிடக்க;

பானுகோபன் இறந்துபட்டதைத் தூதர்கள்கண்டு சூரபதுமனிடஞ் சென்று நடந்த செய்தியை யறிவித்தனர். அதைக்கேட்ட சூரபதுமன்சிங்காசனத்திலிருந்து பலவாறு புலம்பியழும்போது தூதர்கள் போர்க்களத்திற் சின்னபின்னமாக வதைக்கப்பட்ட பானுகோபன் உடம்பைக்கொண்டுவரக்கண்டு மிகவும் வருந்தித் தலையையும் கைகளையும்மார்பையும் பொருத்திப்பார்ப்பான், புரள்வான், சோர்ந்து விழுவான், வாயிலடித்துக்கொள்வான், அற்றைத்தினத்திற் சூரபதுமன்கொண்ட துன்பத்திற் கெல்லையென்பதே கிடையாது, இச்செய்தியைக்கேட்ட பதுமகோமளையென்னும்தாய்உறுப்புகள்வெவ்வேறாகத்தன் மகன்இறந்துவிழுந்துகிடக்கிற இடஞ்சென்றுகுறைவிலாத்துயரத்துடன்அழுது புலம்பினள். அந்நகரமாந்தரு மிக்கதுன்ப மடைந்தனர். இதுகிடக்க;

பானுகோபன் வதைப்படலம்

முற்றிற்று.

சிங்கமுகன்வதைப்படலம்.

இவ்வாறுவருத்தமடைந்துபின்புதன்னருகிருந்தசிலரைநோக்கிமதுபகைவரைமுற்றுங்கொன்றுயாகஞ்செய்து என் மகனையெழுப்பிக்கொள்வேன்; இவ்வுடம்பை யோரிடத்திற்சேமித்து வைக்கவேண்டுமென்றான். அவ்வாறே செய்து மென்றுஅவர்கள் சொல்லினர். சூரபதுமனே தூதுவரைப்பார்த்து ஆயிரஞ் சிங்கமுகங்கொண்டஎன்தம்பியாகியசிங்க முகாசுரனையழைத்துவம்மினென்றனன். அவன் கட்டளையேற்ற தூதர்வாயுவேகம் மனோவேகம் பின்னிடச் சென்று கடலினடுவில் மாயாபுரத்துள்ள அவனரண்மனையையடைந்து சிங்கமுகாசுரனைக் கண்டு இதுவரையிலுநடந்த சங்கதிகளைச் செவ்வையாக வெடுத்துச்சொல்லி உம்மைச் சூரபதுமன் அழைத்துவரக் கட்டளையிட்டானென்றனர். இவ்வாறு தூதர்சொல்லவே சிங்கமுகாசுரனெழுந்திருந்து தன் சேனையுடன் மகேந்திர நகரத்திற்சேர்ந்து தேவகண்டகனாகிய சூரபதுமனுடைய பாதங்களில்வணங்கி நீரென்னையழைத்த காரணமென்னவென்றான். சூரபதுமனே நடந்தவற்றை யெல்லாமெடுத்துச் சொல்லி முருகனே நம்மைக்கொலை செய்ய வேண்டுமென்றே வந்திருக்கின்றனன். ஆதலால் நீ விரைந்துசென்று பொருதுவென்று வாவென்று விடைகொடுப்ப விடைபெற்றுக்கொண்டு தன் மாளிகையையடைந்து ஊனையருந்தித் தேரிலேறிக்கொண்டு இலட்சம்வெள்ளம்புடைசூழநடந்தான். அவன் வருகையைக்கண்டு தேவர்கள்பயந்தோடிச் சண்முகங்கொண்ட தாணுவைவணங்கி நின்று சூரபதுமனுக் கிளையவனாகிய

சிங்கமுகாசுரன் வருகிறான்; அவன் சூரனிலு மிக்க வலிபெற்றவன், அவனே போர்க்களங் குறுகினானென்று விண்ணப்பித்தனர். சுப்பிரமணியப் பெருமானேதான் போர்க்கெழ நினைத்தலும் அதையறிந்தவீரவாகுதேவர் அப்பெருமானையெட்டுறுப்பு நிலமுறப்பணிந்து நின்று வாய்பொத்திக் கைகட்டிக்கொண்டு அச்சிங்கமுகனை நானே கொன்றுவருகின்றேனென்று விண்ணப்பிக்க, அவர் அவ்வாறேசெல்லக் கட்டளையிட்டனர். அதனையேற்றுத் தம்மை நாற்படை நெருங்கிச்சூழப் போர்க்களஞ்சென்று குறுகினார். குறுகவே இருதிறப்படையும் போர்செய்யத் தொடங்கின, ஒருவரோடொருவர் பலவகைப் படைகளையுங்கொண்டு போர்செய்ய அவுணரிலுஞ் சிலர்மாண்டனர், பூதரிலுஞ் சிலர் மாண்டனர், சிலர் தோற்றோடினர், அப்பூதருள் சிங்கமுகனென்பவன் தன் கையிலுள்ளதண்டாயுதங்கொண்டு அவுணர்களை மிகவருத்துகையில் அவுணரில்தசமுகனென்பவன்மேல்தன்வில்லைவளைத்துச்சிங்கனென்பவன் அநேகம்பாணங்களைப்பொழிய அவற்றையெல்லாந்தன்கைத்தண்டினால்தடுத்தான், தானும் பெரியகதையொன்றை விட்டெறிந்தான். அது சிங்கன்மார்பிற்பட்டுமுறிந்தது. அதுகண்டு மழுவொன்றைவீசினான். அதைத் தன்கையாலொடித்தான். ஒடிக்கவே வேலைவிட்டெறிந்தான். அதற்கெதிராகச் சக்கரமெறிந்தான். அது வேலையழித்துவிட்டது; மேலும் கதையொன்றைச்சிங்கன்மேல்தசமுகன்விட்டெறிந்தான். அது அவன் மார்பிற்பட்டவுடனே இறந்துபட்டான். இவ்வாறு தசமுகன் இறந்துபடவே அவுணர்கள் எல்லாரும் போர்செய்தனர், இவ்வாறு அவுணர்களெதிர்ந்தபோது அவருள் துன்முகன் பல்லுருக்கொண்டு கொடும்போர்புரிந்தான். துன்முகன் இவ்வண்ணமாய்ப் போர்செய்கையில் வீரமார்த்தாண்டன் ஞானாத்திரமேவி அவன்மாயத்தைவெளியாக்கி மேலும் ஆயிரம்பாணங்களையேவி வருத்தமூர்ச்சையடைந்து தெளிந்து பூதவீரர் மனமகிழ அருவமாகத் தோற்றோடிப்போனான்.

அவன் தோற்றோடிப் போகக்கண்ட சிங்கமுகாசுரன் பூதர்கள் முன்னே தேரை நடத்தி வருத்தினான். பூதர்கள் மரங்களையும் மலைகளையும் இராசியிராசியாகப் பிடுங்கியெறிந் தெதிர்த்தனர். அவையனைத்தும் அச்சிங்கமுகாசுரன் மூக்கினின்றெழும் மூச்சினாலழிந்துபோயின. அதனால் பூதர்கள் மிக்க கோபங்கொண்டு பின்னு மரமலைகளை விட்டெறிந்தனர். அவைபட்டும் சிறிது மூறில்லாதவனாய் அச்சேனையி னடுவேபுகுந்து தன்கையாற் பிசைந்து கொன்றான். சிலரை யண்டமுகட்டி லடித்தான். சிலரைப்பற்களிற் குத்தினான். சிலரைக் காலைப்பிடித்துச் சுழற்றியெறிந்தான். சிலரைக் காலான மிதித்தான். சிலரைச் சத்தியலோகத்தில் விட்டெறிவான். சிலரைக் கூற்றுவனுலகமடைய வீசுவான். இவ்வாறு பல பூதர்களிறக்கவே, சிங்கமுகாசுரன் தன் தேர்மேலேறினான். அதைக்கண்ட பூதவீரர்களில் அக்கினிக்கண்ணன் சிங்கமுகாசுரனெதிரேசென்று அவன்மேலொருதண்டை வீசியெறிந்தான். அது அவன் தேரிலிருந்த சாரதியைக் கொன்றது. சிங்கமுகாசுரன் மிகக்கோபித்து அவன்மேல் ஒருதண்டினை வீசினான், அதனால் அக்கினிக்கண்ணன் மூர்ச்சை யடைந்தான். பின்பு சிங்கமுகாசுரன் தன்

தேர்மேல் வேறொரு சாரதியை யேற்றிக்கொண்டு போரிலெதிர்த்தான், சுமாலியென்னும் பூதவீரன் அச்சிங்கமுகாசுரனோ டெதிர்த்தான். சிங்கமுகாசுரனோ அச்சுமாலியை வருத்தவிழுந்தான். பின்பு தண்டியென்னும் பூதவீரன் சிங்கமுகாசுரன்மேற் பாய்ந்து அவன்மார்பிற் கதைகொண்டு தாக்கியபோது அக்கதாயுத மொடிந்து போய்விட்டது. சிங்கமுகாசுரனோ அத்தண்டியைத்தன்காலாலுதைத்துத்தள்ளினான். அவனோதாவிக்கோபமாய்ச்சிங்கமுகாசுரன் தோண்மேற்பாய்ந்து தன்காலாலவனை வன்மையாகமிதித்துழக்கினான். இவ்வாறு செய்கையில் சிங்கமுகாசுரனோ தனக்கவன் செய்வது ஈமொய்ப்பது போலிருந்தமையால் அவனைத் தன்கையாற் சொறிந்து துடைத்தான். அவ்வளவே அவன் வருத்தமடைந் தோடிப்போனான். பின்பு இலக்கத்தவருடன் வீரவாகுதேவரொழிந்த வீரரெண்மரும் அளவில்லாத பாணங்களையேவினர். சிங்கமுகாசுரனோ தேரைவிட்டிழிந்து சிலரைத்தேருட னெடுத்தெறிந்தான். சிலதேரை மற்றொருதேருடன் மோதினான். சிலதேரைத் தன்கையாலெடுத்து முறித்தான். சிலதேரை யுதைத்தழித்தான். இவ்வாறு செய்யவே வீரர்களெல்லா மிரியல்போயினர். இலக்கத்தெண்மரும் பூதவீரர்களும் தோற்று ஓடிப்போனமைகண்ட வீரவாகுதேவரும் மனத்திற் கோபமிகுந்துதமதுகையிலுள்ளவில்லைவளைத்துநாணேற்றிட்டொருகணத்திற்பாணமழைபொழிந்து அவுணருயிரையுண்டான். அவுணர்களுடைய கைகளையும்கால்களையும் மார்புகளையும்தோள்களையும் அவர்கள்பெற்ற வரங்களையும் வீரவாகுதேவர்விட்ட அம்புகள் சென்றுசிதைத்தன. வீரவாகுதேவர் விடும் கணைகளால்அவுணர்சேனைகள் படாதபாடுபடக்கண்ட சிங்கமுகாசுரன் மக்கள் பார்த்து தங்கள் கையிலிருந்த வில்லையெடுத்து வளைத்து நூறுபாணங்களைத் தொடுத்து வீரவாகுதேவரை வருத்தினர். வீரவாகுதேவரோ அத்தனை பாணங்களையேவிடுத்துத் தடுத்துவிட்டுப் பின்னும் கொடிய பாணங்களைவிடுத்து அவர்களேறியிருந்த தேர்களை யழித்தனர். அவர்களோ தேரிழந்தும் வாட்போர்செய்ய வுழைத்தனர். வீரவாகுதேவரோ அவருடன் வாட்போர் செய்யத்துணிந்து தேரைவிட்டிழிந்து அவர்களெதிரே சென்றார். வீரவாகுதேவரும் அவர்களுடன் வாட்போர்செய்து வரும்போது சிறிது மூறில்லாதவரா யிருக்கக்கண்டு நூறுபேரும் ஒன்றாகச்சேர்ந்தவரைப்பிடிக்கத்தொடங்கினர். தொடங்கவே அவர்களொருங்கழிய வாள் வீசிக்கொன்றனர். தம்மொடுபோர்செய்தஅந்நூற்றுவரையுங்கொன்றுகுவித்த அவ்வீரவாகுதேவர்தம்மைத் தேவர்களெல்லாம் வாழ்த்தெடுப்பத்தேரிலேறிக்கொண்டார். சிங்கமுகாசுரன் தன்மக்களிறந்தமைகண்டு சாலமனம்வருந்தி வீரவாகுதேவரைநோக்கி நீமுருகனுமல்லை, இலக்கத்தவரிலொருவனோ! எட்டுவீரரி லொருவனோ! அல்லது எங்கள் நகரத்திற்குத் தூதாகவந்தவனோ! நீயாவனோவென்று வினவினான். இவ்வாறு கேட்கவே அவனோடு வீரவாகுதேவர் சொல்வாராயினர்.

நான்இன்னானென்று சொல்கின்றேன்கேள்! யானோஎப்பொருட்குமிறை வணங்கிய பரமசிவனுதவிய பாலசுப்பிரமணியனுக் கடித்தொண்டன். முன்னாளில் உங்களூரில் தூதனாகவந்தே உங்களூரை யழித்தேன். நீஇவழி யொழு

காத உங்களைமுடிக்கவே வந்திருக்கிறேன். என்பெயரோ வீரவாகுவென்பரென்றான். வீரவாகுதேவர் இவ்வாறு சொல்லியபோது சிங்கமுகாசுரன் அவரை நோக்கி உன்னையும் உனக்கிறைவனாகிய முருகனையும் இமையோரையில்வென்று விடுகிறேன்; பாரென்று சிங்கமுகாசுரன் சொல்லி முடித்தான். அதைக்கேட்டவீரவாகுதேவர் சிங்கமுகாசுரன்மேல்பதினெட்டுப்பாணங்களையேவினர். அச்சிங்கமுகாசுரனே வீரவாகுதேவர்மேல் ஒருதண்டையெடுத்து விடுத்தான். அதை நாலுபாணங்களை விட்டுத்தடுத்தார். அதன்பின்பு ஆயிரம் பாணங்களையேவிச் சிங்கமுகாசுரன் தலைதோறும்பட விடுத்தார். அவைகள் பட்டு முறிந்துபோயின. அப்போது சிங்கமுகாசுரன் சூலப்படையை யேவினான். அதைத்தடுக்க வீரவாகுதேவர் இரண்டாயிரம் பாணங்களையேவ அவைற்றையெல்லாங் கிரகித்துவருவது கண்டு வாளாயுதத்தால் அச்சூலாயுதத்தை யழித்தனர். அச்சூலத்தை யழித்தபின் சிவாத்திரத்தையேவினார், அவனும் சிவாத்திரத்தைவிடுத்தான், அவை இரண்டும் ஒன்றோடொன்று போர்செய்து தம்மை விட்டவரிடமே மீண்டன, வீரவாகுதேவரும் மனத்தின் கண்ணே மகிழ்ச்சியடைந்து பதினான்குபாணம்விட அவை சிங்கமுகாசுரன் தேரைநடத்துகிற சாரதித்தலையைக்கொண்டோடின. பின்னும்சிங்கமுகாசுரன் ஒருதண்டினைவிட்டெறிந்தான். அதுவீரவாகுதேவர் மார்பிற்பட்டுப்பொடிப் பொடியாகவே வீரவாகுதேவர் சூறாவளிபோன்ற ஆயிரம் பாணங்களையேவி அச்சிங்கமுகாசுர னேறியிருந்த தேரைச் சிதைத்தனர். அப்போது பூதவீரர் வளைந்து கொண்டனர். சிங்கமுகனே மிக்ககோபமாய் வேறொரு தேரிலேறித் தன்னாயிரங்கைகளாலும் ஆயிரம் விற்களைவளைத்து பூதவீரர்மேல் சரமாரிபொழிந்தான். வீரவாகுதேவரும் பின்வாங்காமல் அவன்விட்ட பாணங்களைத்தடுத்தார். சிங்கமுகனே இரண்டாயிரம் பாணங்களையேவி வீரவாகுதேவர் கையிற்பிடித்திருந்த வில்லைத்துண்டித்து அவர் அங்கே வில்லொன்று வேறெடுப்பதன்முன் நூறுகோடி பாணங்களையேவி மார்பிலழுத்தவே உதிரம் பெருக்கெடுத்துக்கொண்டது. வீரவாகுதேவர் வெகுண்டு ஆயிரம் பாணங்களைக்கொண்டு சிங்கமுகன் தேரையழித்தார். அவனோ வேறு தேரிலேறினான். வீரவாகுதேவர்எண்ணிறந்தபாணங்களையேவிஅவன்பிடித்திருந்தவில்லைத்தகர்த்தனர். அப்போது மும்மையுலகமுமனமகிழ்ந்தன. வீரவாகுதேவர் தன்கைகளிற்பிடித்த விற்களையழிக்கவே சிங்கமுகன் மிக்ககோபங்கொண்டு மாயாபாச மெடுத்தெறிந்தான். அது பூதவீரரையும் இலக்கத்தவரையும் வீரவாகுதேவரை யுள்ளிட்ட நவவீரரையும் பிணித்து எழுகடற்கப்புறத்தே யிட்டது. வானிலிருந்ததேவர்கள் இதையறிந்து சுப்பிரமணியப்பெருமானிடத்திலறிவித்தனர். அப்பெருமானே இதைத் திருச்செவி சாத்தியருளிச் சிங்காசனம்விட்டிழிந்து தேரிலேறி யாயிரவெள்ளம் பூதர்கள்தன்னைச்சூழத்தேவர்களாரவாரிக்க சிங்கமுகாசுரனெதிரே தோன்றினன். அவுணர்களும் பூதர்களும் கைகலந்தனர். இருதிறப் படைகளிலும் சிலரிறந்தனர். சிங்கமுகனேவானளாவியதோர் வடிவங்கொண்டு தன்னிரண்டாயிரங் கைகளையும் உயரவெழுப்பி அப்பூதவீரரையும் வாயிற் பெய்தனன். முருகப்பெருமானே தன்

னந் தனியே நின்றனன். இதைத்தூதர்கள் சென்றறிவிக்கவே சூரபது மன் மனமகிழ்ச்சிகொண்டு கோபுரத்தினுச்சியிலேறித் தன் தம்பிசெய்யும் போர்த்திறத்தைக் கண்களாரப்பார்த்துக் கொண்டிருந்த தன்றிப் பல அவு ணப் படைகளையும் துணையாயனுப்பினான். அச்சேனைகளும் போர்க்களமே வந்துசேர்ந்தன, சிங்கமுகனே சண்முகப்பெருமான் எதிரேவந்து நின்றபோது அவனுடன் வந்த அவுணர்வெள்ளம் அப்பெருமான்மேல் தத்தம்படைகளை விட்டெறிந்தனர். பிள்ளையாரோ தமது கையிற்பிடித்திருந்த வில்லைநாணத் தொனிசெய்தனர். அவுணர்வெள்ளம் பல இறந்தன, சிங்கமுகனே பிள்ளையா ரைக் கிட்டிவந்து எங்களுக்கும் தேவர்கட்கும் தீராப்பகையுண்டு ஆகையால் நாங்கள் தேவர்களுக்குத் துன்பஞ்செய்வதியற்கை. நீயோ அவரிலொருவ னல்லை, எமக்குப் பகைவனுமல்லை, நீ போர்க்கெழுந்தருளிய காரணமென்ன வென்று விண்ணப்பிக்க, அதற்குப் பிள்ளையாரோ 'அகதிக்குத் தெய்வமே துணை' என்றபடிவலியார் மெலியாரைவருத்துவாராயின் அவரைக்கோறலே யெமதுதொழில், இதுதானீதியினியற்கை, அது பற்றியேயாம்போர்செய்யவந் தோம். எளியாரைக்காப்பதே எமதுவிரதமென்று சொல்லிமுடித்தனர். சிங்க முகனே நீயோபோராற்றலையுடையை, அவுணரினமோ வலிமையில்லாதவர். நீ போர்செய்யலாம், சும்மாவிருப்பதென்னே வென்று சிங்கமுகன்சொல்ல, பிள்ளையாரோ அவன் மார்பிற்பட்டுருவ ஒரு நாராசக்கணையை யேவினர். அது அவன்மார்பிற்றைத்துருவவே உதிரம்பெருக்கெடுத்துக்கொண்டது. அக் கணைதொளைத்தவழியே அவன்வயிற்றிற்பெய்த பூதர்களெல்லாம்அவ்வழியே மெல்லென இழிந்தனர். அதைச் சிங்கமுகன் கண்டு வெகுண்டு தன்கையால் அவ்வெளியை யடைத்துக்கொண்டு பிள்ளையார்மேற் கதைகொண்டெறிந் தான். பிள்ளையாரோ நாலுபாணங்களையேவி அவன்விட்டெறிந்த கதையைப் பொடிப்பொடியாக்கி விட்டதன்றி அவன கையாலடைத்த வெளியையடைத் தாவண்ணம் அக்கையை நெகிழ்த்திவிட்டன, பூதவீரர்கள் யாவரும் தடை யின்றிப்பூமியிலிழிந்தனர். பூதர்கள்வந்துசேரவேஒருபாணத்தையேவிஎழுகடற் கப்பால் இலக்கத்தொன்பதின்மரையும் பூதரையும்பிணித்துக்கொண்டு இட்ட மாயாபாசத்தைச் சிதைத்தனர், அவர்களும் பிள்ளையாரிடத்தேவந்து சேர்ந் தனர். பிள்ளையாரும் மனமகிழ்ச்சியோடு கருணைசெய்தருளினர். நெற்றியிற் பட்ட நான்குபாணங்களால் அச்சிங்கமுகனே மூர்ச்சையடைந்திருந்தான். பூதவீரர்களெல்லாம் வந்ததையறிந்த அவுணர்கள் பிள்ளையாரை வளைந்து கொண்டனர். அவரோ தமது கையிற்பிடித்திருந்த வில்லினின்றும் பல கணைகளைத்தொடுத்து அவுணர்களிறக்கச்செய்தனர். இதற்குள் மூர்ச்சை தெளிந்த சிங்கமுகன் தன்னுயிரங்கைகளாலும் வில்லைப்பிடித்து அவர்விட்ட பாணங்களைச் சிதைத்து அவர் தேரிலுள்ள சாரதியின்மேலும் ஆயிரம் பாண ங்களையேவினான். அதனால் தேர்ப்பாகனு மயர்ந்தான். அதுகண்ட பிள்ளை யாரும் நூறுபாணங்களையேவி அச்சிங்கமுகனேறியிருந்த தேரைச்சிதைத்து விட்டனர், அவனே நிலத்தினின்றுகொண்டே அளவிறந்த பாணங்களையேவி னான். பிள்ளையார் ஆயிரம் பாணங்களையேவி அவன் கையிற்பிடித்திருந்த விற்

களைச் சிதைத்தனர். அவன் ஒரு சூலப்படைவிட்டெறிந்தான். பிள்ளையாரும் பதினான்குபாணங்களையேவி அச்சூலப்படையையழித்ததன்றிப் பின்னு மாயிரம்பாணங்களையேவ அவனொரு தண்டிலையெடுத்து தன்மேல் விட்ட அம்புகளைச்சிதறும்படி செய்தான். அதைக்கண்ட பிள்ளையாரும் தண்டேந்தியகையையறுத்துத்தள்ளினர். அறுத்தகை மீளவுமுளைக்கக்கண்ட சிங்கமுகன் பூமியிலெறிந்த தண்டிலைக்கொண்டோடிவந்தான். பிள்ளையாரும் அவன் விட்ட தண்டிலை ஆயிரம் கணைகளால் துண்டமாக்கினர். அதைக் கண்ட பாவியாகிய சிங்கமுகன் பிள்ளையாரைப் பிடிக்க வேண்டுமென்று வன்மையோடுவந்தான், பிள்ளையாரோ அவன் அவ்வாறு வருவதைக்கண்டு அவனது தலை கைகள் அறுந்துவிழ மூவாயிரங்கணைகளையேவினர். பின்னு மவை முன்போலவே முளைந்தன. அதன்மேல் சிங்கமுகன் கோபங்கொண்டு, பல மலைகளை வேருடன் பிடுங்கியெறிந்தான். அவைகள் பொடிப் பொடியாம்படி பலகணைகளைத் தூண்டி அழித்துவிட்டு அவன் தலைகளழியும்படி பலகணைகளையேவினர். அவைகள் மீளவும் முளைத்துவிட்டன. இவ்வாறு தலைகளையும் கைகளையுங் கொய்துவர முளைந்து வரக்கண்டு பிள்ளையார் உங்காரஞ்செய்தனர், இரண்டுகையும் ஒருதலையுமாக அவைமுளைப்பதொழிந்து சிங்கமுகன் பிள்ளையார் திருமுன் தோன்றி நின்றுதனக்கு ஒப்பாவாரெவரோவென்று ஒரு மலையைவிட்டெறிந்தான். பிள்ளையாரும் ஒரு கணையையேவி அம்மலையையழித்துவிட்டனர். அவன்பின்னே ஒருதண்டிலை விட்டெறிந்தான். அதைக்கண்ட பிள்ளையாரும் இவ்வஞ்சகனை யுயிருண்டு வாவென்று தன்கையிலிருந்த வயிரப்படையையேவ அது அத்தண்டிலை யழித்துவிட்டுச் சிங்கமுகன் மார்பிலுஞ் சென்றுதைத்தது. அது மார்பிற்றைத்து ஊடுருவவே மிக்கதுயரத்தோடும் சிங்கமுகாசுரன் இறந்துபட்டான். வயிரப்படையோ சென்று ஆகாயகங்கையில் நீராடியொருகணத்தில் நமது குகப்பெருமானது கையில்வந்து சேர்ந்தது. தேவர்களோ பூமழை பொழிந்து ஆடிப்பாடிமகிழ்ந்தனர். முருகப்பெருமானோ நவவீரரும் பூதர் கூட்டமும் அயலிலே வரச் சென்று பாசறையிற் சேர்ந்தனர். இதைக்கண்ட தூதர்சென்று சூரபதுமன் சமுகத்திற்சென்று சிங்கமுகாசுரன் மடிந்ததைத் தெரிவித்தனர். சூரபதுமனோ மலைபோன்ற மாளிகையிலிருந்து துன்பக்கடலிலாழ்ந்து மிகவுந்தளர்ந்து தன்னந்தனியே புலம்பியழுதான். இதுநிற்க;

சிங்கமுகன் வதைப்படலம்

முற்றிற்று.

சூரபதுமன் வதைப்படலம்.

சூரபதுமன் தான்கொண்ட துயரமொருவாறு நீங்கி யாயிரங்கோடி தூதர்களையனுப்பி அங்கங் கிருக்குஞ் சேனைகளை யழைத்துவரக் கட்டளையிட்டனுப்பினன். தூதர்களும் விரைந்துசென்று அண்டங்களிற்சென்று சொல்ல

வும் மிக்கபோராற்றலுடைய அவுணவெள்ளங்கள் அண்டத்தின்வழியேவந்தன. அண்டங்களிலிருந்து பரந்துவரும் தூசிப்படை சத்தியலோகத்திலும் வைகுந்தத்திலும் பூவுலகத்திலு நிறைந்தன. பெரியதிசைகளிலும் நிறைந்தன. கடலிலு நிறைந்தன. இமைபோதையி லெங்குநிறையவே. தூதர்கள் சேனைகள் வந்தமையைச் சூரபதுமனுக் கறிவித்தனர். சூரபதுமன் மகிழ்ச்சிகொண்டு எழுபதினாயிரம் சிங்கங்களும் எழுபதினாயிரம் குதிரைகளும் எழுபதினாயிரம் பூதங்களும் பூண்ட தேர்மேலேறிக்கொண்டு தன்னை நாற்படைகளுஞ் சூழ்ந்துவரப் போர்க்களங் குறுகினான். பிரமனும் கள்ளமாமாயப்பிரானும் சண்முகப்பெருமான் சந்நிதானத்தையடைந்து இப்போதோ சூரபதுமன் போர்க்களங் குறுகிப் போர்செய்ய வந்திருக்கின்றானென விண்ணப்பஞ்செய்தனர். பிள்ளையாரோ நவவீரரும் இலக்கத்தவரும் பூதவீரரும் தம்மைச் சூழ்ந்துவர வெழுந்தருளினார். பூதவீரர்களும் அவுணவீரரும் ஒருவரோடொருவர் போர்புரிந்தனர். பூதர்களில் பலபேர் மாண்டனர். அந்தக்கண்டு இலக்கத்தெண்மரும் போர்செய்து தோற்றோடினர். வீரவாகுதேவரும் அவுணர்களை யெதிர்த்துப் போர்புரிந்து பலரைக் கொன்றனர். அவுணப்படைகளைக்கொன்றும் அவுணப்படை மாயாமையை முருகப்பெருமானிடத்தே வீரவாகுதேவர் விண்ணப்பஞ் செய்தனர். இளைய பிள்ளையாரோ தமது வில்லைவளைத்து அளவில்லாத பாணங்களைத்தொடுத்து நிலத்திலும் விண்ணிலும் நிறைந்திருக்கும் அவுணப்படையைப் பிணமாம்படிசெய்தருளினான். அச்செயலைக்கண்டு அண்டகடாகத்தினப் புறமிருந்த அவுணப்படை மிகுதியாக நெருங்கி முன்போல முருகப்பெருமானைச் சூழ்ந்து கொண்டனர். எம்பெருமானோ தன்றேரை நடத்தும் பாகனாகிய வாயுபகவானை நோக்கி நமது தேரினை இவ்வவுணப்படை நடுவே நடத்தவேண்டுமென்று கட்டளையிட்டனன். அவனோ அப்படியே செய்கின்றேனென்று வானின்மேலும் நிலத்தின்மேலும்கடன்மேலும்தேரைச்செலுத்தினான். அவ்வாறு செலுத்துகையில் பிள்ளையாரோ மழைமுகில்போலப் பாணமழைபொழிந்து இரக்கமென்பது சிறிதேனுமில்லாத அவுணப்படைமுழுதும் இறந்துபட்டுப் பிணக்குவியலும் உதிரவாறும் பெருகப் போர்செய்தனர். எழுகடன்மேலும் விண்ணின்மேலும் நிலத்தின்மேலும் அவுணப்படையோ பிணமாகக்கிடக்க அவர்களுடம்பி னின்றுதிர வெள்ளம்பொழிந்து எழுபிலத்திலும் பூவுலகத்திலும் எண்டிசையிலும் ஆகாயத்திலும் பரவியபோது முருகப்பெருமானோ அவுணர்கள்வருகின்றஅண்டத்தின்வழியையடைத்தனன். சூரபதுமனோ நமது குகப்பெருமானுக்கெதிரில் தன்றேரைச் செலுத்தி இதுசொல்வானாயினான். குகப்பெருமானே! உண்மையறிவானந்தமே திருமேனியாகவுடைய நமதுபரமசிவன் அருளிச்செய்தவரத்தால் என்றுமிருப்பேனல்லதிறவேன். என்குற்றேவலைச்செய்து கொண்டிங்கேயுழல்கின்றதேவர்கள் சொல்லை நீமெய்மையாகக்கொண்டு போர்செய்ய இங்கேயெழுந்தருளினாயே! இனி நீ யென்ன பாடுபட்டாலும் நானுன்னைவிடப்போவதேயில்லை. மேலும் நீ சிறியபாலகனென்று விடுவேனோ அப்படியும் விடவேமாட்டேனென்று சொல்லினான், அதைக் கேட்டருளிய முருகப்பெருமானோ சூரபதுமனை நோக்கித்

தேவர்களை வருத்துங்கொடியோனே! வம்புமொழிகள் சொல்லாநின்றனை. நாமேவும் அம்புகளே உனக்கு விடைகொடுக்கு மென்றனன். சூரபதுமன் தன் கையிலிருந்த வில்லை வளைத்துக் குணத்தொனிசெய்து சரமழை பொழிந்தான். பூதர்களோ சூரபதுமனை வளைந்துகொண்டனர். சூரபதுமனோ தன்வில்லினின்றும் பாணங்களைத் தொடுத்துவிட அந்தப்பாணங்களுக் காற்றாமல் பூதர்கள் தோற்றோடினர். இச்செயலைக்கண்ட வீரவாகுதேவரை யுள்ளிட்ட இலக்கத்தொன்பதின்மரும் அச்சூரபதுமனோடெதிர்த்துப்போர்செய்தனர். சூரபதுமனோ நூறுகோடி பாணங்களையேவி அவர்கள்கையிற் பிடித்திருந்த வில்லையும் ஏறியிருந்த தேரையு மழித்துப்பின்னு நாலாயிரம் பாணங்களையேவி அவர்களுடம்பிற்படும்படி வருத்தினான். அவைகளினால் வீரவாகுதேவரை யொழிந்த இலக்கத்தெண்மருமிரியல்போயினர். வீரவாகுதேவரோ சூரபதுமன் தேரிற்பாய்ந்து தமது வாளால் அவன் கையிற் பிடித்திருந்தவில்லையொடித்தனர். சூரபதுமனோ தன் கையால் வீரவாகுதேவர் மார்பிலறைந்தான். அவரோ அதனால் நிலத்தில் வீழ்ந்து மூர்ச்சையடைந்ததுகண்டு அவரையெடுத்து ஆகாயத்தில் விட்டெறிந்தான். பின்பு வீரவாகுதேவரோ மூர்ச்சைதெளிந்து முருகப் பெருமான்சந்நிதானத்தை யடைந்தனர். சூரபதுமனும்பின்பு முருகப்பெருமானை நாடிவந்து தன் வில்லை வளைத்து அநேகவகையான விற்போர் விதங்காட்டி அப்பெருமான் தேரிற் கட்டி யிருக்குங் கொடியைக் கூரிய பாணங்களாலழிக்கத்துணிந்தான். பின்னையாரோ அவனேவிய பாணங்களையெல்லாம் தகர்த்துவிட்டு அவன் கொடியையு மறுத்துக் கடலில் வீழ்த்தினார். தேவர்களதைக்கண்டு மனமகிழ்ந்தனர். சூரபதுமனோ வெகுண்டு ஆகாயத்திலிருந்து வேடிக்கை பார்க்கும் தேவர்கள்மேலும் அவர்கள்மிகவருந்தும்படி அம்புகளையேவினான். நிலத்திலிருந்த வண்ணமே முருகப்பெருமானோ அவன் விட்ட அம்புகளையெல்லாம் கண்டித்துத் தன் தேரையாகாயத்திற் செலுத்தி அச்சூரபதுமனுடன் பலவகைவிற்போர்விதங்களைக்காட்டி யருளினான். இவ்விருவர் தேர்களோ இருந்தாற்போலிருந்து பாதாளம்செல்லும். நிலத்தில் வந்துநிற்கும். எண்டிசையிலுஞ் செல்லும். கடலிற்குளிப்போம். குலவரையிலோடும். சத்தியலோகமடையும். பெரும்புறக்கடலையும் அதற்கப்பாலிருக்கும் சக்கரவாளகிரியையுமடையும். பலவண்டங்களிலும் போய்ச்சேரும். இவ்வாறு அத்தேர்களிரண்டுமெங்கு முலாவின. வச்சிரதேகம்பெற்றசூரபதுமனோ முருகப்பெருமான்மேல் பலபாணங்களையேவினான். பின்னையாரும் தமதுவில்லைவளைத்து அவன் விடும் பாணங்களைத் தம்மால் விடப்படும் பாணங்களால் தடுத்துப் பதினொரு பாணங்களையேவி அவனேறியிருந்த தேரையும் அழித்தனர். அச்சூரபதுமனோ வில்லுடன் நிலத்தில்வந்தடைந்தான். வந்தடைந்தும்வழிதேயிராமல் புங்கானுபுங்கமாக நமபெருமான்மேல் பலபாணங்களையேவினான். முருகப் பெருமானோதானும்பலபாணங்களையேவி அவன்விட்டபாணங்களை யெல்லாத் தகர்த்துஅவன் தோள்மேலும் ஆயிரம்பாணங்களையேவினான். அவைகள்பட்டு ஒடிந்துபோயின, சூரபதுமனோ தோளையிலக்காக இரண்டாயிரம் பாணங்களை யேவிமுருகப் பெருமானை வருத்தினான். அவை யனைத்துந் துகளாயின. பின்பு

சூரபதுமன்விடுகின்றபாணங்களையெல்லாம் தம்மால்விடப்படும்பாணங்களால் விலக்கிஆயிரம் சுடுகணைகளை யேவி அவன் பிடித்திருந்த வில்லையுமொடித்தெறிந்தனன், பின்னும்சூரபதுமனே வேறொருவில்லையெடுத்துக்கொண்டு ஆகாயத்திலெழுந்தான். முருகப்பெருமானே விரைந்து தானு மெழுந்துஆகாய மார்க்கமாகச்சென்று போர் செய்தனன். அதுகண்டு சூரபதுமனே மீளவு நிலத்தில் வந்தான். தானும் பூமியில்வந்து போர்செய்யத்தொடங்கினன். இவ்வாறெங்குஞ் சென்றுபோர் செய்துவருகையில் நிலத்தி லிருந்தசூரபதுமன்திசைதோறும் சென்றான் அங்குஞ் சென்றனன். கடலிற் சென்றான்; பாதலத்திற் சென்றான். வைகுந்தஞ் சென்றான், இவன் எங்கெங்கு செல்கின்றானோ அவ்வவ்விடத்திலுஞ்சென்று பிள்ளையார் போர்செய்யச் சூரபதுமன் அண்டத்திற்குப்பொருந்தியவழியேசென்றனன். பிள்ளையாரோ அவனை அங்குந்தொடர்ந்து சென்று போர் செய்து அவனது தேரை யழித்து விட்டனர். தேரழியவும் சூரபதுமன் எண்ணாத வெண்ணமெல்லாம எண்ணி யெண்ணி யேங்கி மனம் புண்ணாகித்தான் செய்தயாகத்தில் தனக்குப் பரம்பரனாகிய பரமசிவனளித்த பெருவரத்தா லுதவப்பட்ட மனோவேகமுடைய இந்திரஞாலத்தேரை நினைத்தான். அந்தேர்வந்தெதிர்நிற்க, அத்தேரிலேறிக்கொண்டுபிள்ளையார்முன்னே யண்டத்திற் பொருந்தியவழியை யடைத்த கதவைப் பாணங்களையேவியறுத்தெறிந்து வழியையுண்டாக்கினன். அண்டத்திற் கப்புறத்திருந்த அவுணப் படைகளோ பிள்ளையாருக்கயலில் வந்து சேர்ந்தன.

இவ்வாறு வந்த சேனைகளைக்கண்ட பிள்ளையாரோ தமது விழியாற்கோபித்து நோக்கி நிற்கவே அவை வந்தவழி போனவழி தெரியாமற் போயின. பின் அதன்மேல் உள்ள அண்டங்களிலுள்ள படைகளெல்லாம்வந்துகொண்டேயிருந்தன. அவைவரக்கண்டபிள்ளையார் உங்காரஞ்செய்தனர். அவைகளுமழிந்துபோய்விட்டன. பின்னுள்ள அண்டங்களிலிருந்து சேனைகள்வந்து கொண்டேயிருந்தன. இவ்வாறுவருவனவற்றையெல்லாநோக்கித் தமதுதிருக்கரங்களிலுள்ள பஞ்சாயுதங்களை யேவினர். அவை பலவண்டங்கடோறும் ஊடுருவிச்சென்று அவுணப்படைகளையெல்லாம் ஒருகணப்போதேயழித்துவிட்டன. இவ்வகையாகவே தன் படைகளனைத்தும் அழிந்துபோகக்கண்ட சூரபதுமன் தனக்குப் பரம்பொருளாகிய சிவபெருமா னளித்த சக்கரமொன்றைச் சாட்குணப்பிரம மாகிய சுப்பிரமணியப் பெருமான்மேல் வீசினன். அது நமதுபெருமான்மேல்வந்தது. தமதுதிருக்கரத்தில்அதையும்பிடித்தேந்தினன். சூரபதுமனோமன மிக வருந்தித் தான் விட்ட படையும் பழுதாகக் கண்டு பலவுருவங்களைக்கொண்டு மாயை யாற் போர்செய்யத்தொடங்கினன். அதுகண்ட பிள்ளையாரும் ஞானத்திரமேவி அவனரிதிற்செய்திருந்த மாயை யனைத்தும் கெடுத்தனர். கெடுக்கவே அச்சூரபதுமன் தன்னந்தனியனாய் நின்று எல்லா விடங்களிலுஞ் சென்றான். பிள்ளையாரும் அவனுடன் தொடர்ந்து போர் செய்யத்தொடங்கினர். அதன்மேல் சூரபதுமன் மீண்டும் நிலத்தில் தோன்றித் தன் தாயாகிய மாயையை யுள்ளத்திலே நினைந்த மாத்திரத்தில் அம்மாயையும் வந்துதோன்றினள். சூரபதுமனோ அவளைச்சேதாவைக்கண்டகன்றே

போல்தன்னுள்ளங் குழைந்துகண்டுஇதுகாறுநடந்தவற்றை யெல்லாம்சொல்லி இறந்துபோன சேனைகள்முழுதும் மீண்டு மெழுந்திருக்க வொருசூழ்ச்சியைக் கேட்டான். அவள்சூரபதுமனைநோக்கிப் பெரும்புறக்கடலினப்புறத்தேயுள்ள சஞ்சீவி மலையிங்கு வருமாயின் யாவரும் பிழைப்பரென்றுருக்கரந்தனள். அதைக்கேட்ட சூரபதுமன் மனமிகமகிழ்ந்து அம்மலையைக்கொண்டு வருவே னெனத்துணிந்து தனக் கனுதிமல முத்தனாகிய பரமசிவன் உதவி யிருந்த சிங் கத்தின் பிடர்மேலேறி இந்திரஞாலத்தேரைநோக்கிநீசென்றுசஞ்சீவி மலையை க்கொண்டுவாவென்று கட்டளையிட்டான். அது அவ்வாறேசென்று அம் மலையைக் கொண்டுவந்தது. அம்மலைவரவே போர் செய்யத் தொடங்கிய நாள் முதலின்று வரையும இறந்து கிடந்த பானுகோபன் சிங்கமுகாசுரன் முதலானோரெல்லாம் நித்திரை தெளிந்தெழுந்து போர்செய்யத் தொடங்கி னர். அதைக்கண்டு பூதவீரர்கள் வெருக்கொண்டு தளர்ந்தனர். அதுகண்ட பிள்ளையாரோ தமது கரத்திலிருந்த வில்லில் சிவாத்திரத்தைத் தொடுத் தேவினார். அது மீண்டு மெழுந்து சிங்கமுகன் முதலிய தானவரையெல் லாமழித்துவிட்டு நமது குகப் பெருமான் திருக்கரத்தில் வந்து சேர்ந்தது. சூரபதுமனோ சினங்கொண்டு தன் தேரை நோக்கி நீ சென்று வீரவாகுதேவ ரையுள்ளிட்டாரை யெல்லாம் மயக்கங்கொள்ள அண்டமுகட்டிற் கப்பாற் சேர்த்துவாவென்று கட்டளையிட்டனர். அவ்விந்திரஞாலத்தேரோ அவ்வாறே சென்று அவர்களை அண்டமுகட்டிற் கப்பாற் சேர்த்தது. பிள்ளையாரோ சினங் கொண்டு தமது வில்லில் ஒரு பாணத்தைத் தொடுத்தேவினார். அது சென்று அத்தேரை அவ்வீரவாகுதேவரை யுள்ளிட்டாருடன் நிலத்திற்கொணர்ந்து சேர்த்தது. அதனால் அவர்களனைவரும்மயக்கமகன்று நங்குகப்பெருமானைப் புகழ்ந்து நின்றனர். பிள்ளையாரோ அத்தேரைநோக்கி இனி இங்கேதானே நின்றுவிடுவென்று கட்டளையிட்டருளினார். அதுஅவ்வாறே அசைவின்றி நின்றுவிட்டது. சூரபதுமன்மனந்தளர்ந்து தன்வில்லில் ஏழுபாணங்களைத் தொடுத்து ஏவினான். அவைபிள்ளையாரை நோக்கிவரவே அவற்றைத்தாமும் அவ் வாறு தமது வில்லில் பாணங்களைத் தொடுத்தேவித் தடுத்து ஆயிரம் பாணங் களையேவி அவன்கையிற்பிடித்திருந்த வில்லைத்துணித்தனர். சூரபதுமனோதன் கையிலிருந்த வில்லொடியவே சூலப்படையொன்றை விட்டேவினான். அதை யழிக்க ஆயிரம்பாணங்களைப்பிள்ளையாரேவ, அவற்றையெல்லாம் கவளீகரித் துக்கொண்டுத் தம்மேல் வரக்கண்டு பிள்ளையாரும்தமதுதிருக்கரத்திலிருக்கும் வயிரப்படையையேவினார். அதுசூலப்படையைக்கவ்விக்கொண்டு பிள்ளையார் திருக்கரத்தே வந்தடைந்தது. பிள்ளையாரோ இரண்டாயிரம்பாணங்களையேவி அச்சூரபதுமனேறியிருந்த சிங்கத்தைக் கொன்றனர். தானேறியிருந்த சிங்க மிறந்துபடவே சூரபதுமன் சக்கரவாகப்புள்ளைபோ லுருக்கொண்டு பூதர்களை வருத்தத் தொடங்கினான். இவ்வாறு வருத்தத் தொடங்கியதறிந்த பிள்ளையா ரும்அப்பறவையைக்கொல்லநினைந்துவில்லினின்றும்பலபாணங்களையேவினார். அதனால்வருந்திய அப்பறவை பிள்ளையாரது திருக்கரத்திலிருக்கும் வில்லைமுறி க்கவந்தது. அதைப்பிள்ளையாரும் தமது திருக்கரத்திலிருந்த வாட்படையா

விரண்டு துண்டமாக வெட்டித்தள்ளினார். பின்பு அச்சூரபதுமன் நிலனும் நீராயும் தீயாயுங்காற்றும் தனித்தனியுருவங்கொண்டு போர்செய்யப் பிள்ளையாரும் அவற்றையெல்லாம் தமது திருக்கரத்திலிருக்கும்வில்லில் ஏழுபாணங்களைத்தொடுத்து நீங்கள்ஊழிவெள்ளம்போலுருக்கொண்டு அவன்மாயையையெல்லாமழிக்க வேண்டுமென்று தடுத்தும், நீருருவங்கொண்டபோதுநீருருவங்கொண்டுபோர்செய்ய அதைநூறுபாணங்களையேவி யூழித்தீயுருக்கொண்டந் நீருருவத்தை யழிக்கவேண்டுமென்று தடுத்தும், தீயுருக்கொண்டுஅவன்போர்செய்கையில் பிள்ளையார் தமதுகரத்திலிருக்கும் வில்லில் ஆயிரம்பாணங்களையேவிஅவற்றைப் பிரசண்டமாருத வடிங்கொண்டு போய்வெற்றிகொள்ளவிடுத்தும், பின்பு பிள்ளையார் அவன்காற்றுருக்கொண்ட காலத்தில்தமதுதிருக்கரத்திற்பிடித்தவில்லில் இலட்சம்பாணங்களைத்தொடுத்து நீங்கள்பாந்தள் வடிவங்கொண்டு அம்மாயையை யழித்துவரவேண்டுமெனவிடுத்தும்போர்செய்தருளினர். இவ்வாறுபோர்செய்யவே சூரபதுமன்சாலநொந்து ஒருபால் எமன்போலவும் ஒருபாலிருள்போலவும் ஒருபால்மலைபோலவும்ஒருபக்கத்திற் பூதம்போலவும்ஒருபக்கத்தில்பஞ்சபூதம்போலவும்ஒருபக்கத்தில் ஆலவிடம்போலவும் ஒருபக்கத்தில் படைவகைகள்போலவும்உருக்கொண்டுபோர்செய்தான். அவற்றையெல்லாம்தனித்தனியேதமதுவில்லில் ஆயிரமாயிரம்பாணங்களைவிடுத்துத்தடுத்தருளினர். பின்னே சூரபதுமன்எழுகடலாகவும்நிலமேழும்பிறவாகவும்உருக்கொண்டு போர்செய்யும்படிவந்தான், அவற்றையெல்லாம் தமது திருக்கரத்திற்பிடித்திருக்கும் வில்லிற்றொடுக்கும் ஆயிரம்பாணங்களையேவ அப்பாணதேவதைகள் அவ்வுருவ மொவ்வொன்றிற்கும் எவ்வேழுருக்கொண்டு அவன்கொண்ட மாயை வடிவங்களனைத்தையுஞ் சிதைத்தன. பிள்ளையாரோ இவனற்றலெல்லாம்கண்டு தன்னையன்றிவேறில்லாத தற்பரவடிவமாய் நின்றனர். அதுயாவரையும் மனம் குழைந்துருகும்படிசெய்தது. எங்குந்தானேயாகின்ற தன்மையைக்கண்ட இவனைப்பாலனென்றேயெண்ணிமதிமோசம்போனேனே, இவ்வுருவத்தில்எல்லாவண்டங்களுந்தோன்றுகின்றனவே, இவ்வுருவத்தைக்காணவல்லவர்யாவர், ஆயிரங்கோடிமன்மதர்கள் அழகனைத்தும்ஒருசேரத்திரண்டு நின்றாற்போலவும்ஆயிரங்கோடிஇளஞ்சூரியர்ஒருசேரத்திரண்டு நின்றாற்போலவும்விளங்கிய இக்குமரநாயகன்திருவுருவத்தைக்கண்டு தேவர்கள்ஒருபுறத்தே வணங்கித் துதித்துநிற்க, அண்டமும்பிறவும் தானேயாந்தன்மையா யிருக்கின்றனனே! இவனுண்மையை நமக்குத் தூதனாகவந்த வீரவாகுவும் சொல்லியிருந்தானன்றோ! அவன்சொன்னவற்றையெல்லாந்துணிபாகக்கொள்ளாமலிருந்துவிட்டேனே! நான் அரசுசெலுத்திவந்த ஆயிரத்தெட்டண்டமும் இவன் கொண்ட திருவுருவத்தி னோர்கான்மயிரிற்றோன்றுகின்றனவே! இவன் கொண்டதிருவுருவத்தினைமுழுதுமறியவல்லவர் யாரிருக்கின்றனர்! நான்பெற்றவரத்தின் சிறப்பால் ஒருசிறிது பார்க்கவலியுடையேனாயிருக்கின்றேன். இவனைச்சாதாரணமாக எண்ணவும்போமா! அப்பரம்பொருளேஇக்குமரனாகியேபோர் செய்யவந்ததென்று என்னுயிர்போன்ற தம்பியாகிய சிங்கமுகனும் என்னிளைய குமாரனாகிய இரணியனும் பலவகையாக எடுத்துச் சொன்னார்களே,

நானதைக்கேளாமலும் போனேனே! நாம் இவன் திருவுருவத்தை எண்ணிலாதயுகமேத்தி நின்றாலும் கண்ணினாலுமடங்காது கருதலளவையாலுமடங்காது, இவன் நம்மொடு போர்செய்ய வெழுந்தருளியது அவன் திருவருளாலேயென்றுதுணியவேண்டும். இவனோடு போர்செய்யலாமென்றுகொண்ட வெகுளி முழுதும்போய்விட்டது, போர்க்கெழுமுயற்சியு மருகிவிட்டது. உடல்புளகமரும்பியது. ஆனந்தக்கண்ணீர் பெருகுகின்றது. இவனிடத்தே யன்புபெருகுகின்றது. எனக்குநெஞ்சமும்என்றும் அழிவாய்ப்பட்டமெழுகே போ லுருகாநிற்கின்றது. அகந்தைவேருடன் கெட்டொழிந்தது; மெய்யுணர்ச்சிபிறந்தது. வலத்தோளும் கண்ணும் துடிக்கின்றன. இவன்திருவுருவத்தில் எல்லாப்பொருள்களும் தோன்றாநிற்கின்றன. விண்ணவர்பெருமானாகிய இவனது திருவுருவத்தை முழுதுங்கண்டேன்; இவனை அடையவேண்டுவதே கா ணினாற்பெற்றபயன்,கையாற்பெற்றபயன்தொழுவதே,தலையால்வணங்குவேண்டுவதே, நாவினால் துதிக்கவேண்டுவதே, தீமையனைத்தும் நீக்கவேண்டுவதே, நானிவனுக்காளாகியென்றும் வாழவேண்டுவதே,நானுந் தேகமெடுத்தபயனிதுவே என்று எண்ணினான்.

இவ்வாறு எண்ணியிருந்த சூரபதுமனைக் குமரநாயகன் தன்திருவருளால் மீண்டும் மயக்கினான். மயக்கவே கையொடுகையைத் தாக்கித் தலையையசைத்துக்குழந்தையுருக் கொண்டகள்ளன்போர்செய்யாமல்கள்ளமாயையொன்று காட்டி என்னையுமயக்கங்கண்டானே. யாரெனக்குநிகராவர்! காயமழியாதயானே கருத்தழியவல்லேன், இவனுயிர்குடித்தே என் கோபந்தணிவேனென்று மனந்துணிந்து ஆலவிடம்போலெழுந்துசீறிச் சூரியனும் நிலனும் விண்ணுமறையத் தக்கதாகிய இருளுருவங்கொண்டு நின்றான். இதைக்கண்ட தேவர்கள் அவுணமாயமென்று ஆகாயத்திற்சென்றுபார்த்துக்கொண்டிருந்தெம்மை வருத்துவான்போலுமெனத்துணித்துஎம்மை இவனைக்கொன்றுகாத்தியென்று முறையிட்டழுதனர். அம்முறையைத் திருச்செவி சாத்தியருளிய குமரநாயகன் தமது திருக்கரத்திலேந்தியவேற்படையைநோக்கிசென்று நீஇவனுடலைப் பிளந்துவாவென்று கட்டளையிட்டனன். பிள்ளையார்வேற்படையையே வேஅவன்செய்தமாயைகளனைத்தும்போயின. அதுசெல்லக்கண்டசூரபதுமன்இவன் ஏவியவேல்நம்மையென்னத்தான்செய்யுமென்று குறுநகைகொண்டுகோபமாய்க்கடலினடுவேசென்று கீழிணர்நின்றமேற்பகைமாமரவுருவாய்நின்றான். உலகமுழுதும்கவடுவிட்டுவானளாவியதோர்மாமரமாய்க்கடலினடுவிலிருந்தசூரபதுமனின்ற நிலைமைகண்டு தேவர்களெல்லாம் கலங்கினர். அனந்தனும் பாரஞ்சுமக்கமுடியாமல் தன்னுயிரந்தலைகளையுநெளித்துக்கொண்டான். உலகமேழுமிடிந்துபொரிந்தன. கீழேழுலகமும்பொடிந்தன. அட்டமாநாகங்களும் யானையும்புரண்டன. எழுகடலு மொன்றாவதாயிருந்தன. அட்டகுலாசலமும் வருந்தின. நட்சத்திரக் கூட்டங்களுமுதிர்ந்தன. கிரகங்களும்தத்தங்கதிமாறின,சூரியனும் தேரிற்பூட்டியகுதிரைகளுடனும் கலங்கினன். சந்திரனும்தன்விமானத்தைவிட்டோடினான். தேவர்களுங் கயிலையையடைந்துஇறைவனேபுகலென்று வேண்டிக்கொண்டனர். இவ்வாறுயாவரும் எவையுமஞ்சுஞ் சூரபதுமன் வருக்

திக்கொண்டிருந்தான். அவ்வேற்படையானது கடலினடுவே அவன் கிழேபலகவடுகளைவிட்டுப் பூத்துக்காய்த்துப் பழுத்துத் தன்வேரால்மேலுலகனைத்தையும் வருத்தும் அக்கொடியமா மரவுருக்கொண்டிருக்கக்கண்டுமனம்வருந்தி அம்மரத்தைத் தடிந்தது. வேலோ அவனை மார்பினடுவேபுகுந்துபிளந்து ஆகாயகங்கையிற் படிந்து அக்குமரநாயகன் திருக்கரத்தேவந்தடைந்தது. வேற்படைமீளவேசூரபதுமனும் சேவலுமயிலுமாகவுருவங்கொண்டு குமரநாயகனோடெதிர்க்க எண்ணங்கொண்டு தேவர்களெல்லா மிரியல்போகப் பரம்பரனருளிய வரத்தாலிறவாமல் சேவலுமயிலுமாக ஆரவாரித்துக் கொண்டுவரவே, குகப்பெருமான் கண்டு மயிலைவாகனமாகவும் சேவலைக் கொடியாகவுமிருக்கக் கருணைசெய்தான். தமக்குப்போரில் சேவற்கொடியாயும் மயில்வாகனமாயுமிருந்த அக்கினிதேவனையும் இந்திரனையும் நோக்கி உமதியற்கை வடிவங் கொள்ளுங்கோளென்றுசொல்ல அவர்களுந்தத்தமுருக்கொண்டுவணங்கிநின்றனர். தேவர்களும் எங்கள் வினைவேரறுத்தருளிச்சூரபதுமனையும் வேரறுத்தாயென்றும், நாங்கள் நூறு யுகமட்டும்வருந்த ஆறுமுகங்கொண்டருள்செய்தாயென்றும், நீதிநெறியில்லாதவசுரர்செய்யுந் தீமையொழிந்து வேதநெறிபெற்றோமென்றும், எங்களுக்கின்றுபகைமாற்றிச் சென்றவுயிர் மீண்ட திறம்பெற்றோமென்று செய்யுமவனும்புலனும்செய்வித்துநிற்பவனும் எய்தவரும்பொருளு நீயேயென்றுங்காட்டியாண்டனையென்றும்உனக்கேதொழும்புசெய்யப்பூண்டோமென்றும் போர்க்களத்தேவணங்கிநின்றனர்.

சூரபதுமன்வதைப்படலம்
முற்றிற்று.

மீட்சிப்படலம்.

இவ்வாறு நிகழ்வே மகேந்திரநகரத்தில் அவுணரிற் சிலர்விரைந்துசென்று சூரபதுமன் குகப்பெருமானுல்ஏவப்பட்டவேலா லிறந்துபட்டானென்று பதுமகோமளைக்குத் தெரிவித்தனர். அதுகேட்ட அப்பதுமகோமளையும் தன்னாயகனிறந்ததைக்கேட்டவுடன் தலையளியால் தன்னுருயிர்நீங்கினுள். மற்றமனைவியர்ப்பாவரும் தீயில் வீழ்ந்திறந்துபட்டனர். இரணியனோ தன்தந்தையாகிய சூரபதுமன் இறந்துபட்டதும் சேவலுமயிலுமாயும் நின்றமையும் கண்டுள்ளங்கலங்கி மனநொந்து நான்சொன்னவாசகங்களெல்லாம்கேளாமற்போயினையே! என்று தான் உன்னை முன்னைப்போற் காண்பேன், அன்புடையானென்றுபிறர்சொல்லத் துன்பமுடையானாய்த்துயரங்கொண்டழுகின்றேன், மாற்றலர்வலிகண்டும் உன்னைப் போர்க்களத்திற் காவாதொளித்தகடையேனன்றோ! என் கட்புலனுக்குத் தோன்றாமலொளித்தாய், யாருமகனென்றேசொல்லப்பூமியில் தோன்றிய என்னையும் கூடமனங்கொள்வாயோ, நில்லாதவுடம்பை நிலையென்று நினைத்துப் பலருங்கண்டு பழிக்கஉனக்குஞ்சொல்லாமலேயோடிப்போய் மறைந்திருந்தேனே; நீஇறந்துபட்டபின்னரன்றோவந்துவிட்டேன். நானேயோ

வன்பினனென்றின்னன புலம்பி ஆகாயத்தில் வெகுதூரத்திலிருந்துகொண்டு மனந்தளர்ந்து பெருமூச்செறிந்து நான் கண்படுவேனாயின் என்னைப் பூதர்கள் எல்லாந்தின்று கோபந்தீர்வாரோயென்று முன்போற் கடலிலொளித்துக் கொண்டான். பின்புஅவ்விடமகன்று அவன்சுக்கிராசாரியனைத்தேடிச்சென்றடைந்து போரில் இறந்துபட்ட தாதையர்க்கும் பானுகோபன்முதலிய துணைவர்க்கும் பதுமகோமளைமுதலிய தாய்மார்கட்கும் மற்றையோர்ஈமக்கடனை விதிமுறைசெய்து நாமினியிருப்பது துன்பத்திற்கோ ரங்குரமாமெனத்துணிந்து அதை வெறுத்து ஆதிப்பிரானாகிய பரமசிவனைநாடிச் சிந்தையுமொழியுஞ் செல்லா நிலைமைத்தாகிய அந்தமிலின்பத்தழி வில்வீட்டையடைய ஒருசார் சென்று நோற்றிருந்தான். இதுநிற்க,

மயிற்பரியுகைக்கும் பரம்பரன் வீரவாகுவைநோக்கிச்சூரபதுமனால் சிறைகிடந்த சயந்தன்முதலிய தேவர்களையெல்லாம் மீட்டுவாவென்று கட்டளையிட்டனன். அக்கட்டளையைத்தலைமேற்கொண்ட வீரவாகுதேவர்நன்றிதென்று அப்பெருமானை மும்முறைவலம்வந்துஎட்டுறுப்பு நிலமுறப்பணிந்து விடைபெற்றுப் போர்க்களம்விட்டகன்று மகேந்திரநகரமடைந்து அவர்களைச் சிறையிட்டிருக்குமிடம்புகுந்தனர். அதைக்கண்டசயந்தன்முதலியதேவர்களெல்லாரும் விலங்குண்டு கான்விலங்கேபோற்சிறையுண்டிருந்த எங்களை மீட்கும்படி யெழுந்தருளினாயோ! என்று வணங்கி இருகைகளும் சிரமேற்குவித்துத் துதிசெய்தனர். அதைக்கண்ட வீரவாகுதேவர் அவர்களை நோக்கி நமது சண்முகங் கொண்டதாணுவாகியகுகப்பெருமான் சூரபதுமனை அவன் புத்திரபவுத்திராதிகளுடன்களத்திலவியக்கொன்று களைந்து உம்மையெல்லாம் சிறையினின்று மீட்பித்தனன். அச்சொல்லைச் செவிக்கமுதமாகக்கேட்டுள்ள மகிழ்ந்த சயந்தன்முதலிய தேவர்கள் வீரவாகுதேவருடனே சென்று பிள்ளையாரைக்கண்டு மும்முறை வலம்வந்து எட்டுறுப்பு நிலமுறப்பணிந்து வாழ்த்திநின்றனர். அப்போதுகுன்றெறிந்த கொற்ற வேற்குகப்பெருமான் அவர்களைத் தமதுகருணைத் தடங்கண்ணாற்பார்த்தருளி மனக்களிப்புடன் இனித் துறக்கச் செல்வம்பெற்றிருப்பீரென்றுதிருவாய்மலர்ந்தருளினான். பின்புசயந்தன் தன்னையீன் தந்தையாகிய இந்திரனை வணங்கிநின்றான். அதுகண்டு இந்திரனும் தன்மகனை வாரியெடுத்துமார்புறத்தழுவி யுச்சிமோந்து முத்தமிட்டான், அதுபோது மற்றதேவரும்முறைமுறையேவந்து இந்திரனை வணங்கிநின்றனர். அவர்களையுந் தனித்தனியே மார்புறத்தழுவினான். பின்னர் சூர்க்குலங்கடிந்த சுடர்நெடுவேலண்ணல்போர்க்களத்திற் போரில்அதுவரையிலும் இறந்துபட்ட பூதரையெல்லாம் வருகவென்றருள அவர்களும் அவ்வாறே வந்து குகப்பெருமானைவணங்கிநின்று சூழ்ந்தனர். பின்னர் குகப்பெருமானே வருணனையழைத்துச் சூரபதுமன் இதுகாறும் அரசுபுரிந்திருந்த மகேந்திரநகரத்தை யழித்துவிடென்று கட்டளையிட,அவன் அக்கட்டளையைத்தலைமேற்கொண்டுஅந்நகரத்தைமுழுதும் கடலுக்கிரையாக்கினான். கடவுட்பெருமானாகிய குகப்பெருமானேமகேந்திரநகரைக் கடந்துஇலங்கையைநீங்கிக் கடலையுந்தாண்டித்திருச்செந்தூரையடைந்துமயில் வாகனத்தைவிட்டிழிந்து பிரமன்மால்முதலியதேவர்களும்வீரவாகுதேவர்முத

வியஇலக்கணத்தொன்பதின்மரும் பூதரும் தன்னைப் புடைசூழத்தனது திருக்கோயிலையடைந்து சிங்காசனத்தி லெழுந்தருளினான். அப்போது பிரமன்மால் முதலிய தேவர்கள் அறுமுகங்கொண்ட ஆதிப்பிரானை மும்முறைவலம்வந்து எட்டுறுப்பு நிலமுறப்பணிந்து வாய்பொத்திக் கைகட்டிக்கொண்டெம்பெருமானே! துரும்பினும் பற்றுச்சிறியேம் தேவரீருடைய பொற்பாத புண்டரீகங்கட்கு அருச்சனை செய்யவேண்டுகின்றோமென்று விண்ணப்பஞ் செய்துகொண்டனர். அவ்வாறே செய்கவென்றுநம்பெருமான்பணிக்க, அக்கட்டளையைத் தலைமேற்கொண்ட அப்பிரமன்மால்இந்திரன்முதலிய தேவர்கள்நறும்புனல்நறுமலர்கனி வகைமுதலியவற்றைச் சேகரித்துக்கொண்டு குமாரதந்திர நெறியிற் கும்பத்தாபன முதலியவற்றைச் செய்துபரிவாய்ப் பூசிக்கத்தொடங்கி அர்ச்சனையுஞ் செய்துமுடித்து வணங்கிநின்றனர். அவர்களை நோக்கி உமது குறை யாதென்றுதிருவாய்மலர்ந்தருள சூரபதுமனைவேரொடுங்கெடுத்த தேயாங்கள் பெறும்பேறு, எங்களுக்குமது திருவருள் பூரணமாயிருக்க யாங்கள் பெறவேண்டுவதென்னவிருக்கின்றது, உமது கருணைக்கடைக்கண் எம்பால் எப்போது நீங்காதிருக்க வேண்டுமெனக் குறையிரந்தனர். பின்பு குகப்பெருமானே பரம்பரனாகிய பரமசிவனை யருச்சிக்கத் திருவுளங்கொண்டு தானுவையமைத்துச் சிவார்ச்சனை செய்யத்தொடங்கிச் சிவாகமவிதிப்படிமுடித்து இறைவனையும் வழிபட்டிருந்தான்; இதுகிடக்க.

[illegible]ப்படலம்

யுத்தகாண்டம்.

முற்றுப்பெற்றது.

உ

வேலுமயிலுந்துணை.

ஐந்தாவது

தேவகாண்டம்.

தெய்வயானையம்மை திருமணப்படலம்.

கண்ணுதற்பிரானுதல்விழித்தோன்றியேகமலத்
தண்ணலுக்கருமறைப்பொருடெரித்தருள்விளையாட்
டெண்ணிலாதனசெய்துசூர்முதறடிந்திமையோர்
நண்ணவான்பிடிமணந்தவனடிமலர்நயப்பாம்.

முத்துக்குமரப்பெருமான் இவ்வாறு சிவார்ச்சனைசெய்தபின்னர் அவ்விடமகன்று மாலேபிரமனேமுதலிய தேவர்களும் முற்றத்துறந்த முனிவரும் வீரவாகுதேவனை யுள்ளிட்ட இலக்கத்தொன்பதின்மரும் பூதவீரரும் பூதப்படை இரண்டாயிரவெள்ளமும் தன்னைப் புடைசூழ்ந்துவர மயில்வாகனத்திலெழுந்தருளிமாலேபிரமன்முதலிய அத்தேவர்களைநோக்கிநீங்கள் உங்களுக்குரியவாகனங்களின் மேலேறிவாருங்களென்று கட்டளையிட, அக்கட்டளையை மேற்கொண்ட பிரமன்மாலிந்திரன்முதலிய தேவர்களும் வீரவாகுதேவனை யுள்ளிட்ட இலக்கத் தொன்பதின்மரும் பூதவீரரும் தத்தம் வாகனங்களின் மேலேறிப் புடைசூழ்ந்து சென்றனர். இவர்கள் இவ்வாறு புடைசூழ வடதிசையை நோக்கிச் சென்று சந்தனப்பொதிகைச் செந்தமிழ்முனிவனும் சவுந்தரபாண்டியனெனுந் தமிழ்நாடனும் சங்கபலகையுந் தழைத்தினிதோங்கு மங்கலப் பாண்டிவளநாட்டின்முக்கண்முதல்வன்மூவிருபத்துநான்குதிருவிளையாடல்செய்தமுத்தித் திருப்பதியெனப்படும் துவாதசாந்தநகரமாகிய மதுரைக்குக் குடக்கண்ணுள்ள திருப்பரங்குன்றினை யடைந்தான். அதைக்கண்டதெய்வத்தச்சன் அம்மலையையடைந்துஅளவிலாவீதிகளும்தேவகுலமும்கோயில்களும் சோலையும் வாவியும்படைத்து முடித்து விண்ணப்பிக்கக் குமரநாயகனும் தானேறியிருந்த மயிலினின்றிழிந்து பிரமன்மாலிந்திரன் வீரர்முதலானோர் புடைசூழ்ந்துவரத் தனக்கமைத்த திருமாளிகையிலே சென்று மற்றதேவர்கள் முதலானோர்களையும் தத்தமக்கமைத்திருந்த விடுதிகளிற் செல்லக் கட்டளையிட்டனன். வீரவாகுதேவனை யுள்ளிட்ட வீரர்கள் இலக்கத் தொன்பதின்மரும் பாரிடவீரரும் இரண்டாயிரவெள்ளம் பூதப்படையுடன் குமரநாயகனைப் பிரி

யாமலிருந்தனர். இவ்வாறு அவர்களுடன் எழுந்தருளியிருக்கையில் பராசர முனிவன் மக்களறுவரும் முன்னே நம்பெருமான் கட்டளையிட்டிருந்த வண்ணம்அப்பெருமானது சிபாதபுண்டரீகங்கட்கருச்சனைசெய்துதுதித்துநின்றனர் அவர்களைக் கடைக்கணித்தருளிப் பெருமானருளிச்செய்த வேதசிவாகமமுடிவாகிய மெய்ப்பொருளை அவர்கட்குபதேசித்தருளினன். இதுநிற்க,

இந்திரனோ தன்பகைவனாகிய சூரபதுமனை வேருடன்களைந்த வெற்றிவேற்கை விசாகப்பெருமானுக்குத் தன்னருமந்தப் பெண்ணமுதமாகிய தெய்வயானையாரையழைப்பித்துத்திருமணஞ்செய்விக்க வெண்ணித் தான்கொண்டகருத்தைப்பிரமன்மால்முதலிய தேவர்கட்கறிவித்தான். அவர்களோநீகொண்டகருத்தேசாலச்சிறந்ததென்று மிகமகிழ்ச்சியுடன்பேசிக்கொண்டனர். அத்தருணத்தில் இந்திரன் தன்னருகேநின்ற தூதனைநோக்கி நீ விரைந்துசென்று மேருமலையை யடைந்து என்மனைவியைத்தெய்வயானையாருடனழைத்துவாவென்றுகட்டளையிட்டனன். அக்கட்டளையைத் தலைமேற்கொண்ட தூதனும் மேருமலையையடைந்து புலோமசையென்னும் சசியையடைந்து அவள் கணவனாகிய இந்திரன் சொன்னதை யெல்லாமெடுத்துச் சொல்லி விரைவாகப் புறப்பட வேண்டுமென்று விண்ணப்பித்து, சூரபதுமன் மாண்டதும் சயந்தன் முதலியோர் சிறைமீண்டதும குமரநாயகன் திருப்பரங்குன்றத்தில் வந்திருப்பதும் தெரிவித்தான். அதைக்கேட்ட இந்திராணி சாலக்களிப்புடன் விரைந்து தன்மகளுடன் அயிராவதமாகியயானையின்மேலேறிக்கொண்டுதிருப்பரங்குன்றமடைந்து இந்திரனிருக்கும் விடுதியையடைந்தனள். அவள் வரவையறிந்த தெய்வமாதர்கள் இந்திராணியை முறைமுறைவந்து வணங்கினர். பின்பு சயந்தனும் சேதாவைக் கண்டணையும் கன்றேபோல வந்துவணங்கினன். அவனைக்கண்ட இந்திராணியோ தன்மகனாகிய சயந்தனைக் கருணையால் தழுவிக்கொண்டு தன்கொங்கையிற்பால்சுரக்கத் தன்கவலையனைத்துநீங்கி வறியோனுக்குப் பெருநிதிகிடைத்தாற்போல மகிழ்வடைந்தனள். இநதிரன் தனகாதலியாகிய சசியைக்கண்டு மகிழ்ச்சியடைந்த பின்பு தன்மகளாகியதெய்வயானையாரைத் திருமணஞ்செய்விக்க நினைத்து ஒப்பாருமிலலாத வுத்தமனாகிய வெற்றிவேற்கைக்குமரநாயகன் சீபாத புண்டரீகங்களிற் பூமலர் கொண்டர்ச்சித்து மலைபோலும் தோளையுடைய அவுணர்களைக்களைந்து தேவர்கள் சிறைமீட்டனை! எனக்கும்வேண்டியசிறப்புஞ்செய்தனை? அதைமுழுதுநாடிச் செய்நன்றியாகச் சிறியேன் செய்யத் தக்கதுமுண்டோ? முன்னே யான்பெற்றமாது இம்மலையினிடத்தே யமர்கின்றனள். அவளைத் திருமணஞ்செய்து கொடுத்து என்பிறவிப்பிணி நீங்கவெண்ணி யிருக்கின்றேனென்றான். இவ்வாறு சொல்லவே இந்திரனை எமபெருமான் கடைக்கண்சாத்தியருளி அம்மாதும்எம்மைநோக்கிமுன்னே தவஞ்செய்திருக்கின்றாள். ஆகையால்நீ எண்ணியபடியே நாளையே திருமணஞ்செய்துகொள்கின்றேன்என்றான். அதைக்கேட்ட இந்திரன்சாலமகிழ்வெய்திஎம்பெருமானுடையதிருப்பாதமலர்களைத்தன்முடிமேற்கொண்டுநாங்கள் இருதாரத்தாரேனுமென்றுசொல்லிவெளியேவந்துதூதனைநோக்கினின்றான். அத்தூதரும்அவனடிபணிந்துதாழ்ந்துவணங்கினர். அவர்களை நோக்கி இந்திரன் சொல்லலா

யினான். நீங்கள் சென்றுமுசுகுந்தமகாராசன்முதலிய அரசர்கட்குந்தேவர்கட்
கும்மற்றதிசையுளார்க்கும் முற்றத்துறந்தமுனிவர்கட்கும் எமதுபெருமானாகிய
குமாரசற்குருமூர்த்தி திருமணநாளை யென்றுதெரிவிக்க வேண்டுமென்றான்.
அப்படியேதிருப்பரங்குன்றத்தில் எம்பெருமானுக்குத்திருமண நடக்கப்போகி
ன்றதென்றுதெரிவிக்கின்றோமென்று விடைபெற்றுச் சென்றனர். இதுநிற்க;
இந்திரனே தெய்வத்தச்சனை வருதல்வேண்டுமென்று நினைக்க அவனும்
வந்துசேர்ந்து வணங்கிநின்றான். அவனை நோக்கி நமது சாட்குணப் பிரமமா
கிய குகப்பெருமானுக்கு நடத்தவேண்டியதற்குச் சிங்காரமானகல்யாணமண்
டபம்வகுக்கவேண்டுமென்றுசொல்லிக்கொண்டான். அதைக்கேட்டதெய்வத்
தச்சனே இந்திரன்சொல்லைத்தலைமேற்கொண்டுநவமணிமயமானமண்டபமொ
ன்றமைத்து மேலைநிலமுற்றுறவிதானவகைபோக்கிமாலையொடுபல்கவரிதுகில்க
ளொடுதூக்கிஅவ்வாலயத்தினடுவிற்சண்முகப்பெருமான் எழுந்தருளியிருக்கச்
சிற்பநூல் முறைசொல்லிய வண்ணம் ஒருசிங்காதனத்தையு மமைத்ததன்றி
விவாகமகோற்சவத்தில் வந்திருந்துதிருமால் அயன்முதலிய தேவரும் பிற
ரும் வீற்றிருக்க அனேக ஆதனங்களுமமைத்தான். அத்திருமண்டபத்தின்
மருங்கே மலைபோன்ற கோபுரங்களைவகுத்தும் மணிமண்டபங்கள் பலவும்
பலசபைகளையு நிருமித்துஞ் சோலைகள்வாவிகள்சுனைகள் உண்டாக்கியும் மற்
றும் பூலவுமுண்டாக்கி இந்திரனுக்குத்தெரிவித்தான். இந்திரனே தெய்வத்தச்
சன் நிருமித்ததுகண்டு அத்திருமணத்திற்கு வேண்டுமுபகரணக்கள் எல்லாஞ்
சமைத்தான். இப்படி இந்திரன்சாட்குணப்பிரமமாகிய குகப்பெருமானதுதிரு
மணத்திற்காகிய உபகரணங்களெல்லாஞ் சித்தஞ்செய்து கொண்டிருக்க, அப்
பெருமானது திருமணத்தைக் காணும்படி கருவூரிலிருந்துகொண்டு காவிரியா
ற்றுவளஞ்சால்கின்றசோணாட்டினையரசாண்டுவரும் முசுகுந்தமகாராசன்வரு
கின்ற தன்மைமையை யெடுத்துச் சொல்கின்றேன்.

அருவியாறு கல்லென்னு மோசையுடன் இழிகின்ற கயிலாயமலையில்
முன்னாளில் அம்மையு மப்பனுமாக அளவில்லாத மகிழ்ச்சியோ ?ருப்பக்குர
ங்கினங்கள் வில்வமரத்தின் கிளைகளிலெல்லாம் ஏறிக்கொண்டிருந்தன. முழு
தொருங்குணர்ந்தமுற்றத்துறந்த முனிவர்கள்போல அவ்வம்மையு மப்பனுமா
கிய இருவர்மேலும்ஒன்று அளவில்லாத வில்வத்தழைகளைச்சொரிந்தது. அவ்
வாறு சொரிந்தமையைக்கண்டு ஆளுடைய பிராட்டியாகிய பராபரை பொறு
மல் கோபிக்க அச்செய்கையை இறைவன்பார்த்து நம்மை அம்முசுவோவழி
பாடுசெய்தது, அதை நீ கோபமுண்டாகிச் சீறுவது நன்றன்று. நீ கொண்ட
கோபத்தைத் தணியவேண்டுமென்று சொல்ல, அதைக்கேட்ட சர்வ
லோகநாயகியாகிய ஆளுடையபிராட்டி அக்கோபந்தணிந்து நின்றாள். அம்
மையப்ப ரிருவோரும் அவ்வில்வத் தழைகளை அதுவரையும் தம்மேல்
தூர்த்த அம்முசுவினுக்கு மெய்யுணர்ச்சி யுணர்த்த அம்முசுவும் அக்கிளையி
னின்று மிழிந்து அம்மையப்ப ரிருவோரையு மன்புடன் தாழ்ந்து பொயயடி
யேன் பிழைபொறுத்தருள வேண்டுமென்று வணங்கியது. அதைக்கடைக்

கண்ணோக்கி இறைவன்எம்மைவில்வங்களால் வழிபாடு செய்தனை, அவ்வாறு செய்தமுதிர்ந்தபூசனைக்குத் திருவுள்ளமகிழ்ந்தோம், உனக்குமும்மையுலகமும் புரக்கும் பெரும்பாக்கிய மளித்தோமென்று சொல்லதற் கிறைவனே! உம் மிருவோரையும் இங்கேகண்டு தெரிசித்துக் கொண்டிருக்கும் பெரும்பாக்கிய மிழந்து நான் செல்வவலைப் படுவேனேயாயின் 'செல்வமென்னும் அல்லலிற் பிழைத்தனை' என்ற ஆன்றோர் வாக்கின்படி துன்பந்துய்த்து வருந்துவே னே! யானென் செய்வேன்! எவ்வாறு பிழைப்பேனென்று விண்ணப்பித் தது. அதைத் திருச்செவி சாத்தியருளிய பரமசிவன் நீ சிறிதுமஞ்சவேண் டாம். நீநன்றுகருதியேகேட்டனை! நீ அந்நிலவுலகிற்சென்றுமீண்டுவரக்கடவா யென்றனன். அதைக்கேட்ட அம்முசுயான்பொய்ம்மறைந்த புலாலுடம்பைப் பாதுகாத்து நின்றிருவருட் செல்வத்தைப் பெற்றிருப்பதன்றிஇம்முகத்தோடு பிறந்திருக்கவும் வரந்தர வேண்டுமென்று விண்ணப்பிக்க; அவ்வாறே யாகுக வென்று திருவாய் மலர்ந்தருள நீர்நாட்டினை யாண்டுவந்த அரிச்சந்திரனென் னும் சோழமகாராசன் மகனாய் முசுமுகத்துடன் பிறந்து கலைகளெல்லாம் பயின்றுலகமெல்லாம் பொதுக்கடிந்து செங்கோலோச்சித் தனக்குக் கருவூ ரைத்தனக்கிராசதானி யாக்கிக்கொண்டு சூரபதுமன்ஆணையைக் கடவாமலி ருந்தான். ஆயினும் அச்சூரபதுமன் படைத்திருந்த நிலவுலகத்தில்ஓர்பால் ஓரி ளம்பிறைவைகியதுபோலிருந்தனன். அம்முசுகுந்தன்முத்துக்குமரப்பெருமான் சூரபதுமனைக் கொன்றதுகேட்டுவப்படைந்து துன்ப நீங்கியருஞ் சிறைபெற்ற மேருமலையேபோல வன்மைபெற்று அரசாண்டு வந்தான். இவன் இவ்வா றிருக்கையில் இந்திரனனுப்பிய தூதர்கள்சென்று இந்திரதிருவனுகிய முசுகுந் தனை யடைந்து உனக்கு நண்புடையனுகிய இந்திரன் அனுப்பிய தூதர்கள் யாம்! நீ நீடுழிவாழக்கடவாய், நாங்கள் சுபச்செய்திசொல்ல இங்கே யடைந் தோம். அடாதகாரியங்களை யெல்லாம்செய்து தேவர்களையெல்லாம் படாத பாடெல்லாம் படுத்தியசூரபதுமனைக்கொன்றுகளைந்த வெற்றிவேற்பெருமானு கிய முத்துக்குமரப்பெருமான்வடதிசையைநோக்கிப்புறப்பட்டுத்தென்றமிழ்க் கூடற்றிருநகர்க்குப் பச்சிமதிசையிலிருக்கும் திருப்பரங்குன்றத்தை யடைந் தனன். இந்திரனே அப்பெருமானுக்குத்தான்அருமருந்தாகப்பெற்றதெய்வயா னையாரைத்திருமணஞ்செய்விக்கப் போகின்றான். அத்திருமணநடக்குந்தினமு நாளையேயாகும். அத்திருமணங்காண நீ உன் நால்வகைப் படையுடன் அத் திருப்பரங்குன்றடைய வேண்டுகின்றோமென்று தெரிவித்தனர். அதைக்கே ட்ட முசுகுந்த மகாராசன் சாலவுமுள்ளக்கிளர்ச்சியடைந்து மயிர்க்குச் செறியத் தூதர்களைத்தழுவிச் சோபனம்பாடி யான் உங்களுக்குயாது தரப் போகின்றேன். என்பண்டாரத்திலுள்ள பொருளையெல்லாம் கொடுப்பது வோ, என்குடையும் கவரியும் கொடுப்பதுவோ, யானுண்டுவரும் அரசைக் கொடுப்பதுவோ! யாதுகொடுக்கவேண்டும் சொல்லவேண்டுமென, அதைக் கண்ட தூதுவர் அரசர்பெருமானே; தூதர்களாகவந்த நாங்கள் பெறும் பரிசு ன்று, இதுவும்தகுதியாமோ! என்று சொல்லிவிட்டுத் தாம் பலவரசருக்கும் குகப்பெருமானுடைய திருமணஞ் சொல்லப்போயினர். அவர்கள் அவ்வாறே

அரசர்களுக்குஞ் சொல்லிவிட்டு முற்றத்துறந்த முனிவர்களுக்குஞ் சொல்லி விட்டுத் திருப்பரங்குன்றமடைந்தனர். இவ்வாறிருக்க முசுகுந்தமகாராசனை வள்ளுவனைக் கூவியழைத்து நமது குகப்பெருமானது திருமணத்தைத் திருப்பரங்குன்றமடைந்து காண நமது நகரமாந்தரனைவரும் புறப்படும்படி பறையறையென்று கட்டளையிட்டான். அந்நகரமாந்தரும் அங்ஙனமே புறப்பட்டனர். நால்வகைச்சேனையும் கோட்டைவாயிலைக்கடந்து சென்று அரசனோடும் புறப்பட்டு நடந்தன. அரசனும் தன்னகரத்திலுள்ளவர் யாவரும் புடைசூழ்ந்துவரத் திருப்பரங்குன்றமடைந்தனன். அரசர் பலரும் தூதரால் திருமணச் செய்தியைக்கேட்டுத் திருப்பரங்குன்றமடைந்தனர். இவ்வாறு வந்த அரசர்கள் இந்திரனைக்கண்டு அவனால் விடப்பட்ட விடுதிகளிலிருந்தனர். அரசமாதரும் இந்திராணியைக்கண்டுதெத்தங்கணவரிடமேபோய்ச்சேர்ந்தனர். பின்பு இந்திரனை பிரமனைநோக்கி யாவரும் வந்துசேர்ந்தனர்; இனி நம்பெருமானுக்குத் திருமணஞ்செய்யும் காலம் யாதென்று சொல்ல, இதுதான் சமயமென்று சண்முகங்கொண்ட குகப்பெருமானையணைந்து அப்பெருமானது சீபாதபுண்டரீகங்களைவணங்கித்துதித்துத் தேவரீர்தெய்வயானையாரைத் திருமணஞ்செய்துகொள்ள வெழுந்தருளவேண்டுமென்று விண்ணப்பிக்க, அதைத் திருச்செவிசாத்தியருளிய குகப்பெருமான் சிங்காதனத்தைவிட்டிழிந்து மயில் வாகனமேறினன். அப்போது பிரமன்மால்முதலிய தேவர்கள்பணிந்து மலர் மழைபொழிந்து அப்பெருமானை டனுக்கராய்ச் சென்றனர். சந்திரன் சந்திரவட்டக்குடைநிழல் செய்தனன். சூரியன் கவரிவீசினன், வாயுவும் வருணனும் ஆலவட்டமெடுத்து வீசினர், தென்றிசைக்கோமான் வாட்படையேந்திச் சென்றனன். வேதியராரவாரித்தனர். வேதமுமாரவாரித்தன, அரமகளிர் மங்கலம்பாடினர். மாதவர்களாரவாரித்தனர். குறளராரவாரித்தனர். பேரிகை தண்ணுமை சல்லரி திமிலை குடமுழா காகளம் தொண்டகம் துடி துந்துபி வலம்புரிமுதலிய வாத்தியங்களுமாரவாரித்தன. வித்தியாதரரும் கந்திருவரும் வீணைவாசித்தனர். ஊர்வசி திலோத்தமை அரம்பை மேனகைமுதலியதெய்வமாதர்கள் பாடிநடனஞ்செய்தனர். இவ்வாறு அவர்கள் வீதி டம்பெருமல் நெருக்குண்டுவரக் குகப்பெருமான் திருமணக்கோலமாகப் புறப்பட்டுத் தான் அம்மணஞ்செய்ய நியமித்த இடத்திற்சேர்ந்தனன்.

முத்துக்குமரப்பெருமான்மயிலினின்றுமிழிந்து வேள்விசெய்கிறசாலையிற் சென்றனன். அரமகளிர்புடைசூழ இந்திராணி அவனைத் தொழுதடைந்துபசுவின்பால்கொண்டு பாததாமரைகட்கு அபிடேகஞ்செய்து மலர்மாலை சூட்டிப் பணிந்து தீபங்காட்டி மும்முறை சுற்றிவந்து தன் மந்திரநாடிச்சென்றாள். அவள் சென்றபின்பு எம்பெருமானை தன்பக்கமாய் பிரமன்மாலிந்திரன் முதலிய தேவர்கள் நெருங்கிவர அம்மணிமண்டபத்தில் எழுந்தருளித் தனக்கென்றே இந்திரனிட்டிருந்த சிங்காதனத்தில் வீற்றிருந்தான். இறைவன் இவ்வாறு வீற்றிருந்தபின்பு தேவர்களும் இலக்கத் தொன்பதின்மரும் இறைவனேவலால் தத்தமக்கேற்ற பீடத்திலிருந்தனர். அந்தச்சமயத்தில் நிலவுலகத்தை யாளும்முசுகுந்தமகாராசன்முதலியமன்னர்கள்முறைமுறையாகவந்து

வணங்கித் தத்தமக்கிட்ட ஆதனங்களில் அமர்ந்திருந்தனர். அவர்கட்குக் கரு
ணைபாலித்துக் கருணைக் கடலாகிய முத்துக்குமாரப் பெருமானிருக்க, உலக
ன்னை யொருபாகத்தில் விளங்கச் சாரதப் படைசூழச் சந்திர சேகரனாகிய
பரமசிவன் வான்வழியே யெழுந்தருளினன். அம்மையு மப்பனு மெழுந்தருளி
யதுகண்ட பரம்பரனாகிய குமரநாயக னன்பினால் விரைந்தெழுந்து கண்ணமா
மாயப் பிரானே முதலிய தேவரும் முற்றத்துறந்த முனிவரு மெம்மையா
ளுடையா னிங்கெழுந்தருளினான். இனி நாமுய்ந்தோ முய்ந்தோமென்றுவா
துக்கொண் டெழுந்து தொழுது நின்றனர்.

அப்போது ஆதிபகவன் தாமேறிவந்த விமானத்தினின்று மிழிந்து பூத
கணங்களுடன் அத்திருமண மண்டபத்திற் கெழுந்தருளவே, சண்முகங்கொ
ண்ட சரவணன் அப்பெருமானுடைய எவ்வுயிர்க்கும் போகமாம் பூங்கழல்க
ளைப் போற்றித்துதித்து அம்மாலயனுங்காணாத சீபாதபுண்டரீகத்தைத் தன்
முடிமேற் சூடினான். அதைக்கண்ட அம்மையப்பனும்உலகன்னையொடும் கந்த
னை யன்பொடுமோர்பினிடத்தேதழுவிக்கொண்டுச்சிமோந்து முத்தமிட்டனன்.
பின்பு மாலு மயனும் இந்திரனும் மற்றதேவரும் முற்றத்துறந்த முனிவரும்
மும்முறைவலம்வந்து பணிந்து. எங்கள் குறை யனைத்து நீக்கிய கோமானே!
யென்று வேதமந்திரங்களால் துதித்தனர். எம்பெருமானே உலகன்னை
யுடன் தன்னருமந்தமான காதற்புதல்வனாகிய முத்துக்குமாரப் பெருமானைத்
திருமணமண்டபத்திற் கழைத்துக்கொண்டு சென்றான். அங்கே எம்பெரு
மானது திருவருளால் தெய்வத்தன்மை பொருந்திய சிங்காதனமொன்று
வர அவ்வாதனத்தின்மேல் இறைவியுடனீ வீற்றிருந்தருளிப் பின்பு முத்துக்
குமரப்பெருமானைத் தங்கள்நடுவேயிருக்கச் சோமாஸ்கந்தமாக வெழுந்தருளி
ருந்தனர். அப்போது தாமரைத்தவிசுகந்த பிரமன் தாணுவாகிய பரமசிவனை
நோக்கி முன்னொருநாள் நாங்கள் வருந்துவதறிந்து இக் குமரநாயகனை யசு
ரப்படை தடியும்படி விடுத்தாய்! அவ்வாறே யவுணராவாரை வீட்டி. நே
ற்றுச் சயந்தன்முதலிய தேவரையும் சிறையினின்றும் விடுவித்தனே. முடிவில்
லாத இரக்கத்துடன் எவ்வகையாருயிரையுமளித்த இமய முதல்வியுட னெழு
ந்தருளி இங்கே எங்களுக்குத் தரிசனம் பாலித்தீரென்றால் எங்கள் செயல்
சிறப்படைந்தது போலுமென்று சொல்ல, அதைக்கேட்ட பரம்பரன்
இன்று நன்றாக மகிழ்வடைந்து நாமு மித்திருமணக்கோலங் காண்பதற்கே
யுமையோடு மிங்கே எழுந்தருளினோம்! இனிச் செயத்தக்க காரியங்களைச்
செய்யவேண்டுமென்றான். பாமனும் இந்திரனைநோக்கி வேதமுறையால் முத்
துக்குமரப்பெருமான் திருமணஞ்செய்தருளத் தெய்வயானையாரை இங்கே
யழைத்துக்கொண்டு வரவேண்டுமென்றான். அத்தருணத்தில் அதற் கிசை
வுகொண்டு மாதர்களிருக்குமிட மணைந்து எங்களையெல்லாங் காத்தருளும்
அம்மே வருகவென் றழைத்தான். தெய்வயானையாரும் புறப்பட்டு சேடியர்
கள் புடைசூழ வன்னம்போல நடந்து யாவருமகிழத் திருமகளு நாமகளு
மேத்த [illegible] முத்துக்குமரப்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருமணச்
சாலையை யடைந்தான். உலகமுழுது மீன்ற முதல்வியாகிய உமை யன்னை

யும்அத்தெய்வயானையாரைமுத்துக்குமாரப்பெருமானிருக்குமிடத்திருத்தி அவ்விருவரும்ஆதனத்திலிருந்தனர். அதைக்கண்ட தேவர் கோமானாகிய இந்திரன் அக்கோலங்கண்டு மகிழ்ந்து கைதொழுது மகிழ இந்திராணியும் மஞ்சனநீரு மற்ற வேண்டுமுபகரணங்களுங் கொண்டுவரமுத்துக்குமாரப்பெருமான்சீபாததாமரையை இந்திரன்பற்றி விளக்கி மணமலர்சூட்டிப் பூசனைசெய்து தெய்வயானையாரையும்அம்முத்துக்குமாரப்பெருமான்திருக்கரத்திட்டுத்தாரைவார்த்தளித்தான். அதைக்குமாரநாயகனேற்று அத்தெய்வயானையார் திருக்கழுத்தில் மங்கலநாண்சூட்டி மாலையையுமணிந்தான். அத்தருணத்தில் முப்பழம்கருப்பிரதம்செந்தேன் பசுவின்பால்இவற்றைஅப்பெருமான்நுகரும்படி இந்திரன்செய்வித்தனன்; அப்போதுமத்தளம்தக்கைவலம்புரிபேரிகைமுதலியவாத்தியங்களுமுழங்கின அக்குகப்பெருமானைத்தேவர்களும்வந்தனைசெய்தனர். குகப்பெருமானேதெய்வயானையார்கையைப்பற்றிஅக்கினியை வலம்வந்து அம்மியில் அன்னையின்காலைவைத்து அருந்ததியைக்கண்டு எல்லாவுலகங்கட்குமுதல்வராகிய அம்மையையும்அப்பனையுமபணிந்துநின்றனன். அம்மையுமப்பனும்குகனையும்குஞ்சரியையும்அன்போடணைத்தருள்செய்துமுருகனைநோக்கி இனிஉனக்கெம்முதன்மையையளித்தோமென்றருளிச்செய்ய, அத்திருமணச்சாலையிலிருந்தபிரமன்மாலிந்திரன்முதலியதேவருமபிறரும்யாவரும்அப்பெருமான் மலரடி வணங்கினர். பின்பு முத்துக்குமரப பெருமானும் தெய்வயானையாரும் தமது திருமாளிகையைநோக்கிப பற்பல மங்களவாத்திய முழங்க வெழுந்தருளினர். பிரமன்மாலறியாப் பெற்றியோனாகிய சிவபெருமானும் உலகன்னையும் திருக்கயிலையையடைந்தனர். பின்குமரநாயகனும் குஞ்சரியும் எழுந்தருளி இன்பநுகர்ந்துஇனித்திருக்கஇந்திரன் தன்பரிசனருடன்தன்னிருக்கையையடைந்து முசுகுந்தமகாராசன்முதலிய அரசர்களுக்குக் காமதேனுவின் பயனையளித்து ஆடையாபரண மணிப்பூண்முதலன வளித்து அவரவர் தஞ்சேனைக் கடலுடன்செல்லக் கட்டளையிட, அவர்களும் விடைபெற்று நாலவகையாகிய சேனைக்கடல் புடைசூழத் தத்தம் நாட்டிற்குச் சென்றனர். இந்திரனே அவர்களையெல்லாம் தத்தநாட்டிற் கனுப்பிவிட்டுத் தன்மகள் குமரநாயனோ டெழுந்தருளியபின் இந்திராணியுடன் பெரும்போக மனுபவித்திருந்தனன். இவ்வாறு சிலநாள்கழிந்தன; இதுநிற்க.

தெய்வயானைத் திருமணப்படலம்.

முற்றிற்று.

விண்குடியேற்றுப்படலம்.

குமரநாயகனே இந்திரன் குறைநீங்க வெண்ணங் கொண்டெழுந்தருள இலக்கத்தொன்பதின்மரும் பூதவீரரும் தெய்வநாயகியாரையும் குகப்பெருமானையும் வணங்கிநின்றனர். பூதவீரர் இளையபிள்ளையாரெழுந்தருள்வதுகண்டாரவாரித்ததுகேட்டுப் பிரமன்மாலிந்திரன்முதலிய தேவர்களும் முற்றத்துறந்த

முனிவர்களும்யாவரும்விரைந்துசென்றனர். அப்பெருமானைவணங்கிநிற்கவாயு தேவனும்வணங்கிநின்றான். அவனைநோக்கிநமதுதேரைநடத்துவேண்டுமென்று கட்டளையிட அவனுமனோவேகத்தினும் விரைந்துசெல்லும் அத்தேரைக்கொண்டுவந்துநிறுத்த அதன்மேலெழுந்தருளினான். அத்தேரின்மேல்தெய்வநாயகியாருடன்குகப்பெருமான் கவுரியுங்கண்ணுதற்பெருமான்போலு மெழுந்தருளியதுகண்டு தேவர்களும் மலர்மாரிபெய்தனர். தன்னைத்தேவர்களெல்லாம் ஒவ்வொருவராகவந்து சேவடியில்வீழ அவர்கள் முடிமேல் தன்செய்யவடிமலர் சூட்டிப் பின்னர்ப் பிரமன்மாலிந்திரன்முதலிய தேவர்களை நோக்கி நீங்களும் உங்கள் வாகனங்கள் மேலேறிவாருங்கோளென்று கட்டளையிட, நான்முகன் அன்னத்தின்மேலும் கள்ளமாமாயப்பிரான் கருடன்மேலும் இந்திரன் ஐராவதத்தின்மேலும் மற்றதேவர்களு முழுதொருங்குணர்ந்த முனிவர்களும் தத்தமூர்திகள்மேலு மேறிச்சென்றனர். நமது பெருமான் இந்திரலோகத்தைநாடிச் செல்கின்றானென் றுணர்ந்துகொண்டு பாரிடவீரரனைவரும் குடமுழா புள்ளாங்குழல்கொக்கரைமத்தளமுதலியவாத்தியங்களைமுழக்கினார்கள். பின்பு பிள்ளையாரோஇந்திரலோகத்தை நாடி ஒருகணத்திற்றிருப்பரங்குன்றத்தினின்றும்அமராவதியையணைந்தான். அந்நகரமோசூரபதுமனாலேவப்பட்டபானுகோபனாலழிந்ததென இந்திரன் கொண்ட கருத்தையறிந்து அச்செல்வமிழந்து கிடக்கின்ற அவ்வமராவதியைமறுபடியும் புதுப்பிக்கநினைந்து தெய்வத்தச்சன் வரக் கருதினான். அப்பெருமான் எண்ணியவெண்ணமறிந்த தெய்வத்தச்சன் விரைவில்வந்து வணங்கி அவ்வமராவதி முன்போலிருக்க மனத்தானிருமித்து மீண்டும்அம்மாநகரமுடிந்ததைத்தெரிவித்தான். அந்நகரைக்கண்டதைஇந்திரன் கண்டுஅத்தெய்வத்தச்சனை மார்போடிறுகத்தழுவிக்கொண்டுனக்குநிகராவாரியாரென்று புகழ்ந்தான். குகப்பெருமானோ தன்னைவணங்குகின்றதெய்வத்தச்சனுக்குக் கண்ணருள்செய்து கணங்களோடு மெழுந்தருளினான். இந்திரனோ அரம்பையரோடு மொருபொன்னாலாகிய விமானத்தில் ஏறி இந்திராணி மாளிகை நாடிவந்தான். குகப்பெருமானோஅவ்வமராவதியின்கடைப்புறஞ்செல்லப் பிரமன்மால்முதலிய தேவர்களும் தத்தம் விமானத்தைவிட்டிழிந்தனர். அதன்பின்னர்இளையபிள்ளையாரோ தன்னைத் தேவர்களெல்லாஞ்சூழ்ந்துவரத் தெய்வயானையாருடன் தன்தேரைவிட்டிழிந்து சுதர்மமென்னும் பேரவை நாடிவந்தான். அவ்வாறு அங்கே யெழுந்தருளித் தேவர்களை நோக்கி நீங்கள் இந்நகரினுக்கரசனாக இந்திரனைமுடிசூட்டுங்கோளென்று கட்டளையிட, தேவர்களும் அதற்குரிய பொருள்களையெல்லாஞ்சேகரித்து அவ்விந்திரனை முடிசூட்டினர். நமது சண்முகங்கொண்ட முத்துக்குமரப்பெருமானும் இந்திரனருகேயணைந்து நீ இன்றுபோல் அரசாண்டிருவென்று கட்டளையிட்டான். இவ்வாறு இந்திரனுக் கருள்செய்து மற்றதேவர்களையும் அவரவர் இருக்கைக் கனுப்பிவிட்டுத்தான் தெய்வகுஞ்சரியாருடனே தம்மிருக்கையடைந்தனன். இலக்கத்தொன்பதின்மரும் பூதவீரரும் அங்ஙனமே குகப்பெருமா னிருக்கையையடைந்துஅத்திருவாயிலைக் காவல்கொண்டிருந்தனர். இவ்வாறுமுத்துக்குமரப் பெருமான் எழுந்தருளியிருக்கையில் பிரமனுமாலும் முறையே சத்தியலோக

மும் வைகுந்தவளாமெடைந்து இன்பமார்ந்தனர். பின்னர்த் தேவர்சேனாதிபதியாகியமுத்துக்குமரப்பெருமானேனுவீரவாகுதேவர்தமதுதேனைச்செலுத்த மற்றவீரரும்பூதரும் புடைசூழ்ந்துவரக் கயிலைவெற்பையடைந்து தேனைவிட்டிழிந்து முக்கட்பெருமான் முளரியடிதொழுதுவணங்கி விடைபெற்றுக் கந்தவெற்பையணுகி இலக்கத்தொன்பதின்மரும் பூதவீரரும் தம்பணியினிற்பத் தெய்வகுஞ்சரியோடு மணிப்பீடத்தி லெழுந்தருளினன்.

தூயதோர் மறைகளாலுந் துதித்திடற்கரிய செவ்வேள்
செய்யபேரடிகள் வாழ்க சேவலுமயிலும் வாழ்க
வெய்யசூர் மார்பகீண்ட வேற்படைவாழ்க வன்னன்
பொய்யில்சீ ரடியார்வாழ்க வாழ்கவிப்புவன மெல்லாம்.

விண்குடியேற்றுப்படலம்

முற்றிற்று.

இந்திரபுரிப்படலம்.

காசினி வியந்தகு கந்த வெற்பினைத்
தேசுடை முருகவேள் சேர்ந்த செய்கையைப்
பேசினனிங்கினிப் பிறங்கு பொன்னகர்
வாசவ னியற்கையு மற்றுங் கூறுகேன்.

அவுணர் பூண்டறக் களைகளைந்தெறிந்த வெற்றி வேலாயுதமேந்திய முருகப்பெருமான் பூரணகடாட்சத்தினால் அரசுரிமையைப்பெற்று முப்பத்துமுக்கோடிதேவர்கள் எல்லாப் பணிவிடைகளையுஞ்செய்து போற்றிவரவும் நாற்பத்தெண்ணாயிரம் முனிவர் ஆசிகளைச்சொல்லித் துதித்து நெருங்கியிருக்கவும் கின்னரர் கிம்புருடர் சித்தர் வித்தியாதரர் மங்களங்கள் பாடியேத்தவும் சகலசாத்திரபண்டிதனும் திரிகாலவர்த்தமானங்களை உள்ளங்கை நெல்லிக்கனியேபோல் உணரவல்ல மெய்யுணர்ச்சியைப் பெற்றுக் குலகுருவாகவிருக்கின்ற பிருகற்பதி அருகிலிருக்கின்ற ஆதனத்தில் வீற்றிருந்து மந்திராலோசனைகளைச்சொல்லிவரவும் அரம்பை ஊர்வசி திலோத்தமை மேனகைமுதலாகிய அரமகளிர் அபிநயங்களைக் காட்டிச் சதிமுறையிற் பாதங்களிற்கட்டியிருக்கின்ற சிலம்புகள் கலகலவென்றொலிக்கப் பெயர்த்துப்பெயர்த்து வைத்து மயிலையொப்பப் பரதநாட்டியவியல்பின்படித் தும் குயில்கள்நாணும்படிசிரவணானந்தமாகப்பாடவும் கின்னர காந்தருவர் தேவயாழ்களைமீட்டி மதுரமாகிய கீர்த்தனங்களை வாசிக்கவும் அமரர்பலர் பயபத்தியுடன் அருகிலிருந்து வெண்சாமரைகளைவீசவும் அருகுகளைப்பிடிக்கவும் ஆலவட்டம்வீசவும் கட்டியக்காரர் எச்சரிக்கைசொல்லவும் பட்டுவர்புகழவும் மற்ற அரசச்சிறப்புகளனைத்தும் குறைவறநடந்துவருகையில் தேவதுந்துமிமுதலியவாத்தியங்கள் தாம்தாமென முழங்க நவரத்தினகசிதமாகவிளங்கும் காம்புகளினுச்சியில் வெண்பட்டிலு

லும் ஆணிமுத்துகளினாலும் அலங்கரித்திருக்கின்ற பூச்சக்கரதவளக்குடைகளை இருபக்கங்களினும் சந்திர சூரியரையொப்பக் கவிக்கவும் அவற்றின் கீழ்ப்புறத்தில் நவரத்தினமயமாக அலங்கரித்து விளங்குகின்ற சிங்காதனத்திலெழுந்தருளி மும்மையுலகத்தும் தன் ஆணைகளைச்செலுத்திப் பாதுகாத்து அரசுசெலுத்திவரும் இந்திரன் ஒருநாள் சபையில் மனத்தின்மிக்க துயரமெழுந்தமையால் இதனை நினைக்கலாயினன். மும்மையுலகத்துக்குமிறைவனாக வாழ்ந்திருக்கின்ற யான் பகைவராகவிருக்கின்ற சூரபதுமனுக் கடிமைப்பட்டு அவன்கட்டளைக் கடங்கித் தகாதனவாகிய மிக்க கொடுந்தொழில்களை வெகுகாலஞ்செய்து அளவற்ற யுகங்களைக்கழித்தேனே! இதனிடையிற் பாதகராகிய அவுணரால நேர்ந்தவருத்தங்களையும் இடையூறுகளையுஞ்சொல்லி முடியுமோ! பிள்ளையொருபக்கம், மனைவியொருபக்கம், நானொருபக்கமாயிருந்தோதுங்கிப்படாதபாடுகளையனுபவித்தேன், அவற்றை இக்காலத்தில நினைப்பினும மனமநடுங்குகின்றதே; ஐயையோ! இவ்வகையான துன்பங்களிற்பட்டவர்க ளொருவருமிருக்கமாட்டார்களெனப் பலபலவெண்ணியெண்ணித் துன்பமிக்க மனமுடையானாய்த் தன்செல்வத்தை வெறுத்துக்கொண்டு இந்திராணியின பொற்கலசங்களையொத்த கொங்கைகளை யிறுகப்புல்லியணையும் சுகத்தையுமறந்துகயேந்திரச்செல்வ வளங்களையுஞ்சற்றும்மதியாமல் அரசுசெலுத்துவதையுமிகழ்ந்து எக்காலத்தும் சலனமில்லாமல் நன்னெறிகளை யடைவிக்கும சிறந்ததவங்களைச்செய்து சிவபெருமானது பரிபூரணகடாட்சம்பெற்று நித்தியமாகிய மோட்சசாம்பிராச்சியத்தையடைந்து பேரானந்த மனுபவித்திருப்பதே யொழிய வேறுநலமொன்றில்லையென்றே மதித்து அவ்வாறே துறவறத்தை மேற்கொண்டு வனத்திற்போய்த் தவங்களைச்செய்யத் துணிவுகொண்ட இருந்தனன்; இப்படி இந்திரன் உத்தேசித்த துணிவை ஆசிரியனாகவும் மந்திரியாகவும புரோகிதனாகவும் தலைவனாகவுமிருந்து தேவர்கள் சவுக்கியங்களுக்குவேண்டும உதவிகளைத்தேடிக் காத்துவரும் பிருகற்பதி தெரிந்தமாந்திரத்தில் விடுக்கிற மோசநோந்தது; இவன்கொண்ட கருத்தின்படி வெளிப்படுவானாயின் தெய்வலோகத்துச் காசனில்லாமல் தலைவிரிகோலமாய் அலைந்துபகைவருக்கிடமுண்டாய்விடும்; ஆகலால் இனித்தாமதப்படாமல் இதற்கொரு நிவாரணத்தைத் தேடவேண்டுமென்றேகருதி ஒருதந்திரத்தை மனத்தினிற்றீர்மானித்துக் கொண்டவனாய் இந்திரனுக்கருகில் நெருங்கி இதனைப் பேசத்தொடங்கினன்.

மலைகளைச் சிறகைக்கணடித்து உலகங்களை வருத்தமின்றிக் காத்துவரும் வச்சிரதானாகிய இந்திரனேகேள்!' சிவகாருண்ணியம் நடுவுநிலைமைசற்கருமங்கள்முதலிய நன்னெறிகளெவ்வளவு மற்ற கொடியபாதகனாகி விருந்து கொடுங்கோல் செலுத்திவந்த சூரபதுமனாலடைந்த துயரத்தையும் அபகீர்த்தியையும் பெரிதாகவெண்ணி நூறு அசுவமேதங்களையுங் குறைவறச்செய்து முடித்தபயனாற் சிவபெருமான் கடாட்சித்திருக்கின்ற சிறப்பையுடைய இவ்வரசுரிமையையும் மும்மையுலகையு மாண்டுவரும் சாம்பிராச்சியங்களையும் வெறுத்து ஏதோசில வெண்ணங்களைக்கொண் டிருக்கின்றனைபோற் காணுகின்றதே; ஐயையோ! உன்னறிவினையென்ன சொல்லுவேன்! இவ்வகையாகிய

பெருவாழ்வை நீங்கி இனிமேன் முக்கியமாகிய தவ விரதங்களைச்செய்து நீ பெறவிருக்கும் பயன் இன்னதெனத் தோன்றவில்லை, வெய்யில் குளிர் பனி இவற்றினாலும் பலபல இடையூறுகளினாலும் அல்லலடைந்து தேகமும் மனமும் வருந்திச்சிறந்தநோன்புகளைச் செய்தவரன்றோ மேம்பாடாகப் புகழவல்ல இப்பெருவாழ்வைப் பெற்றுக்களிப்பர்; இஃது உன்னளவேயன்று, மதித்துப் பார்க்குமிடத்தில் இம்மும்மையுலகங்களினுஞ்சாதாரணமாகநடந்துவரு மியற்கையாகும்; பலதுன்பங்கள்பொறுத்துஇடைவிடாது அருந்தவஞ்செய்துவரும் பேற்றினைவாய்ந்த முனிவர்களினும் சிவபூசனைமுதலிய நற்கருமங்களை நெஞ்சொருமைப் படநடாத்திவந்த மகிமையினாற் பொன்னுலகவாழ்வைப்பெற்றுத் தேவரெனப் புகழக்களித்திருக்கின்ற சொர்க்கவாசிகளினும்கடல்புடைசூழ்ந்த காசினியிலிருக்கின்றபுண்ணியசிலர்களினும் பாதலவெல்லையில்வாழுமனந்தன் முதலிய நாகராசர்களினும் சிருட்டி திதி சங்காரமென்னும் முத்தொழில்களை நடாத்திவரும் மகிமையையுடைய மும்மைப் பெருந்தேவரினும் பொற்பிதிர்வைப்போல அழகிய தேமல்பரந்து தங்கக்கலசத்தையொப்பப் பூரித்து விம்மித்ததும்பி நீலரத்தினத்துண்டத்தினும் சுந்தரமுள்ள மணிக்காம்புகளைப் பெற்றிருக்கின்ற கொங்கைகளைப்படைத்து மிக்க அழகுருவாய்க்கப் பெற்றுக் கலாபமயிலேபோன்ற சாயலையும் அன்னமேபோலு மெல்லியநடையினையும் கிள்ளையையும் குயிலையும் யாழினோசையும்பழித்துத் தேவாமுதத்தினும் மதுரமாகக்கொஞ்சி வார்த்தையாடும் தருணமங்கையரைக்கலந்து பேரானந்தம் பெறச்செய்யவல்லஇன்பரசங்கைத்துநீங்கியிருப்பவர்களொருவருண்டோ? முற்பகல் மனமொருமித்துச்செய்த தீயகருமங்களுக்குத் தக்க தண்டனைகளைச் சிவபெருமான் கட்டளையின்படி யனுபவித்துச் சூரியன்முன் பனிப்படலமேபோற் கழிந்துவிட்ட காரியங்களை யிகழ்ச்சியாகநினைந்து கவலையிற்பட்டுழலு மனத்தனாய் அரிதிற் கிடைத்திருக்கின்ற இச்சிறந்த பெருஞ்செல்வத்தை யூனமென்றெண்ணித் துறந்துவருந்தியனாய்த் தனிமையிற்றவங்களைச்செய்துழலுங்காலத்தில் நீ பெறவிருக்கின்ற கொடியவருத்தங்களுக்கொரு அளவையுமுண்டோ; கோடைகாலத்திற்றோற்றுங் கானல் நீரைக்கடக்கவழியாதுபயமிகுதிகொண்டு வாடுகின்றவன் ஆழ்கடலில் விழுந்து நிலைபெறாமலலைந்து வாடநினைக்கக்கூடுமோ? ஊனுறக்கமின்றிப் பனி வெயில குளிர் மழைமுதலிய கொடுமையிற்பட்சரீரம் வாடிவருந்திச் சத்தம் பரிசம் உருவம் இரதம் கந்தமெனச் சொலப்படுகின்ற பஞ்சேந்திரியவிடயங்களில் ஐம்புலன்கள் மீறிச் செல்லவொட்டாமலடக்கிக் காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மாற்சரியமென்னும் அறுபகையினைப்போக்கிச் சித்தத்தைசிவன்பால்வைத்து யோகசாதனைகளைச் செய்யவல்ல மகத்துக்கள் பெறும்பயனை மும்மையுலகாளும் செல்வத்தைப்பெற்றிருக்கும் சதமகனே நினைக்குமிடத்திற் போகமல்லது வேறுமுண்டோ; என்சொல்லைக் கடைப்பிடியாக நம்பு, இஃதல்லாமலும் பொறிபுலன்களையடக்கிஅவைகளைப்போக்கிச் செய்கைகளழிந்துவினைக்கீடாகிய தேகவாதனையை நீக்கி நித்தியபதத்தைத்தரவல்ல பேரின்பவீடொன்றிருக்கின்ற தென்றுஞ்சிலர் சொல்லுவர். அதனைக்கண்டவர்கள் காட்டவல்லரோ; இம்மை

யிலே உள்ளங்கைநெல்லிக்கனிபோலக்கண்கூடாகவே அனுபவிக்கும்போகங்களையே உண்மையாக உலகமானது சாதாரணமாய்க் கூறிக்கொள்ள விரும்புகின்றது. ஆதலாற் பொய்மையாகிய கானலை மதுரமிகுந்த தெளிவுள்ள நீரென்றேகருதி அதிலிச்சைகொண்டு கையி லகப்பட்டிருக்கின்ற சிறந்த வமுதத்தைக் கமரிற்கவிழ்த்துவிட்டு மோசம்போவாரையொத்துச் சிலர் நித்தியமெனச் சொல்லும் வீடுபேற்றைப்பெற நினைந்து இம்மையிற்கண்ட பலனைக் கிடைத்திருக்கின்ற பயனை யிழந்துபோம்படி சம்மதித்திருக்கின்ற உன்னெண்ணம் மிகநேத்தியாக விருக்கின்றது. தேவராசனே தன்மனத்துக்கினிய சுந்தரமுள்ள மடந்தையரை அதிசதூளிகாசயனத்திற் சரசசல்லாபங்களினாற் சுரதலீலைகளைச் செய்து பெறும்பேரின்பமே மோட்சசாதனமாம். அவர்களுடன்கலந்து வாழ்வதே இல்வாழ்க்கையாம்; கடைநொடிபாவனைகளிற் குறைவின்றிக்கற்புத்தன்மையைப் பெற்றிருக்கின்ற கன்னிகையொருத்தி கிடைக்கப்பெறுதலேசெல்வங்களிற்சிறந்ததாம், அவ்வகைத்தருண மங்கையர் தங்கக்கலசத்தையொத்தவனப்புள்ள கொங்கைகள் மார்பிலிறுகக்கட்டி யணைத்து இன்பநலம் பெறுதலையினும் மிகக் கொடிய தரித்திரம் வேறுமுண்டோ; மறுவற்ற சோடசகலைகளை வாய்ந்த பூரணசந்திரோதயத்தைப் பழித்துவிளங்கும் அழகியமுகமலர்களைப் படைத்த மடமங்கையர் புணர்ச்சியைச்சிலர் சிற்றின்பமென்றே பேசி யிகழ்கின்றனர். அதன்சிறப்புத்தெரிந்தால் அதைப் பேரின்பமாகவேயெண்ணி, எப்போதும் பிரியாதாராய்க் கூடியிருப்பர். மேற்குறித்தமேம்பட்டவின்பம்முன்னைநாளிற்செய்த தவப்பேற்றினாற்கிடைக்கவல்லதல்லதுகிடைத்தகாலத்து, இலேசாகப்பெறவும்போகுமோ, மேகவாகனனே! அதன் பெருமிதங்களைச் செவ்வையாகக்கேட்க மனமிருக்குமாயின் சொல்லவல்லேனென்று தனக்கரணாகவிருக்கின்ற ஆசிரியன் குறித்தவாக்கியங்களைச் செவிகளுக்கமுததாரையைப் போற்கேட்டவுடன் வச்சிராயுதபாணியாகிய இந்திரனுக்குச் சரீரம் பூரித்து நகைமுகமுடையானாய் ஓமக்கனலிற்பட்ட வெண்ணெயைப்போல மனங்கரைந்து காமக்கவலையின் முயற்சிகொண்டவனாய்க் குலகுருவைச் சேவித்து மனக்கவலையைப்போக்கி நற்காட்சியைப்பெறச்செய்யத்தேவாமுதத்தைப்போல் அருகிலிடைவிடாமலிருக்கின்ற குருநாதனே தேவரீர்கருணையால் இப்போது போதித்தமங்கையர் சிறப்புகளையும் குணாதிசயங்களையும் பேரானந்தத்தைத் தரும் இன்பநலத்தையும் அடியேனுக்கிதுகாறும் தெருட்டாமலிருந்த காரணமென்னோ வெனத் தேகமுழுதும் விழிகளைப்படைத்திருக்கின்ற சிற்றறிவையுடைய மகவான் வினவியபோது இவன் மனத்திற்கொண்டிருந்த கருத்தழிந்து மருண்டு மோகவாதனையி லகப்பட்டுக்கொண்டானெனத் தெரிந்துகொண்டானாய் வேதாகமபுராணசாத்திர வகைகளைப் பூரணமாகப் படித்து அவற்றின் நிச்சயங்களைத் தெரிந்திருக்கின்ற பண்டிதனாகிய பிருகற்பதி மும்மையுலகத்துக்கு மரசனைப்பார்த்து அரசனே! நீவீடுபேற்றை எளிதிற்றரும் சிறப்பையுடைய மங்கையர் பெருமிதங்களையும் அவர்களாற்பெறவிருக்கின்ற இன்பநலத்தையும் தெரிக்கும் மதனசாத்திரத்தின்விச்சபப்பொருள்களையும் மேம்பட்டதாகச் சிந்தித்தறியும் ஆசைப்பெரு

க்கே யில்லாதபருவத்தில் மேலையோராகவிருப்பவர் போதிக்கமாட்டார்கள். அவ்வாறே ஐயனே! உனக்கிந்நாள்வரையில் அனுக்கிரகஞ் செய்யாமற் றாழ்த்தேன், இதுதருணமாகத்தெரிந்தமையால் சந்திரனைக்குடையாகப் படைத்திருக்கின்ற மன்மதன் சாத்திரமாகிய கடலை விசாலமாகியகூரியவறிவால் அளந்து ஆராய்ந்து நிச்சயித்திருக்கும் உண்மைகளனைத்தையும் சொல்லுவேன். பாராமுகமின்றி மனத்தையும் செவிகளையு மொருமித்துக்கேள்; முன்னாளில் இந்நூலைத் திருக்கயிலாயமலையைக் காவல்கொண்டிருக்கும் பெருமையினையுடைய நந்திபெருமான் கணக்கிறந்த விரிவாயருளினான். சிலகாலத்திற்குப் பின்பு மேலையோரதை நூற்றெட்டுச் சாகைகளாகக்குறுக்கினர். இக்காலத்திற் பத்துப்பிரகரணங்களாக ஏற்படுத்தி யிருக்கின்றது. பூர்வாசிரியர்கள் இதற்குரிய சமையங்கள் அறுவகையாகப் பிரித்தனர். அவைகளில் அமுதத்தினுமினிய இன்பத்தை யனுபவிக்க விருக்கின்ற ஆன்மாக்களுக்கு இம்மையில் அளவுபடாத போகத்தைப்பெற்றுக் களித்தலே முத்தியெனப்பேசுகின்ற உலோகாயதமெனச் சொல்லப்படுகின்ற சமையத்துக்குரிய சரித்திரங்களை விசாரணைசெய்து அம்மார்க்கத்தை யனுசரித்துச் சுகாதீதப் பேற்றையடைந்து வாழ்பவரே புருடராவார், அவ்வகையான சிறந்தமுத்தியின் நலங்களைத் தரவல்லவர் வேலையொத்த கூரியவிழிகளைப் படைத்திருக்கின்ற மங்கையரேயாகும். அவர்களாற் பெறுமின்ப சாதனங்களுக்கடுத்த கிரியைகளையும் அவைகளைக் கருவியாகக்கொண்டு கிரீடிப்பதற்கடுத்த தன்மைகளையும் பெறவல்ல ஆடவர் செய்கைமுதலியவற்றைச் சாத்திரோத்தமாகவே உனக்குப் போதிக்கின்றேன், அஃதென்னையெனின் மக்களுக்கடுத்தசாதி இயற்கை அங்கம், குணம், சத்துவம், தேசவியல்பு, புணர்ச்சிப்பருவம், இத்தன்மைகளைச் செவ்வையாகத்தேர்ந்து கருத்தில் அமைத்துக்கொண்டு நடப்பதாம். மேற்குறித்தகாரணங்கள் மதனுகமத்திற்சொல்லும் சிறந்தபொருள்களின் தொகையாகவிருக்கும். ஆயிரங்கண்ணனே இவைகளின் வரன்முறையை இனி விரித்துக்காட்டுவோம் பாராமுகமில்லாமற் கேட்டறிந்துகொள்; மாதர்சாதியிலக்கணமாவன பத்மினி சித்தினி சங்கினி அத்தினியென்னும் நாற்கூறாய் விளங்கும் அவற்றுள் ஆடவர் கணப்பிரிவுகளாவன முயல், இடபம், குதிரையெனப்படும், இவற்றுள் முற்குறித்திருக்கின்ற கணத்தின் குறியினளவையைக் குறிக்குமிடத்தில் நான்குமுதல் ஆறங்குலமாம், இரண்டாவது கணத்துக்கு ஏழுமுதல் ஒன்பதங்குலமாம், மூன்றாவது கணத்துக்குப் பத்துமுதல் பன்னிரண்டங்குலமாமென்று சொல்லப்படுகின்றது. இனி மங்கையர்களுக்குரிய கணப்பிரிவுகளைக்கேள். மான், பெண்குதிரை, பெண்யானையெனப்படும். இம்மூன்று மரபுக்குரிய குறியினுழைப்பிரமாணமும் மேற்படி ஆடவருக்குச் சொல்லியுள்ள கணிதங்களைக்கொண்டிருக்கும். இவற்றுள் ஆண்பெண்குறியினளவைப் பிரமாணம் சரிப்படச்சேர்ந் தின்பத்தைப்பெறுவது இயற்கைப் புணர்ச்சியெனப்படும். பேதித்திருப்பவை மாறுபட்டகல்வியாகமுடியும், கன்னியர் அங்கமாவன தேவர், மக்கள், நாகர், இயக்கர், காந்தருவர், பைசாசம், அசுரர் கார்த்தபம் எனப்படும். மேற்குறித்திருக்கின்ற இப்பிரிவுகளை சிதா

னமாயறிந்து வாத பித்த சிலேட்டுமமெனச் சொல்லப்படுகின்ற மும்மைத் திறங்களுக்குரிய குணம், குறி, பருவங்களையாய்ந்தறிந்துகொண்டபின்பு கன்னியரைப்புணர்வது இசைக்கலவியாம். இஃதல்லாமலும் உருவம் வண்ணம் செயற்கை நாள்முதலியவற்றைச் சீர்தூக்கிப்பார்த்துக் கன்னியர்மரபுமுதல் குணவரையில் கவனித்துத் தெரிந்தணைவது சிறப்புக்கூடலெனப்படும்; வானத்தில்நின்று மேகங்கள் ஏககாலத்திற்பெய்யுமாயினும் நிலங்களின் குணத்தின்படி மதுரம்,உவர்ப்பாக நீர் திருந்துமாறுவதுபோலவே தேசங்கடோறுமுள்ள மங்கையர்கள் நீதி உள்ளம் செய்கையாதிய குணவகைகளைப்பகுத்தறிந்தணைவது தேசவியற்கைப்புணர்ச்சியெனப்படும். இவைகளன்றியும் பாலை தருணை இரவுளை விருத்தையென்னும் பருவங்களுக்கடுத்த காலநியதிகளையும் சித்தவியல்பையும் மகிழ்ச்சிக்கிரமங்களையும் பிரிந்தறிந்துகலத்தலே அங்கமெனப்படும். மேற்குறித்த முக்குணங்களையும் மும்மரபையும் நான்குசாதிகளையு மற்றஎண்வகைச்சத்துவங்களையும்பெற்றிருக்கும் கன்னியர்பருவங்களையாய்ந்து காலத்தைத்தெரிந்து சேர்தலே காலபருவமெனப்படும். பட்சங்கடோறும் தினமுறையாக மங்கையர்தேகத்திற் பொருந்தியிருக்கும் அமுதநிலையிழிந்தும் ஏறியும்வரும், அதுநின்றநிலையைக் குற்றமறநாடி இருவர் உடலும் மனமு மொன்றுபட்டு மகிழுக்கலத்தலே புணர்ச்சியிற் றலைமையாகப்பேசப்படும், அன்புள்ளவர் இல்லாதவர் குறியளவையொத்தவர் ஒவ்வாதவர் கூடாவொழுக்கமுடையவர். இவ்வகையான காரணங்களைப் பெற்றிருப்பவரைக் குணங்குறிகளினாற் பகுத்தறிந்துகொண்டபின் மங்கையரைத்தழுவி இன்பநலத்தைப்பெற்றனுபவித்தல், இந்நூலைப் பூரணமாகக் கற்றறிந்த மேலையோருக்கழகு மாண்மையுமாம். இதுகாறும் ஆடவர்மகளிரியற்கை குணநிசயங்களைப் பகுத்ததாகும். இனி சுரதலீலைகளினால் அவ்விருதிறத்தவரும் கலந்தின்புறுதலும் அதற்கு நடத்தவேண்டும்முயற்சிகளாதியாகச்சொல்லுவோம், அவை ஆலிங்கனம் சும்பனம நகக்குறி பற்குறி குட்டல் தட்டல் புள்ளொலி கரணபேதமுதலிய செய்கைகளாம். அவைகளை விரித்துக்காட்டுவோம்; இருவகைக்குறிகளில் ஒன்றுக்கொன்று உயர்ந்தும், சமமாகவும், தாழ்ந்துமிருப்பது உச்சம் சமம் நீசமெனப்படும், அவற்றினைக்குறித்தறிந்து ஐவகைக்காரணங்கள், அவற்றினுட்பேதமாகியசத்தப்பிரகாரணங்களினாலும் அவைகளுக்குரிய புறத்தொழில்களினாலும் களிப்பித்து மங்கையரைப் புணரக்கலந்தின்புறுதலே மதனசாத்திரோத்தப்புணர்ச்சியாம். இஃதல்லாமலு மகளிர் ஆடவரை மேலிட்டுக்கலத்தல் உபரிசுரதமெனப்படும்; இதேனுமன்றி எண்வகை ஆலிங்கனபேதமுண்டு, அவை கற்பகத்தருவைச்சுற்றிப்படரும் காமர்வல்லிக்கொடிபோலவும்மரத்தினிடத்திலேறுமாறுபோலும் எள்ளும் அரிசியுங் கலந்து காட்டுவதுபோலும் பாலும் நீரும் பொருந்தியிருப்பதுபோலும் தொடைகளுடன் தொடைகள் நெருங்குதலும் இருகுறிகள் சேர்ந்தொன்றவும் கொங்கைகள் மார்பிலழுந்தவும் நெற்றியுடன்நெற்றி பொருந்தவும் கரங்களினால் தேகங்களைக்கட்டித் தழுவிக்களித்தலாம், மேலும் எண்வகைச்சும்பனங்களுண்டு; அவற்றினைச்செய்யுந் தானங்களேதெனின் நேத்திரத்தானம்

கபோலத்தானம் கொங்கையினிடம் கரங்களின்மூலம் நிதம்பத்தானம் அதரத்தானம் உந்தியினிடம் எனப்படும். இவையல்லாமல் நகக்குறியிடுமிடம் பதினொன்றுண்டு; அவைகளேதெனில் கைம்மூலம் மார்பு தோள் பிடர் கழுத்து விலாப்புறம் கபோலம் கொங்கை அல்குல் வாய் தொடை இத்தலங்களாம். மேலுந் தந்தக்குறி ஐந்துண்டு, அவை மூடிகம் அனுசூகம் பிரவாள மணிபந்து மணிவித்துமாலை கோரசாவிதம் என்பனவாம். இக்குறிகள் சும்பனத்துக்குரிய தானங்களில்மேல் அதரம் நா விழி இம்மூன்றிடங்கள் நீங்கலாக மற்றையதலங்களில் அழுத்தவேண்டும். தாடனவகை எட்டுண்டு, அவையாவையெனிற் கரங்களில்விளங்கும் விரலினைக்குவித்துத் தட்டல்குட்டல் அகங்கையினுற்றட்டல் கரத்தினைப் பிடித்தமாக்கிக்கொண்டு மெல்ல மெல்லக்குத்தல் ஆள்காட்டிவிரலினு லூன்றல், அவ்விரலினுலும் நடுவிரலினுலும் நெருக்கல், அவ்விருவிரல்களையுமடக்கிப் பற்றுக்குறடுபோலப்பிடித்தல்- ஆள்காட்டிவிரலைக்கொண்டு துழவலாம். இத்தொழில்களைச்செய்யுந் தானங்களாவன கொங்கைகளின்மத்தி உச்சி நெற்றி கன்னம் சகனம் முதுகு பிடர் தொடை எனப்படும். இவைதன்றியு மர்த்தனம் அறுவகையாகும், அவை கரிகரம்-காமாயுதம், காமௌஷதம்மதனங்குசம், மன்மதபதாகை, தோத்திரம் என்பனவாம். இதுவுமல்லாமல் புள்ளொலி ஏழுண்டு; அவை மயில் புறா அன்னம் காடை வண்டு குயில் கோழி செம்போத்து என்பனவாம். இவற்றுள் தலைவன் சுரதலீலையின் பிரகரணப்படி இரண்டு தேகங்களுமொன்றுபடக் கட்டியணையுங்காலத்திற் புணர்ச்சிக்களிப்பினுற் றலைவியினதுகண்டத்தினின்றெழும் ஒலியினைச் சீக்காரமெனச் சொல்லப்படும்மேற்குறித்த காரணங்களனைத்துக்கும் ஆதாரசத்தியாக நின்று நடிப்பிக்கவல்ல பஞ்சகரணங்களுண்டு. அவை உத்தானிகம் திரியக்கு ஆசிதகம் ஷிதகம் ஆன்மில மெனப்படும். இவைகளின் பேதங்கள் கிராமியம் புவுத்திகம் நாகபாசம் நாகரீகம் இந்திராணிகம் கூனம் இதமாயதம் ஊர்த்தம் சங்கிராணிகம் மாண்டுகம் பாரிசம் பீடிதம் சூலம் சுரும்பிதம் பதுமபீடம் பார்சம்புடம் வெட்டிதம் விசம்பிதம் உற்புல்லம் பிண்டிதம் கடிபீடிதம் பிரோதுகை அனுபாதம் பண்டதம் கடகம் அத்தம் பதுமாசனம் சமூர்த்தம் நண்டகம் அளிதம் வேணுசாரிதம் சமவேசனம் ஆடவும் உத்தானசம்புடம் பரிவத்வம் சங்காடகம் தேனு மாகடம் ஐம்பதம் சானுகூர்ப்பாந்துகிலம் பீனமாத்திரம் கூர்ப்பன்னம் பீடிதொருகம் பீதம் பீடிகை விக்கிரமம் எகோயூக்கம் இந்நாற்பத்தெட்டுமாம். இவையன்றிப் பலகாரணங்களினுலும் பரிமளமிகுத்த கூந்தலையுடைய மாதர்புளகிக்குமாறுசுரத்நூல்வல்லோர்கள்கிரீடிக்கு முறைகளனைத்தும் சித்திரகரண மெனப்படும். மடந்தையருடைய பாவமு நிலையும் அவைகளின் திறங்களுஞ்சேரும் பதக்கிரமமேம்பாட்டையும் சீர்தூக்கிப்பார்த்தறிந்தறியவல்ல ஆடவராயினும் கற்புடையமடந்தையரன்றிக்காமுகராகவிருக்கும் வாலிபரைமயக்கும்வேலையொத்த கூரியவிழிகளையுடைய பரத்தையர் காமக்கன்னியர். இத்தன்மையர்களைப் புணர்தலும் கலவித்திறங்களைத் தேர்ந்தின்புற்று மகிழ்தலும் மதனுகமத்தை வரையறக்கற்றறிந்த மேலையோர்கள் கட

னும். இவ்வொப்பற்ற நூலை வான்முறையாக ஆராய்ந்து சோதனைகளினாற் சங்கையறத்தெளிந்து தருணமடந்தையரைத் தழுவவல்ல குணமுடையார் பெறுகின்ற வின்பமுத்தியை ஒருவரால்கணித்துச் சொல்லவும்போதுமோ வென்று மேற்குறித்ததொகை வகைவிரிவாக மதனுகமமுறைக ளனைத்தையும் உள்ளங்கை நெல்லிக்கனியைப்போல் மனத்திலுணர்ந்துகொள்ளப் பிருகற்பதி போதித்தவுடன் இந்திரன் அக்காரணகாரியங்களை நன்றாகத்தெரிந்து மடந்தையரைச் சுரதலீலைகளினாற் றழுவி இன்பநலம்பெற்றுக் களிக்கும் காமக்கலையில்மனத்தைச் செலுத்தியவுடன் சிங்காதனத்தை விட்டுத்திடுக்கென்றெழுந்து ஆசிரியன் பாதாரவிந்தங்களிற் பணிந்து ஐயனே! அடியேன்பாற்கிருபையாய்த் தெருட்டிய மதனுகமப் பிரகரணங்க ளனைத்தையும் வேதமொழிகளாக நிச்சயித்துக்கொண்டேன்; இனி மற்றொருபொருளினிடத்தினு மிச்சை வைத்துக் கழியேன், அளவுபடாத வின்பநலத்தைப்பெற்றுக் கிருதார்த்தனானேனென்று மனவெழுச்சியுடன் குரவனை மீட்டும்வணங்கிச் செலவுபெற்றுக்கொண்டானாய்ப் பொன்னுலகாதிபத்தியத்தைச் செங்கோன்மைமுறைப்படி அரசுசெலுத்திவருவதாகத் தன்றிருக்குமாரனாகிய சயந்தனிடத்தொப்பித்துக் குளிர்ந்த சோடசகலைகளைவாய்ந்த சந்திரவிம்பத்தைப்பொப்ப விளங்கும் முகாரவிந்தத்தையுடைய இந்திராணி வாசஞ்செய்யும் அந்தப்புரத்தைச் சேர்ந்து நினைத்தற்கரிய போகங்களை அவள்பாற்றுய்த்துமனங்களித்துத்திருப்பாற்கடலினிடத்தேதோன்றிய அமுதத்தை யிதுகாறுமினிதென்றிருந்தேன், அது இக்காலத்தில் பயனற்றதாகக் காணுகின்றதென்றே வெறுத்து எல்லாவாபரணங்களையுமணிந்தசசியின் சிவந்தவிதழூறலாகிய அமுதம் மிகவும் மதுரமாக விருக்கின்றதெனக் களித்துண்ணேன், வெள்ளியங்கிரியைப்போலத் தாவள்ளியமாகப்பருத்ததேகத்தைப்பெற்றுநவரத்தினமயமாகிய பூண்களணிந்து கூர்மையாகவிருக்கின்ற நாற்கோட்டினாற் பகைவர்களை யதஞ்செய்யவல்ல வலிபெற்ற அயிராவதத்தையுமறந்து முத்துமாலைகள் மோகனமாலைகள்புரளும் இந்திராணி பருத்தோங்கிய கொங்கைக்குவடாகிய களிற்றின்மீது இடைவிடாதவன்புடன் ஆலிங்கனஞ்செய்து தேகம்பரவசனாய்க்களித்து தேவர்கள்முதலிய யாவரையும் வெல்லத்தக்க வலிபெற்றிருந்த விருத்திராசுரன்மேற் போர்க்குச்செல்கையில் ஆரோகணித்திருந்த இந்திரபட்டத்துக்குரிய இரதத்தைத்துறந்து அதனினுஞ்சிறந்ததாய் மின்னற்கொடியைப்போல் தோற்றி மறைந்தசையும் மெல்லியவிடையையுடைய இந்திராணி அல்குற்றேரினிடத் தின்பமும் பிரியாமல் வசித்தின்புற்றும் கருங்கடல்சூழ்ந்த பூமண்டலம் நடுநடுங்கித் தத்தளிக்கத் தக்கதாக முழங்கும் இடியைவெறுத்துப் பகைவர்கள் ஆருயிரைவாட்டியலைக்கும்கணையைப்போல ஆகரணாந்தபரியந்தமோடிச் சேற்கண்டைக்கொப்பாகப் பிறழ்ந்திருக்கும் விழிகளைப்படைத்த அம்மாதின் வல்லிசாதக்கொடியினும் சிறுத்தவிடையாகிய மின்னற்கொடியி னிடத்தின் புற்றுக்கொண்டாடுவன், தவங்களிற்சிறந்த ததீசிமகாமுனிவன் முதுகுத் தண்டெலும்பினாற் செய்யப்பட்டு மலைகளின்சிறகையரிந்து பகைவர்களுக்கு வயிரியாகவிருக்கின்ற வச்சிராயுதத்தைக் கரத்திற்கொள்ளவெட்கி யெறிந்துபோட்

டுக் கலாபமஞ்ஞையையும்பழித்த சாயலையுடைய இந்திராணி கண்களாகிய
வேற்படைக்காற்றாமற் சோர்ந்து பிராணனைத்தாங்கிக் குலாவியும் மேகத்தி
னிடத்துநின்றொன்றும் இந்திரவில்லைமறந்துதிருமகளைப்போன்ற சுந்தரவதியாகிய
நாயகியினது புருவமாகியவில்லைகளைமதித்து வெற்றியனைத்துமே தாவலலமென்
றெண்ணிப் புகழ்வான். தனக்குரியவாகனமாகிய மேகங்களைப்பழிகூறி யியற்
கையாகிய மணமமைந்த கற்பகமலர்களைச் சூடிக்கொண்டிருக்கும்இந்திராணி
கரிய கூந்தலென்கின்ற புயல் கலவிப் போரிற்சோர்ந்தலைவதைச் சேர்த்
துக் கோதிவாரிமுடித்துப் பூச்செருகிக்களிப்பான்; பஞ்சதருக்களினிடத்தில்
துவண்டசைகின்ற காமவல்லிக்கொடியைச் சினங்கொண்டு கனதனங்களைத்
தாங்கப் பொறாமல்வாடிவருந்தும் இடையின் வருத்தத்துக் காற்றமாட்டாதவ
ளைக் கிலேசித்துத்தழுவி மனச்செருக்கைப்பெற்றும் பஞ்சணைமெத்தை
யினும் பட்டுப்பஞ்சிக்கையினும் அன்னத்தூவிகளிற் புனைந்த மெத்தைவிரித்திரு
க்கும் பொன்மஞ்சத்தின்மேலும் மதனுகாமவிதிப்படி சும்பனம் தாடனம் புட்
குரல் நகக்குறி ஆலிங்கனமுதலிய லீலைகளைச்செய்து களித்துவருங்காலத்திற்
சகலவிதமான ஆபரணமுதலியவைகளைத் திருத்தியும் பூந்துகிலையுடுத்தும்
அளகத்தைமுடித்தும் புதியநறுங் கற்பகமலர்களைச் சாத்தியும் அடிக்கடி இத
ழூறலாகிய அமுதையருந்தி யிளைப்பாறியும் காதளவோடியிருக்குங் கண்களுக்
கஞ்சனமெழுதியும் அனிச்சமலரினு மெல்லியபாதங்களுக்குச் செம்பஞ்சுக்
குழம்பினூட்டிச் சித்திரங்களெழுதியும் புதியபட்டாடைகளையுடுத்து மாற்றியும்
மலர்கள்பரப்பிய போர்வையைச் சாத்தியும் இவ்வகையாக இந்திரன் இந்திரா
ணியினிடத்தில்முழுமனத்தையுஞ்செலுத்தினனாகையாற்கிடைத்தற்கரியபரம
பதம் இலேசாகப்பெறுவதினும் கைப்பாகவெண்ணத்தக்க கருத்தைக்கொ
ண்டு மதனநூலிலக்கணங்களைநாடிக் காமவின்பலத்தையே சிறந்ததாக மதி
த்துப் பலநாள் இடைவிடாமல் இந்திராணியைக் கலந்தனுபவித்திருந்தான்.
அத்தருணத்தில் மாறிமாறிமோதும் அலைகள்மிகுந்த கடலைப்போல ஆசைப்
பெருக்கினாழ்ந்தணைந்துகளிக்கும் இன்பநூலை இந்திரனுக்குப்போதித்து அவன்
கொண்டிருந்த மனவுறுதியைக் கலக்கி மாறுபடச்செய்து மங்கையர் புணர்ச்சி
யிற் கவலைபெற நாட்டியனுப்பி மனவெழுச்சியுடனிருக்கும் பிருகற்பதி அருகி
லிருந்துபோதிக்கும நீதிகளின் உதவியைக்கொண்டு சயந்தன் இந்திரபட்டத்
துக்குரிய வயிரமுடியைச்சூடிந்து செங்கோலோச்சி முப்பத்துமுக்கோடி தே
வர்கள் நாற்பத்தெண்ணாயிர முனிவர் கருடர் கந்தருவர் சித்தர் வித்தியாதரர்
முதலிய விண்ணுடர் இந்திரசபையில் நெருங்கித்துதித்து வாழ்த்தத் தக்கதா
ய்க் கோடிசூரியரொருமுனையிற் றோன்றினாற்போல் விளங்கிக்கொண்டிருக்கும்
அரியணையில்வீற்றிருந்து மும்மையுலகத்துக்குரிய அரசாட்சியைச் செலுத்தி
வந்த இந்திரன்குமாரனாகிய சயந்தன் தன்னைச் சூழ்ந்திருக்கின்ற அகத்தியர்
முதலிய முற்றத்துறந்த முனிவர்களுக்கும் கின்னரர் கிம்புருடர் கருடர் கந்
தருவர் சித்தர்வித்தியாதரர்களாகிய முப்பத்துமுக்கோடி தேவர்களுக்கும்
முன்னே எழுந்தருளியிருக்கின்ற தன்னுடைய ஆசிரியனாகிய பிருகற்பதியைப்
பார்த்து வணங்கி எம்பெருமானே! அரிப்பிரமேந்திராதி தேவர்களும் அள

வில்லாத தவசிகளும் மற்றையமுநியோர்களும் மிகுந்த வலிமைபொருந்தி யுள்ள சூரபதுமனாற் கொடியதுன்பத்தை யனுபவித்து, தங்களுக்குத் தொன்றுதொட்டு நீடித்துவந்த பெருமையுமிழந்து வருந்தவேண்டிய காரணமென்ன, அதனை எனக்கு நன்றாகத்தெரியச்சொல்லவேண்டும், எங்கள் குலகுருவாகிய பிருகற்பதி பகவானே யென்றுசொல்ல அதனைக்கேட்ட பிருகற்பதி சொல்லுகின்றனர். சயந்தமகாராசனே! தேவர்களுக்கும் மேன்மையாகிய தவத்தையுடைய முனிவர்களுக்கும் கொடியவனாகிய சூரபதுமனால் நேரிட்ட துன்பங்களெல்லாம் திரிபுரதகனராகிய பரமசிவனை யொழித்துத் தக்கன்செய்த யாகத்திற்போய் அவனுக்குத் துணைசெய்திருந்ததீமையினாலும் போலும் என்றுசொல்ல, அதனைக்கேட்ட சயந்தன் இப்படி பரமசிவனையன்றிச் செய்த யாகத்திற்சேர்ந்திருந்த தீமையினால் இவ்வகைத்துன்பங்களை யனுபவித்திருந்தார்க ளென்றான் அக்கொடியசெய்கையையுடையவனாகிய தக்கன் புராந்தகனாகியபரமசிவனையொழித்துச்செய்த யாகத்தின்வரலாறும் அங்குநடந்த மற்றசெய்திகளையும் ஒன்றேனும்விடாமல் அடியேனுக்குத் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று சொல்லப் பிருகற்பதிமிகுந்தசந்தோடத்தையடைந்து சயந்தனைமிகுதியாக வாழ்த்தி அப்பா இந்திரகுமாரனே ! மிகுந்த அலங்காரத்தினால் பிரமபுத்திரனாகியதக்கன் செய்தயாகத்தின் வரலாறனைத்தும் எம்மாற்சொல்லக்கேட்க வேண்டுமென்று இனியவார்த்தைகளினாற் சயந்தனுக்குப் பிருகற்பதி சொல்லலாயினன்.

இந்திரபுரிப்படலம்

முற்றிற்று.

தேவகாண்டம்முற்றுப்பெற்றது.

உ

வேலுமயிலுந்துணை.

ஆறாவது

தட்சகாண்டம்.

உபதேசப்படலம்.

மாயையின்வலியோடாணவமான்முதலோனைவென்றே
யாயிரத்தோரெட்டண்டமரசுசெய்துகநூற்றெட்டுங்
காயமதழிவின்றிக்கடவுளர்க்கலக்கண்செய்த
தீயசூர்முதலைச்செற்றகுமரன்றாள்சென்னிவைப்பாம்.

உலகங்களிற்சிறந்து கோடிசூரியப்பிரகாசமாகவிளங்கும்பிரமலோகத்தில் தவத்தரும் தேவர்குமாரவருக்கங்களுஞ்சூழப் பொன்மயமாகவிளங்குஞ் சபா மண்டபத்தின்முகப்பில் இரத்தினமயமாயோங்கியசிங்காதனத்திற்பிரமன்வீற்றிருந்தான். அதுபோது அவன்மக்களிலொருவனாகியதக்கன் தன்பிதாவைநோக்கி மும்மைப்பெருந்தேவரினுயர்ந்து தேவாதிதேவனாய்ச் சகலமங்களகுணங்களு முள்ளவனாய் வந்தனை யோக்கியனாய்விளங்கிப்பிறப்பிறப்பில்லாதானாய்ச்சராசரங்களனைத்தினும் பொருந்தி ஆட்டவல்ல மூலகாரணனைத்தெரிவிக்கவேண்டு மென்றான். அவனைநோக்கிப்பிரமன்நகைத்துகுமாரனே, விண்டுவும்யானும் முன்னாளில் அஞ்ஞானவலையிற்பட்டுநாமேபிரமமென்றகந்தைகொண்டு பங்கத்து அதனைத்தாபிக்கமுயன்று அளவில்லாத காலம்பொருதோம். அக்காலத்தில் உலகமடையும் துயரினைத் திருவுளத்தடைத்து அக்கினிவடிவாய் எங்கள்நடு விற்றோன்றிப் பரத்துவ நிச்சயத்தைத்தெரிவித்து அடியோங்கள் மையலை யகற்றிக் காத்த பரமபிதாவாகிய பரமசிவன் யாவருக்கும் ஆதியாயும், மூல காரணனாயும், விளங்கப்படுகிறான். 'இதைத்திடமாகக்கொள் ளென்றருளக் கேட்ட தக்கன் மீண்டும் பிதாவைக்குறித்து நீர் அறிவித்த துண்மையே யாயினும், முதன்மையாகிய சிருட்டி-திதி கிருத்தியங்களை நடத்திவருகின்ற நீங்கள் தாழக்கடைப்பட்ட தாமதகுணத்தினாற் சராசரப்பிரபஞ்சங்களனைத் தையும் முடிவிற் சங்கரிக்கும் பரமசிவன் உங்களுக்குக்கர்த்தனாகிய காரண மென்னை? அதை அடியேனுக்குத் தெரிவிக்கவேண்டுமென்று வினவினான். அதற்குப் புன்முறுவல்பூத்துகுமாரனே! நீ வேதசாத்திரங்களைப் பூரணமாகக் கற்றும் பரத்துவநிச்சயமறியாமல் மயங்கினை! சங்காரகிருத்தியத்தை நடத்தும்

பரமசிவன் முதன்மையாகுந் தன்மையாதெனின், என்னையும் கேசவனை யும் மற்றதேவருடன் எண்பத்துநான்கிலக்கந் ஜீவபேதங்களையும் ஊழிகா லத்தினொடுக்குகின்றவன் அவனாதலான் முதலிற்சிருட்டிப்பவனும் அவனேயன் றோ, சர்வசங்காரகாலத்தி லொருவனாய்விளங்கி அண்டரண்ட சராசரங்களையு மழித்துப் பின்பு பிதாவாய்நின் றென்னைப்படைத்தபரமசிவத்தினது குணாதி சயங்களை இவ்வகையென் றளவிடப்படுமோ. மேலும் விண்டுவையும் என்னை யுந்தன் றோள்களிலுண்டாக்கி உலகங்களையளித்துக்காக்குந்தொழிலை அடி யோங்களுக்குக் கட்டளையிட்டு உங்களிடத்து நீக்கமின்றி வசிக்கின்றே மென்றருளினான். அவ்வாறே எங்கள் மூலமாக எறும்புமுதல்யானையீறாகக் கிடக்கும் எவ்வகையுயிர்களையுந் தோற்றுவித்துக் காப்பான். அவ்வான்மாக்க ளிடத்தினிலிருந்து ஆட்டுவதைப்போலவே எங்கள் மனத்தினும் அந்தரான்மா வாயிருந்து முறைவழுவின்றிப் பாதுகாத்துக்கண்ணினொளியேபோலவிளங்கு வானாயினொருகாலத்யாம அகந்தையுறுமவ்வமேனுங் கருணைசெய்தருளி அவ்வா ணவமலத்தை நீக்கிக்காக்குந் தயாநிதியாகிய பரமசிவன் தானொருகிர்த்திய கர்த்தாவையொத்து எங்களுடன்கலந்து மும்மைப்பெருந்தேவரி லொருவனு யும் விளங்குவான். அவ்வாறே எள்ளினெய்யைப்போலவும்மணியினொளியை யொத்தும் பூவின் மணத்தைப்போலுந் சலாகையிற் காந்தியை நிகர்த்தும் உலகங்களினைத்தினன்றும்பயப்படுவாவான். இதனையன்றி ஆதியில் வேதாக மங்களை உண்டுபண்ணி எங்களுக்குப் போதித்தவனுமவனே, இப்பேத வேதத் துணிவு. இவ்வகையான மங்கலகுணத்தினை அடியோங்களுடனொப்பாசப் பேசுவது அறிவின்மையாகும். எங்களிலொருவனுமானையவழியாது, இத ளோர்க்க நதிகளின் துணிவாகச் சந்தி வாமொழிவேமையிலேயருளிய தந்தையை வணங்கப் பரமசிவத்தினால் அருளிச்செய்யப்பட்ட வேதங்கள் பூதப்பெருப் பிராணிக ளனைத்தையும் பிரமமயமாய்ப் பேசுவதென்னை? இதனையுமறிந்து அடியேன் மனக்கவலையைநீக்கவேண்டுமென்றுதக்கன்கேட்கப் பிரமனருளிச்செய்வா னாயினான். யாவராலும் அறியவொண்ணாத அக்கடவுளின் பெருமையினைக் கேள். பரமசிவன் வெளியிட்ட வேதங்களின் துணிபாவன ஆதியின்றிவிளங் கும மூலகாரணனுக்குனாத்த வுண்மையினை மற்றவருக்கும் உரியனவாகப் பேசுவது முகமாகுமா, அவ்வாறே மற்றதேவராதிகளையும் அவற்றிற்குக்காரண மாகிய பஞ்சபூதங்களையுந்தருவது. அதற்குச் சில திருட்டாந்தங்காட்டு வோம். பிராமணனை பரம்பொருளென்பது போலாம். இதனால் தெளிந்துகொள்; அல்லாமலும் யாவராலுமான எவ்வெவை எவ்விடங்களில் நிற்கினும் மூலகாரணனாகிய பரமசிவனையே சேரும், அவ்வாறே வேதங்கள் துதிப்பதனை த்துஞ் சிவபிரானுக்கேற்கும், அதெப்படியெனில் நதிகளெவ்விடங்களி னுதித் தினுங் கடையிற் சமுத்திரத்திற் சேருந்தன்மையாமென்பாம். இனிப்பலபல சொல்லவேண்டுவதில்லை.வேதாகமங்களின் துணிபான பரமசிவன்எல்லாவுல கங்களையும் படைத்தும் காத்துஞ் சங்கரித்தும் மீளவுஞ் சிருட்டித்து அவை களுக்குரிய வினைப்போகங்களை நுகர்வித்தும் நடிப்பிக்கவல்ல கடவுளாயும், ஆதியந்தமில்லாததாயும், பெருஞ்சோதியாயும், அம்மையப்பனாயும், விச்சுவ

நாதனும், உருவமாயும், அருவமாயும், நின்மலனும், நிராமயனும், சுயம்பிரகாசனும், சர்வேந்தரியாமியாயும், நித்தியத்தைப்பெற்றவனுஞ், சித்தனுஞ், யாண்டும் பரிபூரணனும், இராசத தாமத சாத்துவிதமென்னு முக்குணங்களையுடையவனும், விராட்டுவடிவமாயும், ஏகனுஞ், சகலமங்கல குணநிசயனும், எங்கள் இருவராலும் தேடிக்காணபரியனும், பெண்ணுணவியென்றறியப்படாதானும், ஆன்மாக்கள் வேண்டிய வேண்டியாங்கு அருள்பவனுபு மிருப்பதல்லாமலும், எவ்வெவற்றிற்குங் காரணப்பொருளாயும் விளங்குவதை யாவருந்தேறச் சர்வசங்காரகாலத்தில் தன்னெற்றிமேலுள்ள ஒற்றைநாட்டத்தால் எம்போல்பவருடம்பைச்சுட்டபொடியையும் என்பினையும் அணிந்து நாலமேதகராயிருக்கின்றவனையுந் தன்சத்தியிலடக்கிப் புறம்பினின்றும் யாவர்செய்கையினு முட்படாமலிருப்பவனும் தன்மகிமைகளிவ்வகையென் றெவர்களினுலுங் காணவரிய பரமாயுஞ் சர்வகாரணகர்த்தாவாயுமிருப்பான், எவனே அவனே பரம்பொருளென யாவருமறிய முறையிடுகின்றன. இதல்லாமலும் அச்சுதனையும், மற்றபூதராதி பிரபஞ்சங்களையுஞ்சாம்பராக்கித் தானேதானய்நின்ற தற்பரமூர்த்தியாகிய அப்பரமசிவனுடைய பாதகமலங்களைத் தொழப்பெற்றவருக்கே முத்தியுண்டென்று சுருதிகள் கூறுமாயிற் பரத்துவமாவார்யாவர்? அப்பரமசிவனருளில்லாமற் சீவகோடிகள் சனனமரணமான துக்கசாகரத்தைக்கடந்து முத்தியெய்தப்பெறுமென்பது உருவமில்லாத வானத்தின்மேற்றோலையுரித்து உடுத்தற்கொக்குமென்று வேதங்களைசொல்லுமாயின், வேறுசான்றும்வேண்டுமோ. அவ்வேதங்கள் பரமசிவனைக்குறித்துப்புகழ்ந்தது அளவில்லனவாம், அதைவிரித்துச்சொல்லஎன்னுல் முடிவதுமன்று, நாளும்போதா. அப்பா! இவைகளை நீ முன்னமேதெளிந்திருந்தும் அவன்மாயையிலகப்பட்டு உழல்கின்றனை, அதனையொழிப்பதாக இன்னமுமொருறுதிசொல்லுவேன். சகல புவனங்களுக்கும் ஆதிநூலாய்விளங்கும் வேதாகமங்கள்சிவனைப்புகழ்ந்ததைப்போலஒருவாய்மையாவதுஎன்னையும் விண்டுவையும் மற்றவரையுந்துதித்ததுண்டோ? அப்படி எங்களைக்குறித்துச்சொல்லியது முகமனுமென்று ஆதியந்தங்களில் விளக்குகின்றன. மேலும் அவ்வேதங்களில் ஒருபாகம் பரமசிவன் பெருமைகளைப்பேசுதும்; மற்றபாகம் என்னையும் விண்டுவையும் மற்றதேவரையும் பலபொருள்களையும்பேசும். இதனைச் சோதிப்பையாயின் தெளிவுபெறக்காட்டும், சிவனைப்போலவே எங்களையும் பரத்துவமாகக்கருதிப்பூசிக்கின்ற கொடியோர் எக்காலத்து மீளாதநரகவேதனையில் அழுந்தித் தேறவறியாதுழல்வர். அக்கடவுளையும் எங்களையுஞ் சமமாகப்போற்றுவதனால் நம்மையுந் துக்கசாகரத்திற்படுத்துவர். புலியதளையாடையாயுடைய பரமசிவனுக்குத் தொண்டுசெய்யும்பத்தரை எங்களைப்பூசித்ததாகவேகருதி வேண்டும்வரங்களைத்தந்து மற்றையரைப் பகைவர்களாகப் பாவிப்போம். எங்களைப் பரமசிவனுடைய மாயையிற்பட்டு அலையும்பிராணிகளென்று அவ்வேதங்களின் நடுவிற்சொல்லும். இதற்குச்சான்றுவன யாங்களித்தொழிலினைப்பெறுவதாக மணிமிடற்றெம்பெருமானுடைய பாதகமலங்களையருச்சித்த சிவாலயங்களை அளவில்லனவுள. இதனாற் கண்டுகொள்.

அவன் அனுக்கிரகம்பெறாமல் முத்திபெற்றாரொருவருமிலர். அவன் கருணையைப்பெறாமல் வாழ்ந்த தேவரைக்காட்டவல்லமோ. அவன் அருட்டிறத்தைப்பெறுவானுயிற்கிடையாதபொருளொன்றுமில்லை;இதனையுண்மையாகவே சொல்லுவேன். அவனையன்றி வேறொரு கர்த்தனில்லை. ஆதலால் அவன் பாதகமலங்களிற் சரணமடைந்து வாழென்று பிதாமகன் போதித்தான், அதனல் தக்கன் ஐயம்நீங்கி முதன்மையாகிய முத்தியைப்பெறவிரும்பாமல் ஊழின்பாலாய்த்தவத்தைச்செய்து சிவானுக்கிரகத்தினல் விண்டுமுதலாகிய தேவரனைவருக்கு முதன்மையெய்தக்கருதிப் * பிதாவைவணங்கி தேவரீர் குறித்த பரமசிவத்தை மூலகாரணமென்றறிந்தேன்; இனி அவனைநோக்கித் தவங்களைச்செய்து இட்டகாமியங்களைப்பெறுவேன், அதற்குத்தகுதியாகிய இடமொன்றைக்காட்டி விடைதரவேண்டுமெனக்கேட்க, தாம் ஆதியில் மனத்தினுற் சிருட்டித்தமானதவாவியின்பெருமைகளைத்தெருட்டி அவ்விடஞ்சேர்ந்துதவத்தைச்செய்யென்றோதினன். அதுபோது தக்கன் தந்தைபிதாவைத்துதித்துப் பரமசிவத்தின்கருணைக்கடலே போற்குளிர்ந்த சலப்பெருக்கையும் பொற்றாமரைகளலர்ந்துவிசாலமாய் விளங்கும் மானதமடுவைக்கண்டு அதன்கரையை அடைந்து காற்றுமழை வெய்யில் பனி இவைகட்கு வருந்தாமல் தேக இச்சையை நீக்கிப் பரமசிவன்பாதகமலங்களையே இதயகமலத்தினிறுத்திச்சுவாசத்தையடக்கிச் சுழிமுனையிற் செலுத்தி மூலாக்கினியை எழுப்பிப் பஞ்சேந்திரிய விடயங்களை வாட்டிப் பத்தியென்னும் அபிடேகமாட்டி வயிராக்கியமென்னும் மலரைச்சூட்டி அறிவென்னுந் தூபத்தைக்காட்டி இவ்வகையானமானதபூசையினைச்செய்து பரிசுத்தனாய்த் தன்மனத்தை யொருவழிப்படுத்தி வேதாந்தத்திற்கும் அதற்கரிய கர்த்தன் திருநாமங்களை விதிப்படி துதித்துப் பதினாயிரம் ஆண்டுகள் அகோரதவஞ் செய்திருந்தான். அதைப் பரமசிவன் திருவுளத்தடைத்து பொன்மலை வெள்ளிக்குன்றின்மீது விளங்குவதுபோல் இடபவாகனத்தில் உமையொருபாகனாய் எழுந்தருளக்கண்டு பின் ஆனந்தக்கூத்தாடி விழிகளிலானந்த பாஷ்பம்பெருக இருவர் தேடற்கரிய பரம்பரன்பாதாரவிந்தங்களிற்சேவித்து வேதவாக்கியங்களினுற்றுதித்துக்கரங்களைச் சிரத்திற்கூப்பி நிற்கின்ற தக்கனிடத்துங் கிருபாநோக்கம் பாலித்து, உன்தவத்தைமெச்சினேம், வேண்டும் வரங்களைக் கேளென்றருளப் பிறவித்துயரத்தினை நீக்கும் மோட்ச சாம்பிராச்சியத்தை நினையாமல் ஊழின்வசப்பட்டுசுவாமி! மும்மையுலகங்களினும் என்னாணைசெல்லவுந் தேவரைவந்திப்பவர்அனைவரும் என்னைப்பணிந்துபோற்றவும் எம்மையல்லது மற்றதேவதைகளை மனத்தினுங் கருதாமலும் விண்டுமுதலானோர் அடியேன்கட்டளையில் அடங்கிநடக்கவும் மனத்துக்கினிய புதல்வனைப்பெறவும் அகண்ட சாம்பிராச்சியங்களை யடையவும் அழிவில்லாத நித்தியங்கிடைத்து எக்காலமுங் களித்திருக்கவுங் கருணைசெய்யவேண்டும், இதுவல்லாமலுஞ் சகலபுவனங்களையும் ஈன்று உமதிடப்பாகத்தமர்ந்த பராசத்தி என்பெண்ணாகவும் நீர்பிராமண வடிவாயெழுந்தருளித் திருக்கலியாணஞ் செய்யவும் வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய மகிழ்ந்து உன்கருத்தின்படி எண்ணந்தந்தோம், ஆனல் உன்மனம் நமதுமெய்ப்பத்தியில்

திரியுமாயின் நம்வரமுந் திரியுமென்றருளிச் சிதாகாசமாகிய கனகசபையில் நடிக்கும் சிவபெருமான் திருக்கயிலைக்கெழுந்தருளினார்.

பின்பு தக்கன் மகிழ்ச்சி சிறந்தவனாய்ப் பிதாவை நினைக்க அதனைப் பிரமனறிந்து தக்கன்வருந்தி நோற்றுப் பெற்றபேறு வெகுநேத்தியெனப் பெருமூச்செறிந்து நமதுகுமாரன் திரிபுராதிகளை நகைத்தெரித்த பரமசிவனைக் கருதப் போதித்துச் சனனசாகரத்தைக்கடந்து முத்தியினைப் பெறத்தக்கதாகத்தவஞ் செய்யவனுப்பினேம், அதைமறந்து அகந்தையினா லாணவமலத்துக்கேதுவான செல்வத்தையேபெற்றான்; ஐயோ? இனிச்செய்யவேண்டுவதென்னை? வேப்புக்கு அமுதத்தை வார்க்கினும் அதன் கைப்பறாதுபோலாயிற்று. நீலகண்டத்து நின்மலன் ஆதிதேவனென்றுணர்ந்தும் வருந்திநோற்றும் இவ்வுலகிலெக்காலமுந் தீராப் பழிபாதகத்துக்கேஏதுவானபேற்றையேவேண்டினான். ஆகையால் பிராரத்தவினைக்கீடாகத் தொடர்ந்துவருந்துன்பத்தை மகத்துக்களாலும்நீக்கவொண்ணாதென்பதை இதனளவிலுறுதியாகக் கண்டேமென்று அழலிலிட்டபட்ட மெழுகேபோலமனமுருகிவருந்தித்தன்மகன் பெற்றதவத்துக்கஞ்சித்துரிதமாக அன்னவாகனமேறி விருப்படைந்துநிற்கின்ற தக்கனெதிரில்எழுந்தருளிஆசீர்வதித்தான். அதையங்கீகரியாது பிதாமகனை நோக்கிநாமிருக்க இவ்விடத்தில் யோக்கியமான நகரமொன்றை விதிப்பாயென்ன உடனே தன்னகரினுமேலாகிய சிறப்பினைவாய்ந்து பொன்னுலகமுநாணும்படி வானளாவியமதிலும் மேருமலையையொத்த கோபுரங்களும்பெரும்புறக்கடலைநிகர்த்துச்சூழ்ந்தஅகழியையுஞ் சொர்ணமயமாய் இரத்தின காந்தியைவீசும் மாடமாளிகை மண்டபமுதலிய சகலவிதமான சிறப்புக்கள்வாய்ந்த பட்டணத்தை நிருமித்துத் தக்கமாபுரமென்று பெயரிட்டுத்தன்மகனுக்களிக்கையிட்டபின் அதன் சிறப்புக்களை நோக்கிக்களித்துப் பிதாவின் செய்கைக்குமெச்சினவனாய் உடனே தேவர்முதலானவரனைவரும் வருவதாக நினைக்க அவ்வாறே சத்தசாகரங்களும் பெருகினாற்போலச் சொர்க்கமர்த்திய பாதலத்தின்கணுள்ள யாவரும்வந்துவந்து நெருங்கிப்போற்றத்தவளக்குடை வெண்சாமரைமுதலாகியஇராசசின்னங்களைப்பலதாங்கிச் சூழ்ந்துவரச்சென்று நவரத்தினமயமாய் விளங்கியிருக்குஞ் சபாமண்டபமுகப்பிற் சிரோரத்தினங்களினால் அமைத்து விளங்குஞ் சிங்காதனத்தினமர்ந்து தோற்கருவி துளைக்கருவி நரப்புக்கருவி கஞ்சக்கருவி மிடற்றுக்கருவி எனப்படும் பஞ்சவாத்தியங்களு முழங்கத் தேவர்கள் கற்பகமலர்களையிறைத்துத்துதிக்கத் தபோதனர்வாழ்த்தத் தும்புருநாரதர்யாழிசைபாடக் கருடகந்தருவர் வீணைகள்வாசிக்க அரம்பைமேனகை ஊர்வசிமுதலாகிய தேவகன்னியர் சதிமுறையே அபிநயங்காட்டி நடிக்கக் கொலுவீற்றிருந்தான். அக்காலத்தில் இச்சந்தோடச் செய்தியை இராட்சதராசனுக்கறிவித்து இன்றுடனுன்கவலையைநீங்கிநன்மையினைப்பெறுவை, அதென்னவென்றால்தக்கனிந்திரனுக்கரசனானான். அவனைக்கண்டு உறவாடிக்கலந்திருப்பையாயின் உன்காரியங்கள் சிறப்பாகவேநடக்குமென்றான்; அவ்வசனங்களை அவன்செவிக்கமுதமாகக் கேட்டுக் களித்துப் புயங்கள் பூரித்து வானையளாவச் சந்தோடமேலிட்டுப் பொங்குவதைப்போல நகைத்துச் சரீரம்புளகித்து மயிர்க்குச்செறிய அவன்

கொண்ட களிப்பை இன்னவகைத்தென் றொருவராலுஞ் சொல்லிமுடியாது. உடனே மேருகிரிக்கருகிலிருக்குந் தன்பதியைவிட்டு இரதமேறி மதயானையை பொத்தவலியுடைய இராட்சதசேனைகள்பத்துவருக்கங்கள் புடைசூழத்தக்கபுரிக்குவந்து தக்கனைக்கண்டு நண்புகொண்டு துயராற்றிருந்தான், அத்தருணத்தே இந்திரன்முதலாகிய திசைக்காவலருஞ் சூரியன்முதலிய நவக்கிரகங்களும் வந்து நெருங்கிச் சேவித்துப்புகழ்ந்து புடையினிருந்தனர். அத்தினமுதல் யாவருந் துதிக்கப் பூச்சக்கரக்குடை நீழலினிருந்து தன்செங்கோலெங்குஞ் செல்லத்திரிபுவன சக்கிரேசனாக அரசுசெய்திருந்தான்.

சிலநாளைக்குப் பின்புகற்புக்கருந்ததியையொத்தும்வனப்பினிலக்குமியையிரதியைநிகர்த்தும் உடுக்கையைப் போன்ற யிடையினையும் அனம்போன்ற நடையினையும் மயிலையொத்த சாயலினையுங் குயிலைப்பழித்த சொல்லையும் பெற்று நற்குணநற்செய்கைகளைவாய்ந்தாளாய்ப் பிரமன்பாதத்தினுதித்தவேதவல்லியென்னுங் கன்னிகையை மணந்து புவனங்களனைத்தினுக்கும் நாயகியாக இந்திராணிமுதலிய தேவகன்னியர் வாழ்த்திவணங்கி இட்ட ஏவல்களைச்செய்ய வாழுகின்றபோது தக்கனவளிடத்திற் சேடன் சிரோரத்தினங்களை வெளியிட்டாற்போலும் ஆயிரம் பிள்ளைகளைப்பெற்று அவர்களுக்கு உபநயன முதலான சடங்குகளைமுடித்து வேதசாத்திரங்களைப் போதித்துப் பருவகாலத்தில்மக்களைப்பார்த்துநீங்கள்மானதமடுக்கரையிற்சென்றுபரமசிவனைக்கருதிச் சிறந்ததவங்களைச்செய்து சிவகோடிகளைப்படைக்கும் பேற்றையடைந்துவரக் கடவிரென்றருள அவர் பிதாவைவணங்கி விடைபெற்றுப்போய் மானததீர்த்தக்கரையிற் சிவத்தைத் தியானித்தரிய தவங்களைச்செய்துவருகையில் இதனை நாரதரறிந்து அவ்விடத்தினெழுந்தருளி அக்குமாரரைநோக்கி நீவிர்துக்கசாகரத்தழுந்தி இத்தன்மையாகிய அரியதவத்தை என்னபேற்றைவிரும்பி செய்கின்றீர்களென்றுகேட்க சுவாமி பிரபஞ்சங்களைச் சிருட்டிக்கவேண்டிப் பிதாவினனுக்கிரகப்படி பரமசிவத்தைக்கருதித் தவஞ்செய்கிறோ மென்றார்கள். அதைக்கேட்ட நாரதர் கரங்களைப்புடைத்து நகைத்து பிள்ளைகள் இச்சிறந்த நோன்பைச் செய்கின்ற நீங்கள்பெறவிரும்பிய பேறிதுதானோ வெகுநேர்த்தி! ஒப்புவமையில்லாதகர்த்தாவை வழிபட்டு மூவகைப்பாச நீக்கி மோட்சம்பெற விரும்பாது அஞ்ஞானத்துக்குக் காரணமாகிய படைப்பினிடத்து மனம்வைத்தீர், அரியதவங்களை முடிக்கின்றவன் பெறவேண்டுவதைக் கேளுங்கள், பிறப்புண்டானபோதே துக்கமுமுண்டு, அதனாலிறப்புண்டாகும், அதுவுங்களுக்கு நன்மையினைத்தருமோ; நீங்கள் விரும்பிய படைப்புத்தொழிலைநடத்தும் பிரமன் ஐந்துசிரங்களினொன்றைப் பரமன் கட்டளைப்படி யரிந்ததையும் அதுகாரணத்தினால் நிலைபெற்றிருக்கின்ற பழியையும் நீங்கள் கேள்விப்பட்டதில்லையோ; மேலுஞ் சராசரப்பிரபஞ்சங்களைச் சிருட்டிப்பதினாற்றானேபரமமென்றகந்தையுற்று அளவில் காலம் விண்டுவுடனெதிர்த்துச் சண்டைதொடுக்க உலகங்களுக்குண்டாகிய உபாதியைநீக்கப்பரமசிவன் திருவுளத்தடைத்துஅக்கினிவடிவாகி அவ்விருவர்மத்தியில் நிற்கவுந் தெளிவுபெறாமல் அன்னமுமேனமுமாய்த் தேடிக்காணாது அவனைவழிபட்டுக் கிருதார்த்தரான கதையினையுங்

கேட்டதில்லையோ, சிருட்டியினாற்பெறுவது வீண்பெருமையல்லது வேறொன்றுமில்லை. இது நல்லதெனத் தாமே பொன்விலங்கைப் பூட்டிக்கொள்ளத் துணிவார்களோ, இன்ப மெவ்வளவோ அதற்கிரட்டித் துன்பமுடனே நேருமென்று சாத்திரங்களிற் சொல்லப்படித்ததில்லையோ, ஆதலாற்றத்துவஞான மெய்துதற்குரிய நீங்கள் படைக்கத்தொடங்குவீராயிற் கொடிய துன்பக் கடலில் உண்மையாகவழுந்தி வருந்துவதல்லாமல் ஆதியாகிய பரமசிவனை மறந்து நாமே இறைவனென்றகங்கொண்டு தீவினைகளைச்செய்யவரும்.

இவையல்லாமலும், மாயையிற்பட்டுப் பேருணர்வை யிழப்பீர்கள், அரிய விரதங்களைச்செய்து மேலான மோட்சசாம்பிராச்சியத்தைப்பெற்றே இறைவனது பாதசேவையினைக்கிடைக்கப்பெற்றவர் அனேகருண்டு, அதல்லாலும் அப்பேற்றைவிரும்பி யுழன்றுகிடவாமல் வாடுகின்றவருமுண்டு, உலகவியல்புகளின்னுஞ்சிலவற்றையறிவிப்பேன்; அதென்னவென்றால், மாதாபிதா குரு தெய்வம் சுற்றம் நட்பினர்முதலியவர்களாகச் சிவனடியவரை நினைந்து அவர் பாதங்களையன்றிப் பற்றிலாதார்களாய்ச் சாத்துவிக குணத்தைப்பெற்றவராய் நல்லொழுக்கங்களைவாய்ந்தவராய் யாதொரு துன்பமேர்ந்த காலத்துந் தம்மைச் சரணடைந்தவரிடத்துப் பரிவாக அவர் துயரத்தை நீக்கிக்காக்கும் பேரறிவைப்பெற்றவராய்ப் பரமசிவனைப்பூசித்து எக்காலமுஞ் சுகத்திலிருப்பவராய் மிக்கசெல்வச் சிறப்பைப்பெற்றவராய்ச் சிலரிருப்பர், அவர்களே பரமசிவனைக்காணவல்லவர். ஆதலால் நீங்களும் அவர்களைப்போலவே அவாவை நீக்கி நல்வழிகளைப்போற்றி முத்தியைப்பெறக்கடவீர். அளவற்ற செல்வங்களைப்பெற்ற மகதகங்காரத்தினால் நல்லொழுக்கத்தைநீத்த தக்கன்பணித்தமை மறந்ததனைக் கடைப்பிடியாகக்கொண்டு ஈடேறுவீரென்று நாரதர்போதித்த நிலைமைகளைச் சாதுவாதப்பாட்சத்தைப்பெறும் பாக்கியத்தைவாய்ந்த பிள்ளைகள் ஆலோசித்து, முனிபுங்கவர் அருளியமார்க்கம் பேரின்பத்துக்குரியதென்று நிதானித்து அவர் திருவடிகளிற்சேவித்துப்போற்றித் தேவரீர் திருவுளப்படியே செய்யக்கடவோம், அதற்கடுத்த கிரியைகளையும்போதித்துக் காக்கவேண்டுமென்று இரக்கின்ற தக்கன்மக்களிடத்து இரக்கமெய்தி ஆசிர்வதித்துச் சிவபிரானது குறைநிசயங்களை வகுத்துக்காட்டிப் பதவியினைத்தருந் தவநிலைகளைத்தெருட்டி அவற்றிற்குரிய நடைகொடி பாவனைகளை மந்திரபூர்வகமாகப் போதித்துப் பழையவெண்ணங்களைப்போக்கித் தேவாதிதேவனைச் சிந்தித்து அரிய விரதங்களைச்செய்து அவன் சீபாதகமலநிழலைச் சேருமினென்றருளி நாரதர்மறைந்தனர். அதன்பின்னர், அக்குமாரர் அவர்குறித்தவாறே பஞ்சேந்திரியவிடயங்களைநிக்கிரகித்துக் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டைகூடலிவற்றைப்பயின்றபின்னர் மௌனிகளாய் அரியதவங்களைச்செய்து பரமசிவனதுபெருங்கருணையினால் முத்தியினைப்பெற்றனர். இப்பால் தக்கன் தன்பிள்ளைகள்செய்தி தெரியாமல்வருந்தி மெய்யுணர்ச்சியினை நாரதர்போதித்ததையும் அதனையுறுதியாகக்கொண்டு யோகசாதனைகளைச்செய்து முத்திபெற்றதையும் அறிந்துவாடினவனாய், மீட்டும் ஆயிரம்பிள்ளைகளைப்படைத்து அவர்களுக்குரிய கிரியைகளைமுடித்து வேதாகமங்களையுணர்த்தி, குமாரர்களே, நீங்கள்

மானதவாவிக்கரையைச்சேர்ந்து பரமசிவனைக் கருதித் தவங்களைச்செய்து சிருட்டிக்க வரங்களைப்பெற்றுவருவீரென்றனுப்ப, அவர்கள் விடைபெற்றுப் போய்மானதவாவிக்கரையிற் பரமசிவனைநினைந்து அரியதவங்களைச்செய்தனர். இச்செயல்களைநாரதர்அறிந்துவந்து தக்கன்புத்திரரைநோக்கி, நீங்கள்யார்?எப்பேற்றைநோக்கி இத்தன்மையாகிய தவங்களைச்செய்கின்றீர்களென்று வினவ, அவர்கள் ஐய! நாங்கள் தக்கன்மக்கள். அவனனுமதியினாற் பரமனைநோக்கித் தவங்களைச்செய்து சிருட்டிக்க வரம்பெற்றுப்போக வந்தனமென்றனர்.

அதனை நாரதர்கேட்டு புன்னகைசெய்துமக்காள்! ஆதியுமந்தமுமில்லாதவரும் பெருஞ்சோதியைச்சிந்தித்து இவ்வருந்தவங்களைச்செய்யத் தக்கபயனை நினைந்தீரன்று! நல்லொழுக்கத்துக்கு இழிவானபேற்றை யாவருமெண்ணினார்கள், சிறந்ததவஞ்செய்து மக்களையுஞ் செல்வத்தையு மடைகின்றீர், அதனால் மாயையுடனும் பிறவித்துயராகிய கடலையுங் கிடைக்கப்பெறுவீர், படைப்பிற்பெறும் பயனித்தியத்தைத் தரவறியாது; நீங்கள்கொண்டநிலை எத்தன்மைத்தெனின் மெய்ம்மாசுகழியத்திரிகின்றவன் தற்செயலாயொரு நன்னீர்த் தடாகத்தைச்சேர்ந்தும் அதிற்படிந்து சுத்திசெய்துகொள்ளாமற் கடைப்பட்ட சேற்றை வாரிப்பூசிக்கொண் டதனோடொக்கும். மேலும் நீங்கள் பெற்விரும்பிய படைப்புநிலைபெறுவதோ; பிறப்பிறப்புச் சுகதுக்கம் பிராணிகளுக்கிடைவிடாமல் தொடர்ந்துகொண்டிருக்கும் இதனைநன்றாக விசாரித்தீரல்லீர் இதனாற்கொடிதாய பிறவித்துன்பம் நீங்கவறியாது; ஞானமில்லார்சிந்தையுங் கன்னியர்பாற் காமுறாத புருடர்மனமும் கலவித்திறனில்லாத பாடலும் இவை பெறும்பயனினும் நீங்கள் யாதடையப்போகின்றீர்; ஆதலாலுமக்குப்போதித்தனுப்பிய தக்கன் மூலகாரணனான பரம்பரனைவழிபட்டு எவர்களுக்குங்கிடையாத பெருஞ்செல்வத்தைப்பெற்றும் இக்காலத்தில் அதைத்தந்த கடவுள் பாததாமரைகளைநினையாது செல்வச்செருக்கினாழ்ந்து மயங்கியிறுமாந்து மேல்வருந்தண்டனைகளை எவ்வளவுங் கருதாதிருக்கின்றனன். அவன் மக்களாதலால் நீவிரும் அதனையே துணிபாகக்கொண்டீர்; விடையவாதங்களைப் போக்கிமனத்தைத்தேற்றிச் சிவகதியிற்சேர்க்குஞ் சன்மார்க்கங்களைப் பிரித்துக்காட்டுங் குணநிசயங்களைப் பெற்றவனே ஞானதேசிகனென்னப்படும்.

இதுநிற்க; முன்னேயும் தமையன்மார் பிதாவாக்கியப்படி பாட்டனாகிய பிரமனைப்போலப் படைப்பைப்பெறவிரும்பி இத்தலத்தில் தவஞ்செய்திருந்தனர்; அத்தருணத்தில் யாமவ்விடம்வந்து அவர்களஞ்ஞானவறிவைப்போக்கி மேலாகிய நெறியைத்தெருட்டிச் சாயுச்சியபதம்பெறச்செய்தோம். இவற்றை நன்றாகச்சிந்தித்துப்பிழைக்கு நெறியைத்தேடிக்கொள்ளக்கடவீரெனச் சொல்லினர். அவ்வாறு சொல்லிய அவர் பாதங்களில் அப்பிள்ளைகள் வணங்கிப் போற்றி விவேகமில்லாத நாங்களீடேறக் கருணையால் ஞானாசாரியனாயெழுந்தருளினீர். ஆதலால் அடியேங்கள் முன்னவர்களுக்குப் போதித்தவாறே மேலானமோட்சநெறியையுணர்த்தி நாங்களும் ஈடேறத்தயைசெய்யவேண்டுமென்றிரந்தனர். அத்தக்கன் மக்களைப் பார்த்திரங்கி நற்குணங்களைப்பெற்ற

புண்ணியவான்களே! நுங்கருத்தின்படி காட்சிகளைத்தெருட்டும் வகைமையைப்பிறித்துப் பஞ்சேந்திரியவிடையங்களிற்சிக்கி மதிமயங்கி இன்பத்துன்பங்களின் முற்பட்டெழுன்று பாதகங்களிற்பட்டலையாது நீக்குவேன் பரம்பரனது திருவடிகளைக்கருதிப் பூசிப்பவர் நிலைமையைச் சரியைகிரியையோகம் ஞானமெனப்படும். இவற்றுண் ஞானபாதத்தினுக்குரியவர் பெறுவதுமுத்தியெனப்படும். அதன்மகிமையை யாவராலுமறியப்படா; இருவினையொப்புமலபரிபாக நேர்ந்து சத்திநிபாதஞ்சார்ந்து மருக்கேவணங்கும் அதைப்பெற்ற புண்ணியர்கள் இறைவன் ஆடியபாதமாகிய குஞ்சிதபாதத் தின்பசுகங்கிடைத்துப்பிறவிக்கடலைக்கடந்து சிந்தையுமொழியுஞ் செல்லாநிலைமைத்தாகிய அந்தமிலின்பத்தழிவிலா வீட்டையும்பெற் றெக்காலத்தும் ஆனந்தத்திலிருப்பர். ஆதலால் நீங்களும் அம்மார்க்கத்தை அனுட்டித்து யோகசாதனையினால் வீடடைவீரென்றருளி வேதாகமத்துணிபுகளை உபதேசித்து அவர்களையும் அந்நிலையிற்பொருத்தி நாரதர் தெய்வலோகமே நோக்கிப்போயினர். பின்பு அக்குமாரர்கள் ஏரேமனமாய்ச் சித்தத்தைச் சிவன்பால் நிறுத்தி அருந்தவங்களைச் செய்து அவனருளினாற் சாயுச்சியபதம்பெற்று இறைவனது பாததாமரை நிழலின் வீற்றிருந்தனர்.

இக்காரியங்களைத் தக்கனுணர்ந்து வடவனலைப்போலச் சினந்து விழிகளில் அனற்பொறிகள்சிதற மனம்வேகச் சரீரம்வியர்க்கப் பெருமூச்செறியுந்தோறும் புகைப்படலமெழ இக்கொடுமையாற் சூரியசந்திரர்முதலாகிய நவக்கிரகங்கள் நிலைபுரண்டோடச் சராசரப் பிரபஞ்சங்கள் மிகவும் வருந்திய பின்பு என்பிள்ளைகளை இவ்வாறு மோசஞ்செய்த நாரதனொரிடத்தி னிலையின்றிக் கலகங்களை விளைத்துழன்று அலையக்கடவனெனச்சபித்து இனிப் பெண்களைப்பெற்றுச் சிருட்டி மலகச்செய்வது கருதியென்றெண்ணி இருபத்தாறு குமாரத்திகளைப்படைத்துப் பிருகு மரீசி புலத்தியன் ஆங்கிரசன் புலகன் வசிட்டன் அத்திரிமுதலான தவத்தருக்களித்தான்; இவர்களிற்சுபுத்தி புத்தி சுரசை கிருதி துட்டை காயை கீர்த்தி பிரத்தை இலச்சை மேதா சுத்தி சாந்தை வபுவை இக்கன்னிமாரைத் தருமன்கலியாணஞ்செய்து பதினெழுபிள்ளைகளைப் பெற்றான்; பிருகு கியாதியைமணந்து விதாதா தாதாவென்னு மைந்தரையும் இலக்குமியையுந்தந்து அக்கன்னிகையை விண்டுவுக்களித்து அதன்பின்னே தவத்தினின்றான். மரீசி செம்பூதியைக்கூடி நான்குமாதர்களைப்பெற்றான். அவர்கள் மரபிற்பலருதித்தனர் புலத்தியன் நாரிசன்னதியைக்கலந்து அளவற்ற புத்திரரையீன்றான். ஆங்கிரசு ஸ்மிருதியைப்புணர்ந்து ஆங்கிரசன் பரதனென்னும் பிள்ளைகளையும் நான்குமாதர்களையும்பெற்றான். இவர்களால் அளவற்ற விருத்திகளுண்டாயினர்; புலகன் பரிசையைத்தழுவித்தந்தாத்திரேயனைத்தந்தான். அவனிடத்திற் கும்பனுதித்தான். வசிட்டன் ஊர்வசியைமணந்து ஏழுபிள்ளைகளையும் ஒருபெண்ணையுந்தந்தான் அத்திரி அனுசூயையைமணந்து சந்திரநேத்திரன் திங்கள்சனி சங்கதாவளனென்னும் பிள்ளைகளைப்பெற்று மேலும் இச்சுவாவென்பவளைமணந்துமூன்றுகுமாரரையும்பெற்றான்; கிருதுகமையைத்தோய்ந்து மூன்றுபிள்ளைகளைப்பெற்றான்; விதாதா சவையைக்கூடி மேனை

தரணியென்னும் பெண்களைப்பெற்றான். அவர்களில்மேனையை இமவான் திருக்கலியாணஞ்செய்தான். தரணியை மேருமணந்து மந்தரகிரியைப்பெற அவன் அருந்தவங்களைச்செய்து முக்கட்பெருமானாகிய சிவபிரானனுக்கிரகத்தினால் திருக்கயிலாயம்போலப் பரமசிவன் வதியப்பெற்றனன்; மேருபின்னும் வேலையென்பவளைப்பெற்றுச் சமுத்திரராசனுக்களிக்க அவளிடந்துச் சரவணியென்பவளையீன்று பிராசினருக்குத்தந்தான். அக்கன்னிக்குப் பத்துப்பிள்ளைகள் பிறந்தனர்; இவ்வகையாகப் புத்திரபவுத்திரர்களுதிக்க அவர்களாற்சிருட்டிவிருத்தியாகிவருகின்றகாலத்தில் தக்கன் மீண்டும இருபத்தேழு பெண்களைப் பெற்று அவர்கள் வனப்புக்குத் தகுதியாயிருக்குஞ் சோடசகலைகளையுடைய சந்திரனுக்கு வதுவைசெய்துகொடுத்துமருமகனைநோக்கி உன்றேவிமார் அனைவரையும் அபேதமாகவே தழுவிக்களித்திருப்பாயெனச்சொல்லி அனுப்ப, அவ்வாறே தினமொரு கன்னியைக்கலந்து சஞ்சரிக்கின்ற காலத்திற் கார்த்திகை உரோகணி மற்றவர்களினும் வனப்புடையர்களாதலால் அவரிடத்து மிக்க மையல்கொண்டு இடைவிடாது தழுவியும மற்றையவரை நினையாமலும் பாராமலுந்திரிய அதைக்கண்ட அக்கன்னியர் மனம்பொறாமற் கோபித்துவந்து பிதாவைக்கண்டு விழிகளில் நீர்பெருகத்துக்கித்துத் தங்கள்கொழுநன் செய்கையைச்சொல்லி முறையிட்டனர்.

அச்சொற்கள் செவிகளினிடத்திற் புகுந்தமாத்திரத்தில் தக்கனுக்கு மிக்ககோபந்தோன்றி விழிகள்சிவக்க மீசைதுடிக்கப் புருவநெற்றியின்மேலறச் சீறி நாங்கட்டளையிட்டதை யிகழ்ந்தகாரணத்தினால் நீஇன்றுமுதல் தினமொரு கலையாகக்குறைந்து மங்கிப்பலரும் இகழ்வருந்தக்கடவாயென்று சபிக்க அக்கொடுமைமேலிட் டொருவருக்கும் உதவியற்ற செல்வத்தைப்பெற்றவன் புகழைப்போலச்சந்திரனது கலைகள்தினமொன்றாகப் பதினைந்துவரையிற்றேய்ந்து இவன்தான் திங்களாக வேண்டுமோவென்றையுற்று அனைவருங்காண வொளி மழுங்கி ஒருகலைமாத்திரமிருக்கச் சந்திரன்வருந்தி வாடித்திகைத்துவிட்டு இனி இதற்கென்னசெய்வோமென்று எண்ணாதுமெண்ணி ஏங்கினவனாய்க் கடையில் இந்திரனிடத்துக்கோடி நண்பனே என்துயரத்தை யென்னென்று முறையிடப்போகிறேன் ஊரிலொருவனோ தோழனென்று உலகோர் சொலவிக்கொள்வதைக்கருதி உன்னையடைந்தேன் என்குறைகளைக்கேட்டு இவைகளுக்கு நிவாரணந்தேடி என்துயரத்தைத் தீர்க்கவேண்டும் அதாவது எந்தாதன்பெண்கள் சொல்லியதைமுக்கியமாகக்கொண்டு சற்றும்இரக்கமில்லாமல் தக்கன்சொல்லிய சாபத்தொடர்பினால் எங்கலைகள் அனைத்துமாறி ஒற்றைக்கலைமாத்திரம் நிற்கின்றது; அதுவும் இத்தினம்நீங்கும்போலும் அப்படிநேருமானால் என்பேரும் பெருமையுங்குறைந்து யாவராலும்புகழுங் கீர்த்தியுநசிக்க வசைபேசப்படும்; அப்பால்நானிருந்துஎன்னபயன்? ஆதலால்இதற்கொருவழியைக் காட்டி என்னைப்பாதுகாத்தல் உன்கடனென்றுவாடித் துக்கசாகரத்தில் அழுந்திச்சோருகின்ற சந்திரனை இந்திரன்தழுவி என்மனத்துக்கினிய நண்பனே! பயப்படவேண்டாமென்று சிலதயிரியமொழிகளைச் சொல்லித்தேற்றி அருகிலிருத்திக்கொண்டு சந்திரனேகேள் முன்னொருகாலத்தில் எமது இறைவனை

ழுந்தருளிய திருக்கயிலாயத்துக்கு நாமிருவருஞ்செல்கையில் பயற்றுண்டை வாழைக்கனி மாங்கனி பலாக்கனி கரும்புமுதலியவற்றை விநாயகமூர்த்தி திருத்திபூர்க உண்டு வயிறுபருத்து ஊர்த்தசுவாசம்விட்டிருப்பதை நீகண்டுநகைத்தாய்; அதைக்குறித்து அக்கடவுள்சீறி உன்னையாவரும் பாராமலிகழ்ந்து நிந்திக்கும்படி சண்டாளத்துவம் அடையக்கடவதெனச் சபித்தார் அந்நாள்முதலுன்சாயைத் தாக்குமாயிற் பாவம்நேருமென்று பலரும்வசைகூறி யுன்னைப் பாராமலிருப்பதைக்கண்டுவெட்கி நீ மறைந்ததைப் பிரமன்முதலோர் அறிந்து கயிலைக்குச்சென்று விநாயகக்கடவுளைப் பலமுறைவணங்கிப்போற்றி ஒருவராலும் அறியப்படாத தேவரீர் பெருமைகளைச் சந்திரன்தேறாத காரணத்தினால் நீசத்துவம்பெற்றுப் பங்கப்பட்டு ஒடுங்கி வருந்துகின்றான். அவனுதவி இவ்வுலகத்துக்குவேண்டும். ஆதலால்அடிகளிட்ட சாபத்தின்திறத்தைவழுவின்றி ஆண்டிலொருநாள்பெறவும் மற்றைநாட்களில் கிரமமாய் அவனதொருகலைகடாத்திவரவுங் கட்டளையிட வேண்டுமெனத் துதிப்பதற்கு இரக்கமடைந்து பிரமனை நின்வேண்டுகோளின்படி அனுக்கிரகஞ் செய்தனமென்று திருவாய்மலர்ந்து பின்னரும் அச்சாபத்தைப் பெறுங்காலமு நியமித்தனர்.

அவ்வாறே ஆண்டுதோறும் ஆவணிமாதப் பூர்வபக்கத் தமாவாசை சென்ற நான்காந்திதியில் உலகத்தார் உன்னைத் தரிசித்தால் சண்டாளத்துவமும் மகாபாதகமு நேருமெனப்பயந்து பாராமல் இகழ்ந்து, உன்சாயை பூவுலகத்திற் படுவதினால் உண்டாகுங்குற்றம் நீங்குதற்பொருட்டு, விநாயகக்கடவுளைப்பூசித்து வருகின்றனர். அந்நாள் விநாயகசதுர்த்தியெனப் பிரசித்தப்பட்டிருக்கின்றது. அப்பழி நீடித்திருக்க, மேலும ஒருகுறையைத் தக்கனாற் பெற்று உன்பெருமும் பிரகாசமும் மேம்பாடுமே அடங்கினாய்! ஆதலால் துரிதமாகப் பிரமன் சந்நிதானத்திற்சென்று அவருடன் இக்காரணங்களை முறையிட்டுக்கொள்ளுவையாயின் குமாரனுக்குணர்த்தி யல்லது தாமாவது இக்கொடுமையை விலக்கிக் காப்பாரென்று இந்திரன்சொல்ல சந்திரன் மகிழ்சிறந்து, தோழனே! நல்லமார்க்கத்தைக்காட்டினாய், அவ்வாறே செய்யக்கடவனென்று விடைபெற்றுக்கொண்டு மனோவதிக்குப்போய்த் தேவர் தமே .தனோர் சூழ்ந்துபோற்ற ஆயிரவிதழ்விரிந்த பொற்றாமரைபீடத் தெழுந்தருளிய பிதாமகனைச்சேவித்து யாமனுலந்தனக்குநேர்ந்த துன்பத்தை விண்ணப்பஞ் செய்து, தேவரீர் அடியேன் மனக்கிலேசத்தையும் இச்சாபசம்பந்தத்தினையும நீக்கத் திருவுளங்கொண்டு உமது புத்திரனுக்குத் தெரியப்படச்சொல்லவேண்டுமென்று இரக்க, இக்கருமத்தைப் பிரமன் ஆலோசித்துச் சந்திரனைநோக்கி தக்கன் தன்மனப்படிக்கல்லது ஒருவர் சொல்லும் நற்காரியங்களையும் அங்கீகரிப்பவனல்லன், இஃதல்லாமலும் நமக்கடங்கி வார்த்தையாடவுமாட்டான், தன்னையே பரத்துவமாக நினைந்து விருப்படைந்து, ஆதியில் நான்போதித்த பரமசிவத்தின்பெருமைகளைக்கருதித்தவஞ்செய்திந்த மகதைசுவரியம்பெற்று, அக்கடவுளையே மதியாமலுந் தான்வணங்குந்தேவர் முதல் தன்னைப்பணியத் தன்னாணையை எங்கு நடாத்திவருபவன் நான் சொல்லியுங்கேளான். சோதி வண்ணமுடைய பரமசிவத்தின்சந்நிதானத்திற்சென்று பலவகையாகப்போற்றி

யாவரோனும் தனக்குற்ற துன்பங்களை விண்ணப்பஞ்செய்து நிவாரணம்பெறலாம். தக்கன்முன்னின்றொருமொழியாவது பேசப்படுமோ! இவன் துரிதமாக நாசமடைதற்பொருட்டு இக்கடுங்குணம்நேர்ந்தது. இவனால் யாங்கள் பெற்ற பதவிகளையும் பெருமைகளையும் இழக்கும் ஏதுவுமுண்டாம், இக்காரணத்தைக்கருதியே பரமசிவம் இவனுக்கு இச்சிறந்தபேற்றைத்தந்தார். இவன் கொண்ட உறுதி எத்தன்மைத்தெனின், பிறவிக்குருடன் அறிவும் ஊன்றுகோலுந் துணையுமில்லாது உலகை வலம்வரத்துணிந்ததற்கொக்கும். மேலும் நானவனுக் கினிமைகூறினுங் கோபித்திகழ்வதன்றியும் உன்சாபமுந்தீரான். ஆதலால் வேறொரு எண்ணமும்வேண்டுவதில்லை. வேதமுடிவாய் எம்போல்வார்க்கும் இறைவனாய் அடியார்க்கெளியனாய் எங்கும்பரிபூரணமாய் நிறைவெய்திநிற்கும் பரமேசுவரனைச்சரணடைந்து உன்மனக்கவலையினைமுறையிடுவையாயின் பாதுகாத்து அருள்செய்வன். இதுவுனக்குத் தோன்றவில்லையோ? கலைகள் தேய்ந்ததைப்போலவே உன்விவேகமு மழுங்கியதோ? சிவபெருமான் குணாதிசயங்களை அறிந்திருந்தும் ஏன்மயங்குகின்றனை. இருண்டவிடத்திற்சூரியப்பிரகாசம் செலுத்த ஐயப்படுவார்களோ? நம்மையெல்லாம் மக்களாகப்படைத்த இவனிடத்து அன்பில்லாதாரையும் அப்பேற்றைக் கிடைத்தும் நற்கருமங்களைமுடித்து அவன் திருப்பாத நீழலைச் சேராதவர்களையும் நம்போலியர் கனவிலும் நினைக்கப்படுமோ? அதனாலுண்டாகும் நரகவேதனைகளை பேசவும்படுமோ? பத்திவயிராக்கியங்களைப்பெற்றுத் தம்மைத் துதிக்குந் தொண்டர்களைப்பரிந்து காக்குங் காரணத்தினாலன்றோ வெள்ளிமலையிற் பரமசிவம் அருளுருப்பெற்றெழுந்தருளுவது; இஃதல்லாமலுந் தமது திருவடிகளை நம்பினவர்களுக்கடுத்த துன்பங்களைக் கனலிற்பட்ட பஞ்சைப் போல நீக்கிச் சனனசாபல்லிய மாக்கும்பொருட்டன்றோ? விடைக்கொடியைகாட்டியிருக்கின்றது. சந்திரனே! இதற்கொருதிருட்டாந்தங்காட்டுவோம்.

முன்னாளில் தமது பாதகமலங்களைப் பத்தியுடன் அருச்சித்துச் சிக்கெனப்பற்றிய மார்க்கண்டன்மேல் எதிர்த்த எமனையுதைத்து அவ்விருடிக்கு நித்தியத்தைக்கடாட்சித்த சரித்திரத்தை அறியோமோ! திருப்பாற்கடலைக் கடையும்போது உண்டாகிய விடத்தைக்கண்டு நடுங்கி நாமனைவருஞ் சரண்புக பயப்படாதீர்களென்று ஆதரித்து அதனைக்கண்டத்தில் தரித்துக்காத்த தயாநிதியை மறக்கலாமோ? பராசத்தியினது அங்குலியினிடத்துதித்து உலகமெங்கும் அழித்துப்பெருகிய கங்கைக்காற்றாது நாமெல்லோரு முறையிட இரங்கிச் சடையிற்காத்து நம்மோடு புவனங்களைக்காத்ததை நீயறியாயோ? சர்வமங்கள குணநிதியாகிய நமது இறைவன் தம்மடியவர்களிடத்திற் பெருகுங்கருணையைப் பேசப்படுமோ, அல்லது கணிக்கக்கூடுமோ, கருத்தினாலாயினு மறியலாமோ. சந்திரனே! பரமசிவன் திருவிளையாடல்களைக் கற்பகாலந் துதித்தாலும் முடியாது. ஆதலால் துரிதமாகத் திருக்கயிலைக்குச் சென்று மகாதேவன் பாதகமலங்களிற் சரணடைந்து இத்துயரத்தினை நீக்கிக்கொள்ளக்கடவாயென்று பிரமனருளியதைஉபதேசமாகக்கொண்டு அவன் பாதங்களிற்றொழுது அடியேன் ஈடேறு மார்க்கத்தினைப்போதித்தீர். அவ்

வாறேமுடித்து இப்பாதகத்தை நீக்கிக்கொள்வனென விடைபெற்றுப்போய் ஞானநாயகனெழுந்தருளிய கயிலைமலையைச்சேர்ந்து நந்தியெம்பெருமானருள் பெற்றுஆலயத்திற்சென்று பரமசிவனைக்கண்டு விழிகளி லானந்தவாரி பெருக அட்டாங்க பஞ்சாங்க திரியாங்க ஏகாங்கமாக வலம்வந்துசேவித்து உபநிடத வாக்கியங்களினாற் பலவாறாகதுதித்துக் கரங்களைக்கூப்பிநிற்குஞ் சந்திரனைக் கருணையாகப்பார்த்து, நீ மிகவும் வருந்திவருங் காரணமென்னையென்று திரு வாய்மலர, சத்துருவாகிய இருள் வளைந்துகொண்டதைப் போலக் கலைகள் மாறிய சந்திரன் பரமசிவத்தைவணங்கி சுவாமி! கடினசித்தம்பெற்ற தக்க னிட்டசாப சம்பந்தத்தினாற் கலைகளனைத்துந் தேய்ந்து ஒன்றேயிருக்கின்றது. அதுவும் இன்றுடனீங்கும் ஆதலால் தீனதயாபரனே? கருணையாலிவ்வொரு கலையிற்கவும் மற்றையவைகளுஞ்சேர்ந்து விர்த்திக்கவுங் கடாட்சிக்கவேண்டும்; தேவரீரையல்லது வேறுகதிகாணாது திருவடிகளில் தஞ்சமடைந்தேன், இறை வனேயென முறையிட்டுக்கொள்ளுஞ் சந்திரனுக்கிரங்கிப் பயப்படவேண்டா மென்று தேற்றினவராய் அவ்வொருகலையினையுந் தம்முடியில்புனைந்தவுடன் தக்கன்சாபம் நெருங்கப்பயந்தோடிற்று.

கேட்டீர்களா? சவுனகாதிமிருடிகளே? தேவர்களுக்குள்ள பல இன்னல் கலையும் நீக்கிப் பாதுகாக்க வல்ல மகாதேவனுக்கு இதுவுமொரு சிறப்பின் பாலதோ? தம்மையடுத்தவருக்கு உதவு முண்மையினை யாவருக்கும் அறிவிப் பதையொத்து அக்கலை சடைமுடியின்விளங்கியது; பின்பு சந்திரனே? இஃது நமது முடியின்கண் வதியப்பெற்ற மகிமையினால் அழிவுபடாது, இனி மற்றை யவைகளு மாறிமாறி தினமொன்றாக உன்னைக்கூடுவதல்லாமலும் இவ்வாறே பட்சங்கடோறுந் தேய்ந்தும் நிறைவெய்தியும் விளங்குமென்றருள சந்திரன் மனக்குறையினைநீங்கிமகிழ்சிறந்துஇறைவனைப்பலவாறாகத்துதித்துப்பன்முறை வணங்கி விடைபெற்றுப் போய் முன்போன்றே தன்செய்கையினை நடாத்தி னான்; இச்செய்கையை விண்டுமுதலிய தேவர்கள்கண்டு சந்திர னின்ன லைத் திருவுளங்கொண்டு தக்கன்சாபமும் வழுவாமல் தமது மகிமையினையுந் தெருட்டிய இறைவன் குணாதிசயங்களை யாவராலறியப்படு மென்றேத்தின ர். பின்பு இக்காரணத்தைத்தக்கனறிந்து கோபித்துநானிட்டசாபத்தைச்சிவனோ தடுக்கவல்லானென்று நகைத்துப் பிரமன் விண்டுமுதலானோர் என்கட்டளை யைக்கடக்கவும் முன்னின்றொருகாரியத்தைக்குறிக்கவும்நடுங்குவார்கள்; அப் படியிருக்க தாய்தந்தையற்ற ஒருவனோ நீக்குவான், நல்லகாரியம்தான். பரம் பொருளென்றும் பிரமன்முதலானோரை அளித்துப் பஞ்சகிர்த்தியங்களைநடாத் திச் சர்வபரிபூரணமாயிருப்போனென்றுஞ்செருக்குவித்தானோ? அல்லதுநான் தன்னிடத்தே செல்வத்தைப்பெற்றுந் தன்னைத்தொழ வில்லையென்றிக்கருமத் தைமுடித்தானோவென்று பலநிந்தைகளைப் பேசுவதைத் தவசிகாமணியாகிய புல்கர்கேட்டுமனம்பொறாமேலப்புவமையற்ற இவனையிகழாதே இதனாற்சகல ரும்உன்னைப்புகழார்கள்; இஃதல்லாமலும் உன்செல்வமும் அழிவுபடுமென்று சொல்ல தக்கன்நகைத்துத்தவமுயற்சியினாலுண்டாகியஇப்பெருஞ்செல்வமொ ருபோது நீங்காது, இஃதொருதொழிலை முயன்றவனுக்கீந்தபரிசாகும், விண்டு

முதலியோ ரென்சொல்லை மறுக்க அஞ்சுவர். என்சம்மதமில்லாம லிதனைச் செய்யத்தகுமோ? உன்விவேகத்திற்கு மெச்சினேனென்று பழிப்புரைகூறிய பாதகனைப் புலகர்நோக்கி உன்னை யாவருமதிக்கினும் இவ்வகண்டசாம்ராச்சியம் நிலைபெற்றிருக்கினும் அவற்றையருளிய பரமசிவனை அவமதிப்பது தகுதியோ? ஒருநன்றிசெய்தவரை உயிருள்ளவரையினும் மறக்கலாகாதென்றதைத் தங்கன்கேட்டு நல்லகாரியம் அவ்வரத்தை அனுபவிப்பதற்கு முன் மாற்றவும் முடிவினல்லது ஒருகாரணத்தை நடாத்தவும் அவனாற்கூடுமோ? ஆதலால் என்னை என்னசெய்யப்படுமெனப்பேசுந் தக்கனுக்கு புலகர்சொல்லுகின்றார். நீகூறியவனைத்தும் உண்மையே, சிவனையிகழ்ந்தவர்களொருபோதும்ஈடேற அறியார்கள்; இது வேதசிவாகமத்துணிவு. இதனைக் கடைப்பிடியாகப்பற்றி அவனைத் தூறுமல இது முதற்பத்தியாக வழிபடுவாய், தம்மைச்சரணடைந்தாரை ஆதரித்து அவர்கள்துன்பத்தைமாற்றி வேண்டும்வரங்களைத்தருவது பரசிவனுக்கியற்கையாதலான் அதையறிந்து சந்திரனடுத்தான், அவனுக்கு நேர்ந்தசாபத்தைப் பக்குவமாகவிலக்கிஉன்வார்த்தையும் பொய்க்காமல்தேயவும்வளரவும்அளித்தவர். அதற்கு மகிழ்வடையாமற் கோபிக்கலாமோ? மேலும் அச்சந்திரன் ஆர்? உன்மருமகனன்றோ? இனிப்பரமசிவனும் உனக்குமருமகனாக இருக்கின்றனன் இதனை நன்றாய்யோசித்து நடந்து கொள்ளுவையாயின் உன்புகழே நிலைபெற்றிருக்குமென்று பலவாறாக இறைவன் பெருமைகளனைத்தையும்எடுத்துக்காட்டத்தக்கன்கோபந்தணிந்து இந்திரன்முதலானோர்போற்ற அரசுசெய்துவந்தான். கேட்டீர்களோ நைமிசாரணியவாசிகளே! இனிப் பராசத்தி அவன்பெண்ணாக வருங் காரணத்தையுஞ் சொல்லுவோமென்று சூதபுராணிகர் ஆரம்பித்தனர்.

உபதேசப்படலம்
முற்றிற்று.

உமைகயிலை நீங்குபடலம்.

நாலுமறையுந் தேடற்கரிய சோதிமயமாகிய பரமசிவன் அடியவர்தரிசித்து ஈடேறத்தக்கதாக நிருமலமாகிய திருக்கயிலாயத்தின்கண் இடப்பாகத்தமர்ந்த பராசத்தியானவள் ஒருநினைவு கொண்டெழுந்து மகாதேவன் திருவடிகளிற் சேவித்து எம்பிறைவனே? உன்னொப்பற்ற நிச்சயஞானத்தைப்போதிக்க வேண்டுமென்றுவினவ பரமசிவனருளிச்செய்வாராயினர். பெண்ணே கேட்பாயாக? உருவங் குணஞ்செய்கை முதலியவை யொன்றுமின்றி நிர்மலமாய் எங்கு நிறைவெய்திய பரப்பிரமமாகிய சிவமானது பை முட்டை நிலம் வியர்வையென்னும் நால்வகைத்தோற்றம் தேவர் மக்கள் பைசாசு நாகர் விலங்கு பறவை செந்து என்னும் எழுவகைப்பிறப்பின் பிரிவாகிய எறும்புமுதல்யானையீறெனச்சொல்லும் எண்பத்துநான்கு நூறுயிர சிவபேதத்தினது விடயஞானமறப்பைக் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டைகூடலாகிய பொருளினாலும் சத்திமூலமாக நீத்தற்பொருட்டு தமது கருணையினின்றும் வகுத்ததும் அவளருளாற் கலைமகள் இலக்குமி இச்சாசத்தி கிரியாசத்தி ஞானசத்திகளை வகுத்ததும் இதற்குக்காரணமாகிய பரமசிவம் அருவுருவினைத் தாங்கியதும்

கண்ணன் பிரமன் முப்பத்துமுக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் முதலானவர் துதிக்க திருமகள் கலைமகள்முதலிய மங்கையர்மங்கல வாழ்த்தெடுப்ப, கன்னிகாதானஞ்செய்தான். அக்கலியாண மகோற்சவத்தை நேத்திரோச்சவமாகத் தெரிசித்த விண்ணவர் மண்ணவர் நாகர் பூர்ண சந்திரோதயம்கண்ட சமுத்திரத்தைப்போல திசைகளெங்கும் செவிடுபட, உத்தரியங்களை வீசிச்சுபங்களைக்கொண்டாடிப்போற்றுகையில் உருவம்செயல்நாமம் நீங்கி எள்ளுக்குள் நெய்போற் சராசரப்பிரபஞ்சங்க ளனைத்தினும் பொருந்தி அவற்றின் வினைப்போகங்களை யூட்டி நடிப்பிக்குமிறைவன் இவ்வகைத் திருவிளையாடல்களை முடித்தவுடன் விரைவில் மின்னலையொத்து மறைந்தார்.

அக்காலத்தில் உமையவள் தன்பால் வீற்றிருந்த நாயகனைக் காணாமையால் அரியதவத்திற்பெற்ற செல்வத்தை இழந்தவர்களை நிகர்த்து உற்சாகம் நீங்கிவருந்தி மணப்பீடத்தி னின்றுமெழுந்து திருமகள் கலைமகள் இந்திராணி முதலிய கன்னியர் இருக்குமிடத்திற்சென்று அக்கினியிற்பட்டு உருகிய தங்கத்தைப்போற்கரைந்துகரைந்து ஏக்கமுற்று பெருமூச்செறிந்து மருண்டு சோபித்து வாடித்தேகமெங்கும் முத்துக்களைப்போல வியர்க்கவெதும்பி கணவன் திருக்கோலத்தை நினைந்து விண்டு இறை வானவர் நெருங்கிய இந்தமகாசபையில் வீற்றிருந்த முதலன் மறைந்ததாற் கள்வனோ? அன்று திருக்கயிலையைக் கடந்து பாதகமலங்கள்நோவ இவ்விடமெழுந்தருளி அடியேனை ஒருபொருளாகநினைந்து மணஞ்செய்தநாயகனைக் கள்ளனென்றெண்ணப்படுமோ! கொடியாளாகிய யான்சரீரம் வருந்திச் செய்த தவம் சிறிதென நினையாமற் பிதற்றுவதடாதென்றும் பலபல வகைகளாகப் பன்னிவருந்தும் பார்ப்பதியை மிக்க மணத்தைவாய்ந்த அனாத்தையுடைய வேதவல்லி தழுவியணைத்து தாயே வருந்தாதை உன்கணவனைச் சேருகிறவரையில் தவத்தைச் செய்திருப்பாயென்று தேற்றும்போது பக்கத்தில்நின்ற பூமகள் நாமகள்முதலோர் அம்மனையைப்பார்த்து, லோகநாயகியேவாழி! சகலபுவன சராசரங்களையும் உண்டு பண்ணுவீர். எல்லாமுமது சொரூபமாரும் கபடநாடக சூத்திராவதாரியாகிய உமதுகணவனெங்கும்போகார். அவருக்கொருமறைவுமுண்டோ? தவத்தைத் தொடங்கக் கருதினையோ? உங்கள் திருவிளையாடல்களை அளவிடப்படுமோ? முழுதும் யாவராற் கண்டறியலாம்; மனத்தால் தேடற்கரியலாம்; மனத்தால் தேடற்கரிய உமதுகணவனையும் உம்மையுந்தரிசிக்கப்பெற்று சகலவினைகளைத்தும்போக்கினோம். சனனவாதனையொழிந்தோம், ஞானவாரி மனத்திற்பெருகித் தேக்கக்கண்டோம், கிருதார்த்தரானோம், நாங்கள்செய்ததவம்சிறிதன்றென்று கொண்டாடித்தேற்றினார்கள். அப்போது பரமேசுவரி அவர்களைக் கருணையாகப்பார்த்து மனக்கோட்டம்நீங்கித் தவஞ்செய்வதாகமுன்னந்தாமிருந்தஇடத்தைச்சேர்ந்தனள். இவைகள் அனைத்தையும் விஷ்ணுமூர்த்தி முதலானவர்கள் கண்டு அற்புதமெய்தி இறைவனெங்கே சென்றார்? இதுவுமொரு மாயாவிலாசமாகும், தமதுநாயகிக்களித்த காரணமின்னதென்று தோன்றவில்லை, யாவும் பின்னாற் காண்போமென்று இவ்வகையாக ஊகித்துமயங்கிமேகத்தில் மறைந்த சந்திரனையொத்து மதிமருண்டு வருந்தினார்கள். இவைகளையெல்லாம் தக்கன்

கண்டுவடவானலம்போற்கோபித்துக்கண்களில்அக்கினிப்பொறிபறக்கப்பெருமூச்செறிந்து பொற்கடகங்கள் தரித்தகைகளைத்தட்டி, மூக்கின்மேல் விரலைவைத்து நல்லகாரியம் நல்லகாரியமென்று தேகமெங்கும் புகையெழநகைத்து நவரத்தினமயமான கிரீடந்தாங்கிய சிரத்தையசைத்து மணவெழுச்சிபெற நாம்செய்தமணம் வெகுநேர்த்தியென்று சபையோரைப்பார்த்துச் சொல்லுவானாயினான் வேண்டியவரங்களைச் சகலருக்குங்கொடுக்குந் திறம்பெற்றதான் என்பெண்ணைக் குறித்துவந்தவளைப் பாணிக்கிரகணஞ் செய்துகொள்ளவேண்டுமென்று இரந்தான், அதைநானறிந்து வேதவிதிப்படி தேவர்கள்சூழ அக்கினி சான்றாக கன்னிகாதானஞ் செய்யப்பெற்றும்அவன் யாவரும்நகைக்க நிரோதுவாகமறையக் காரணமென்ன! நான் அருமையாக வளர்த்தபெண்ணைத் தேடிவருவானேன், பின்பு இப்படிசெய்யத்தகாத காரியத்தைமுடிக்கஎன்னிடத்தேதேனும் குற்றங்கண்டானோ இப்படி அனைவரையும் கலங்கச்செய்து சகலபுவனங்களும் போற்றிவணங்கும் என்னையும் தீராப்பழியில் மூழ்கச்செய்து முன்பின் சிறிதாவது ஆராயாமல் திருடனைப்போல் மறைந்தான். தாய்தந்தையர் சுற்ற மொருவருமில்லாமற் சுடலையே இடமாகக்கொண்டு நடிக்கும்பித்தன் பிராமணனாகிவந்ததனால் அம்மைய லொழிகின்றதோ, அவன் நடக்கைகளைத்தும் பொல்லாங்கென்பதை இந்நாள் திருட்டாந்தரமாகவே கண்டோமென்று அக்கினியைப்போற் பொங்கி விண்டுமுதலானவர்களை அனுப்பிவிட்டு பரமசிவன்செய்த காரியத்தை எண்ணி எண்ணி மனத்தில் வன்மத்தைப்பெற்றுத் தன் அரசாட்சியைச்செலுத்தி யாவரும் வணங்க வாழ்ந்திருந்தான்.

இப்பால் கலியாணமண்டபத்தை நீங்கிச்சென்றபராபரை முன்போல்அருந்தவங்களைச்செய்து வருங்காலையில் ஒருசுபதினத்திற் சிவபிரான் தவவேடம் பூண்டு சிரமாலையணிந்து பவித்திரமாகிய திருவெண்ணீறு தம்முடலெங்கும் விளங்கமார்பில்கணிமணித்துண்டு முப்புரிநூலும் அசையபாதாரவிந்தங்களின் வேதநூபுரம் சத்திக்க சிவந்தசடைகள் விரிந்துதோற்றவலக்கரத்திற் சூலந்தாங்கி உமையவள் தவஞ்செய்யுமிடத்திற்கு வருவதை எம்மிறைவிகண்டவுடன் திடுக்கிட்டெழுந்து நமது இறைவனுக்கு அன்பரெழுந்தருளினாரென்னும் பத்திவிசுவாசத்துடன் எதிர்கொண்டு சேவித்து உபசரித்தனள், அப்போது இறைவன் அவளன்புக்கிரங்கி மான்மழுசூலம் அபயவரதம்விளங்கிய சதுர்ப்புயங்களும்தோன்றப் பராசத்தி நீங்கிய பாகமுடையராய் இடபவாகனத்தில்தோன்ற உலககாயகி தரிசித்து மனக்கோட்டம்நீங்கி ஆனந்தவாரியில்திளைத்து அடியேனிடத்துக் கருணையாய் இறையவனெழுந்தருளினானென்னும் மனச்செருக்குடன் பலமுறைசேவித்துப்போற்றி பத்தவற்சலா! அன்பருக்கெளிய தயாநிதியே! சிறியவளிடத்திருக்குங்குற்றங்களை மன்னித்துப் பாதுகாப்பீரெனத்துதிக்குந் தேவியினிடத்துப் பரிவாய்த் தாமரைமலரைப் பழித்துவிளங்குந் திருக்கரத்தைநீட்டி எடுத்து சத்துருக்களைச்சாடும் வெற்றிபெற்ற விடையின்மேல் தமது வாமபாகத்திலிருத்திக் கணநாதர்சூழ்ந்துபோற்ற திருக்கயிலாயமலையையடைந்து முன்போல் தமது ஆலயத்தில் உமாமகேசுவரமூர்த்தமாய்வீற்றிருந்தனர். இக்காரணத்தைக்கண்ட தோழியர் நடுநடுங்கித் திடுக்கிட்டோடிச் சபா

மண்டபத்தில் வீற்றிருக்குந் தக்கனைச்சேவித்து சுவாமி செக்கரஞ்சடையா ஞகிய பரமசிவன் தவக்கோலங் கொண்டெழுந்தருளத் தேவரீர்புத்திரி கண்ட வுடன் அவர்சூதை அறியாமல் தொண்டரென்றெண்ணிச் சமீபத்தில்வந்துசே வித்தவுடன் தமது திருக்கோலத்தைக்காட்டி உமது கன்னிகையை இடபவா கனத்தில் ஏற்றிக்கொண்டு திருக்கயிலைக்குப்போய்விட்டனன். இதுவேநடந்த செய்தியென்று விண்ணப்பஞ்செய்த மாத்திரத்தில் எரியும் அக்கினியினிடத்து நெய்யை ஊற்றியதுபோற் கோபித்துவிழிகளில் அனற்பொறிசிதறப் பெருமூச் செறிந்து ஒன்றும்பேசாமலிருந்தான். அத்தருணத்தில் நித்தியப்படி தேவர்கள் வந்து சேவித்திருந்த பின்பு அவர்களைப்பார்த்து விண்ணவரே! காளகண்டன் ஆதியில்வந்து நமதுபெண்ணை விவாகஞ்செய்துமறைந்தது உங்களுக்குத் தெரி யுமே அந்நிந்தையை எண்ணி எண்ணி நான் வருந்திக்கொண்டிருக்க அக்க ள்ளன் இந்நாள்கபாலிவேடந்தாங்கிவந்து,என்புத்திரியைமயக்கிக்கொண்டு போ ய்விட்டானும்! இது எவர்களுக்காவது அடுக்குமோ? தாய்தந்தை சுற்றத்தார் மகிழ்ந்து மிக்க சீரும்சிறப்புக்களுடனும் அனுப்பக் கொண்டுபோகாமல் உலக விரோதமானகாரியத்தினை முடிக்கத்தகுமோ?இப்படியார்செய்வார்கள்? தான் சர்வபரிபூரணனுயிருந்தாலும் அடாதகாரியத்தைச்செய்யத்தகுமோ? புகழ்பெ ற்றநமது மரபுக்கொரு பழியை உண்டாக்கினன். மேலும்ஆக்கினையையுங்கடந் தான் சிவன் இரந்தானென்று சகலரும் பேசுவார்கள்; அதனுடன் இம்மணத் திற் கரந்தானென்பது உலகமெங்கும் பரந்ததன்றியும் பழியும்பூண்டான்; பித் தனுக் கொருகுணமும் வரன்முறைகளும் உண்டோவென்று இவ்வகையாகப் பலபலதுடணகளையுஞ் சொல்லி செய்ந்நன்றிமறந்த சிறுவிதி சபையிலிருந்த தேவரைத் தங்கள் தங்கள் இருப்பிடத்துக்குப் போகச்செலவுகொடுத்து அனு ப்பிவிட்டு மனப்புழுங்க அத்தினமுதற் சிவனைநினையாமலும் மதியாமலும் ஐசுவரியத்தாற் கருவப்பட்டு இறுமாந்திருந்தான், இவ்வகையாகச் சிலநாள் கழிந்துவர இதனைவிட்டுணுமுதலியோர்களறிந்து கலங்கி நடக்கவேண்டுவதை யோசிக்கின்றார்கள்.

திருமணப்படலம்
முற்றிற்று.

தக்கன்றிருக்கயிலைசெல்படலம்.

தக்கன் அருந்தவத்தைச் செய்துபெற்றமிக்கஅயிஸ்வரியத்தைக்கிரமமாக அனுபவியாமலும் அச்செல்வத்தையளித்த பரமசிவத்தை மதியாமலும் நிந்திப்பதால் துரிதமாக நாசமடைவான்; அதுவல்லாமல் நமக்குத்தலைவனுக வரங்களைப்பெற்ற இவன் ஏவலைமறுத்து வேதவொழுக்கப்படி நடந்துகொள்ள எண்ணுவோமாயின் நமது பதங்களை மாற்றிப்போடுவான், அதற்குப்பயந்து அவனிட்டப்படி நடந்தால் பரமனுற்பதங்களை யிழப்பதன்றியும் பிராணனுக் கிறுதியும் நேருமென்றேங்கி இனியென்செய்வோம், அதற்கோருபாயந் தேட வேண்டும்; அதென்னவென்றால் தாமதப்படாமல் நாமெல்லோரும் தக்கமா புரத்திற்குப்போய் அந்தைப்பிற்பெரியவனுகிய தக்கன்மனத்தைத்தெருட்டித்

திருக்கயிலையைச்சேர்ந்து கர்த்தனைத் தெரிசித்து வருவதாகச் செய்தோமாயின் நிலைபெற்றிருப்பான் நமக்கொருதுன்பமும் நேரிடலரிது ஆதலால் துரிதமாக இதனைச்செய்து முடிக்கவேண்டுமென்று நிச்சயப்படுத்திக்கொண்டு, பிரமனாதியாகிய தேவர்கள் தக்கன் சபைக்குப்போய்க்கண்டு. அவரவர்செய்யும் வந்தனாதிகளைநடாத்தி வீற்றிருந்தபின்பு, பிதாமகன் குமாரனைப்பார்த்துச் சொல்லுவான் ; அரிதாகப்பெற்ற உன்மகளையும் மருகனாகிய பரமசிவனையும் நினையாமலும் பாராமலும் இருக்கலாமோ ? 'குற்றம்பார்க்கிற் சுற்றமில்லை' என்பதனால் வயிரத்தைவிட்டு, கோபமுள்ள இடத்தில் தயையுமுண்டென்பதை யோசித்து நடந்துகொள்ளாவிட்டால் உன்னிடத்து மிகுந்த நிந்தை நேரும். அதனை செவ்வையாயோசித்து வழிபடுவையானால் மேலாகிய கீர்த்தியைப்பெறுவாயென்று சொன்னதை ஆராய்ந்து நல்லகாரியம் நாம்செய்யவேண்டுவதென்னவென்று கேட்குந் தக்கனைப் பிரமன்பார்த்து, நீ வெள்ளியங்கிரிக்குச்சென்று, உன்மகளையும் மருமகனையுங்கண்டு விசாரித்துவருவது உத்தமமென்று சொல்ல, அதற்குச்சம்மதித்து; பிதாமுதலானோரை அவ்விடத்திலிருத்திப் பரிசனங்கள்சூழ இரதாரூடனாய்த் திருக்கயிலைமலையைச்சேர்ந்து, ஆலயத்திற்போகவருகையில், அவ்விடத்தில் நந்தியெம்பெருமான் ஆக்கினையால் காவல்கொண்டிருக்கும் பூதகணங்கள் தடுத்தனர். அவர்களைக் கோபித்து, என் புத்திரியையும் மருமகனையும் கண்டு விசாரித்து வார்த்தையாடிப் போகவந்தால் தடைசெய்யவேண்டுவதென்னவென்று சீறிய பாதகனைப் பூதகணங்கள் உக்கிரமாகப்பார்த்து, ஆதியிற் பரமசிவத்தைத் தேவசமுகத்தில் இகழ்ந்துபேசிய நீ அதைமறந்தும் அதற்கொருபரிகாரமுஞ்செய்துகொள்ளாமலும், இவ்விடத்தில் எவ்வகையாகவருவாய், அடாமூடா! ஆதியிற் பரமசிவத்தினால்தகிக்கப்பட்ட திரிபுராதிகள் இராக்கதராய்த்திரிலோகங்களுக்கும் அழிவுசெய்தனராயினும், இறைவனிடத்து அன்புள்ளவராயேயிருந்தார்கள். அவர்கள் பத்திவிசுவாசங்களில் அணுப்பிரமாணமும் உன்னிடத்திற் கண்டதில்லையே, இனி எவ்வகையாகவாழ்ந்து ஈடேறுவாய். தேவர்களைக் கொல்லஎழுந்தவிடத்தை உண்டு கறுத்தகண்டத்தைப்பெற்ற விச்சுவநாயகன் அனுக்கிரகஞ்செய்யக்கிடைத்த செல்வப்பெருக்கை அனுபவித்துந் தேவதேவனென்று அறியாமலும், அஞ்ஞானத்தினால் அவனைமறந்தாய். அவன் மாயையைக் கடந்தவருமுண்டோ ? ஆதலால் நீயும் அதிலழுந்தினாய் அவன் பாதகமலங்களைக் கருதிப்பணியாத பாதகரைப் பார்க்கவும்படாது, சிவத்துரோகத்துக்கு ஏதுவாகிய நடக்கையையுடைய உன்னை நெருங்கிப் பேசவும்போமோ ? இதனால் நேரும் பாதகங்களைத் தான் கணிக்கப்படுமோ? ஆதலால் பரமேசுவரன் சன்னிதானத்திற்சென்று, பத்தியுடன் துதித்துச் சேவிக்கவிரும்புவையாயின் இவ்விடத்திலிருக்கலாம். அல்லது உன் ஊரைநோக்கிநடந்துவிடலாமென்று சொன்னவாசகம் செவியில் நுழைந்தவுடன் அரியதழலினிடத்து நெய்யை ஊற்றினதைய்போன்று தக்கன்பொங்கி, அளவற்ற பூதப்படைகள் காவல்கொண்டிருக்கும் வாயிலைக்கடக்க அஞ்சி, நிற்கவும் வெட்கித்திரும்புகின்றவன் பகிலைத்தேடி உழன்றுதிரியும் பூதங்களே? கேளுங்கள். உங்க

னிறைவனை ஒருகாலத்தும் வணங்கேன். அவன் என்மருகனென்பதை மறந் தீர்களோ! விண்டு பிரமன்முதலானோர்கள் என்னேவலில் அடங்கி நடக் கின்றனர். சகல புவனங்களினும் தக்கபிரசாபதியென்று புகழும் கீர்த்தி யும்பெற்றேன். இன்றைக்குப் பித்தனாகிய ஒருவனை வணங்குவேனோ? இதன் றியும் என்னைத்தடைசெய்ய உங்களுக்குத் தயிரியமுமுண்டோ? என் பெண் ணும் மருகனும் இட்ட ஏவலைச்செய்யும் உங்களை நோவவேண்டியதில்லை. எவ்வளவும் எண்ணிக்கையில்லாமல் இவ்வவமானத்தைச்செய்வித்த உங்கள் இறைவனை யாரும் தொழுது துதியாமலிகழும்படி செய்விப்பேன். அதையுஞ் சிலகாலத்தில் அறியப்போகின்றீர்களென்று பழியினைக்குட்பட்டானாய், தன் பதிக்குவந்து பிரமன்முதலானோரைப்பார்த்துச் சொல்லுவான்; உங்கள் இட் டப்படி கயிலைக்குப்போனேன். என்பெண் பித்தன் மையலிற்பட்டுத் தகப்ப னென்றெண்ணிக்கை யில்லாமல் பாடாண்டியுடன்கூடி வாய்தல் காக்கும் அவைதிகரான பூதர்களால் என்னைத்தடைசெய்வித்த தல்லாமலும் பங்கப் படுத்தி, மானக்குறைவாகவும் பேசுவித்த தின்னமும் பலவுண்டு. ஐயோ! அவைகளைச்சொல்லவும் நாவெழவில்லை, நினைத்தாலும் நடுங்குகின்றது, இனிப் பலபலபேசி யாவதென்ன? உங்கள் வார்த்தையைக்கேட்டு அவர்களிடத் துக்குப்போன என்னை நோவவேண்டுமென்றுபெருமூச்செறிந்து தேவர்களே! என்னை மதியாத பித்தனையும் அவன் பாகத்தமர்ந்த கன்னிகையையும் இந் நாள்முதல் நீங்கள் துதிக்கவுஞ் சேவிக்கவும் வேண்டுவதில்லை, இக்கட்டளை யை மறுப்பீராயின், அக்கணத்தில் உங்கள் பிராணனை வாங்கிப்போடுவே னென்று வடவையைப்போற் கோபித்துச்சொல்ல அத்தருணம் தக்கனைத் தேவர்வணங்கி, உமது கட்டளைக்கு மாறுண்டோ? அவ்வாறே செய்யக்கட வோமென்று விடைபெற்றுத் தங்கள் பதங்களிற் போய்ச்சேர்ந்தனர்.

தக்கன்றிருக்கயிலைசெல்படலம்
முற்றிற்று.

பிரமன்யாகப்படலம்.

அதன்பின்பு அளவற்றகாலம் தேவர் தக்கன் ஆணைக்கு அஞ்சி, அவன் கட்டளையிட்டபடி நடந்துவருகையில் திரிபுராந்தகனாகிய சிவபிரான் அனுக் கிரகப்படி பிரமன் அரியயாகமொன்றை முடிக்க விருப்புற்று, தக்கன் கட்ட ளையைநினைந்து நான் இறப்பதாயினும் பரமசிவனை அழைத்துவந்து, வேதவிதி ப்படி அக்கிரபூசையினையும் அவிர்ப்பாகத்தையும் அளிப்பதே காரியமெ ன்று உறுதிகொண்டு யாகத்திற்குவேண்டிய உபகரணங்கள் அனைத்தையும் சேகரித்துத் தம்பிள்ளைகளை அழைப்பித்து நாம் செய்யும் யாகச்செய்தியை விண்டுவாதியானவர்களுக்கு அறிவித்து வரக்கடவீர்களென்று கட்டளையிட் டுத் திருக்கயிலாயத்துக்குப்போய், நந்திபெருமான் அனுமதியால் இறைவன் சன்னிதானத்திற்குச்சென்று சேவித்துப்போற்றிநிற்கின்ற பிதாமகனைக் கரு ணையாகப்பார்த்தருளி, வந்தகாரிய மென்னென்றுகேட்க; சுவாமி! அடியேன்

ஒருயாகத்தைநடாத்தநினைந்தேன். தேவரீர் எழுந்தருளி அதைப்பார்த்துக்காத்து அருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, நகைத்து நல்லகாரியம், நமது உருவாகிய நந்திவருவான், நீ போய் யாகத்தைநடத்தக்கடவாயென்று அனுக்கிரகஞ்செய்யச்சேவித்து விடைபெற்றுக் கயிலைநீங்கித் தக்கமாபுரத்துக்கு வந்து, பிள்ளையைக்கண்டு, நானொருவேள்விசெய்ய எத்தனப்படுவதால் உன் சுற்றத்தார்களுடன்வந்து நடப்பிக்கவேண்டுமென்றுசொல்ல, நல்லகாரியம், நீர் முந்திப்போய் எத்தனியும் நாமும் இருடிகளும் கூட்டங்களுடன்ம் வருவோமென்று அனுப்ப, பிரமன் மனோவதியைச்சேர்ந்து, இட்டசித்திகளைத்தரவல்ல க்ஷத்திரியயாகத்தைத் தொடங்கினான். இச்செய்தி விண்டுமுதலானோர் அறிந்து, தக்கனிடத்துக்குவந்து சேர்ந்தார்கள். பின்பு பரமசிவத்துக்கு அவிர்ப்பாகங்கொடாமல் யாகத்தை நிறைவேற்ற எண்ணங்கொண்ட சிறுவிதியோ இவர்களுடன்கலந்து பிரமன் உலகத்திற்சேருங்காலையில், இவர்கள்வரவை அறிந்த பிதாமகன் எதிர்கொண்டு மரியாதைகளைச்செய்து, யாகசாலைக்கு அழைத்துப்போய், தன்னருகிலிருக்கின்ற ஆதனத்தில் தக்கனை வீற்றிருக்கச்செய்து கேசவனாதியானவர்களுக்குத் தகுதியான இடங்களைக் காட்டியபின்பு வேதமுழங்கத் தானும் பீடத்திலிருந்து, யாகச்சடங்குகளை ஆரம்பித்து நடத்திவருகின்ற தருணத்தில், திருக்கயிலையில் அமர்ந்த பரமேசுவரன் நந்திதேவனைப்பார்த்தருளி, பிரமன் நடத்தும் வேள்விக்குப்போய், நமக்குரிய அவிர்ப்பாகத்தைப்பெற்றுவரக்கடவாயென்று அனுக்கிரகஞ்செய்ய, சேவித்து விடைபெற்று தமது காவலை நீங்கி, அளவற்றகணங்கள் சூழ்ந்துபோற்றித்தொடர, யாகசாலைக்கருகில் வருவதைப் பிரமன் அறிந்து, திடுக்கென்றெழுந்து எதிர்கொண்டு சேவித்து. அழைத்துவந்து ஒருதிவ்விய பீடத்திலிருக்கச்செய்து, மற்ற கணாதிபதிகளையும் உபசரித்திருத்தி, யாகத்தைத்தொடர்ந்து நடத்தச்செய்நன்றிகொன்ற தக்கன்விழிகளிற் கனற்பொறி சிதறப்பார்த்து, பித்தனுக்காளாய் வந்தவனோ இவனென்று நெருப்பெழநகைத்து, விண்டுமுதலாகிய தேவர் இருடிகள்முதலாகக்கூடிநெருங்கியிருக்கின்ற இந்த மகாசபைமத்தியின் விடத்தையுண்டு சுடலையில் நிருத்தஞ்செய்யுங் கூத்தனுக்கு அடிமைப்பட்ட பூதங்கள் வந்திருப்பதோ! வெகுநேத்தி. முப்புரம்பொடிபடுத்த அக்கினிவிழியைப்படைத்த சிவன்வாசஞ்செய்யுங் கயிலைவாயிலைக் காவல்கொண்டிருக்கும் நந்தியும் மற்றக்கணங்களும் வரும்படிசொன்னவர்கள்யாவரென்றுபோதவுணர்வாலறிந்து, பிதாவாகிய பிரமனைச்சீறி, நான் அன்பாய் வளர்த்தபெண்ணை என்சம்மதமில்லாமலும் வேதவொழுக்கத்துக்குஇழிவாகவும் திருடனைப்போற் கைக்கொண்டுபோன பித்தனுக்கும் நமது கட்டளையைமீறிச் சொன்னாயே, அவனோ தன்கடைவாயிலைப்போற்றும் ஒருவனை யனுப்பினான், ஆதலால் என்னெண்ணத்தையறிந்தும், எதிர்கொண்டு சேவித்து, உபசரித்து அழைத்து வந்து, சபைக்கு நாயகமாகவும் வைத்தாயே, இதனை நீ செய்யத்தகுமோ? பிதாவானதாற்பிழைத்தாய், அல்லது உன்தலையைவெட்டி நிலத்தில் உருளச்செய்துபோடுவேன். மேலும் இன்னமொன்று உனக்குச்சொல்லுவதாவது, சுடுகாடே இடமாகப்பூதபசாசங்கள்சூழப் பிணங்களைச் சூலத்திற்றாங்கி நடிக்

குஞ்சிவனுக்குப் பழையபடி அவிர்ப்பாகங்கொடுக்கவேண்டுவதில்லை. அதேதென்றால், எலும்பு சிரம் சர்ப்பமிவைகளை அணிந்து சுடலைச்சாம்பலைப் பூசிச் சுடுகாடே யிடமாகத்திரியும் பித்தன் வேதவிதிப்படி பவித்திரமாகநடத்தும் யாகத்தில் அவிபெறத்தகுமோ, இதுவரையிலும் வேதவிதியென்னுந் தகுதியை யோசித்துப்பாராமலும் சிறந்த அவிப்பாகத்தை அவனுக்குத்தந்தார்கள். அதையே பழமைபாராட்டத்தகுமோ ? இன்றுமுதல் திருமாலைப் பரமாகக்கொண்டு, அக்கிரபூசைசெய்து, முதல் அவிர்ப்பாகத்தையுங்கொடுத்து, மற்றவர்களுக்கும் வரன்முறைப்படி நடத்தக்கடவாய். தாமதகுணம் பெற்ற சிவனே மூலமென்றுசொல்லும வேதவாக்கியங்களைப் பரிகரிப்பாய். இனி இப்படி யாவரும் நடந்துகொள்ளப்படுமென்று பிரமனையும் சபையாரையும்நோக்கிச்சொல்லிய விசேடத்தை நந்தியம்பெருமான் கேட்டவுடன் இருசெவிகளையும்பொத்தி, பஞ்சாக்கரத்தைசெபித்து, சிவநாமங்களைத்துதித்து, இறைவனே, இப்பாதகன்பிதற்றுந் தூடணைகளையுங்கேட்கவோ ! அடியேனை ஏவினீரென்று வருந்தி, உடனே வடவானலத்தைப்போலச் சீறியகாலையில், அக்கொடுமைக்கஞ்சினவர்களாய்த் தேவரொடுங்கிவாடவும், அக்கினி மனம்வருந்தி ஓடவும், அண்டங்களனைத்தும் நடுநடுங்கி ஆடவும், சிவராசிகள் தத்தளித்துச்சோரவும் புவன அடுக்குகள் குலைந்துமாறவும், இந்த உற்பாதத்தினைக்கண்டு விண்டுமுதலோர்திகிலடைந்து, தக்கனுக்குப்பயந்து, இவன்பேசியதைத்தகாதென்று சொல்லாமலிருந்த நமக்கென்னதண்டனை வருகின்றதோவென்றழுங்கினார்கள். அத்தருணத்தில் நந்திதேவர்கண்களில் அக்கினிப்பொறிசிதறத் தக்கனைப்பார்த்து, உமாமகேசுவரனை இகழ்ந்த உன்வாயைத்தொளைத்து நாவையரிந்துவிடுவேன், ஆனால் இறைவன் அனுமதியில்லாதபடியால், மன்னித்தேன், இக்காரணத்தினால் நீ பிழைத்திருக்கப்பெற்றாய், இனி ஒருபோது இகழ்வையாயின், உன்தலையை வெட்டித்தள்ளுவேனெனக்கூறி இம்மகத்தில் முதல் அவி எமது இறைவனுக்கு இல்லையாயின், அவருக்குமேலானவர்கள் யாரிருக்கின்றார்கள், பரமசிவத்தின் கட்டளையில் அடங்கிநடக்கின்ற விண்டுவைப் பரம்பொருளாக நினைக்கின்றாயே! ஆதலால் பரம்பொருளாகிய பரமசிவனை நீக்கி யாகஞ்செய்கின்றவன் சிரமறக்கடவது. மேலும், எமது இறைவனை இச்சபையில் நிந்தைகூறியபடியால், அவரருளாற்பெற்ற செல்வப்பெருக்கனைத்தும் சிலநாளில் அழிந்துபோகக்கடவது, உன் மனோபீட்டப்படிக்குத்தந்த தயாநிதியை வசைபேசிய உன்தலையற்று, ஆட்டுத்தலையைப் பெறக்கடவாய், தேவாதிதேவனை நீ பழித்துத்திரிவதை மறாமல் விரும்பிக் கேட்கும் மனவுறுதியைப்பெற்ற இத்தேவர்கள் ஒருவிசை இறந்தும் பிறந்தும், பின்பு அளவற்றகாலம் சூரனென்னும் அவுணனால் வேதனைப்பட்டுத் துக்கசாகரத்தி லழுந்தக்கடவதென்று கொடியசாபமிட்டு, சபையாரைச் சட்டைபண்ணாமலெழுந்து, கணங்கள்சூழக் கயிலைக்குப்போய்இச்செய்திகளை இறைவனுக்கு விண்ணப்பஞ்செய்து, கிழக்குக்கோபுரவாயிலில் தம்மிறைமையைச் செலுத்தியிருந்தனர். எமது இறைவனாகிய நந்திபெருமான் போனபின்பு, சபையிலிருந்த விட்டுணுமுதலானோர்கள்பயந்து, விபரீதம்விளைந்ததென்று வருந்தி

னார்கள். பிரமன் இச்சாபங்களை எண்ணி எண்ணி ஏக்கமுற்று, பிள்ளையின் உத்தரவைக்கடக்கப்பயந்து வருந்தி, யாகத்தைமுடிக்கவும் அஞ்சி, நிறுத்திவிட்டான். இவை அனைத்தையுங்கண்ட தக்கனென்றும்பேசாமற் கறுவி, உள்ளே பயம்வருத்த வெளிக்குச் சந்தோடித்தவனாய்ச் சபையைவிட்டு எழுந்து, தேவர்சூழ்ந்து துதித்துவரத் தன்னகரத்தை அடைந்தான்; மற்றவிண்டு முதலியோர்கள் நந்திபெருமானிட்ட சாபத்தை நினைந்து நினைந்து மனவாட்டத்தோடு தத்தம்பதங்களிற் சேர்ந்திருந்தனர்.

பிரமன்யாகப்படலம்
முற்றிற்று.

தக்கன்சாலைசெய்படலம்.

மேற்கூறிய பிரமயாகம் சிதைந்த நாள்முதலாக தேவர் முற்றத்துறந்த முனிவர் யாதொருவேள்வி விரதங்களைச்செய்யப் பயந்திருப்பதை ஊழ்வழிப்பட்ட தக்கன் அறிந்து, ஒருதினம் சபையில்வந்திருக்கும் விண்ணவராதியோரைநோக்கி, வேதாகமங்களை வரையறக்கற்ற நீங்கள் வெகுகாலமாக யாகாதிகிருதுக்களை நடத்தாமலிருப்பதற்குக்காரணமென்ன என்றுகேட்க, முன்னாள் பிரமன் தொடங்கிய மகத்திற் சிவனுக்கு அவிப்பாகங்கொடுத்து நிறைவேற்றாமையினாலும், நந்திபெருமானிட்ட சாபத்தினாலும் பயந்து ஒருகருமத்தையும் செய்யாமலிருக்கின்றோமென்று சொல்லக்கேட்டு நகைத்து, ஒருகாவலனாகிய நந்திபெருமானிட்ட சாபத்துக்குப்பயந்தோ? வேள்விகளை மறந்தீர்கள். நல்லகாரியம். முந்தநாம ஒருமகத்தைச்செய்து முடிக்கின்றோம். அதன்பின்பு நமது கட்டளைப்படிக்கு நீங்களும் நடத்துவீரெனக்கோபித்துச் சொன்னமாத்திரத்தில், ஐயனே, அப்படிக்கே செய்துவருவோமென்று நடுங்கிச் சம்மதிக்க, அவர்களனைவரையும் போகச் செலவுகொடுத்தனுப்பிய பின்னுட்பின்னர் பிராரத்தகன்மந்தூண்ட யாகத்தைச்செய்யநினைந்து, பிரமனுக்கு ஒப்பாகச்சிருட்டிக்கவல்ல மயனை அழைப்பித்து, நாம் ஒருயாகஞ்செய்ய நினைந்ததால், அதற்குவரத்தக்க தேவர் முனிவர் மன்னவர் பாதலவாசிகளனைவரும் இருக்கச்சாலைகளும், அதற்குரியபண்டங்கள் வைக்குமிடங்களாதியாக விசாலமாக வேதவிதிப்படி நிருமிக்கக்கட்டளையிட, அவன் சேவித்துப்போய், கங்கைக்கரையிற் கனகலமென்னும் பவித்திரமாகிய இடத்தில் யாகசாலைசெய்ய உத்தேசித்து, ஆயிரயோசனை யகலநீளமுள்ளதாக மதிலெழுப்பி நான்குதிக்கினும் மகமேருவுக்கு ஒப்பான கோபுரங்களை நிருமித்து அண்டச்சுவரைப் போன்ற மதில்களினிடங்கடோறுங் கொத்தளங்கள் அமைத்து, மிகுந்த காவலையுடைய ஒருகோட்டையாக்கி, அதனுட்புறங்களில் தேவகன்னியர் இரிடிபத்தினியர் இருக்குமிடங்களும் அவர்கள் உல்லாசமாயுலாவுஞ் சோலைகளும் நந்தவனங்களும் நீராடயோக்கியமான தடாகங்களும் உண்டாக்கி, தபசிகள் பிராமணர்முதலியோர் இருக்குமிடங்களும் யாகத்துக்குவந்தவர்கள் இட்டமாகப் புசிப்பதற்குவேண்டிய பதார்த்தங்கள்வைக்கும் அறைகளும் அளவற்றவர் பந்திதீர்ந்துண்ணுஞ்சாலைகளும் சுவர்க்கலோகமும் நாணும்படி உண்டுபண்ணி

விருந்தினருக்குதவியாகத் தாம்பூலம் கலவைச்சாந்துகள் புட்பவகைகள் பனி நீர்முதலானவை வைக்கும் அறைகளும் பீதாம்பரவாடையாபரணங்கள் திர வியக்குவைகள் நவரத்தினராசிகள் முதலாகிய தானத்துக்கு யோக்கிய மானவைகளைச் சேர்க்குமிடங்களும் அமைத்து சத்தியலோகமோ என்றை யுறத்தக்க வேள்விச்சாலைகள் விஸ்தீரணமாகச்செய்து, நடுவில் நூறுயோச னைப்பிரமாணத்தி லிடந்திருத்தி ஓமமுடிக்கத்தக்க மூன்றுவகைக் குண்டங் கள்வேதிகைகள்விதித்து,பலவகைச்சித்திரங்களைநிறுவி, இவ்வகையாகச்சகல கருமங்களையுஞ்செய்து முடித்தவுடன் தக்கனைக்கண்டு, தேவரீர் ஆக்ஞையின் படி யாகசாலைமுடிந்ததென்று விண்ணப்பஞ்செய்ய, தக்கன்போய், அவைக ளைக்கண்டு மகிழ்ந்து, சிற்பியைக்கொண்டாடி வேதவிதிப்படி வேள்வியை நடத்தநினைந்து அருகிலிருந்த மாதவர்களைநோக்கி, யாகத்துக்குவேண்டுஞ் சமித்துத்தருப்பை மாவிலை புட்பபத்திரங்கள் பசுக்கள்முதலாகவேண்டும் உப கரணங்களைச் சேகரிக்கும்படி! அனுப்பி காமதேனு பஞ்சதருக்கள் சிந்தாமணி சங்கநிதி பதுமநிதிகளை வரவழைத்து, தான்நடத்தும் யாகத்துக்கு வருகின்ற வர்களுக்கு வேண்டியவற்றையுதவக்கட்டளையிட்டுயாசகர்களுக்கு வெறுக்கக் கொடுக்கச் சிலரை நியமித்து எல்லாப்பண்டங்களையும் வரன்முறையாகத் தகுந்த இடங்களிற்சேர்க்கச் சிலரையேவித்தன்சுற்றத்தவர் முப்பதினுயிரவ ரும்அவர்களுடன் வரத்தக்கவர்களும் தன்னுடன் பந்திபோசனமுதலானவை களை வரன்முறையாக உபசரிக்கப் பலருக்குங் கட்டளையிட்டு மற்றவர்களுக் கும்வேண்டும் பண்டபலாதிகளைக் குறைவறக்கொடுக்கச் சிலரைஏற்படுத்தி இவைகளனைத்தும் நடந்துவருங்காலத்தில் சிவன்தவிர மற்ற மகாவிட்டுணு பிரமன்முதலிய விண்ணவர் மண்ணவர் பாதலவாசிகள் அனைவரும் இவ்வேள் விக்குவரக்கடவதென்று அறிவித்து வருவீரெனப் பலகோடிதூதரை ஏவிய பின்பு வந்தபண்டங்களை அவ்வவ்விடங்களிற் சேர்த்துக்கொண்டு பசுக்களை யூபத்தம்பங்களிற் பந்தித்து அதற்குரிய பூசாவித்களை வரலாற்றுமுறைப்படி செய்யத் தொடங்கி நியமித்த முகூர்த்தகாலத்திற் குண்டமண்டல வேதிகை களையும் யாகோபகரணங்களையும் வேதவிதிப்படி சுத்திசெய்து துவாரபால ராதியாகியதேவாங்கங்களையும்அவ்வவ்வினங்களில்ஆவாகனஞ்செய்துஅதற்கு வேண்டிய தருப்பைமாவிலை வகைகளைக்கொண்டு செய்துமுடித்துவருகையில் முன்னர் தக்கன் அனுமதியிற்சென்ற தூதர்விரைந்தோடி சத்தவிருடிகளாகிய முற்றத்துறந்தவர்சூரியசந்திரர் திக்குப்பாலகர்முதலானவர்களுக்கு அறிவித்து மனோவதிப் பட்டணத்துக்குப்போய் பிரமனைச்சேவித்துசுவாமி!உமது புத்திர ராகிய தட்சப்பிரசாபதியாகஞ்செய்ய எத்தனித்திருக்கின்றார். அவர் யாகத் திற்குத் தேவரீரை வரச்சொன்னாரென்று விண்ணப்பஞ்செய்து வைகுந்தத் தைச்சேர்ந்து விஷ்ணுமூர்த்தியைப்பணிந்து வேள்விக்குவரும்படி தெரிவித்து இந்திரன்முதலாகிய விண்ணவர்களுக்கும் அறிவித்துமீண்டனர். அக்காலத் தில் விஷ்ணு ஸ்ரீதேவிபூதேவியுடன் கருடன்மே லாரோகணித்து சித்தர்முத் தர் சூழ்ந்துதுதிக்கப் புறப்பட்டதைப் பிரமன் அறிந்து கலைமகள் சமேதனாய் அன்னத்திலேறிப் பெரியோர்கள் சூழ்ந்துவரத் தன்னுலகத்தைக் கடந்து

போக இந்திரன் அயிராணியுடன் அயிராவதத்திற்செல்ல ஆசிரியனாகிய பிருகற்பதி தேவர்மகிழ்ந்து விமானத்திலேறித் தொடர்ந்துவர அரம்பாமாதர்கள் தங்கள் இறைவியைக்கூடிநடக்க சந்திரசூரியர்முதலிய நவக்கிரகங்கள் நெருங்கிப் பிரயாணப்பட்டுச்செல்ல அவர்களிற் சந்திரன்தேவியராகிய தக்கன்பெண்கள் பிதாசெய்யும் யாகத்தைப்பார்க்க அதிக மகிழ்ச்சியுடன் தொடர்ந்துவர, அளகைக்கரசனான குபேரன் தன்சுற்றத்தாருடன் விமானத்தில்வர, இவ்வாறாக யாவருஞ் சேர்ந்துவருகையில், தக்கன் தன்மருகராகிய இருடிகளுடன் எதிர்கொண்டுதழுவி, க்ஷேமங்களை வினவி, அழைத்துவந்து, விண்டு பிரமன் இந்திரன் முதலானவர்களைத் தகுதியாகிய பீடங்களில் இருக்கச்செய்தான். இவர்களுடன்போந்த இலட்சுமி சரசுவதி இந்திராணி அரம்பையர் தன்பெண்கள்முதலானவர்களை வேதவல்லி ஆதரித்துப் பீடங்களில் வீற்றிருக்கச்செய்தனள். இதுவல்லாமலும் பூமியிலிருக்கின்ற பிராமணர் தபசிகள்முதலானோர் தக்கன்யாகத்தில் திருத்தியாகப் புசிக்கலாமென்னுங் களிப்புடன் சமுத்திரம் புரண்டதையொத்து அடைந்தனர்கள். ஆதிசேடன் அட்டமாநாகங்கள் முதலானவர்கள் தங்கள் தேவிமாருடன் வந்துசேர்ந்தார்கள். இப்படி பொன்னுலகவாசிகள் பூமண்டலத்தார் பாதலவாசிகள் நெருங்கியிருக்க, தக்கன்மத்தியில் வீற்றிருந்தான். அக்காலத்தில் வாயுப்பெருக்கினாலோங்கிய சமுத்திரவொலியைப்போல வேதகோட்டமொலிக்க இவ்வகையாகிய மகோச்சவகாலத்தில், அறிவிக்கப்போன தூதர்வந்து, தக்கன்பாதங்களிற்சேவித்து, தேவரீர் கட்டளைப்படி எங்குஞ்சொல்லிவந்தோமென்று விண்ணப்பஞ்செய்தவர்களைக் கருணையாகப்பார்த்து, நீங்கள் அறிக்கையிட்ட இடங்களில் யாவராயினும் தடுத்துப்பேசியதுண்டோ என்றுவினவ, சுவாமி! அகத்தியன் சனகன் அத்திரி வசிட்டன் பிருகு ததீசி துருவாசன் பராசரன் இவர்கள் உம்முடையயாகத்தையிகழ்ந்து, தாங்கள்வரச் சம்மதமில்லாமற் சொன்னார்கள். இவர்களல்லாமலும் மற்றவரனைவரும் சந்தோடமாக ஒப்புக்கொண்டார்களென்று விண்ணப்பஞ்செய்யக்கேட்டு நகைத்து, முனிவர்களில் இவர்கள் சிவனுக்கு உவந்த பத்தர்களோ என்று கோபித்து, இவர்கள் வாராததனால் ஆகவேண்டுவதென்னவென்று இகழ்ந்தான். அதைக்கேட்ட தேவர்கள் வாட்டமுற்றிருந்தனர்.

தக்கன்சாலைசெய்படலம்
முற்றிற்று.

ததீசிப்படலம்.

இவ்வகையாக யாவரும் நெருங்கியிருக்கின்ற தருணத்தில் பரமசிவன்மேற் சமருக்கெழுந்த விட்டுணுவைவென்ற ததீசிமுனிவர் மனம்பொறாமல் அளவற்ற சீடர்கள்சூழ யாகசாலையிற் புகுந்து வருவதைத் தக்கன்கண்டு, இவன்சிவன் பட்சத்தானல்லன், நம்மாணைக்குப்பயந்து வந்தானென்று அவர்மேலிருந்த கோபந்தணிந்து, வாரும்வாருமென்று அருகிலிருந்த ஆதனத்திலிருக்கச்செய்தவுடன், ததீசிமுனிவர் தக்கனைப்பார்த்து, என்னைவரவழைத்த

காரியமென்ன, இவ்விடத்தில் நீ நடத்துங் கிரியையாது, உன்னெண்ணமென்னென்றுவினவ, முனிவனே! சிவன்தானேவந்து, என்பெண்ணைத் திருக்கலியாணஞ்செய்து, என்மனம்வருந்தவும், பெண்மயங்கவும், மறைந்துபோனதும் தெரியுமே, பின்னர்மற்றொருநாள்என்னை அறியாமலும் என்னுடைய அனுமதி பெறாமலும் அக்கன்னிகையைக் கூட்டிக்கொண்டு போய்விட்டனன். அதையும் நினையாமல் அவர்களைப்பார்த்து வரலாமென்று கயிலைக்குச்சென்றேன். அப்போது மரியாதையில்லாமல் தயைதாட்சணியமற்று என்பெண்ணைத் தன் வயப்படுத்திக்கொண்டு, வாயில்காக்கும் பூதவீரரால் தடைசெய்வித்து, அவமானப்படுத்தினன். என்பெண்ணைப்பற்றி அதையும் பொறுத்துக்கொண்டு என்னிடத்தைச்சேர்ந்தேன். அதன்பின்பாவது என்மனக்குறையை நீக்கினவனல்லன். பெண்ணாவதுவந்து விசாரித்தாளில்லை. அவளென்செய்வள், அவன் போதனைக்குட்பட்டுத் தாய்தந்தையைநினையாமல் மறந்துவிட்டனள்போலும். இப்பால்சிலகாலத்திற்குப்பின்னர் என்பிதாஒருயாகஞ்செய்யத்தொடங்கினர். அதிற் சிவனுக் கவிகொடுக்காமல் தடுத்தேன். அப்போது அவ்விடத்திலவந்திருந்த நந்திபெருமான் கோபித்துச் சபித்துப்போயினன். அதற்குப்பயந்து யாகத்தைப் பூர்த்திசெய்யாமல் நிறுத்திவிட்டனன், அதுமுதல் என்றனைக் கும் நந்திபெருமான் சாபத்துக்கும் அஞ்சி யாகமென்பதை யாரும் நினைந்தாரல்லர். ஆதலால் சிவனுக்கு அவியில்லாமல் ஒரு யாகத்தைச்செய்து முடித்து அவ்வாறே இனிமேல் நடப்பிக்க எத்தனித்துச்செய்கின்றேன், பாகஅபன் முதலானோர்கள் வந்திருக்கின்றார்கள். அதுகாரணமாக உங்களுக்குஞ் சொல்லி அனுப்பினேன், இதுசெய்தியென்று முடித்தவுடன் ததீசிமுனிவர் இனிப்புண்ணியமடங்கப் பாவமேலிடும் காலம்சேர்ந்தது, இக்கொடியவன்செயலும் இறைவன்செயலும் ஒத்திருக்கின்றதென்றெண்ணி நகைத்தனர், அக்காலத்தில் ஊழிநாற்றின்மேல் சிறியெழுந்த வடவையைப்போலத் தக்கன் ததீசிமுனிவனைப்பார்த்துக் கோபித்து, என்மொழிகளைக்கேட்டிகழ்ந்து நகைத்த நீ சிவனுக்கன்பனோவென்றுகேட்க, ததீசிமுனிவர் சொல்லுவாராயினர்.

மாலயன் முதலான அளவற்ற சீவராசிகளை ஆதியிலுண்டாக்கிய பிதாவாய்ப் பின்பு காத்து மாற்றி எங்குந்தானாய், ஏகனாய், உயிர்க்குயிராய், பரப்பிரமமாய் விளங்கிய விச்சுவாதனை நீக்கி யாகத்தைச்செய்யத்தொடங்கினாய்; சகலவேள்விகளினும் தேவர்களுக்குக்கொடுக்கும் அவியைக்கொள்ளப்பட்டவனும், அதற்குக்காரணனாகிய அக்கினிதேவனுக்கும் காரணகர்த்தனும் அவன் முதலியோரைப் பாதுகாப்பவனும் சங்கரனென்றே வேதாகமங்கள் முறையிடுகின்றன, வேறுகடவுளருளராயின் காட்டுக்கடவாய். பிரமன் விட்டுணு அக்கினி முதலானோர் இச்செல்வத்திலிருக்க முன்னாளி லனுக்கிரகஞ்செய்தவனாய் யாவருக்கும் மூலகாரணனாய்த் தனக்குமேலொருவருமில்லாதானாயிருப்பவன் எங்கள் நீலகண்டனல்லது, விண்ணவர்களில் யாவரிருக்கின்றனர், தேவாதிதேவனாய் எப்பொருட்குமிறைவனாய்ச் சர்வஞ்ஞனாய் மும்மைப்பெருந் தேவர்கட்குநாயகனாய்ச்சோதியாய் ஆதிக்காதியாய் அந்தத்துக்கந்தமாய்ச்

சர்வபரிபூரணனாய் இருப்பவன் சிவபெருமானென்று அவ்வேதங்களிற்சொல்லும், பிரமன் முதலானோர்களுக்குப் பதியாகப்பட்டவன் சிவபெருமான், அவன் அசையாமல் அணுவுமசையாதென்னும் சுருதிகளின்றுணிவும் இவையனைத்தையும் கற்றுணர்ந்த நீ மறக்கலாமோ? அநித்தியத்தை நித்தியமாக வெண்ணி, விறுதாவாக புத்திமயங்கி, தீராதமாயையிற்பட்டுக் கவலையுற்றும். வேதவிதிக்கும் பிறழ்ந்துநடப்பது பிதாவைநீக்கி மற்றொருவனை தேடுவதற்கொக்கும். ஆதலால், சகலதேவர்களுக்கும் ஆதியாகிய இறைவனை இகழ்வது பேதைமையல்லது பெருமிதத்துக்கடாதே, தான்கெட ஒருவனும்எண்ணுவனோ. வேதாகமவொழுக்கத்துக்குப் புறம்பாய் யாகஞ்செய்பவன் உன்னையொருவனையே கண்டோம். நீ நினைப்பது தகுதியானதன்று, ஆதலால், பழயவழக்கப்படி ஆதிதேவனாகிய பரமசிவத்துக்குமுதல் அவிர்ப்பாகங்கொடுத்து வேள்வியைமுடிப்பாயானால், இச்செல்வத்தை அனுபவித்து நீடித்திருப்பாயென்று தயையாய்த் ததீசிமுனிவன் சொன்னதைக்கேட்டு நல்லகாரியம், சிவபெருமானுக்குரிய பாகத்தை விட்டுணுவுக்குத்தந்து யாகத்தை முடிக்கின்றேனென்று தக்கன் மாறுத்தரங்கொடுத்தான். இவன் தகாதகாரியத்தைக் குறித்தானென்று ஆலோசித்து யாவராலும் பூசிதப்படுத்தப் புகழவல்ல சிரியனை நிந்தித்துப் பூரியனை வந்திப்பது உன்போல்வார்களுக்கு அடுக்குமோ? வீணாக உன்சுற்றத்தாரனைவருக்கும் முடிவை விளைக்கின்றாய். இதனை நன்றாயோசித்து நடந்துகொள்ளென்றுசொல்ல, தக்கன் நகைத்து உன்னுடைய உருத்திரனைப்போன்றவர் ஏகாதசருண்டு, இவர்களல்லாமல் ஈசானமூர்த்தியுமுண்டு. அவர்களுக்காவது முதலவியைத்தந்து வேள்வியைநடத்துவேன். சிவனுக்குத் தரமாட்டேனென்றுசொல்ல, ததீசி நகைத்து புவனங்கள் அனைத்தையும் நாசப்படுத்தித் தம்மிலொடுக்கி மீளவும் பிதாவாய் உண்டுபண்ணி யாவருந் துதித்துவணங்கும் உருத்திரமூர்த்திக்கு அவன் வடிவையும் பெயரையும், அவனனுக்கிரகத்தினாற் பெற்றவர்கள் ஒப்பாவார்களோ? உருத்திரமூர்த்தி சர்வாந்திரியாமியாயிருந்து நடப்பிப்பான். அவன் பாதபூசையைச் செய்தவர்கள் அவனுருவும்பெயரும் பெறுவார்கள். அத்தொகையை இவ்வளவென்று கணிக்கப்படுமோ? அவர்களைக்கர்த்தவியமாகவும் பேசப்படுமோ? ஆனால் பிரமன்முதலானோர் துதிக்கவிரும்பார்கள், எல்லாச்செல்வப்பெருக்கையும் அனுக்கிரகஞ்செய்த இறைவனிடத்தில் நேயமில்லாதகாரணம் நிமோபவமென்பதை நீ நினைத்தாய் இல்லையென்றுதெளிவித்த ததீசியைத் தக்கன் பார்த்து, சிருட்டி திதிசெய்யும் பிரமவிட்டுணுக்களாகிய நீங்களிருக்க கடைத்தொழிலாகிய சங்காரத்தொழிலை நடாத்தும் உருத்திரன் ஆதியாகவிருக்க வேண்டியகாரணமென்ன என்றுகேட்க பிரமசிரத்தாழ்வடமணிந்த இறைவன் பாதகமலங்களைச்சிந்திக்கும் ஞானவானாகிய ததீசி மாறுத்தரஞ்சொல்லுவார். இருவரோடொருவனாக நினைந்த உருத்திரமூர்த்தியை ஆதியென்றறியாதவனே! அவன்பெருமைகளைச் சொல்லக்கேள். ஆதியந்தமில்லாத எமது கடவுளுக்கு உருவம் நாமக்கிரியைகளில்லை. இதனை வேதங்களே சொல்லும். அஞ்ஞான இருளில்மூழ்கிய சீவராசிகள் வினையைநீக்கக் கருணையால் மேற்

கூறிய முக்குணங்களையும் மேற்கொண்ட ஆத்துமாக்களுக்குப் பழைய உணர்வைவிளக்கி பிரமன்முதலானோரைச்சிருட்டித்து, அவர்களுக்குரியபணிகளைக்கட்டளையிட்டு சங்காரகிருத்தியத்தைத் தானேமேற்கொண்டான். அதேனென்றால், கணக்கிறந்த சிவராசிகளைச் சிருட்டிக்கவல்ல பிதாவாகிய தனக்கல்லது மற்றவர்களுக்குமுடியாது. ஆதலால், சர்வசங்காரகிருத்தியத்தைத் தானேமேற்கொண்டான். முன்னொருநாள் தேவர்கள் இறைவன் பாதகமலங்களிற்சேவித்து,இப்பணிவிடைகளைஎங்களுக்குக்கட்டளையிட்டீர், இதற்குநிவாரணம் எப்போதென்றுகேட்க, உங்கள் ஆயுள்வரையும் இக்கருமங்களை நடத்திப் பவித்திரமாகிய நீறணிந்து பஞ்சாக்கரத்தைச் செபித்திருப்பீராயின் நன்மையயடைந்து நம்மைச் சேருவீர்களென்று அனுக்கிரகஞ்செய்து, அது காரணமாகச் சங்காரத்தொழிலைத் தானே செய்துவருவான். அவனே ஐந்தொழில் முதல்வனென்று வேதங்கள்சொல்வது உனக்குத்தெரிந்ததோ? இதுவல்லாமல்உருத்திரனென்னும் திருநாமம் ஒப்பற்ற பரமசிவனுக்கும் அவன்பிள்ளைகளுக்கும் அவர்பாதங்களைக்கருதும் உருத்திரகணங்களுக்கும் அவருருவந்தரித்தவர்களுக்கும் அக்கினிக்கும் சொல்லப்படும். துக்கசாகரத்தில் அழுந்தின சிவராசிகளைப்பாதுகாக்குந்தன்மையினால் பரம்பொருள் உருத்திரமூர்த்தியென்னும் நாமம்பெற்றான். இதற்கொருதிட்டாந்தம் சொல்லுவேன்.

முன்னாளில் சில இருடிகள் பரம்பொருளாவான் இவனவனென்று வாதாடிப் பிரமனை வினவினார்கள், அவர் கருணைகூர்ந்து இருடிகளே! கேட்பீராக எங்களைத் தேவரை வேதாகமங்களைவிதித்து தருந்தொழில்களையுங்காட்டிச் சங்காரத்தொழில் தம்மதாக்கி, அனுக்கிரகத்தினால் ஐந்தொழிலையுநடாத்தி, பிறப்பிறப்புருவநாமச்செய்கைகள் இல்லாமல் அருவாய் உருவாய்ப் பூரணமாயிருப்பவன் சிவபெருமானென்று அறிவீர்,இதனை வேதங்களேசொல்லும். அவனதுநிலையை நானும் விட்டுணுவும் இன்னமுங்கண்டு அறியமாட்டாமல் உழல்கின்றோம். இக்காரணங்களினாற் சிவபெருமானே பரம்பொருளாகக்கொள்வீரென்று பிரமன் போதித்து நிற்கையில் இருடிகள் மயக்கநீங்கி, நான்முகனைச் சேவித்து பிதாவாய் எங்களைப்படைத்தாய் இன்று குரவனாய் வந்து சயத்தையுந்தெருட்டினாய்.இதனால் ஈடேறிக்கதிசேரப் பெற்றோமென்று கொண்டாடும் முனிவர்களைப்பார்த்து இன்றுமுதல் பரமசிவன் பாதங்களைச் சிக்கெனப்பற்றிச் சிந்தித்துப்பூசித்து அருச்சித்து ஈடேறக்கடவீர்கள்; விபூதிகண்டிகை பஞ்சாக்கரத்தைக் கனவிலும் மறக்கவேண்டாம். இச்செய்கையினாற் சனன துக்கத்தைக்கடந்து இறைவன் பாதநீழலில் வாசமாயிருக்கப் பெறுவீர்களென்று தெருட்டி விடைகொடுத் தனுப்பினார். ஆதலால் எங்கள் ஈசனே ப்ரப்பிரமம், மற்றதேவர்கள் உயிர்த்தொகையாகும்; இவ்வுண்மையை உன்னிடத்து அன்பாய் நீ பிழைக்கும்படி சொன்னோம். இவையல்லாமல் ஆதியில் உன் பிதாவாகிய பிரமன் சிவபிரான் பெருமைகளைவிரித்து உனக்குப் போதிக்க அறிந்தும் அருந்தவங்களைச்செய்தும்அவன் கருணையினால் இச்செல்வத்தைப்பெற்றும் யாவராலும் பூசிக்கவாழ்ந்தும் இருக்கின்ற உனக்கு நாசமடையக்காலம் நேர்ந்தமையால் அதனை மறந்தாய்; இதுவல்லாமல் உன்பிதா

வாகிய பிரமன் விஷ்ணுவுமுதலானோர் உன்னைப்போலவே அவர் மாயையில் அழுந்தி மடிதற்கேதுவான உன்சபையில் வந்திருக்கின்றார்கள்; நீயும் உன் வருக்கத்தாரும் மற்றவர்களும்பிழைக்க நினைந்தீரானால் பரமசிவனுக்கு முத லவியைத்தந்து யாகத்தைமுடித்து புகழை அடையக்கடவாயென்று பல படச்சொன்னார்.

ததீசிப்படலம்
முற்றிற்று.

ததீசியுத்தரப்படலம்.

இவ்வகையாகத் ததீசிமுனிவர் பரமசிவத்தினது ஒப்பற்ற குணாதிசயங் களையும் பரத்துவகிருணயங்களிற் சிலவற்றையும் விவரித்துஉரைக்கவதனைக் கேட்ட தக்கன்நகைத்து நீசொல்லிய மேலானபரம் ஊர்ப்புறம்புகளிலிருக்கும் சுடுகாட்டிற் கிடக்கின்ற எலும்பையும் தலைகளையும் சாம்பலையும் அணியுமோ புலால்நாறும் பிரேதத்தை ஏந்தித்திரியுமோ! கழிந்தகேசத்தை முப்புரிநூலாக அணியுமோ! வராகத்தின்கோடும் ஆமையோடும்தரிக்குமோ! உலகமழிய உயிர் களைச் சங்கரிக்குமோ! புலியதளுடுக்குமோ! யானைத்தோலைப் போர்க்குமோ! கொடிய அனல் மான்சூலமுமேந்திப் பிச்சைக்கெங்கும் உழலுமோ! பேயனைப் போல் நடனமும்செய்யுமோ! பூதங்களைப் படையாகக்கொண்டு உலாவுமோ! காளமாநாகங்களை யாபரணமாகச்சூடுமோ! நகுவெண்டலையைச் சிரத்திலே தாங்குமோ! வேற்றுருக்கொள்ளுமோ! மாட்டின்மீதேறுமோ! ஆலத்தையுண் ணுமோ! பேய்கள்சூழச் சுடலையிலாடுமோ! ஒருத்தியைச் சடையிலும் மற்றொ ருத்தியை இடையிலும் இருத்துமோ! பிள்ளைகளையும்பெறுமோ! தாமதகுணத் தைப் படைக்குமோ! இன்னம் அளவற்ற துர்க்குணங்களைப்பெறுமோ! இவ் வாறான செய்கைகளினால் உங்கள் ஈசனொருவகைப்பட்ட குணமுள்ளவன் அல்லன், பரமாயிருப்பவன், பரிசுத்தனாய்த் தயாநிதியாய்ச் சகலமங்கலகுணங் களையும் பெற்றிருக்கவேண்டும்; இதனால் மூலமென்னும் பெயர்பெறலாம். இத ற்குப்புறம்பானவனாதலால் அவனுக்குச் சிறந்தயாகத்தில் அவிர்ப்பாகம் தரவே மாட்டேன், மேலும் இனி எக்காலமும் நடக்கவழியாது. இதனை உறுதியாகக் கொள்ளக்கடவாயென்று அஞ்சாதுசொல்லிய தக்கன்மனத்துணிவை அறிந்து தபோநிதியாகிய ததீசிமுனிவன் எமதிறைவனை இவன் பழிகூறலாமோவெ ன்று சீற்றங்கொண்டு ஆலகாலத்தைப்போலச் சீறி இறைவன் உண்மைகளிற் சிறிதும் இவன் உணர்ந்தவன் அல்லன். இப்பாதகனுடன் வார்த்தையாடல் யோக்கியமன்று ஆயினும் பிரமன் விண்டுமுதலான தேவர் முனிவர் முதலான வர்கள் நெருங்கியிருக்குமிச்சபையில் விச்சுவநாயகனாகிய சிவபிரானைப்பழித் திகழ்ந்தபடியால் அவைகளின் காரணங்களை யாவரும் அறியத்தெருட்டுவது நமது கடனென்றெண்ணி அடாதக்கா! இம்மகாசபையில் எமதிறைவனாய்த் தேவாதிதேவனாய் விச்சுவநாயகனாய் விளங்கும் பரமசிவனிடத்திற் சிலகுற்றங் களைக் காட்டிப்பேசினையே, அவைகள்வந்த விவரம் யாதுமறியாதவனைப்போற் பெருஞ் செல்வச்செருக்கினால் மயங்கிய மூடனே கேளென்று சொல்லுவார்.

சர்வாந்தரியாமியாய் அருளுருக்கொண்ட நிருமலன் பஞ்சகிருத்தியங்களிலொன்றாகிய அனுக்கிரகத்தினால் தேவர்களில் முதன்மையாகிய பிரமவிஷ்ணுக்களைப்படைத்து பிரமனிடத்திருந்து சராசரப் பிரவஞ்சத்தை படைப்பித்து விண்டுவினிடத்திற்பொருந்தி அவைகளைக்காத்து அவைகளுக்கு உரிய வினைப்போகங்களை யூட்டி நடிப்பித்து அவைகள்பெறும் பதங்களிற்சேர்த்து இவ்வாறாகச் சனனமரண துக்கத்திற்பட்டு அலையுஞ்சீவகோடிகள் சிலகாலம் அல்லலற்றுச் சுகாதீத எல்லையைச்சேர்ந்து களித்திருக்கத் திருவுளங்கொண்டு உருத்திரனாக அண்டரண்ட புவனசராசரங்களையும் அழித்தொடுக்கிப் பின்பு சிருட்டி திதிகருத்தாக்களையொடுக்கி ஏகனாய் நின்று மீளவும் இப்படியே உலகங்களை யுண்டாக்கி தன்னொப்பற்ற திருவிளையாடல்களை நடத்திவருவான். இச்சர்வ சங்காரங்கடோறும் மரித்துப் பிறக்குஞ்சிருட்டி திதித்தலைவரைப் பரமென்றெண்ணித் திரோபவத்தினாழ்ந்து பவத்திற்பட்டு உழலுமூடர்கள் சுருதி குருசுவானுபவங்களினாலே தெளிதற்குக் காரணமாக மாயனென்புகளையும் பிரமன் சிரங்களையும் மாலையாகவும் கேசங்களை உபவீதமாகவும் அணிவான். இவ்விருவர் செய்த தவமுயற்சியினால் சர்வசங்காரகாலத்தில் அவர்கள் களேபரங்களைச் சூலத்திலேந்தி நெற்றிவிழியினாலே நீறாக்கி அந்நீற்றைப் பூதியாகவணிவான். கிருபாநிதியாதலால் தம்மையடுத்த உயிர்கள் பாபரகிதமாய் முத்திபெற்று உய்யும்பொருட்டு இவையனைத்தையும் அணிந்ததேயல்லது இவைகளாலே தம்மைப்புகழும்படியன்று; அகந்தையிற்சிறந்தவனை மற்றவைகளையும்விவரமாக அறிவிப்போம்கேள். முன்னாளில் இரணியாக்கனென்னும் அசுரன் பூமியைப்பாயாகச்சுருட்டிச் சீவராசிகள்வருந்தப்பாதலத்தில் மறைந்திருந்தான். அதைக்கண்டதேவர்கள்நடுநடுங்கி விஷ்ணுவைத்துதித்தார்கள். அவர்கள் வேண்டுகோளின்படி மாதவன்வராகவுருவங்கொண்டு பாதலத்திற்சென்று தன்கூரியதந்தங்களினாற்பாய்ந்து அவ்வசுரனைக்கொன்று பூமியை முன்போல் தாபித்து அச்செய்கையைப் பெரிதாக நினைந்தவனாய்த்தானே பரமெனமதித்துச் செருக்கிப் பூமியைத் தன்கூரிய கோட்டினாற்கல்லி உபத்திரப்படுத்துகையினாலே பிராணிகள்வாடிப் பரமசிவத்தைக்குறித்து முறையிட்டார்கள்; அத்தருணத்திற் சிவபிரான் எழுந்தருளிவராகத்தின் கோடுகளைப்பறித்தான். அதனால் விஷ்ணு தன்செருக்கடங்கி இறைவனைச்சரணடைந்து போற்றிசெய்ய பொறுத்துத் திருக்கயிலைக்கெழுந்தருளி அக்கோடுகளைச் சின்னமாக வணிந்தான், அவை பிறையைப்போல இப்போதும் திருமார்பிற் பிரகாசித்திருக்கின்றன, இதுநிற்க, மற்ற செய்கைகளையும் வேதபூர்வமாகச் சொல்லுவோம், கவனமாய்க்கேள், முன்னொருகாலத்திலே தேவர் அசுரர் இரண்டு திருப்பாற்கடலைக்கடையும்போது மத்தாகநாட்டிய மந்தரகிரி. தாழ்வதைக்கண்டு விஷ்ணு கூர்மமாய்த் தாங்கிநிற்க மீளவுங்கடைகையில் அமுதம்தோன்றிற்று, அத்தனைத்தேவர்களும் அரக்கரும் கண்டு எமதெமதெனப் பொருவதையும் பாராமல் தான்மந்தரத்தைத்தாங்கிய வலியைப்பெரிதாக எண்ணி அகந்தைகொண்டு சிரம்வானத்தைமுட்ட ஓங்கிப்பாய்ந்து பூமிதத்தளிக்கக் கடலைக்கலக்குகையில் யாவரும் இவ்வுபாதிக்கஞ்சி எமதிறைவனைத் துதித்தார்கள். அத்

தருணத்திற் பரமசிவன் அவ்விடத்துக் கெழுந்தருளி ஆமையினேட்டையும் பெருமிதத்தையும் ஏககாலத்திற் பறித்தபோது விஷ்ணு சோர்ந்து நடுங்குற்று த்துதிக்க இரங்கிக் கிருபாநோக்கமளித்து அமுதத்தினைத் தேவருக்குப்பகிரக் கட்டளையிட்டு வெள்ளியங்கிரியைச் சேர்ந்தனன். இறைவன் அநுக்கிரகப்படி மாயன் மோகினிவடிவெடுத்து அரக்கரைவஞ்சித்து அடங்கி விண்ணவர்க்கு அமுதமீந்தான். அங்கமடத்தினேட்டையும் எம்மிறைவன் பன்றிக்கோடுக ளுடன் தரித்தான், ஆமையோடு அணிந்த திருவிளையாடலிதுவாகும்.

இனிச் சிவபிரான் ஐயமேற்ற சரித்திரத்தைச் சொல்லுவோம் ஆதியிலே தாருகாவனத்து இருடிகள்இறைவன்மாயையிற் பட்டுமயங்கி பரமசிவத்தினிடத்து அன்பு செலுத்துவதிற் பிரயோசன மில்லையென்றும் யாகங்கள் செய்தலே மோட்சம் அடைதற்குக் காரணமென்றும் நினைந்து அவ்வாறே நடத்தி வருகையில் இவர்கள் செய்கைகளைச் சிவபிரானே யறிந்து விஷ்ணுவைத் திருவுளத்திற்கருதினர். விஷ்ணு அக்கணத்திலனந்தசயனத்தை நீங்கி வெள்ளியங்கிரியை அடைந்து நந்திதேவர் அநுமதிபெற்று இறைவன் சன்னிதானத்தைச் சேர்ந்து மும்முறை வணங்கித்துதித்து நிற்க சிவபிரான் தன் எண்ணத்தைக் குறித்துக் காட்டி சிங்காதனத்தை நீங்கினவராய் விஷ்ணுகரத்தைப் பற்றிக் கொண்டு வெள்ளிமலையைக் கடந்துபோய் கண்ணனைப் பார்த்து பஞ்சசத்திகளில் ஒன்றாகிய உன்னுருவைக் கொள்ளென்று திருவாய்மலர்ந்தருளினன்; அவ்வாறே மாயன் கோடி சூரியப்பிரகாசமாய் இலக்கணத்துக்கு மேற்பட்ட வடிவுடன் மோகினி யுருவெடுத்து மாயைக்கரசியான பார்வதிகண்டாலும் மயங்கத்தக்க நடைநொடி பாவனையைப் பெற்றுநிற்க தாமுஞ்சிறந்த பிச்சாடன வேடங்கொண்டான் அவ்வடிவின்சீனர் மோகினிகண்டு காமவிகாரத்தினற் சோர்ந்துகர்த்தன் அநுக்கிரகத்தினுல் உணர்வுபெற்றதனுல் அன்றுமுதல் வைகுந்தவாசிக்கு மாலென்னுந் திருநாமமுண்டாயிற்று; ஆதலாற்பரமன் திருவடிவின் சுந்தரத்தையாவராலும் ஒப்பிட்டுப்புகழப்படுமோ பின்பு பரமன் திருமால் தம்முடன்வர முனிவர்களுக் கிருப்பிடமாய்த் தராதலம் புகழுஞ் சிறப்பையுடைய தாருகாவனத்தருகிற் புகுந்து அவரைநோக்கி நம்மைமதியாமல் தவமேபெரிதென்றெண்ணி நோற்கின்ற முனிவர்கள் வாசஞ்செய்யுஞ் சோலைகடோறும் சென்று மையலுண்டாக்கி, அவர்கள்கொண்ட விரதங்களை அழித்து நம்மிடத்துக்கு வருக என்றனுக்கிரகஞ்செய்ய அவ்வாறே மாயன் விடைபெற்றுப்போய் வேள்வியுந் தவமுமே மோட்சத்தைத் தருமென்றெண்ணி நடாத்தும்இருடிகள்வாசமாகிய இடங்களிற்சென்று அளவற்ற மன்மதர் ஏககாலத்திற் கரவேகமாய்ப் பிரயோகிக்கும் புட்பபாணங்களைப்போல விழிமலர்களைச் சுழற்றிப்பார்த்து புன்முறுவல் விளைத்து செம்பஞ்சூட்டிய பாதங்களிலணிந்த சிலம்புகளும் கரங்களிலமைந்த வளையல்களும் கலிக்க அன்னத்தைப்போல மெல்லெனநடந்து கிளிமொழி நிகர்த்துக்கொஞ்சி யாண்டும் திரிவதை இருடிகள்கண்டவுடன் காமவிகாரந்தலைமேற்கொண்டு மதிமயங்கினவராய் விரதவுறுதிகளைமறந்து வேள்விநிலைகள் கலைந்து உடைசோர்ந்து காமவெள்ளம்பெருகவருந்தி யானையுண்ட விளங்கனியைப்போல உள்ளுடைந்து சிவ

கருணையினால் வந்தமோகினியின் இலக்கணவடிவைப் பாதாதிகேசபரியந்தமும் நோக்கிநோக்கித் தவவொழுக்கத்தைத்துறந்து சுடரைக்கண்டவிட்டிலைப்போலப் பலதிசையினின்றும் விரைந்துவந்து சூழ்ந்துகொண்டவராய்ப் பெண்கள் நாயகமே! பெண்கள் சிகாமணியே! உமதுதிருநாமம்யாது! நீரிருக்குந்தான மெது? திருவாய்மலர்ந்தோதும்பெண்ணரசே! நீர்வசிப்பது பூவுலகமோ பொன்னகரோ பிரமனுலகோ மன்மதன்பதியோ வைகுந்தவளநாடோ அல்லது அசுரரை வஞ்சித்தழித்துத் தேவர்களுக்கமுதம்பகிர்ந்த மோகினியோ,பெண்ணே கண்ணே உமது பெருமைகளை யாவராற் புகழப்படும். எங்கள் தவப்பேற்றினால் இவ்விடமெழுந்தருளினீர். அடியோங்கள் இடத்திற் கருணைசெய்து உமதிணைக்கரத்தை யளிக்கவேண்டும். நீரிட்டபணிவிடைகளைச்செய்யக் காத்திருக்கின்றோம். நீர் விரும்பிய அனைத்தையும் இக்கிமிஷத்திலே தரவல்லோம். யாங்கள் காமநோயினாற் பிராணனை யிழப்பதற்குமுன்னே நீர் தயைசெய்து, அதற்குரிய இன்பரசத்தைக் கடாட்சித்துப் பாதுகாப்பதன்றியும் மன்மத பாணத்துக் கிரையாகாமலும் உமது கடக கங்கணங்களணிந்த திருக்கரத்தினாலே சற்றணைத்து ஆதரிக்கத் தயையில்லையோ என்றுவெளுத்த முறுவலைத்திறந்து, கரங்களைநீட்டிப் பலபல விதங்களாகக் கெஞ்சிக்கெஞ்சி இரந்து தொடர்ந்து அக்கினியிற்பட்ட காந்தண் மலரையொத்து மெய்கருகி விரகாக்கினியினால் இறந்தவர்களைப்போலவுஞ் சித்திரத்தை யொத்தும் பொற்பாவையை நிகர்த்தும் அறிவழிந்து, பின்பற்றித் தொடர்ந்தும் நின்றும் விழுந்தும் இவ்வகைகளாக அலைந்து உழன்றார்கள். இவ்விருடியர் இப்பாடுபட்டிருக்குந் தருணத்தில், இவர்கள் பத்தினிமார் வாசஞ்செய்யுமிடத்திற் பரமசிவன்செய்த திருவிளையாடல்களிற் சிலசொல்லுவோம், மோகினிவடிவுகொண்ட விண்டுவைத் தவசிகள் பக்கலுக்கேவிய பின்பு எமது இறைவன் சிவந்தசடைகள் அசைய சர்வாங்க தூளிதராய் திருக்கரங்களிற்சூலமும் பாத்திரமுமேந்தி வேதப்பாதுகைகளைக் கால்களிற்றொடுத்து, ரிஷிபத்தினிகள் வாசஞ்செய்யும் பர்னசாலைகளில் அவர்மனத்துக்கினிய சுந்தரமிகுந்த புருடனாகிப்போய் பண்களுடன் சுருதிகளைப் பாடிக்கொண்டு ஐயமேற்பாரைப்போலத் திரிகின்றபோதில் உயிருக்குயிராய் எங்கும் பரிபூரணமாய் நிறைந்தாட்டும் பரமசிவத்தின் கீதங்களினோசையைத் தவத்தர்தேவிமார்கேட்டவுடன் மனமுருகி யாரம்மா நம்முடைய வீதிகளில் இப்படி அற்புதமாகப் பாடிவருகின்றவர்; அந்தப் புண்ணியனைக்காண மனம் விரும்புகின்றது, வாரும் வாருமென்று ஒருவரையொருவர் கூவிக் கூட்டங் கூட்டமாய் வீதிகளில் நெருங்கி, எமது இறைவனைத் தரிசித்தவுடன் காமுற்று மன்மதபாணங்கள்சாடப் பொறிகலங்கி நாணமட மச்சவரம்புகளைக்கடந்து மனமருண்டு, காமலாகிரிகொண்டு சோர்ந்து, இறைவனிடத்து ஆசையென்னும்வலையிற்சிக்கிய அக்கன்னியர் செய்கைகளிற் சில பேசுவோம், இந்தத்தவசியினது கீதங்கள் செவிகளுக்கு அமுதமாகப் புகுந்தவுடன் தேகம்பரவசமாய்க் கொங்கைகள்விம்மிச் சரீரம்பூரித்து அவையவங்களில் அணிந்திருக்கும் ஆபரணமுதலியவைகள் சிதறிப்போன இடந்தெரியவில்லை,காமக்கவலையிற்பட்டு உழல்கின்றோம். இதனால் இக்கோலம் அற்புத

வடிவாய்க் காணுகின்றதென்று சிலர் சொல்லித் தொடரவும், இவ்வையருடைய செய்கைகளை யோசிக்குமிடத்துப் பிச்சைவேண்டி இவ்விடம்வந்தாரெனக்காணவில்லை. கன்னியரைமையல் பூட்டவந்தாரைப்போலத் தோன்றுகின்றதென்று சிலபெண்கள் பேசவும் இவருக்கானவண்டியையும் உடையையும் தந்து பஞ்சணைமெத்தையிற் சரசசல்லாபமா யிருந்து களிக்க இம்மங்கையர்களில் யாரும் நினைக்கவில்லையெனப் பலர்வருந்தவும், இத்தாருகாவனத்துக்கெழுந்தருளிய இவர் மற்றொருபதிகளிற் சென்றவரல்லர்போலத் தோற்றுகின்றது. ஆகையால் நாம் முன்செய்த தவப்பயனுக்கும் இதற்கையமேயில்லையென்று அளவற்றவர் புகழ்ந்து சொல்லவும் இந்தயோகிக்கு ஆரிடத்திலும் விருப்பமில்லைபோலத்தோற்றுவதாதலால், தொழுகின்றவரைப்போலக்கிட்டி அணைத்து இன்புறுவோமென்பார்சிலர். சிலர் தங்கவளையல்களுடன் ஆடைசோரக் கரங்களை நெறித்து அஞ்சி நாணுற்று, நடுத்தெருவி விருப்பாரைவிட்டு நீங்க மனமெழாமற்றிகைத்து நின்றனர். சிலர்சொன்னத்தையொத்தசாயலையுடைய தேகமெங்குங் காமன்கணைகள் பாய்ந்து உயிரைவாட்ட மயிர்க்கால்தோறுங் காமநீர்பாய்ந்து வருந்துவார். சிலர் பசுபதி பாசம்நீங்கிய தவத்தர்பெறும் பரமபதமிதுவேயென்று ஐயர்கோசத்திலிடத்து விருப்புற்றுப்பார்த்துக்களிமிகுந்து கரங்களிலணிந்த வளைகள்சோரவும் பரிவாய்க்கும்பிடுவார். சிலர் இறைவனிடத்துற்ற ஆசையினால்வருந்தி, இல்லங்களிற்சென்று பாலேடுடன் அன்னமுங்கொண்டுவந்து, கரங்களினின்று கழலும் வளையல்களுடன் பாத்திரத்தி லிடுவார். சிலர் பரமசிவத்தைப்போலக் கோலங்கொண்ட இவர் இவ்வீதிகள் பவித்திரமாக வரக்கண்டும், இடையிலணிந்த வத்திரம் சோர்வதினால் நமக்கென்னகுறை? கண்கள்குளிரத் தரிசித்ததேமேன்மையென்று களிப்பார், சிலர் நாணமே முதலானவைகளை ஒழிந்தோம் தேவரீரிடத் துற்றமையால் மனத்தைவாட்டுகின்றதால் நிறைவரம்பற்றோம். காமக்கனல் தகிக்கின்றது, தேவரீர் சற்றுந் தயைசெய்து பிராணபிச்சை தரவேண்டுமென்று இரப்பார். சிலர் ஐயருக்கையம் பகிரக்கரங்களிலேந்திவந்த அமுதுபடி விரகத்தீக்கொளுத்த வெந்து சாம்பலாகக்கண்டு, அவர் திருமேனியிற் பூசிக்களிப்பார். சிலர் எங்கள் இச்சையைத்தீர்த்து ஆளுமென்று அழகிய பாதகமலங்களிலே தொழினும், சற்றுமிரங்கிக் கருணைசெய்யாது விரைந்துசெல்வது இவர் கருத்தாகக் காணுகின்றதனால் ஐயமிட வேண்டாமென்பார். சிலர் சூலமும் சடையும் நுதல்விழியும் பிறையும் செக்கர்வடிவும் சர்வாங்கதூளனமும் அணிந்திருப்பதினால், இவர் ஆலமுண்டு அடியவரையாண்ட சிவபிரானே யாமென்பார். சிலர் இவ்வையர் குறியினின்று சிந்துந் திவலைகளி னென்றன்றோ? உலகங்களைப்படைக்கும் பிரமனுளனென்று பேசுவார். சிலர் அன்பாகச்சமைத்த அன்னத்தைக் கரங்களிலேந்திக் காமவிகாரம் மதியைமயக்கத் தள்ளாடி நடந்து, ஒளிக்கொளியாக விளங்கும் இறைவன் உருவெளித்தோற்றத்துக்குப் பகிர்ந்துவாடுவார். சிலர் இறைவன் திருவழகைக்கண்டவுடன் ஆசைகொண்டு, உடைசோரக்கண்டு, பெண்குறியை ஒருகரத்தினால்மூடி, மற்றொன்றினால் விழிகளைப்புதைக்க அடங்காமையால் வெட்கி நிற்பார். சிலர் நல்விருந்தாக

வெழுந்தருளினீர். அமுதொத்தபோசன மிடுவோம், அதையுண்டு கருணையுற்று இமைப்போதேனும் எங்களைத் தழுவிக்கலந்தகல்வது உம்மைப்போன்றவர்களுக்கு அழகென்பார். சிலர் சூலத்தையும் பாத்திரத்தையும் ஏந்தி ஏன் வருந்திப் பாதங்கணோவத் திரிகின்றீர். நம்முடைய மாளிகையில் வந்திருந்து பால் நெய்முதலிய அறுவகைச்சுவை யுண்டியைப் புசித்து, எங்களைக்கலந்தின்புற்று சுகித்தேயிருக்கலாம் வாருமென்றுவேண்டித் தொடர்வார். சிலர் தரிசித்த கன்னியர் ஆடவர்காமுறுஞ் சுந்தரமுள்ள வடிவம்பெற்ற நீர் அற்பமான ஓட்டையேந்திப் பிச்சைக்கு எங்குமுழல்வதென்ன அநியாயமென்பார். சிலர் தெய்வகடாட்சத்தினால் இன்றுமமைக் கண்டவுடன் மனமுருகிக்கலையிழந்து வருந்துகின்றோம் இனியாவது தயவுசெய்து எங்களைத் தழுவி முத்தமிட்டுப்போமென்று பெருமூச்செறிவார். சிலர் ஓபெண்களே! நாமே இவ்விடந்தேடி வந்த இத்தவத்தர் நமது விரகநோயையொழித்தல்லதுபோகார், ஏன் மேல்விழுகின்றீரென்பார். சிலர் எங்களை அரக்கக்கன்னியரென் றெண்ணியோ? நாங்கள் நிறையழிந்து தொடர்ந்து வேண்டினும் இணங்கீர், இப்பாதகம் உம்மைவிடமாட்டாது, வன்மத்தைவிட்டு மனையில்வந்துபோமென்பார். சிலர் எங்கள் கலையைத்தாரும், அல்லதுகொண்ட விரகத்தைத் தீரும், ஒன்றும்பேசாமற் கூடவாரும், உமது குறிப்பின் வழியே சேருமென்று நெருங்கிக்கேட்பார். சிலர் இனியவசனங்களைப்பேசி எங்களைச்சேர்ந்துபோமென்று கெஞ்சிக்கெஞ்சி இரந்தாலும் ஆசைதீர அணையாது செல்கின்றதாற் சங்கரனென்பது இவருக்கு அடுக்குமென்று தூறுவார் இத்தன்மையாய்ப் பலவாக ரிஷிபத்தினிமார் சொல்லி நெருங்கிக் கலைகளும் சங்கங்களும் பூண்களும் நாணமும் அரியகற்புத் தன்மைகளும் நீங்கி ஆசைவலையிற் சிக்கிவருந்தும் பிராணனைத்தாங்கி, விகாரத்தினாலேங்கி தொடர்ந்து வரும்போது, எமது கர்த்தன் அழகியபாதங்கள்சிவக்க அவ்வீதிகளிற் சிலதூரம் வீணைவாசித்தும், சிலஇடங்களில ஆகமத்தைவிரித்தும் சிலநேரந் தமது மகிமைகளைக் காட்டியும், சில இடத்தில ஐயமேற்றும் சில இடந்தொண்டரையொத்துத் தமது பெருமைகளைத் தரித்தும் நடக்குங்காலையில் இலக்ஷுமிக்குச் சமமான ரூபலாவண்ணியங்களைப்பெற்ற ரிஷிபத்தினிகள் பரமசிவன் பாதங்களிற் சொரிந்த மலர்களும் கழன்றிறைந்த வளைகளும் பலபூண்களும் மன்மதனேவிய பஞ்ச புஷ்பபாணங்களும் அவ்வீதிகளெங்கும் நிறைந்து விளங்கின.

கேட்டீர்களோ சவுனகாதி ரிஷிகளே பரமசிவன்கொண்ட கோலத்தை விண்டுவாகிய மோகினிகண்டு மையல்கொண்டு சோருவளாயின் தவத்தியர் செய்கைகளை இவ்வகையெனச் சொல்லிமுடியுமோ! அக்காலையிற் ஸ்ரீதேவிக்கு இணையான வடிவுடைய தவப்பெண்களின் கற்பென்னுஞ் சமுத்திரமானது ஐயன் திருக்கோலமென்னும் மந்தரத்தினாற் கலக்கப்பட்டு நிறையழிந்ததாயினும் விகற்பமின்றியொருமைப்பட இச்சித்தகன்னியர் காமியத்தை விரும்பிப்போற்றியதால் அவர்கள் இஷ்டப்படி இந்திரசாலமென்னப் பற்பலவுருவம் அவர்கள் மனத்தில் திரோபவத்தினால் தோற்ற அவைகளைக் காட்சியாக

ஆசைதீரத் தழுவித் தங்களின்பம் நிறைவெய்தியதாக ஆனந்தத்தழுந்திய காலையில் பிரசவ வருத்தமின்றித் தண்டு கமண்டலஞ் சடைமுடி மரவுரியுடன் காற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளைப்பெற்றார்கள் சிவத்தின் திருவருளினால் உதித்தவராதலால் இறைவன் பாதகமலங்களிலே தொழுதுபோற்றும்போது கந்தன் கருணையுற்று, நம்மைக்கருதி இவ்விடத்திலே தவங்களைச்செய்யக் கடவீர்களென்று அருளியவாறே சேவித்து விடைபெற்றுப்போய்ப் பரமனைநினைந்து தவத்திலிருந்தார்கள்; அதன்பின்பு அக்கன்னியர் களிப்பறாமற் சமுத்திரத்தைப்போலத் தொடர்ந்துவரக் கண்மலருடன் ஆயிரங்கமலங்களை அருச்சித்த விண்டுவுக்குத் திகிரியளித்த இறைவன் ரிஷிகள் வாசஞ்செய்யுஞ் சாலைகளிடத்தில வருங்காலையில் மோகினியானவள் தவத்தர்கூட்டம் பின்பற்றிக் கெஞ்சிகடக்க,இறைவனைச் சந்தித்தாள். அதெப்படியிருந்ததென்றால்? கங்கையை யமுனைகலந்த காட்சியைப்போன்றது. அக்காலையில் இறைவன் தமது உருவைப் பாதகராகிய முனிவருக்குத் தோற்றாது வேற்றுருக்கொண்டு நீங்கி நின்ற காலையில் சிவகடாட்சத்தினால் ரிஷிகள் மையல்தெளிந்து தங்கள்தேவிமார் தமது வடிவமாறி அலங்கோலமாய்ப் பரந்திருப்பதைக்கண்டு இவர்களும் நம்மைப்போலவே இவனிடத்தின் மால்கொண்டு உடைவளை நாணமுதலானவைகளை நீத்தார்களென்றெண்ணி, மோகினியிடத்துற்ற கவலையிற் சிறிதுநீங்கி தங்கள் பத்தினிமாருடைய ஈனநிலையைக்கருதிவருந்தித்திகைத்தேங்கி மானம் பாதிக்கப் பெருமூச்செறிந்து பிரேதங்களைப்போல நின்று எண்ணுவார்கள். அழகிய நிதம்பத்தையுடைய இம்மோகினி நமது தவத்தை அழித்தாள் அந்தப் பிச்சாண்டி நம்முடைய தேவிமார் கற்பைக்கெடுத்தான். ஐயையோ! காமம் இன்னவிலேதள்ளுமென்பதைத் திஷ்டாந்தமாக்கண்டோம். இதென்னமாயமென்று ஆலோசித்துச் சொல்லுவார்கள். நமது பத்தினியர் நிறையைக் கெடுத்தவன் கயிலைக்கிறையாகிய சிவனாகும்; மோகினியாகவந்து நமது விரதவுறுதிகளைப் பங்கஞ்செய்தவன் உலகையுண்டகண்ணனாகும் இவன்பரமசிவன் புணர்ப்பினால் இவ்விடம்வந்து இதுவரையில அரிதாகச்செய்துபெற்ற தவங்களைக்கொன்றானாயினும் அதனைமீளவும் நோற்றுப்பெறலாகும்; கபாலத்தை யேந்தி ஐயமேற்பாரைப்போலச் சிவன்வந்து தராதலமெங்கும் புகழ்பெற்ற இத்தாருகாவனத்திலிருக்கும் நமது பத்தினிமார் கற்பையழித்த வசைமொழி சூரியசந்திரரிருக்கின்றவரையும் அழியாமல் நிலைபெற்றிருக்குமே! ஓ! ஓ! இதற்கென்ன செய்வோம் இச்செய்கைக்குக் காரணம் சிவனல்லது வேறில்லையென்று வடவைபோற்கொதித்து எதிரில் நிற்கின்ற தேவியரைச் சீறிப்பார்த்து, ஆர்பின்போகின்றீர்? கற்பழிந்து உயிர் சுமப்பதினும் இறத்தல் நன்காகும். இனியாவது உங்கள் இல்லங்களைச் சேருவீரென்று அதட்ட அவர்கள் பயந்து இறைவன்வடிவை நினைந்துநினைந்து வாடி அக்கிராரத்தைச் சேர்ந்தார்கள்; அப்பொழுது பரமசிவனும் விஷ்ணுவும் கொண்டகோலத்தைத் தரிசிக்கவிருப்புற்றுப்பிரமன்முதலிய தேவர்கள் விண்ணிடத்தில்நெருங்கித்துதித்துவணங்கியிருக்கின்றகாலத்திற் சிற்றறிவையுடைய ரிஷிகள் கோபம் தணியாதாராய் நம்மை வஞ்சித்து மோசஞ்செய்த பாஷாண்டியைக் கொன்று இவ்வபவாதத்தை நீக்

கிக்கொள்வது காரியமென்று ஆலோசித்தாராய் அதற்கடுத்த அபிசார வேள்வியினைத் தொடங்கி வேம்புமுதலிய விஷச்சமித்துக்களாலும் அவ்வெண்ணெயாதிய நெய்களாலும் அதர்வணமந்திரபூர்வகமாக நடத்திவருகின்றபோது பார்க்கப்பயங்கரமான கோரரூபத்துடன் இடியஞ்சமுழங்கிப் பிறையைப் போலக் கூரியதாய் வளைந்த நகங்கள்பொருந்திய கைகளைவீசி அக்கினியையொத்து விழிகள்சுழலக்கோபித்து ஒருபுலியானது அத்தீயின்மத்தியி லெழுந்தவுடன் அதனை யுபசரித்து ஈசனைக்கொன்றுவரக்கடவாயென்றேவினார்கள். அவ்வேங்கையானது கடுமையாகப்பாய்ந்து உலகம்நடுங்க மேலிட்டுவர அதை இறைவன் பற்றியுரித்து அவ்வதளை யிடையிலுடுத்தார். இச்செய்கையைத்தெரிந்து ரிஷிகள் பொங்கியீளவுஞ் சூலமொன்றை யுண்டாக்கித்தூண்டினார்கள். அப்படையானது அக்கினியைக்கக்கி உலகமெங்கும் நடுங்கச்சுழன்றுவர, அதை எமது கர்த்தன்பற்றி நமக்காயுதமாக விளங்கக்கடவாயென்று கரத்திலேந்தினார். பின்பு கலைமானொன்றைச்சிருட்டித்தனுப்ப, அக்கலைமானானது ஆகாயத்திற்பாய்ந்து அண்டங்களதிரக்கூவிக் கூரியகொம்புகளை யசைத்துத் தாண்டி வருவதை லோகநாயகன்கண்டு, கிருபாநோக்கம்பாலித்தழைத்து இடைவிடாமல் நமது சிரவணானந்தமாகக் கூவியிருப்பாயென்று இடக்கரத்திலேதாங்கினார். பின்பு அளவற்ற கருநாகங்களை யுண்டாக்கியனுப்ப, அவைகள் உலகமெங்கும்பரந்து விஷங்களைக் கக்கிக்கொண்டு சீறிவருவதை இறைவன்கண்டு முன்கருடனுக்கஞ்சி வந்தடைந்த சர்ப்பங்களுடன் ஆபரணமாக அணிந்தார், அதை முனிவர் அறிந்து கோபித்து அளவற்ற பூதவெள்ளங்களைச் சிருட்டித்து சிவனைக்கொன்று வரும்படித் தூண்டினார்கள்.

அக்கணங்கள் புவனங்களதிர ஆர்ப்பரித்துமேலிட்டுச் செல்வதைக் கண்டு, தம்மையடுத்தவர் தீங்குகளையகற்றிக் காக்கவல்ல இறைவன் அவைகளைக் கிருபையாக வரவழைத்து தமது சேனைகளாக்கிக்கொண்டார். அதன்பின்பு வேள்வியைமுடுக்கி நகுவெண்டலையொன்றை நிருமித்துபரமனையுண்டு வரக்கடவாயென்று செலுத்தினார்கள்; அதுவெளிப்பட்டவுடன் பகிரண்டங்களும் நடுநடுங்க நகைத்துப்புறப்பட்டு வருவதைநோக்கித் தமது திருக்கரத்தினேந்திச் சிரத்தினின்று உனது பணிவிடையைச் செய்திருப்பாயென்றணிந்தார். இதையறிந்த ரிஷிகள் வடவையைப்போற்பொங்கித் தாங்கள்கற்ற அதர்வணமந்திரங்கள் அனைத்தையும் ஒருவகைப்பட நிருமித்து எமதையனை நாசஞ்செய்யப் போக்கினார்கள், அவையொரு துடியுருப்பெற்றுத் திசைகளெங்குஞ் செவிடுபடவொலித்து வருங்காலத்தில் அவ்வதிர்ச்சியினாலே தேவலோகத்தார் பூமண்டலவாசிகள் ஐயன் அனுக்கிரகத்தினால் இறவாமல் இடியுண்ட சர்ப்பங்களையொத்தொடுங்கி வருந்தினார்கள் அப்படி மேலிட்டுவருவதை இறைவன்பற்றி நமது செவிக்கின்பமாகக் கறங்கி யிசைகளைப்பாடி யிருப்பாயென்று திருக்கரத்திற்பற்றி னின்றார். பின்னும் அக்குண்டத்தில் முயலகனென்னும் அரக்கனை யுண்டாக்கி வேள்வித்தீயையுங்கூட்டி ஈசனைநாசஞ்செய்து வரக்கடவீரென்றேத்திவிடுப்ப வெளிப்பட்டவுடன் திரிலோகங்களும் கலங்கவினைந்து ஆர்ப்பரித்து வரும்போது திருக்கரத்தைநீட்டி அவ்வேள்வித்தீயை மழு

வாக வேந்தியும் முயலகனைத்தள்ளிப் பாதங்களின்மிதித்தூன்றினார். இவைக ளனைத்தையுந்தரிசித்த தேவர்கள் ஆனந்தபரவசராய்க் கர்த்தன்குணாதிசயங் களைத் துதித்து வாழ்த்தினார்கள்; இச்செய்கைகளை முனிவர்களறிந்து ஐயை யோ எத்தெத்தனை பொருள்களை விதித்தேவினாலும் அவைகள்சிவனைக்கொல் லாமல் அவனுக்கடங்கினவேயென்று மிகவும்வருந்திப்பொறாமையினால்சங்கரா! நீநாசமடையக்கடவையென்று அளவற்றசாபங்களைவிட்டார்கள், அவை இறை வனிடத்து நெருங்காமற்பிரசண்டவாயுவை சேர்ந்ததீயைப்போலவும் அனலிற் பட்ட பூளைப்புட்பத்தை நிகர்த்தும் அழிந்துபோயின; அதனைக்கண்டு தாங்கள் செய்த முயற்சிகளொன்றேனும் பயன்படாததினால் வேறுசெயலற்றுச் சோப முற்று நங்கம்பெற்று நீங்காதபாவமும் பழியும் பிணங்களைப்போலப் பூமிக்குச் சுமையாக நின்றார்கள். கேட்டீர்களோ! சவுனகாதிரிஷிகளே! அரியதவங் களைச்செய்தும் இருவினைகளைக் கூட்டிமுடிக்கும் இறைவனொருவனுண்டென் றுணராத விவேகசூனியர்களாகிய இந்த ரிஷிகள் அஞ்ஞானத்தை யென்னெ ன்றுசொல்லுவேன்; இறுதியில்லாத பரம்பொருளை முடிக்கநினைந்து வேள்வி யில் அளவற்றகொடுமைகளை யுண்டுபண்ணி யேவினார்கள் சபித்தார்கள் இவை களால் அவனை யழிக்கப்படுமோ? 'கெடுவான் கேடுநினைப்பான்' என்னும் வாக் கியத்துக்கியையத் தங்கள் பெருமிதங்கள் அனைத்தையும் இழந்து வசைபெற் றுத் தீனரானார்கள்; அக்காலத்திற் கங்காசடாதரராகிய பரமன் தமது பாதத் திலூன்றிய முயலகன் மெல்லமெல்ல எழும்பியசைய அவன் அகங்காரத்தை யடக்கத் திருவுளங்கொண்டு தமதானந்த நடனத்தைச் செய்வதாயினார். அவ் வதிர்ச்சியினாற் சகமனைத்தும் நடுக்குற அதிலடங்கிய சீவராசிகள்பயந்து நடுக் குற்றேங்குங் காலையில் தாருகாவனத்து முனிவர்களுந்மடிந்தவரைப்போலத் திகைத்து நிலத்தில் மடிந்தகாலத்தில் அவ்வானந்த நடனத்தை விஷ்ணுபிர மன்தரிசித்துக்களித்துச் செயசெயவெனப்போற்றிக் கரங்களைக்கூப்பித்தொ ழுதிருக்க தேவேந்திரன்முதலியதேவர்கள் பணிகின்றவரையொத்து அடியற்ற பனையைப்போலச் சாய்ந்தார்கள். இவ்வகையாகச் சகலரு மறிந்தசெயலைக் கர்த்தன் திருவுளத்தறிந்து நடனத்தைநீங்கிக் கிருபாநோக்கம்புரிக்க இந்தி ரன்முதலியோர் அவ்வாறெழுந்துவாழ்த்தி நிற்கின்றபோது தம்மை மதியாமல் அகங்கரித்து அயர்ந்த ரிஷிகளிடத்து அன்பாய் அவர் மயக்கத்தைத் தவிர் த்தகாலத்தில் அவர்கள் நல்லுணர்வுதித்து மனங்குழைந்தவராய்க் களைப்பொ றுத்து ஆட்கொள்ள வேண்டுமென்று பாதகமலங்களிற் சேவித்துப்போற்ற அவர்களிடத்து அன்பாய் இன்றுமுதல் நமது பஞ்சாக்கரத்தைச் சபித்துத் தவத்தைச்செய்வீரென்று அவ்விடத்திலிருத்தி விஷ்ணுபிரமன்முதலியவர்களு க்கு விடையளித்து திருக்கயிலைக் கெழுந்தருளினார். செய்ந்நன்றிகொன்றதக் கனே! சிவன் புலித்தள் ஆதியானவை தரித்தவகையும் நிருத்தஞ்செய்த கார ணமுஞ்சொன்னேனும், இனிமற்றவிவரமும்விரிப்போம் கேட்பாயாக. பூர்வத்திற் கயாசூரனென்னும் ஒரவுணன்பிரமனைநோக்கி அரியதவங்களை முடித்தபோது அவர்காட்சிகொடுத்து நீவேண்டிய தியாதென்ன சுவாமீ! வலியும் மாளாத செல்வமும் தரவேண்டுமென்று இரந்தான்; அதற்குப் பிதாமகன் நகைத்து

நல்லகாரியம் உன்னிஷ்டப்படித்தந்தோம், ஆனால் திரிநேத்திரதாரியுடன் எதிர்ப்பையாயின் இவ்வரமழியுமென்று தமதுலகமே சேர்ந்தார். பின்பு கயாசூரனென்பவன்சிவனையொழிய மற்றவரைவென்று அரசுசெயயக்கருதி சதுரங்கச்சேனைகளுடனெழுந்து திக்குவிசயஞ்செய்து தேவர்களைவென்று பொன்னுலகத்தை முற்றிக்கைபோட்டுக்கொண்டு இந்திரனுடனெதிர்த்து அகோரயுத்தஞ்செய்து துரத்தி அயிராவதத்தின் வாலைப்பற்றிச் சுழற்றியெறிந்து தேவலோகத்தையழித்து இராக்கதரைக்கருவமடக்கி கடையில் ஞானமானிடர் முனிவரைவளைந்து சாடியலைக்குங்காலத்தில் அவர்கள் உபவத்திரவத்தைச் சகிக்கமாட்டாமற் பரமசிவமெழுந்தருளிய காசியையடைந் தொளித்தார்கள். அப்போது ஆலகாலத்தைப்போலக் கயாசூரன் தங்களைத் தொடர்ந்துவருவதையறிந்து அந்நகரவாசிகளுடன்நடுங்கி விச்சுவநாதர்ஆலயத்தடைந்து அடுத்தவரைப் பாதுகாத் தருள்செய்யுந் தயாநிதியான இறைவன் பாதங்களில்விழுந்து தேவாதிதேவா! யானையுருப்பெற்ற அரக்கனொருவன் உலகங்களையழித்து எங்களையுங் கொல்லவருகின்றான். தேவரீர் பாதாரவிந்தங்களிற் சரணடைந்தோம் காத்தருளும் காத்தருளும் வேறுகதியில்லையென்று போற்றினார்கள் அப்போது கயாசூரன் மேகத்துக்கொப்பாகக் கர்ச்சித்துமணிகர்ணிகை வாயிலின்முன் வருவதைக்கண்டு சகலரும் பிராணபீதியினாற் சன்னிதியிலோடி இறைவனைத்தழுவிமுறையிட்டார்கள்; கயாசூரன் அதையும் எண்ணாமல் இடியைப்போல ஆர்ப்பரித்து உள்ளேவருவதை விஷத்தையுண்டு தேவரையாண்ட கடவுள் கோபித்து சிரம் அண்டத்தையளாவத் தேகம் திசைகளைமறைக்கப் பிரளயகால வுருத்திர வுக்கிரவடிவுகொண்டு கோடிசூரியர் உதித்ததைப்போலத் தேககாந்திவீச வெளிவந்தொருதாண்டவத்தார்; அவ்வதிர்ச்சியானது அண்டாண்ட புவன சராசரங்கள் அடுக்கழிந்து அலைந்தொடுங்கச்செய்து இப்புவனங்களில் அளவற்றயுகங்கள்மாறாமலிருக்க அதனைக்கேட்ட பிரமன்முதலியதேவர்கள் திடுக்கிட்டு இது யுகமுடிவோவென்று அயிர்த்தார்கள்.

பின்பு கர்த்தன் அவ்வுருவுடன் கயாசூரனெதிரில்வர அதை அப்பாதகன்கண்டு சிவனென்று அறிந்து அகங்காரத்தால் பிரமன் வாக்கியத்தையும் மறந்து சண்டைக்காயத்தப்பட அவனை வடவைக்கனலும் அஞ்சவிழிகளிற்பொறிசிதறநோக்கி ஒருபாதத்தினாலுதைத்து குப்புறவிழ்த்து அவன் சிரத்தைமற்றொருபாதத்தினால் மிதித்துக்கொண்டு கூரியநகத்தினாற் பிடரியைக்கீறி அதனையுரித்துப்பார்ப்பதியும்வெருவப் போர்த்துக்கொண்டார்; அவ்விரத்தவாடையினொளியைக்கண்டவர்கள் நடுக்குற்று விழிகள்வீசி ஒளியிழந்து வருந்தலைக் கர்த்தன் அறிந்து கையமைத்து பழயபடியே பார்வையுண்டாகக் கடாட்சித்து அவர்கள் அச்சமொழியக் கயாசூரன்தோலைத் தோளிற் சேர்த்துக்கொண்டு முன்போன்று ஆலயத்தில் எழுந்தருளினார். பின்பு மயங்கிவிழுந்த பரிசாரகர் முதலாயினோர் தெளிந்தெழுந்து கயாசூரனெலும்பும் மாமிசமும் மலைபோலக்குவிந்திருப்பதைக்கண்டு நமது இறைவன் அழித்தானெனக்களித்துச் சமுத்திரத்தையொக்கச் செயம்செயமென்றார்த்து ஆனந்தக்கூத்தாடி தேவாதிதேவன் குணநிசயங்களைத் துதித்தார்த்தார்கள். தேவர்களும் முனிவர்களும்

போற்றி வாழ்த்தினார்கள்; இவ்வாறாகச் சகலரும் பயமொழிந்து தங்கள்பதியையடைந்து இன்புற்றனர் அகந்தையிற்சிறந்த தக்கனை எமதுகர்த்தன் யானையுரிபோர்த்த காரணம் இதுவாகும்; இனிப் பிரமகபாலமேந்திய சரித்திரத்தைச்சொல்லுவோம்;முன்னொருகாலத்தில் மகமேருசிகரத்தின் மீது எழுந்தருளியிருக்கின்றபிரமன் விஷ்ணுவைத் தேவராசன்முதலிய விண்ணவரடைந்துசேவித்து திரிமூர்த்திகளில் முதன்மையாய்ஆதியந்தமீறில்லாத பரம்பொருளாய்த் தேவாதியரைப்படைத்த இறைவனாய் உயிர்க்குயிராயிருக்கின்ற பிரமமாவதியாவர்? எங்கள் மயக்கந்தீரப் போதிக்கவேண்டுமென்று வினவும்போது சிவத்தின்மாயையில் அகப்பட்டவனாதலின் பிரமனவன் தேவரைப்பார்த்து நாம்தான் பிரமமெனச்சொல்லப் பக்கத்திலிருந்த திருமால்நகைத்து உன்னைப் படைத்த நாமே முதற்காரணனென்றான். இவ்வாறிருவருக்கும் கலகம்நேர அவர்கள் அளவற்றயுகங்கள் தர்க்கித்து வயிரமுற்றச் சண்டைக்காயத்தப்படுகையில் சதுர்வேதங்களுங் குடிலையும் வெவ்வேறுருத்தாங்கி அவர்கள்முன் தோன்றி ஏன் வீண்வாதுகொடுக்கின்றீர்கள். சகலருக்கும் தாய்தந்தையராய் எங்கும் பரிபூரணமாய் நிறைந்திருப்பவன் அவனே பரமென்று சொல்லின அவ்வாக்கியத்தையுங் கேளாமற் பொருகின்றவர் கருமபங்கம்பண்ணத் திருவுளங்கொண்டு சிவபிரான் அளவுபடாத சோதிவடிவாய் இருவருக்கும் மத்தியில்நின்றார். இது சிவச்செயலென்றேயுணராமல் அவன் மாயையிற்பட்டுத் தீரமாயிருக்கும்போது இறைவன் அச்சோதிமத்தியில் உமாமகேசுவர முகூர்த்தமாய்த்தோற்ற விஷ்ணுதரிசித்துத் தெளிவுண்டாய்ப் பரமனைப்போற்றித்தொழுதான். பிரமன் திரோபவத்தினழுந்து உணர்ந்திலனாதலால் அவன் அகந்தையையும் தேவர்செருக்கையும்வாட்டத் திருவுளங்கொண்டு சிவன் வயிரவ மூர்த்தியை யுண்டுபண்ணி சிவந்து நீண்டசடைகளும் அக்கினியைப் போலக்கனலும்விழிகளும் சிரமாலிகையும் தமருகமும்சர்ப்பாபரணமும் தேகமெங்கும் தூளணமும்விளங்கக் கைகூப்பி நிற்கின்றவனைப்பார்த்து இப்பிரமன் நடுச்சிரம் நம்மையிகழ்வதற்குக் காரணமாதலால் அதனைக்கிள்ளிக் கரத்திற்கொண்டு அவனுயிரைப் பாதுகாப்பதன்றியுந் தேவர்முனிவர்கள் முதலானவர் இடங்கடோறுஞ்சென்று அவர்களுதிரத்தையும் பலியேந்தி உயிரைக்காத்து அகந்தையையொழித்தபின்பு அண்டமுகட்டில் அமர்ந்து பிராணிகளுக்குத் துன்பமின்றிக் காத்திருக்கக்கடவாயென்று அருளிஅச்சோதியில்மறைந்தனர். இக்காட்சிகளைத்தரிசித்த கண்ணன் பரமசிவத்தின் பெருமைகளைக்கொண்டாடித் தன்னுலகத்தைச் சேர்ந்தகாலத்தில் வயிரவர் இறைவன்கட்டளைப்படிப் பிரமன் நடுத்தலையை அரிந்தமாத்திரத்தில் பிரமன் இரத்த முலமெங்கும் பெருக்கெடுத்தோடப் பிராணனிழந்து பூமியில்விழுந்தான்.

அப்போது வயிரவர் தமது நெற்றிவிழியின லுதிரவாரியைமாற்றிப் புவனங்களைக்காத்துப் பிதாமகனுக்கும் பிராணனைக் கடாட்சித்தவுடன் அவன் எழுந்து வயிரவர் பாதங்களிற் சேவித்துப்போற்றி பரமசிவத்துக்கிழைத்த பவத்துக்கீடாக இத்தண்டனையையும் தீராதபழியையும்பெற்றேன்; தேவரீர் அனுக்கிரகத்தினால் ஆணவமடங்கி நல்லுணர்வையுங்கிடைத்தேன், அடியேன்

காணுந்தோறும அகந்தைக்குள்ளாகாமல் தெளியும்பொருட்டு இச்சிரத்தைச் சூலமேந்தியதைப்போலவே திருக்கரத்திற்கொண்டு காக்கவேண்டுமெனப் போற்றியதை அங்கீகரித்து மகமேருவைநீங்கிப் பரமசிவகடாட்சத்தால் தமக்குப் படைத்துணையாகவந்த காலவேகன், கனன்முகன், சோமுகன், ஆலகாலன், அதிபலன் முதலான பூதர்கள் சூழ்ந்துவர ரிஷிகள்தேவர்வாசந்தோறுஞ் சென்று அவர்கள் உதிரப்பலிகொண்டு பிராணனையுங் காத்துப் பவித்திரமாக்கியபின்பு இறைவன் மாயையைக்கடக்க அறியாமல் மயங்கிய விண்டுவாழும் வைகுந்தத்தைநோக்கிநடக்கின்றதருணத்திற் பூதப்படைகளின் முன்னணியானது அப்பதியில் நுழையவருவதைச் சங்குசக்கரந்தரித்து அளவற்ற சேனைகள்போற்ற முதல்வாயிலைக் காத்திருக்கின்ற படைத்தலைவன்கண்டு தடுத்தான். அப்போது இருதிறத்தவருக்கும் அகோரமானயுத்தமூண்டது. அத்தருணத்தில் வயிரவர்வந்துசேர்ந்து அக்காவலனைச்சூலத்திற்குத்தியேந்தி ஆலயத்திற் பிரவேசிக்கும்போதிற் சேஷசயனத்திற் பள்ளிகொண்டு சிதேவி பூதேவி யிருமருங்கினுமிருந்து பாதங்களை வருடக்களித்திருந்த விஷ்ணுவானவர் திடுக்கென்றெழுந்து எதிர்கொண்டுசேவித்துப்போற்றி, தேவரீர்வந்தகாரியமென்னெனக்கேட்க, பலிக்குப்போந்தோம், உமது உதிரத்தை நெற்றியின்மூலமாகத்தாருமென்று திருவாய்மலர்ந்தருள; திருமால்மகாபாக்கியமென்றிசைந்து தமதுநுதலில் நகத்தினுற்குத்தி உதிரத்தைப்பெருக்க வயிரவர் கோடிவருஷகாலமேந்தியுங்கபாலம்பாதியும்நிறைந்ததில்லை. அத்தருணத்தில்மேகவண்ணன் சோபமுற்றுவிழுந்தார். இதனைத் தேவியர்கண்டு நடுங்கிக்கோபித்து, வயிரவக்கடவுள் பாதகமலங்களிலேதாழ்ந்து புருஷபிச்சை தரவேண்டுமென்று முறையிட அவர் பயப்படாதீர்களென்று கையமைத்து விண்டுவுக்கு உயிரையளித்து நடக்கும்போது கண்ணன் பின்தொடர்ந்து, சுவாமீ! தேவரீர் சூலத்தேற்ற துவாரபாலகனைத் தயைசெய்து விட்டுப்போகவேண்டுமென்று வேண்ட, கிருபையுற்றுப் படைத்தலைவனையிறக்கிப் பிராணனையுங்கடாட்சித்து, வைகுந்தத்தைக்கடந்து விச்சுவநாயகனுகியபரமசிவத்தின்கட்டளைப்படி அண்டப்பித்திகை முகட்டைச்சேர்ந்து, பூதப்படைகள்சேவிக்க வீற்றிருந்து, புவனங்களனைத்தையும் அதிலடங்கிச் சிவகோடிகளுடன் பாதுகாத்து, அரசுசெலுத்தியிருந்து சர்வசங்காரகாலத்திற் பரமசிவத்தின் அனுக்கிரகப்படி வேதஞாளியின்மீதாரோகணித்து பிரமன் விஷ்ணு தேவேந்திரனுதியான விண்ணவரையும் மற்றச்சராசரங்களையும் நுதல்விழித்தீயினுலே தகித்துலவுவார். மேற்கூறியபடி கபாலமேந்திய காரணம் முகுந்தன் வேதன்முதலானவர். அகந்தையை நீக்கியீடேறக் கருணைபாலித்தல்லது வேறுகநினைக்கவேண்டாம். இதுநிற்க, இனிவேற்றுருவெடுத்தகாரணத்தைக்கேளென்று ததீசிமுனிவர் தக்கனைப்பார்த்துச்சொல்வதாயினுர். முன்னொருகாலத்திலே தேவராசன் தான் திரிலோகங்களுக்கும் சக்கரவர்த்தியென்றும், கொடியதயித்தியரைவென்றோமென்றும், தனக்கொருவரும் நிகரில்லையென்றும் அகந்தையிற்பட்டவனுய் அரசுசெலுத்திவருகையில், ஒருநாள் பரமசிவனைக்கண்டுவர வேண்டுமென்கின்றகோரிக்கையுடன் அயிராவதத்தின்மீதேறி, விண்ணவர்சூழ்ந்துபோற்றிச்

செல்லத் திருக்கயிலாயத்தைச்சேரவந்தான். அதை இறைவனறிந்து இந்திரன்கெருவத்தையடக்கிரட்சிக்கத் திருவுளங்கொண்டாராய்ப் பாரிடவேடந்தாங்கி ஆலயமுகவாயிலினிடத்தில் வந்து நின்றார், அப்போது பாகசாதனன் அவரைப்பார்த்து, இன்றைக்குத்தான் உம்மை இவ்விடத்திற்கண்டோம், தாட்டிகமாய் நிற்கின்றீர், நீர்யார், கர்த்தனைச்சேவிக்கின்றதற்கு இதுதருணமோசொல்லென்றுகேட்டான், அதற்குத்தேவாதிதேவன் மாறுரையாடாமல் உக்கிரமாய்ப்பார்த்துநிற்க, நம்மைச்சட்டை பண்ணாமலும் கேள்விக்கெதிர்மொழி கொடாமலும் பராமுகமாயிருக்கின்ற இவனாணவத்தை அறிகின்றேனென்று மேல்விளைவதையறியாதவனாய், இந்திரன் அதிககோபங்கொண்டு, இனைந்து தன்கரத்தில்விளங்கும் வச்சிராயுதத்தைக் கிறுகிறெனச்சுழற்றி வீசினான். அந்தப்படை அதிவேகமாகவந்து, அனலுருவமாகிய பரமசிவத்தின் தேகத்திலேதாக்கிச் சாம்பலாய்ப் பறந்துபோயது, பின்புகர்த்தன் அவ்வடிவைமாற்றி, கணத்தரசாகி, விழிகளில் அக்கினிப்பொறிசிதற நாசியில் சுவாலையும்புகையுமெழப் பெருமூச்செறிந்து திரிபுராதிகளையெரித்தவகைவிளங்கத்தோன்றினார். அதைஇந்திரன்கண்டு, நடுநடுங்கி தேகமெங்கும் வியர்க்கக் கைகாலுதற வாய்புலர்ந்து குளறக் கரங்களைச்சிரத்திற்கூப்பி, தேவாதிதேவா, லோகநாயகா, இருவர்தேடற்கரிய சோதிமயமே, தேவரீர்பெருமைகளையும் குணாதிசங்களையும் திருவிளையாடல்களையும் எம்போன்ற மூடராலறியப்படுமோ, அஞ்ஞானசம்பவத்தினால் அடியேன்செய்த அபராதத்தைப்பொறுத்துக் காக்கவேண்டுமென்று பலவிதங்களாகப் போற்றிப்பணிய, பரமன் தேவராசனைப்பரிந்துநோக்கி, பயப்படவேண்டாமென்று கையமைத்து ஆயிரங்கிரணங்களையுடைய சூரியன் நழுவியதைப்போலத் தமதுசீற்றத்தைச் சமுத்திரத்தினிடத்தில்வீசி, தேவேந்திரனுக்குப் படையும் விடையும் கொடுத்தனுப்பித் தமதாலயத்தெழுந்தருளி, பார்வதிமகிழ வீற்றிருந்தார். இந்திரனும் கெருவமடங்கிப் பிழைத்தோம் பிழைத்தோமென் றதிகபயங்கரத்துடன் பொன்னுலகையடைந்தான்.

இப்பாற் சமுத்திரத்திலெறிந்த கோபக்கனலானது சிவகடாட்சவீட்சண்ணியத்தினால் ஒருபுத்திரனாய்விளையாடுவதைக்கடற்கிறைவன் அறிந்துமகிழ்ந்து தானவேசனே நமக்கும்பிள்ளையாகக்கிடைத்தான், என்னைப்போலயாவர் தவஞ்செய்தார்கள், ஊழூழிகாலம் தீர்க்காயுளாயிருக்கக் கடவதென்றுவாழ்த்தி, அலைகளினாலே தாலாட்டி, சகலசெல்வவுபசாரங்களுடன் வளர்த்துவருங்காலங்களில், ஒருதினம் அக்குழந்தைபசியினால் வீரிட்டழ, அவ்வொலியினதிர்ச்சியினால் திசாதிசைகளெங்குஞ்செவிடுபட்டுப்பிராணிகள்வருந்தின, அம்முழக்கினைப்பிரமன்கேட்டு அதிசயமடைந்து, சமுத்திரராசனிடத்துக்குவர, அதை அவன் அறிந்து எதிர்கொண்டு, சேவித்துடன்கொண்டுபோய், சிங்காதனத்திலெழுந்தருளச்செய்து பூசித்தபின்பு, சுவாமி, இது என்குழந்தை, ஆசீர்வதியுமென்றுகொடுக்க, ஆசையாகக்கரத்திலேந்தி, மடியிலிருத்தி முத்தாடுகையில், அப்பாலன்கரத்தைநீட்டி பிரமன் நான்குதாடிகளையுஞ்சேர்த்துப்பற்றிவலிக்க, அவ்வுபாதியினால் எட்டுவிழிகளினும் முத்துக்களைப்போல்

நீர்துளித்துச்சிவக்க வருந்தினவனுய், குழந்தையினைலலிதப்படுத்தி, மெல்லெ னநீக்கிக்கொண்டு, சீக்கிரமாகக் கடற்கிறையி னிடத்திற்கொடுத்து, போதவு ணர்வைப்பெருக்கியறிந்து, சமுத்திரராசனே, இந்தச்சிசுவைச் சுலபமாக நினைக்கவேண்டாம், எமதிறைவனுகிய பரமசிவத்தின் சிற்றவுருவாகும், இக் குமரன்பலவானுய், ஒருவனையும்மதியாமல் தேவர்முதலானவரைவென்று, இராசராசனுகிச் சகலரும்போற்றத் தனக்கெதிரிக ளொருவருமில்லாமல் அர சுசெலுத்துவான், இவனுக்குத் தேவர்வரமுயற்சிகள் வேண்டுவதில்லை, சிவ னல்லது, மற்றொருவராலும் இவனைக்கொல்லப்படாது, இக்குழந்தைக்குத் திருநாமஞ்சலந்தரனென் றிடக்கடவாயென்றுசொல்லி, பிள்ளையை ஆசீர்வ தித்துச் செலவுபெற்றுக்கொண்டு, தன்பதியைச்சேர்ந்தான். பின்பு அந்தப் பிள்ளைநாளொருமேனியாகவளர்ந்து, காளைப்பருவத்தில்வில்வித்தைமுதலான வைகளைப் பூர்ணமாகக்கற்றுத்தீரனுய், பிதாவினிடத்தில் விடைபெற்றுக் கொண்டு, பூமியின்கண்வந்து, இராக்கதரைக்கலந்து, தேவேந்திரனுதியரைக் கெருவமடக்கி, திசைகளைவென்று, சகலலோகத்தாருந் தன்னேவலைச்சிர மாகவகித்துப்போற்றக் கொடுங்கோல்செலுத்தி, புயபலபராக்கிரமத்தினல் அசுரர்களுக் கரசனுய், தன்குலக்கம்மியனைத்தருவித்து, பொன்னுலகமும் அளகையும் வைகுந்தமும் நாணும்படி யொருநகரை நிருமிக்கக்கட்டளையிட் டான். சிற்பியானவன் மகாபாக்கியமென்று வணங்கிப்போய், விசாலமாகிய ஓரிடத்தினைக்குறித்து சத்தப்பிராகார மதிலையெழுப்பி, அண்டவடுக்குகளைப் போல் நிலைகள்பொருந்திய கோபுரங்களைநிறுத்தி, மத்தியிற் கடலென்னத் தக்கதாகப்பரந்த அகழிகளைப்படைத்து, மாடமாளிகைகள் மண்டபங்கள் சித்திரகூடங்கள் இருமருங்கினும் நவரத்தினமயமாக பொன்னினுற்சோதித் துப்பிரகாசிக்க விசாலமாக நீண்டவீதிகள் அரசனிருக்கும் உப்பரிகை ஆத் தானமண்டபமுதலானவைகளைச் சாத்திரவிதிப்படியாக நிருமித்து, அப்பதிக் குச் சலந்தரபுரமென்று பெயருமிட்டு, அரசனுக்கு அறிக்கையிட்டமாத்திரத் தில, அவ்வரசன் மந்திரிபிரதானிகள் சேனைத்தலைவர் மன்னமண்டலீகர்சூழக் கோட்டையின்சீரையும் பட்டணத்தின்வகுப்பையுங்கண்டுகளித்து தச்சனைக் கொண்டாடி, சபாமண்டபத்தில்வீற்றிருந்து, சகலரும்போற்ற அரசுசெய்து வருங்காலத்திற் காலநேமியென்னும் அவுணன் அரிதிற்பெற்றவளாய் இலக்கு மியையொத்தவடிவும் வேலைப்போன்ற விழிகளுந் தங்கக்கலசத்தை நிகர்த்த கொங்கைகளும் மயிலைப்பழித்த சாயலும் அன்னத்தினு மெல்லியநடையுங் குயிலைத்துரத்துங் குரலுங் கிள்ளையையோட்டும் மதுரவசனமும்பெற்றுப் பிரவிடையாயிருக்கின்ற பிருந்தையென்னுங் கன்னிகையின்செய்தியை அறி ந்து, தன்மனவிருப்பத்தைச்சொல்லியனுப்பிப் பிதாவினிசைவின்மேல் அக் கன்னிகையைத் திருக்கலியாணஞ்செய்துகொண்டு, காமனும்இரதியும்போலச் சரசசல்லாபசுகலீலைகளை யனுபவித்துவருநாளையில், இந்திரன்முதலியதேவர் மகமேருச்சாரலிற்கூடியிருப்பதாகச் சிலதூதர்வந்து சொல்லக்கேட்டுக் கோப முடையனுகிச் சதுரங்கசேனைகளுடன்வர, அதைத்தேவர்கள் அறிந்து, இவ் விடத்திலும்பாதகன்வந்துவிட்டானே, இனியென்னசெய்வோம், எங்கொளிப்

போரமெனச் சிங்கத்தைக்கண்ட மிருகங்களைப்போல்நடுநடுங்கி, வருந்தித்திகைத்து, ஒன்றுந்தோன்றாமற்கடையில் இத்தருணத்திற்பாதுகாக்கவேண்டுமென விண்டுவைப்போற்றித் தியானித்தார்கள். அவர் இவர்கள்முறையைத் திருச்செவியிலேற்றுக் கருடவாகனரூடராய், அவ்விடத்தில்வந்து, சலந்தரனுடனெதிர்த்து, இருபதினாயிரதேவவருடம்அகோரயுத்தங்களைச்செய்தும் வெல்லவாற்றலில்லாமல், உன்னைப்போன்றவீரன் திரிலோகங்களினுமில்லையென்று கொண்டாடி, சிநேகம்பண்ணிக்கொண்டு, தமதுலகத்தைச்சேர்ந்தார், அத்தருணத்தில் தேவேந்திரன்முதலிய விண்ணவரோடி, திருக்கயிலாயத்தையடைந்தொளித்தார்கள். சலந்தரன் இவர்களை அவ்விடங்களில் தேடிக்காணுமற்கோபித்தவனாய், வெள்ளியங்கிரியிற்சேர்ந்திருப்பார்கள். அதையறிந்துகொண்டுபோய்ச் சாடுவோமென்று நிச்சயித்துத் தன்பதிக்குவந்து, சிலதூதரைத்தூண்டினான், அவர்களதிவேகமாயோடி, இருக்கப்பார்த்துத் திரும்பிவந்து, ராசனைச்சேவித்து தேவரனைவருமிருக்கின்றசெய்தியை விண்ணப்பஞ்செய்தமாத்திரத்தில், சலந்தரன் வடவையைப்போற் சிற்றங்கொண்டு, தன்சேனைகள் அனைத்துமெழும்படிக் கட்டளையிட்டு, தானுஞ் சர்வாயுதபாணியாய்ச் செல்ல, அதைத்தேவியாகிய விருந்தை அறிந்துஓடிவந்து கணவனைமறித்துக்கொண்டுபிராணநாயகா! திருக்கயிலைக்குப்போகவேண்டாம், பரமசிவனுடனெதிர்த்தவர்களில் யாவர் பிழைத்தார்கள், பிராணஆவிவருமென்று பலவகைகளாலேதெருட்டவுங் கேளாமல்தூறிக்கொண்டு, ஊழ் வினைதூண்ட ரதாரூடனாகி, சமுத்திரம் புரண்டதற்கிணையாகநடக்குஞ் சேனையைக்கலந்து, கயிலையைக்கிட்டினான், அதைத்தேவர்கள்கண்டு, பாதகன் இதோவந்துவிட்டானே, இனியென்னசெய்வோம், நாள்தோறும் இவனுபத்திரவப்பட்டுமுடியவில்லை, ஆதலாற் சலந்தரன்மாளும் ஏதுவைத் தேடவேண்டுமென்று ஆலோசித்து இறைவனெழுந்தருளிய கோயில்முகவாயிலில் வீற்றிருந்துபோற்றும் நந்திதேவரைவணங்கித்துதித்து, தங்களுக்கடுத்ததுன்பத்தைவிண்ணப்பஞ்செய்து, அவரனுமதியினாற் சிவபிரான்சன்னிதானத்திற்சென்று, மும்முறைவணங்கிப் போற்றி, தேவாதிதேவா, பத்தவற்சலா, தயாநிதி, வருணராசகுமாரன் சலந்தரனென்னும்பெயருடைய இராக்கதனொருவன் உலகங்களையலைத்து எங்களையும் சின்னபின்னப்படுத்திய காரணத்தினாற் பொன்னுலகவாழ்வைவெறுத்து மேருவரையிலொளித்திருந்தோம், அச்செய்தியைத் தூதராலறிந்துதொடர்ந்தான். அவன்கொடுமைக்கஞ்சிக் கேசவனைத் தியானித்தோம், அவரெழுந்தருளிப்பொருது, வெல்லக்கூடாமையாற் புகழ்ந்துபோயினர், அச்சமயத்திலே தப்பித்துக்கொண்டு இவ்விடஞ்சேர்ந்தொளித்தோம், அதையும் விசாரித்துச் சேனைகளுடன் இதோவந்துவிட்டான், ஆகையால் கிருபையுற்று எங்களைக்கமும் அவனூக்கமுந் தவிர்த்தாண்டு காக்கவேண்டுமென்று முறையிட்டார்கள். அதைக் கர்த்தன்திருச்செவியிலேற்று, இனிப்பயப்படவேண்டாமெனக் கையமைத்து, தமது திருவிளையாடலைநினைந்து, விருத்தசந்நியாசியாகி, குண்டிகையுங் குடையுந்தாங்கி, கோலூன்றித்தள்ளாடிக்கொண்டு, சலந்தரனெதிரில்வந்து, இராக்கதராசனே, நீயார்? எவ்விடமிருப்பது, யாரைத்தேடி இத்

தலத்தில்வந்தாய், சொல்லுமென்றுகேட்க, பெரியவரோ, சமுத்திரராசபுத்திரன், என்பெயர் சலந்தரன், பகைவராகிய தேவரையும் அவர்களுக்கிடந்தந்தாதரிக்குஞ் சிவனையும் வெற்றிகொள்ளவந்தேனென்று மறுமொழிகொடுக்க, அவனைப்பார்த்து, இகழ்ச்சிக்குறிப்பாகநகைத்து, நாம் இறையவன்சந்நிதானத்திருந்து அவர்வல்லபங்க ளனைத்தினையும் அறிந்திருப்போம் பரமசிவத்துடன் போர்செய்வையாயின், இறந்துபோவாய், இன்னஞ்சிலகாலம் உயிருடனிருக்க மனமிருந்தால், திரும்பிப்போவது நேத்தியென்றுசொன்னார். உடனே சலந்தரன் வடவாமுகாக்கினியைப்போலக் கோபித்து, தேகமெங்கும் வியர்வையரும்பப்புருவம்நெற்றியிலேற மீசைதுடிக்க அக்கினியும் புகையும்பெருகப் பெருமூச்செறிந்து, நீர் என்னைச்சிறியவனாக நினைந்தீர், என்வெற்றிகளையும் வன்மையையுஞ் சொல்லியாவதென்ன, சிலநேரம்நின்றெனது புயபலபராக்கிரமத்தைப்பாருமென்றுரையாட, அதைச்சிவபிரான்கேட்டு, நல்லகாரியம், உன்சவுரியத்தையும் வலியையும் அறியத்தான் வந்தோமென்று, தமதுபாதப் பெருவிரலினாலே பூமியில் வட்டமாகக்கீறி, சலந்தரனே உன்வல்லபத்தினால் இதோ கோடிசூரியப்பிரகாசமாய் விளங்குஞ் சக்கராயுதத்தை யெடுத்துச் சிரத்திலேதாங்கமாட்டுவையோ, என்றுகேட்க, அவன்நகைத்து, விருத்தரே இந்திரன்முதலான தேவரை, முதுகிட்டோடத்துரத்தினேன், கங்கையைக் குளமாகவளைத்தேன், வடவைக்கனலைக் குளிரச்செய்தேன், விஷ்ணுவை வென்று அவரால் புகழப்பெற்றேன். அப்படிக்கொத்தவலிபெற்ற எனக்கிதனைத் தாங்குவதரிதோ இதோபாருமென்று ஊங்காரித்து, அச்சக்கரத்தை ஒருகரத்தினாலேந்தி மற்றக்கரத்தையுந்தாங்கித் தூக்கப்படாமையால் மார்பிலணைத்து, அரிதினெடுத்துச் சிரத்தில்வைத்தான்; இதைக்கண்டதேவர்கள் முதலானவர்கள், இவன்வலியேவலி, சூரனென்பது இவனுக்கே தகுமெனக் கொண்டாடினார்கள். அத்தருணத்தில அத்திகிரிசலந்தரனுடலை இருகூறாகப் பிளந்துதள்ளியது. அத்தேகத்தின்றும் உதிரமானது ஊற்றெடுத்தோடியெங்குமோட அதனையும் அவன்பின்வந்த சேனைகளையும் தமது நுதல்விழித்தீயினாலேமாற்றி, பரமசிவன் பழையகோலங்கொண்டார், அப்போது அச்சக்கரம்சோதிமயமாயெழுந்து, இறைவனிடத்திற்சேர்ந்தது. இக்காட்சிகளையெல்லாந்தரிசித்ததேவேந்திரனுதியாகிய விண்ணவர்பலதரந்தொழுதுபோற்றி சச்சிதானந்தமூர்த்தி பலகாலம்வருந்திய எமது குறைகளைக்கணப்போதிலொழித்தாண்டீர், இனிப்பிழைத்தோமென்று ஆனந்தக்கூத்தாட அவர்களைக்கிருபையாகப்பார்த்துவிடைகொடுத்தனுப்பிவிட்டு, பரமசிவன்தமதாலயத்தைச்சேர்ந்தார். இப்பால்சலந்தரன் தேவியாகிய விருந்தையின் சவுந்தரியத்தைக்கண்டு ஆதியில் மையல்கொண்டிருந்த விஷ்ணு, இதுதருணமென்றெண்ணி, கபடசந்நியாசிவேடந்தாங்கி, சலந்தரன் அரண்மனையில் வானத்தையளாவித்தழைத்திருண்டிருக்கின்ற நந்தவனத்திலே ஒரு குருக்கத்தி நீழலில் தவத்தைச் செய்கின்றவனைப் போலவிருக்க, அக்கன்னிகையானவள், நமதுகணவனைக் கயிலைக்குப்போகவேண்டாமென்று தடுத்தும் நில்லாமற்போயினனோ, செய்தியொன்றுந்தெரியவில்லையே, என்னசெய்வேனென்று வெதும்பி வாடி

நில்லைபெருமல் இங்குமங்குமாய், இருதலைக்கொள்ளியில் அகப்பட்ட எறும்பே போல அலைந்து, ஒன்றுந்தோற்றுமலும் அரண்மனையிலிருக்க மனந்தாபரி யாமலும் பரிமளமிகுந்த பூஞ்சோலையினிடத்துவந்தாள். அத்தருணத்தில் கேசவனுக்கினைப்படிக்கு வைகுந்தவாயிலைப்போற்றுந் துவாரபாலகர் இருவர் புலிவடிவுகொண்டு சீறி அவளெதிரிற்பாய அவள் அதைக்கண்டு, இடியுண்ட சற்பத்தைப்போல, ஏங்கியோடி கபடசந்நியாசியைக்கண்டு அபயமென்று நெருங்கினுள், அச்சந்நியாசி பயப்படாதேயென்று கையமைத்து புலிகளை யதட்டித்துரத்திவிட்டார். அப்போது அவ்விருந்தை அவரைப்பார்த்து இவர் மகத்துவாகக்காண்கின்ருர். இவரால் நமக்குவேண்டுஞ் செய்தியைத்தெரிந் துகொள்ளலாமென்றெண்ணி. என்னிஷ்ட தேவதையைப்போலவும், பிதா வைப்போலவும் இத்தருணத்திலெழுந்தருளிய தபோநிதியே! என்கணவன் பரமசிவத்தின்பேரிற் சண்டைக்குப்போயினுர், இதுபரியந்தம் அவர்வரக்கா ணேன் செய்தியொன்றுந்தெரிய இல்லை, தேவரீருக்குச் சகலமுந்தோற்று மாதலால் அவர் இறந்ததும் உயிருடனிருப்பதும் அநுக்கிரகஞ்செய்யவேண்டு மென்றிரந்தாள். அக்கபடசந்நியாசி நல்லகாரியம், சற்றிவ்விடத்திரும்; திஷ் டாந்திரமாகக் காட்டுவோமென்று, தமதெண்ணப்படிக்கு ஆதியிற் புலியாக வந்த துவாரபாலகர் குரங்காகநிற்கக்குறித்து அவரைநோக்க, அவரோடிப் பிளந்துகிடந்த சலந்தரனுடலைக்கொண்டுவந்து சேர்த்தார்கள், அப்போது அவள் இருகூறுயிருக்கின்ற கொழுநனைக்கண்டவுடன் பதைபதைத்து விழு ந்துபுரண்டரற்றி, மரணமூர்ச்சையாயினள். அக்காலத்தில் முன்னம் அவ ளிடத்தாசைபெற்றிருந்த சந்நியாசி அவளைவாரியெடுத்து, மார்பிலணைத்துக் கொண்டு சயித்தியவுபசாரங்களைச்செய்துதேற்ற அவள் தெளிந்தெழுந்து தப சியைச்சேவித்து, உம்மையொத்த மகத்துவமுடையவர்களெங்குமிரார், அடி யேன்பிராணனைக் காத்தாற்போலவே என்கணவன் தேகத்தையும்பொருத்தி உயிருண்டாக்கிப் புருஷபிச்சைதரவேண்டுமென்று போற்றினுள். அத்தவசி நல்லதென்று, சலந்தரனுடலைச்சேர்த்து, அதில் தான்பிரவேசித்தெழ, அதை விருந்தை கண்டமாத்திரத்தில் ஆனந்தவாரியின்மூழ்கி கொழுனனைச்சேவித்து ஓ பிராணநாயகனே! வந்தீரோ, உம்மைக்காணுது இதுவரையில் வருந்தினே னென்று தழுவி இருவருமாய் மாளிகையைச்சேர்ந்து. அறுசுவையுண்டியைப் புசித்தும் கலவைச்சாந்தணிந்தும் பரிமளமிகுந்த புஷ்பமாலைகளைச்சூடியும் பஞ்சணைமெத்தையிற் சரசசல்லாபங்களைச்செய்து இன்பமுற்றும், இவ்வகை யாக அன்றுமுதல் அளவற்றகாலம் இடைவிடாமல் வங்கணமாகக்களித்திருந் தார்கள் அத்தருணத்தில் ஒருதினம் அம்சதூளிகாசயனத்தில் மெய்ம்மறந்து முகுந்தன்நித்திரைசெய்ய பரமசிவன் கட்டளைப்படி விஷ்ணுகோலந்தோற் றியது. அதைக்கண்ட விருந்தை நடுநடுங்கி, இவன் மாயனுருமென்று நிதானி த்து. நடந்த விருத்தாந்தங்களைத் தன்னறிவினுலறிந்து கோபித்து, புலியாகவ ந்தஉன்வாயில்காப்போர் உனக்கு வயிரிகளாக அரக்கர்குலத் துதிக்கக்கடவர், நீயும் பூமியில் அரசர்குலத்தவதரித்து, என்னை வஞ்சித்தபடியே உன்பத்தி னியை அவ்வசுரர் மாயைசெய்துகொண்டுபோக குரங்கினங்களைச்சேர்த்துக்

கொண்டு, வனங்கள்முதலிய இடங்கள்தோறும்அலைந்துழன்றுஉலகோரிகழ்ந்து பழிகூற இருக்கக்கடவையென்று கொடியவசைசொல்லி, எரியைவளர்ப்பித்து அதில்விழுந்திறந்தாள். இவைகளனைத்தையுங்கண்ட விஷ்ணு அவளிடத்துற்ற இச்சையினாலேங்கி, வாடி வருந்தி விருந்தையிறந்த சுடலைப்புழுதியில்விழுந்து புரண்டு பிரலாபித்திருந்தார். அதைப்பிரமன்முதலாகியதேவர்அறிந்து, திருக்கயிலைக்கு விரைந்து சென்று இறைவன் பாதகமலங்களிற்சேவித்துப்போற்றி விண்டுவுக்கடுத்த இன்னலை விண்ணப்பஞ்செய்தார்கள். அதைக்கேட்ட பரமன் திருநகைகொண்டு, உமையவளைப்பார்க்கப் பராபரை கிருபையுற்று, ஒரு வித்தையுண்டாக்கித்தந்து இதனைக் கண்ணன்முன் நாட்டக்கடவீரென்று கொடுக்க, பிரமன்வணங்கி வாங்கிப்போய், விருந்தையிறந்த மயானத்திற்சாம்பலைப்பூசி மயங்கியிருக்கின்ற கேசவனெதிரில்நாட்ட, அது துளசியாகமுளைத்து உடனே திவ்வியவடிவுடைய பெண்ணுருப்பெற்றுநிற்க அவளைத்தாமோதரன்கண்டு, விருந்தையிடத்திற்பெற்ற மையலையொருத்து அவண்மீது மோகமாயினர். அதைக்கண்டதேவர் களித்து அவளை விண்டுவுக்கு மணஞ்செய்தார்கள். பின்பு மாயன் அப்பெண்ணைக்கூடி வைகுந்தமேபோய்ப் பிரியாவிடையாய் அனுபவித்திருந்ததன்றியும் சிரத்திலும் அணிந்தார். அதுமுதல் திருத்துளவம் விஷ்ணுவுக்கு உவப்பாயிற்று. அப்பால் விண்டுவானவர் சலந்தரனைப்பிளந்த சக்கரத்தைப்பெறக்கருதிப் பரமசிவத்தை யளவற்றகாலம் பூசித்துவருகையில், ஒருநாள் சகஸ்திரநாமார்ச்சனைக் கொருகமலங்குறைவுபடக்கண்டு, பணிவிடையிற் றவறுவாராமல் தன்கண்மலரை இடந்து சாத்திப் பூசிக்க, இறைவனிரங்கிக் காட்சிகொடுத்து கண்ணன்விரும்பிய சக்கரத்தையுங்கடாட்சித்தார், அன்றுமுதல் விண்டுவுக்கு நேமியானென்னு மொருநாமம் விளங்கியது.

ஓ! தக்கனே? சங்கரன் வேற்றுருக்கொண்டவிவரமிதுவாகும்; இனிஅவர் இடபவாகனமேறியகாரணத்தையும் சொல்லுவோம், சதுர்யுகங்களும் இரண்டாயிரவிசை திரும்புமாயின் ஒருநாள், அதுமுப்பது கூடியதுமாதம், இவை பன்னிரண்டு சேர்ந்தது வருடம், அதுநூறுநிறைந்தால், பிரமன் தனக்குப் பூரணாயுளாகி இறப்பான். அக்காலம் விண்டுவுக் கொருநாள், முன்கூறியவாறே நூறுவருடஞ்சென்றால், அவரும் இறப்பார், அண்டங்களிடியும், சத்தசாகரங்களும் பெரும்புறக்கடலும் பிரசண்டவாயு மோதுதலினாலோங்கி யெங்கும்மூடிக்கொள்ளும், அக்காலத்திற் பரமசிவன் ஏகனாய் தமது அக்கினிவிழியினாற் சகலத்தையும் நீறாக்கிவிளங்குகின்றஅவ்வீமத்திலே சத்திகண்டுகளிக்க ஆனந்தநிருத்தஞ்செய்வார். அத்தருணத்தில் தருமதேவதை, நாம்இறவாமலிருக்கும் உபாயம் யாதென்றாராய்ந்து, கங்கையைச் சடாமகுடத்தணிந்த பரமேசுவரனை யடைவோமேல் அப்பேற்றினையே பெறலாமெனத்துணிவுகொண்டு ஏற்றினுருவாகி இறைவனெதிரில்நின்று, சுவாமி அடியேனைப் பாதுகாத்து வாகனமாக ஊர்ந்து காக்கவேண்டுமென்று பலவிதங்களாகப்போற்ற, பரமன்கிருபையுற்று அவ்வரத்தைத்தந்து, இனியுதிக்கின்ற சதுர்யுகங்களிலே கிரேதாயுகத்தில் நான்குபாதங்களினும் திரேதாயுகத்தில் மூன்றுபாதங்களி

னும் துவாபரயுகத்தில் இரண்டு பாதங்களினும் கலியுகத்தில் ஒருபாதத்தினும் பதக்கிரமமாகத் தருமத்தை நடத்தக்கடவாய். நம்மைத்தாங்கும் முயற்சியி னுற் சகல சிறப்புக்களும் வல்லபமும் பெற்று, அடியார்களிற் சிறந்தவர்கள் பாதகங்களை நீக்கி, எக்காலத்தும் நமது வாகனமாக விளங்குவாய். நாமுமுன் னைப் பிரியாவிடையாகக் கலந்திருப்போமென்று அளவற்றபேறுகளை அளித் தார் இக்காரணத்தைக் கருதியல்லவோ திரிபுரதகனஞ் செய்தகாலத்து விண்டு விடபமாகிப்பரமசிவத்தைத்தாங்கினர். இது எருதேறிய சவிஸ்தார மாகும். இதனுற் கர்த்தனுக்குக் குறைவுண்டோ, பேதாய்? இனி விடமுண்ட கதையைக்கேள். ஆதியிலொருகால் தேவரும் அசுரரும் பகைத்தெதிர்த்து அளவற்றயுகங்கள் அகோரயுத்தங்களைச்செய்து, இருதிறத்தவரினு மிகுதியாக மாண்டிளைத்தகாரணத்தையோசித்து, இனி ஆயுளைவிருத்திசெய்துகொண்டு நீடித்துச் சண்டைகொடுத்து, செயாபசெயத்தை அறியவேண்டுமென நிச்சயி த்து பிரமனிடஞ்சென்று தங்கள்கருத்தை விண்ணப்பஞ்செய்து, சுவாமி! திருப்பாற்கடலைக்கடைந்து அமிர்தமுண்டாக்கித்தரவேண்டுமென்றுபோற்ற, நான்முகன் கேட்டு, நீங்கள் விரும்பியகாரியம் நம்மால்முடிவதன்று, விஷ்ணு வினுலாகுமெனச்சொல்லி, அவர்களைக்கூட்டிக்கொண்டுபோய், திருப்பாற் கடல்மத்தியிற் சேஷசயனத்தமர்ந்து யோகநித்திரைசெய்யும் விண்டுவைத்தரி சித்து, அனந்தலெழுப்பிப்போற்ற, அதைத்திருமால் செவிகளிலேற்று திருக் கண்களைவிழித்துப்பார்த்து, நீங்கள்வந்தகாரியம் யாதென்று திருவாய்மலர்ந் தருளினர். அப்போது பிரமன் அஞ்சலிசெய்து தேவேந்திரன்முதலானவர்கள் கோரிக்கைகளை விண்ணப்பஞ்செய்து, அதுமுடியு முபாயம் தேடவேண்டு மென்றுகோருவதை விண்டுயோசித்து, அவர்களுடன்கலந்து, மந்தரகிரியைத் தருவித்து மத்தாகநாட்டி, வாசுகியைத் தாம்பாகப்பூட்டி தேவரொருபுறமும் அசுரரொருபுறமுமாகத் திருப்பாற்கடலைக் குமுறக் கடைவித்தார். அத்தரு வாயில் அவ்வருத்தத்தைவாசுகி பொறுக்கமாட்டாமல் விழிகள்பிதுங்க நாவை நீட்டி, இளைத்து, ஆயிரம் வாய்களினும் விஷங்களைக்கால அது அக்கடலிற்ப ரவி இரட்டித்து அபரிமிதமாயோங்கி சடசடத் தொனிகளுடன் சுவாலையை வீசி, எதிர்த்தவர்முதலான சமஸ்தத்தையும் சாம்பலாகத் தகித்து வருவதை விண்ணவர் தானவர் முனிவர்கூட்டமுதலானவர்கண்டு நடுநடுங்கிநிற்கச் சக்தி யில்லாமற் பலதிக்கினும்புறங்கால் புடைத்திற்றுக்க வோடினர்கள். அதை ஆமையுருக்கொண்டு மந்தரத்தை முதுகிலேதாங்கிநின்ற கண்ணன் அறிந்து, அபாயம்விளைந்தது. இனித்தாமதப்படலாகாதென்றெண்ணி, அதிதீவரமாகத் தமதுருவெடுத்துச் சங்கு சக்கரம் கதை கோதண்ட மாதியான படைகளைத் தாங்கி, மண்டி யெரிந்துபாயும் விடத்துக்குநேராக அதட்டிச்செல்ல, ஆலம் வெகுண்டுதாக்கிய மாத்திரத்திற்பழையவயிர நிறமாறி, தேகம் கரிகரிந்து, எதிரில்நிற்கப்பயந்து பரமசிவனெழுந்தருளிய திருக்கயிலையைநோக்கி யாவ ருடனுமோடினர்.

கேட்டீர்களோ சவுனகாதி ரிஷிகளே! இவர்களனைவரும் தேடிச்சென்ற தரிதோ? பிள்ளைகள் தங்களுக் கிடருற்றகாலத்திற் பிதாவையடைந்து முறை

யிட்டுக் கொள்ளாமல் யாவரிடத்திற் போவார்கள்? இவ்வகையாக அல்லோல கல்லோலப்பட்டுநெருங்கியதேவர்முதலானோர்இறைவனெழுந்தருளியிருக்கும் ஆலயமுதற்றிருவாயிலில் வீற்றிருந்து அரசுசெலுத்தும் எமது இறைவனுகிய நந்திதேவனைக்கண்டு வணங்கி,கரங்களைக்கூப்பித் தேவரீரைத்தெரிசித்த மாத்திரத்தில் எங்கள் மனத்துயரமொழிந்தோமெனத் துதித்து, தாங்கள் வந்தகாரணத்தை விண்ணப்பஞ்செய்ய அதை நந்திபெருமான்கேட்டு, அவர்களையாதரித்துஅவ்விடத்தில்நிறுத்தி, சிவபெருமான் சந்நிதானத்திற்சேர்ந்து கேசவனாதியோர் வரவை விண்ணப்பஞ்செய்து, இறைவன் கட்டளைபெற்று வெளிவந்து,பிரமன்விஷ்ணுவைப்போலும்,அவர்களும்ஆலயத்திற்போய் விச்சுவநாதனைத்தரிசித்துப் பலதரம்பணிந்து, ஆனந்தக்கூத்தாடிப்போற்ற, அதைப் பரமன்பார்த்தருளி, மாலே! உனது தேகம் வேற்றுருவாய் வாட்டமுற்றுவந்த காரணமென்னென்றுவினவினர். அப்போது கேசவன்நடந்தகாரியங்களைத் தெருட்டி சுவாமி! தேவரீரனுக்கிரகம்பெறுமல் இக்காரியத்தைத்தொடங்கினமையால் இக்கெடுதிநேர்ந்தது,அடைக்கலமடைந்தோம், இறைவனே! இதோ ஆலகாலவிஷம்மேலிட்டுத்துரத்திவருகின்றது. முன்னாளிற்பலமுறை அடியோங்களைப் பாதுகாத்தாற்போலவே இக்கொடுமையையும் நீக்கிக் காக்கவேண்டுமென்று போற்றினர். அத்தருணத்தில் திருமலைப்புறத்திற் சூழ்ந்துநின்ற சுராசுரர்கள் அரகரவெனத்துதிக்குமொலி சர்வாந்தரியாமியாகிய பரமசிவத்தின் திருச்செவியிற்புக,அதைத்தாம் அறியாதார்போல இதென்னகோட்டமென்று வினவ, சுவாமி! விஷத்துக்கஞ்சி எங்களைத்தொடர்ந்துவந்தவர்களது முழக்கமென்று மாயவன் விண்ணப்பஞ்செய்யக் கேட்டருளிப் பரிவாய் நந்திபெருமானைப்பார்த்து,அவர்களனைவரையும் அழைத்துவரக்கடவாயெனக் கட்டளையிட்டனன். அவ்வாறேநந்திபெருமான்யாவரையும்உள்ளேவிட்டமாத்திரத்தில் அவர்கள் யாவரும் பரமசிவன் திருவடிகளைத்தரிசித்து, ஆடிப்பாடித்துதித்து, பற்பலவிதங்களாகத்துதித்து,தங்கள்இன்னலைத்தீர்த்துக்காக்கவேண்டுமென்று முறையிட்டார்கள். அப்போது பயப்படாதீர்களென்று கையமைத்துக் கிருபாநிதியாகிய இறைவன் இடப்பாகத்தில் வீற்றிருக்கும் பரமேசுவரியைநோக்கி, இவர்கோரிக்கையை ஈடேற்றுவது உனக்குச்சம்மதமாஎனக்கேட்க, உமையவளும் அஞ்சலித்து சுவாமி! சரணடைந்தாரைக் காத்தருளல் கடனாதலால் திருவுளப்படியே கருணைபாலிப்பதுஉத்தமமாகக் காணுகின்றதென்றுசொல்ல, அவ்வாக்கியத்தைக்கேட்டுப் புன்முறுவல்பூத்து, ஏவற்பணிவிடைகளைநடாத்திப் பக்கத்திற்காத்திருக்கின்ற ஆலாலசுந்தரனை யழைத்து, தேவர்கள்நடுங்க வருகின்ற காளத்தைத் திரட்டிவரக்கடவாயென்று கட்டளையிட்டார். உடனே அவர் வணங்கிப்போய், உலகமெங்கும் பரந்தெரிக்கின்ற நஞ்சை ஹுங்காரித்தழைத்துச்சேர்த்துவந்துஇறைவன்திருமுன்காட்டினர். அப்போது இறைவன் அதனைத்திவலைப்பிரமாணமாக உள்ளங்கையிலேந்தி, விண்டுமுதலியவரைநோக்கி, இவ்வாலத்தைப்புசிக்கவோ, அல்லது தொலைதூரத்திற்போகவெறியவோ? உங்கள் சம்மதமென்னென்றுவினவ, யாவரும்தொழுது தேவாதிதேவா! இக்கொடிய விஷம் தேவரீர் திருக்கரத்திலணுமாத்திரமா யடங்கி

யிருக்கின்றது, இதனைவிடுவீராயின் அண்டாண்ட புவனசராசரங்களை இமைப்போதில் அழித்துவிடும், இதுவல்லாமல் யாவராயினும் எக்கருமங்களைச் செய்தபோதிலும் முதலிலுதிக்கின்ற பொருள்கள் அனைத்தும் தேவரீருக்குப் பிரீதியாதலால் அடியோங்கள் பிழைக்கும்பொருட்டு இதனையுண்டருளவேண்டுமென்றிரக்க, பயப்படாதீர்களென்று கையமைத்துக்கரத்தில் விளங்கும் விஷத்தை யுட்கொண்டருள விண்டுபிரமன்முதலானோர் தொழுது எங்களைப் பாதுகாத்தற்கு இலக்கணமாக இக்கடுவைக்கண்டத்தில் நிறுத்தவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய அவ்வாறே நிலைபெறச்செய்தனர்; அவ்விடமானது நீலமணியைப்போலப் பிரகாசித்திருப்பதால் அன்றுமுதற்சிவபிரானுக்குங்காளகண்டமூர்த்தியென்னுந் திருநாமம்விளங்கியது. இதைக்கண்டகடவுளர்முதலாயினோர் இறந்து உதித்தவர்களையொத்து ஆனந்தக்கூத்தாடி ஐயன்பெருமைகளைப்பாடித் துதித்தனர், பின்பு சிவபிரான் கண்ணன் முதலானவர்கள் மீது திருக்கண்சாத்தி நீங்கள்போய் மீண்டும் திருப்பாற்கடலைக் கடைவீராயின் உங்களிஷ்டப்படியே அமுதமாதியானவை உண்டாகுமென்று அனுக்கிரகஞ்செய்தனுப்ப அவர்கள் சேவித்து விடைபெற்றுச்சென்று பழயபடிக்கு மத்திக்க அமுதமும்மற்றவஸ்துக்களு முண்டாயின அவைகளைக் கிரமப்படிக்குச் சகலரும் பெற்றுக்கொண்டு மகிழ்ந்தார்கள்; விடமுண்ட கதை இதுவாகும். இனிக்கங்கையைத்தாங்கிய விவரத்தைக்கேளென்று நந்திமுனிவர் சொல்லுவர். முன்னொருகாலத்திலே திருக்கயிலாயத்தில் விளங்கிய பூங்காவிற்பரமசிவமும் உமையவளும் வேடிக்கை நிமித்தமாக எழுந்தருளியிருக்குந் தருணத்தில் பார்ப்பதி திருவிளையாடலைக்கருதி இறைவன் விழிகளைத்தனது திருக்கரங்களினாலே புதைத்தாள். அக்காலத்தில் உலகங்களை விளக்குகின்ற சூரியசந்திரர் அக்கினி இவைகள் இறைவன்கண்களினொளியாதலாற் பிரகாசியாமலடங்கின; இத்திருவிளையாடல் இமைப்போதாயினும் புவனங்களுக்களவற்ற யுகங்களாக உயிர்கள் காடாந்தகாரமான இருளிற்பட்டுக் குருடாகி தடுமாறி அலைச்சற்பட்டன அதை எமதிறைவன் திருவுளத்தடைத்து அவற்றின் இடரையொழித்தளிக்கத் திருவுளங்கொண்டு நெற்றிக்கண்ணைத்திறந்தார் அவ்வொளியினால்அண்டாண்டபுவனங்களில்மூடியிருந்த இருளும் சீவராசிகள்மயக்கமும் நீங்க முன்போலவே ஆதித்தனும் சோமனும் அக்கினியும்விளங்கினார்கள். இச் செய்கைகளைச் சர்வலோகநாயகிகண்டுபயந்து மூடிய கைகளைவாங்கும்போது விரல்களினிடத்துப் பெருகும் வியர்வையையுதற அவை கங்கைகளாகிக் கடல்போலப் பெருகிஆயிரநூறுகோடி முகங்களாய்எங்கும் பரந்தொலித்து உலகங்களையழித்தோடின. அதைப்பிரமன்முதலானோர்கண்டு பயப்பிராந்திகொண்டு திருக்கயிலாயத்துக்கோடி நந்திதேவரனுமதியில் ஆலயத்திற் சென்று இறைவனைக்கண்டு துதித்துப் போற்றி தீனதயாபரனே! தேவாதிதேவனே! சுவாமி இதோ மிகுந்தவெள்ளமானது கடையுகசமுத்திரத்திலுமேலிட்டுக் கல்லென்னுமொலியுடன் பெருகி புவனசராசரங்களை யழிக்கத்தொடங்கியது; தேவரீர் சற்றுத்தாழ்க்கின் அனைத்தும் முடிவெய்தும், ஆதலாற் கருணையுற்று ஆதியில் அழலன்றெழுந்த விடத்தையுண்டு பாதுகாத்தாற்போலவேஇதையும்பரித்துயாவ

ணையும் காக்கவேண்டுமென்று வேண்ட; இறைவன் இரங்கி அவ்வெள்ளத்தைச் சடைகளில்விளங்கும் ஒருரோமத்திற் சுவறச்செய்தடக்கினார். இப்பெருமையைக்கண்டவிஷ்ணுபிரமன் இந்திரன்முதலாகிய தேவர்கள் இறைவன்மகிமைகளைக்கொண்டாடித்தொழுது சுவாமி! பார்ப்பதியார் திருக்கரத்திலுதித்துத் தேவரீர் முடியிலேதாங்கப்பெற்றமுயற்சியினால் அநுபவித்திரமாகும், ஆதலால் அக்கங்கையிற் சில எங்களுலகங்களிற்பெருகக் கடாட்சிக்கவேண்டுமென்றிரந்தார்கள். அப்போது பரமசிவன் அன்பாய் அத்தீர்த்தத்திற் சிலதிவலைகளை அம்மூவர் கரங்களிலேதெளிக்க அவர்கள்வணங்கியேந்தி விடைபெற்று தங்களுலகமேசேர்ந்து அத்தீர்த்தங்களைவிட்டார்கள். உடனே அவைகள் பரமபதத்தில் விரசாநதியென்றும் சத்தியலோகமாகிய மனோவதியில் மானததீர்த்தமென்றும் இந்திரலோகத்தில்தேவகங்கையென்றும் ஆறாகிப்பெருகின. இவைகளில் பிரமலோகத்திலிருந்த கங்கையைப்பகீரதன் அரியதவத்தைச்செய்து பெற்று பரமசிவத்தின் சடையின்மூலமாகப் பூமியிற்கொண்டுபோய் இறந்தசகர்கள் அத்தியின்மேற் பெருக்கினான். கங்கையினதுபரிசம் பட்டமாத்திரத்தில் அறுபதினாயிரம் அரசபுத்திரர்களும் நரகவாதனையொழிந்து மோட்சவீட்டில் நித்தியமாயிருக்கப்பெற்றார்கள். மற்றஇரண்டும் பொன்னுலகத்திலும்வைகுந்தத்திலும் விளங்குகின்றன. உலகவுபாதியை நீக்கும்பொருட்டு இறைவன் கங்கையைமுடியிலே தரித்தசரித்திரம் இதுவாகும்; இனித்தமது கூறாகியபராசத்தியை வாமபாகத்தில்இருத்தியவரலாற்றைத் தக்கனேசொல்லக்கேட்பாயாக; முன்னொரு சர்வசங்கார முடிந்தபின்பு சிவத்தினனுக்கிரகத்தினால் உதித்தபிரமன் சீவராசிகளைப்படைக்க நினைந்து சனகன் சனற்குமாரன் சனந்தரன் சனாதனனென்னும் நான்குகுமாரர்களைப்படைத்தான். அவர்கள் பரமசிவனைக்காணும்பேரறிவைப்பெற்று யோகிகளாயினர். இதனைக்கண்டு தன்படைப்புமல்காத காரணத்தினாற் பிதாமகன்வருந்திப் பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டுவைகுந்தத்திற்போய் விஷ்ணுவைக்கண்டு சேவித்துத் தன்மனக்குறையை விண்ணப்பஞ்செய்து இதற்கொருமார்க்கத்தைப்போதிக்கவேண்டுமென்றுபோற்ற விஷ்ணுவோ அம்ம இக்கருமம் நம்மால்முடிவதேயன்று, சிவகருணையினாலாகவேண்டுமெனக்கருதி அவர்களுடன் திருக்கயிலாயத்திற்சென்று நந்திதேவரனுமதியிற் பரமனைத்தரிசித்து, வணங்கித்துதித்துத்தேவாதிதேவா! பிரமசிருஷ்டி ஓங்காமையால்அதைத்தேவரீர் கடாட்சிக்கவேண்டுமென்று துதித்தார்கள்; அப்போது சிவபிரான் அவர்களைமாய்த்து நீறுசெய்து ஏகனாயிருக்கின்ற தமது இடப்புயத்தைநோக்க உதித்த உமையவளைக்கலந்து விஷ்ணுபிரமன் சனகாதியர்களைப்படைத்தனன், அவர் இறைவனைப்பணிந்து துதிக்குங்காலையில் இறைவன் கண்ணன்மீது திருக்கண்சாத்தி நமதனுக்கிரகமாகிய சத்தியைக்கலந்த முறைமையினால் இனி பிரமசிருஷ்டி மல்குமென்றருளிச்செய்ய அவர்கள்களித்து ஈடேறினோமென்று ஆனந்தக்கூத்தாடி அம்மையப்பனை வலம்வந்து விடைபெற்று தங்கள்பதங்களிற் சேர்ந்தார்கள், பின்புசிவகடாட்சத்தினாற்பிரமன் சராசரப்பிரவஞ்சங்களைப் படைத்தனன் சத்திசிவங்கலந்த முயற்சியினால் உலகத்தில் ஆண்பெண்ணினங்கள்சேர்ந்து இன்பமுற்றுப்பரவிய தோற்றமனைத்தும் சத்திமயமாகும், சிவமன்

கேபொருந்தி நடிப்பிக்கும் அகந்தையிற்சிறந்த தக்கனே! பிரமசிருஷ்டி நீடஇறைவன்தமதருளாகிய சத்தியைக்கலந்தகாரணம் இதுவாகும் பேதாய் பின்புகர்த்தன் பிள்ளைகளைப்பெற்ற காரணத்தைச் சொல்லக்கேட்பாயாக முன்னொருகாலத்திலே தேவராசன் விண்ணவரைக்கூட்டிக்கொண்டுபோய் இராக்கதர்களுடனெதிர்த்து அகோராயுத்தங்களைச்செய்து சின்னபின்னம்படக்கொன்று துரத்திவென்று விஞ்சையர்முதலானவர் வாழ்த்தெடுப்பச்சயசங்காகத்துடன்மீண்டு பொன்னுலகத்தைச்சேர்ந்து களித்திருந்தான். இப்பால் ஓடிப்போன இராக்கதராசன்வருந்தி இனியென்ன செய்வோமென் றெண்ணுமெல்லாமெண்ணியெண்ணி வாடிப்பின்பு சுக்கிராசாரியன் ஆசிரமத்திற்சென்றுஇந்திரனுக்குத்தான் தோற்றதையும் தன்மரபிலே தேவரை வெல்லவல்ல சவுரியவான்களொருவருமில்லாமையையும் தனக்குநேர்ந்தவசையையும்முறையிட்டு, சுவாமி! இனி இராக்கதமரபு நசித்துப்போகுமோ வீறுமோ தேவரீருக்குத்தெரியுமாதலால் திருவுளம்பற்றவேண்டும்; இதுவல்லாமல் எங்கள்குலத்துக்காசிரியனுயிருக்கின்ற நீர்இம்மரபுமல்கத்தக்கதாகவுதவிசெய்வது உமதுகடமையாதலின் அடியேனுக்கொருதேறுதலைப் போதிக்கவேண்டுமென்றிரக்க, பார்க்கவன்சிலபோது ஆலோசித்து ஓயரசனே கிலேசிக்கவேண்டாம் இனி உங்களுக்குச்சுபகரமுண்டாகவிருக்கின்றது, அதற்கடுத்தசிலமுயற்சிகளைச்செய்யவேண்டும், அவைகள் என்னவென்றால் பிரமகுமாரனாகிய வசிட்டன் மரபிலுதித்து வேதவிதிப்படிக்கு அரியதவங்களைச்செய்துமுடித்து மோட்சவீட்டைவிரும்பி யோகத்திருக்கின்ற மாகதமுனிவரிடத்துக்கு உமது குலத்துதித்த பேரழகுள்ளகன்னிகையொருத்தியைத் தெருட்டியனுப்பி அவரைமயக்கிக் கலக்கச்செய்தால் அவளிடத்திற் கயமுகாசுரன் உதித்து சிவத்தைக்கருதித் தவங்களைமுடித்து வேண்டியவரங்களைப்பெற்றுத் தேவரைவென்று உங்கள்குலத்துக்குச் சக்கரவர்த்தியா யிருப்பானென்று சொல்லினார்; உடனே அவ்விராக்கதராசன் அவரைவணங்கி விடைபெற்று தன்னகரத்தைச்சேர்ந்து இலக்கணவடிவையும் விவேகத்தையும்வாய்ந்த விபுதையென்னுங் கன்னிகையைப்பார்த்து ஓபெண்ணே! எங்களுக்குற்ற இடர் உன்னாலே தீரவேண்டுமென்று வருந்திச்சொல்ல; அதைக்கேட்ட இராக்கதகன்னிகை அரசனைச்சேவித்து சுவாமி தேவரீர் எங்களுக்கு இறைவனாயிருக்க உம்முடைய வசனத்தை மறுப்பதுண்டோ, கட்டளைப்படியே நடந்துகொள்ளுவேன், நினைந்தகாரியத்தை திருவுளம்பற்றவேண்டுமென்று இசைந்தாள், அவ்வரசன் மனக்கிலேசமொழிந்தானாய் நேற்றையதினம் தேவர்கள்மீறி நம்முடைய வருக்கத்தவரையெல்லாம் மடித்துத்துரத்திவெற்றியுடன்மீண்டது உமக்குத்தெரிந்திருக்குமே, அவர்களைச்செயித்துப் பகையைத் தீர்த்துக்கொள்ளத் தக்கவர்கள் நம்மிலொருவரையுங் காணேன், இக்கருமம் உன்னால்முடியவேண்டும், அதற்கேதுவேதெனின் மகாமேருவரைத்தென்புறத்திலே தவஞ்செய்திருக்கும் மாகதமுனிவரிடத்துக்கு நீ போய் அவரை மோகிக்கச்செய்து கூடுவையாயின் வலியையுடைய பிள்ளையுண்டாகித் தேவரனைவரையும்வென்று நமதுகுலத்தையும் விருத்தியடையச் செய்வானென்றுசொல்ல; விபுதைசம்மதித்து தேவரீரிட்டப்படியே பிள்ளையைப்

பெறுவேன், கிலேசிக்கவேண்டாமென்று உறுதிபேசிவிடைபெற்றுச்சென்றாள். இராக்கதராசனும் அன்றே தேவர் அதப்பட்டுப்போனதாக மகிழ்ந்திருந்தான். இப்பால் விபுதையென்னுங் கன்னிகை மாகதமுனிவர் தவஞ்செய்யுமிடத்தையடைந்து அவர் தவநிலையினுறுதிகண்டு இவரை மையல்பூட்டிக் கலத்தலெவ்வகை! சமுத்திரத்தைச் சுவறச்செய்யும் வடவைத்தீயைமேகங்கள் வருஷித்து அவிக்குமாயின் மன்மதபாணம் இவர் தவத்தையழித்து விரகமுண்டாக்கும்; இதுவல்லாமல் வனப்பிலுயர்ந்த மேனகையேவந்து மயக்குவாளாயினும் தவநிலையிற் பிறழமாட்டார். இந்தமகிமையைச் சற்றும்யோசியாமல் நமது அரசன் வேண்டியதற்கிசைந்து அவ்வண்ணமேசெய்வேனெனத் துணிவுசொல்லி நாம் வந்தது நேத்தியென்று வெறுத்துக்கொண்டு இதைக்கருதி ஊருக்குத்திரும்புவோமாயினும்மீளவும் அரசன் அனுப்புவான், ஆதலால் இவரைச்சேருங்காலம் நேருகின்றவரையும் தவத்தைச் செய்திருப்போமென்று நிச்சயித்து தம்மைச் சரணடைந்தவரைக்காக்கும் பெருமையினையுடைய பரமசிவத்தைத் தியானித்து மாகதமுனிவருக்கெதிரில் தவஞ்செய்திருந்தாள் இப்படிக்கு அளவற்ற காலங்கழிந்த தருணத்தில் இக்கன்னிகைசெய்த தவமுயற்சியினாலும் தேவர் ஊழ்வினைச்சம்பந்தத்தினாலும் ஒருகுஞ்சரம்பிடியைக் கூடிக்களிப்பதை அந்த முனிவர்கண்களை விழிக்கப்பார்த்தவுடன் வேதவொழுக்கத்தையும் நீதியையுந் தவமுயற்சியையும்மறந்து இவ்வகைப் புணர்ச்சியைக்கூடப் பெறுவேனாயின் நமதுபிராணனிற்குமெனவருந்திச் சிற்றின்பத்தினாலேதவமகிமையழிந்துபழிக்குள்ளாகவேண்டுமென்றுயோசிப்போமாயின் காமநோய் பிராணனைவாட்டுகின்றது, ஆதலால் உயிரிருந்தால் மீளவும் யோகசாதனையைப்பெற்றுக்கொள்ளலாமென்றுநிச்சயித்துப் புணர்ச்சியைவிரும்பிவாடினர், அக்குறிப்பினைத்தவத்தில் நின்ற அக்கன்னிகை அறிந்து நமதெண்ணம் ஈடேறுங்காலம்நேர்ந்ததென்று அளவற்ற சந்தோஷமடைந்து இதுநல்ல தருணமென்றெழுந்துபோய், மாகதர் பாதங்களிற்சேவித்துக் கரங்களைக்கூப்பிநின்றாள். அம்முனிவர் அவள்வடிவையும் பாலப்பருவத்தையும்பார்த்து மிகவும் மையல்கொண்டு இவள் காந்தருவவிவாகத்திற்கூடுவாளாயின், நமதுபிராணன் நிலைபெற்றிருக்குமென்றெண்ணி அவளைப்பார்த்து, நீ கன்னிகையோவென்றுகேட்க, அவள் முல்லையரும்பினையும் முத்துக்கோவையையும்போன்ற தந்தபந்திகள்விளங்கப் புன்முறுவல்பூத்து, சுவாமி! ஆமென்று கோகிலமும்நாணக் கொஞ்சிச்சொல்ல அதைக் கேட்டு, நல்லகாரியம், என்னிடத்தில் என்னகோரிக்கையைவிரும்பிவந்தீர் அதனை விரைவிற்கேட்டுக்கொள்ளக்கடவீரென்றார். உடனே அவள் தவத்தரே! உம்மைக்கலந்து இன்புறவேண்டி வெகுகாலமாகத் தவஞ்செய்தேன், அப்பயன் இன்றைக்குக்கைகூடியது, இப்போது உம்மைஅணைந்தின்பமுற்றுக் களிக்கவந்தனனெனச்சொல்ல, அதை அம்முனிவர்கேட்டு அரிய வமுதம் பெற்றவரைப்போலமகிழ்ந்து என்தவமும் உன்விரதபலனும் இத்தருணத்தில் இருவரையுங்கூட்டின, ஆதலால் நீகாலதாமதஞ்செய்யாமற் பெண்யானையாக வரக்கடவாயென்று வேண்டினார். அதற்கு அவள் சம்மதித்து, அவ்வாறே உருக்கொண்டு, காமவிளைவைக்காட்ட, அவரும்களிறுகவடிவெடுத்துத், துதிக்

கையை வானத்திலீட்டி, விறிட்டுவந்து, புணர்ந்தார், அவர்களின்பமுற்றிய கடையிற் பிறையைப்போன்ற காற்கோடுகள்விளங்க நீண்டதுதிக்கையையும் பர்வதாகிருதியாகிய தேகத்துடன் கரங்களில்வாளுங் கேடயமுங்கொண்டு, கயமுகாசுரன் உதையமாய்த்திசைகளிற்பாய்ந்து, அஷ்டகுலாசலங்கள் துகள்படப் பாதங்களைப்பெயர்த்து, அண்டங்குலுங்கக்கொக்கரித்தான். அத்தருணத்தில் அக்கன்னிகை உரோமங்கடோறும்பெருகிய வியர்வையில் அளவற்ற இராக்கதர் ஆயுதபாணிகளாய்ப்பிறந்தனர். அவர்களுடன் கயமுகன்கூடி வடவாமுகாக்கினி பிரசண்டவாயுவுடன் கலந்தெழுந்தாற்போலச் சஞ்சரிப்பதைத் தாய்தந்தையர்கண்டுபயந்து பழையவுருப்பெற்றோடினார்கள். அப்போது மாகதமுனிவர் தமது காமவிகாரந்தெளிந்ததனால், அப்பெண்ணைக் கோபித்துப்பார்த்து, நீ யார்? நீ வந்தகாரணமென்ன? ஒளியாமல் வெளியிடக்கடவாயென்று உருத்துவினவ அவள்தன்வரலாற்றை விவரித்துச்சொல்லினாள். உடனே அம்முனிவர் திகிற்பட்டு, ஐயையோ! தேவர்முதலானவர்களுக்கிருந்த துன்பத்தைவிளைத்தேனெனக்கனைந்துவாடி, ஒருவகையாகத்தேறி இராக்கதராசனேக்கமும் உன்னெண்ணமும் ஏககாலத்தில்முடிந்தன, என்தவமும் தேவர்வாழ்வும் வகையறமடிந்தன, ஆதலால் நீ இவ்விடத்தில் நிற்காமற்போய்விடென்றுசொல்ல, அவள் முனிவரைச்சேவித்துத், தன்பதிக்குவந்து, அரசனுக்கு இச்செய்திகளை விண்ணப்பஞ்செய்தாள். அந்தராசன் சூரியனுதையங்கண்ட கமலத்தைப்போல முகமலர்ந்து, மனவெழுச்சிபெற்றவளாய் அவளைக்கொண்டாடி விடைகொடுத்தான்; இப்பால் மாகதமுனிவர் முன்போன்று அருந்தவநிலையை அனுட்டித்திருந்தார். இவர்களுக்குஉதித்த கயமுகன் முதலானபிள்ளைகள் பருவதங்கள் கால்முளைத்துநடப்பதைப்போலவும் அட்டமாநாகங்களுக்கொப்பாகவும், பிராணிகளைவாட்டுங்கூற்றுவன்பலவுருக்கொண்டெழுந்ததை நிகர்க்கவும் ஊழித்தீயைப்போலவும், ஆலகாலவிஷத்துக்கிணையாகவும், எங்குமுலவிக்குலகிரிகளை உதைத்து, துகள்படச்செய்வார்கள், பூமிபிளக்கநடப்பார்கள், சீவராசிகளைக் கொல்லனுலைபோன்றவாய்களில் வாரிவாரியிட்டு, இருகடைவாயினும் உதிரம் ஊற்றெடுத்தோடவென்றுதின்பார்கள், சமுத்திரங்களைப் பானஞ்செய்வார்கள், சூரியசந்திரர்கதிகளைத்தடுப்பார்கள், ஆதிசேடன்நெளிந்துவருந்தத் தாண்டுவார்கள். இவ்வகையாகக் கயமுகாசுரன் துணைவருடன் எங்குமுலவிப், பிராணிகளை அலைத்துத்தின்று, உதிரபானஞ்செய்து, இருடிகளைவாட்டி, வேதவொழுக்கங்களைக்கொன்று உலாவுவதை இராக்கதராசன் அறிந்து, சுக்கிராசாரியனிடத்துக்குப்போய், இச்செய்திகளை விண்ணப்பஞ்செய்து, சுவாமி! இவர்களை யொருவழிப்படுத்திச் சத்துருக்களை வெற்றிகொள்வதாகக் கடாட்சிக்கவேண்டுமென்று போற்றினான். அதற்குப் பார்க்கவன்சம்மதித்து, அவனுக்குச் செலவுகொடுத்தனுப்பிவிட்டு, கயமுகனிருக்குமிடத்தைச்சேர்ந்து அவனைக்கண்டு ஆசிர்வதித்து, நான் உன்குலக்குரவனாகும். என்பெயர் சுக்கிராசாரியனென்பார்கள், உன்பாட்டனாகிய இராக்கதராசன் அனுப்ப நீஇனிநடந்துகொள்ளவேண்டிய உறுதிகளைப் போதிக்கவந்தேனென்றுசொல்ல; அதைக்கேட்டுக் கயமுகன்சேவித்து, ஆசிரி

யனே! எம்பாலமைந்திருக்கின்ற பேரன்பினால் நன்மார்க்கங்களைத்தெருட்ட வெழுந்தருளினீர், இதைவிட நான்பெறவேண்டியதென்னவிருக்கின்றதென்று உபசாரவார்த்தைகளைச் சொல்லிக்கொண்டிருக்குந் தருணத்தில் இராக்கத சேனைகள் நமது குலகுரு வந்தார்வந்தாரொன்று இரைந்து திரண்டுவந்து கூடிச்சேவித்துக்கொண்டார்கள். அவர்களையும் சுக்கிராசாரியன் வாழ்த்திக் கயமுகனைப்பார்த்து,நீ மேலான தவங்களைச்செய்தாயில்லை,விச்சுவநாயகனாகிய பரமசிவத்தைப்பூசித்து வேண்டும்வரங்களைப் பெற்றாயில்லை, சத்துருக்கள் மாயங்களையும் வஞ்சனைகளையும் மேம்பாடுகளையும்செருக்குக்களையும்விசாரித் தறிந்தாயில்லை, இவ்வுடம்பு அநித்தியமென்பதையும்நினைந்தாயில்லை, அநியாயமாக உயிர்களைக்கொன்றுதின்றுபலநாட்களை அவத்திற்கழித்தாய், பஞ்சேந்திரியங்களை நிக்கிரகித்துத் தவஞ்செய்து திவ்விய பாணமுதலானவைகளைப்பெற்றுச் சத்துருக்களை வெல்லவெண்ணிறையில்லை, இம்மையில் இந்திரதிருவனைக அனுபவித்து ராசராசனாய்வாழ்ந்திருந்து மறுமைக்கு உறுதிகளைப்பெற நினையாவிடின், நீ இருந்தென்னபலனுண்டு, செல்வமும்வலியும் சீரும் ஆயுளும் வீடும் தவத்தினாலுண்டாகுமென்பதை இதுவரையில்நினையாமலிருந்ததென்ன? இவையனைத்தும் வாணாளின்காலமுடிவில் இயமன்வந்தழைக்கும்போது, கூடுமோ இத்தேகமெடுப்பது அரிது, இதுநீடித்திருக்கவகை தேடிக்கொள்ளாமல் காளை பயனிலதாகக்கழிப்பதி லென்னபயன்பெறுவாய். மந்திரதந்திரங்கள் தேவாஸ்திரங்களொன்றும் பெற்றாயில்லை, இச்செய்திகளை இந்திரன் அறிவானாயின், தேவர்களைக்கூட்டிக்கொண்டுவந்து, உன்னுடனெதிர்த்து, அகோரயுத்தங்களைச்செய்து சாடுவான்; அக்காலத்தில் மிருகங்கள் பட்சிகள் வலையில் அகப்பட்டுத்திகைப்பதைப்போல நீ வாடவேண்டிவரும்;ஆதலால்தேவாதிதேவனாகிய இறைவனைநோக்கித் தவங்களைச் செய்வையாயின்வேண்டியவரங்களையும் திவ்வியபாணங்களையும்பெறலாம், அவைகளினால் சத்ராதிகளையும்வென்று சக்கரேசுவரனாக வாழ்ந்திருக்கப்பெறுவையெனச் சுக்கிராசாரியன் பலவாகப் போதித்தார். அதைக்கேட்ட கயமுகன் தன்குலக்குரவனை வணங்கி, சுவாமி! இதுவரையில் இக்கருமங்களை யாவரும் சொல்லவுமில்லை, எனக்கும் இவைகள் தோன்றாமற்போயின;ஆதலால் தேவரீர் கிருபைகூர்ந்து அடியேன்தவஞ்செய்யும் மார்க்கத்தை யனுக்கிரகஞ்செய்யவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய; சுக்கிராசாரியன் மனமகிழ்ந்து தவத்திற்குரிய நடைநொடிபாவனைகளைத்தெருட்டி அதற்குரிய மந்திரங்களையும் உபதேசித்து மேருவரையிற்போயிருந்து தவஞ்செய்யென்றனுப்பினார், தந்திமுகன்சேவித்து, விடைபெற்றுச் சேனைகளுடன் சிலகாதவழிநடந்தான். அதைச்சுக்கிரன்கண்டு இனி நினைத்தகாரியத்தை முடித்துக்கொண்டு வருவானெனத் தயிரியமாகித்திரும்பி இராக்கதராசனுக்கு இச்செய்திகளைவிளக்க, அவன் ஆனந்தபரவசனாகி, சுவாமி! இப்போதுதானெங்களைக் காத்தீரென்று துதித்துப் பலதரஞ்சேவிக்க, இனி உங்கள்குலம் அபிவிர்த்தியாகுங்காலம் நேர்ந்ததன்றியும் சகலசவுக்கியங்களையும் பெற்றுப் பகைவரைவென்று வாழக்கடவாயென்று ஆசீர்வதித்துத் தமதுஆசிரமத்தைச்சேர்ந்தனன். இப்பால் கயமுகன் குரவன்சொற்படியே மகமேருவுக்

கொருபக்கத்திற்போய், பரிசுத்தனாய்ப் பரமசிவத்தின் பாதாரவிந்தங்களைக் கருதி, ஆயிரவருடஞ் சருகுபுசித்தும் ஆயிரவருடஞ் சலமருந்தியும் ஆயிரவருடம் அனலை விழுங்கியும் வெய்யில் மழை குளிருக்குச் சலியாமலிருந்து, பின்பு பிராணவாயுவையெழுப்பி, மூலாக்கினியைமுடுக்கி, மேல்விளங்குந் தத்துவ அமுதினைப்பருகி, இவ்வகையாக அகோரமானதவத்தைச் செய்து வந்தான். அதைத்தேவர்கள்கண்டு, இத்தவமுடியுமாயின் நமக்குக்கெடுதிவருமென்று திகிற்பட்டோடி, இந்திரனைச்சேவித்து, அறிக்கையிட்டார்கள். அதைக்கேட்டவுடன் மகவான் மனநடுங்கி, நமது வெற்றியும் செல்வமும் அடங்குங்காலம் நேர்ந்ததாகக் காணுகின்றது. இதற்கென்செயக்கடவோமென்று வாடிவருந்தி, பெருமூச்செறிந்து திகைத்தான். சவுனகாதிமுனிவர்களே! அவன்பட்டபாட்டை யொருவகையாகச்சொல்லிமுடியாது. இப்பாற்கயமுகாசுரனே, அதுவரையிற் பரமசிவனெழுந்தருளாத காரணத்தினால், வேள்விக்குண்டத்தின் நாற்பாங்கினும்அனலையெழுப்பி, மத்தியில்நின்று, இறைவனை நினைந்து, பதினாயிரவாண்டு அரியதவத்தைச்செய்கின்ற காலத்தில், அவ்வனலோங்கிப் பொன்னகர் அளகாபுரி முதலானபதிகளைத்தகிக்க, அவ்விடங்களில் வாசஞ்செய்பவருக் கடுத்த துன்பத்தைப் பேசிமுடியாது. அப்போது அந்த இராக்கதகுமாரன் மனவுறுதிக்கிரங்கி, அக்கினிதேவன் வூருத்தாமற் குளிர்ந்துகாட்டி, அவன்தேகத்தையும் வச்சிரகாயமாக்கினான், அதைக்கண்ட இராக்கதசேனைகள்களித்துத் தேவரையிகழ்ந்தார்கள். பிரமனும் இத்தவத்தைமெச்சி, சிரக்கம்பஞ்செய்தான். அக்காலத்திற் பரமசிவன் இரங்கி, இடபவாகனாரூடராய்க்,கணங்கள்போற்றவானத்திலேதோன்றியதைக்கயமுகன்தரிசித்தெழுந்து, ஆனந்தக்கூத்தாடித் துதித்துப்பணிந்து, கரங்களைக்கூப்பிநின்றான். அப்போது அவன்மேல் பரமசிவம் கிருபாநோக்கம்பாலித்து, இதுவரையில் அளவற்றகாலமாகத் தவநிலையினின்றுவருந்தினாய், வேண்டியவரங்களைக் கேளென்றருளியவுடன் அவன்மீளவுஞ்சேவித்து, சுவாமி! விண்டு பிரமன் இந்திரன்போருக்கென்னுடனெதிர்த்தாலும்அவர்கள்அபசயப்படவும்தெய்வப் படைகளினால் அழிவில்லாமலும் விண்ணவர் மண்ணவர் பாதலவாசிகள் விலங்கு பறவைமுதலானவைகளினால் அழிவற்று எக்காலத்தும் இறுதியில்லாமலும் என்னைப்போலும்வொருவன் அவதரித்துப்பொருதாமலும் அவனாயுதத்திலே மாளாமலும் யாவரும் என்னாணை ஆக்கினையிலடங்கி வழிபடவும் என்னரசெங்குஞ்செல்லவும் திவ்வியபாணங்களையும் அனுக்கிரகஞ்செய்யவேண்டும், இதுவலலாமல் எவ்வகைத்தந்திரவுபாயத்தினாலாவது யானிறக்குங்காலம் நேருமாயினும் பிறவியில்லாமல் உமதுபாதாரவிந்த நீழலிற்சேர்ந்திருக்கவுந் தயைசெய்யவேண்டுமென்றுகேட்க, அந்தப்படியே அனுக்கிரகஞ்செய்துபரமசிவன் திருக்கயிலைக்கெழுந்தருளினார், பின்புகயமுகன்பிரபலவரங்களைப்பெற்றகளிப்பினாற்பரமசிவனைப்போற்றி, சேனைகள்சூழநடக்கும் வேகத்தையும் செயவுச்சாகத்தையும் இந்திரன் அறிந்து, கிலேசமுற்று வருந்தினான், இச்செய்திகளைத்தெரிந்த சுக்கிராசாரியனே தான் இராக்கதராசனைக் கூட்டிக்கொண்டெதிர்சென்று, சுகசீவியாய்ச் செயசாலியாயிருப்பாயென் றாசீர்வதித்துத் தங்

கள்பதிகளிற்சேர்ந்தார்கள். பின்பு கயமுகன் திக்குவிசயஞ்செய்யநினைந்து இந்திரன்முதலானவர்களைவென்று தன்வயப்படுத்திக்கொண்டு, பூமியின்கண் வந்து இராக்கதசிற்பியை அழைப்பித்து, இந்த நாவலந்தீவின் தென்புறத்தில் தானரசுசெய்ய ஒருநகரமுண்டாக்கக் கட்டளையிட, அச்சிற்பி சேவித்துப்போய், விசாலமான இடத்திற் சொர்னமயமான மதிலும் பாதலவரையிலாழ்ந்து சலசமர்த்தியாயிருக்கும் அகழும் வானத்தையளாவிப் பலநிலைகளைப்பெற்ற கோபுரங்களும் நவரத்தினமயமான மாடமாளிகை மண்டபமுதலானவைகளும் சாத்திரப்படியே பொன்னுலகமும் நாணத்தக்கதாக நிருமித்து அதற்கு மதங்கநகரமென்று பெயரிட்டு அறிக்கையிட்டான். கயமுகன் சுபமுகூர்த்தத்திலே அதிற்பிரவேசித்து, சபாமண்டபத்திற்சென்று நவரத்தினமயமான சிங்காதனத்தில்வீற்றிருந்து, நாடோறும் வைகறைக்காலத்திற்பிரமன் பஞ்சாங்கஞ்சொல்லிப்போகவும் இந்திரன்முதலாகிய தேவரும் காமதேனுவும் கற்பகத்தருக்களும் *சங்கநிதி பதுமநிதி சிந்தாமணியும் அரமகளிர்களும் ஏவல்களைச்செய்து வணங்கவும் கொடுங்கோல்செலுத்தி, சுக்கிராசாரியும் இராட்சதராசனும் மந்திரிகளாகச்சூழ அரசுநடாத்திவருகின்ற காலங்களில் ஒருநாள் தன்னைப்பணிந்த தேவேந்திரன் முதலானோரை நோக்கி இன்றுமுதல் நீங்கள்நம்முடைய சபைக்குவரும்போதெல்லாம் சிரத்தில்மூன்று தரங்குட்டிக்கொண்டு கரங்களைமாறி இருசெவிகளையும்பற்றி மூவிசை இறங்கியெழக்கடவீரெனக் கட்டளையிட்டான். அவ்வாறேஅவனாணைக்கஞ்சி நாடோறும்நடந்துகொண்டு பழியொடுந்துயரமென்னுஞ் சமுத்திரத்திலழுந்திவருந்திய தேவேந்திரன்முதலியோர்இதனைப்பிரம விஷ்ணுக்களுக்கு முறையிட அவர் இவரைத் தேற்றித் திருக்கயிலைக்குஅழைத்துப்போய், நந்திபெருமானனுமதிபெற்று, ஆலயத்திற்சென்று, பரமசிவத்தைவணங்கிப்போற்றினார். அப்போது பரமசிவன் விண்டுவைநோக்கி, விண்ணவர்வருந்திவந்த காரணமென்னவென்றுவினவ, அவர் சுவாமி! கயமுகனென்னும் அவுணராசன் தவமுயற்சியினால் இவர்களை மிகவும்வருத்தித்தகாதகருமங்களையுஞ்செய்யக்கட்டளையிட்டலைக்கின்றானும், அவனையழிக்க எங்களுக்குவலிமையில்லை, இறைவனே! தேவரீர்கிருபைசெய்து அப்பாதகனைக்கொன்று எங்கள் துன்பத்தைநீக்கி, காக்கவேண்டுமென்று போற்றினார். பரமசிவன்இரங்கி, நாம் ஒருபிள்ளையைப்படைத்தனுப்பி உங்களிட்டப்படியே செய்விப்போமென்று திருவுளம்பற்ற, அதைவிஷ்ணுமுதலானவர்கேட்டு அப்போதே சகல இன்னல்களையும் போக்கினவர்களையொத்து ஆடிப்பாடி, பணிந்துவிடைபெற்று, தங்கள் பதவிகளிற்சேர்ந்தார்கள், சிலகாலத்திற்குப்பின்பு இறைவன் தமது வாமபாகத்தமர்ந்த பராசத்தியின்மேல் திருக்கண்சாத்தி, நமது நந்தவனத்தின் சிறப்புகளைப்பார்த்துவருவோமென்றழைத்துச்சென்றனர். அச்சோலையானது தழைத்தோங்கி, நிழலைப்பரப்பிப் பரிமளமிருந்த புட்பவருக்கங்களைச்சொரிந்து, கனிவகைகளையும் தாங்கிநிற்பது எப்படிக்கிருந்ததென்றால், இறைவனிடத்து அன்புவிளங்கிய அடியார்கள் அருச்சனைசெய்வதுபோலவும் தேன்துளிப்பது ஆனந்தக்கண்ணீர் பெருகுவதாக் கிணையாகவும் இருந்தது. இச்சிறப்புகளையெல்லாம் பரமசிவன் பார்ப்பதியுடன்

பார்த்துக்கொண்டுபோய், அச்சோலைநடுவிற் சொர்ணமயமாய்ச் சித்திரங்களழுந்திராநின்ற மண்டபத்திற்பிரவேசித்தனர். அக்காலத்தில் பார்ப்பதியார் அதனிடத்தடங்கிய வோவியங்களை நோக்குகையிற் பரமசிவனருளின்படிக்கு முதலெழுத்தாகிய ஓங்காரமானது குஞ்சரமும் பிடியுமாகவுருக்கொண்டு புணரக்கண்டு, பரமசிவத்தைத்தொழுது, இதென்னகாரணமென்று வினவ, பரமசிவம், பெண்ணே! உனதுநோக்கம்பட்ட முயற்சியினால் சீக்கிரம் இவ்வுருவைப்பெற்றுப்புல்லியது. உன்பெருமைகள் நம்மாலன்றி வேதாகமங்களினாலும் உணர்தற்கரியவாமென்றருளும்போது அவ்விரண்டும் இன்பமுற்றி முன்போன்ற சிறந்தகுடிலையிலடங்கின. உடனே நாற்கோடுகளும் நீண்ட துதிக்கையும் பருத்தவயிறும் குறியதாள்களும்பெற்று ஒருமைப்படச் சிந்திப்பவருணர்வாய்ப் பரிபூரணமாய் எங்குநிறைந்து யாவருந்தொழுது போற்று முயற்சிபெற்றுப் பரமசிவமேயென்னவிளங்கி வேதப்பொருளாய்த் தமமைத் தொழும் அடியார்கள் வினைகளைப்போக்கக்காக்குங்குணநிசயங்களைப்பெற்ற பிள்ளையார் அவதரித்து, சிவசத்தியினது பாதகமலங்களிற்சேவித்து, கரங்களைக்கூப்பிநிற்க, அம்மையும் அப்பனும ஆதரித்துத் தழுவி, முத்தமிட்டு, ஐயனே! யாவராயினும் முன்னே உன்னைநினைந்தொருகருமத்தைச்செய்வாராயின் அவர்கள் மனோபீட்டங்கள் முற்றுமபெறக் கடாட்சித்தும பற்றையர்கள் முயற்சிகளை விக்கினஞ்செய்தும் பிரம விஷ்ணு முதலானவர்களும் உன்னைத்தொழுதுபோற்ற நாயகமாய்விளங்கக்கடவாயென்றுவாழ்த்தி, குமாரனே உலகங்களை அலைத்துக் கொடுங்கோலசெலுத்துங் கயமுகாசுரனைச்சங்கரித்து முகுந்தன்முதலானோர் இடுக்கண்களைத்தவிர்த்துவருவாயெனப் பலவெள்ளப் பூதப்படைகளை உண்டாக்கித்தந்து, விக்கினகர்த்தனை ஆலயத்தில்அழைத்து வந்து, முதற்கோபுரவாய்தலில்வீற்றிருந்து இறைமைசெலுத்துவாயென் றவ்விடத்திலிருத்தி, அந்தப்புரத்திற்சென்றனர். பின்பு விநாயகக்கடவுள் நந்திபெருமான் பிரமன்விஷ்ணுமுதலியமதேவாவந்து சேவிக்கவும், பூதப்பிரமுகாள் சூழ்ந்து ஏவல்கேட்கவும், அமர்ந்தருளினர்.

இவ்வகையாக நடந்துவருகின்றதருணத்தில் ஒருநாள் கேசவன் பரமசிவத்தைத்தொழுதுபோக விருப்புற்று, வெள்ளிகிரியையடைந்து, நந்திதேவரருள்பெற்று, உள்ளேபோய், இறைவனைச்சேவித்துத் துதித்துநிற்க அவனைப் பரமசிவம் அருகிலிருத்தி, க்ஷேமங்களைவினவியபின்பு ஒருதிருவிளையாடலை நினைந்து, பரமேசுவரியைநோக்கிபெண்ணே! நாமிருவரும் பகடைசாலையாடுவோம்,இதற்குப்பந்தயம் நீ தோற்பையாயின் உனதுபணிகளையெல்லாம் எமக்குத்தருதி, நீ வென்றால் எமதணிகளாகிய சர்ப்பம்பிறையாதியானவைகளைப் பொற்றுக்கொள்க, வென்று சொல்லி, தோற்புக்கெலிப்புக்கு விஷ்ணுவைச்சாட்சியாகவைத்துக்கொண்டுஆடினர். அப்போது விஷ்ணுபிரமனுக்கரிய சிவம் ஏதுகாரணத்தினாலோ பராசத்திக்குத்தோற்றும்உமையவளைநோக்கிநகைத்து நமக்குத்தோல்வியுற்றபடியால்உனது ஆபரணங்களைத்தருகவென்றுகேட்க, அம்மன் இறைவனுடன்வாதுகொடுக்க அஞ்சி, கரியவனைப்பார்த்து, நீர் இதற்குச்சாட்சியாக இருந்தபடியால், யார்வென்றதுசொல்லுமென்று கேட்கும்போது

கள்ளமாமாயன் மேல்வருவதையுணராமற் பரமசிவனேயென்றெணக்குறித்தார். உடனேபராசத்திமிகோபமடைந்து, நல்லநியாயஞ்சொன்னீர். இறைவன்தான் அப்படிக்குப் பேசியபோதிலும் நீர் திட்டாந்தமாகப் பார்த்திருந்தும் அஞ்சாமல் அபத்தமாடத்தகுமோ? உமதுதேகம் கறுத்ததாயினும் மனமும் கரியாகலாமோ? இக்காரணத்தினாற் பாம்பாகக்கடவையெனச்சபித்தாள். அவ்வுண்மைமாறுமுன், விஷ்ணு அவ்வடிவம்நேரக்கண்டுபயந்து, பரமனைச்சேவித்து, சுவாமி! தேவரீர்பட்சமாகப் பேசப்போய் இச்சம்பவம்நேர்ந்தது. இதற்கு நிவாரணகாலம்அருளிச்செய்யவேண்டுமென்றுபோற்ற, பரமேசுவரன் அவரை நோக்கி, நம்மிடத்தன்பினால் மாறுகூறி இவ்வடிவுபெற்றனையாயினும் பயப்படவேண்டாம் தென்னாட்டிற் பாலவனமென் றொன்றுண்டு. அவ்விடத்திலொருவடவால விருக்ஷம் இருக்கின்றது; அதின் கண்தோறும் பொந்திற் சேர்ந்து தவஞ்செய்திருப்பையாயின் சிலதினத்தில் நமதுகுமாரனாகிய விநாயகன் கயமுகனைவென்று அம்மார்க்கத்தில்வரும்போது அவனைக்கண்டு தொழுவையாயின் இவ்வுருவமாறுமென்றருளிச்செய்தனர். உடனேவிஷ்ணுசேவித்து விடைபெற்று அவ்வனத்திற்சென்று ஆதியில்நால்வருக்கு யோகாப்பியாசத்தைப்போதித்த சிவபிரானெழுந்தருளிய வடவிருட்சத்தைப்போலத்தழைத்து நிழலைப்பரப்பி ஏழுகாதமளவும் நாற்புறத்தினுங்கிளைகள்நீண்டு விட்டுணுவைப்போல உயர்ந்து அளவற்றவிழுதுகள்தொங்கநிற்கும் ஒருவடவால விருட்சத்தில் விளங்கும்பொந்தில் தங்கித்தவஞ்செய்திருந்தார். இப்பாற்கயமுகாசுரனா லிடைவிடாது துன்பமனுபவிக்கின்ற இந்திரன்முதலிய விண்ணவர்கள் விநாயகக்கடவுள் அவதரித்தசெய்தியையறிந்து களித்து திருக்கயிலாயத்தைச் சேர்ந்து முதல்வாய்தலின் மீதெழுந்தருளிய விக்கின கர்த்தாவைத்தரிசித்து வணங்கிப் பலவாகப்போற்ற அவரை விநாயகக்கடவுள் கிருபையாகப்பார்த்தருளி ஓ தேவர்களே! உங்கள் முகங்கள்வாடியிருக்க வந்தகாரணமென்னையென்றுவினாவ அவர்கள் சுவாமி! கயமுகனென்னும் அவுணராசன் பரமசிவத்தினிடத்தில் அளவில்லாவரங்களைப்பெற்று அடியோங்களை அலைத்துக் கொடுங்கோல்செலுத்தி இட்டவேவல்களைச்செய்து வருகையில்மேலும் ஒவ்வொரு நாளுந்தன்னைக் காணவருகையிற் கன்னங்களிற்குட்டி இருசெவிகளையும் பற்றிமும்முறைவணங்கியெழும்படிக்குப் புதியகட்டளை யொன்றையிட்டான். இப்புல்லியதொழிலைச் செலுத்திவருந்துகின்ற நாங்களொருகாலம் இக்குறைகளைப் பரமசிவத்தின் சந்நிதானத்தில் முறையிட்டதற்குப் பரமசிவம் இரங்கித் தேவரீரைத்தந்து அடியோங்கள் துன்பைப்போக்குவதாகக்கருணைசெய்திருப்பதனால் எங்கள்வாட்டத்தையும் அவனாட்டத்தையு மொழித்துப் பாதுகாத்து இரட்சிக்கவேண்டுமென்று பன்முறைபணிந்தேத்தி மோதகம்சுண்டல் பழவருக்கங்களாதியான நிவேதனங்களைப்படைத்து வேண்டினார்கள். விநாயகர்பரிவாய் நீங்கள் பயப்படாதீர்களென்று ஆதரித்துஉடனே சிங்காதனத்தை விட்டிறங்கிவெளிவந்து அசலனென்னும் பூதன்மீதாரோகணித்துச் சிவகணங்கள் போற்றவும் பூதவெள்ளங்கள் நெருங்கிவரவும் பலபூதர் பற்பலவாத்தியங்களைமேகங்களைப்போல முழக்கிப்போகவும் சிலபூதர் வெண்சாமரைகளைவீசப்

பக்கங்களிற் சூழ்ந்துவரவும் சிலர்குடைகளைத்தாங்கிச் செல்லவும் இந்திரன் முதலிய தேவர்கள் கற்பகமலரை இறைத்து இருமருங்கிலும்புகழ்ந்துவரவும் கயமுகாசுரன் அரசுசெய்திருக்கும் மதங்ககரத்திற் கருகில்வந்தார். அதைத் தூதரறிந்தோடி இராக்கதராசனுக்கு அறிக்கையிட்ட மாத்திரத்தில் அவன் வடவானலத்தைப் போற்கோபித்துச் சர்வாயுதபாணியாய் இரத்தினமயமான தேரிலேறி இராக்கதவெள்ளங்கள் செயவுச்சாகத்துடன் பலபடைகளைத்தாங்கிக் கடல்பெருகியதைப்போல வந்துசூழ ரணபேரி செயபேரிமுதலிய வாத்தியங்கள் அண்டமுமதிர முழங்கச்சென்று கணபதிக்கெதிரில் நெருங்கினன். அப்போது பூதப்படைகளும் அவுணவெள்ளங்களும் கோபதீபிதராய் வெய்யிலும் இருளும் சேர்ந்ததைப்போலச்சீறிபாணங்கள் ஆயுதவகைகள் பருவதங்கள் முதலானவைகளையொன்றனந்தமாகஒருவர்மேலொருவர்பிரயோகித்துச்சண்டைகொடுக்குந்தருணத்தில் அவுணர்களிற்பலர்மாளக் கண்டு மற்றவர் எதிர்த்துநிற்க நிருவாகமில்லாமற் பலதிசையினுமோடி ஒளித்தார்கள், அத்தருணத்தில் பூதப்படைகள் செயவுச்சாகத்துடன்பயமற்றுமேலிட்டுவருவதையும் தன்சேனைகள்முரிந்து இறந்ததையும் கயமுகன்கண்டுகாளத்தைப்போற்சீறித் தன்தேரைநடாத்தி மீறிவரும் பூதப்படைகளின்மீது சரமாரிபொழிந்து சலபடைக்கண்களாகத்தொளைத்து அதஞ்செய்யப்பூதப்படைகள்எதிரில்நிற்கச்சக்தியில்லாமற் பெருங்காற்றிற்பட்ட பூளைப் புட்பத்தைப்போலப் பறந்தார்கள். அதைக்கண்டதேவர் வாடி இறைவன் பாதங்களிலவிழுந்து முறையிட விநாயகர்கையமைத்து அசலன்மீதாரோகணித்து முன்னணியில்வரும்போது அவரைக்கண்ட கயமுகன் தன்னருகிலிருந்த தூதனைப்பார்த்து நம்முடன் போருக்கெதிர்த்த இவனுரொன்றுவினவ அவர்கள்தொழுது இவன்சிவகுமாரன் கணபதியென்னும் நாமமுடையவனெனச்சொல்லி முடிவதன்முன்னம் கண்கள்சிவக்கக்கோபித்து கர்த்தனுக்கெதிர்ற்போய் விழிகளிற்றீயெழநோக்கி பற்களைக்கடித்து உதட்டையதுக்கி உன்தந்தை என்தவத்துக்கு இரங்கிக்கொடுத்த வரமுயற்சிகளையு நினையாமல் வீணாய்மடியவந்தாய்! உன்னப்பனைப்பற்றி இப்போது தயையாகச்சொல்லுகிறேன் உயிரினிடத்திச்சையிருந்தா லோடிப்பிழைக்கலாம், என்னுடனெதிர்க்க உனக்குவலிபோதாது, மேலும்நீசிறுபிள்ளையாயிருக்கின்றாய் என்னுடன்பொருதவர் இறந்தாரல்லது இன்னார்பிழைத்தாரென்று சொல்லமாட்டேவையோ, விண்ணவர்மண்ணவர் வலியினாலும் தேவர்படைகளினாலும் அழிவில்லாத வரமபெற்றிருக்கின்றேன்; இதுவல்லாமலும் பரமசிவம் அளித்தவை அளவற்றன உண்டு இவைகளையோசியாமற் பாலனுதலால் தேவர்படுந்துன்பத்தை நீக்குதற்குவந்தாய் ஆதலால் உன்னைவென்று அவர்களையும்வென்றுபசிக்குணவாகத்தின்பேன்; இனிவல்லமையுடையவனுறு பாணங்களைத் தொடுப்பாயென்றுசொல்லினன். அதைக்கேட்டவிநாயகர் நகைத்து உனக்கு இச்செல்வங்களை அருளிய நமது பிதாவானவர் உன்னைச் சங்கரித்துப் பிராணிகளுக்கடுத்த இடரைநீக்கி இந்திரனுக்குத் திரிலோக வாழ்வை அளித்துவரக் கட்டளையிட்டார். ஆதலால்இன்னஞ்சிலகாலம் பிழைக்கஉனக்கு மனமிருந்தால் பொன்னுலகைஇந்திரனுக்குக்கொடுத்துப்பூவுலகை

அரசுசெய்திருப்பாய், அல்லது உன்பிராணனை எமலோகங்குடியேற்றுவேன், இதனையோசித்து உன்னெண்ணத்தை விரைவிற்சொல்லென்று திருவுளம் பற்றினார்; உடனே கயமுகன் அக்கினியைப்போற்சீறி மேருவுக்கொப்பாய்த் தங்கக்கட்டுக்கள் பூண்டமணிகளசையும் பெரியவில்லைவளைத்து அண்டங்களதி ரக்குணத்தொனிசெய்து அளவற்றகொடியபாணங்களைப் பிரயோகிக்க அவை களெரிந்து புகைந்துவருவதை விநாயகர்கண்டு தமதுகரத்திலவிளங்கும் எழு வாயுதத்தினாற் பொடிசெய்து மேலும் அவன்கரத்திற்பற்றிய வில்லையுங்கண் டித்தார், அதனாற்பாதகன்வெகுண்டு மற்றொருசிலையையெடுத்து வளைப்ப தற்கு முன்னம்கணபதி தேவர்கள் கரங்களைப்புடைத்து நகைக்க அதனையுந் துண்டிக்க, அவன் வலியதண்டமொன்றை எடுத்துச்சுழற்றிவீச, அதையும் முறித்து அவன்மார்புபிளக்கமோதினார். அதனாற்கயமுகன் சோபமுற்றுத் திகைத்து நிற்பதைக்கண்ட இராக்கதசேனைகளும படைத்தலைவரும் திர ண்டு, திவ்வியபாணங்கள்தண்டம் பிண்டிபாலம் எழு மழுமுதலிய ஆயுதங் களைச் சோனைமாரியைப் போலச்செலுத்தி, சிங்கநாதங்கள்செய்தார்கள், அப்போதுகணபதி தமது திருக்கரத்திலிருந்தபாசத்தைவீசி, மேலிட்டுவரும் படைகளையும் இரதகசதுரகபதாதிகளையுமகட்டி, உடனேகணிச்சியைச்செலு த்தி சின்னபின்னப் படக்கண்டித்தார் அதைக்கயமுகன்கண்டு நடுங்கிவருந்தி னான். அச்செயத்தைப் பார்த்ததேவர்கள்இறைவனைப்புகழ்ந்து கூத்தாடினார் கள், அப்போது அந்தஇராக்கதன்கோபமுற்று, பாசுபதமுதலிய தேவர்படை களை ஒன்றின்பின்னொன்றாகப் பிரயோகிக்க, அவைநெருங்கி ஐயனது பாத கமலங்களிற்பணிந்திருப்பதையறிந்து கோபமும்மானமும் மனத்தைவாட்ட ஒன்றுந்தோன்றாதுகலங்கியிருந்தான். அத்தருணத்தில் ஐங்கரக்கடவுள், நாம ஏவியபாணங்கள் அவனைக்கொல்லாதகாரணமென்னென்று சற்றுயோசித்து தமதுகோட்டினொன்றை முறித்துச்செலுத்தினார். அதுவிரைந்துவந்து, கய முகனையிருகூறாகப்பிளந்துதள்ளி, வானத்தெழுந்து, கங்கையின்மூழ்கிவந்து, சிவகுமாரன்கரத்திலநின்றது. அப்போதுமேகங்கள்நழுவிவிழுந்ததைப்போல வும் சமுத்திரம் கரைகடந்து பெருகியதற்கிணையாகவும் உதிரவெள்ளமிரை நதுபெருகக்கயமுகன் தேரிலவிழுந்தான்.

கேட்டீர்களோ சவுனகாதிமுனிவர்களே! அவனுதிரம்பரந்து தோய்ந்த இடம் அக்காலத்தினுஞ் செங்காடெனப்பெயர்பெற்று விளங்குகின்றது, பின்பு கயமுகன் சிவபிரானிடத்திற்பெற்ற வரமுயற்சியினால் அங்கு மணவினைமூடத் தக்கபருத்தவடிவினையும் அக்கினியைப்போலச் சிவந்தகண்களையும்பெற்ற பெருச்சாளியாகிச்சீறிப்பாய்ந்து வரும்போது அசலன்தோளிலிருந்த கண பதியோ, அதன்முதுகிலாரோகணித்து, நமமைச்சுமந்து திரிவாயென்றுநடத் தினார். அக்காலத்தில் இந்திரன்முதலானதேவர், கயமுகப்பாதகன் இறந் தான், இன்றுடன் நமது இடர்நீங்கிப் பிழைத்தோமென்றுகளித்து, ஐயன புகழைப் பாடிக்குதித்து, பஞ்சதருக்கள் மலரைப்பொழிந்து, சிருட்டி திதி சங்காரந் திரோபவ மனுக்கிரகமென்னும் பஞ்சகிருத்தியங்களையுநடாத்தவல்ல இறைவனே! அடியோங்கள் துன்பங்களைநீக்கிக்காக்க இக்கோலங்கொண

டெழுந்தருளினீர், உம்மால் விதிக்கப்பட்ட வேதங்கள் இன்னமும் தேவ ரீர்பெருமைகளை அறிந்தனவல்லவாயின், எளியோங்களாற்புகழ்தற் கெளி யனவோ? தாய்தந்தையாகிய இறைவனே! பிள்ளைகள் புகழ்தலைப் பரி வுடன் கேட்டருள்கவென்றேத்த, அதை விநாயகர் இன்புறக்கேட்டு, அவர்க ளிடத்துக் கிருபாநோக்கம்பாலித்து இராக்கதரால் இறந்த பூதப்படைகளை எழுப்பினார். அவர்களும் பகவானைச் சேவித்துச் சூழ்ந்தார்கள். இச் செய்திகளை மந்திரியாகவிருந்த இராக்கதராசன் அறிந்து, சுக்கிராசாரியனை வணங்கிப்புலம்பி, பறவையுருக்கொண்டுபோய்மகமேருச்சாரலிலொளித்திருந் தான். சுக்கிரனும அவ்வாறேசென்று தன்பதியைச்சேர்ந்தான். அத்தருணத் தில் பூதப்படைகள் கெலிப்புடன் மதங்கநகரத்திற்போய்,படையெடுத்த இரா க்கதனாக்கொன்று, பட்டணத்தையும் அழித்துத்திரும்பிவந்து சூழ்ந்தகாலத் திற் செயபேரிவெற்றிச்சங்கங்கள்முழங்க விநாயகப்பிரான் அவ்விடத்தைக் கடந்து,பிரமன் முதலானதேவர்கள் சூழ்ந்துபோற்றிவரச் செங்காட்டுக்கொரு பாரிசத்திலே தாண்டவேசுவரனாகிய தமதுதாதையை தாபித்துப்பூசித்தார், அத்தலம்கணபதீச்சுரமென் றிக்காலத்திலும் விளங்குகின்றது. பின்பு செந்தா மரைக்கண்ணனை பாமபாய்த் தவஞ்செய்திருக்கின்ற பாலைவனத்தின் மார்க்க மாக விநாயகக்கடவுள்வந்தார். அதையறிந்து விஷ்ணுமூர்த்தி அவரைஎதிர் கொண்டு தொழுதவுடன் பாராசத்திசாபம நீங்கித் தமதுவடிவைப்பெற்று, மீளவுஞ்சேவித்துப்போற்றி, ஓங்காரபபொருளே! தேவரீரைத் தரிசித்தவுடன் பழியுடலைநீங்கி ஈடேறினேன், ஆதலால அடியேன் தேவரீரைப்பூசித்து வழிபடவேண்டுமென்றிரபப, அவா இரங்கி அவ்வாறேமுடிக்கக்கடவாயென் றருளினார். உடனேதிருமால் அருச்சனைக்கு வேண்டுந் திரவியங்களைச்சேக ரித்து, கங்கையினால ஆபிடேகஞ்செய்வித்து, கற்பகமலர்களினாலருச்சித்து, மோதகம பயறு திரட்டுப்பால கனிவாக்கங்களை நிவேதித்தபின்பு தூபதீபங் கள்முதலான சோடசவுபசாரங்களைச் செய்து, காங்களைக்கூப்பிநின்று, சுவாமீ! இந்தப பாத்ரபதசுத்தசவுத்தியில் யான்பூசித்தபடிக்குச்சகலருமம ஆராதிக்கவும அவாவினைகளைநீக்கிச் சகலசமபத்துகளையும கடாட்சித்து மோட்சவீட்டையும தருவதாக வரமருளவேண்டுமென்று போற்றினார். அவ் வாறேவிநாயகக்கடவுள் தந்தருளியபின்பு ஆகுவாகனத்தில் ஆரோகணித்து, பிரமன்முதலானதேவர் துதித்துவரப்பூதப்படைகள் களித்துச்சூழத் திருக் கயிலையையடைந்து, பிதாவைச்சேவித்து, பழையபடியே தமதிருக்கையிலெ ழுந்தருளினார். அக்காலத்தில விஷ்ணுமுதலானவர் பரமசிவத்தை வணங்கிப் போற்றி, மீண்டும விநாயகனைத்தொழுது, எங்களிடையூற்றைத்தீர்த்துப்பாது காத்தீர், இதற்குக்கைமமாறுசெய்ய அடியேங்களாற் கூடாமையால் நேற் றையவரையிற் கயமுகாசுரனுக்குச் செய்தபணிவிடைகளைத் தேவரீருக்கு நடாத்த விரும்பினோம். அவைகளை அங்கீகரித்துக் காக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, அவர் மகிழ்ந்தருளினார். அக்காலத்தில் தேவர்கள் மும் முறைகுட்டிக்கொண்டு, செவிகளைப்பற்றிப் பாதங்களைச்சேர்த்து தாழ்ந்தெ ழுந்து போற்றிசெய்து, இறைவனே! இவ்வாறு உலகத்தார்பூசித்து நடாது

கொள்ளவும் அருளிச்செய்வாரென்று கேட்டுக்கொண்டபடியே தந்தருளி விடைதரப்பெற்று, தங்கள் பதவிகளிற்சேர்ந்து, சுகத்திலிருந்தார்கள். ஞானாங்காரச்சம்பத்தையுடையதக்கனே! பரமசிவம் புத்திரனைத்தந்தகாரணம் இதுவாகும். இனி இறைவனுக்கடுத்த குணத்தைக்கேட்பாயாக. நற்குணங்களையுடைய யோகிகளாலும் அறிதற்கரிய சிற்குணனாய் நிராமயனாய்ப் பராபரமாய் விளங்கும் பரமசிவத்தின காரணங்களைச் சொல்லமுடியுமோ? ஆயினும் சிலவற்றைத்தெரிவிப்போம். பரமேசுவரன் தாம் இவ்வுலகத்தைப் படைத்த காலத்திற் சீவராசிகளினது பாசபந்தங்களை நீக்கிக்காக்கக்கிருபையுற்று பிரமன் விஷ்ணுவுக்குச் சிருஷ்டி திதியென்னுந் தொழில்களைக்காட்டி, அவைகளுக்குரிய குணங்களையுங் கருணைபாலித்து, சங்காரகிருத்தியத்தைமுடிக்க உக்கிரமில்லாது கூடாதாகையால் தாமதகுணத்தைமேற்கொண்டு, அத்தொழிலினைத்தாமே நடத்திவருவார், இதன்பிரிவுகளைவிரிவாகவே தங்கள்விளக்குகின்றன. இறைவன் தமோகுணத்தனாயின், சனகாதியருக்குச் சரியை கிரியை யோகம ஞானமென்னும அருநெறிகளின் பயன்களைபபோதிக்கவல்ல சாந்தகுணசத்துவமெப்படிக்கைகூடும்; சுருதிகள் ஆதிமூலமெனத்துதிக்குமோ? அஞ்ஞானவான்களுக்கு நிந்தாரகசியங்களைபபோதிக்கமுடியுமோ? பரமசிவம் முடிவில இறுதிசெய்த பணியினால தமோகுணனென்று குறிக்கப்பட்டதல்லது வேறன்று இதைப்போலவேசிருட்டி திதி கிருத்தியங்களை நடத்துகின்றவர்களுக்குள்ள இராசதசாத்துவிதகுணங்களுஞ் செயற்கையல்லது இயற்கையாகச்சொல்லப்படுமோ? முக்குணங்களையும உண்டாக்கியவன பரமசிவனென்றுவேதங்கள் முறையிடுகின்றன. யோகிகளாலும அவன்செயல் அறியப்படாது. பிரமவிஷ்ணுமுதலானோரிடத்து தமது தமதுமகிமைகளொனறும் அவர்களுக்குத் தோற்றாமல் அந்தரானமாவாய் விளங்கிச் சகலகருமங்களையும நடப்பிக்கும் இறைவன ஒருகுணச்சார்பினிற்பவனோ? சிவன்கடையிற் பிராணிகள் இளைப்பாற லயப்படுத்துந்தன்மையைக்கருதி அஞ்ஞானவான்கள் தாமதனெனச் சொலவதல்லது வேறல்லவென்று ததீசிமுனிவர் பலதிருட்டாந்தங்களைக் காட்டி, மேற்கூறியவிபரங்களைச்சொல்லவும தக்கனவனமின்னலையொத்த வாழ்வின்மயங்கி, அவைகள் உண்மையென்றெண்ணாமல் ஆணவத்தாழ்ந்து, முனிவரே! கேளும பலவாகச்சொல்வதிற் பயனில்லை, கயிலைவாசியாகிய உமது கடவுள் ஆதியேயாயினும, அவனுக்கு அவிகொடுக்கமாட்டேன், ஏன் வீண்வார்த்தையாடுகின்றாய், நானெண்ணியவாறே முடிப்பேன, போமென்று சொல்ல, அவ்விருடிக்கு அதிககோபமுண்டாயது, அக்கொடுமையினால் வடவைகுளிர்க்கும் மேருமுதலான குலகிரிகள் கம்பிதபபட்டுஞ் சத்தசாகரங்கள் சுவறியும அண்டங்கள்குலுங்கியுந் தேவர்நடுநடுங்கியும உலகங்கள் தத்தளித்தலைந்துவருந்துவதைத் ததீசிமுனிவர்கண்டு, இப்பாதகன்பொருட்டு இப்படியே உலகங்கள் வருத்தப்படலாமோவென்று சீற்றத்தைத்தணித்தெழுந்து தக்கனைப்பார்த்து, உலகநாயகன் வேதநாயகன் போதநாயகன் நீதநாயகனாகிய பரமசிவத்தையிகழ்ந்துசெய்யும் உனவேள்வியழிவதோடு அபவாதத்துக்குஞ் சாமலும் உண்மையைக்கண்டித்துப்பேசாமலும் மிரளவிழித்துக்கொண்டு இவ்

விடத்திலிருக்கின்ற தேவர் இன்னாரின்னப்பட்டு மாள்க்கடவரென்று சபித்து யாகத்தைவளர்க்கின்ற மாதவரைநோக்கி, உங்கள் குலவண்மையையும் வேத வொழுக்கத்தையும்மறந்து இக்கருமத்துக்குடன்பட்டதால் பூமியிலிருபிறப் பாளரகப்பிறந்து அலைந்து கருதிகள்துதிக்கும் பரமசிவத்தையும் அவனடி யாரையும் விபூதி ருத்திராக்க பஞ்சாக்கரத்தையும் நிந்தித்தும் பாசத்தழுந்தி வேதவிதிப்படியே மிழுந்தவராய்க் கதிபெறுதழலக்கடவீரெனப் பலவகை களைப்பேசி, அளவற்றதவத்தர் இருமருங்கினுஞ்சூழ்ந்துவரத் தமதாசிரமத் தைச்சேர்ந்தார். அக்காலத்தில் அவருடன் தக்கன்மகிமைகளும் தவமுயற்சி யும் இலக்குமிவிலாசமும் வன்மையும் மனச்செருக்கும்போய்விட்டன.

கேட்டீர்களோ நைமிசாரணியவாசிகளே! இவ்வகையாகக் கொடுமை பேசித் ததீசிமுனிவர்சென்றதருணத்தில் தக்கன் துவசமற்றது. வானத்திற் சஞ்சரிக்கின்ற கழுகு காக்கைகள் யாகத்தம்பத்தினிடத்தி லிறங்கிக்கூவின, அத்தலத்திலிருந்த ராமணர் திடுக்கிட்டனர். அவன்தேவியாகிய வேதவல்லி மங்கிலியம் அற்றது, இவ்வாறு அளவற்ற துர்நிமித்தங்கள்விளைந்தன, இவை களைத் தக்கன்கண்டுஞ் சற்றும்யோசியாமலும் மனஞ்சலியாமலும் எச்சனாகிய யாககுருவுந்தானுமாக வேள்வித்தொடக்கத்திற்செய்யுந தானாதிகிரியைகளை நடாத்தி, விஷ்ணுமுதலாய தேவாங்கிசங்களை வேதவிதிப்படியே தத்தந் தானங்களில் ஆவாகனஞ்செய்து பூசித்து, சோடசவுபசாரங்களையுந் தானங் களையும் வரன்முறைநடாத்தி, அமுதத்துக்கொப்பான அன்னமும் பதார்த் தவகைகளும், மதுரமிகுந்த பருப்பும் புத்துருக்குநெய்யும், பால் தயிர் சிற் றுண்டி, கனிவருக்கங்களும், பனிநீர் மான்மதச்சாந்தம், கற்பூரக்கலவை, திவ் வியபரிமளமிகுந்த புட்பமாலிகைகளும், வாசந்திமிர்ந்த அடைகாய்முதலிய வைகளைக் காமதேனு பற்பலகுவைகளாக நிரப்பியிருப்பதை ஆகுதிகளுக்கு ஆராதனைசெய்யத்தொடங்கி, பிராமணரையொருபுறத்திலும மற்றவரையொரு பாரிசத்திலும் போசனச்சாலைகளில்விட்டு பரிமாறுகின்ற உண்டிகளின்சிறப புக்கண்டு ஆராமைமேலிட்டுத் தன்னைப்புகழ்ந்து சமுத்திரம்போல ஆர்ப்பரி த்துவந்தோர்களைமுகமலர்ந்து உபசரித்து, வரவழைத்துப்பந்திதிருத்தி, பொற் பள்ளயங்களைப்பரப்பி, போசனங்களைப்படைத்து, பந்துக்களைப்போலப் பரி வாய்வேண்டியமட்டைப் பரிமாறச்செய்தான். அப்போது பசிதீரவுணவும் மதுர மாயிருப்பதால் இன்னம்படையென்பார்சிலர், இந்தத்திவ்வியபோசனத்தை மிகுதியாகப்புசிக்கப் பிரமனைநோக்கித் தவஞ்செய்து பசியுண்டாக்கிக்கொள் ளாமற்போனேமென்பார்சிலர், இப்புசிப்பைக்கொள்வதற்கு ஆயிரம்பதினாயி ரம்வாயும்வயிறு முள்ளவர்களுக்குமே அமையுமென்பார்சிலர், அதுவும்போதா தென் றுவாதாடுவார்சிலர், இவ்வன்னமுதலானவைகளைக் காமதேனுஅளித்த தென்பார்சிலர், இனியெக்காலத்தில் இக்கச்சாயவகைகள் அகப்படப்போகிறன்று திருத்தியாயச்சாப்பிடுதுமென்பார்சிலர், தக்கன்யாகம் சிதையுமென்பார்கள், அப்படிக்கு நேருமாயினும் இதுசரீரத்துக்கு உறுதியாயிருக்கும், குறைவில்லா மல்உண்பீரென்பார்சிலர், இந்தப்புசிப்பைவிடவும்போகவிலலை, வயிறுங்கொள்ள வில்லை, இப்படியெங்கும் பார்த்ததுமில்லை, இதன்பிரயோசனத்தினால் இனி

யிறப்பில்லையென்பார் சிலர். இத்திவ்விய போசனத்தைப்படைத்த காமதேனுவைப்பிடித்துக்கட்டி நம்முடைய தேசத்துக்குக் கொண்டுபோவோமாயின் வேண்டும்போதெல்லாம் திருத்திசெய்துவருமென்பார் சிலர். பெண்டுபிள்ளைகள் சுற்றம்பெருக இவ்வித மகதைஸ்வரியத்தைப்பெற்ற தக்கனைப்போலத் தவஞ்செய்தவர்கள் யாவரிருக்கிறாரென்று சொல்வார் சிலர். திருத்தியாகப் புசித்துவிட்டோம், எழுந்திருக்கக்கூடவில்லை என்னசெய்வோமென்பார்சிலர். அமுதமொத்த இப்புசிப்பையுண்ணப்பிள்ளைகள் அண்ணன்தம்பி சுற்றத்தாரை அழைத்துவராமற் போனேமென்பார் சிலர். ஆனாலென்ன! விரைந்துசென்று கூட்டிவரலாமென்பார் சிலர். இப்பிரகாரஞ் சமுத்திரம் இரைவதைப்போலப் பேசிக்கொண்டு சாப்பிடுகின்ற பிராமணர்முதலானவர் போதும்போதுமென்னுமட்டும் தக்கன்மருகராகிய விருடியர் இருந்துபரிமாறத் திருத்தியாக உண்டு தள்ளாடிக் கைலாகுகொடுக்க எழுந்து பற்பலர் கங்காசலம்விடச் சுத்திசெய்துகொண்டு உடனே மற்றொருமண்டபத்திற்சேர்ந்து, பொன் ஆசனங்களிலிருந்து சந்தனக்கலவை பனிநீர் புட்பமாலை தாம்பூலங் கொடுக்கப் பெற்று, பின்பு பொன்னுலகமே யிறங்கினாற்போலச் சிறந்துவிளங்குந் தானமண்டபத்தில் புகுந்தார்கள். அத்தருணத்தில் தக்கன் அனுமதியில் அவ்விடத்திலிருந்த இருடியர் ஆடை ஆபரணம் பொன் நவரத்தினம் கறவை குடை பாதுகை குண்டிகை முதலான சோடசமகாதானங்களைக் கரங்கள்சிவக்க வேண்டியமட்டும் இடைவிடாமற்கொடுத்தார்கள். அவைகளைச் சிலர் பத்திரப்படுத்தித் திரும்பிநுழைவார்; சிலர் எடுப்பித்துக்கொண்டுகடப்பார். சிலர் சுமக்கமாட்டாமல் அங்குமிங்கு மலைவார். இப்படி இவர்களாலுண்டாகிய இரைச்சலும் அரம்பையர் நடிக்கும் ஓசையும் வேதவல்லி பெண்கள் இந்திராணி தெய்வகன்னியர் முதலான சுமங்கலியர் மங்கலங்களைப்பாடும் ஒலியும் இவைபோலும் பிறசத்தமும் ஒன்றுசேர்தலால் சத்தசாகரங்களும் அவ்விடத்திற்பெருகி யலைவதைப்போலப் பேரொலியுண்டாயது.

தரிசியுத்தரப்படலம்
முற்றிற்று.

வேள்விப்படலம்.

இகந்தசீர்பெறுமிப்பெருஞ்சாலையில்
அகந்தைமிக்கவுயன்பெருங்காதலன்
மகம்புரிந்ததுமற்றதுசிந்திடப்
புகுந்தவாறும்பொருக்கெனக்கூறுகேன்.

இவ்விதமாகக் காலங்களை அனுசரித்துத் தானதிக்கிரியைகளைக் காரியகாரரொருபுறத்தில் நடத்திவர தக்கன்முற்கூறிய ஆசிரியனைக்கொண்டு வேதவிதியிற்சிவத்தின்பாகமான பிரதானமந்திரங்களைநீக்கி விஷ்ணுவுக்குரிய வாக்கியங்களை அவைகளுக்குப் பிரதியாகவோதி மகத்தைவளர்க்கக் கட்டளையிட்

ட்டான். அவ்வண்ணம் அவ்வாசிரியன் தீக்கடைக்கோலினால் அக்கினியையுண்டுபண்ணி யாககுண்டத்தில் அமைத்து, தருப்பை சமித்து முதலான ஓமத்திரவியங்களினால் அக்கினிதேவனை அருச்சித்து, அதில் தேவருக்குரிய கூறான மந்திராகுதிகளையும், வெவ்வேறாகக்கொடுத்து விஷ்ணுவாதியரை மந்திரபூர்வமாகக்கூவி, அவிகளைக்கொள்வீரென்று உபசரித்தான், அது தேவாமுதத்தினுஞ் சிறந்ததாயினும், பிரதமதேவனை நீக்கிய அருவருப்பானது அவரவர் மனத்தின் கண்பொருந்தி அலைப்பதினால் நஞ்சாகக்காட்டியது.

இப்பிரகாரம் யாகத்தைநடத்துந் தக்கன்செல்வச் செருக்கினையும் விருப்பையும் நாரதர் அறிந்து, திருக்கயிலைக்குப்போய், நந்திதேவரைவணங்கிச் செலவுபெற்று, ஆலயத்திற் பிரவேசித்து இறைவனைத்தொழுது போற்றிநிற்க அவரைக்கர்த்தன் கிருபையாகப் பார்த்தருளி, உலகத்தின்கண் ஏதேனும் புதுமைகளுண்டோ, வந்தகாரியம் யாதென்றுவினவ, அவர்சுவாமி! கங்கைக்கரையில் விஷ்ணு பிரமனாதியரை வரவழைத்துக்கொண்டு லோகநாயகனான தேவரீரை இகழ்ந்து புத்தியில்லாத தக்கன்வேள்வியை நடத்துகின்றான். இது தான் அதிசயமென்று விண்ணப்பஞ்செய்தார். இதைக்கேட்டவுடன் இடப்பாகத்தமர்ந்த பராபரை மனம்பூரித்து, அதனைக்கண்டுவர விருப்புற்று எழுந்து பரமனைவணங்கி என்பிதாசெய்கின்ற யாகத்தைப்பார்த்துவர விடைதந்தருளுமென்றுகேட்க, பரமன் நல்லகாரியம்; உன்னையெவ்வளவும்நினையாமல் மற்றத்தேவர் முனிவர்களுக்குக் கொடுத்தபெண்களை அழைப்பித்துக்கொண்டு மாயாபாசத்தினழுந்தி, அகந்தைகொண்டு அவன்செய்யும்வேள்வியினிடத்திற்கும் நீபோகலாகாதென்று திருவுளம்பற்ற, பார்ப்பதி கரங்களைக்கூப்பி சுவாமி! தெரியாமையினால் அவன்செய்த பிழையனைத்தையும் அடியேனைக் குறித்துப்பொறுத்தருளி விடைதரவேண்டுமெனக்கெஞ்ச, பரமன்பரிவாய்ப் போய் வருகவென்று செலவுகொடுத்தருளினார். கௌரி அதைப்பெற்றுசிரோரத்தினங்களினாலும் தங்கத்தினாலும் அமைத்த விமானத்தினெழுந்தருளி, சுமாலி மாலினியென்னுந் தோழிப்பெண்கள் குடைகளைத் தாங்கிவரவும் பிங்கலை சுமனையாதியர் கவரி,ஆலவட்டம்,அடைப்பை,மயிற்பிஞ்சமுதலான பரிவட்டணைகளை யேந்திச்செல்லவும், கமலினி, அனிந்திதையென்னும் பாங்கியர் புட்பமாலைகளைக்கொண்டு செல்லவும், சிலகன்னியர் நடித்துப்போகவும், சிலர் பார்ப்பதிபுகழைப்பாடித்தொடரவும், சிலர் குயில் கிளி பூவை அன்னமாதிய பறவைகளைக் கரங்களிலேந்திநடக்கவும், அமச்சுரிமைசெலுத்துஞ் சோமந்தியிடபத்திலேறிக் கரத்தின்வாளைக்கொண்டு போற்றிவரவும், பலபூதர் பதினெண் மேளவாத்தியங்களை முழக்கவும், பராபரை அனுக்கிரகம்பெற்ற பன்னிருகோடி குரட்படைஞர் வாள் பலகை கேடையம் பிண்டிபாலம் முசலம் கப்பணம் தோமரமுதலிய ஆயுதங்களைத்தாங்கி இருமருங்கினும் அணிவகுப்பாகச் சமுத்திரம்போலப் புரண்டுபோகவும், இவ்வித ஆடம்பரங்களுடன் சென்று பிதாவான தக்கன்வேள்விச்சாலையின் முன்வாயிலைக்கிட்டி விமானத்தினின்று மிறங்கி உள்ளேபிரவேசித்தாள்.

அதைப் பாதகனானவன்கண்டுகோபித்துத் தாய்தந்தையில்லாத பித்தனுக்குரிய நீ மற்றப்பெண்களைப்போலஇந்தயாகத்துக்கு வரவேண்டியதென்னை? இக்காரியத்தைக்குறித்து உனக்குச் சொல்லியனுப்பியதுண்டோ? நான் வெள்ளிமலைக்கு வந்தகாலத்தில் மாமனென்றெண்ணாமல் அவமானஞ்செய்வித்தவன் தேவியென்று உன்னை அன்றே மறந்துவிட்டேன். அப்படியிருக்க நீ வருவதற்குங் காரணமுண்டோ? இவ்விடத்தில் நில்லாமல் சீக்கிரமாகத் திரும்பி உன்னிடத்திற்குப் போய்விடென்று சீறிச்சொல்லினான். அதைக் கேட்டு, பராசத்திமனம்வாடினவளாய் தந்தையை நோக்கி என்துணைவியருக்கும் அவர்கள் துணைவருக்கும் நாடோறும் அளவற்ற சிறப்புகளைச்செய்து வருகின்றாய், எங்களைமாத்திரம் எவ்வளவுமெண்ணினாயில்லை, நீசெய்யும் வேள்வியைக்கேள்விப்பட்டு, பேதமில்லாமல் நானேவந்தாலும் சீறித்தடுக்கின்றாய், இதுநன்மையாமோ! இதனால் தீங்குவிளையுமென்பதை யெண்ணினாயில்லை, ஆதலால் உன்கருத்தினைத் தீர்க்கமாகச்சொல்லிவிடுவாயென்ன, உடனே தக்கன்நகைத்து முக்குணத்திற் கடைப்பட்ட தமோகுணத்தின் காரியமாகிய சங்காரத்தொழிலை வகித்துப்பேய்களுடன்கூடிச் சுடலையில்நடிக்கும் பித்தனுடன் நீயும்பேயாகி என்னை மதியாமல் அகந்தைகொண்டபடியால் உன்னைத் தள்ளிவைத்தேன். உன்பின்பிறந்தபெண்களும் மருகரும் என்னிடத்தில்அன்புள்ளவர்களாதலால் அவர்களுக்குவேண்டிய சிறப்புகளை நடத்துகின்றனன், அவிகளுந்தருவேன், விஷ்ணுபிரமனாதியதேவர்என்னைப்புகழ்ந்துவரச் சிவனும் நீயும் இகழுந்தன்மையினால் உங்களிடத்தெனக்கு அன்பில்லை. இம்மகத்தில் உன்கணவனுக்கு அவிப்பாகமுங்கொடேன், போபோவென்று சொன்னமாத்திரத்தில் பராசத்திக்குக் கோபம் பிரவேசிக்க, உடனே அக்கினி சம்பந்தப்பட்ட வாயுவைப்போல பெருமூச்சுண்டாகியது.

அப்போது அண்டங்கள்குலுங்கின. அவைகளிலடங்கிய சராசரங்கள் திடுக்கிட்டுச்சோர்ந்தன, பூமிகம்பித்தப்பட்டது, சத்தசாகரங்களும் கொதிப்பெடுத்துக் குறைந்தன, விஷ்ணுவும் பிரமனும் தேவரும் திசைக்கரிகளாதியாரும் நடுங்கி வாடித்திகைத்து ஏங்கினார்கள். ஆதலால், அம்மன்கோபததினுக்கிரம் இத்தன்மையதென்று யாவராற்சொல்லப்படும். உலகமிப்பாடுபடுவதை உணர்ந்த விமலையென்னுந் தோழியானவள் பார்ப்பதி பாதாரவிந்தங்களிற் பணிந்து உலகங்களையீன்ற தாயாகிய நீரே இவ்விதமாகக் கோபங்கொள்வீராயின் அவைகளி லடங்கியிராநின்ற சீவராசிகளென்படாது. அஞ்ஞானவானான தக்கனொருவன்செய்யும் அபராதத்தின்பொருட்டு உமக்குவிளைந்த சீற்றமின்னுஞ் சற்றுவீறுமாயின் நிமைப்போதிற் சகலமும் நாசமடைவதற் கையமில்லாதபடியாற் சீவகோடிகள் படுந்துயரத்துக் கிரக்கமுற்றுச் சாந்தமடைகவென்று வேண்டினாள். உடனே கௌரி கொதித்தாறியசலம்போலச் சகித்தவளாய் தக்கனைப்பார்த்து நீயென்னையிகழ்ந்ததை யொருபொருட்டாக நான் மனங்கொள்ளவில்லை. சர்வாந்தரியாமியாய்விளங்கும் எமது இறைவனைக்குறித்துப்பேசிய கொடியசொற்கள் என்செவிகளில் விஷத்தையொப்பப்புகுந்தன.

நீ இப்போது பழுதுபேசிய பரமசிவன் நிர்க்குணத்தைநவகித்த தன்மையினாற் சராசரப் பிரபஞ்சங்களினிடத்துலவி நடிப்பன். ஒருவகைச்சார்புள்ளவனே யென்றெண்ணப்படுமோ, சர்வசங்காரத்தொழிலை நடாத்தவகித்ததருமகுணத்தை நினைந்தாய், அதுவும் நீடித்திருக்குமோ? சீவராசிகள்பிறந்தும் இறந்தும் எப்போதும் வருந்துவதைக்கருதிக் கிருபையுற்றுப் பலபலகற்பகாலஞ் சுகத்திருத்திய காரணமல்லவோ, சிருட்டிதிதியைப்போல அத்தொழில் மற்றத்தேவரால்நடத்தப்படுமோ, இப்பிரகாரம் பிராணிகளையொடுக்கிமீளவும் படைத்துத் தமது திருவிளையாடலை நடத்திவருவார், இதுவல்லாமல் வேதாகமங்களைத் திருவாய்மலர்ந்து அவைகளாற்றுதிக்குங் காரணகர்த்தனாய்த் தம்மை உணரவல்ல பரிசுத்தவான்களுக்கு ஞானம்போதித்தாளுங் கிருபாநிதியைத் தமகுணனென்னப்படுமோ, ஆதலால் அவர் அனைவருக்கும் இறைவராகும், அக்கடவுளுக்குமுதல் அவிப்பாகத்தைக்கொடாமல் இகழ்ந்தாய், பஞ்சாக்கரத்தை யோதப்பட்டவர்களுக்கு முத்தியை யெளிதில் அருளும்பரனை நிந்தித்தாய், இவ்வபராதம் யாவராலே துடைக்கப்படும் பேதாய்! இனி எவ்விதமாக நடத்தேறுவாய், பிரமனும் விஷ்ணுவும் தேடிக்காண்பரிய நாதனைக் கர்த்தவ்வியமாகக் கொள்ளாமல் திரோபவத்தினாழ்ந்து, நீக்கினவர்களனைவருக்கும் தண்டமுண்டென்று வேதங்கள் முறையிடுகின்றன. அம்முறையே பரமசிவனைவிலக்கி யாகத்தைநடாத்தும் உனக்கும் தகுதியாகியதண்டம் விரைவிலுண்டாகக்கடவதென்று கொடியசாபத்தையிட்டு, உடனே விமானத்தில் ஆரோகணித்து பாங்கியர் சேடியர் சிலதியர் பூதப்படைகளாதியர் சூழ்ந்து போற்றிவரத் தக்கன் பரமனைநிந்தித்துப்பேசிய வசனங்களை யெண்ணியெண்ணி மனம்வேக, விரைவிலே திருக்கயிலையையடைந்து இறைவனைச்சேவித்து, சுவாமி! தக்கன் அடியேனை வெறுத்ததல்லாமலும் தேவரீரைப்பலவாக நிந்தித்துப்பேசினான். ஆதலால் அவன்செய்யும் வேள்வியையழிக்கத் திருவுளங்கொள்ளவேண்டுமென்று வேண்டினாள். அதைக் கிருபைக்கடலாகிய பரமன்கேட்டு நகைத்திருந்தார். அதைக்கண்டு பார்ப்பதி சேவித்து, அடிகளுக்கு வெறுப்பும்விருப்பும் இல்லையாயினும் அடியேன்விண்ணப்பத்தை அங்கீகரித்து அம்மகம் சிதைவுபடக் கடாட்சிக்கவென்று போற்றினாள்.

வேள்விப்படலம்
முற்றிற்று.

வீரபத்திரப்படலம்.

அந்தவெல்லையெமையாளுடையவண்ணலிலக்
தந்தமங்கைதனதன்பினைவியந்தருளுஞ்
சிந்தைகொண்டசெயன்முற்றியமொழிசிறிதே
புந்தியுள்ளுறநினைந்தனனினைந்தபொழுதே.

அப்பொழுது எமது இறைவன் பரமேசுவரியின் அன்புக்கிரங்கி அவளெண்ணப்படிமுடிக்கத்திருவுளங்கொண்ட மாத்திரத்தில், நுதல்விழியில் அகோர வீரபத்திரதேவர் உதயமாய், மகமேருவின் கொடுமுடிகள் மின்னற்கொடி

யைத்தாங்கி விளங்குவதுபோலப் பிறைகளிலடங்கிய கிரீடங்கள் அமைந்த ஆயிரஞ்சிரங்கள் அண்டத்தைமுட்டவும், சூரியன் அனந்தவுருக்கொண்டு ஏககாலத்தில் எழுந்ததற்கொப்பாய்ச் சிரோரத்தினமயமாகிய மகரகுண்டலங்கள் இரண்டாயிரஞ் செவிகளிலும் வில்வீசித்தொங்கவும் வடவைகுளிரத்தக்க அனலையிறைக்கும் நெற்றிவிழிகள் ஆயிரஞ்சொலிக்கவும் அவைகளில்வீசும் அக்கினிக்கொழுந்தினால் அண்டங்கள் கரியவும் பிரசண்டவாயுவும் அக்கினியும்திடுக்கிட எழுஞ் சுவாசத்தினிடத்துண்டாகிய கனல் அண்டகோளகைக்கு அப்புறத்திலேதாவவும் பிள்ளைப்பிறையைப் பதித்ததற் கொப்பாகக்கூரியகோரைத்தந்தங்கள் தோற்றவும், வார்த்தையுரப்பினால் பிராணிகள் வெருக்கொள்ளவும், சாகரங்கள் கலங்கிக் கறங்கெனச்சுழலவும், பணமகுடம்பொருந்திய சர்ப்பகங்கணங்கள்விளங்கிய இரண்டாயிரங்கரங்களிலே குந்தம் வாள் பலகை வேல் தோமரம் பிண்டிபாலம் எழு குலிசம் சூலம் வில் சரம் தண்டம் வச்சிர முதலாகிய படைகள் மின்னலைபோலப் பிரகாசிக்கவும், பிரம விஷ்ணுக்களின் சிரமாலையும் என்புத்தாழ்வடங்களும் ஆமையோடும் பன்றிக்கோடும் விசாலமாகிய மார்பினிடத்தில் விளங்கும் முப்புரிநூலுடன் அசைந்தாடவும், இரத்தினாபரணங்கள் சர்ப்பக்கலன்களுடன் தேகமெங்குஞ்சொலிக்கவும், பாதாரவிந்தங்களிலே தண்டைவீரகண்டைகள்வொலிக்கவும் பாதுகை தரித்து இவ்விதக்கோலத்துடன் பரமனைத்தொழுதுநின்றார். அத்தருணத்தில் உமையவளது கோபக்கனலின்கண் பத்திரகாளி வெளிவந்து, திவ்வியபரிமளமலர்சூடிய அளகங்களோங்கிவிளங்கும் ஆயிரஞ்சிரங்களும் கட்ககோதண்ட வீரவாள் ஆதியான படைகள் தரித்த இரண்டாயிரங்கைகளும் நவரத்தினமயமாகிய பணிகளும் அரவபூஷணங்களும் அசைய வீரபத்திரர் மருங்கினின்றாள்.

அவ்விருவர் காட்சியைச் சிவபெருமான் உமையவளுடன் கண்டு இருபாநோக்கம் பாலித்தகாலத்தில், அவர்கள் இறைவனையும் பிராட்டியாரையும் மும்முறைவலம்வந்து, வணங்கிக் கரங்களைக் கூப்பிநின்று, சுவாமி! தேவர்கருவபங்கம் பண்ணவோ? அவுணரைக்கொல்லவோ? எமனைவாட்டவோ? விஷ்ணுபிரமனைக்கட்டிவரவோ? சமுத்திரஞ் சூழ்ந்த உலகைவிழுங்கவோ? எதுகாரியத்துக்காக அடியேங்களைப்படைத்தீர், அதனைக்கட்டளையிடவேண்டுமென்று கேட்டார்கள். அப்போது பரமன் அவர்களைநோக்கி, நம்மையன்றித் தக்கனென்பவன் வேள்விசாலைத்தஞ் சாலையையடைந்து அவிப்பாகத்தைக்கொடுத்தால் வாங்கிவருவீர், தடுப்பானாயின் அவன்சிரத்தைக் கண்டித்து அவனுக்கு உதவியாய்ச்சூழ்ந்த தேவராதியானவரை அதப்படுத்தி யாகத்தையும் அழித்து மீளக்கடவீர், அத்தருணத்தில் நாமும் அவ்விடத்தில் எழுந்தருளுவோ மென்றருளிச்செய்து, உடனே வேர்வையினும் மயிர்க்கால்களினும் அளவற்றபூதங்களையும் காளிகளையும் படைத்தார். அவர்கள் யாளி சிங்கம் கரடி யானை புலியாதிய கொடியமிருகங்களின் முகம் ஒன்றுபத்து ஐம்பது நூறு ஆயிரம் பதினாயிரம் விளங்க அதற்கிரட்டி கரங்கள் பலவாயுதங்களைக்கொண்டு அக்குமாலைஅரவாபரணங்களுடன் பிரகாசிக்கப் பாதங்களில்

வீரவன்மையுடன் சிலம்பு கலிக்கப் பரியினல்வருந்தி ஒருநொடியில் உலகங்கள் அனைத்தையும் அழிக்கும் வலிபெற்றுச்சூழ்ந்த பூதவெள்ளங்கள் காளிக்கூட்டங்களின் சவுரியவன்மைகளை யொருவகையாகவும்சொல்லமுடியாது. அத்தருணத்தில் பாணுகம்பமுதியான பூதர்கள் இரணபேரி செயபேரி குடமுழா முதலாகிய வாத்தியங்களைமுழக்கவும் குடைகள் ஆலவட்டங்கள் வெண்சாமரைகளாதிய வகைகளைத்தாங்கவும், நவரத்தினமயமாகியரதத்திற் காளியுடன் வீரபத்திரதேவர் ஆரோகணித்து நடந்து, சத்தசாகரங்களும் பெருகியதைப் போலப்பரவிச்செல்கின்ற சேனைகளின் ஆரவாரத்தினால் எவ்வண்டமுடைந்ததோவென்று தேவாதியர் ஏங்கவும் அக்காலத்திலெழுந்த புழுதியினற் சமுத்திரங்கள் திடராகவும் இவ்விதவுற்பாதங்கள் விளைய அதிசீக்கிரமாக வந்து தக்கன்யாகசாலையைச் சூழ்ந்துகொண்டு, பூதத்தலைவனைநோக்கி, இதன் வாயிலினிடங்களிலும் புறத்திலும் வானவெல்லையிலும் நீவிர்காவல் கொண்டு ஒருவரையும் விடாது போற்றக்கடவீரென்று ஏவினர். அவ்வாறே பூதத்தலைவர் அவ்விடங்களைச்சேர்ந்து, அத்தலங்களில்நின்ற காவலரைக் கொன்று தின்று ஆர்ப்பரித்து, வளைந்திருந்தனர்.

வீரபத்திரப்படலம்.

முற்றிற்று.

யாகசங்காரப்படலம்.

ஆர்த்தலுமிறைவிதன்னோடாண்டகைவீரன்வாசத்
தார்த்தொங்கை தூங்கும்யாகசாலையுளேகலோடுந்
தீர்த்தனைத்தலைவிதன்னைதிசைமுகன்முதலோர்யாரும்
பார்த்தனருளந்துண்ணெனறுபதைபதைத்தச்சங்கொண்டார்.

இவ்வாறு காவற்படுத்தினபின்பு பத்திரகாளியுடன் வீரபத்திரக்கடவுள் ஆர்ப்பரித்து, யாகசாலையிற்சென்று தோரணங்கள்கட்டி யூபஸ்தம்பம் நாட்டியிருக்கும் ஓமகுண்டத்துக்கு அருகில வருவதைப்பிரமன் முகுந்தனாதியர் கண்டு, திடுக்கிட்டொடுங்கி, சிங்கத்தைக்கண்டயானைக்கூட்டம் போலவும், இடியுண்டசரப்பங்களையொக்கவும, வலியொடுங்கி நகைமுகங்கள் புலர்ந்தவர்களாய், ஒருவரையொருவர்பார்த்து, பரமசிவனும் உமையவளுமாக வந்தாற்போற்காணுகின்றதென்பார். அவர்கோபக் கனலினிடத்து உண்டானவரென்பாரசிலர், இவர்கள் உக்கிரம் அளவிடப்படாதென்பார்சிலர், நமதுபிராணனுக்கு இறுதிக்காலம் நேர்ந்ததென்பார்சிலர், தக்கனுக்கு இன்றுடன் முடிவுகாலஞ்சமபவித்ததென்பார்சிலர், விதியாவரால் வெல்லப்படுமென்பார்சிலர், இறைவனைமதியாமல் இந்தயாகத்தையேன் தொடங்கினனென்பார் சிலர், நம்மை நம்பி இதனைத்தொடங்கினன் பேயன் என்பார் சிலர், தேவரனைவருக்கும் ஒருகாலத்திற் சாவுண்டாயதென்பார் சிலர், பார்வதிவலிதின் வந்தகாலத்தும் வெறுத்தபடியால். இப்படிக்கு நேர்ந்ததென்பார் சிலர், பூதகணங்கள் காளிக்கூட்டங்களெங்கும் வளைந்து கொண்டார்கள், ஓடவும்

ஒளிக்கவும் இடமில்லையென்பார்சிலர், இனியென்னசெய்வோமென்று அக்கி னியிற்பட்ட தளிரைப்போலவாடுவார் சிலர். இப்பிரகாரம் வேள்விக்களம் அல்லோலகல்லோலப்படுந்தருணத்தில் வீரபத்திரதேவர் சிறிச்சங்காரஞ் செய்தார், அவ்வொலியினால் அண்டகடாகங்கள் கம்பிக்கமேருவாதியான குலகிரிகள்சலிக்கப் பிரமன் முதலானவர்களேங்கிவாடினார்கள். அக்காலத்தில் வீரன்தீக்குண்டத்துக்கணித்தாக நெருங்கியதைச் சீலமற்ற தக்கன்கண்டு, துளங்கிவருந்தி பூதர் காளிக்கூட்டங்கள் சுற்றிக்கொண்டு யாகசாலையினையழிப் பதையும், தேவர்களாதியர் படுந்துன்பத்தினையும் அறிந்து, மிகவும் நடுக்குற்று, பின்புதைரியங்கொண்டு, தானுமொருசூரனைப்போல வீரபத்திரனைப்பார்த்து, நீயாவன்? இவ்விடம் வருங்காரணம் யாதென்றுவினவ? வீரன்நகைத்து, யான்சங்கரன் குமாரனுகும், அவர்கட்டளையின்படிக்கு நீசெய்யும்வேள்வியில் அவிப்பாகத்தினை வாங்கிப்போகவந்தேன். தாமதஞ்செய்யாமல், தரக்கடவா யென்றுகேட்க, சிவனுக்கு இவ்விடத்தில் அவிப்பாகங் கிடைக்கமாட்டா தென்று தக்கன்மறுத்தான். அத்தருவாயில் நான்குவேதங்களும் குடிலையும் தோன்றி, தக்கனே! கேட்பாயாக. எம்மைப்படைத்தவனும் இதுபரியந் தம் நாங்கள் துதித்தறியாதவனும் உயிர்கட்கு முதல்வனும் எங்கும் பரி பூரணனும், விளங்கும் பரமசிவனல்லது இந்தயாகத்துக்கு கர்த்தனுகின்ற வர்யாவர்! வீண்வார்த்தையாடாமற் பரமனுக்குரிய முதற்பாகத்தைக்கொடு த்து ஈடேற்றக்கடவாயென்று அளவற்றநீதிகளைப்போதித்தும் அவன் சம்மதப் படாத காரணத்தையறிந்து, உன்விதிப்படிக்கு, அனுபவிப்பாயென்று வெறு த்து, தங்கள் நிலைகளிற்சேர்ந்தன. அதைக்கண்ட வீரபத்திரர் மீளவுஞ்சிறு விதியைநோக்கி சுருதிகளும் அவைகளுக்குக்காரணமாகிய குடிலையும்கூறிய வாக்கியங்களைத் தெளிந்தாயல்லவோ? இனியாவது எமதுகர்த்தன் பாகத் தைத்தரவல்லையோவென்றுகேட்க, தக்கன் சுடலையினிடத்திற் சத்தியுடன் கூத்தாடித்திரியுஞ் சங்கரனுக்கு ஒருபோதுந்தரேனென்று மறுத்தான்.

அப்போது வீரபத்திரதேவர் பக்கத்திலிருந்தவிஷ்ணு பிரமர்களைக்கூறி த்து, இவன் பரமனுக்குஅவிகொடாமல் இடக்குப்பேசுவது தகுதியோ? உங்க ளுக்கும் சம்மதமோவென்றுவினவ, அவ்விருவரும் ஊழின்பாலராய்க்கேளாத வரைப்போல் ஒன்றுஞ்சொல்லாமல் ஊமைகளையொத்திருந்தனர். இதனைக் கண்டு, வீரன்கோபித்து, கண்களிலே தீயெழச்சீறி, இவர்கள் மனவலி வெகு நேர்த்தியென்று தீயெழநகைத்து, பற்களைக்கடித்து, கரத்திலிராநின்ற கதை யைக் கிறுகிறெனச்சுழற்றி, கேசவன்மார்பினிடத்து மோதி, அயனை மூர்ச்சை யாகி விழச்செய்து, பிதாமகன் சிரங்களிற்குட்டி, அவன் இரத்தம் பெருகி வருந்த சேவிக்கின்றவனைப்போலக் குப்புறவிழப்புரிந்து, பின்பு கலைமகள் நாசியினையும் குயங்களையுங்கொய்து, பக்கங்களிற்சூழவிருந்ததேவரைச்சாடும் போது கரங்களிழந்தும் பாதங்களற்றும் சிரங்களுடைந்தும் மார்பகங்கள்பிளந் தும் இவ்வாறு அலைந்து மாண்டவர்போக, மற்றவரோடிப் பலதிசையினு மொளிக்கச் சந்திரனையுதைத்துத்தள்ளிப் பாதத்தினாலேதேய்த்து, சூரியனைப்

பல்லுதிரத்தாடையிலறைந்து, சனியைக்கண்ணைப்பிடுங்கி,அதைக்கண்டோடு கின்ற எமனைச்சிரமற்றுவிழ வாளினாலேதறித்து,குயிலாகிப்பறந்த இந்திரனைத் தெண்டித்து, அக்கினிதேவன் கரங்களைமுறித்து, நாக்களைக்கொய்து, அவன் தேவி மூக்கினைக்கிள்ளியெறிந்து, நிருதியைத் தண்டினால்மாய்த்து, உருத்திர கணங்கள்பயந்து பாதகமலங்களின்விழுந்து துதிக்கக் கருணைசெய்து, ஓடிப் போகும்படிக்கு விழியினாற்குறித்து, வருணனை எழுவாயுதத்தின்மாய்த்து, வாயுவை வாளிற்கண்டித்து, குபேரனைச் சூலத்தினாற்கொன்று, நடுநடுங்கிப் போற்றுகின்ற ஈசானமூர்த்தியைவைது இகழ்ந்து, உருத்திராக்கலந்திருக்கக் கட்டளையிட்டு, யாகதேவதை மான்வடிவுகொண்டு பறக்கக்கண்டு, ஒருபாணத்தினால் வாட்டி, பயந்தோடுகிற எச்சனாகிய யாககுருவைக்கண்டித்து, அதிக உக்கிரத்துடன் மேலிட்டுவந்தார். அதைத்தக்கன்கண்டுவாடி, இவ்வேள்வி யிப்படிக்கழிய நான்காண்பதோ! ஆதியில் பிதாவாகிய பிரமன்சொற்படிக்கு அரியதவங்களைச்செய்து இத்திருவைப்பெற்றேன், இத்தனைக்கடாட்சித்த கர்த்தனை நினையாமலும் போற்றாமலும் மகதைஸ்வரியத்தினாழ்ந்து மயங்கி மருகனென்றும் மற்றையரினொருவனென்றுங்கருதி மதியாது மிகவும் இகழ்ந்தேன், முற்காலத்திலே தந்தைநடாத்திய மகத்தில் அவிகொடாமறறடுத்தேன், இவ்வேள்வியினைத் தொடங்கு முன்னிலையில் தந்தையைப்போலப் பரிவாய்ப் படித்துப்படித்து பலவிதத்திற்போதித்த ததீசிவாக்கியங்களை யோசித்தறியாமல் தடுத்ததல்லாமல் அவரையுந்தூறினேன், வலியவந்த பராசத்தியைப் பெண்ணென்றெண்ணிச்சீறி மனநோவப்பேசித் துரத்தியதன்றியும் பரமசிவத்தைப் பலபலநிந்தைகளைப்பேசி யிகழ்ந்தேன். இப்படிக்கு நேருமென்பதைச் சற்றுமெண்ணினேனில்லை. அவையனைத்துமிற்க, இவ்வீரன்வந்துஅவியினைத் தாருமென்று கேட்டபோதாவது சம்மதித்துக்கொடுத்து அனுப்பாமற்போனேன், வேதங்களும் குடிலையுமெதிரில்நின்று பரத்துவநிச்சயங்களைத்தெருட்டிய வர்க்கியங்களைச்சற்றும் நினைத்துப்பாராமல் மறுத்தேன், நாசகாலம் நேர்ந்தபடியால் இவ்விபரீதபுத்திவிளைந்தது, அரசனாயிருப்பவன் உலகவிடுக்கண்களைநீக்கிப் பாதுகாப்பது தகுதியாகும், அதற்குவிருத்தமாக இக்காலத்தில் விண்ணவர் தபோதனர் பிராமணர்முதலானவருக்கு உயிரைக்கொண்டுபோகும் எமனானேன்! பாழ்மனம் ஊழின்பாலாயிற்றென்று எண்ணியெண்ணி வாடினவனாய் மடிகின்ற காலம்நேர்ந்த தறுவாயில் இவைகளைநினைத்தாவதென்ன? இனி நடந்துகொள்ளவேண்டியவைகளைக்குறித்து முயற்சிசெய்வது உறுதியெனக்கருதி, வீரபத்திரர்கோபித்துநிற்பதையும், காளிசீறித்திரிவதையும்,பூதப்படைகள் காளிக்கூட்டங்களெவ்விடத்தினும்அதப்படுத்திப் பரந்திருப்பதையும் பார்க்குமிடத்தில் ஓடிப்பிழைக்கிறதும்அரிதாகக்காணுகின்றது,பழிக்கஞ்சாது தேவரைப்போல மாறுருக்கொண்டுபோய்விட நினைத்தாலும்பிழைப்பதைக்காணேன், ஆதலால் தயிரியம்விடாதிருப்பதே காரியமெனத்துணிவுகொண்டவனாய் கேடயத்தையும் வாளையும்கரத்திற்பற்றி, கொக்கரித்துஎதிரில் வந்தான். அதை வீரன்கண்டு, வடவையைப்போற்கொதித்து, பரமசிவத்தை யிகழ்ந்துஅவியைக்கொடாததற்கிது தண்டமெனவுருத்து, மின்னலையொத்து

விளங்கும் வாளினால் அப்பாதகன் சிரத்தைக்கண்டித்துத்தள்ளினார். அதனை யொருபூதமெடுத்து விழுங்கியது.

இக்காரணத்தைக்கண்ட தேவியாகிய வேதவல்லியும் பெண்களும்மார்பி னறைந்துகொண்டு பிரலாபித்து இரங்கிக் கூந்தல் நிலத்திற்புரளவருகின்ற தைப் பத்திரகாளிபார்த்து, தக்கன் மனைவியினது சிகையையரிந்து, மற்றவர் களைக்கண்டித்து வீரபத்திரதேவருடன்கலந்து, ஊழிக்காற்றும் வடவையும் பெருகியதற்கிணையாகக் கொக்கரித்து, இருடியர் விண்ணவர் முதலானவரைச் சின்னபின்னப்படுத்தி யுலவினாள். அப்போது புறம்பிற்சூழ்ந்திருந்த பூதப்படை கள் மதிலையழித்து ஆர்ப்பரித்துக்கொண்டு உள்ளேபிரவேசித்துக் காளிக் கூட்டங்களுடன் கலந்துவருவதைத் தப்பியிருக்கின்ற வானவராதியர் கண் டோட அவர்களைத்தொடர்ந்து கண்டதுண்டயாக வெட்டினர். அதைக்கண்ட புரோகிதர் பிராமணர்நடுங்கியும் வாடியும் தியங்கியும் மயங்கியும் மூர்ச்சித்தும் கோவணமவிழ்ந்து புரள்வோடியும் பிணமலைகளில்மோதியும் இவ்விதபாடுபட் டார்கள். அப்போது அவர்கள்தவிர மற்றையரைப் பூதர்பற்றித் தோளைமுறித் தும் கால்களைவெட்டியும் மார்பைப்பிளந்தும் தலையையுடைத்தும் பற்களை யுதிர்த்தும் நாவையரிந்தும் கண்களைப்பெயர்த்தும் மூக்கைக்கிள்ளியும் சிரங் களைக்கண்டித்தும் வயிற்றைப்பீறியும் இவ்விதங்களாகச் சின்னபின்னப்படுத்தி ப்புசித்து உதிரபானஞ்செய்து, சிலரைப்பிளந்தும் சிலரைத்திசைகளினும் வா னத்துமெறிந்தும் சிலரையுதைத்து உருட்டியும் சிலரைச்சிதையத்துவைத்தும் வாட்டினர், இதுவல்லாமற் பலரைப்பிடித்துப் பாத்திரங்களினொடுக்கி நெய் யையூற்றி மகத்தீயிற்பொரித்து இனிமையாகத்தின்பார்கள். பலர்குடர்களையும் பிடுங்கி அவர்மார்பிற்றரித்து நகைத்துமகிழ்வார்கள். பரமசிவத்தைப்புகழ்வார் கள். பலரைப் பாறையினிட்டரைப்பார்கள், பலரைச் சின்னபின்னமாகவரிந்து கழுகுக்கும் காக்கைக்கும் பருந்துக்கும் நாய்நரிக்கும் எறிவார்கள். யாககுண் டத்தைச்சுற்றிலும் நிரைத்துவைத்திருக்கும் நெய்க்குடங்களை யெடுத்துத் தேக்கிடக்குடிப்பார்கள். தயிர்ப்பதலைகளைவிழுங்கி யேப்பமிடுவார்கள். பால் மிடாக்களை நுகர்ப்பார்கள்,தேவருக்குவைத்திருக்கின்றஅவிகளைப்புசிப்பார் கள். வேள்வித்தீயைக் கரங்களினாற் பிசைந்து அவிப்பார்கள், சாலையறை களின் கதவங்களைமுத்திரித்து நெருப்பையிடுவார்கள், அவைகளிலிருக்கும் பண்டங்களும்மனிதரும் சாம்பலாகக்கண்டு மகிழ்வார்கள்,கலசகும்பங்களையெ டுத்து அம்மானையாடிச்செண்டைப்போலவெறிவார்கள்,யாகத்தம்பத்திற்பிணி த்திருக்கின்ற பசுக்களையவிழ்த்துக் கங்கையிற்செல்ல வீசுவார்கள்,தேவர்முத லானவரேறிவந்த விமானங்களையும்,இரதங்களையுங் கொளுத்துவார்கள், அவர் களெங்கிடப்படைகளை முறிப்பார்கள், கலன்களைக்கரித்துத் துகள்செய்வார்கள். வேதிகைகளை யுதைத்துக் குண்டத்திலே தள்ளுவார்கள் தோரணங்களை யறுத்துக் காற்றிற்செல்ல வூதுவார்கள், துவசங்களையொடித்துத் தள்ளுவார் கள், தக்கன் மருகரைப்பற்றிச் சொல்லப்படாத செய்கைகளை முடிப்பார்கள், இடியைப்போல மார்பில்அறைந்தும் குத்தியும் வருத்துவார்கள். உண்ட அவி களைக் கக்கும்படிக்கு முதுகிலிடிப்பார்கள். சிலதேவரைவாளினாற் சேதித்

தும் சிலர்தலைகளை மொட்டையாக மயிரைப்பிடுங்கியும் சிலரைப்பந்தலுக்கு நிறுத்திய கால்களிற்கட்டியும் சிலரை வறுத்துக்கொறித்தும் இவ்விதமாகத் தாமரைத்தடாகத்தில் மதயானைபுகுந்தாற்போல வேள்விச்சாலையைக் கலக்கு வார்கள். அப்போது வெட்டென்றும் பிளவென்றுங் குட்டென்றுங் கொல்லெ ன்றும் குத்தென்றும் உரியென்றும் கட்டென்றும் பிடியென்றும் உதையென் றும் இவ்வித ஒலி திசையெங்கும்பரவ யாகசாலை பட்டபாட்டை மூர்ச்சை தெளிந்தெழுந்த விஷ்ணுவுங்கண்டு நான்தலைவனாகவிருந்துஇம்மகத்தைக் காத்தது வெகுநேர்த்தியென்று மனம்பாதிக்க, கருடனைநினைந்துவரவழைப்பது தாமத ப்படுமென்று தன்கோபத்தை யவ்வுருப்படுத்தி அதன்மீதாரோகணித்து, பஞ் சாயுதபாணியாய் பூதப்படைகளின்மீதெதிர்த்து கடலுடைந்ததுபோலபாஞ்ச சன்னியத்தைமுழக்கி சாரங்கமென்னும் வில்லைவளைத்து அளவற்ற திவ்விய சரமாரிகளைத்தூவிவந்தார்.

அதைச் சிவகணங்களும் காளிக்கூட்டங்களும் கண்டு முன் எமது கர்த்தன் தண்டத்தின்மோதலினாற்பட்டவன் வெட்கமில்லாமல் மீளவும் போர் செய்ய வந்தானென்றிகழ்ந்து, கரங்களைப்புடைத்து நகைத்துச்சீறி மேலிட்டு வருகின்ற பாணங்களைப்பற்றி முறித்தும்பொடித்தும் தட்டியும் அழித்தும் சண்டை செய்தார்கள். அதை வீரபத்திரமூர்த்திகண்டு புன்முறுவல்கொ ண்டு வருகையிற் பரமசிவகடாட்சத்தினால் சுவரத்தினமயமான தேரொன்று எதிரில்வந்து நின்றது. அத்தறுவாயில் அவசமாறி யெழுந்த பிரமன் இதுநல்ல தருணமெனக்கருதி, அத்தேரிற்பாய்ந்து, சாரதியிருக்குமிடத்தில் அமர்ந்து, குதிரைகளின் வார்களையும் உளுவுகோலையும் கரங்களிற்கொண்டு நடத்தி, சிவகுமாரனெதிரில் நிறுத்தி வீராதிவீரா, கர்த்தன் இதோ ரதமனுப்பினார். சத்ராதிகளைச் செயிக்கத் தேவியுடன் இதன்மீதெழுந்தருள வேண்டுமெனப் போற்றினான். அப்போது வீரபத்திரர் அவனிடத்திருந்த கோபஞ் சற்றுத் தணிந்து, திருத்தேவியுடன் அத்தேரிலேறியருள, பிரமன் சுவாமி அடியேன் வல்லமையைப்பாருமென்று வாயுவேகத்தினுமேலாக அதைச்செலுத்திக் கே சவனுக்கெதிரில் நிறுத்தினான். அத்தறுவாயிற் கண்ணன் வீரனைநோக்கி, சிவனை நிந்தித்த தக்கனைத் தெண்டிப்பதல்லது வேள்விச் சம்பிரமத்தைப் பார்க்க வந்ததேவராதியரை நீதியில்லாமற் கொல்லத்தகுமோ வென்றுவினவ, வீரன் நீ குறித்த தன்மையாயினும் பரமனையன்றி யகத்தை முடிக்கின்றவ ரிடத்திருந்தவர்களுக்கு வேதங்களிற் சொல்லுகின்ற சிக்ஷையின் படிக்குச் செய்தோம், இதன்றியும் நமதெதிரில் நிற்கின்ற உன்னையும் வாட்டுவோமென் றார். உடனே மாயவன்கோபித்து, தன்வில்லைவளைத்து, பாணவருஷத்தைப் பெய்து, வீரபத்திரரையும் பூதப் படைகளையுமறைக்க, வீரன்காளியை நோ க்கி நகைத்துத் தமது சிலையைக்கோலி, சத்தசாகரங்களும் கொதித்தடங்கவும் அண்டங்கள் நெக்குவிடவும் அவைகளிலடங்கிய சீவராசிகள் செவிபொட்டு இத் தினத்தானோ யுகமுடிவென்று மயங்கவும் குணத்தொனி செய்து, குரூரமான கோல்களைத் தொட்டு தம்மீதெழுந்த சிலீமுகங்களைக் கண்டித்து தாமோத

ரனை மூடினார். அவையனைத்தையும் மாயவன் கொடியபாணங்களினால் விலக்கிமேலும ஆயிரங் கணைகளைத் தமதுதோள்களைக் குறித்தேவ, அவைகளை வீரன்துகள்கண்டு, ஒருதிவ்விய பாணத்தைத் தூண்டி விஷ்ணுவின் நெற்றியைப்பிளந்து அவன்நடுநடுங்கி உதிரத்தைக் கக்கிக்கொண்டு மூர்ச்சித்துக்கிடக்கிற வரையில் வில்லை யூன்றிப் பார்த்திருந்தார். அவன் சற்றுநேரத்திலேதெளிந்து மீளவும் அளவற்ற கணைகளைச் செலுத்த வீரபத்திரர் அவைகளைத்துகள் கண்டு மாறுசரங்களைப் பிரயோகித்தார்.

இவ்விதமாக மாறிமாறி அவ்வீரர் செய்தபோரின் பெருக்கம் யாவராற் றுதிக்கப்படும். பின்பு சிவகுமாரன் சீறி, பாசுபதத்தைத் தூண்டி கரியவன் மார்பைப்பிளக்க, அவன்மயங்கியிருந்து தெளிந்தான். உடனே வில்லை எடு, சண்டை தொடுவென்று வீரன் அதட்ட கரியவன் கொதித்து, தேவபாணங்கள் ஒன்றின்பின் ஒன்றாய் விட்டான். வீரபத்திரர் அவைகளுக்கு மாறேவித்தடுத்து பின்பு மற்றொரு சரத்தினாற் கண்ணன்கரத்தில் மேருவைப் போல விளங்குஞ் சாரங்கத்தைவெட்டித் தள்ளி மேலுமிரண்டு நாராசங்களினால் அவனேறியிருந்த கருடன் சிறகுகளையரிய அவன் மாயனுதலால் அளவற்ற விஷ்ணுவின் கோலங்கொண்டுதாக்கினான். அதைவீரன்கண்டு நுதல்விழியினால் அத்தோற்றங்களைப் பொடிபடுத்த, விஷ்ணுவானவன் இனியென்ன செய்வோமென் றெண்ணுதுமெண்ணி, கடைசியிற் பரமனையர்ச்சித்துப்பெற்ற சக்கரத்தைப் பிரயோகித்தான். அதைவீரன் பற்றிவிழுங்கி, பின்பு அவன் சுழற்றியெறிந்த தண்டையும் தமது கதையினாற் பொடிபடுத்தினார். அதைக் கண்ட கண்ணன் தன்னிடத்தில் வேறுபடைகளில்லாமையால் வாளினையுங் கேடயத்தையுமெடுத்துப்பாய்ந்துவரும்போது வீரபத்திரர்ஓங்காரம்செய்யஅவ் வதிர்ச்சியினால்மயங்கி அசைவற்று வாளைப்பிடித்தபடியே நின்றனன். அத்தறுவாயில் யாதினைநினைந்தோ வீரபத்திரதேவர்அதிகவுக்கிரத்தைஅடையும் முன்னிலையிற் சிவகடாட்சத்தினாற் கோபிக்க வேண்டாம் கோபிக்க வேண்டாமென்று வானத்தினின்றொரு வாக்கியம் உண்டாயது. அதைவீரன் கேட்டுச் சீற்றந்தணிந்து, இதென்னகாரணமென்று பார்த்திருக்கையில், இது தருணமென் றெண்ணிப் பாகனாகவிருந்த பிரமன் சேவித்து, வேதவாக்கியத்துக்குப் பிசகாக யாகஞ்செய்த பாதகன் தந்த அவியினைப்புசித்த அடியேன் பிழையினைப் பொறுத்தருள்கவென்று திருவடிகளில்விழ, அவனிடத்திற் கிருபையுற்று பயப்பட வேண்டாமென் றுரைத்தார்.

அத்தறுவாயில் இதுதான் சமயமெனக்கருதி மகாவிஷ்ணு வீரபத்திரக்கடவுளைப்புகழ்ந்து, பார்த்து கிகாற்றிருக்கும் என் வில்லைக் கண்டித்ததல்லாமலும் செலுத்திய திவ்விய சரங்களைப் பொடிபடுத்தி, எதிர்த்தவரைச் சங்கரிக்குஞ் சக்கரத்தினையும் விழுங்கி மூவரினொருதலைமை பூண்ட என்னையும் செயித்ததனால், ஓய் வீரனே, உமது பெருமைகள் யாவராற் புகழப்படும், அழுக்காறுடைய தக்கன் வேள்வியின் அவியை இச்சித்து விவேக சூனியனாய்த் தேவ

ரீருடனும் எதிர்க்கவந்தேன். அதற்குரிய தண்டனையும் பெற்றேன். ஞானவான்கள் பரமசிவனை மதியாதவிடத்திலும் நிற்பரோ, மேலும் ஆதிகர்த்தனைத் தொழாதவருக்குறும் தண்டம் எங்களுக்கும் நடத்தியதனால் உமக்குக் குறைவில்லை, இச்சம்பவத்தை நாங்களே தேடிக்கொண்டோம், ஓ? வீராதி வீரனே, வார்த்தையுரப்பினால் உலகையழிக்கவல்ல தேவரீர் பாணங்களைச் செலுத்திய இதுவுமொரு திருவிளையாடலாமெனப் பலவாகத் துதித்து, அடியேன் பிழைக்கடுத்த சிக்ஷை முன்னமேபெற்றுக்கொண்டதனால் இனிப்பாதுகாத்தருள்கவென்று வேண்ட, வீரபத்திரதேவர் மகிழ்ந்தருளினார். அத்தருவாயிற் சிவபிரான் பராசத்தி சமேதராய் ரிஷபவாகனத்தில் ஆரோகணித்து, நந்திதேவர்போற்றிவரச் சிவகணங்கள் கொடி குடை ஆலவட்டம் வெண்சாமரைகளைத் தாங்கியும் தேவதுந்துமியை முழக்கியும் கர்த்தன்பெருமைகளைப் பாடியும் சூழ்ந்து நடக்க வேள்விச்சாலையினிடத் தெழுந்தருள, அதைக்கண்ட வீரபத்திரர் பத்திவிநயங்களுடன் தொழுது நின்றார். அத்தருவாயில்விஷ்ணுவும்பிரமனும் பிரிந்த பிதாவை எதிர்ந்தவரையொக்கப் பரிவுடன்போற்ற முன்னிலையிற் கர்த்தனிடப்பாகத்தின் வீற்றிருக்கும் பிராட்டியானவள் வேள்விக்களத்திலே தக்கனுதியர் சின்னபின்னப்படக் கண்டிக்கப்பட்டு, உருளுவதையும் மகமழிந்த பாட்டையுங்கண்டு, உலகமாதாவாதலாற்கோபந்தணிந்து, பரிவாய்க் கர்த்தனைநோக்கி, சுவாமி இவ்வேள்வியும் இதனிடத்தில் வந்திருந்த தேவாராதியரும் அடியேன் பொருட்டு அழிந்தாரென வுலகத்தோர் வசனிப்பர், என்கோரிக்கையின்படி வீரனைக்கொண்டு தக்கனுதியரைச் சங்கரிப்பித்ததனால் தேவரீரை மதியாத காரணத்திற்குரிய தண்டனையைப் பெற்றார்கள். இப்போதும் அடியேன் பொருட்டு இவரையெழுப்பத்திருவுளங்கொள்ள வேண்டுமெனத்துதிக்க, உன்னிரக்கம் வெகுநேர்த்தியென்று பரமன் நகைத்து பக்கத்தில் நிற்கின்ற வீரபத்திரரைப்பார்த்து உன்னாலிறந்தவரை மீளவும் எழுப்பக்கடவாயென் றனுக்கிரகஞ் செய்தார். அவ்வாறே வீரன் பரமன் பாதங்களைச்சிந்தித்து, இவ்விடத்தின் மடிந்தவர்களனைவரும் உயிர்பெற்றெழுவீரென்றவுடன் உறங்கினவர் விழித்ததைப்போலத் தேவர் தபோதனர் பிராமணர் முதலாயினோர் எழுந்து, பரமனைக்கண்டு, தங்களுக்குக்கிடைத்த பழிபாதகங்களை முறையிட்டு, வாடி, கர்த்தனே ரட்சிக்கவென்றுபோற்ற, பரமன் அவர்களையுமாதரித்தருளினார். அக்காலத்தில் கேசவனுதியர் சேவித்து சுவாமி? தேவரீரை வஞ்சித்துத் தக்கன்செய்த வேள்வியில்வந்து அவியுண்ட பாதகர் எதிரிலெழுந்தருளத் திருவுளங்கொண்டீர். பிதாவல்லது பிள்ளைகளைப் பாதுகாக்க வல்லவர் யாவர்? மேலும் தக்கனுக்கினைக்கஞ்சி நன்னெறியைக்கடந்த அடியேங்களை ரட்சித்த கடவுளுக்கு யாங்கள்செய்யுங் கைம்மாறுமுண்டோ, இவ்வீரனாலேதண்டிக்கப்பட்டகாரணத்தினால் எங்கள்தேகம் பவித்திரமாயிற்று. இதுவல்லாமல் ஆதியில் உலகங்களையழிக்கவெழுந்தவிஷத்தையுண்டதும், கங்கையைத் தரித்ததும் அடியேங்கள் பொருட்டல்லவோ? தொண்டர் செய்தபிழைகள் பலவுண்டாயினும் அவைகளைப்பொறுத்தல் அடிகள் கடமையாகுமென்று பல பலவிதங்களிற் றுதிக்க, அவரைப்பகவான் கை

யமைத்து, கோபந்தணிந்தோம், இனிப்பயம் வேண்டுவதில்லை யென்றருள ஆனந்தவாரியிலே திளைத்துக் களித்துக்கூத்தாடி யேத்தினார்கள்.

அப்போது அக்கூட்டத்திலே தக்கனைக் காணாததனாற்பிரமன் பரமனைச் சேவித்துக் கர்த்தனே, யாங்கள் நரகவாதனையிற் படாமல் அருளியதைப் போலவே என்குமாரனையும் வரவழைத்து ரட்சிக்க வேண்டுமென்று பாதார விந்தங்களில் விழுந்திரக்க, உமாபதி கிருபை கூர்ந்தவராய், வீரன்மீது திருக் கண்சாத்தினார். அக்குறிப்பினைவீரன் உணர்ந்து பானுகம்பனால் அவ்வுடலைத் தருவித்து, அவிக்குக்கண்டித்திருந்த ஆட்டின்தலையை அதிற்பொருத்தி, எழுக்கடவாயென்றவுடன் பரமசிவத்தை யிகழ்ந்தவர் இப்படிக்காவரெனச் சகலருக்கும் உணர்த்துவதுபோலத் தக்கன்தலையை யசைத்துக்கொண்டெ ழுந்து, அருகில் நிற்கின்ற வீரபத்திர தேவரைக்கண்டு ஒடுங்கி, நாணித் தலை யிறங்கி வணங்கி, வானத்தினிற்கும் பரமனையுநோக்கி, நடுநடுங்கிவாடினன். அதைப்பார்த்தருளி, பக்தவற்சலரான கடவுள், தக்கா, பயங்கொள்ளவேண் டாமெனக் கிருபாநோக்கம்பாலிக்க, தக்கன் கவலை நீங்கி, மும்முறை வலம் வந்து பலதரம் வணங்கி, ஓ! தீனதயாநிதியே? லோகநாயகனே? அடியவர்க் கெளிய பரமே? தேவரீரனுக்கிரகஞ் செய்த செல்வப்பெருக்கினாழ்ந்து மதி மயங்கி யநன் செய்தபிழைகள் அளவற்றன உண்டு, நினைந்தாலும்மனம்நடுங்கு கின்றது, அவைகளைப்பொறுத்தருளியதனாற் கிருதார்த்தனானேன். அஞ்ஞான வானாகிய அடியேன் விஷ்ணுபிரமாக்களைத்துணையாகக்கொண்டு தமதுமாயை வயத்தினால இச்சம்பவத்தினைப் பெற்றேனென வழுத்தினன். பின்பு தம்மை வணங்கிய வீரனை உமையவள்வாழ்த்தி, காளிமுதலைகைத்தடவி ஆதரித்து, அவர்களுக்குவேண்டிய பேறுகளை யளித்தாள். அக்காலத்திற் கர்த்தன் தமது குணநிசயங்களைப் புகழ்ந்து போற்றி, நின்ற கேசவன், நான்முகன், மற்றதேவ ராதிகளிடத்துக் கிருபாநோக்கம்பாலித்து, நம்மையன்றி இந்த வேள்வியினை நடாத்திய காரணத்தினால் வேதவிதிப்படிக்கு இத்தண்டம் நேர்ந்தது, இத னால் நாணிவருந்த வேண்டாமென்று அவர்களைத் தங்கள் பதிகளுக்குப்போக அருளிச்செய்து, வீரபத்திரர் காளிசேனையின்வெள்ளங்களும் கணநாதரும் சூழ்ந்து போற்றிச் செயபேரி வெற்றிச்சங்கங்களை முழக்கிநடக்க, விடையின் மீது திருத்தேவியுடன் வெள்ளியங்கிரிக் கெழுந்தருளி, வீரபத்திரரை அண் டத்தினெல்லையிலிருந்து சகலபுவனங்களையும் பாதுகாத்து அரசுரிமையினைச் செலுத்திவரக் கட்டளையிட்டார். அப்போது வீரன்காளியுடன் தாய்தந்தை யரைச்சேவித்து, விடைபெற்று, தமதிடத்தைச்சேர்ந்து, பூதகணங்கள்போற்ற விருந்தார். பானுகம்பன் முதலான பூதகணத்தலைவர் கர்த்தனைவணங்கி, தத்த மிடங்களை யடைந்தார்கள்.

யாகசங்காரப்படலம்

முற்றிற்று.

அடிமுடிதேடுபடலம்.

இங்கிதனிற்கமுன்னிறைவன்வந்துழி
யங்குறகின்றதோரமரர்தங்களுட்
செங்கமலத்துறைதேவன்றக்கனுந்
தங்கமின்மைமர்தனைநோக்கிச்சொல்லுவான்.

கேட்டீர்களோ சவுனகாதிரிஷிகளே! சிவபிரான் மறைந்தபின்புவிஷ்ணு வாதியானதேவர் தவத்தர் முதலானவர்கள் தங்கள் பதவிகளிற் சேர்ந்தார்கள். இவ்வாறு சகலரும் நீங்கிய தறுவாயிற் பிரமன் மனம்பொருமற் குமாரனை தக்கனைநோக்கி, நீவருந்தி நோற்றுப்பெற்ற செல்வத்தை அகந்தையினாற் பறிகொடுத்ததன்றியும் உலகமுள்ளளவும்தீராதபழியினையும்வேற்றுருவினையும் அடைந்தாய், மேலும் இறத்தலில்லாததேவர் ரிஷிகளாதியருக்கு யமனாய் அப்பெருமையினை மாற்றினாய், தக்கனென் றெவ்வுலகங்களினும் போற்றும் ஏற்றத்தையும் இழந்தாய், உன்குறிப்பின் வண்ணமல்லது பெரியோர்கள் சொல்லிய நீதிகளைமறந்து அவர்மனநோகவும் பேசினாய், வேதாகம முதலிய சாஸ்திரங்களைப் பூர்த்தியாக வாசித்தறிந்தும் அவற்றிற்குக் காரணராகிய சிவத்தின் பெருமைகளையுணர்ந்தும், அவர் மாயையிற்பட்டு அவரையிகழ்ந்து இப்பேற்றை யடைந்தாய், அவர்செயலைக்கடந்தவ ரிவ்வுலகின்கணொருவரும் கிடையாது, முன்னொருகாலத்திலே கண்ணனும் யானும் அஞ்ஞானத்தழுந்தினவர்களாய், நாம்நாம் பரமென்றகந்தைகொண்டு, அளவற்றகாலம் வாது செய்கின்ற தறுவாயில் இத்தினத்தைப்போலவே பரமசிவமெழுந்தருளி விலக்கி எங்கள் மையலை நீக்கிரட்சித்தார், ஆதலாற் பிதாவையொத்த பரிவையுடைய கர்த்தனை வழிபட்டுத் தவங்களைச் செய்வையாயின், பாபத்தைப் போக்கிப் பரிசுத்தனாக்கி இம்மைமறுமை யின்பங்களையும் கடாட்சிப்பார், இதனைக் கடைப்பிடியாக நம்பி ஈடேறக்கடவாயென்று பலதிறங்களைக் காட்டிப்போதிக்கத் தக்கன்பிதாவின் வாக்கியங்களைக்கேட்டு ஒருமைப்பட்டவனாய்; உங்களிருவருக்கும் ஆதியிலுண்டாகிய மயக்கத்தினையும் கர்த்தனெழுந்தருளித் தடுத்தாண்ட சரித்திரங்களையும் அருளிச்செய்ய வேண்டுமென்று கேட்டான். அப்போது பிரமன்குமாரனே? நீவினாவியதற்கு மகிழ்ந்தோமென்று அக்கடவுளினதுபாததாமரைகளைக்கருதிச்சொல்வதாயினார். கிரேதாயுகமுதற்சதுர்யுகங்களும்ஆயிரம்விசைதிரும்புமாகில் எனக்கொருபகலாம். அன்றிரவில்யான் துஞ்சும்போதுசத்தசாகரங்களும்பெருகி உலகங்களைமூடித் தேவர்மனிதர் சூரியன் சந்திரன் முதலான சராசரப்பிரபஞ்சங்களை அழிக்கும் அப்போதுவிஷ்ணுவானவர்பாலனாய் வடபத்திரசாயியாய், பரமசிவத்தின் பாதகமலங்களைச்சிந்தித்து யோகநித்திரைகொண்டிருந்து அவ்விரவுகழிந்து விடிந்தபின்பு மார்க்கண்டர் ஜனகாதிய மகத்துக்கள் தம்மைநினைந்து துதிக்க அறிதுயிலுணர்ந்தெழுந்து பூமியை நிலைபெறச்செய்யநாடி, பாதலத்திற்கிடப்பதைத்தெரிந்து, வராகவுருவெடுத்துப்பாய்ந்து வைரம்போன்ற கோட்டிற் பூமியைத்தாங்கிவந்து பழையபடிக்குநிலைபெறச்செய்தார். அப்போது நான்விழித்துச்சிருஷ்டியினைச்சிந்திக்க,

துவாதச ஆதித்தருதிக்க அவராதுகாந்தி தீட்சண்யத்தினும் பிரளய நீர்வற்ற பூமிவெளிகண்டு எதாப்பிரகாரம் தோற்றியது. அதைக்கண்ட தாமோதரன் இஃது தம்மாலாயதென அகந்தைகொண்டு, , திருப்பாற்கடலிற் சயனித் திருந்தான்.

அத்தறுவாயில் நான் சகலபுவனங்களையும் பூர்வப்படி நிருமித்து தேவ ரினங்கள் மானிடர் மிருகங்கள் பறவைமுதலிய சராசரங்களையும் உண்டு பண்ணி, பூவுலகம் பொன்னுலகமாதிய பதங்களை நிருமித்து, இந்திரனைத் தெய்வலோகத்துக் கரசனுக்கி திசைக்காவலரை நிலைபெறச்செய்து சந்திர சூரியாதிய நவக்கிரகங்களை எதாப்பிரகாரம் அமைத்து இவைகளனைத்தும் நம்மாலாயது நாம் உறங்கும்போது சகலமுமழியும் விழித்துநினைத்த காலத் திற் பழையபடிக்குண்டாகும், ஆதலால் நம்மையன்றிக் கர்த்தன்வேறில்லை யெனத் துணிபுகொண்டிறுமாந்து, என்னுலாயவைக ளனைத்தினையும் பார்வை யிட்டுவருகின்ற தறுவாயில்,என்னைப்போலவே அகந்தையுற்றுத் திருப்பாற்கட லிற் பள்ளிகொண்டிருக்கும்விஷ்ணுவைக்கண்டு, இலக்குமிக்கிடமாகிய மார்பி னிடத்தறைந்தெழுப்பி, நீ யாவனென்றுகேட்டேன். அவர்நகைத்து, உன் பிதா வல்லவோ? இதனைமறந்தையோ வென்றனர். அதை நான்கேட்டு, புன்சிரிப்புக்கொண்டு, இன்னமும் நித்திரைமயக்கந் தெளியவில்லையோ! உன் னுந்திக்கமலத்தில் வந்ததனுற் பிதாவெனக்கருதினையோ! தீக்கடைக்கோலி னிடத்து அக்கினியுதித்ததனுல் அப்பசையற்ற விறகு அச்சிறந்ததேவதைக் குத் தாயெனப்படுமோ? அல்லது தந்தையெனவும் நினைக்கலாகுமோ இதன் றியும் முன்னம் பிருகுரிஷி சாப சம்பந்தத்தினுலே தூணில் நரசிங்கமாகத் தோன்றினை, அது உனக்குப்பிதாவாகுமோ! மேலும் நீ பத்துசனனமெடுத்த போது அவைகளைப்படைத்து என்கரங்கள் கறுத்ததைப்பா ரென்றுகாட்ட, கண்ணன்கோபித்து கரங்களைத்தட்டி, பிரமனே! முன்னம் பரமசிவம் உன் சிரங்களிலொன்றைக்கிள்ளியதை இன்னமும் உண்டாக்கிக்கொள்ள வகையறி யாத நீ நம்மைச் சிருஷ்டித்தேனென்பது நன்றுயிருக்கின்றது, உனக்குத் தாய்தந்தை குருதெய்வம் நாமாகும், நமது மாயைவயத்தனுய் இதனைப் பேசுகின்றனை; நாமல்லது சராசரப் பிரபஞ்சங்களில்லை, எண்ணுவிப்டே னும் எண்ணுவோனும் நான், கண்ணுதற்கடவுளும் நான்? அவனிடத் தம ர்ந்த சத்தியும் நான், பஞ்சபூதங்களும்நான், புலன்களுமநான், நாராயணனும் நான், ஆதியும்நான், உருவும்நான், அருவும்நான், சோதியும் இருளும்நான், பரப்பிரமமும்நான், ஆதலாலென்னை யல்லதொரு பொருளுமிராதென்று சொல்லினர். அதைக்கேட்டு, நாமிருவருமிவ்வாறு வாதுசெய்வதிற் பிர யோசனமில்லை. சமர்த்தலையின்னெதிர்த்துப் பொருதுவென்றவர் பரமென்று நான்சொல்லினேன். விஷ்ணுவும் சம்மதப்பட்டு சார்ங்கமென்னும் வில்லை யேந்தி அளவற்ற திவ்வியபாணங்களைப் பிரயோகிக்க, நான்தருப்பைகளை மந் திரித்து, மாறுபடைகளையுண்டுபண்ணிவிட்டுத்தடைசெய்யக்கண்டு, சீறிச்சக் கரத்தையேவினர். அப்போதுநான்பிரமாஸ்திரத்தைப் பிரயோகிக்க, அவை யிரண்டும் சிலகாலம்போர்செய்து திரும்பின, பின்பு விஷ்ணுவானவர் தாம்

முன்னைப் பரமசிவனிடத்திற்பெற்ற பாசுபதாஸ்திரத்தைப் பூசித்துவிட, நான் சக்கரப்படைக்கிடைத்திருந்த அப்பாணத்தினையெடுத்துப்பூசித்து, வணங்கி யுபசரித்தெய்தேன். அவ்வயிரண்டும் அக்கினியைக்கக்கிப் புகையைவீசிய பலவிதப்பிரபாணங்களை, புண்டுபண்ணிப்பொருது, எங்குமுலவுகின்ற தறு வாயில், அவைகளிலுண்டாகிய சுவாலையினால் உலகங்கள் அழிவடையவும் தேவர்களிற் பலரிறக்கவும் சிலர் திருக்கைலாயமலையினிடத்தில் முறையிட் டுக்கொள்ளவோட்டவும் மேகங்கள் கரிந்துருளவும் சமுத்திரசலஞ்சுவறவும் இவ்விதமாகச் சகலமும்வாதைப்பட்டன

அப்பொழுது பரமசிவகடாட்சத்தினால் நாரதர்வந்து என்னையும் விஷ்ணு வையும்பார்த்து, உங்களிற்பரத்துவத்தைவகித்து வீண்வாது செய்கின்றீர். அவ்வாக்கியம் உங்களுக்கடாது மேலும் தகுதியாகிய பாணங்களைச் செலுத் தாமல் மேலானபாசுபதத்தையெய்தீர்கள், அதனாற்சராசரப் பிரபஞ்சங்கள் அழிகின்றன, அப்படையினையளித்த ஆதிதேவனை மறக்கலாமோ! ஆதலால் இனிசண்டையினை நிறுத்தக்கடவீர், அல்லதுஇன்னமும் சிலகாலஞ் சண்டை செய்திருப்போராயின் ஆதியந்தமில்லாத கர்த்தன்சோதிவடிவாய் இருவர்மத் தியிற்றோன்றுவர். அதனால் துன்பம்நேருமெனச் சொல்லிப்போயினார். அவ் வாக்கியங்களை நாங்கள்நினைந்து பாராமற் பின்னுங்கோபமேலிட்டுவெகுகாலங் கொடியபோரினைச்செய்துவருகையிற் சிவராசிகள்வருந்திச் சிவபிரானைக் குறி த்து முறையோ முறையோவென்றலற, கர்த்தனிரங்கி, இறியவரையோபப யாங்கள்உலகங்களலையப் பொருவதைவிலக்கி,ஆணவமலத்தைநீக்கி ரட்சிக்கத் திருவுளங்கொண்டவராய், எங்கள்மத்தியில் அக்கினிமலையாகத்தோற்றி, நாங் கள் ஏவியபடைகளை யுட்கொண்டு அளவுபடாமல்கின்றார். அதைக்கண்டு விஷ்ணுவும் நானும் பிரமித்துத்தியங்குந்தறுவாயில், வானத்தினின்றொரு வாக்கானது ஓ! விவேகமிலலாதவரோ? உங்கள் வலியினைத் திரிபுரதகனரோ காண்பார், ஆதலால் இச்சோதியின் அடியினையும் முடியினையும் கண்டவரே பெரியரென்று எழுந்தது. அதை யாங்கள்கேட்டு, கோபந்தணிந்தும் அகந் தையினைவிடாமல இவ்வொலியுண்டாகுங்காரணம் யாதென்றுலோசித்து, நாரதர்வாக்கியத்தை நினைந்து நம்மின் மேலானவரைக் காட்ட இத்தோற்ற முண்டாயது. ஆதலால இதன் ஆதியந்தத்தினைக்கண்டவரே பரமெனகிச்ச யித்தனம், அஃதெத்தன்மைத்தெனின், தவழுங்குழந்தை வானத்திற்செல லுஞ் சூரியனைப்பற்றச் சிந்தித்தற்கொக்கும். பின்புவிஷ்ணு வயிரத்தினையொ த்த குளம்புகள் பொருந்திய குறியகால்களையும் பிறையினைநிகர்த்தகோடு களையும் ஆயிரயோசனைபரப்புள்ள பாரித்ததேகத்தினையும் பெற்றவராகவுருக் கொண்டு, புவியினைக்கல்லி, அச்சோதியினடியைக் காணச்சென்றார். யானும் பொற்பிரகாசம்பொருந்திய சிறகுகளையுடைய அன்னவடிவெடுத்து, அதன் முடியினைக்காண வானத்திற்பறந்து, அளவற்ற புவனங்களைக்கடந்தும் அது முன்போலவேதோற்றக்கண்டேன்.பன்றியாய்ப்பாதலத்தைத் துருவிச்சென்ற கேசவனும் அவ்வாறேகண்டு, கோடுகள்தேய்ந்து வாடியினைந்தபின்பு அகந் தைநீங்கி, பழைய அறிவுதித்து, தேடும் ஆசையையொழித்து, புவியின்மீது

வருவிப்பதற்குச் சத்தியில்லாமையாற் பரமசிவத்தின் பெருமைகளைப்போற்றி,
யாவரும் அறிதற்கரிய அவர் பாதாரவிந்தங்களிற் சரணமடைந்து அவைகளை
யருச்சிக்க விருப்புற்றதால் அவரதுமகிமைகளை யறியாமற்செய்த பிழைகளைப்
பொறுத்து இக்காலத்திற்காத்தருளவேண்டுமென்று பலவாகத்துதித்து, கர்த்த
னனுக்கிரகத்தினலே வலிபெற்றெழுந்து, புவியிலோங்கி நிற்குஞ்சோதிக்கரு
கில் வந்துவணங்கி வழிபட்டிருந்தார். யானும் நெடுங்காலம்பறந்துதேடி அதன்
முடிகாணுமல்வருந்திமுற்றுரித்த சபதத்தினைநினைந்து, திருமால்இதனடியைக்
கண்டு வருவானயின் நமக்குத் தோல்விநேருமேயென்னும் மானத்தினல்
வருந்தி எவ்வளவுகாலமாயினும் இதைக்கண்டல்லது மீளேனென்று பறந்து
பறந்து இளைத்து வலியொடுங்கி, சிறகுகளுதிர்ந்தசைவற்றுக் கால்களோய்ந்து,
கண்கள்சுழன்று, பிராணன் தத்தளித்து வாடினேன்.

அப்போது தெய்வச்செயலால் அச்சுடரினின்றுஞ் சிலசித்தர்வெளிவந்து
பிரமாணத்தடங்காத் பிரஞ்சோதியினது முடியைக்காண்பேனென்று அகந்தை
யேற்றெழுந்த இப்பறவை தன்சிறகுகளும் வலியும் ஒழிந்து அறிவில்லாமற் றேடி
வருந்துகின்றது, இது இன்னஞ்சிலகாலம் பறக்குமாயின், உயிரிழந்துபோய்
விடும்இச்சோதி சிவச்செயலென்றறியாமற் பாதலத்தைப்பிளந்துபோனவிண்டு
வும்இதனடியினைக்காணது இளைத்து, சிவனைத்துதித்து, வலிபெற்றுபூமியில்
வந்துபோற்றிநிற்கின்றுன். இவ்வன்னத்துக்கும் அவர் அனுக்கிரகமுண்டாயிற்
கடைத்தேறுமென்று மீளவும் அச்சோதியின்மறைந்தனர். இவ்வாக்கியங்களைக்
கேட்டவுடன் நான் என்மையலொழிந்து, கர்த்தனைத்துதித்து, புவியினிறங்கி,
விண்டுவைக்கலந்து, நாமிருவரும் அகந்தையினல் நாரதர் சொன்னதையுங்கே
ளாமையாலும்இச்சோதி வடிவானது பரமசிவன்செயலென் றறியாமையாலும்
அளவற்றகாலந்தேடி வருந்திக் கடையிற் சிவகடாட்சத்தினலுணர்ச்சிபெற்றுக்
கிருதார்த்தரா யிவ்விடஞ்சேர்ந்தோம், ஆதலாற் பரமசிவனைவழிபட்டுத்தெரி
சித்து ஈடேறக்கடவோமென்று கூறி, அவர் சம்மதத்தைக்கொண்டு, ஒரு
சிவலிங்கத்தை அவ்விடத்திலேதாபித்து,சோடசவுபசாரங்களுடன் அருச்சனை
யை வேதவிதிப்படியாகச்செய்து, போற்றினேன். அத்தருணத்தில பரம
சிவம் அச்சோதியினின்றும் வெளிவந்து, உமாபரமேஸ்வர முகூர்த்தமாய்க்
காட்சிகொடுக்க நாங்கள் இறைவன் பாதகமலங்களிலேதொழுது, சுருதிகள்
துதித்தறியாத தேவரீர் பெருமைகள் எங்களாலளக்கப்படுமோ? உமதுமாயை
யிற்பட்டு மயங்கிப்பொருத எங்கள் மத்தியிற் சோதிமயமாய் எழுந்தருளிப்
போறிவைத்தந்தாண்டீர். உமது அனுக்கிரகத்தினல் உம்மை யறியவல்லவரா
யினும் பேதையேம் இழைத்தபிழையினைப்பொறுத்தருளவேண்டும், பிள்ளை
கள்செய்ததீங்கினைப் பெற்றவர்கள்இஷ்டமாகப்பார்த்திருப்பதுமுறைமையல்ல
வோவென்று பலவிதங்களாகத் துதித்தோம், பரமசிவன்இரங்கி நீங்கள்செய்த
குற்றத்தையெண்ணி வருந்தவேண்டாம். உங்கள் பூசைக்குமகிழ்ந்து உங்கள்
பதவிகளையும் தந்தோம். இன்னமும் விரும்பியவரங்களைத் தருவோமென்
றருளியபோது நாங்கள் மீளவும்வணங்கி அடிகள் திருவடிகளை மறவாதபேற்
றைத் தருகவென்றிரக்கக்காட்சித்து, மீளவும் அச்சோதியிற்பிறப்பில்மறைந்

தார். பின்பு அவ்வனல் வடிவமாறி, ஒருமலையுருக்கொண்டு யாவருங்கண்டு
தொழநின்றது. யாங்கள் தாபித்த சிவக்குறியினை அவ்விரவில் வழிபட்டு எங்க
ளுலகங்களைச்சேர்ந்தோம்; அது சிவன்ராத்திரியெனச் சொல்லப்படும். அவ்
விரதத்தினை அளவற்றவர் அநுஷ்டித்து இம்மைமறுமைப்போகங்களைப் பெற்று
வருகின்றனர், ஆதலால் அவர்குணாதிசயங்களைப் போற்றிப் பூசியாதவரல்
லது பேதையர் உலகின்கண் யாவரிருக்கின்றார்கள், அவரருளிருந்தமையால்
மையல்நீங்கி அறிவுவிளங்கப்பெற்றாய். தாய்தந்தைகுருதெய்வமுதலாயினோர்
அவராகநினைந்து தவஞ்செய்து பேரின்பத்தைப் பெறக்கடவாயென்று தக்க
னுக்குப்போதித்துப் பிரமன் தன்பதியைச்சேர்ந்தான்.

அடிமுடிதேடுபடலம்
முற்றிற்று.

தக்கன்சிவபூசைசெய்படலம்.

மருமலரயனிவைவகுப்பநாடியே
புரிகுவனீதெனப்புகன்றுதாதைதாள்
பரிவொடுசிறுவிதிபணிந்துகாசியார்
திருநகரதனிடைச்சேறன்மேயினான்.

அதன்பின்பு தக்கன்பிதாவானவர் அருளிச்செய்தபடியே தவஞ்செய்யக்
கருதி, காசிநகரத்தைச்சேர்ந்து, கங்கைக்கரையில் ஆலயமொன்றுண்டாக்கி,
உருவாய் அருவாய் அருவுருவாய் அமலமாய்ப் பரப்பிரமசொரூபமாய் விளங்
கும் சிவலிங்கத்தைத்தாபித்து, வேதாகமவிதிப்படிக்கு ஆயிரவருடம் அருச்
சித்து பின்பு கர்த்தன் இரங்கி வெள்விடையின்மீது பார்வதிசமேதரா யெழுந்
தருளக்கண்டு, மும்முறைவணங்கித்துதித்து, சுவாமி! பேதையேன் செல்வப்
பெருக்கினாழ்ந்து தேவரீரைவெறுத்து அளவற்ற பாதகங்களைத் தேடிக்கொண்
டேன். அவைகளைநீக்கி உமது அடியாரிற்சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று
போற்ற அவ்வாறே சிவபிரான் கணத்தலைமையளித்து மறைந்தனர். இறைவ
னனுக்கிரகத்தினால் தக்கன் புனிதனாகியும் நந்திதேவர் சாபத்துக் கழிவில்
லாமல் ஆட்டுத்தலையினையும் பெற்றான். அந்தத் தக்கன் யாகத்திற்சேர்ந்திரு
ந்த விஷ்ணு, பிரமேந்திராதியருக்குநல்லறிவுபிறந்து தங்களுக்கு வசதியாயுள்ள
இடங்களில் பரமேஸ்வரனைப் பிரதிஷ்டைபண்ணிப்பூசித்து வீரபத்திரராலும்
சிவகணங்களாலும் உண்டாகியதுன்பங்களையொழித்து வேண்டியபேறுகளைப்
பெற்றுத் தங்களுலகத்திற்குப் போனார்கள். மற்றவர்களும் சிவபெருமானு
டைய திருவருளினால் உயிர்பெற்றெழுந்து, தங்கள்தங்களிடத்திற்குப்போனார்
கள். அப்பால் இந்திரகுமாரனாகிய சயந்தமகாராஜனே! கொடியவனாகிய தக்
கனுடைய யாகத்திற்சேர்ந்திருந்ததினாலேதான் இவர்களெல்லாரும் சூரபதும
னாதியரால் துன்பமனுபவிக்கவேண்டிவந்ததென்று தேவகுருவாகிய பிருகஸ்
பதிபகவான்சொல்ல, அதனைக்கேட்ட சயந்தன் தான்கொண்டிருந்த சந்தே
கத்தையொழித்து அவ்விண்ணுலகத்தை அரசியற்றிவரும்போது ஆசிரியன்
போதனைக்குட்பட்டு அந்தப்புரத்தைச்சேர்ந்து சுரதலீலைகளைச்செய்து களித்

திருந்த தேவேந்திரன் ஒருபரியாயமாகப் போகத்தினிடத்தில் திருப்திபெற்றவனுய் அரிதில் அந்தப்புரத்தைக்கடந்து வெளிவந்து திரிலோகசாம்பிராச்சியச்சின்னங்களைப் பல்லாயிரந்தேவர்கள் சூழ்ந்து செய்துவரத்தக்கதாக வீரசிங்கத்தைப்போலக் கம்பீரமாய்ச் சித்திரவிசித்திரங்களாக அலங்கரித்திருக்கின்ற மகாசபையினிடத்தில்வந்து, குலகுருவை மும்முறைவலம்வந்து சேவித்துக் கரங்களைக்கூப்பிநின்றவனுய் இதனைவிண்ணப்பஞ்செய்வதாயினன். ஆசிரியனே! அடியேனிடத்திற் கிருபையுற்றுப்போதித்த பேரின்பத்துக்குரிய காரணங்களைத் திருஷ்டாந்தமாக அனுபவித்து மனமுந்தேகமு மொன்றுபடப் பேரின்பவாரியிற்றிளைத்து மகிழ்ந்திருந்தேன். இதைத்தவிர வேறொருமோட்சசாதகமுண்டெனப்பேசுவது பேதைமைப்பாலதன்றி, விவேக சம்பன்னருக்கடாதெனை மன்மதசாத்திரத்தின் பெருமைகளையும் அதினுற்கிடைத்த சுரதவின்பலங்களையும் முக்கியமாகப்பேசிக்கொண்டு பழையபடியே இந்திரசபையில்விளங்கும் சிங்காதனத்தில்வீற்றிருந்து இருஷிகள்முதலியோர் மங்களாசீர்வாதங்களைச்செய்து போற்றிவரவுந் தேவர்கள் வணங்கவும் அரசுசெலுத்திக்கொண்டிருந்தனன்.

தக்கன்சிவபூசைசெய்படலம்
முற்றிற்று.

முசுகுந்தன்கந்தவிரதப்படலம்.

உரைசெறிமகவான்செம்மலும்பரிலிருப்பவிம்பர்
முரசெறிதானைவேந்தன்முசுகுந்தனென்னும்வள்ளல்
விரைசெறிதிபத்தண்டார்வேலவன்விரதம்போற்றித்
திரைசெறிகடற்பாராண்டசெயன்முறையிளம்பலுற்றும்.

வாரீர் நைமிசாரணியவாசிகளே யிவ்விதமாகப் பாலசுப்பிரமணியக் கடவுளினது கடாட்சவீட்சணியத்தினுல் திரிலோகாதிபத்தியத்துக்குரிய பட்டாபிஷேகத்தைப்பெற்றுக்கொண்ட இந்திரன் தெய்வலோகத்தில் விளங்கும் மகாசபையில் இரத்தினமயமாகியசிங்காதனத்தின்கண்வீற்றிருந்து அரசுரிமைகளை நடாத்திவருகின்ற காலத்திற் கடல்சூழ்ந்த பூவட்டத்தை ஒற்றைக்குடைக்கீழ்ப்படுத்தி பணபேரி ஜயபேரி வெற்றிச்சங்கமுழக்கமறாத பராக்கிரமசாலிகளாகிய இரதகஜதுரகபதாதியென்னும்நால்வகைச்சேனைப் பெருக்கைப்படைத்துச்சத்துருக்களுக்குப் பேரிடிபோல விருக்கின்ற முசுகுந்த சக்கரவர்த்தியானவன் பரிமளமிகுந்த கடப்பமலர்மாலைபுரளும் பன்னிருபுயாசலங்களையுடைய பாலசுப்பிரமணிய தேவருக்குரிய சிறந்தவிரதங்களை யனுஷ்டித்து மிகுந்தபத்திவயிராக்கியங்களுடன் அதற்கடுத்த பூசனைவழிபாடுகளிற் குறைவின்றி, சகல சம்பிரமங்களுடன் நடாத்திவரு நாளில், தன்னரசாட்சிக்குட்பட்ட நாடுநகரங்களில் வாசமாயிருக்கின்றயாவரையும் அவ்விரதங்களையேசெய்துவரக்கட்டளையிட்டுஅவர்களுக்குவேண்டும்செல்வங்களையுந்தந்து அலைகளைமோதிச்சுருட்டும் சமுத்திரத்தை ஆடையாகத்தரித்திருக்கும் பூமண்டலமுழுதும்செங்கோல்செலுத்திவரும் பதக்கிரமங்களையும் நீதியையும் மற்றுமுள்ள சத்கருமங்களையும்

எம்மால்கூடியமட்டும் சொல்லக்கேளுங்களென்று சூதபுராணிகர் சொல்லுவதாயினர். மஹாிஷிகளே ! முசுகுந்தச் சக்கிரவர்த்தியானவன் தன்னதிகாரத்திலடங்கியிருக்கின்ற பிராணிகளுக்கு யாதோரிடையூறுகளும் நேராமல் தன் பிராணனைப்போலப் பாதுகாத்தாண்டுவரும் நீதியினாலும் வேதப்பிராமணர் ஆகமவிதிப்படி யாகாதிகளை நடத்திவரும்நாளில் மேம்பாட்டினாலும் தன்கணவனைத் தெய்வமாகப் பாவித்துப் பூசித்துவரும் மங்கையர் கற்புத்தன்மையினாலும் மாதந்தோறும் மும்மாரிகுறைவறப் பெய்கின்றதால் குடிவளம் நிலவளம் நீர்வளமிகுத்துச் சகலசம்பத்துகளும் பெருத்துப் பயிர்தழைத்தோங்கிக் குவித்திருக்கின்ற பண்டங்களில் ஆறிலொரு கடமையைக்கொண்டு அவற்றினால் நந்தவனங்கள் சோலைகள் குளங்கள் தண்ணீர்ப்பந்தல் அன்னசாலைகள் ஆதுலருக் கிருப்பிடமுதலிய உபசாரங்களைச் செய்வித்துப் பலதேவாலயங்களைக்கட்டிவைத்துச்சர்வலோகநாயகனாகிய சிவக்கொழுந்தைத்தாபித்து அவற்றிற்குவேண்டும் உபகரணங்களை வரன்முறையேநிரப்பி நித்தியக்கட்டளை பஞ்சபருவம் பிரமோச்சவகாலங்களில் தேவர்களும்காணும்படியாக சகலவுபசாரங்களுடன் முடிப்பித்துத் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனங்களைச் செய்து தருமமானது நான்குபாதங்களினும் நடக்கத்தக்கதாகச் செங்கோன்மைப்படி அரசுரிமைகளை நடத்தி மனவெழுச்சியுடனிருந்தான், அவ்வாறிருக்குநாட்களிலொருதினம் மாடமாளிகை கூடகோபுரங்கள்முதலிய சிறப்புகளைக்கொண்டு குபேரன்பதத்தினும்சிறந்திருக்கும் பட்டணத்தைக்கடந்து இரதாரூடனாய் மந்திரிபிரதானிகள் சேனைத்தலைவர் முதலானவர்கள் சூழ்ந்துபோற்ற வெற்றிவீரராகிய சேனைவெள்ளமானது ஆரவாரித்துத்தொடரவும் பதினெண்வாத்தியங்களும் திசைகளதிரத்தக்கதாக முழங்கவும் மற்ற ராஜேவாலக்கத்துடன் வனத்திற்சென்று தவசிரேஷ்டராகிய வசிஷ்டர் வாசஞ்செய்திருக்கும் பன்னகசாலையைச்சேர்ந்து தேரைவிட்டிறங்கி மிருந்தபயபத்தி விசுவாசங்களுடன் மும்முறைவலம்வந்து பணிந்தெழுந்து கரங்களைக் கூப்பிக்கொண்டு போற்றி இதனை விண்ணப்பஞ்செய்வதாயினன். தபோநிதியே கேட்டருள்க. தேவதேவோத்தமனாகிய கந்தசுவாமியாருக்குரிய விரதமான்மியங்களனைத்தையும் முறைப்படியாக அடியேனிடத்திற் கிருபையுற்றுப் போதிக்கவேண்டுமென்று பலவாறு வேண்டுகின்ற முசுகுந்த சக்கரவர்த்தியினது கோரிக்கையைக் கேட்டமாத்திரத்தில் உள்ளமுந்தேகமும்பூரித்து மயிர்சிலிர்க்கவிழிகளில் ஆனந்தவாரியைப்பெருக்கி அரசனைத்தர்ப்பாசனத்தி லிருக்கச்செய்து மங்களாசீர்வாதங்களைச்செய்து மன்னர்மன்னனே ! உன்மனோபீஷ்டப்படியே சரவணபவனைப்பூசித்து வழிவடும் விரதங்களனைத்தையும் சாங்கோபாங்கமாகப் போதிக்கின்றனம், ஒருமைப்பட்ட மனத்துடன்பத்தியாய்க் கேட்கக்கடவையென்றருளிச்செய்வதாயினர். அதிக மேம்பாட்டையுடைய வாரங்களேழினுஞ் சிறந்தோங்கியிருக்கும் சுக்கிரவாரத்திற் பொன்னுலகத்தைத்திருத்தி இந்திரனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்தருளிய பாலசுப்பிரமணிய மூர்த்திக்குச்செய்ய வல்ல விரதமொன்றுண்டு, அதனை ஆகமமுறைப்படி வழுவின்றிமுடித்த புண்ணியவான்கள் மனோபீஷ்டங்களைக் கந்தசுவாமியார் தந்தருளி இம்மையில் அனுப

விக்கத்தக்க போகபோக்கியங்களைப் பெறச்செய்து கற்புக்கரசியாகிய பத்தினியையும் சுபுத்திரர்முதலிய வளங்களனைத்தினையும் கடாட்சித்து மறுமையில் மோட்ச சாம்பிராச்சியத்தையும் பெற்று வாழச்செய்வர், அதற்குத்திஷ்டாந்தமாக முன்னோர்கள் சரித்திரங்களைச் சொல்லக்கேட்பாயாக, பூருவத்திற்சூரியன் மரபிற்றோன்றி இத்தப்பூமண்டலத்தை ஒருகுடைநிழலிற்பரிபாலனஞ்செய்துவந்த பகீரதமகாராசனைப்பகைத்து நிகரற்ற புஜபல பராக்கிரமசாலியாகிய கோரனென்னும்அவுணராஜன் பலாத்காரமாய் அவன் இராச்சியமுழுவதையும் அபகரித்துக்கொண்டபோது பதியையுஞ் செல்வவளங்களையுமிழந்து தீனனாய் மனைவியையும் பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு கானகத்திலோடி அன்னபானாதிகள்கிடையாமல் அலைந்துதிரிந்துகடைசியில் புகரென்னுந் தவசிரேஷ்டரைத்தரிசித்துப் பயபத்திவிசுவாசத்துடன் அவன் பாதாரவிந்தங்களிற் றீர்க்கதண்டன்செய்து கரங்களைக்கூப்பிக்கொண்டு பலவாறாகப் புகழ்ந்துபோற்றித் தனக்குச்சம்பவித்திருக்கின்ற குறைபாடுகளை முற்றும் விண்ணப்பஞ்செய்து சுவாமிகளே! இதற்கொரு மார்க்கத்தைக்காட்டியாளக் கடவீரெனப் பரிபவப்பட்டுவேண்டினேன். அப்போது பார்க்கவனென்னும் ஆசிரியர் தன்னையடைந்த அரசன்முறைகளைத் திருச்செவிகளிலேற்றுமனமிரங்கி இதனைப்போதிப்பதாயினர். மன்னவரேறே! பயப்படவேண்டாம் வெற்றிவேலாயுதபாணியாகியமுருகவேளுக்குப்பிரியமாகவிருக்கின்ற சுக்கிரவாரவிரதத்தைச்சாத்திரோத்தமாய்ப் பத்திவைராக்கியத்துடன் மூன்றுவருஷகாலம் செய்துமுடிப்பையாகில் உன் செல்வங்களைப்பறித்துக்கொண்டு அலைந்துத் துரத்தியமூர்க்கனாகிய அவுணராசன்மாண்டுபோவதற் கையமேயில்லை. பின்பு பழையபடியாகப் பூமண்டலமுழுமையும் பரிபாலனஞ்செய்து சகலசெல்வங்களையும் மேன்மேலும் அநுபவித்துச்சவுக்கியத்தி லிருப்பையென்று அநுக்கிரகஞ்செய்த வாக்கியங்களைச் செவிகளுக்கமுத தாரையைப்போலக்கேட்டு மனமுந் தேகமுங்குளிர்ந்தவனாய்! அடியேனிஷ்ட தெய்வத்தைப்போல வெழுந்தருளியிருக்கின்ற தவசிரேஷ்டரே! நல்லமார்க்கத்தைக் காட்டினீர், கட்டளையின்படியே செய்யக்கடவேனெனச்சம்மதித்து, அவரைவேண்டிப் புரோகிதனாகவைத்துக்கொண்டு அடுத்த வியாழக்கிழமை விடியற்காலத்தெழுந்து சுத்தோதகத்திலமுழுகிக் காலைக்கடன்களை முடித்துக்கொண்டுதானுந்தேவியுமாய் ஒருபோது பகற்காலத்திற் கிடைத்த உண்டியையுண்டு சத்காலக்ஷேபங்களைச்செய்து போதுபோனபின்பு உறக்கத்தை நீக்கிப் பாலசுப்பிரமணிய தேவரைத் தியானித்து அவருக்குரிய சகஸ்திரநாமங்களையோதியோதி இரவைக்கழித்து மறுதினம்சுக்கிரவாரம் விடியற்காலத்தெழுந்து நித்தியகருமங்களை முடித்துக்கொண்டவனாய்த் தருப்பைகளைத் தேடிக்கொய்துவந்துசேர்த்த பாயலினிடத்திற் சுப்பிரமணியக்கடவுளினது கோலத்தைப் பிரதிஷ்டைசெய்து ஆகமவிதிப்படியே திருமஞ்சனமாட்டி மலராடையைச்சாத்திப் புனுகுசவ்வாதுகஸ்தூரியினாற்செய்த கலவைச்சாந்து பூசிக் கனிவகைகளைப் படைத்துத் தூபதீபங்களால் அருச்சித்து, சோடசவுபசாரங்களையும் கிரமமாகச்செய்துமுடிந்த பின்பு உபவாசமாயிருந்து கந்தமூர்த்தியினது சரித்திரங்களைக்கேட்டு இரவுமுற்றும துயிலொழிந்து மறுநாளுதையத்

தில் நீசிற்படிந்து முருகனைப்போற்றி வணங்கியபின்பு பாரணைசெய்து அப்பகல் விழிகண்மூடாமற் குகப்பிரானை வழிபட்டும், இவ்விதமாக ஆசிரியன் பணித்தபடியேமூன்றுவருஷவரையில் விரதபங்கமில்லாமல்நடாத்தி முற்றியகாலத்தில் சண்முகப்பெருமாள் அவன் பூசனைக்கிரமங்களுக்கிரங்கிக்கிருபாநோக்கத்தைப் பாலித்தமாத்திரத்தில் திருக்கரத்திற் கோடிசூரியப்பிரகாசமாகச் சொலித்துக் கொண்டிருந்த வெற்றிவேலாயுதமானது சரேலென்றெழுந்து அதிகவொளியைக்காட்டிச் சூரியப்பிரகாசத்தைமாற்றி மனோவேகத்தினும் கடுகிவந்துகொடிய பாதகனாகிய பகைவன் மார்பைப்பிளந்து உயிரையுண்டு நிலத்திற்கிடத்திக் கந்தமூர்த்தியிடத்திற் சேர்ந்தது. இதனைப் பகீரதன்தெரிந்தவுடன் வேலாயுதத்தைப்போற்றிச் சரவணபவனைத் தியானித்துப் பலதரம் நிலத்தில்விழுந்து எழுந்து அவன்குணாதிசயங்களைக் கொண்டாடினவனாய்ப் புரோகிதனாகி யமைந்த பார்க்கவன் திருவடிகளில் வணங்கிச் சுவாமிகளே! தேவரீர் கருணைகடாட்சத்தினால் சகலதுன்பங்களும் நீங்கிப் பழையவாழ்வே கிடைக்கப்பெற்றேனென்று பற்பல வுபசாரங்களைப்பேசி அவர் ஆசிகளையும் விடையையும் பெற்றுத் தன்பட்டணத்தைச் சேர்ந்து முன்போல் தன் அரசுரிமைகளைச்செய்து செழித்திருந்து பின்பு அந்தியத்திற்கிடைத்தற்கரிய சாயுச்சிய பதவிக்குப் பாத்திரனாய்ச் சுகாதீதச்செல்வத்தை யனுபவித்திருந்தான்.

அதுபோல சண்முகன் விஷயமாக மற்றோர் விரதமுண்டு; அதனையும் சொல்லக்கேட்பையாக, ஸ்ரீமகாவிஷ்ணுவினது உந்திக்கமலத்தி லுதித்திருக்கின்ற பிரமபுத்திரனாகிய நாரதமகாமுனிவரானவர் சிறந்தவிரதங்களைச்செய்து சத்தரிஷிகளில முதன்மையாகப் புகழத்தக்க பேற்றையும் மேம்பாட்டையும் பெறவெண்ணி வேதாகமசாத்திரங்களைச் சமபூரணமாக ஓதியுணர்ந்த அவ்விருடியானவர் பார்ப்பதிபார்மூத்த பிள்ளையாகிய விநாயகமூர்த்தியைத் திருமஞ்சனமுதலிய சோடசோபசாரங்களினால் ஆராதித்துத் தரிசிக்கப் பெற்றவனாய்ப் பாதாரவிந்தங்களிற்றொழுதேத்திக் கருணாகரனே? யாவராலும் புகழவிருக்கின்ற சப்தமுனிவர்களில் முதன்மைப்பேற்றைப்பெற்று வாழத்தக்க சிறப்பைத் தரவல்ல விரதமொன்றினை அடியேனுக்குப் போதிக்கவேண்டுமென்று பலவாறாகப் போற்றுதலைக் கமலக்கண்ணன் மருகன்கேட்டருளிக் கிருபையாகப் பார்த்து உன் மனோபீஷ்டப்படியே கிடைக்கச்செய்யத்தக்க நோன்பு ஒன்றிருக்கின்றது; அஃதென்னையெனில் எனக்கு இளையோனாகிய சண்முகப் பெருமாளுக்கு விருப்பமாகிய கார்த்திகைமாதத்தில் வரும் கார்த்திகை விரதத்தையனுசரித்து ஆகமவிதிப்படியாகப் பன்னிருவருடம் திடசித்தனாய்முடிப்பாயாகில் உன்னெண்ணங் கைகூடுமென் றனுக்கிரகித்தகாலையில் இறைவன் கட்டளையின்படியே செய்யக்கடவேனெனப்பணிந்துவிடைபெற்று நாரதமுனிவர் பூமண்டலவெல்லையில்வந்து ஒரு சிறந்ததலத்தைச்சேர்ந்து பரணியினன்று உதயகாலத்தெழுந்து நித்தியகருமங்களை முடித்துக்கொண்டு பரிசுத்தனாய் ஒருபோதுண்டு, குமரன் கதைகளைப் பாராயணஞ்செய்து அத்தினம்கழித்துக் கார்த்திகைநாளுதயத்தில் பவித்திரமாகிய கங்கையில்முழுகி வெள்ளாடையையுடுத்துச்சித்தசங்கற்பத்தைக்கவலித்து வெற்றிவேலாயுதமூர்த்தியினதுபூசனை

வழிபாடுகளைச் செய்யத்தொடங்கி ஐம்புலன்களையடக்கி ஆசிரியன் திருவடிகளை மனப்பூருவகமாகச் சிந்தித்துவந்தனுதிகளை முடித்தபின்பு தருப்பாசனத்திருந்து பாலசுப்பிரமணியன் வடிவினை ஸ்தாபித்துக் கங்காசலத்தினால் திருமஞ்சனமாட்டிப் பட்டாடையையுடுத்துப்பரிமளமிகுந்த திவ்விய புஷ்பமாலைகளைச்சூடிச்சந்தனக் கலவையைப்பூசித் தூபதீப நைவேத்தியமுதலியசோடசோபசாரங்களையும் கிரமப்படியே முடித்தவராய்க் குமாரதேவன் திருவிளையாடல்களடங்கியிருக்கும் புராணகாலக்ஷேபஞ்செய்து மனமுருகி உள்ளங்கை தீர்த்தத்தைப்புசித்து இவ்விதமாகப்பகற்போதைக்கழித்து இரவுநேர்ந்தகாலத்தில் தருப்பையைப்பரப்பி அதனிடத்திருந்து புஷ்பக்கொம்பையொத்த சாயலையுடைய மங்கையரைக் கனவிலும் நினையாமல் யமனைப்போல மதித்துச் சிவகுமாரன் பாதாரவிந்தங்களை இதயகமலத்திருத்தித்தியானித்து உறக்கமின்றிக்கழித்து அடுத்த உரோகணித்தினங்காலைப் புனலாடி நியமங்களைச்செய்துகொண்டு கந்தனைப்பூசித்துத் தண்டை சதங்கையணிந்திருக்கும் திருவடிகளில் வணங்கிப்போற்றி அக்காலத்திற் சேர்ந்திருக்கின்ற தவசிரேஷ்டர்களைக் கடவுளாகப்பாவித்துச் சமபந்தியிலிருத்திப் பாரணைசெய்து அப்பகலுறங்கினால் ஒருகாரணமுமில்லாமல் வேதபாராயணராகியபிராமணோத்தமர் நூறுபேரைக் கொன்ற,மகாபாதகம் நேருமாதலால் மிகுந்தபயத்துடன் சகலகலைகளினும் வல்லவனாகிய நாரதமுனியானவர் இமையைக்கொட்டாமல் சாக்கிரதையாய் விழித்திருந்து புராணங்களை வாசித்துப் புண்ணியபுராணாகிய கேள்விகளை வினவியும் இவ்விதமாகச் சூரியன் மேற்றிசையில் மறைகின்ற பரியந்த காலத்தைக்கழித்துச் சந்தியானுஷ்டானங்களை முடித்துப் பாலசுப்பிரமணிய மூ ருக்கு மற்ற பூசைகளையும் நடத்தினர், இவ்வாறு நாரதர் நடாத்திய பூசாவிதிகளின் கிரமங்களைச் சண்முகப்பெருமானை யறிவதல்லது ஒருவரால புகழ்ந்து முடிவதன்று, மேற்குறித்தபடி யாதொரு குறைபாடுமில்லாமல் பன்னிரண்டாண்டு வரையிலும் பத்திவயிராக்கியத்துடன் செய்துவருகையில சரவணபவன் காட்சிதந்து பரிபூரணகடாட்சத்தை பாலித்தவாற சத்தமுனிவர்களினும் முத்திப்பேசிக்கொண்டாடத் தக்க மேலானபதத்தைப்பெற்று இதுபரியந்தம் யாவராலும் பூசிக்க வாழ்கின்றனன். இதன்றியும அந்த மகத்துவமுள்ள விரதத்தைச் சதுர்வேதபண்டிதனுமிருக்கின்ற பிராமணனொருவன் ஆகமவிதிப்படியாகப் பூசனைவழிபாடுகளிற் சற்றுந்தாழ்வுநேராமல் வயிராக்கியங்கொண்டு பலநாட்கள் முடித்துவருகின்றகாலையில் பாலசுப்பிரமணியர் கிருபாகடாட்சவீட்சண்ணியத்தினால் அப்பிறவியை யொழித்துச் சூரியன்மரபில் மனுச்சக்கரவர்த்தியாய் அவதரித்துக் கடல்சூழ்ந்த பூமண்டலமுழுதும் ஒருகுடைநிழலிலாளப்பெற்றுச் சகலசவுக்கியங்களையும் அனுபவித்துத் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ்செய்து அரசருக்குரிய நீதிகளையும் மற்ற கிரமங்களையும் ஏற்பாடுபண்ணித் தன்பெயரால் மனுவின்ஞான சாஸ்திரமெனப்புகழ்ந்து சகல மதத்தினரும் அபேதமாயனுசரித்து நடந்துகொள்ள நாட்டி அளவற்ற காலம் செங்கோன்முறையை நடாத்தியிருந்து கடைசியிற் கயிலையங்கிரியைக் காணியாகப்பெற்றுச் சுகாதீதச்செல்வங்களை யனுபவித்து வருகின்றனன்.

மற்றொரு பிராமணோத்தமன் அந்தச் சிறந்த நோன்பைச்சாத்திரோத்தமாகப் பலகாலஞ்செய்து சிவகுமாரன் திருவருளின்படி தன்மனத்திற் சிந்தித்தவாறே திரிசங்குமகாராசனைத் தோற்றிச் சகலகலைவல்லவனாய்ப் பகைவருக்கு வயிரியாகவிருந்து புலியும் பசுவும் ஒருதடாகத்தில்நீரருந்தும்படியாகச் செங்கோன்மை முறைப்படிக்கு அரசாட்சியைச்செலுத்தி சொல்லுதற்கரிய போகபோக்கியங்களை யனுபவித்துச் சத்தியவாசக அரிச்சந்திரனென எக்காலத்திலுங் கொண்டாடவல்ல கீர்த்திபானுல் ஒப்பற்ற பராக்கிரமசாலியாய் ஜீவகாருண்ணியத்தை முக்கியமாக வகித்துவரும்மேம்பாட்டையுடைய பிள்ளையைப்பெற்றுப் பூமண்டலத்துக்குச் சக்கரவர்த்தியாக மகுடாபிஷேகத்தைச் செய்துவிட்டு மோட்சவீட்டைப்பெற்றுச் சவுக்கியமாக விருக்கின்றனன், இதுவுமல்லாமல் மற்றொருமன்னனும் வேடனும் இவ்விரதத்தைமுறையே பலகாலம் செய்துவந்த சிறப்பினால் சரவணபவன் அனுக்கிரகப்படியே அவ்வுடல்களையொழித்து புசபலபராக்கிரமசாலிகளாகிய அந்திமான் சந்திமானென்னு மிராசகுமாரர்களாக ஜனித்துப் பிரமுகராய்க் கடல்சூழ்ந்த பூமண்டலமுற்றினும் ஆக்கினைசக்கரத்தைச்செலுத்தித் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ்செய்து தருமசீலரெனப் பலராலும்புகழவாழ்ந்திருந்தனர். அவர்களுக்கு மோட்சசாம்பிராச்சியங் கிடைத்ததென்பதைச் சொல்லவும் வேண்டுமோ! மன்னவர் பெருமானே! முற்குறித்தபடியே கார்த்திகைத் திருநட்சத்திரத்தில் இந்த மகிமையுள்ள நோன்பைப்பயபத்தி வயிராக்கியங்களுடன் கிரமமாய்நடாத்தி இம்மைமறுமைச் செல்வவளங்களையும் திரிலோகங்களினுமிராகின்ற பொருள்களையு மனோபீஷ்டப்படியே பெற்றுச் சவுக்கியப்பட்ட புண்ணிய சீலரைக் கணக்கிட்டுப் பிரமனாலும் சொல்லிமுடியுமோ.

இஃதன்றியும் ஒப்பற்ற மற்றொரு விரதமிருக்கின்றது அதனையும் வரன்முறைப்படிக்குக் கேட்பையாக பூருவத்தில் முப்பத்துமுக்கோடிதேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் மற்ற விண்ணுடருமட பகைவராலும் இன்னமுமிருக்கின்ற விடையூறுகளினாலும் தங்களுக்குச் சம்பவித்திருக்கின்ற துக்கவருக்கங்களை நிவாரணஞ்செய்துகொண்டு சலனமற்றிருக்கும்படியாக நினைவுகொண்டவர்களாய்ச் சகலரும்சேர்ந்து மனோவதி பட்டணத்துக்குப் போய்த் தவசிரேஷ்டர் கூடியிருக்கும் சபையில் நவரத்தினமயமாகிய சிங்காசனத்தில் வீற்றிருந்து வாழ்த்தையாடிக்கொண்டிருந்த பிரமதேவனைத் தரிசித்துத் திருவடிகளில் வணங்கிக்கரங்களைக் கூப்பிநின்று பலவிதங்களிற்போற்றிய பின்பு தங்கள் மனக்குறைகளை முறையிட்டவர்களாய்க் கர்த்தனே இதற்கொரு நிவாரணத்தை போதித்தாளவேண்டுமென்றுஇரந்த காலையில் தாமரைமலர் வாசியாகிய பிரமன் அவர்களிடத்திற் பரிவாய்ப் பயப்படாதீர்களெனக் கையமைத்து ஆதரித்துச் சற்றுநேரம் யோசித்து தேவர்களே உங்கள் சஞ்சலங்களைப்போக்கிச் சவுக்கியப்படச் செய்யவல்ல கந்தசஷ்டி விரதமொன்றுண்டு அதனை நீங்களனைவரும் பத்திபூருவகமாகத் தொடங்கி முடிப்பீராகில் நினைந்த சித்திகளனைத்தையும் பெற்று வாழ்வீர்களெனப்பேசி அதற்குரிய விதிகளையும் தெருட்டிச் செலவுகொடுக்கப் பெற்றவர்களாய் வெளிவந்து ஒரு

பவித்திரமாகிய தலத்தைச்சேர்ந்து பூசாவிதிகளுக்குவேண்டும் வஸ்துக்களை ஏராளமாகச் சேகரித்துக் கொண்டவுடன் ஐப்பசிமாத சுக்கிலபட்சத்தின்பிரதமைதொடங்கிச் சஷ்டிவரையில் ஆறுதினங்களிலும் கொடிய பாதகனாகிய தாருகாசுரனையும் மாயையிற்சிறந்த கிரவுஞ்ச பருவதத்தையும் போரில் வெற்றிவேலினாற் பிளந்துவாட்டிய பாலசுப்பிரமணியக்கடவுளை ஆராதிக்க எத்தனப்பட்டவர்களாய் முதற்றினத்தொட்டுப் பிராதகாலத்தெழுந்து கங்காஸ்நானஞ்செய்து பவித்திரமாகிய பட்டாடைகளையுடுத்து மேற்போர்வை சாத்திச் சந்தியாவந்தன ஜபதபங்கள்முதலிய நித்தியகருமங்களை முடித்துக்கொண்டபின்பு பூரணகலசத்தைச் சுத்திசெய்து கங்காசலத்தை நிரப்பிக் கந்தபுட்ப அட்சதைகளைச்சேர்த்து மாவிலைக்கொத்தைஅதனிடத்திற்பொருத்தித்தருப்பையையவரன்முறைப்படியே முடிந்துசாத்திவேதங்களையோதித்தருப்பாசனத்தில்வைத்து மந்திரபூருவகமாகக் குமாரக்கடவுளை அதனிடத்தாவாகனஞ்செய்து ஆகமவிதிப்படியே திருமஞ்சன தூபதீபமுதலிய சோடசோபசாரங்களினாற் பூசனைவழிபாடுகளைப் பகற்போதிற் சோர்வையும் இரவில்நித்திரையையும்போக்கி ஆறுகாலங்களினும் குறைவறநிரப்பிக் கற்கண்டு சேர்த்துத் தேன் தினைமாவிற்சமைத்த வுருண்டை பாற்சோறு அதிரசம் சுண்டல்முதலிய பலகார வகைகளையும் மா பலா வாழையாதிய கனிவகைகளையும் கருப்பஞ்சாறு மற்றுமுள்ள சிறந்த வஸ்துக்களையுங் காலங்கள்தோறும் நிவேதித்துக் கற்பூரதாம்பூலம் சந்தனத்தேய்வை புஷ்பாரங்கள் மிகுதியாகச் சமர்ப்பித்து இவ்விதங்களிற் றிருத்திசெய்த பின்பு தேவதேவோத்தமனாகிய சரவணபவன் திருச்சரித்திரங்களைக் கேட்டு மனமகிழ்ந்து ஒருகைதீர்த்த மருந்தி உபவாசமாகவிருந்து இவ்வாறு சஷ்டிதினங்களைக்கழித்து ஏழாநாள் காலையிலெழுந்து பரிசுத்தராய் முருகப்பெருமானுக்கு மனமகிழும்படியாகப் பூசாக்கிரமங்களிற் சற்றும் பிசகில்லாமற்செய்து முற்றியவுடன்நேர்ந்த அதிதிகளைப்பூசித்து அவர்களுடன்கலந்து பாரணையுண்டு இவ்விதங்களாக வருஷந்தோறும் நடாத்திவருகின்றகாலத்தில் ஸ்ரீகந்தசுவாமிக்கு மிகவும் உவப்பாய்க் கடாட்சித்தபடியே அவுணர் வலிதிற்பற்றிக்கொண்ட தங்கள் பதவிகளையும் மற்ற சிறப்புகளனைத்தையும்பெற்று மனவெழுச்சியுடன் இதுபரியந்தம் அனுபவித்துவருகின்றனர். இதுவுமல்லாமல் நோன்புகளில் விசேஷமாகவிருக்கின்ற இந்த விரதத்தை மனப்பூருவகமாக விதிப்படியே நிரப்பி இறைவன் கிருபாநோக்கத்தைப்பெற்று இம்மைமறுமைச்செல்வங்களை யனுபவித்துக் கடையில் மோட்சசாம்பிராச்சியத்தைப் பெற்றவர்களை யெண்ணிமுடிவதன்று. இவ்விரதத்தைச் செய்யநினைந்த புண்ணியவான்களும் மனோபீஷ்டங்களைக் குறைவின்றி யனுபவித்தற் கையமேயில்லையென்று கந்தவிரதமான்மியங்களைச் சாங்கோபாங்கமாக வசிஷ்டர் போதித்த சரித்திரங்களை மனமொருமித்துக்கேட்ட முசுகுந்தசக்கரவர்த்தியானவர் தேகமும் மனமும்பூரித்து விழிகளில் ஆனந்தவாரி பெருக்கெடுத்தோட இதனை விண்ணப்பஞ்செய்வதாயினர். எமது குலகுரவனே தேவரீர் அடியேனிடத்திற் பரிபூரணகடாட்சத்தினால் நன்னெறிகளைத் தாவல்லசிறந்த விரதங்களை யனுக்கிரகித்தீர், இவற்றினைக்கேட்டுக் கிரு

தார்த்தனானேன். சுவாமிகள் நியமனப்படியே மேற்குறித்தநோன்புகளைப் பக்குவமாகச்செய்யக்கடவேனென்று ஆசிரியனைவணங்கிப்போற்றி, பலஆசிகளையும் விடையும்பெற்று இராதாருடனாய் மந்திரிபிரதானிகள் சதுரங்கசேனைகள் சூழ்ந்துவர வனத்தைக்கடந்து ஒப்புவமையற்ற தன்பட்டணத்தைச்சேர்ந்து செங்கோன்மைமுறையேமன்னுயிரைப்பாதுகாத்து விரதகாலம்நேர்ந்தபோது பாலசுப்பிரமணியர் நோன்புகளைத்தொடங்கி ஆகமவிதிப்படியாகத் தகுந்த புரோகிதரை யேற்படுத்திக்கொண்டு ஆறுதினங்களினும் பத்திவசத்தனாய்ப் பூசாவிதிகளிற் குறைவில்லாமல்முடித்து வேதப்பிராமணர் ஆதுலர்முதலானவர்களுக்குத் திரவியம் வஸ்திராபரணங்கள் கறவைப்பசுக்கள் விளைபுலங்கள் கன்னிகாதானமுதலிய சோடசமகாதானங்களையும் வேண்டியமட்டும்கொடுத்துச் சுற்றத்தினர் விருந்தினர்களுடனுண்டு மனமகிழ்ந்துவருவதன்றித் தன்குடை நிழலிற்பட்ட தேசாதேசங்களிலிருப்பவர்களனைவரும் இந்தவிரதத்தையே அன்புடன் செய்துவருவதாகக்கட்டளையிட்டு விருத்திசெய்வித்துவந்தான். இந்நாள்களிற்றனக்கு விருத்தமாக நடந்துகொள்பவரைத் தெரிந்தயாத்திரத்திற் சதுரங்கசேனைகளுடன் போனபோனவிடங்களெங்கும்அவர்களையடக்கி வெற்றிக்கொடியைநாட்டித் தன்னாணையாக்கினைகளைச் சமுத்திரஞ்சூழ்ந்த பூமண்டலமுற்றினும்நடாத்தி அரசுசெய்துவருகின்றகாலத்தில் வலாசுரனென்னும் அவுணராசன் கணக்கிறந்த இரதகஜதுரகபதாதிகளைக் கூட்டிக்கொண்டு போய்ப் பொன்னுலகத்தைவளைந்து முற்றுகைபோட்டு அனர்த்தங்களைச்செய்வதை இந்திரன்தெரிந்து அதிக வுக்கிரத்துடன் வடவானலத்தைப்போலச்சீறி யுத்தசன்னத்தனாய் வச்சிராயுதம் இந்திரதனுசு தேவப்படைகள்முதலிய ஆயுதங்களைக்கொண்டு அயிராவதத்தின்மேல் ஆரோகணித்து தேவசேனைகளைச் சேர்த்துக்கொண்டுபோ யெதிர்த்துச் சிலபோது கொடியயுத்தங்களைச்செய்து வருகையில் அவுணவீரர் அதிக்கிரமித்துக் கொடியபாணங்களினாலும் தண்டாயுதம் பிண்டிபாலம் கப்பணம் சக்கரம் எறிவேல் சூலம் கழுமுள் முதலிய ஆயுதங்களைக்கொண்டும் மிகவும் அசப்படுத்துகையில் விண்ணவர் நின்று போராடக் கூடாமையால் பலபங்கப்பட்டுத் திசைகெட்டோடி யொளித்தனர். அத்தருணத்தில் தேவராசன் மானமும்கோபமும் மனத்தைவாட்டச் சர்ப்பத்தைப்போலச் சீறித் தனுசைவளைத்து அநேக தீட்சண்யமுள்ள பாணங்கள் தேவாஸ்திரங்களைக்கொண்டு சாடியும் வச்சிராயுதத்தினால் சின்னபின்னப்படவாட்டியும் காலாந்தகனைப்போலத் திரிகின்றகாலையில் வெள்ளையானையும் அதிகதீரத்துடன் பருத்ததுதிக்கையினாலும் கால்களினாலும் கூரிய கோடுகளினாலும் மாய்க்கின்றகாலையில் பகைவன் சேனாசமுத்திரம் அல்லோலகல்லோலப்பட்டுப் பொன்மயமாகிய தேர்கள் சிதைந்தும் நீலகிரிகளையொப்பப் பாரித்த தேகங்களையுடைய மதயானைகளுருண்டும தத்தித்தாவும் வேகமுள்ள புரவிப்பந்திகள்பறந்தும் வீராவேசங்களுடன் சனியனைப்போலப் போராடியிருந்த அவுணப்பெருக்கு வறண்டும் இப்பாடுபடுங்காலையில் வலாசுரன் மிகுந்த கோபங்கொண்டு மண்டியெரிந்து தேரைத்துரத்திவந்து திரிலோகச்சக்கரேஸ்வரனைவளைந்து தனுசைவளைத்துத் திசைகளதிரக் குணத்

தொனிகாட்டிக் கொடிய தீட்சணியமுள்ள பாணவிதங்களைச் சோனைமழையைப்போலப்பொழிந்து திகைக்கும்படியாகப் பொருகின்றதனால் அயிராவதம் தேகமுற்றும் தொளையுண்டு உதிரம்பெருக்கெடுத்தோட மதிமயங்கியேங்கவும் அதன்மீதிருந்ததேவேந்திரன் அதிககாயப்பட்டுப்படைகளனைத்தையுமிழந்துந் தனியனாய் நின்றுகொண்டு இனியென்னசெய்வோம், நம்முடன்வந்தவர்களொருவரும் நில்லாமல் மறைந்தனர், எனக்கும் கைகால்களோய்ந்து களைமேலிடுகின்றதென்று பலபலவிதமாக வெண்ணி வேறுகதி காணாதவனாய்த் திகைப்பவனுக்குத் தெய்வக்கடாட்சத்தினா லொருநினைவுதோன்றிச் சற்றுத்தயிரியங்கொண்டு பக்கத்தில்நிற்கின்ற தூதனொருவனைப்பார்த்து நீ வாயுவேகத்தினுங் கடுகியோடிப் பூமண்டலத்தைப் பரிபாலனஞ்செய்துவரும் முசுகுந்தசக்கரவர்த்தியைக்கண்டு நான் பகைவன்கையி லகப்பட்டுக்கொண்டு வாடுகின்ற செய்தியைத்தெரிவித்துஇத்தருணத்திற்றயைசெய்துசேனைகளுடன்இவ்விடம் வந்து உதவிசெய்யவேண்டுமென்றும சற்றுத்தாமதிப்பீராகில் தெய்வலோகமும் நானும் சத்துருக்கள்வசப்பட்டுவருந்தவரும், அடியேனுக்குஇதனைச்செய்யாமற்செய்த வுதவியாக யோசித்துத்துரிதமாய்வரும்படிக்குடன்படுத்திச் சீக்கிரமாய் அழைத்துவாரக்கட்டளையிட்டவுடன்வணங்கி,அவன் காற்றினும்விரைந்துபறந்து, மண்ணுலகத்தைச்சேர்ந்து சக்கரவர்த்தியைத் தரிசித்துப்பணிந்து போற்றிவிண்ணாட்டிற் சம்பவித்த காரணங்களைச் சவிஸ்தாரமாகவிண்ணப்பஞ்செய்தவனாய் சக்கரவர்த்தியே! தேவராசன் உமதுவரவுக் கெதிர்பார்த்திருக்கின்றனன், காலஹரணஞ்செய்யாமல் இந்தக்ஷணத்திற்பிரயாணப்படவேண்டுமெனப்பேசிய தூதன்வார்த்தைகளைக் கேட்டமாத்திரத்தில் நல்லகாரியம் இதோ வந்துவிட்டேன்; இச்செய்தியை முந்திப்போய் உன்னிறைவனுக்கறிக்கையிடக்கடவாயென்று அனுப்பிவிட்டுப் பட்டத்தானையின்மேல் பிரயாணபேரியையேற்றிப் பறைசாற்றுவித்தவோசை செவிகளிற்பட்டவுடன் நால்வகைச் சைனியங்களும சர்வாயுதபாணிகளாய் ஆலகாலவிஷப் பெருக்கைப்போல வீராவேசங்களுடன் தங்கள்தலைவனைக்கலந்துவந்துகூடியவுடன் முசுகுந்தன் சொர்ணமயமாகிய இரதத்தில் ஆரோகணித்து ரணபேரி, ஜயபேரி, வெற்றிச்சங்கம், ஆகுளி, துந்தாரி, எக்காளம், வீரகண்டை முதலிய பொற்பறைகள்கணகணவென்று முழங்கிவரத்தக்கதாக நடுநாயகமாய்விளங்கி அதிவேகங்கொண்டு விண்ணாட்டைநோக்கிப்போக, ஜயசாலியாய்ச் சூரியசந்திரரும், இந்தப் பூமண்டலமுள்ளபரியந்தம் கீர்த்திப்பிரதாபத்தை நாட்டியிருக்கின்ற முசுகுந்தசக்கரவர்த்தியானவர் கவலைப்பட்ட மனத்தனாய்ச் சத்துருகையி லகப்பட்டுக்கொண்டிருக்கின்ற இந்திரனைக்கண்டுசேவித்து அவன்குறைபாடுகளை வினவிப் பயப்படவேண்டாமென்று பற்பலதயிரியங்களைச்சொல்லித் தேற்றினவனாய் அத்தருணத்தில் நேர்ந்த தேவசேனைக்கதிபனாய் தன்னுடன்வந்த ரதகஜதுரகபதாதிகளையுங்கூட்டிக்கொண்டு மான்கூட்டங்கள்மேல் சிங்கராசன் தாவுமாறுபோலக் கொடிய அவுணப்படைகளின்மீது கவிந்து சேனைகள் வீராவேசங்களுடன் அஸ்திரசஸ்திரங்களை அமோகமாகப்பொழிந்து பலதிசையிலுஞ்சூழ்ந்து போராடவும் தாமும்மந்தரத்தையொப்பப் பாரித்திருக்கும் தனுசைவளைத்து

அண்டமுமதிரும்படியாகக் குணத்தொனிசெய்து சங்கோபசங்கமாகிய கொடிய பாணவருஷங்களைப்பெருக்கி அதாஹதப்படுத்துங்காலையில் ஜயசாலிகளாய்ப் போராடியிருந்த அவுணப்பாதகர் முனையழிந்து சிரங்களற்றும் மகுடம் சிதைந்தும்கழுத்திற்றும் வாகுவலயங்கள்கவிழ்ந்திருக்கும்புயங்கள்சரிந்தும்வலிய கவசங்கள்மூடிய விசாலமாகிய மார்புகள் பிளந்தும் வயிறுபீறுண்டு சர்ப்பங்களைப்போலக் குடல்கள் சரிந்தும் வீரகண்டாமணிகலிக்கும் கால்களொடிந்தும் தேகமுற்றினும் சல்லடைக்கண்களாகத் துளையுண்டும்சின்னபின்னம்பட வெட்டுண்டும் களைத்தும் இளைத்தும் இவ்விதங்களாக அவுணப்படைகள் மாளவும் பருவதாகிருதியாகக் கொடிகுடைகள் கொடிங்கை முதலிய அலங்காரங்களைக்கொண்டிருந்த தேரணிகள் பொடிப்பொடியாயுதிர்ந்தும் மதயானைகள் துதிக்கை மத்தகம் கோடுகள் பருத்தபாதங்கள் வெட்டுண்டு களமெங்கணும் குவியவும் அலைகளைப்போலத்தாவும் கதிவாய்ந்த புரவிப்பந்திகள் பலபங்கப்பட்டுமாளவும் இவ்விதமாக நால்வகைச்சேனைகளும் அதப்பட்டகாலையில் அலைகளைப்பெருக்கியெழுந்த உதிரப்பிரவாகமானது பொன்னுலகமெங்கும் பரந்து செவ்வானத்தைப்போலக் காட்டச்செய்து மேலிட்டுயர்ந்த மலையைப் போல பூமண்டலமுற்றினும் பொழியத்தலைப்பட்டது.

அக்காலத்தில் முசுகுந்தசக்கரவர்த்திசெய்த போராட்டத்தை ஒருவாயினாற்சொல்லிமுடிவதோ, இவ்விதமாகச்சிதைத்து அவுணக்கடலைவறளச்செய்த காலத்தில் தேவேந்திரனுக்கு மனவுச்சாகத்துடன் வீராவேசம்பிறந்து சக்கிரவர்த்தி யுதவியைக் கொண்டு வெள்ளியங்கிரியைப்போலக் காட்டும் பாரித்த தேகத்தையுடைய ஐராவதத்தைத்தூண்டி வலாசுரனைச் சட்டைபண்ணுமலெதிர்த்துச் சிலபகல்அகோரமாகிய சண்டைகளைச்செய்து பகைவனால் மிகவும் வருந்தியபோதினும் அதிக்கிரமித்துத் தன்கரத்திற் பிடிபட்டிருக்கும் ஒப்பற்றவச்சிராயுதத்தை ஓங்கிப்பகைவன் மார்புக்குக்குறிகொண்டு வலிதிற்கடாவினன். அப்படையானது ஆலகாலத்தை யொப்பச்சீறி பலமகிமைகளைக் காட்டி அதிவேகமாய்ப்போய்ச் சத்துருக்கள் வயிரமலைக்கொப்பாகிய மார்பிற் பாய்ந்து தடாரித்துருவி உதிரத்தைப்பெருக்கி உயிரையுமுண்டு வெளிப்பட்டு வானகங்கையில்முழுகித் தேவராஜன்கரத்தில்வின்றது. ஓ தவத்தரோ வலாசுரனை மிகவும்வருந்திக்கொன்ற காரணத்தினால் அன்றுமுதல் இந்திரனுக்கு வலாரியென்னும் சிறப்புப்பெயர் பலராலும்கொண்டாடும்படியாக விளங்குகின்றது. இத்தகைய ஜயபிரதாபத்தைப்பெற்று மனமகிழ்ச்சியுடனிருக்கின்ற தேவேந்திரன் கடிதில்வந்து முசுகுந்தசக்கரவர்த்தியை விசாலமாகியமார்பிற் சேர்த்தணைத்துச் சிலமுகஸ்துதிகளைப்பேசிக் கரத்தைப்பற்றி அழைத்துக்கொண்டு இந்திரபுரியின்வீதிகளைக் கடந்து சிரோரத்தினமயமாய் ஜொலித்துக்கொண்டிருக்கும் தன்னரண்மனையைச் சேர்ந்து பொன்மயமாகப் பரந்திருக்கும் சபாமண்டபத்தில் முழுமணிகளினால் சோடித்திருக்கின்ற சிங்காதனத்தில் வீற்றிருந்து சக்கரவர்த்தியைத் தன்னருகில்வைத்துக் கொண்டவனாய் மனவெழுச்சியுடனிதனைச் சொல்வதாயினன்.

ஓ வேந்தர்பெருமானே, பலநாளாக எனக்கு ஜன்மவயிரிகளாய் இடைவிடாதலைத்திருந்த அவுணர்பூண்டைவேரறக்களைந்து மனோசஞ்சலங்களை மாற்றித் திரிலோகாதிபத்தியமாகிய இந்த அரசாட்சியைப் புதிதாகத் தந்தது மன்றிச் சிறந்தபுகழும் வெற்றியும் பலராலும் மதிக்கவல்ல மேம்பாட்டையும் பெறச்செய்த என்பிராணபதமான தோழனே, உன்னையன்றி நெருங்கிய சுற்றமும் உதவியும் சம்பத்துகளும் வேறொன்றுண்டோவென்று பற்பலவுபசாரவார்த்தைகளைப் பேசியகாலையில் சபையில் நெருங்கியிருந்ததேவர்கள் கற்பகமலர்களையிறைத்து அகண்டமண்டலாதீஸ்வரனே வாழிவாழியென்றேத் தெடுக்கவும்முனிவர்கள்அட்சதைகளையிறைத்து மங்களாசீர்வாதங்களைச்செய்யவும் அரம்பை யூர்வசி திலோத்தமையாதிய தேவகணிகையர் பரதநாட்டியங்களைச்செய்யவும் இத்தகையவேடிக்கைகளைச் சிலநேரம்பார்த்திருந்து சிங்காதனத்தைவிட்டிறங்கித் தோழனைக்கைலாகுகொடுத்துமேருவோவென்னையப் படைத்தக்கபொன்மாளிகையினிடத்திற் சேர்ந்து தேவகங்கையைத் தருவித்து ஸ்நானஞ்செய்வித்துப் புதியபீதாம்பரத்தை யுடுக்கச்செய்து சிரோரத்தினங்களிட்டிழைத்திருக்கும் கிரீடம்வாகுவலயம்மகரகுண்டலம், முத்துமாலை, மோகனமாலை, மதாணிப்பதக்கம், வீரகண்டைமுதலிய பூஷணங்களையணியச்செய்து திவ்விய சுகந்தங்களை வீசும் கலவைச்சாந்து பஞ்சதருக்களின் புதிய மலர்மாலைகளைத் தன்கரத்தினால் சாத்தி முடிந்தவுடன் பொற்பீடத்திலிருக்கச்செய்துதுரிதமாய்த்தானும் நீரில்முழுகிப் பரிசுத்தனாய்ச் சக்கரவர்த்தியைக் கூட்டிக்கொண்டு பூசையறைக்குப்போய் ஒருபுறத்திலிருக்கச்செய்த பின், ஆதியில் உபேந்திரர் ஆராதித்துவைத்திருந்து தனக்கனுக்கிரகித்த உமாபாமேஸ்வரரைத்தேவகங்கையினாற்றிருமஞ்சனமாட்டிப் பீதாம்பரத்தையுடுத்துச் சிரோரத்தினமயமாகிய ஆபரணதிகளைப் பூட்டி ஸ்ரீகந்தக்கலவை புனுகு சவ்வாது கற்பகமலர்மாலைகளினால் அலங்கரித்துத் தூபதீப நைவேத்தியமுதலிய சோடசோபசாரங்களைச்செய்து கரங்களைக்கூப்பி யெதிரில்நின்று வேதவாக்கியங்களினால் துதித்து வருகின்றகாலையில் திருக்கயிலாயத்தில் திருத்தேவியுடன்குமாரதேவர்நடுப் பிரதேசத்தில்விளங்க வீற்றிருக்குங்கோலமாய் முசுகுந்த சக்கரவர்த்தியினது விழிகளுக்குக் காட்டத் தரிசித்தவுடன் பழைய அன்பு பெருகித்தேகங்குதுகுலித்து விழிகளில் நீர்பெருக மனமுருகி ஆனந்த பரவசனாய்யாதுந்தோன்றாமலிருந்து சற்றுநேரத்திற்றெளிந்தவனாய்ச்சந்தோஷப்பெருக்கிலாழ்ந்து கூத்தாடியும்பன்முறைபணிந்தும் ஐயன்பெருமைகளையெடுத்தேத்தியும் வயிரமுடி திருப்பாதங்களிற்படத் தீர்க்கதண்டஞ் சமர்பித்தும் என்புமுள்ளமுங் குழைந்து குழைந்துதுள்ளியும்பரமன்புகழ்த்திறங்களைப்பாடியும் சகஸ்திர நாமங்களை ஸ்மரித்தும் ஜயஜயபோற்றியெனக் கரங்களைக்கொட்டியும் சொல்லுதற்கரிய பேரானந்த வெள்ளத்திலழுந்தியும் சிந்திப்பதொன்று வார்த்தையாடுவதொன்றாய் மொழிகுழறியும் உடல்முற்றினும் உரோமங்கள் சிலிர்த்தும் முன்வெள்ளியங்கிரியி னிடத்திற் திருநேத்திரதாரியினது திருக்கோலத்தைச் சலியாமற்கண்டுகண்டு மனத்தின்கண்ணே களிமிகுதியைக் கொண்டிருந்துபின் மானிடப்பிறவியில் ஜனித்தகாரணத்தினால் மயங்கிமறந்

தானென்றும் இடைவிடாமற்சிறந்த பொருளொன்றை முக்கியமாகப் போற்றிக்களிக்க விருந்தவன் சோபித்து நித்திரையிற் பட்டுறங்கியதைப்போலப் பூருவஞானந்தோற்றுமாறு முசுமுகத்தைப் பெற்றிருந்த போதினும் சக்கரவர்த்தியானவன் மயக்குற்று தேவாதிதேவனைப் பார்த்து இவ்விதங்களால் துதிப்பதாயினன்.

பரப்பிரமசொரூபமாக விளங்கும் கர்த்தனேபோற்றி, திரிமூர்த்திகளே முதலிய சகலருக்கும் மூலகாரணக்கடவுளாக விருக்கின்ற பரமேபோற்றி, லோகமாதாவாகிய பராசத்தியை வாமபாகத்திற்படைத்து அச்சத்தி மகிமையினாற் சராசரப்பிரபஞ்சங்களை விருத்தியடையச்செய்துவரும் தயாநிதியே போற்றி, சுயஞ்சோதிமயமாகக்காட்டு மிறைவனேபோற்றி, காளகண்டமூர்த்தியேபோற்றி, ஸ்ரீமகாவிஷ்ணுவின் கோலமாகிய இடபவாகனத்திலேறிநடாத்தும் முதற்காரணக்கடவுளேபோற்றி, யானெனதென்னு மகங்காரச்செருக்கிற்பட்டுத் தம்மை மதியாமற்றொடங்கிய தக்கன்மகத்தைப் பங்கப்படுத்திவைத்த தேவாதிதேவனேபோற்றி, ஸ்ரீமகாவிஷ்ணு பிரமன் உருத்திரனாகிய மூலசோதியேபோற்றி, அடியருக்கெளியனும்தீனசரண்ணியனேபோற்றி, எம்மையொத்த வழித்தொண்டர்களுக்கும் நாதனாகவிருந்து தடுத்தாண்டிரட்சிக்கும் பத்தவற்சலனேபோற்றி, களங்கரகிதமாகிய தங்கமேபோற்றி, சிவபெருமானேபோற்றி, அடியேனை யொருபொருளாய் ஆளவிருக்கின்ற ஆண்டவனேபோற்றி, சோமசூரியாக்கினியைத் திரிநேத்திரங்களாகக் கொண்டிருக்கும் நாதனேபோற்றி, காளி காளாத்திரி யமன் யமதூதியென்னும்ஷிதைப்பற்களைப்படைத்திருக்கின்ற நாகாபரணனேபோற்றி, ஐஸ்வரியலியமாக்கும் பெருமையையுடைய திருநீற்றைத் திருமேனிமுற்றினுமணிந்திருக்கின்ற ஆதிதேவனேபோற்றி, கன்னமதம் கபோலமதம் பீஜமதமெனச்சொல்லாநின்ற மும்மதங்களைப்பெருக்கி அண்டங்களதிர விடுட்டுவந்த யானையைத்தள்ளி யதனையுரித்துப்போர்த்துப் பிராணிகளைக்கலங்காமலாண்ட கிருபாநிதியேபோற்றி, மகாபிரளயகாலத்திற் காலருத்திரமூர்த்தியாகத்தோன்றிச் சருவசங்காரஞ்செய்து சவுக்கியத்திலிருத்திய தயாநிதியேபோற்றி, பரம்பொருளேபோற்றி, பிறப்பிறப்பிலியாய்ச் சலனமற்று எக்காலத்தும் விளங்கும் பெருமையினையுடைய தாணுவேபோற்றி, முதன்மையாகப்புகழாநின்ற பொருள்களனைத்திற்கும் மூலமாகக்காட்டுமெதிதப்பொருளே போற்றி, எறும்புமுதல் யானையீறாகச்சொல்லும் எண்பத்துநான்கிலட்சம் சீவபேதங்களினிடத்தும் அந்தரான்மாவாகப்பொருந்தி ஆட்டியூட்டி யுறக்கிவரும் கருணாகரனேபோற்றி, வேதாகமமுதலிய சாத்திரங்களின் முடிவில்நின்று திருத்தஞ்செய்யும் அண்ணலேபோற்றி, அடியேனை யொருபொருளாக மதித்தாண்டு பூலோகத்திற் சக்கரவர்த்தியாக நிறுத்திச் சகலசெல்வவளங்களையும் அனுபவிக்கத்தந்து பலராலும் புகழத்தக்க மேம்பாட்டைக் கிடைக்கச்செய்த தயாநிதியேபோற்றி, தேவரீர் திருவடியைத் தரிசிக்கக்காட்டிப் பழைய உணர்ச்சியைத்தந்து பாதுகாத்த நிதனேபோற்றி, இவ்வுலகங்களில் வாசஞ்செய்யும் பிராணிகளில் எத்தகையராயினும் அவ்வவர்கள் வழிபடும் அந்தந்தத்தேவதைகளாக விளங்கி அவர்கள் மனோபீஷ்டங்களை கடாட்சித்தருளும் பரமேஸ்

வரனே போற்றி, மெய்ப்பத்தியினால் தேவரீரை ஆராதித்துத் தரிசிக்கப்பெற்ற புண்ணியவான்களுக்குத் தேவ போகபோக்கியங்களை யனுபவிக்கச்செய்து கடைசியில் மோட்சசாம்பிராச்சியபதத்தையுந் தயைசெய்தாளும் அடிகளே போற்றி, சிருட்டிகர்த்தனாக விருக்கின்ற பிரமதேவர் இதித்தொழிலை நடாத்திவரும் மஹாவிஷ்ணு சம்ஹாரத்தொழில்செய்யும் உருத்திரமூர்த்தி முதலிய தேவர்கள் தத்தமக்குக் கடாட்சித்திருக்கின்ற பதங்களை நீடூழிகாலம் நிலைபெற்றுளத் தந்தாண்டருளும் தற்பரமூர்த்தியே பணிவுறுதியுடன் போற்றி, வழிபடும்பொருட்டு வேதாகமங்களை யுண்டுபண்ணி அவற்றினை அன்புடன் பதக்கிரமமாய்ப் பாராயணஞ்செய்துவரும் மேன்மைபெற்றவர்களுக்கு தேவர் பதங்களைத் தகுதியாக அனுக்கிரகஞ் செய்துவரும் சர்வக்கியனே போற்றி, தேவரினங்க ளனைவருஞ்சூழ்ந்து துதிக்கக் கல்லாலின்கீழிற் குருமூர்த்தமாக வெழுந்தருளி வேதங்களைக்கரைகண்ட சனகாதிகள் நால்வருக்கும் ஞானயோக சாதனங்களைக்காட்டாமற்கடாட்சித்த சோதியேபோற்றி, முப்பத்தாறு தத்துவங்களுக்கு மேலாகவிளங்கி நிற்கும் சிற்பரமூர்த்தியேபோற்றிபோற்றி, அடியேன் பிழைகளை பொறுத்தாளவேண்டுமென்று இவ்வாறு ஒருமைப்பட்ட மனத்துடன் முசுகுந்த சக்கரவர்த்தி ஏத்தெடுக்குந் தோத்திரங்களை எமது மகாதேவன் திருச்செவிகளினேற்று மனமகிழ்ந்து பரிபூரணகடாட்சத்தைப் பாலித்தவராய் சக்கரவர்த்தியின்மீது திருநோக்கத்தைச் செலுத்தித் தேவராஜனுக்குத் தோன்றாமலிதனை அனுக்கிரகஞ்செய்வதாயினர்.

ஓ, சக்கரவர்த்தி உன் மெய்ப்பத்தி மான்மியங்களுக்கு மகிழ்ந்தனமாதலாற் சக்கரதராகிய ஸ்ரீமகாவிஷ்ணுவின் திருவவதாரமாகிய உபேந்திரர் பலகாலம் அரிய தவவிரதங்களைச் செய்துவந்த முயற்சியினாற் பெற்றுப் பத்திவயிராக்கியங்களுடன் ஆகமவிதிப்படி சற்றுந் தாழ்வில்லாமல மனவெழுச்சியுடன் நம்மைவெகுகாலம் ஆராதித்திருந்தவர் ஒருபோது சிலகாரணத்தினால் தேவேந்திரனிடத்தில் ஒப்பித்துப் போயினர். இவனும் நமது மனத்துக்குவப்பாகிய பூசனைவழிபாடுகளைச்செய்து பலநாட்களாக வைத்திருக்கின்றனன், உன்னிடத்தில் நமக்கு இரக்கமுண்டானதால் நீ நம்மைப் பூலோகத்துக்குக் கொண்டுபோய் ஸ்தாபித்துப் பூசிக்கக் கடவாயென்றனுக்கிரகஞ் செய்யக் கேட்ட முசுகுந்தனுக்கு மனம்பூரித்து அதிகசந்தோஷத்தைப்பெற்றவனாய் தேவரீருக்குத் திருவுளமிவ்வண்ணமாகில் அடியேன் சகலவினைகளையும்போக்கிக்கிருதார்த்தனாய்ப் பிழைத்தேன் பிழைத்தேனென்று கரங்களைக்கூப்பிக்கொண்டு பரமனைத் துதித்திருந்தனன். இதன்மத்தியி லிந்திரன் சாதசிரோத்தமாய்ப் பூசனை வழிபாடுகளைப் பூர்த்தியாகச்செய்தவனாய் முத்தீயையுமெழுப்பி ஓமவிதிகளையும் வரன்முறைப்படிக்கு முடித்துக் கர்த்தனைப்புகழ்ந்துகொண்டு அந்தலத்தைக்கடந்து மற்றொரு சொர்ணமயமாகியசாலையைச்சேர்ந்து காமதேனுவைக் கொண்டு ஜயசாலியாகிய முசுகுந்தசக்கரவர்த்திக்கு அறுசுவையுண்டி விதங்களைத் தேவாமுதத்துக்குமேலான திருப்திபெறச் சமபந்தியில் வைத்துக்கொண்டு சாப்பிடச்செய்து அவருடன்வந்திருக்கின்ற மந்திரி பிரதானிகள்சேனைத்தலைவர் நால்வகைச் சயினியங்களுக்கும் அவ்வவர்கள் மனக்கருத்தின்படிக்

கச்சாயவகைகள் முதலானவற்றுடன் விருந்திட்டானவுடன் அவர்களுக்குத் தக்க வெகுமதிகளையுங்கொடுத்துச் சந்தனதாமபூலவகைகளினுற் றிருப்திசெய்து சக்கரவர்த்தியையும் மற்றொரு சபாமண்டபத்தினிடத் தழைத்துப் போய் பொற்பீடத்திலிருத்தித் திருத்தித் திவ்விய பரிமளமிடித்த கலவைச் சாந்துகளைப்பூசிக் கற்பகமலர்மாலைகளைச் சாத்திக் கற்பூர தாம்பூலத்தையும் சிரோரத்தினமயமாகிய கிரீடம் வாகுவலயமுதலிய பணிகளையும் பீதாம்பர வகைகளேமுதலிய விலையுயர்ந்தவஸ்துகளையுந் தன்கருத்தின்படித்தந்து தான் அருமையாகத்தேடிவைத்திருந்த தேவர்படைகளையும் மந்திரபூர்வகமாகத்தத் தஞ்செய்து இவ்விதமாகச் சகலவுபசாரங்களையும் முடித்தகாலத்தில் தேவேந்திரனுக்குக் கிடைத்திருக்கின்ற சந்தோஷப்பெருக்கினுல் சக்கரவர்த்தியைத் தயையாகப்பார்த்து என்மனத்துக்கினியதோழனே நமக்குச்சம்பவித்தஅபாய காலத்திற்செய்த வுதவிக்குக் கைம்மாறுண்டோ? ஆகிலும் உனக்கு என்னு லாகவேண்டிய பிரயோசனமிருக்குமாகில் சங்கைப்படாமற் கேட்கக்கடவா யென்று இந்திரன் உரைத்தமாத்திரத்தில் நாம் நினைந்திருக்கின்றபடியாகப்பெற் றுக்கொள்வதற்கு இது நல்லதருணமாக விருக்கின்றதெனநினைந்து தேவராச னைக்குறித்து முசுகுந்தசக்கரவர்த்தி யிதனைக் கேட்டுக்கொள்வதாயினன்.

பிரமன் விஷ்ணு முதலிய சகலராலுங் கண்டறியவொண்ணுத சுயஞ்சோ திப்படிவத்தனுய்ச் சோமசூரியாக்கினிகளைத் திரிநேத்திரங்களாகப்படைத்த வராய் ஜகமனைத்துக்கும் மூலகாரணத் தலைமைபெற்று மன்னுயிரைத் தந்த பராசத்தியை வாமபாகத்தில் வைத்துப் பலநாடகங்களைக் காட்டிச் சுகாதீத வெல்லையில் நடிக்கும் நிர்மலக்கடவுளாக விருக்கின்ற நமதிறைவனைத் தேவர் கள் பூசித்துவரும் சிவபிரானைத்தயைசெய்து மெய்யன்புடன் கொடுப்பிராகில் மனவெழுச்சியுடன் பூலோகத்துக்குக் கொண்டுபோய் என்பட்டணத்திற் றாபி த்துச் சகலசிறப்புகளுடன் பூசனை வழிபாடுகளைச் செய்து கிருதார்த்தனுய் இம்மை மறுமைச்செல்வங்களை ஒருங்கெய்தப்பெற்று வாழக்கடவேன், இப் பேற்றையன்றி வேறொன்றைவிரும்பேனென்று விண்ணப்பஞ்செய்த காரணங் களைத் தேவேந்திரன் கேட்டவுடன் திடுக்கிட்டு மனம்வருந்தி ஒருவகையாகத் தேற்றிக்கொண்டு என்னன்புள்ள சிநேகிதனே! இத்தேவன் வரலாற்றைச் சொல்லக்கேட்பையாக; பிரமனை உந்திக்கமலத்திற்படைத்து உலகங்களைப்பரி பாலனஞ்செய்து வரும் மகாவிஷ்ணுவானவர் சிலதினங்களுக்கு முன்னம்தம க்குப் புத்திரசம்பத்தில்லாத காரணத்தினுல் அண்டாண்டபுவனசராசரங்களு க்கும் அம்மையப்பனுகவிருந்து நடிப்பிக்கும் சிவபிரான் பாதகமலங்களையே தஞ்சமாக நினைந்துமிகவும் வருந்தி அளவற்றகாலம் தவங்களைச்செய்து வரு கின்றகாலையில் அவர் பத்திமை வழிபாட்டுக்கிரங்கி பரமேஸ்வரரானவர் கவுரி யுடன் விருஷபவாகனத்தி லாரோகணித்துக் கணுதிபதிகள் குடை, கொடி, வெண்சாமரை, அருகு, ஆலவட்டம் திருச்சின்னம், புள்ளாங்குழல்முதலிய பணிவிடைகளைச் செய்துவரத் தக்கதாகத் திருக்கயிலையைக்கடந்து, சகலா டம்பரங்களுடன் கண்ணனுக்குக் காட்சிதந்தகாலத்தில் பல்லாயிரம் பூமியை யுண்டகேசவன் திடுக்கிட்டெழுந்து பயபத்திவிசுவாசங்களுட னெதிர்கொண்டு

கோடி கணநாதர்கள்சூழ்ந்து பணிவிடைகளைச்செய்து ஜயஜயவெனப்போற்றி வரத்தக்கதாக வெள்ளியங்கிரியைக்கடந்து வானவழிக்கொண்டு வருந்திருக் கோலத்தைக் கரியவன் தரிசித்த மாத்திரத்தில் மனக்கவலை நீங்கிக் களி சிறந்து விழிகளில் ஆனந்தவாரி பெருக்கெடுத்தோடத்தக்கதாகத் தேகபரவச ஞய் எதிர்கொண்டோடி முந்திப்பாரப்பதியார் திருவடிகளில் மும்முறை வலம் வந்து பணிந்தபின்பு எமதிறைவன் திவ்விய சரணாரவிந்தங்களினும் கிரமப் படிக்குத் தீர்க்கதண்டன் சமர்ப்பித்து உமாமகேச்சுரர் கீர்த்திப்பிரதாபங் களை வேதவாக்கியங்களினல் பலவாருக வழுத்திக் கரங்களைக்கூப்பிநிற்கின்ற விஷ்ணுவினிடத்திற் கிருபாநோக்கத்தைப் பாலித்து ஆதரித்தவராய்த் தேவி யின்மீது விழிகளைச்செலுத்திப்பெண்ணரசியே உன்சகோதரனிடத்திற் றயை செய்து அநுக்கிரகஞ்செய்யக் கடவையெனத் திருவுளம்பற்றியபோது பார்ப் பதி தேவியும் மனமிரங்கி விஷ்ணுவைப்பார்த்து இதனைச் செல்லுவதாயினள்.

நமதிறைவன் கடாட்சித்திருக்கின்ற பேற்றிற்கும் நாம்கோபித்துப்பேசிய வசைமொழிக்கும் எவ்வளவும் பிசகு வரவறியாது, இதனையெத்தகையராலுந் தடுப்பதரிது, ஆதலால் அவ்வாறே எமதுநாயகன் கடாட்சவீட்சண்ணியப்படிக் குப்பெறவிருக்கின்ற உமதுபிள்ளையானவன் ஒருதினம் இறைவன் நுதல்விழித் தீயிற்பட்டு சாம்பலாயிறந்து ஜயசாலியாயிருந்த மேம்பாடுகளனைத்தையு மிழந்தபோதினும் பரமன் திருவுளமுயற்சியினுற் பழையபடிக்குத் தோற்றித் தீர்க்காயுசாய் எக்காலத்தினும் சலனமற்றுச் சகலலோகங்களையும் தன்வல்ல பத்தினல் வெற்றிகொண்டு ஜயசாலியாயிருக்கக்கடவனென்று பராசத்தி சாப விமோசனஞ்செய்தவுடன் பரமசிவமும் அவ்வாறே முற்றுப்பெறக்கடவதெ ன்று ஆசீர்வதித்துத் திருத்தேவியுடன் மறைந்து வெள்ளியங்கிரியிற் சேர்ந் தனர். அம்மையப்பர் இவ்வாறருளிச்செய்து போனவுடன்மகாவிஷ்ணுவும் மன வெழுச்சிபெற்று அத்திசையைநோக்கித் தொழுதேத்தித் தவநிலை நீங்கித் தான்பூசித்துவந்த முத்தேவதைகளையு மெடுத்துக்கொண்டு வைகுந்தநகரைச் சேர்ந்து தன்பட்டணத்தில் வாசமாயிருக்கின்ற காலையில் நல்லசுபமுகூர்த்தத் தில் பரமனருளுருப்பெற் றெழுந்ததைப்போலக்காருண்டநீலமேகத்தையொப் பப் பிரகாசிக்கும சுந்தரமுள்ள தேகத்தைப்பெற்று ஸ்ரீமகாவிஷ்ணுவனது மனத்தின்மூலமாய் மன்மதகுமாரனுதித்துக் காளைப்பருவத்தனுய் வனப்புக ளனைத்துந்திரண்டோ ருருப்பெற்றெழுந்ததைப்போன்ற மங்களகரமாகிய வடி வைக்கொண்டு குலவுகின்றகாலையில் பிதாவானவர் பிள்ளையின்தேககாந்தியை யுங் குணநிசயங்களையுங் கண்டுகளித்து மடியில்வைத்துக்கொண்டு முத்தமிட் டுச் சீராடியவுடன் அவன்வல்லமைக்குத் தக்கபலசிறப்புகளைப் படைத்தளித் தனர். உடனே தீரனுய்ச்சுரும்பினங்கள் நாரியாகக்கொண்டிருக்கும் கருப்பு வில்லையும், அரவிந்தம், அசோகம், சூதம், முல்லை, குவளையென்னும்பஞ்சபுஷ்ப பாணங்களையும் கரங்களிற்கொண்டுகுளிர்ந்த சோடசகலைகளையுடைய சந்திர னைக்குடையாகவும், தென்றற்காற்றைத் தேராகவும், அலைகளைஆரவாரித்து மோதும் சமுத்திரத்தைப்பேரிகையாகவும், அதிரூபலாவண்யமுள்ள பெண்க ளைப்படைகளாகவும், சிரவணனந்தமாகக்கூவும் குயிலைக்காளமாகவும், மேகத்

தினிடத்திற்றோற்றிமறையும் மின்னற்கொடியையும், தாழைமடலையும் உடைவாளாகவும் பெற்றுத் திரிலோகங்களினுஞ் சஞ்சரித்துமங்கையரையும் காளையரையும் மயக்கிக் காமக்கலையிற்பட்டுக் களித்துழலும்படிக்குத் தன்வயப்படுத்திச் சகலரையும்வென்று எத்தலங்களினும் வெற்றிக்கொடியை நாட்டிச் சகலரும் பூசிதையாகக் கொண்டாடும்படிக்குச் சுந்தரவதியாகிய இரதியென்னுங் கன்னிகையைமணந்து அவளை எக்காலத்தினும்பிரியாமல் வங்கணமாகக்குலவி காமவின்பங்களை யனுபவித்து ஒருவருமெதிரில்லாமல் வீறியிருக்கின்றகாலையிற் பராசத்தியைப்பிரிந்து வடவால விருட்சநிழலிலமர்ந்து சனகாதியருக்கு ஞானயோகசாதனையைத் தெருட்டியிருக்கின்ற சிவபிரான் மனவுறுதியையழித்துப் பராபரையைச்சேர்ந்து திருக்குமாரனைத் தந்து சூரபதுமன்முதலாகிய அவுணரைவாட்டித் தாங்கள் சவுக்கியமடையும்பொருட்டு பிரமனாதியதேவர்கள் போதனைக்குட்பட்டவனாய்ச் சற்றும் எண்ணிக்கையில்லாமல் சுயஞ்சோதிப்படிவத்தனாகிய சிவபிரான் தேகத்தினிடத்திற் பஞ்சபுஷ்பபாணங்களையும் ஒருதொடையிற் சந்தித்தேவியகாலத்திற் சங்கரன் கோபித்துப்பார்த்த நுதல்விழிக்கனலினாற் றகிக்கப்பட்டுச் சாம்பலாய் மயங்கியபின்பு இரதிதேவி கோரிக்கையின்படிக்குப் பரமனனுக்கிரகத்தினால் அருவுருப் பெற்றெழுந்து பழையபடிக்குச் சகலவளங்களையும்பெற்றுத் திரிலோகாதிபத்தியத்தைப் பரிபாலனஞ்செய்திருந்தனன். ஜகன்மாதாவாகவிருக்கின்ற பருவதராஜ புத்திரியினது வாக்கியம் பொய்படுமேதோ, அல்லது எத்தகையராலும் விலக்கவும்படுமோ, இச்சரித்திரம் நிற்க; மகாவிஷ்ணுவானவர் அதிகப்பிரியத்துடன் வழிபாடுகளைச்செய்துவரும் பரமனையும் பார்ப்பதியாரையும் குமாரனையும் உடன்கொண்டு திருப்பாற்கடலைச்சேர்ந்து அத்தேவதைகளை விசாலமாகிய தமது மார்பகமே பீடமாக வெழுந்தருளச்செய்து சேஷசயனத்திற் பள்ளிகொண்டு அளவற்றகாலம் அறிதுயிலமர்ந்து போற்றிவருங்காலையில் மாறிமாறியெழும் சுவாசத்தினசைவினாலும் ஆதிசேஷனிடத் துண்டாகும் பெருமூச்சினசைவினாலும் மதுரமாகிய திருப்பாற்கடலினிடத் துண்டாகும் அலைகளின்மோதலின் அசைவினாலும் அளவற்ற திருவிளையாடல்களைச் செய்யவல்ல மூவரும உஞ்சலாடிக் களித்திருந்தனர்.

அக்கருணத்தில் தேவர்கள் பங்குக்கு இயமனைப்போல அவுணர் மரபில் வாற்கல்வியென்னுஞ் சூரனொருவன் அவதரித்துப் பிரமுகனாய்ச் சிவபிரானை நோக்கிப் பலகாலம் சொல்லுதற்கரிய கடினமாகிய தவங்களைச்செய்து அவரனுக்கிரகத்தினால் வில் வாள் தேர்பாணங்களாதிய செல்வவளங்களைப்பெற்று வந்து தன்வமிசத்துக்குரிய சிற்பியினால் சொர்ணமயமா யிரத்தினகாந்திகளை வீசிக்கொண்டிருக்கும் கோட்டை, கொத்தளம், அகழ், கோபுரவாயில்கள், மாடமாளிகை, மண்டபமாதிய சிங்காரங்களைக்கொண்டு பொன்னுலகமும் நாணும்படிக்குப் பட்டணமொன்றைச் செய்வித்து அதனிடத்தமர்ந்து அவுணருக்குச் சக்கரவர்த்தியாய்ப்பலவெள்ளம் இரதகஜதுரகபதாதிகளைச்சேர்த்துக்கொண்டு திக்குவிஜயஞ்செய்ய நினைந்து பிரயாண பேரிகையையறைவித்து ரதாரூடனாய் நால்வகைச்சேனை சமுத்திரங்களுடன்போய், அஷ்ட திசையிலிருப்பவர்க

ளனைவரையும் இமைப்போதில்வென்று தன்வயப்படுத்தி ஒருவருமெதிரில்லாமற் கொடுங்கோல்செலுத்தி வந்தான். இவன் விண்ணுடுகளி லிருப்பவரையும் வெற்றிகொள்ளக்கருதிச் சதுரங்கவெள்ளங்களுடன் வானத்திற்சென்று பொன்னுலகத்தை வளைந்துகொண்ட காலையில் நானும் வீராவேசத்துடன் தேவப்படைகளைச் சேர்த்துப்போய்ப் பலபகல் கொடும்போரைச்செய்து வரும்போது பாதகன்பேவிட்டு நமதுசேனைகளைச் சின்னபின்னப்படவாட்டி என்னையும் பிரமிக்கும்படிக்குச்சாடித் துரத்திவிட்டு ஜயசாலியாய்த்தெய்வலோகத்தைத் தன்வசப்படுத்திக்கொண்டு திரிலோகாதிபத்தியத்தை ஒருங்கெய்தி அனுபவித்துவருங்காலத்தில பதியையும் செல்வவளங்களையும் பறிகொடுத்து நிற்கநிழலில்லாமலலைந்து வெம்முருதவியையுங்காணுததால் வாடி வருந்துகின்ற தேவர்களைக் கூட்டிக்கொண்டுபோய்த் திருப்பாற்கடலைச்சேர்ந்து சகத்திர பணாமகுடங்களையுடைய பாம்பணையிற் றுயிலமர்ந்திருக்கும் ஆதிகேசவமூர்த்தியை வணங்கிப்போற்றி யெனக்குச் சம்பவித்த அபாயத்தையும் மானக்குறைச்சலையும் சாங்கோபாங்கமாக விண்ணப்பஞ்செய்து கர்த்தனே அவுணப்பாதகனால் மிகவும் நொந்து துக்கசாகரத்திலழுந்திக் கரைகாணுதலை கின்றனமாதலால் தேவரீர் அடியேங்கள்மேல் கிருபையுற்று அப்பாதகனை அதாஹதப்படுத்தி விண்ணாட்டின் அரசுரிமையைத் தயைசெய்ய வேண்டுமென்று மிகவும்வருந்திப் போற்றும்போது தேவர்களும் பரிபவத்துடன் லோகரட்சகனே யிக்காலத்திற் பராமுகமாயிராமல் சீக்கிரத்தில் பகைவரைவாட்டிப் பாதுகாத்தாள்வது நுமதுகடனென்று பலவிதங்களில் முறையிடுவதனைத்தையுந் திருச்செவிகளிலேற்று மனமிரங்கிச் சேஷசயனத்தை விட்டெழுந்து செந்தாமரைமலரைப் பழித்துவிளங்குந் திருக்கரத்தைநீட்டி பயப்படாதீர்கள் உங்களுக்கு இத்தகைய மனவருத்தங்களையும் தீங்குகளையுஞ்செய்த கொடியபாதகனையினையுண்டு சஞ்சலமற்று சவுக்கியத்திலிருக்கச் செய்வோமென்று பற்பல தயிரியங்களைச்சொல்லி ஆதரித்தவுடன் கற்பமுடிவில் அண்டங்களனைத்தையுந் தன்திருவயிற்றினிடத்திருத்தி வடபத்திரசாயியாயுறங்கியபின்புவெளியிட்டாண்ட திருத்துழாய்மாலை பரிமளிக்கப்பெற்றுந் திருமார்பையுடைய ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் அடியேனிடத்திற் பரிபூரணகடாட்சத்தையுங் காட்டிக் கையையும் வைத்து ஓ தேவராஜனே! நமதுமார்பகத்தில மனோஞ்சிதமாக வெழுந்தருளிய சங்கரனையும் பராசக்தியையும் திருக்குமாரனையும் பாரும் இந்நால்வரையும் ஆதிமுதலிதுபரியந்தம பக்திபூர்வகமாகவழிபட்டு என்குறைகளைந்துமொழிந்து கிருதார்த்தருமானேன். ஆகிலும் நீபலவிதங்களினும் பகைவராகிய அவுணர் இராக்கதரால் துன்பங்களை யனுபவித்து வாடுவதற்காக நமக்கு மிகவு மிரக்கமுண்டாகியதால் தாய்தந்தையரையொத்த இந்நால்வரையும் தருகிறேன் பயபக்தி விசுவாசங்களுடன் ஆகமவிதிப்படிக்குப் பூசனைவழிபாடுகளிற் குறைவறச்செய்து வருவையாகிற் சகலதுன்பங்களுமொழிந்து ஜயசாலியாய்ச் சலனமற்ற செல்வப்பெருக்கை யனுபவித்து சவுக்கியத்திலிருப்பையெனத் திருவாய்மலர்ந்து உடனே அதிகப்பிரியத்துடன் ஸ்ரீமகாலட்சுமிக் கிருப்பிடமாகிய மார்பினிடத்திற் பொற்பீடத் தமர்ந்துவீற்றிருக்கும் தேவ

தைகளை மெல்லவெடுத்து நீட்டியகாலையில்மனப்பூரிப்புட னிருகரங்களினுலு மேந்தி என்முன்னோர்களும் நானும்முடித்திருக்கின்றதவப்பேற்றினால் பெற்றே னென்று சிரத்திற்றாங்கி ஆனந்தபரவசத்தனாக விருக்கின்றகாலையில் ஸ்ரீமகா விஷ்ணுவானவர்கருடனை நினைந்துதருவித்துக்கொண்டு அதன்பிடரியில்ஆரோ கணித்து வில்வாள்சக்கரமுதலிய பஞ்சாயுதபாணியாய்நம்மவர்களுடன் திருப் பாற்கடலைக்கடந்துகடல்சூழ்ந்திருக்கும் பூமண்டலத்தைச்சேர்ந்துபவித்திரமா கியநாவலந்தீவிற்போய் தேவதேவோத்தமனாகிய சிவபிரான் ஆனந்த நடனங் களைச் செய்துவரும் தில்லையம்பலத்தைத் தரிசித்துக் கனகசபைக்கு முன்னம் விழுந்துதீர்க்கதண்டன் சமர்ப்பித்துத்தேகபரவசனாய் மனமொருமித்துமொழி களில்ஆனந்தவாரி பெருக்கெடுத்தோடச் சிந்தையானது உயிருக்குயிராய்விள ங்கும்சிவபூரண வெல்லையிலழுந்தி யிவ்விதமாகச்சோர்ந்து நான்குமாதம் அசை வற்று ஆதிமத்தியாந்தமற்ற அரன்பாத நிழலிலடங்கிச் சிவானந்தசெல்வத்தை யனுபவித்திருந்து சிவபிரான் கட்டளையின்படிக்குத் துரியாதீதத்தைக்கடந்து பரவெளியிற்களித்திருந்த உயிரானதுமீண்டு சாக்கிரதசையிற் சேர்ந்தகாலை யில் கருவிகரணாதிகளுக்குக் காரணமாகவிருக்கின்ற உணர்ச்சிமுதலாகிய தத்துவங்கள் தத்தமது ஸ்தானங்களிற்சேர்ந்த போது நித்திரை தெளிந்தவர் களைப்போல ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் உணர்ச்சி பெற்றெழுந்து செந்தாமரை மலரினும் சுந்தரமாகவிளங்கும் சிவபிரான்திருவடிகளிற் பன்முறைபணிந்து வேதவாக்கியங்களினாற் போற்றிசெய்தவராய் ஆலயத்தைவிட்டு வெளிவந்து தேவசேனைகளுடன்போய்ப் பூமண்டலமுற்றினும் வானநாடுகளினும் ஏகசக் கிரத்தைச் செலுத்திக் கொடுங்கோன்முறைமேய அரசுநடாத்திவரும் கொடிய பாதகனாகிய வாற்கலியென்னும் அவுணராஜனை வளைந்துகொண்டு கொடிய யுத்தங்களைச்செய்து சதுரங்கசேனைகளுடன் அவனையுங்கொன்று தென்னாட் டைச்சேர்ந்து விஜயப்பிரதாபத்துடன் ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் அடியேனையுந் தேவர்களையுங் கிருபைபாகப்பார்த்து இனி யாதொரு குறைவுமில்லாமல் உங் கள் பதங்களிற்சேர்ந்து சகலசவுக்கியங்களையும் அனுபவித்து மனவெழுச்சியுட னிருக்கக் கடவீர்களெனத் திருவாய்மலர்ந்து விடைகொடுத்து மறைந்து பழையபடிக்குத் திருப்பாற் கடலைச்சேர்ந்து சேஷசயனத்தி லறிதுயிலமர்ந் திருந்தனர்.

பின்புநான்தேவர்கூட்டங்களுட னிந்தப்பொன்னாட்டை யடைந்தவுடன் கேசவன் மார்பகமே தொட்டிலாகவாசஞ்செய்திருந்த விந்தழலைாயும் அதிக பிரியத்துடன் சாத்திரோத்தமாய் ஆராதனை வழிபாடுகளைச் செய்துவருகின்ற னன். இந்தமுத்தேவருமெனக்குக்கிடைத்தகாரணமிதுவாகும். என்மனத்துக் கினியதோழனே ஒப்புவமையற்ற இவர்களைப் பூசிக்கும்படிக்குக் கொண்டு போக விரும்பினையாதலால் துணிந்துகேட்டனை. மெத்தநல்லகாரியம் உன் னெண்ணப்படிக்குத்தருவது என்னிச்சையென்று ஸ்ரீமகாவிஷ்ணுவினது அனு க்கிரகத்தைப்பெற்று வருவையாகில் தடையில்லாமற் கொண்டுபோகலாமெ ன்றுபிரியமனமில்லாமல், முகத்துக்கிசைய ஒருமார்க்கத்தைக்காட்டியபோது, முசுகுந்தச்சக்கரவர்த்தியானவர்தேவராசன்கருத்தைத்தெரிந்துகொண்டுகல்ல

காரியம், அவ்வாறேபெற்று வருவேனென்று தேவேந்திரனிடத்திற்செலவுபெற்றுப்போய்த் திருப்பாற்கடலிற்பள்ளிகொண்டிருக்கும் விஷ்ணுவைத்தரிசித்துத் திருவடிகளில் வணங்கிப்போற்றிக் கரங்களைக்கூப்பினவனாய் உமாபரமேஸ்வரகுமாரமுகூர்த்தயாகவெழுந்தருளியிருக்கும் தெய்வங்களைக் கொண்டுபோய்ப் பூசிக்கும்படிக்குத் தானிந்திரனைக்கேட்டதையும் அவர்சொன்ன மறுமொழியுஞ்சவிஸ்தாரமாக விண்ணப்பஞ்செய்து கர்த்தனே! தேவரீர்கிருபையுற்று இவ்வரபாலனத்தைத் தந்தாளக்கடவீரென் றிரந்தகாலையில், அரசன் பத்திமைக்கு இரங்கி நீ பரிவாய்க் கேட்டுக்கொள்ளுகிறபடியால் நமது பிராணபதமாகவிருக்கின்ற கடவுளைக்கொடுத்தனம். இப்பிரகாரம் நாம் கட்டளையிட்டதை இந்திரனுக்குத் தெரிவித்துப் பூமண்டலத்திற்கொண்டுபோய்ப் பூசிக்கக்கடவாயெனத் திருவுளம்பற்றியவுடன் மனமகிழ்ச்சியாய்ப் பகவானைத்தொழுதேத்தி விடைபெற்றுத்திரும்பிப்பொன்னுலகைச்சேர்ந்துஇந்திரனுக்குக்கண்ணபிரான், சம்மதத்தைத் தெரிவித்தவுடன் மனந்தளர்ந்து மிகவும் வருந்திவாடிக்கிலேசித்தவனாய், அத்தினம் தன்னை யீன்றருளிய தாயை நீங்கும் இளங்கன்றைப்போல மிகவுமபரிபவப்பட்டு, இனித்தடைசெய்வது தகாததென்று மாறுபாடுசெய்துகொடுத்து ராசாதிராசனையனுப்பிவிடவேண்டுமெனத்தந்திரயுத்திகளை நிதானித்தவனாய், உடனே தோழனைப்பார்த்து நல்லகாரியம் அவ்வாறே தருகின்றேனென்று உபசாரவார்த்தைகளைச் சொல்லியிருத்தித் தேவதச்சனைத் தருவித்து அந்தரங்கமானவிடத்துக் கழைத்துப்போய் முந்தேவர் உருவங்களைச் சரியாகச்செய்வித்துச் சகல அலங்காரங்களையுஞ் செய்வித்துப் பொற்பீடத்திலிருத்தி செல்லவேந்திச் சக்கரவர்த்தியிருக்குமிடத்திற்சென்று துணைவனே! பத்தியுடனிவர்களை யேந்திசகொள்ளக்கடவாயெனக் கள்ள உபசாரங்களைச்செய்யும்போது, வஞ்சகமாகக் காண்கிறதெனச் சந்தேகித்து இருகரங்களையும் நீட்டியேந்திக் குமாரன் திருத்தேவியுடன் வீதிவிடங்கப்பெருமானை ழுந்தருளிம்மூ வென்னும் ஆவலுடன் போற்றும்போது, ஆதியிற்றனக்கருளியவாறே யாதொரு கடாட்சவாக்கியத்தையும் கொடாதகாரணத்தினால் சங்கையுற்றுத் திரிலோகசக்கிரேஸ்வரனே! இத்தோற்றங்கள் தேவரீர் பூசிக்கக்கண்ட தேவதைகளன்று மனமொருமித்து அவர்களைக் கடாட்சித்தனுப்ப வேண்டுமென்று கேட்டவுடன், மீட்டும் அவ்வாறே ஐந்துதரம் மாறிமாறிச் செய்தமைத்துத் தந்தபோதினும முசுகுந்தச்சக்கரவர்த்தி மறுத்தமையால் இனி தாமதப்படுத்தலாகாதென்றெண்ணி ஸ்ரீமகாவிஷ்ணு மார்பகமென்னும் பொன்னூசலாடலை மனத்துக்கின்பாகக்கொண்டு தேவியுங்குமாரனுந்தாமுமாகக் களித்திருந்த எமதிறைவனை மனவருத்தத்துடனேந்திவந்து சக்கிரவர்த்திக்குக்காட்டி, இவர்தானுவென்று வினவியபோது சிவபிரான் கிருபையுற்று இந்திரனுக்குத்தோற்றாமல் முசுகுந்தன்மீது கிருபாநோக்கத்தைப் பாலித்து உன்னிடத்துக்கு உவந்து வந்தோம். இனி இமைப்போதுந்தாழாமல் நம்மைப் பூமண்டலத்திற்குக்கொண்டுபோய் மனமகிழ்ச்சியுடன் பூசிக்கக்கடவை எனச் சர்வசங்காரமூர்த்தியாகிய சிவபிரான் கட்டளையிட்டமாத்திரத்திற் பேரானந்த வின்பசாகரத்தில் மூழ்கினவனாய்ப் பணிந்துபோற்றித் தேவராஜனைப்பார்த்து

ஸ்ரீமகாவிஷ்ணு மார்பிடங்கொண்டிருந்தவரிவர்தான் திரிலோகச்சக்கிரேஸ்வர தனையசெய்து இத்தேவனைத்தரவேண்டுமெனத் திருவடிகளிற் பணிந்தகாலையில் முசுகுந்தன் அன்புக்கிரங்கி துணைவனே! நான் முன்னங்கொடுத்த ஆறுதேவதைகளுடனிவனையும் சகலவளங்களையுங்கொண்டிருக்கும் பூமண்டலத்திற்கொண்டுபோய் மகத்துவமுள்ள கமலாலயமுதலிய தலங்களிற்றாபித்துப் பத்திபூர்வகமாகப் பூசனைவழிபாடுகளிற் குறைவின்றி நடப்பித்துவரக்கடவையெனப்பேசி, முசுகுந்தன்கரத்திற்கொடுத்துப் பலவுபசாரவார்த்தைகளைப் பேசி விடைதந்தனன்.

அத்தருணத்திற் றேவதேவோத்தமனைச் சிரத்திலேந்தி மனப்பூரிப்புடன் ஆனந்தித்துக்கொண்டு தன்பரிவாரங்களுடன் ஜயசாலியாய் பொன்னகரைக்கடந்து, மங்கலவாத்தியங்கள் முழங்கப் பூமண்டலத்திலிறங்கிச் செல்வவளங்கள் மிகுத்துத் தென்பிரதேசத்தில் லோகப்பிரசித்தமாகப்புகழும் மகத்துவமும் சிவபிரான் மனமகிழ்ந்துவீற்றிருக்கும் பெருமையையுமுடைய திருவாரூரென்னும் சிறந்தபதியில் வானத்தையளாவியமதில் கோபுரவாயில்கள் மண்டபமுதலிய அலங்காரங்கள் மிகுந்திருக்கும் ஆலயத்திற் பிரவேசித்து ஆகமவிதிப்படிக்குத் தேசிகரால் சகலசடங்குகளையும் முடிப்பித்து மங்கலவாத்தியங்கள்முழங்கப் பிராமணர் வேதங்களையோத இவ்வித மகோற்சவங்களை நடப்பித்தபின்பு பரிமளமிகுத்த திருத்துழாய்மாலையின் மணமருத் திருத்தோள்களையுடைய ஸ்ரீமகாவிஷ்ணு மார்பகத்திலெழுந்தருளியிருந்த சிவபிரானைச் சொர்ணமயமாகவிளங்குகின்ற சிங்காதனத்தினிடத்திற்றாபித்துத் திருமஞ்சன தூபதீப நைவேத்தியமுதலிய சோடசவுபசாரங்களினுற் பூசனைவழிபாடுகளைக் குறைவறநடப்பித்துச் சோடசமகாதானங்களைவழங்கி தேவர்களும் பிரமித்துப் புகழும்படிக்கு அதிகசிறப்புடன் திருவிழாவைச்செய்வித்து மனமகிழ்ச்சியுடன் பரமனைப்பன்முறை பணிந்துபோற்றி விழிகள் களிக்கத்தரிசித்து இவ்விதமாக வேண்டும் சிறப்புகளனைத்தையும் முடித்தபின்பு தேவேந்திரன் படைத்துக்கொடுத்த மற்றதேவர் அறுவரையும் நாகபட்டணம் திருநள்ளாறு, திருக்காறாயல், திருக்கோளிலியூர், திருவாய்மூர், வேதாரணியம இந்தச்சிறந்ததலங்களில வேதவிதிப்படிக்குச் சகலவுபசாரங்களையுஞ் செய்வித்து எழுந்தருளச்செய்து அருச்சனை வழிபாடுகளிற்குறைவறநடத்திவைத்து ஆனந்தபரவசத்தனாய்த் தீர்க்கதண்டன்சமர்ப்பித்து விழிகள்களிக்கத்தரிசித்து வாயாரவாழ்த்தி மனம்பூரித்தவனாய் ஆகமசாத்திரோத்தமாய்த் திருவிழாமுதலிய சிறப்புகளனைத்தையும் நடாத்தி அவ்வாறே வருஷந்தோறுங் குறைவறமுற்றுப்பெறும்பொருட்டு மானியங்கள் ரொக்கங்கள் முதலியவற்றைத் திட்டஞ்செய்து, மேற்குறித்தபடிக்குந் தாம் தெய்வலோகத்தி லிருந்துகொண்டுவந்த தேவதைகளை ஸ்தாபித்தபின்பு மனவெழுச்சியுடன் மந்திரிபிரதானிகள் சேனைத்தலைவர்கள் நால்வகைச் சயினியங்கள்சூழ்ந்து மங்கலவாத்தியங்கள் திசைகளதிரமுழங்கிவரப்போய்த் தனக்கு இராசதானியாகவிருக்கின்ற கருவூரென்னும் வளமிகுந்த பட்டணத்தைச்சேர்ந்து, சகலசம்பிரமங்களுடனும் அரண்மனையிற் பிரவேசித்து நவரத்தினமயமாகிய சபாமண்டபத்தில்

விளங்கும் அரியணையில்வீற்றிருந்து செங்கோன்முறையே அரசுரிமைகளைச் செலுத்தி அளவற்றகாலம் துட்டநிக்கிரகசிஷ்டபரிபாலனங்களைச்செய்து வாழ்ந்திருந்து மன்னுயிரைத் தன்பிராணனைப்போலவெண்ணி, யாதொருகுறைபாடுமில்லாமற் களித்திருக்கத்தக்கதாகப் பாதுகாத்துவருகின்றதருணத்திற் பரமசிவகடாட்சத்தைநினைந்து பழையபடிக்குத் திருக்கயிலையைச் சேரவிருப்புற்றவனாய்த் தன்குமாரனுக்குப் பட்டாபிஷேகத்தைச் சகலாடம்பரங்களுடனும் செய்துமுடித்து, மந்திரிபிரதானிகளைப் புத்திரனருகிலிருந்து நீதிகளைத்தெருட்டி உலகபாலனத்தைச் செய்வித்துவருவதாகப் பலநன்மொழிகளைப்பேசி, யாவரிடத்தினும் விடைபெற்றுக்கொண்டு இல்லறத்தைத்துறந்து தவவேடம் பூண்டுகானகத்திற்போய் அரியதவங்களைச்செய்தவனாய் பெறுதற்கரிய சிவபதவியைச்சேர்ந்து யதாப்பிரகாரம் ஞானநாயகனாகிய சிவபிரானை எத்தேசகாலமும் தரிசித்து வணங்கிப்போற்றிச் சுகாதீதசெல்வத்தை யனுபவித்திருந்தனன். ஆதலால் சவுனகாதிமுனிவர்களே! சிருஷ்டிகர்த்தனாகவிருக்கின்ற பிரமதேவனாலறியப்படாத வேதங்களின் மூலத்தைத்தெரிந்த பாலசுப்பிரமணியதேவருக்குரிய விரதங்களை எத்தகையாராயினும் பத்திவைராக்கியங்களுடன் பூசித்துவழிபடப்பெறுவாராயின் அவனருளின்முயற்சியினால் இம்மையிற்பெறத்தக்க சகல செல்வவளங்களையும்பெற்று உலகமெங்கும்போற்றவாழ்ந்து மறுமையினும் தெய்வவிமானத்தேறி விண்ணவர்போற்றப் பேரின்பவீடடைந்து கண்ணுதலின் திருவடிநிழலிலிருப்பார்.

முசுகுந்தன்கந்தவிரதப்படலம்
முற்றிற்று.

வள்ளிநாயகியார்திருமணப்படலம்.

வெள்ளியங் கிரியினோர்சார் விளங்கிய கந்தவெற்பி
னுள்ளுறு நகரந்தன்னி னங்கையோ டினிதுமேவு
மள்ளிலை வேற்கைநம்பி யப்புவி யெயினர்போற்றும்
வள்ளியை வதுவைசெய்த மரபினை வழாதுசொல்வாம்.

சூதபுராணிகர் மற்றசரித்திரங்களையுஞ் சொல்லுவதாயினர். ஓ! நைமிசாரணியவாசிகளே! முற்கூறித்திருக்கிறபடிக்கு வெள்ளியங்கிரிக்கொருபாரிசமாய்ப் பலவுன்னதமான முடிகளுடனோங்கியிருக்கின்ற கந்தமாதனபருவதத்தினிடத்திற் பொன்மயமாகியமாடமாளிகைகள்முதலிய சிறப்புகளைப்பெற்றிருக்கும் நகரத்திற் றெய்வநாயகியாருடன்கலந்து இன்பநலங்களையனுபவித்திருந்த குமரநாயகன் கருங்கடல்சூழ்ந்திருக்கும் பூமியின்கண் வேடர்போற்ற வளரும் வள்ளியம்மையைத் திருக்கலியாணஞ்செய்து உபநாச்சியாருடனும் வங்கணமாகக்குலவியிருந்த கதாப்பிரசங்கங்களையுங் கேட்பீராக. பிரமன்படைத்த இவ்வண்டத்துக்கு ஆவியைப்போல வளமைகளனைத்தையும்பெற்றுச் சிவபிரான் மனத்துக்கினிமையாகவெழுந்தருளத்தக்க சிறப்பினையுடைய தேவாலயங்களையும், தம்மிடத்து சூழ்கினவர்களைமுத்தியிற்சேர்க்கும் மகத்துவங்களைப்

பெற்றிருக்கும் நதிகளையும், மற்றசெல்வச்சம்பத்துகளையுங் குறைவறப்படைத்திருக்கின்ற தொண்டைநாட்டினிடத்திற் சுனைகள் காவுகள் சோலைகள்தினைப்புனங்களாதிய வனங்கள் மிகுந்துச் செழித்திருக்கும் மேற்பாடியென்னும் பதியொன்றுண்டு. அதற்கருகில் வானத்தையளாவப்பருத்தோங்கிய பருவதமொன்றிருக்கின்றது. அதன்பெருமிதங்களிற் சிலவற்றைச் சொல்லக்கேட்பீராக பூருவத்தில் ; விசயம்பொருந்திக் கீர்த்திக்கொப்பற்றிருந்த மாபலிச்சக்கிரவர்த்தியினிடத்தில் மூன்றடிமண்ணிரந்து மண்ணையும் விண்ணையுமளந்தருளிய ஸ்ரீமகாவிஷ்ணுகொண்ட விசுவரூபத்துக்கொப்பாக மேலோங்கியிருப்பதனாலும் சிரோரத்தினங்கள்வாய்ந்த நாகங்கள்படங்களைவிரித்தாடியுலவுவதினாலும் இளஞ்சந்திரன் நெருங்கிப்போவதினாலும் தவளநிறம்பெற்ற அருவிகள் பிரபலமாய்ப்பெருகுவதினாலும் ஆத்தி, குரவு, கொன்றை, கூவிளம், இத்தருக்கள்நிறையப்பூத்து மலர்களையிறைத்து வருந்தன்மையினாலும் மானினங்கள் உலாவுவதினாலும் கூரியகோடுகளையுடைய மதயானைகள் வீறிட்டுலவுங்காரணத்தினாலும் அவ்வரையைப் பார்க்குமிடத்தில் முப்பத்துமுக்கோடிதேவர்களும் நாற்பத்தெண்ணாயிர முனிவர்களும் மிகுந்தபயபத்தியுடன் தொழுதுபோற்றும் பெருமையையுடைய உமாமகேஸ்வரராகிய சிவபிரானை நிகர்க்கும். மேலும் அது பவித்திரமாகிய வானகங்கையினின்றுபெருகும் அருவிநீர்த்தாரைகளும் காருண்டநீலமேகங்கள் கவிந்தடர்ந்து இருப்பதைப்பார்க்குமிடத்தில் மான்தோலினையும் முப்புரிநூலினையுங்கொண்டிருக்கும் மார்பையுடையசதுர்முகனைப்போலத்தோன்றும். குமாரசுவாமியார் குறமங்கையினிடத்திச்சைகொண்டு சில திருவிளையாடல்களைச்செய்தமரவிருக்கின்றதைத்தெரிந்துநசித்திட்டேறு மாசைதூண்ட அலைகள்பெருத்த வானகங்கையிற்றோய்ந்து பரிசுத்தமாயிருக்கவெண்ணிச் செல்வதையொப்ப தேன்களைச்சொரிந்தும் மகரந்தங்களையிறைத்துப் பரிமளித்திருக்கும் குளிர்ந்த மலர்மாலையையணியும் புயாசலங்களையுடைய சிவசுப்பிரமணியக்கடவுள் சிலகாலங் காளைப்பருவத்தைமேற்கொண்டு நடனங்களைக்காட்டி மனவெழுச்சியுடனுலவும்படிக்குக் கற்புக்கரசியாகிய வள்ளிநாயகியாரைத் தன்னிடத்திற்படைத்திருக்கும்மகத்துவத்தைப்பெற்று அப்பேற்றினால் வள்ளிமலையெனப்பலரும் புகழத்தக்க சிறப்புப்பெயரைக்கொண்டிருக்கும் அப்பருவதத்தின் மேன்மைகள் எத்தகையராலும் கணித்துப்பேசக்கூடியதன்று.

இவையன்றி இன்னும் சிலசிறப்புகளைத் தெரிவிப்போம். சிவந்துகாட்டும் குன்றிமணிகளும், அச்சாரலினிடத்து முளைத்து மேலோங்கி அதிகவோசையைக்காட்டி அசைந்திருக்கும் மூங்கில்களொன்றுடனொன்றுதாக்கியும் உராய்ந்து வெடித்துதிர்ந்துபுரளும் பெருந்தமுத்துகளும், காளிகாளியென்னும் விஷப்பற்களையுடைய சர்ப்பக்கூட்டங்களுமிழ்ந்துவரும் சிரோரத்தினங்களும், வரைமுற்றுமடர்ந்து கிரணங்களைப்பரப்பிவிளங்குவதெப்படிக்கிருக்கின்றதெனில் நட்சத்திரக்கூட்டங்களானவை ஆயிரங்கிரணங்களைப்பரப்பியெழுந்த சூரியனது வெம்மைக்காற்றாது நிலைகுலைந்துவிழுந்து கிடக்குமாறுபோலத்தோற்றுகின்றன. செழிப்பாகப்படர்ந்திருக்கின்ற முல்லைக்கொடி

களினிடத்தில் மலர்கள் மலிந்திருப்பதினாலும் பருத்தமூங்கில் நீப்பட்டிறைக்கும் முத்துகளினாலும் தழைத்தோங்கிக்குளிர்ந்த நிழலைப் பரப்பியிருக்கும் சோலைகளினிடத்தில் தேனைச்சொரியும் பூங்கொத்துக ளணிபட்டுத்தோங்கும் சிறப்பினாலும் சோடசகலைகளையுடைய சந்திரனும் தாரகாகணங்களும் ஒன்றுபட்டுதிர்த்ததை பொப்பவிளங்கவும் வண்டினங்கள் ரீங்காரத்தொனிகளைச் செய்துவந்திறங்கி யுண்ணும்படிக்கு மதுரமிகுத்ததேன்களைச்சொரியும் நீலோற்பலம், செந்தாமரை, வெண்டாமரை, அல்லியாதியாகிய மலர்வகைகளை விரித்துப் பரிமளங்களைவீசி ஆழ்ந்து மதுரசலப் பெருக்கையுடைய சுனைகள் அச்சாரலினெல்லை முற்றுந் தோற்றுவதைப் பார்க்குமிடத்தில் யாவராலுங் கண்டறியவொண்ணாத மகிமையையுடைய கந்தசுவாமியார் வேடமங்கையைக்குறித்து அத்தலத்தில் மாயவுருக்கொண்டு பற்பல திருவிளையாடல்களைக் காட்டவிருக்கின்றமையால் அக்காட்சிகளைத்தரிசித்துக் களிக்கும்பொருட்டு அப்பருவதமானது பலவிழிகளைக்கொண்டு முன்னெச்சரிக்கைப்பட்டிருப்பதற்கொத்தும்வானத்தையளாவ வோங்கியிருக்கும் வள்ளிமலையின் மேற்புறத்திற் பாந்தசுனைகள் சலநிறைவு பெற்றிருப்பதைக் குறிக்குமிடத்தில் சூரியசந்திரர் முதலிய தேவர்கள் சரவணபவன் நடத்தவிருக்கின்ற வேடிக்கைக்காட்சிகளையும் திருக்கோலப்பொலிவையுங் கண்டுகளிப்பதாக மண்மடந்தையானவள் பற்பல கண்ணாடிகளைப் பரப்பிவைத்ததைப்போல விளங்கவும் பிரகாசம்பொருந்திய தளிர்களையுடைய வேங்கைமரத்திற் கிளைத்திருக்கின்ற கிளைகளினிடத்துலவி அசோக விருட்சத்திற்றாவி விளாமரங்களிற்பாய்ந்து விளையாடித்திரியும் குரங்கினங்களை வலிபெற்ற மந்திகளானவை உருத்தகாலத்திற்பயந்து மீள்வதை யோசிக்குமிடத்தில் பதிதனைவிரும்பவலனைச் சிறந்த தியாகிகளாகவெண்ணித் தரித்திரராக விரும்பவர்கள் சேர்ந்து அகமுசப்பொலிவற்றுப் பற்களைக்காட்டி யிருகரங்களைநீட்டித் தனக்கடுத்திருக்கின்ற வறுமைகளையுந் துக்கவருத்தங்களையும் மனக்கலக்கத்துடன் சொல்லியிரந்தகாலத்தில் அன்பாய்வாவென்றழையாமல் மனம்வருந்தித் தேகங்குன்றி வாடும்படியிகழ்ந்து வசைபடப்பேசி வேட்டைநாயைப்போல மேல்விழுந்து துரத்துகையில் அந்தயாசகர் மனவாட்டத்துடன் திரும்புமாறுகாட்டவும் செங்காந்தள் மிகுதியாய்ப் புஷ்பங்களைவிரித்துப் பிரகாசித்திருக்கும் குளிர்ந்த சோலைகளில் மனவெழுச்சியுடன் புள்ளிபட்டிருக்கும் கலாபத்தைவிரித்து மயிலினங்கள்நடித்துத் திரிவதைப் பார்க்குமிடத்தில அச்சாரலிற் பருத்தோங்கியிருக்கும் மூங்கில்கள்காற்றினாலசைவுகொண்டு ஒன்றோடொன்று உராய்ந்திருக்கும் அனற்பொறிகள் தெறிவிழுந்து சருகுகளிற்பற்றிப்புகைந்திருப்பதற்கொத்தும் காமத்திற்பட்டலையும் மனத்தராகிய காளையர்கள் குலமகளிரை யெதிர்த்தவுடன் பகற்போதென்றும் பாராமல் அவர்கள் கரங்களைப் பற்றியணைத்து இன்சொற்களைப் பொழிந் தில்லங்களிற் கொண்டுபோகும் கருத்தையறிந்து பிறர் தூறுதலுக்கஞ்சிச் சிலபாசாங்குகளைக் காட்டி விலக்குமாறுபோலப் பருவதத்தின்மேற் பரப்பித் தழைத்தோங்கியிருக்கும் குளிர்ந்த சோலைகளிலிராநின்ற வேங்கைமரங்கள்பசியவிலைகள் தழைத்து நீண்டிருக்கும் கிளைகளைப்

பாப்பி வாசனத்திற்செல்லும் சூரியனது கிரணங்களானவை தடாகங்களிற் புஷ்பித்திருக்கும் தாமரை மலர்களிற்பாய்ந்து களிக்க விருப்பதைத் தடைசெய்து கவிந்திருக்கவும் காமவெறிகொண்டு மும்மதங்களையும் பெருக்கி வரையின்மீதில் இடிகளைப்போல வீறிட்டலைவும் யானையின் முழக்கத்தை அதனடிவாரங்களிலிருக்கும் குகைகளிற்படுத்திருந்த வீரசிங்கங்கள்கேட்டமாத்திரத்திற் சீறிப்பாய்ந்து வெதும்பிநாற்றிசையினும் விழிகளைப்பரப்பி நாடுவதைப் பார்க்குமிடத்திற் பிரகலாதாழ்வான் எங்கும்பரிபூரணமாக நிறைவெய்தியிருக்கும் ஸ்ரீமந்நாராயணனே பரமெனப்பேசிய வாசகத்தைச் செவிகளிற்கேட்டமாத்திரத்தில் வடவையைப்போற்கொதித்து இரணியன் கரத்தையோங்கி யெங்குமிருப்பவன் இதிலுமிருப்பானோவென்று தனக்கெதிரில்நிற்கின்ற தூணிடத் தறைந்தகாலையில் அதுவெடித்து அதனிடத்தெழுந்தருந்து அவுணராஜனைப் பிளந்துகொன்ற நரசிங்கமூர்த்தியின் கர்ச்சிதத்தை யொப்பக்காட்டவும் வள்ளிமலைச்சாரலில்வாசஞ்செய்திருக்கின்ற வேடர்கள்காலங்கருதிக் குறிஞ்சித்தினைப்பறையைமுழக்கி அக்குறிப்பினால் வானத்தில்மேகங்கள் பரவி மழைபெய்யவிருக்கின்ற பிரயோசனத்தைப் பலருக்குந் தெரிவிப்பவர்களைப் போலச்சந்திரன் சோடசகலைகளைவிரித்து அமுததாரையைப்பெருக்கி வருவதைக்கண்ட எண்காற்புள்ளானது தழைத்திருக்கின்ற சிறகையசைத்துச் சந்தோஷமாய்க் கூவுங்குரலோசையினாற் றெரியக்காட்டியவுடன் மலைப்பாம்புகளிடைவிடாமற் சத்தித்திரை தேடித்திரியவும் விசாலமாகிய விண்ணகத்தில் அதிர்ச்சிகாட்டவும் மதயானைகள் வீறிட்டுக்காமமிகுதியினால்பிடிகளைத்தழுவித் திரியவும் வீரசிங்ககங்கள்கர்ச்சித்து உறுமிப்புலவவும் இத்தகைய பற்பலவளங்கள் பெருத்திருக்கின்ற வள்ளிமலைக்கருகில் வேடர்திரட்சியாய் வாசஞ்செய்யுமொருசிற்றூரானது சண்முகப்பெருமாள் பிற்காலத்திற் றன்னிடத்திற்சேர்ந்து திருவிளையாடலைச்செய்வதற்கு விருப்புற்றுப் பொன்னகரமானது அரியதவங்களைமுடித்து இறங்கிவந்திருப்பதை யொப்பச்சிறந்ததாய் யாதொருகுறைவுமில்லாமல கண்டவர்கள் விழிகளுக்கணியாகச் செழித்திருக்கும் அந்தக்குறிச்சியில் வாசஞ்செய்யும் கிராதர்களெனைவருக்கும் அரசனாய் அவர்களைப்போற்றிச் சிவகுமாரன் திருநாமங்களிலொன்றாகிய குமாரனென்னும் பெயரைப்படைத்திருப்பவனொருவனுண்டு. அவன் தன் துணைவியுடன் சுப்பிரமணியக்கடவுளைக் குறித்து அளவற்றகாலம் செய்துவந்த விரதபலத்தினாற் சிலபிள்ளைகளைப் பெற்றுப் புத்திரியில்லாமையால் அந்தப்பாக்கியத்தையும் கிடைத்துக்களிக்க விருப்புற்றவனாய்த் தங்கள் குலதேவதையாயிருக்கின்ற சுப்பிரமணியக்கடவுளுக்குப் பூசனைவழிபாடுகளைச்செய்தும் திருவிழாவைச் சம்பிரமமாகநடத்தியும் வெறியாடல்களைமுடித்தும் இவ்விதங்களாகப் பத்திவயிராக்கியத்துடன் தேன் தினைமா கனிவகைகள் பாற்சோறுமுதலிய நைவேத்தியங்களைத்திருப்தியாகப்படைத்துத் தன்பந்துவர்க்கங்களுக்கு விருந்திட்டுச் சகலசிறப்புகளுடன் கோடித்து வருகின்றகாலங்களில் நேர்ந்தசம்பவங்களையுஞ் சொல்லக் கேட்பீராக.

மேற்குறித்திருக்கின்ற மலைச்சாரலினருகிற் றழைத்தோங்கியிருக்கும் சோலையின்கண் சிவமுனியென்னுந் தவசிரேஷ்டர் பர்னசாலைசெய்துகொண்டு அதில்வீற்றிருந்து பஞ்சேந்திரியச் சேட்டைகளைவென்று விஷயவாஞ்சைகளை யடக்கிச் சித்தத்தைச்சிவத்தின்பாதாரவிந்தங்களிலிருத்தி மனத்தைஒருவழிப் படநிறுத்தி அரியதவங்களைச்செய்து பிரமவிஷ்ணுக்கள்தேடிக்காண்பரிய சிவ பிரானுக்குரிய சைவவிரதத்தைக்குறைவறப்போற்றி வருகின்றனகாலையில்பரு த்துச்சுழன்றுநோக்கும் விழிகளையும் சிறுத்ததலையையும் செறித்தசையும் நீண்டகாதுகளையும் மெல்லியதாய்க்குறுகியிருக்கும் கால்களையும் புள்ளிபட்டுப் பொன்னையொப்பச் சுந்தரமாகவிளங்கும் தேகத்தையும் மயிர்ச்செறிவையும் சிறுகுளம்புகளையும் பெற்றிருக்கின்ற பெண்மானொன்று கண்டவர்கள் பிர மித்துநோக்கும்படிக்குவந்து தவச்சாலைக்கெதிரிற்பாய்ந்தும் புற்களைமேய்ந்து உலவியிருக்கின்றகாலையில் சிவமுனியானவர் வெற்றிவேலாயுதக்கடவுளினது திருவருளினாற்றோன்றிய பொன்மயமாகிய பெட்டைமானைப் பார்த்தவுடன் ரூபலாவண்ணியங்களைப் பெற்றிருக்கின்ற தருணமங்கையை நேர்ந்தகாமு கனைப்போல் மதிமயங்கிப்பிரமித்துக் காமக்கவலையிற்பட்டுவாடும் மனத்தனு னாய்ச்சொர்னச்சாயையுடைய பிணையினிடத்தில்மையலுற்று அதிகதிப்பிரமை கொண்டு தவத்தினிடத்திற் பொருந்தியிருந்த மனவுறுதியழிந்து ஊமத்தங்கா யைத்தின்றவனைப்போல உன்மத்தனாய்ச் சர்ப்பபடத்தைப்பழித்த நிதம்பத் தைக்கொண்டிருக்கின்ற அரம்பாஸ்திரீகளிடத்திற்றேவர்கள்புணர்ச்சிப்பயனைப் பெறுமாறுபோலக் காட்சியினால் இன்பநலத்தையடைந்து நினைத்தற்கரிதாய்த் தன்னைவருத்தியிருந்த விகாரத்தையொழித்து மெய்ப்புணர்ச்சியை அனுப வித்ததாகக்களித்து உடனே புனலிற்படிந்து பரிசுத்தனாய்ப் பழையபடிக்குச் சிவபிரானைக்குறித்துத் தவஞ்செய்திருந்தனன். அந்தச்சிவயோகியினது திரு ஷ்டி சம்பந்தத்தினாற் பெண்மானுடைய வுதரத்தில் ஞானவான்களுக்கன்றி வெளிப்படாத ஸ்ரீமகாவிஷ்ணுபெற்ற கன்னிகை அந்நலத்துக்கருகிற் றவஞ் செய்திருந்தவள் கிரவுஞ்சவரையைப்பிளந்த வெற்றிவேலைத்தாங்கிய சிவசுப் பிரமணியக்கடவுள் கட்டளையின்படிக்கு மான்மருகனிடத்திற்காமுற்றிருந்தும் மானுக்கினிய மகளானவள் அந்தருணத்தைத்தெரிந்து சொர்னச்சாயலை யுடைய பெண்மான்வயிற்றிற்பிரவேசித்திருந்தனள். பின்பு அந்தமானானது அத் தலத்தைக்கடந்து புனமெங்கணுமுலவியும் பசியபுற்களைமேய்ந்தும் சுனைநீரை யுண்டும் வெய்யிலுக்குத்தோப்பிலிடங்களிற்றங்கியும் வள்ளிமலையின்மேலேறி அவ்விடத்தில் வளர்ந்திருக்கும் தினைப்புனங்களைத்தாண்டி வேடமங்கையர் செவ்வரிபரந்த விழிகளைப்போலப்பாய்ந்து வள்ளிக்கொடிகள் நாட்டியிருக்கும் கொல்லையிற்போய்ச் சுப்பிரமணியக்கடவுள் மனத்துக்கினிய லோகநாயகி யைச்சுமந்திருந்துவருந்திகின்று பூரணகருப்பமாய்த் தள்ளாடித்திரிந்து பிரசவ காலம்நேர்ந்ததால் வயிறுளைப்பெடுத்து மிகக்கதறி வேடப்பெண்கள்சில்லாக் கோலினால் வள்ளிக்கிழங்கைக்கல்லி யெடுத்திருக்கும் குழிகளிலொன்றில் வள்ளிநாயகியாரையீன்றது.

சவுனகாதிமுனிவர்களே! இப்புதுமையென்ன சொல்லுவேன் தலையணி காதணி, முத்தாரம், மோகனமாலை. கடகங்கள், பாதசரம், சிலம்பு, இத்தன்மையாகிய பூஷணங்களைத் துறந்து வள்ளித்தழைப்பாயலில் அவ்விலைகள் தேகமெங்கணு மூடத்தக்கதாக வுணர்ச்சியற்று ஒப்புவமையில்லாத எம்மிறைவி மானினிடமாகத் திருவவதாரஞ்செய்தனள், இதுவுமொரு திருவிளையாடலாக நினைப்பதன்றி வேறுமுண்டோ? அந்தப்பெண்மான் சற்றுநேரத்தி லிளைப்பாறி மெல்லவெழுந்து இரத்தினவளையல்களைத் தரிக்குங் கரகமலங்களையுடைய பெண்குழந்தையைப்பார்த்து இது நம்மினமன்றி வேற்றுருவாகக் காணுகின்றதென்றெண்ணி மருண்டு பயந்தோடிப்போயிற்று. இப்படிக்குத் தாயாகச்சுமந்துபெற்ற மான் தனித்துவிட்டு நீங்கியகாலையில் ஒப்பற்ற தலைவியானவள் ஏகாங்கியாய்ப் பசியினால்வருந்திக் கைகால்களையுதறிக் கின்னரிப் பட்சியினோசையோ மகரயாழினொலியோ பிரமன்நாவிலெழுந்தருளியிருக்கும் சரஸ்வதிதேவியினது இன்னிசையின் பெருக்கோவெனக் கேட்டவர்கள் சந்தேகிக்கும்படி காவுகாவென்றழத்தொடங்கினள். அத்தருணத்தில் பாலசுப்பிரமணியக்கடவுள் அருட்டிறத்தின் முயற்சியினால் வேடர்களுக்கரசன் தன் தேவியுடன் தம்மினத்தவர் பலர்சூழ்ந்துவரத்தக்கதாக தினைப்புனங்களைப் பார்த்துப்போக நினைத்து அத்தலத்தில்வரும்போது அம்மை யெழுந்தருளியிருக்கின்ற கொல்லையில்நுழைந்து குழந்தை யழுகையினோசையைச் செவிகளுக்கினிமையாகக்கேட்டவுடன் தேவியுந்தானுமாய் அதிசயித்து இத்தகைய மதுரமாகிய குரலோசை யிவ்விடத்துண்டாகுங் காரணமேதோவென்று திகைத்துத் துரிதமாய்நடந்து அறிவுபட்டிருக்கும் வள்ளிக்குழிகளினொன்றிலிருக்கின்ற தூண்டாவிளக்கம்போன்ற கரியகூந்தலையுடைய பெண்ணரசியைப் பார்த்தமாத்திரத்தில் வேடராசனுக்குத் தேகபரவசமாய்ப் பிரமித்துக் கரங்களைக்கொண்டு மெல்லவெடுத்துப் பின்பற்றிவருகின்ற துணைவியைக் கூவி பெண்கள்சிகாமணி கிடைத்தனள், என்தாய் எளிதிலகப்பட்டனள், வாவாவென்றழைத்து நெருங்கியவுடன் தேவிகரத்திற்கொடுத்துச் சந்தோஷசித்தனாய் புயத்திலமாட்டியிருந்த வில்லையெறிந்துவிட்டுந், துள்ளித்துள்ளிப் பாய்ந்தும் பிழைத்தோம்பிழைத்தோமென்று அங்குமிங்குமாயோடியும் கூக்குரலிட்டும் ஆனந்தவெள்ளத்திலழுந்திக் களித்தும் பற்கள்வெளிப்பட நகைத்தும் இனி எனக்கிணை யாவரிருக்கின்றனரெனப் பருத்திருக்கின்ற புயங்களைத் தட்டியும் முற்பிறப்பிற்பெரியார்களுடன் நானென்னதவங்களைமுடித்தேனோ யாதுந்தோற்றவில்லையென்று பலவிசைபேசியும் விழிகளில் ஆனந்தவாரியைப் பெருக்கித் தேகம்பூரித்து மயிர்சிலிர்க்க தனக்குக்கிடைத்தபேற்றை யெண்ணியெண்ணிப்பொங்கியும் இவ்விதங்களாக வேடர்பெருமான்கொண்ட மகிழ்ச்சியின்பெருமை யாவராற்சொல்லிமுடியும். இத்தகையகளியாடல் நடந்துவருகின்றகாலையில் வேடர்களுக்கரசியானவள் தன்கணவனிடத்திலிருந்த பெண்ணமுதைத் தன்கரங்களிலேந்தியவுடன் பிரசவகாலத்திலுண்டாகும் வருத்தமும் இளைப்பும் மற்ற குறிகுணங்களுங் காட்டப்பிள்ளையைப்பெற்ற காலத்தினும் அதிக மனமகிழ்ச்சியைப்பெற்றுத் தேகப்பசித்துக் கொங்கைகள் பூரித்

துச்சொரிகின்ற பாலமுதத்தை தெவிட்டக்கொடுத்து முதுகைத்தடவி முத்தமிட்டு உச்சியைமோந்து தழுவி இவ்விதங்களிற் சீராட்டும் கொடிச்சிக்கு அக்காலத்திற்கிடைத்த மகிழ்ச்சிக்கோரளவுமுண்டோ! உடனே வேடராசன் வீசிப்போட்ட வில்லையெடுத்துக் கரத்திற்பற்றிக்கொண்டு இனைப் புனங்களையும் வள்ளிக்கொல்லைகளையுந் தேவிபுத்திரியுடன் இமைப்போதிற் கடந்து தன்பதியாகிய சீறூரைச்சேர்ந்து விடுதியிற்போனவுடன் தேவாமுதத்துக்கொப்பாகிய மகளைப்பெற்றபடியால் அதிகமகிழ்ச்சியைக்கொண்டு களித்தவனுய்வலியகால்களையும் வெள்ளியங்கிரிக்குச் சமானமாகவிளங்கும் தேகத்தையும்படைத்திருக்கும்நந்திவாகனத்தையேறிநடாத்தும்சிவபிரான்வருக்கமாநுதல்விழியி லவதரிக்குங் குமாரநாயகன் திருவடிகளைவழிபட்டு வேடர்கள் திரண்டு குறிஞ்சிப்பறையாகிய தொண்டகத்தைத் திசைகளதிர முழக்கிவர்ச் சந்தோஷமிகுதியினால் ஆண்பெண் வேற்றுமையின்றிக் கரங்களைக் கோத்துக்கொண்டு குலாசாரப்படிக்குக் கூத்தாடும் சம்பிரமங்களைச்செய்வித்தும் பின்பு தேவராட்டிமுதலிய வனதேவதைகளுக்குப் பலிகொடுக்கயத்தனித்துப் பூசனைவழிபாடுகளை முடிப்பித்து ஆட்டுகளின்முகத்தைக்கழுவிப் பச்சரிசிமஞ்சளை யரைத்துப்பூசி வளைந்தகோபுகளில புஷ்பமாலைசூடிச் சந்நிதிமுன்கிடத்தி வாளினாற்கண்டித்தும் கோழிகளைச்சுற்றிவிட்டும் இவ்விதபூசனைகள் முற்றியவுடன் வெற்றிவேலாயுதபாணிக்குரிய சிறப்புகளைக்கொடுத்துத் தேவமருள்கொண் டிருக்கிறவன் வேலைக்கரத்திற்றாங்கி முன்செல்லவும மற்றையர் ஆவேசங்களுடன்குறிகள்சொல்லிக்கூத்தாடும் உற்சவங்களைமுடித்து இவ்விதமாகச் சகலசிறப்புகளையும்செய்வித்து வேடருடன் அரசன்களித்துத் தம்மினத்தவருக்கு விருந்திட்டு சுபங்களைக்கொண்டாடிவருகையில் அருந்ததியையொத்த கற்புத்தன்மைபொருந்திய வேடராசன்தேவியானவள் அரிதிற் கிடைத்த பெண்குழந்தையை முழுக்காட்டி நெற்றியில் திருநீறணிந்து திலப்பொட்டுமிட்டு என்தாய் அலசினளெனப் பரிவாய்யானைத்தந்தங்களினாற் கால்கள் சட்டங்களைச்செய்து புலிகராடிகங்களை அதனிடைகளில் வரிசைப்படப் பதித்து முத்துக்கோவைகள் பலகறைத் தாழ்வடங்கள் சிரோரத்தினமாலைகளை காற்புறங்களினுந்தொங்கவிட்டு பொன்னையொப்பவிளங்கும் கண்களையுடைய மயிலினது பிஞ்சங்களினால் அலங்காரமாகச்சோடித்திருக்கும் தினைமுற்றினும் சூல்வரக்காட்டிப் புலித்தோலைப்பாயலாவிரித்திருக்கும்பூந்தொட்டிலினிடத்திற்சேர்த்து மெல்லவசைத்து என்கண்மணியே பெண்கலிதீர்க்கவந்த பெருமாட்டியே குலதெய்வமே என்னைப்பெற்றதாயே உறங்குறங்கெனத்தாலாட்டியும வேடர்மரபுக்குரிய பாட்டுகளைச் சொல்லியும் லோகநாயகியைய நித்திரைசெய்வித்தனள்; சவுனகாதிமிருஷிகளே அந்தவேடர் பெருமான்தேவியினதுபாக்கியத்தை என்னென்னெனச்சொல்லுவேன். தேவதேவோத்தமனாகிய பாலசுப்பிரமணியக்கடவுளுக்கு மனத்துக்கினிய தேவியாகவிருக்கின்ற லோகநாயகியைப் புத்திரிபாவமாகக்கொண்டு அன்புடன்கரங்களினேந்தியும் மார்பிலணைத்தும் அமுதத்தைக்கொடுத்தும் தோளிலேந்தியும் அவள் பெருமைகளைக்கொண்டோடிலாவிகளைப்பாடியும் இவ்விதங்களிற் சகலசிருட

னும் போற்றப்பெற்றமையால் அந்தவேடச்சிக்குக்கிடைக்கவிருக்கின்ற பேற்றையாவராற்கணித்துப் பேசக்கூடும். அத்தருணத்தில் தங்களிறைவனுக்குப் பெண்ணரசிகிடைத்தன ளென்னுஞ்செய்திமுற்றிலும்பரவக்கேட்டவுடன் பற்களுதிர்ந்து உதடுதொங்கி காதுதளர்ந்து தலைநடுக் குற்றுமயிர் நுரையைப்போல வெளுத்துப் புருவஞ்சரிந்து முகந்திரைந்து தசைகரைந்து தோல்தொங்கியாட முதுகுவளைந்து கோலையூன்றித்தள்ளாடி நடக்கும்பருவமுடைய நூற்றெட்டு வயதுசென்ற கிழவேடுவச்சிகள் கூட்டங் கூட்டமாய்வந்து சூழ்ந்து பெண்குழந்தையைப்பார்த்து மனமகிழ்ச்சியுடன் தளர்ந்தவசனங்களினு லிதனைச் சொல்வதாயினர்.

இப்புத்திரியினது லட்சணங்களைப் பார்க்குமிடத்தில் அற்புதமாக விருக்கின்றது, தேவஅம்சையைக்காட்டுகின்றதால் நம்மனைவருக்கு மிறைவியாவள் சகலசவுக்கியங்களையும் அனுபவித்து மனவெழுச்சியுட னிருப்பாள். இதற்கையமில்லை யெனப்பேசிக் குழந்தைதாடைகளை யிருகரங்களினாலுந் தடவிக் கொடுத்துத் திருஷ்டிபரிகாரமாகத் தங்கள்கன்னங்களில் விரல்களை நெட்டமிட்டுத் தீர்க்காயுளாய் எத்தேசகாலமும் சுமங்கிலியாய்க் கைகால்களுக்கு நோவில்லாமற் குறைவற்றசெல்வியாய் வாழக்கடவளெனப் பல ஆசீர்வாதங்களைச்சொல்லித் தொட்டிலிற்கிடத்தி வேடராசன் மனைவியைப்போற்றித் தாயே இந்தக்குழந்தையை வள்ளிப்பாத்தியிற்கண்டெடுத்து வந்தபடியால் இவளை வள்ளியென்றழையுங்களென்று காரணப்பெயரையிட்டு அக்காலத்தில்சேர்ந்த வேடமங்கையரனைவருஞ்சேர்ந்து வாழ்த்தெடுத்துச் சுபங்களைக் கொண்டாடினர். அத்திருநாமத்தைக் கேட்டவுடன் வேடராசனும் அரசியும் மனச்செருக்குடன் அதிக சந்தோஷத்தைப்பெற்றவர்களாய் வந்தவர்களுக்குத் தேன், தினைமாவு, பண்டு, பலாதிகள்முதலிய உணவைத்தந்து பல வுபசாரங்களைச்செய்து களிபாடல்களைக் கொண்டாடினவர்களாய் உலகமாதாவை வேடருக்குத் தன்பெண்ணாகவெண்ணி மிகுந்த பிரியத்துடன் எத்தேசகாலத்தினும் அருகிலிருந்து பாராட்டிவருகின்ற காலத்தில் குறிஞ்சிநிலத்துக்கு அதிதேவதையாகவிருக்கும் சுப்பிரமணியக் கடவுளுக்குத் தேவியாகவிருக்கின்றவள் மலைகள்சூழ்ந்த குறிஞ்சிநிலத்துக் கதிபனாகவிருக்கின்ற வேடராசன்மகளாய்த் தன்பிதாவானவர் முன்னம் ஆயர்பாடியில் வாசமாயிருந்ததைப்போலப் புற்களினாற்செய்திருக்கும் சிறுகுடிசையிற்சேர்ந்து வளர்வதாயினள். இவ்விதமாகத் திரிமூர்த்திகளு மொருமூர்த்தியாகவிளங்கும் ஸ்ரீமகாவிஷ்ணுபெற்றருளிய தவவமுதத்தைத் தேவதேவோத்தமன் திருத்தேவியை மிருகங்கள் வாசஞ்செய்யும் கானகத்திலிருக்கின்ற வேடர் தமதுரிமைமகளாகக்கொண்டு போற்றிவருகின்றதால் அவர்கள் முன்னோருடன்செய்திருக்கின்ற தவவிரதங்களை யாவராலளந்து சொல்லக்கூடும். பின்பு எமதன்னையானவள் பருவக்கிரமமாக சப்பாணிகொட்டியும் தவழ்ந்தும் தளர்நடைகொண்டும் தோழிகளுடன்கலந்து வேங்கைமரங்கள் தழைத்துக்குளிர்ந்த நிழலைப்பரப்பியிருக்கும் முற்றங்களில் விளையாடியும் முச்சிலில் மணிகளைவாரிக்கொழித்தும் முத்துகளினாற் சிற்றிற்செய்தும் நிலாச்சோறுசமைத்தும் மணிகளைக்

கொண்டு அம்மனையாடியும் சிறுதேருருட்டியும் அம்புலியைக்கூவியும் புஷ்பங்களைப்பறித்துச் செண்டுகள்கொடுத்துப் பந்தாடியும் மாலைகள்செய்து சூடியும் இவ்விதவினோதத் திருவிளையாடல்களைநடத்திப் பூர்வஞானஞ்சற்றுமில்லாதவளாய்த் தாய்பலவித வுபசாரங்களைச்செய்துவரும்படிக்கு வளர்கலைச் சந்திரனைப்போலத் தினமொருமேனியாய்வளர்ந்து குமாரன் புயாசலங்களைத் தழுவுவதற்கு இந்தப்பருவந் தகும்தகுமெனக் கொண்டாடும்படிக்குத் தேமல் படர்ந்து தென்னங்குரும்பைபோலக்காட்டுங் கொங்கைகள் வெளிப்படையாகக்காட்ட இராசபுத்திரிக்குப் பன்னிரண்டுவயது நிறைந்து பாலகுமாரத்தியாகக்காணும் தருணத்தைத் தாய்தந்தையர்தெரிந்து களித்தவர்களாய்த் தங்கள் குலமுறைமையைப்பாராட்டி மான்வயிற்றுதித்த வள்ளிநாயகியாரை நீண்ட கதிர்களைவிரித்துப் பசுமையாகவிருக்கும் தினைப்புனத்திற்கிளிகளாதிய பறவைகளிறங்கிக் கதிர்களைக்கவரவொட்டாமற் போற்றியிருக்கும்படிவைக்க நினைந்து நீண்டவில்லையும் மின்னலையொப்பவிளங்குமகூரிய அலகையுமுடைய பாணங்களையும் இடைவிடாமற்கரங்களிற்கொண்டிருக்கும் வேடராசன்கோடி சூரியப்பிரகாசம்பொருந்திய வெற்றிவேலாயுதமூர்த்தி மனத்துக்கினிய திருத்தேவியாகிய தெள்ளமுதைக் கூட்டிக்கொண்டுபோய்க் கொல்லைக்குமத்தியிற் பருத்தமரங்களைநாட்டித் தழைகளையும் கொம்புகளையும்பரப்பிப் போட்டிருக்கின்ற பரணினிடத்திலேற்றித்தாயேபக்கங்களிலிருக்கின்றபுனங்களில் வேடக்கன்னியர் பாதுகாத்துவருவதைப்போல இந்தக்கவணைக் கரத்திற்கொண்டு மணிகளைவைத்தெறிந்து பட்சிகளைத்துரத்திக் காவல்செய்துவரக்கடவாயெனச் சொல்லிவைத்தனன். அந்தப்பார்க்குமிடத்திற் கிடைத்தற்கரிய சிரோரத்தினத்தைக் காட்டிற்சஞ்சரிக்கும பறவைகள் எளிதிற்கண்டெடுத்து வந்து குஞ்சுகள் அதன்பிரகாசத்தைக்கண்டு களித்திருக்கும்படிக்குப் புல்லியகூடுகளிற் பொருத்திவைப்பதைப்போலவிருந்தது.

கேட்டீர்களோசவுனகாதிரிஷிகளே! பிதாவின்கட்டளையின்படிக்குவள்ளிநாயகியாரும் அதிக சந்தோஷத்துடன் மற்ற வேடப்பாவையாருடன் நீண்டிருக்கும் யானைத்தந்தங்களைக் கால்களாகச்சேர்த்து வயிரப்பழுதுகள் மாட்டியிருக்கின்ற ஏணியின்மூலமாகத் திருவடிகளை மெல்லமெல்லவைத்தேறியிருந்து பெண்கள்சிகாமணியானவள் கவணைக்கரத்திற்கொண்டு நீலோற்பலத்தைப்பழித்து சேற்கண்டையைப்போலப் பிறழும் விழிகளைத் தினைப்புனமுற்றினுஞ் சுழற்றிப்பார்த்துக் காவல்கொண்டிருக்குங் காலத்தில் நேர்ந்த சம்பவங்களையுஞ் சொல்லக்கேட்பீராக. கதிர்கள்முற்றும் பருவமாதலாற் பல திசையினுமிருந்து பசியசிறகையுடையகிள்ளைகள், அன்றிற்பட்சிகள், மாடப்புறாக்கள்முதலியபட்சிசாலங்களும், மான், பன்றி, கடமையாதியாகிய மிருகங்களும் வள்ளிமலையைச் சூழ்வரத்தழைத்தோங்கி விளைந்திருக்கும் தினைப்புனங்களில் உணவைவிரும்பிப் புறநிலங்களிலிருப்பவையனைத்தும திரட்சியாக வந்துசேர்ந்தது. அவற்றின்பெருக்கத்தை யாவராலுங் கணித்துப்பேசக்கூடுவதோ, அக்காலத்திற் கட்டுகள்பூண்டு நீண்டிருக்கும் விற்களைக்கரங்களிற்பற்றியிருக்கும் வேடர்களிட்டபரணிடத்தில் எம்பெருமாட்டியாகிய வள்ளியம்மை

யானவன் கவணிற்கட்டியிருக்குங் கயிற்றினென்றை விரலில்முடிந்துகொண்டு
கதிர்கள்மலிந்து ஏழாவென்னும் இளைச்சலேக்காட்டி அசைந்திருக்கும் தினேப்
புனத்தினருகில் மான்மரைமுதலிய மிருகங்கள் நெருங்கவொட்டாமலும் கிள்
ளேகளாதியாகிய பறவைக் கூட்டங்களிறங்க வொட்டாமலும் கூகாவெனக்
கூவி கற்பினேவாய்ந்த வள்ளியம்மையானவள் நவமணியினங்களேக் கற்களு
க்குமாறாகச்சேர்த்துக்கொண்டு கவணிடத்திட்டுக் கிறுகிறெனச்சுழற்றி வீசி
யோட்டியவிதங்களே அடியேன் கிருதார்த்தனுகும்பொருட்டு விரித்துச்சொ
ல்லக்கேட்பீராக.

செந்தாமரைமலரைப்பழித்து விளங்கும் அழகிய திருக்கரங்களிற் பற்றிய
கவணே ஒவ்வொருதரம்சுழற்றிப் பூவைகளே மாடப்புறாக்கள் ஆலோலமெனக்
கூவி மணிகளேக்கடாவியோட்டியும் அழகியகலாபத்தையுடைய மயில்காள்
மதுரமாகிய வார்த்தைகளேக்கொஞ்சும்பசியகிளிகாள், ஆலோலமென்ற தட்டி
யும் செவிகளுக்கினிமைபெறக்கூவும் கரியகுயில்காள், ஆலோலமெனத்துரத்
தியும் சிவந்தகொண்டையைப்பெற்றிருக்கின்ற சேவல்காள்; ஆலோலமெனப்
பேசியும் நீண்டகொம்புகளேயுடைய மான்காள், பருத்ததேகத்தைப்பெற்ற
கடமைகாள், கூரியதந்தங்களேப் படைத்தபன்றிகாள் ஆலோலமென்றுருத்
துக் கற்களேக்கடாவித்துரத்தியும் இவ்விதங்களாகப் பட்சிக்கூட்டங்களேயும்
மிருகப்பெருக்கையும் அடிக்கடிகவணேச்சுழற்றிப்படாப்படாலென மணிகளே
வீசித்திசைகெட்டோடப் பறக்கடித்து வள்ளிநாயகியார் தினேப்புனத்தைஏமா
ருமற்காவல்புரிந்து பிதாவானவன் வேளேவேளேக்குக்கொண்டு வந்துகொடுக்
கும்தேன்தினேமா கச்சாயவகைகள் பண்டுபலாதிகளேத் திருப்தியாகவுண்டு
மனமெழுச்சியுடனிருக்கின்ற காலேயில் பாலசுப்பிரமணிய கடவுள் முன்னம்
அவாருக்கனுக்கிரகித்திருக்கின்றபடிக்குக் காட்சிதந்து ஆண்டிரட்சிக்கும்படி
யாகத் திருவுளத்திற்கொண்டவராய்க் கந்தமாதனவரையில் தெய்வயானேயும்
மையுடன் குலவியிருந்தவர்அத்தலத்தினும்முன்போலவேகாட்டிவெளிப்பட்டு
த்தனியனுய்வந்துமூங்கிற்காடுநெருங்கி யொலித்திருக்கும் சாரலேயுடைய திரு
த்தணிகைவரையைச்சேர்ந்துகாலம்பார்த்திருக்கும்போது இசைநூலேப்பூரண
மாகத்தேர்ந்து அதன்மதுரத்தைத் துணிபாகக்கிரகித்து மனவெழுச்சியுடன்
சரிகமபதநியென்னு மிசைக்கிரமப்படியேயாழினே மீட்டிச் சிவபிரான்புகழ்
த்திறங்களேப்பாடிப் பேரானந்தத்தையனுபவித்து உலகமெங்கனுமுலவிவரும்
தவச்சிரேட்டராகிய நாரதரிஷி தெய்வலோகத்தைக்கடந்து கருங்கடல்சூழ்ந்த
பூமண்டலத்தில்வந்து மகத்துவமுள்ளசிறந்த நதிகளிருக்குமிடமெங்கனுந் தே
டிப்போய் ஸ்நானம்பண்ணிப் பரமேஸ்வரர் பார்ப்பதியாருடன்களித்தெழுந்த
ருளியிருக்கின்ற தெய்விகத்தலங்களிற் போய்ப்பாடியாடிப்புகழ்ந்து போற்றித்
தரிசித்துஆனந்தபரவசனுய்ப்பூவலம்வருமுன்னிலேயில்வளங்களேனத்தும்பெரு
த்தோங்கிச்சோலேகள் சுனேகள்மலிந்து மங்களகரமாக விருக்கும் வள்ளிமலேக்
கருகில் வருகின்றசமயத்தில் நீண்டகதிர்களே விரித்து இளைச்சலிட்டு எங்கணு
ம்பரந்திருக்கும் தினேப்புனங்களினென்றில் பரணினிடத்திலிருந்துகவணேக்
கரத்திற்றாங்கி ஆபாலோட்டிக்காத்திருக்கின்ற வேடராசபுத்திரியைத்தரிசித்த

மாத்திரத்தில் உள்ளமுமென்புடன் உருகத்தக்கதாகப்பத்திவிளங்கி மனப்பூரிப்புடன் கரங்களைக்கூப்பித்தொழுது அற்புதத்தையடைந்தவனாய் எமதன்னையினது மங்களகரமாகிய ரூபலாவண்ணியத்தின்பெருமையையும் குணாதிசயங்களையும்மனத்தினாலளவிட்டுப் புகழ்தினைப்பினுமுடிவதோ?இப்படிப்பட்டஎம்பிராட்டியார் முற்பிறப்பில் எமதிறைவனாகிய பாலசுப்பிரமணியக்கடவுளுக்குமனைவியாதற்பொருட்டு அரியதவங்களைச்செய்து அவனருளையும் பெற்றிருப்பதால் இந்தமாதாவினது பெருமிதங்களைச் சண்முகனுக்குத் தெரிவித்துக் கவலையிற்படுத்திக்கூட்டுறவாக்குவது எம்போலிகளுக்கழகும் தவமுமாமெனநினைந்து வள்ளிநாயகியாரை மெய்ப்பத்தியுடன் போற்றிவாழ்த்தி அத்தலத்தையரிதிற்கடந்து விரைந்துபோய்ஒருமுகூர்த்தகாலத்திற்றினந்தோறும் மூன்றுசெங்கழுநீர்மலரைத்தரும் பெருமையினையுடைய சரவணப்பொய்கைவிளங்கும் திருத்தணிகாசலத்தின் மேலடைந்து அத்தலத்திலிருக்கும் திருவாலயத்தினெழுந்தருளியிருக்கின்ற பன்னிருபுயாசலங்களைப்படைத்த கந்தசுவாமியை விழிகள் களிக்கக்கண்டு சன்னிதானத்தைச்சேர்ந்து மும்முறைவலம்வந்து தீர்க்கதண்டம்சமர்ப்பித்தெழுந்து வேதவாக்கியங்களினாற்றுதித்துப் பேரானந்த வாரியில் மூழ்கிக்களித்தவராய் இதனை விண்ணப்பஞ் செய்வதாயினர்.

குமாரக்கடவுளே இதற்குச் சமீபத்தி லொருமலையிருக்கின்றது; அதன் சாரலில்விளங்கும் வனத்திற் சிவமுனியென்னுந்தவச்சிரேஷ்டர் மோனவிரதத்தைப்பூண்டு யோகசாதனையைச் செய்துகொண்டிருக்கின்றபோது பெட்டைமானொன்று அதிகவடிவுடனே திரிவுலவக்கண்டு காமாந்தகாரனாய்க் களித்துப் பார்க்க, அவர் நோக்கம்பட்டமாத்திரத்தில் கருக்கொண்டு சிலதினங்களுக்குப் பின்பு பெண்குழந்தையைப்பெற்றுத் தன்னினமல்லாமையால் மானானது சிசுவைத்தனிமையால் விட்டோடிப்போயிற்று. உடனே வேடராசனெடுத்து வளர்த்துவர வள்ளியம்மையென்னும் திருநாமத்தைக்கொண்டு பன்னிரண்டு வயது, பாலகுமாரத்தியாய் வள்ளிமலைப் பக்கங்களிலிருக்கும் தினைப்புனத்தைக் காவல்கொண்டு பரணிலிருக்கக்கண்டு வந்தேன், நாயடியேன் அந்த மாதாவின் சுந்தரவடிவின் பெருக்கையும் குணாதிசயங்களையும் மற்றசிறப்புகளையும் பார்க்குமிடத்திற் செந்தாமரைமலர்வாசியாகிய ஸ்ரீமகாலட்சுமிக்கு மேற்பட்டவனப்பையே பெற்றிருப்பதாகக்காணுகின்றது. இப்போதுநான்விண்ணப்பஞ்செய்தகாரணத்திற்சற்றும்பிழையிராது. உண்மையாக நம்பத்தக்கது.தேவரீரொழுந்தருளித் திஷ்டாந்தமாகக்கண்டுகளிக்கலாகும். மேலும் உலோகநாயகியாகிய அப்பெண்ணமுதானவள் முன்னே ஸ்ரீபகவானாகிய விஷ்ணுவினிடத்திற் பத்தியாய், தேவரீரது தேசோமயமாகிய கோலத்தினிடத்திற் காமுற்றுப் பன்னிருபுயாசலங்களையும் சொர்ணகலசத்தை யொப்பவிளங்கும் தன்தனபாரங்களிலொன்று படத்தழுவி யின்புறும்படி நினைந்து அளவற்றகாலம் கடினமாகிய தவவிரதங்களைச் செய்திருந்தனள். அப்பொழுது தேவரீரொழுந்தருளிக் கடாட்சித்தவாறே இக்காலத்தினுந் திருவுளத்திரங்கித் தடுத்தாண் டிரட்சிக்கவேண்டுமென்று நாரதமுனிவர் பரிவாய் வேண்டினார். அதைப் பாலசுப்பிரமணியக்கடவுள் நகைமுகமாகக் கேட்டருளித் தவசிரேஷ்டனே நம்மிடத்திற்

பிரிதிபத்தியுடன்தெரிவித்த சந்தோஷவார்த்தைகளுக்குமகிழ்ந்தனம். மேலும்
நன்மையாகவும் நடத்தவேண்டிய காரணமாகவுமிருப்பதால் உன்மனவிருப்
பத்தின்படி அத்தலத்தைச்சேர்ந்து வள்ளியை வசப்படுத்திக்கொண்டுவரக்
கடவோமெனத் திருவாய்மலர்ந்து பின் நாரதரிஷிக்குச் செலவுகொடுத்தனுப்பி
விட்டு, அக்கன்னிகையினிடத்தில் மையல்கொண்டு காமவலையிற்பட்டு மன
முருகிச் சற்றுந்தாழ்க்கச்சம்மதமில்லாமல், வில்லையும் அம்பையும் இடைவிடா
மற் கரங்களிற்கொண்டு வேட்டையாடித்திரியும் வேடராசபுத்திரியானவள்
உய்யும்பொருட்டுத் திருவுளமிரங்கிச் சுயஞ்சோதிமயமாகிய தமதற்புதக்
கோலத்தைமறைத்துக் காமக்குரோதலோபமோகமத மாற்சரியமென்னும்
பஞ்சேந்திரியச் சேட்டையின் வயத்தராய் மயங்கியுழலும் மானிடவேடத்
தைத்தாங்கி, வேதங்கள் பூசித்துக்காண்பரிய திருவடிகளிற் கலீர்கலீரெனச்
சத்திக்கும் வீரகண்டையை அணிந்து சல்லடத்தைத்தரித்துக்கச்சையைச்
சுந்தரமுள்ள இடையினிடத்திறுக்கிப் பரிமளமிகுத்த புஷ்பமாலையைத் தோள்
களினிடத்திற் புரளும்படி சூடி, நீண்டவில்லையும் கணைகளையுங் கரங்களிற்
கொண்டு காளமேகத்தையொப்பக் கறுத்திருக்கும் சிகையைச் சேர்த்துக்
கொண்டையாக முடிந்து அதனைச்சூழ்வரப் பலகறைத் தாழ்வடத்தைச்
சுற்றித்திருப்பாதங்களிற் செருப்பணிந்து இவ்விதமாக வேடர்கோலத்தைப்
பெற்றவராய்க் கிளியையொப்ப இங்கிதமொழிகளைப்பேசும் வேடமகளினிடத்
துண்டாயிருக்கின்ற மோகமானது நிறையையழித்து மனதைப்பிடித்துத்
தள்ள அதன்வயப்பட்டு எமதிறைவனாகிய சிவசுப்பிரமணியக்கடவுள் திருத்
தணிகைமலையைக் கடந்து செந்தாமரைமலரைப் பழித்து விளங்கும் அழ
கிய திருவடிகள் பரல்பரந்த பூமியிற்பதிந்து கன்றிச்சிவந்து காட்டும்படி
வழியைத்தாண்டி வள்ளிமலைக் கருகில்வந்து மண்டலமெங்கணும் புகழும்
பெருமையினையுடைய அம்மலையின்மேல் மெல்லமெல்லவேறிக் கதிர்கள்
மலிந்து கண்டவர்கள் விழிகளுக்கலங்காரமாக ஓசையைக்காட்டி அசைந்
திருக்கும் தினைப்புனத்திற்காட்டும் பரணின்மீதில்நின்று கவணினிடத்தில்மணி
களைவைத்துக் கரத்திற்கொண்டு வேலையொப்பக் காதளவுமேறிச் செவ்வரிபா
ந்து சேற்கண்டையைப்போலப் பிறழ்ந்திருக்கும் விழிகளை நாலுமூலைகளினும்
பரப்பிக் கிள்ளையாதிய பட்சிக்கூட்டங்களையும் யானைமுதலிய மிருகங்
களையும் நெருங்கவொட்டாமல் அதட்டி விசிப்பாதுகாத்திருக்கும் செல்வத்தை
எம்பெருமாட்டியை தெள்ளமுதை உலோககாரணியை தன்மனத்துக்கினிய
திருத்தேவியை ஒருவன் வறுமையுற்றகாலத்திற்றுன்முன்னம் வைத்துக்காணு
திருந்த பழம்பொருள் கிடைத்துக்களிப்பானைப்போல விழிகள்களிக்கும்படி
யெதிர்ந்தனர். நடத்தில்நின்றொழுகுவதைப் கிகர்த்துத் தேனைப்பெருக்கிப்
பொற்சன்னங்களுக்குச்சமமாய் மகரந்தங்களைப்பொருந்திச்சகத்திரவிதழ்களை
விரித்தலரும் பொற்றாமரைப் பீடத்தவளாகிய ஸ்ரீமகாலட்சுமியைப் போலத்
தழைத்தோங்கிக் குளிர்ந்தநிழலைப்பரப்பியிருக்கும் சோலைகள் காவுகள்தோட்டு
கள் பலவகைபுட்பங்களைவிரித்து மதுரமிகுத்த நீர்நிறைந்திருக்கும் சுனைகள்
மடுக்கள் ஓடைகள் மிகுதியாய் வளங்கள்பெருத்திருக்கும் வள்ளிவரைமேற்

புறத்திருந்து பிதாவின்வாக்கியப்படியே வேறொரு ஞாபகமில்லாமல் நோக்கிச் சித்தத்தைப்புறம்பிற் செலுத்தாமல் ஏகமனமாய்ப் பயிரைப்போற்றிவரும் மேகத்தையொத்த கறுத்தகூந்தலையும் மின்னலைப்பழித்துவிளங்கும் அழகிய திருமேனியையும் மற்றகுணசம்பத்துகளையும் பெற்றிருக்கின்ற வேடர்பெருமான் தவக்கொழுந்தைக் கடப்பமலர்மாலை மணம்நீங்காத பன்னிருபுயாசலங்களையுடைய அப்பாலசுப்பிரமணியக்கடவுள் நெருங்கி எம்மன்னையைக்கண்டவுடன் அனலிற்பட்ட மெழுகைப்போல மனங்கரைந்து விரகாக்கினிமேலிட்டு உள்ளத்தையும் உடலையும் தகித்துவாட்டச் சோர்ந்து வெம்பித் தாபரித்திருக்கக்கூடாமையால் தினைப்புனத்தின் மத்தியிலிருக்கும் பரணுக்கருகில் மெல்லமெல்லநெருங்கி அம்மைமீதில் விழிகளைச்செலுத்திப் பற்கள்விளங்க நகைமுகத்தாய்க் கூரியவேலைப்போல விளங்கிக் காதளவுமோடிச் செவ்வரிபரந்து மைந்திமிர்ந்து பாலையொப்பவெளுத்துவிஷத்தினுங்கறுத்து மாரன்பார்வையைப் பழித்தநேத்திரங்களைப்படைத்திருக்கும் பெண்கள்சிகாமணியே! மனமிரங்கி நான்சொல்லவிருக்கின்ற நீதிகளைக்கேட்பையாக. உனதுசுந்தரவடிவையுநிலையையுங்கண்ட மாத்திரத்தில் எனக்கு மனந்தளர்கின்றது. செல்வப்பெருக்கையுடைய பொன்னகரத்தினும் சமுத்திரஞ்சூழ்ந்த பூவுலகப்பரப்பினும் நாகர்கள்வாழும் பாதலத்தினும் அதிக சுந்தரவதிகளாகிய பெண்களனைவருக்கும் நாயகமாகப் புகழுவல்ல சர்வமங்கள ரூபலாவண்ணியமுள்ள உன்னை கண்டபேரண்டம் சரபசார்த்தூலம், சிங்கம், புலி, யானைமுதலிய கொடியமிருகங்கள் சஞ்சரிக்கின்ற இந்தமலையின்மீதிற் றழைத்துக்கதிர்களை விரித்திருக்கும் தினைப்புனத்தைக்காக்கும்படியாக யாதொரு உதவியுமில்லாமல் தனிமையாய் வைத்துப்போன வேடருக்குச் சிருஷ்டிகர்த்தனாகிய பிரமன் உனது நாணயத்தையும் பெருமைகளையும் பகுத்தறிந்து அதற்கடுத்த காரணங்களை நடத்தத்தக்க விவேகத்தையும் பரிவையுங் கிடைக்கச்செய்தானல்லன். ஐயையோ இதைப்பார்க்குமிடத்தில் நீதியுமின்று. அவலமாகவுமிருக்கின்றது. அது நிற்க. கறுத்து நீண்டிருக்கும் கூந்தலைவாய்ந்த பெண்ணரசியே! தொலைதூரத்திலிருந்துவந்த யான் உனது மங்களகரமாகிய தோற்றத்தை எதிர்ப்பட்ட மாத்திரத்தில் இத்தலத்தைக் கடந்தப்புறம்போகச் சம்மதமில்லாமல் மதிமயங்கி வருந்துகின்றேன், எனது மனங்களிக்கத் தக்கதாகப் பவளத்தையொத்த வாயைத்திறந்து அருள்நோக்கத்தைச் செலுத்தி உனது மங்களகரமாகியபெயரைச்சொல்லாய், அதற்குச்சம்மதமில்லாவிடில நீ வாசஞ்செய்யும் சிறந்தபதி இன்னதெனப்பேசாய், அதுவும் சம்மதமில்லாமற் போமாயின் ஒப்பற்ற உனது சிறூருக்குப்போகும் மார்க்கத்தையாவது தயைசெய்து கோவையைப்பழித்துவிளங்கும் திருவாயைத்திறந்து செவிகளுக் கமுததாரையாகப் பூரிக்கவேண்டும். ஓபெண்கள் நாயகமே! என்கேள்விகளைக் காதுகொடுத்து வினவிமறுமொழியாட மனமிரங்கீராயின்யானென்னசொல்வேன், இவை நிற்க. என்மனமும் தேகமும்பூரித்துக்களிக்கும்படி நகைமுகத்தை யாயினுங் காணவொண்ணாதோ அல்லது சேற்கண்டையைப்போலப்பிறழும் திருநோக்கத்தைக் குளிர்ச்சியாகச் செலுத்தலாகாதோ. உனது தரிசனையைப்பெற்ற

மாத்திரத்தில் மனநிலைகலங்கிப் பொறிகள்மயங்கிக் காமவலையிற் பட்டுழலும் தமியேன் களித்துப் பிழைக்கும் மார்க்கமொன்றைக்காட்டாமற் சற்றும் என்னிடத் தன்மைச் செலுத்தாமலும் இரக்கமற்று இவ்வாறே யிருப்பையாஞல் சத்தியமாகச்சொல்வேன்; எக்காலத்துந்தீராதபழிபாதகம் உன்னைச்சேருவதற்கையமில்லை. பராமுகமாயிராமற்றுரிதமாயிதற்கொரு வகைதேடவேண்டுமென்று உலையிற்பட்ட மெழுகேபோல மனங்கரைந்து வேடர்பாவையின் மேற்கொண்ட மையல் வலையிலகப்பட்டுக்கொண்டு திகைப்பவனையொப்பப் பற்களைக்காட்டி முகமலர்ச்சியுடன் வருந்திக் கெஞ்சிக்கெஞ்சிக் கரங்களைநீட்டி நீட்டிக்குறையிரந்து நின்றனன்.

கேட்டீர்களோ சவுனகாதிதவத்தரோ! அக்காலத்திற் பாலசுப்பிரமணியக் கடவுள் நடித்த திருவிளையாடல்களைப் பார்க்குமிடத்தில் சோடசகலைகளையுடையசந்திரன்விளக்கமானதுஅலைகள் மிகுத்த நீர்ப்பெருக்குதோற்றும்போது கலங்கிக் காட்டுமாறுபோலவிளங்குகின்றது. இவ்விதமாகக் குமரநாயகன் ஆதிகேசவன் திருக்குமரி யெதிரில்நின்று இங்கித வார்த்தைகளைப்பேசி மையற்பெருக்கைக்காட்டிப் பலபலவழக்குகளைக்குறித்து வாதாடிக்கொண்டிருக்கின்ற போது வள்ளியம்மைக்குத் தினந்தோறுங்காலங்களில்உணவுகொண்டுவந்து கொடுத்துப்போகும் வழக்கப்படிக்கு வேடராசன் தன்பரிசனர் பன்றி மான் கரடி யானை முதலிய மிருகங்கள் பட்சி சாலங்கள் பயந்தோடி யொளிக்கக் கொம்புகளையூதியும் பறைகளைக்கணகணென்றறைந்து கூக்குரலிட்டுந் தொடர்ந்துவரத்தக்கதாகத் தன்சீறூரைக்கடந்து தினைப்புனத்தை நோக்கிவருவதைக் குமரநாயகன் தெரிந்தவுடன் அவர்களுக்குத் தமது நிசதரிசனையைக் காட்டாமல் மறைத்து வேதங்கள்வேராகவும் சிவாகமங்கள் அடிமரமாகவும் தருமசாத்திரம் கலைஞானங்களும் கிளைகள் இலைகள் தளிர் மலர் பிஞ்சு காய் கனியாகவும் இத்தகைய சிறப்புகளைப் பெற்றிருக்கும் வேங்கைமரக்கோலங் கொண்டு குளிர்ந்த நிழலைப்பரப்பிக் கந்தமூர்த்தி நின்றார். அப்போது வேடராசனும் அதிகசந்தோஷத்துடன் தீவிரமாய்தன்புத்திரி காவல்கொண்டிருக்கும் கொல்லையைச்சேர்ந்து தன்குலம் நீடூழிகாலம் புகழ்பெற்றோங்கும்படியாக எழுந்தருளியிருக்கும் பதிவிரதாசிரோமணியைக்கண்டு தாயே மிகவும் பசித்திருக்கின்றனையோ வெனப்பாராட்டித் தான்பதப்படுத்திக்கொண்டுவந்த வள்ளிக்கிழங்கு தினைமாதேன் திரட்டுப்பால்மதுரமிகுத்த பழவகைகளாதியாகிய தின்பண்டங்களைக்கொடுத்துத் தினைப்புனத்தைப் பதனமாகப் போற்றியிருக்கும் படிக்குச் சொல்லித்திரும்புகையில் பக்கத்திற் றழைத்தோங்கி நிற்கும் வேங்கையைக் கண்டவுடன் அதிசயித்திருக்கின்ற போது அவனுடன் வந்த கொலைத்தொழிலையுடைய கடினசித்தராகிய வேடரும் பார்த்துப் பிரமித்தவர்களாய் இதுபரியந்தம் நாம்வரப்போகவிருக்கின்றனம், இந்தமரத்தைக் கண்டதுகிடையாது, நூதனமாகத்தோன்றுகின்றதால் இதனாற் சிலதீங்குகள் நேரும்போலக்காணுகின்றது, ஆதலாற் சூரியகிரணங்களை யடக்கித் தழைத்திருக்கும் வேங்கைமரத்தைஇந்த நிமிஷத்தில் முறித்தெறிவோம் வேருடன் பறித்துத்தள்ளுவோம், கோடாலியினாற் கரணையாடுவோம், துரிதமாய் எதைக்

கொண்டாவது அதப்படுத்திப்போவது உத்தமமென்று பலபலவிதங்களாகப் பேசி மேலிடும் தீயனைவிலக்கி அரசன் தன்குமாரத்தியினது முகத்தைப்பார்த்து, அம்மணீ பரிமளமிருத்தபுஷ்பங்களை விரித்து வேங்கைமரமொன்று புதிதாய் இதோகாணுகின்றது, இதுவருங் காரணமென்னே உண்மையாகச் சொல்லக்கடவாயெனக் கேட்டமாத்திரத்தில் அம்மையயந்து அப்பனே இந்தமரம வந்த ஹேது எனக்கொன்றுந்தெரியாது, மாயமாக விருக்கின்றது, நேற்றைத்தினமில்லாதது அதிசயமாகத்தோற்றியிருக்கின்றதெனத் திருமேனியும் மனமும் நடுங்கும்படி இதுதவிர எனக்கு யாதுந்தெரியாதெனப் பேசியதைக்கேட்டுப் பிதாவானவன் பரிவாய்த்தாயே அச்சப்படவேண்டாம்;நீதனிமையாக இவ்விடத்தி விருக்கிறபடியால் அழகாய்ப் பூத்திருக்கும் வேங்கைமரமானது உனக்குமலர்களைப் பறித்துக்களித்துக்காலங்கழிக்க வுபயோகமாகவிருக்கும். ஆதலால் பயமில்லை. கிளிகள்முதலான ஜந்துக்களைக்கிட்டவொட்டாமல் ஞாபகமாய்ப் பார்த்திருமெனக் கட்டளையிட்டுவேடர்களுடன் திரும்பித் தன் இருப்பிடத்தைச் சேர்ந்திருந்தனன்.

இவ்விதமாக அவர்கள் மறைந்தவுடன் கொல்லைக்கருகில் வேங்கையுருக்கொண்டுநின்ற சுப்பிரமணியக்கடவுள் அக்கோலத்தைமாற்றிப் பழையபடியே மன்மதனிலும் அதிக சுந்தரமுள்ள மானுடவடிவைத்தாங்கி வேடராசபுத்திரிக்கெதிரில்நின்று காமக்கவலையிலகப்பட்டு வாடுகின்றவனைப்போலப் பலநடனங்களைக்காட்டி நகைமுகமுடையவராய்க் கரிய அளகபாரத்தினையுடைய வள்ளிநாயகியாருக்குச்சமீபத்திற்போய் அவளிடத்திருக்கும் ஆசைப்பெருக்கினால் இதனைச்சொல்வதாயினர். கோங்கரும்பையொப்பக்குவிந்து பொற்குடத்தைப்பழித்து விம்மித்ததும்பித் தேமல்பரந்திருக்கும் தனபாரங்களைப் பெற்றிருக்கின்றகுறப்பாவாய் தயைசெய்துகேட்பையாக. உன்மங்களகரமாகியவடிவின்பொலிவையும் குணாதிசயங்களையுங் கேள்விப்பட்டு வெகுதூரத்திலிருந்து மிகவும்வருந்தி உன்னைநாடி யிவ்விடம்வந்தேன், இனி உன்செந்தாமரைமலரையொத்த திருவடிகளல்லது வேறுகதியில்லை, எக்காலத்தினும் உன்னைப் பிரியவறியேன், சற்றுமிடைவிடாமற் கலந்து குலவியிருக்க விரும்பினேன் மாவடுவைப்போலப் பரந்தோடியிருக்கும விழிகளையுடைய பெண்ணமுதே ! தீனனாகிய யான் உன்னைவிட்டுப்போகவுந் துணிவேனோ. அப்படிச்செய்ய யத்தனப்படினும்மனமொருமித்துநிற்குமோ, உடலைப்பிரிந்து உயிர்தனித்திருக்க வல்லதோ, இக்காரணங்களைவிரித்துவிரித்துப்பேசவும்வேண்டுமோ; மின்னலையொப்பக்காட்டிமறையும் மெல்லிய விடையையுடைய பேதாய் மைதிமிர்ந்து வேலைப்போலக்காட்டும், உனது கூரியகண்களாற் கவலையிற்பட்டு வாடித் திகைக்கின்ற அடியேனுக்கு கிருபாநோக்கக்கடையையாவது காட்டாமல தாழ்க்கலாமோ;இதையன்றிப் பிழைக்கும்மார்க்கம்வேறுண்டோ, இந்தஅபாய காலத்திற் சற்றுத்தயைசெய்து தனது திருக்கரத்திலணைந்து ஊசலாடுமிவ்வுயிரைக் காக்கக்கடவாய். தருக்களடர்ந்திருக்கும்மலைச்சாரலில்வாழும் வேடமின்னே நீ களித்து நீராடயோக்கியமான சுனையாய் மனவெழுச்சிபெறக் கொங்கைகளினிடத்திற்பூசும் பரிமளமிருத்த சாந்தமாய்க்கறுத்து நீண்டிருக்

குங் கொண்டையினிடத்திற் சொருகவல்ல சுகந்தங்களைவீசும் புதியமலரா யுருப்பெற்று உன்னைச்சேர்ந்து மகிழ்ச்சிபெற்றிருக்கும் பாக்கியத்தைப் பெறு மற்போனேனே, விரகாக்கினிமேலிட்டுத் தேகத்தையும் மனத்தையும் சுட்டுக் கொளுத்துவதினால் மிகவும் வாடுகின்றேன். உனது கிருபைக்குப்பாத்திரமா தற்பொட்டு இனிசெய்யவேண்டுங் கருமமென்னோ யாதுந்தோன்றவில்லை. அதைக்காட்டுவாயாகில் மனோபீஷ்டப்படியே நடந்தக்காத்திருக்கின்றனன். ஓ பெண்கள்சிகாமணியே! இது என்னவநியாயம் சிங்கசார்த்தூலங்களாதிய கொடியஜந்துக்கள் சஞ்சரிக்குமிந்த ஆரணியத்தில் அபலமாகிய தினைப்புனத் தைப் போற்றிவருவது நம்மையொத்த பெண்கள்சிகாமணிக்கடாது அடாது, மிகவும் ஈனமாகக்காணுகின்றது 'என்கண்மணே! ஆவியே! கிருபையுற்றுப் பின்பற்றிவருவாயாகில் கஜேந்திரசம்பத்தையுடைய பொன்னுலக வாழ்வைப் பெற்றிருக்கும் அரம்பாஸ்திரீகளனைவரும்வணங்கி வேண்டியதொண்டுகளைச் செய்து போற்றிவரவும் தெய்வபோகமுற்றும் 'தாமே அனுபவித்துக் களித் திருக்கவும் வைப்பேன். இஃதன்றியும் மனத்தில் விருப்புற்றவைகளைத் திருவாயைத்திறந்து சொல்லுவாயாகில் எத்தகையதாயினும் அவற்றை இந்த நிமிடத்திற்றேடித்தரவல்லேனென்று இவ்விதங்களிற் பற்பல இனியசொற்க ளைப்பேசிக் காமலாகிரியினாலுண்டாகும் வருத்தங்களைக்காட்டிக் கரங்களை நீட்டிப்பற்களைத்திறந்து நகைமுகமுடையனாய்க் கெஞ்சினின்றனர். அப்போது வேடராசபுத்திரியானவர் அவ்வாக்கியங்களனைத்தையுங்கேட்டுக் குறிப்பாய்க் குமாரக்கடவுள் மனக்கருத்தை நிதானித்தறிந்துகொண்டு இவர் வடிவின் பெருக்குங் குணநிசயங்களும் கொஞ்சிப்பேசும் வார்த்தைகளின்குளிர்ச்சியும் வெகுநேர்த்தியாக விருக்கின்றனவென்று தம்மனத்திலெண்ணி நாணமிகுதியி னாற்றலையையிறங்கி இவ்வித மறுமொழிகளைப்பேசத்தொடங்கினர்.

நானிழிகுலமாகிய வேடப்பாவையாகும். உனது வடிவின்சீரையும் நடை நொடிபாவனைகளையும்பார்க்குமிடத்தில் இராசகுமாரனாகவும் புவனங்களனைத் தையும் பாதுகாத்திரட்சிக்கும் முதல்வனாகவுங் காணுகின்றது. அத்தகைய சிறப்பினைப் பெற்றிருக்கின்றதேவரீர், ஈனகுலத்தளாகிய என்னைத்தழுவகினை ந்துதகாதனவாகியவார்த்தைகளைத் தயிரியமாய்ப் பயமற்றுப்பேசுவது பழியல் லது நன்மார்க்கத்துக்கடுப்பதோ? 'கதிர்களைவிரித்துச் செழித்திருக்கின்ற தினைப்புனத்தைப்போற்றி மிகவும் அருசியாயிருக்கின்ற குறப்பெண்ணினிடத் தில் உலகங்களைப் பரிபாலனஞ்செய்யவல்ல தம்மையொத்த இறைவன் உள மயங்கிக்கருத்தழிந்து பித்தனைப்போலப்பேசிக் கலவியையிச்சித்து வழக்காடு வது நியாயமன்று. வீரத்தன்மைபொருந்திய புலியானது பசிப்பிணியினால்வாடு மாயினும் அற்பமாகிய புல்லைத்தின்ன நினைப்பதுண்டோ? என வள்ளிநாயகி யார் இவ்விதங்களாகப் பற்பல நீதிமார்க்கங்களை விரித்துக்காட்டி நின்றனர். அப்படி பேசியகாலத்தில் எமதன்னைமனம் திடுக்கிட்டுப் பயங்கொள்ளும்படி வேடர்திரண்டு குறிஞ்சிப்பறைகளையும்பம்பைமுதலிய வாத்தியங்களையும் முழ க்கிக்கொண்டு சூழ்ந்துவரும்படி அரசன் தன்பதியைக்கடந்துவருகின்ற ஆடம் பரங்களைத் தெரிந்தமாத்திரத்தில் வள்ளியம்மை தேகமுற்றும்வியர்க்க நடு

நடுங்கி மனம்கிலைபெறாமல் வருந்திக் கரங்களைப் பிசைந்துகொண்டு எமது நாயகன் திருமுகமண்டலத்தைப்பார்த்து ஐயனே கொலைத்தொழிலையே முக்கியமாகவெண்ணி நடாத்தும் தீயசெய்கைகளையுடைய வேடர் மிகவும் கொடியர் முன்பின்யோசிக்கும் தாட்சணியமென்பது அவர்களிடத்திற் கிடையாது, ஆதலாற் சற்றும்தாழ்க்காமற் றுரிதமாய் இவ்விடத்தை நீங்கி யோடிப்பிழைப்பீரையும்; இது தருணபேதம் போம்போமென்று பரிவாய்ப்பேசிய அன்பின்காரியங்களைத்தெரிந்தவுடன் முருகனுக்கு மனம்பூரித்து பெண்ணரசியே பயப்படவேண்டாம் உனதெண்ணப்படியே செய்வோமெனச்சொல்லித் தேசாதேசங்களெங்கணும் புகழ்ந்துபோற்றத்தக்க சைவசமயத்தை யனுசரித்து நடந்துகொள்ளவல்ல விருத்தசந்நியாசிவேடங்கொண்டு அநேக ஆரவாரங்களைக்காட்டி அதட்டி உருட்டி கெக்கலிகொட்டி மிருகங்களைத் துரத்திக்கொண்டுவருகின்ற வேடர்களெதிர்போய் அரசனைக்கண்டு பரிபூரணகடாட்சத்தைப் பாலித்துக் கரத்திற்பற்றியிருந்த பையிலிருக்கும் திருநீற்றை யிருவிரல்களினலெடுத்துச் சிவபிரானே யிரட்சிக்கக்கடவனெனக்கொடுத்து, ஓ வேடர்பெருமானே! சென்றசென்றவிடங்களில் சகலவெற்றிகளையும்பெற்று சயசாலியாய்ச் செல்வச்சம்பத்தையனுபவித்து நீடூழிகாலம் வாழக்கடவாயென பற்பல வாழ்த்துகளைச்சொல்லி ஆசிர்வதித்தபோது வேடர்பெருமான் தன்கரத்திற்பெற்ற விபூதியை நெற்றியிற்சாத்தித் துரிதமாய்த் தன்முடி குமரநாயகன் பாதகமலங்களிற்படும்படிக்குத் தீர்க்கதண்டம் சமர்ப்பித்துச் சுவாமிகள் வயதுமுதிர்ந்த விருத்தராய் காடுசூழ்ந்த இந்தப்பருவதத்தைத்தேடி வந்தது நானும் எங்கள் முன்னோர்களும் செய்ததவமாகும். ஆதலால் தேவரீருக்கு விருப்பமாகிய வஸ்துக்களேதேனு மிருக்குமாயின் தயைசெய்து சொல்லவேண்டும். இந்தநிமிஷத்திற்றருவித்துக்கொடுப்பேனெனப் போற்றுகையில் சரவணபவன் அவனிடத்திற்பரிவாய் வேடர்மரபிற்சிறந்த மகாராசனே கேட்பீராக. வயதுமுதிர்ந்து சரீரம்தளர்ந்து வந்தவிடத்தைத் தேடியிருக்கும்படியான் னைக்கு நீயென்ன கொடுக்கப்போகிறாய் நமக்கொன்றும் தேவையில்லை அப்பா! நமதுவரவின் காரணத்தைக்கேட்பாயாக.

இந்த வள்ளிவரையிலுதித்து உங்களனைவருக்கும் பிரியமாகவிருக்கின்ற குமரியைக்கலந்து இக்காலத்தில்சேர்ந்திருக்கின்ற மனமருட்சி நீங்கத்தக்கதாக எக்காலமும்அதிற்படிந்து இன்பக்களிப்பை யனுபவித்துச் சுயுக்கியமாகவிருக்க விருப்பமுற்று நெடுந்தூரத்திலிருந்து வருந்திவேகமாய்வந்தனம், அப்பேறு நமக்குக்கிடைக்குமாயின் அதுவே நீஎமக்குச்செய்யவேண்டும் உபகாரம், உன்னையொத்தவனுக்கு வேறுமொருபொருளைத் தரவேண்டுமோவென்று தவத்திற்சிறந்த முதியராகவந்த முருகன் சிலேடையாகச்சொன்னவிசேஷத்தை வேடராசன் உண்மையாகக்கேட்டவுடன் நல்லகாரியம் தேவரீர் கோரிக்கையின்படிக்கு அந்தக்குமரி தீர்த்தத்தில்முழுகி உம்முடைய விருட்டித்தியை முடித்துக்கொண்டு என்பெண் தனித்திருக்கின்றனள், பெரியவரே! அவளுக்குந் துணையாகவும் அடிக்கடிக்குவந்து விசாரணைசெய்து போகவேண்டுமெனப் போற்றுவதற்கிரங்கி யிருப்பதும் அழகாயிருக்கின்றது, அவ்வாறே செய்யக்கடவத்

திருக்கின்றனனெனச் சம்மதித்துக்கொண்டனர். அரசனும் அதிகசந்தோஷத்துடன் குமாரத்தியிருக்கின்ற கொல்லையைச்சேர்ந்து தினைமா கிழங்கு தேன் கனிவகைகள்முதலிய வேண்டுபவையனைத்தையும் வழக்கப்படிக்குக்கொடுத்துத் தாயே இந்தப்பெரியவர் குமரிதீர்த்தமாடவந்திருக்கின்றனர். உனக்கும் சகாயமாகவிருப்பரெனத்தெரிவித்து அவர்களிருவரையும் அத்தலத்தில் நிறுத்திப்போட்டு வீரகண்டைகலிக்கும் பாதங்களையுடைய மறவர்பெருமான் தன்பரிசனருடன் திரும்பிப் பதியைச்சேர்ந்தனன். அவர்கள் மறைந்தவுடன் முதியவர் வள்ளியம்மையைப்பார்த்துப் பெண்கள்சிகாமணியே! என்னசெய்வேன், பசிப்பிணிவருத்துகின்றது, நிலைத்து நிற்கக்கூடவில்லை, களைத்துவருகின்றது, எதனையாவது கிஞ்சித்துச்சாப்பிடாவிடில் மோசம்வரும்போற்காணுகின்றதெனப் பரிபவப்பட அதைக் கண்டவுடன் எமதன்னைக்கு மிகவுமிரக்கமுண்டாகிப் பெரியவரே பயப்படவேண்டாமென் றுதரித்துத் தினைமா தேன் கனிகளைநீட்டியபோது கபடசந்நியாசியானவர் ஆவலுடன் கரங்களையேற்று வாங்கிக்கொண்டு துரிதமாயுண்டு அப்பாற் பசிதணிந்ததாயினும் வெய்யிலில் நடந்துவந்த வேஷ்டையினாலும் உதரவங்கிப்பெருக்கினால் நெஞ்சுலர்ந்திருந்தபோது மாவை மிகுதியாகத்தின்றதினாலும் கண்டத்திலடைத்துக்கொண்டு வருந்துகின்றனன், நீர்விடாய்ப்பட்டு மூர்ச்சிக்கவருகின்றது, இதற்கென்ன செய்வேனென மிரண்டுவிழிப்பதை வேடர்பாவையறிந்தவுடன், ஓதவசிரேஷ்டரே! காலதாமதஞ்செய்யாமல் இந்தமலையைத்தாண்டியிதற்கடுத்துக்காட்டும் ஏழுகுன்றுகளைக் கடந்துபோவீராகில் மதுரமிகுந்த நீர்ப்பெருக்கையுடைய ஒருசுனையிருக்கின்றது, திருத்தியாய்வேண்டியமட்டுஞ்சாப்பிட்டுவருவீரெனச் சொல்லினர். அப்போது அவர் தனுர்ப்பாணியாகிய வேடர்பெருமான்மனத்துக்கினிய பெண்ணை தாகத்தினிற் சோபிக்கின்றதுமல்லாமற் றள்ளாதகிழவனாகவிருக்கின்ற நான் பருவதங்களின் மத்தியிலுள்ள வழியை எப்படிக்கண்டுபிடிக்கப்போகின்றேன். மேலும் முன்பின் இவ்விடம்வந்திருந்து பழகினவனுமல்ல ஆதலால், நீ பாதங்கள்வருந்துமென்று தாழ்க்காமற்றுரிதமாய் என்னுடன்வந்து சுனைநீரைக்காட்டித் திரும்பிவிடு யென்று சண்முகங்களைமறைத்து விருத்தவேடத்தைத்தாங்கி எதிரில் பாசாங்குகளைக் காட்டிநிற்கின்ற கள்ளன் சொல்வதை வள்ளியம்மை யதார்த்தமாக நம்பியிரங்கினவராய்ப் பரணைவிட்டிறங்கிச்சுவாமி! வாரும்வாருமென்று தான்முன்னதாகவழிகாட்டியழைத்துப் போய்க் குன்றுகளனைத்தையுங்கடந்து குளிர்ந்தசலப்பெருக்கையுடைய சுனையைக்காட்டியபோது விடாய்த்தவனைப்போல இருகரங்களினாலும் புனலை வாரிவாரிக்குடித்து அகமுகமலர்ச்சியுடன் தேவியைக்கிருபையாகப்பார்த்து இதனைச்சொல்லுவதாயினர்.

ஓ பெண்கள்சிகாமணியே! உதரத்தைக்கொளுத்திப் பிராணனைவருத்திச் சரீரத்தைச்சோரச்செய்து வருத்திய பசிப்பிணியைத் தவிர்த்துத்தாகசாந்திக்குச் சுத்தோதகத்தையுங்காட்டிநீர்விடாயைத்தணித்தனை; இத்தகைய பேருதவிகளைச் செய்தபோதினும் இன்னமும் நமது மனத்தளர்ச்சி நீங்கவில்லை; மேகத்தைநிகர்த்த கரியகூந்தலையுடைய மின்னே! என்னுயிரே! அடி

யேன்கொண்டிருக்கும் மோகக்கவலையையும் தணியச்செய்து ஆதரிப்பீரா
கில்நமக்குச் சம்பவித்திருக்கும் குறைபாடுகளனைத்தும் முற்றுப்பெற்றதாகக்
களிப்போமென்று சலனமற்ற விருத்தசந்நியாசி மிகவும்வருந்தி மதிமயங்கியிரு
கரங்களையுஞ்சேரக்குவித்துக் குறையிரந்து எதிரில்நின்றனன். அதைக்கண்டு
சுகந்தபரிமளங்களைவீசும் நறுமலர்களை யணிந்திருக்கும் அளகபாரத்தையு
டையநங்கைநகைத்துப் பெருமூச்செறிந்து நடுநடுங்கிச்சீறி மாறுத்தரங்கொடு
ப்பதாயினள். நற்கதியிற்சேர்க்கவல்ல சிறந்ததவவேடத்தைப்பூண்டிருக்கின்ற
முதியரோ! மதிமருண்டு தகாதவார்த்தைகளைப்பேசினீர். ஐயரே! உமது
துறுநிசயங்களை யோசிக்குமிடத்தில் எப்படியிருக்கின்றதென்னில் யாவ
ருக்கும் மதுரமிருந்த பாலைப்போலக்காட்டிச் சாப்பிட்டகாலத்தில் அவர்க
ளுயிரைவாட்டும் விஷத்தினும் கொடுமையாகவே தோன்றுகின்றது, பட்சிகள்
மிருகங்கள்சேரவொட்டாமல்தினைப்புனத்தைக்காவல்கொண்டிருந்தவென்னைக்
குற்றமற்ற தவங்களைப்பெற்ற முதியரைப்போலவந்து ஏதோ சிற்சில இரக்க
மொழிகளைக்கூறிவஞ்சித்து நெடுந்தூரங்கொண்டுவந்து எம்மை ஆலிங்கனஞ்
செய்யவிருப்புற்று நினைத்தற்கரிய தகாதகாரணங்களைக் குறித்துக்கெஞ்சிக்
கரங்களைக்கூப்பி எதிரில்மதித்துநிற்பதுஉம்மையொத்ததவத்தருக்குநீதியோ!
உம்முடைய மாறுபட்டசெய்கைகளிற் சிறிதேனும்நம்மவராகிய வேடருக்குத்
தெரியுமாயின் நம்மிருவருக்கும்துரிதமாய்க் கொடியதீங்குகள் நேருவதற்கைய
மில்லையே, சங்கைப்போல வெளுத்தசிகையையுடைய முதியரே யிவ்வனை
யில் நன்னெறிகளை யனுசரித்துவந்த உம்மிடத்திற்சற்றும் நல்லுணர்ச்சியைக்
காணேனே! நீர்விருத்தருங்காலத்தைக்கழித்தீர், இதனாற்பிரயோசனமொன்று
மில்லை. இழிகுலத்திற்பிறந்த என்னிடத்திச்சைகொண்டு பயித்தியங்கொண்ட
வரைப்போலவாயில்வந்தவைகளைப்பிதற்றுகின்றீரே! இதைப்பார்க்குமிடத்தில்
வில்வேடர் யாவருந்தந் தீரதபரிபொல்லாதைநாட்டந் துணிந்திருப்பதாகக்
காணுகின்றது, நான்காவல்கொண்டிருந்த தினைப்புனத்தினிடத்தி லொருவரு
மில்லாமையால் மிருகங்கள் பட்சிக்கூட்டங்க ளனைத்தும்சேர்ந்து முதிர்ந்த
கதிர்களனைத்தையும் கறித்துக்கொண்டுபோவதன்றிப் பயிரையும் சின்னபின்
னப்பட அழித்துப்போய்விடும்; என்பிதா அதைப்பார்ப்பரானால் கோபித்துக்
கொள்ளுவர், ஆதலால் பேச்சுக்கற்ற கிழத்தவத்தரே நீர்சற்றும் இவ்விடத்தில்
நில்லாமல்நடந்துவிடும், நடந்துவிடும் அல்லதுவந்தகதியைப்பட்டுக்கொள்ளும்,
சற்றுந்தாழ்க்காமல் நான் விரைவிற்போய்க் கொல்லையைச் சேருவேனென்று
தூறிக்கொண்டு வள்ளிநாயகியார் வேகமாய் நடக்கும்போது பாலசுப்பிரமணி
யக்கடவுள் இலக்குமியையொத்த பெண்கொடியின் மனவுறுதிக்குமெச்சித்
திகைத்தவராய் இனியென்ன செய்வோமெனச் சற்றுயோசித்து ஒருநினைவு
கொண்டு ஒப்புவமையற்ற முன்னவனுகிய விநாயகமூர்த்தியைக்குறித்து மீறிப்
போகின்ற இக்கன்னிகையினைத்திரிவைருந்தருளித்தடைசெய்யவேண்டுமெனப்
போற்றினர். அக்காலையில் தம்பியினிடத்திற்பரிவாய் அவர்கோரிக்கையின்படி
பருத்த தேகத்தைப்பெற்ற மதயானையின் கோலங்கொண்டு கடலைப்போலவி
ரைந்து திசைகளதிரவீறிட்டுப்பருத்து நீண்டிருக்கும்துதிக்கையைநீட்டி மரங்

களைவேருடன்பறித்துவழியையடைத்து அதிகவுற்பாதத்தைக்காட்டிவள்ளிநாயகியாருக்கெதிரில்வந்தனர். அதைக்கண்டவுடன் என்னசெய்வேனென மனம்கலங்கி நடுநடுங்கித் தேகமுற்றும்வியர்க்க மதிமருண்டு யாதோருதவியையுங்காணாதபடியால் சரேலெனத்திரும்பி கைகாலுதறலெடுக்கத்தக்கதாக வேகமாயோடிவந்து தவவேடத்தைக்கொண்டிருக்கும் குமரநாயகன் பக்கலிற்சேர்ந்துசுவாமிஇதோ மதயானைதுரத்திவருகின்றது அதன்வசப்பட்டு மாண்டுபோகாதபடி இத்தருணத்தில் அடியேனிடத்திரக்கமுற்று அதைத்துரத்திக்காக்கக்கடவீர், நீர் குறித்தபடிக்கெல்லாம் சம்மதப்படுவேன் சம்மதப்படுவேனென்று பின்புறத்தில்வந்து முதுகைத்தழுவிக் கட்டியணைத்திருந்தனள்.

கேட்டீர்களோ! சவுனகாதிரிஷிகளே? இந்தத்திருவிளையாடல்களை என்னசொல்வேன் முன்னர்தெய்வயானையை மணந்து மருப்பையொத்த ஸ்தனபாரங்கள் அழகியதிருமார்பிற் றிளைக்கும்படித்தழுவி யின்புற்றிருந்தவர் இப்பொழுது பிடிநடைவாய்ந்த குறப்பாவையினது பொன்னங்கலசங்களைப்போன்றகொங்கைகள் முதுகினிடத்திற்றாக்கியபோது வயிரத்தம்பத்துக்கொப்பாகநின்ற பாலசுப்பிரமணியமூர்த்திக்குத் தேகம்பூரித்து உள்ளங்குளிர்ந்துதிருமுகமண்டலத்தைச் சற்றுத்திருப்பிப் பெண்கள்சிகாமணியே பயப்படவேண்டாம், யானையைத் துரத்திவிடுவோம் மனச்சஞ்சல மற்றிருக்கக் கடவாயென்று பற்பலவார்த்தைகளைச்சொல்லி ஆதரித்துத் தந்திமுகத்தெந்தையைத்தியானித்து வந்தனைகளைச்செய்துவழுத்தித் தேவரீர் தயைசெய்தெழுந்தருளிய காரணத்தினால் மனத்தைப்பிடித்தலைத்திருந்த கவலையைப்போக்கினேன் மங்கையும் என்னிஷ்டப்படியே சம்மதமாகச்சேர்ந்தனள், எமதிறைவனேஉமதிருப்பிடத்துக்குத் திரும்பக்கடவீரென் றிரந்து நின்றனர். விநாயகமூர்த்தியுந்தம்பியினிடத்திற் றயைசெய்துமறைந்தனர். பின்புசரவணபவன் வள்ளியம்மையைத் தழுவிக்கொண்டுபோய் ஒருபூங்காவைச்சேர்ந்து உள்ளமுந்தேகமும்பூரித்துக் களிக்கத்தக்கதாகக் கலந்தின்புற்றுமனமகிழ்ந்தவராய் அவளிடத்திற்கருணையுற்றுச் சடுதியில்மறைந்து வயிரமுடிகள் கவித்திருக்கும் சண்முகங்கள்பூரணச்சந்திரோதயங்களைப்போலப் பிரகாசிக்கவும் துவாதசாதித்தரையொப்பப் பன்னிருமகரகுண்டலங்கள் செவிகளினிலங்கவும் நவரத்தினமயமாகியவாகுவலயங்களைப் பூட்டியிருக்கும் பன்னிருபுயாசலங்கள் கம்பீரமாகக்காட்டவும்முப்புரிநூல்புரளும் விசாலமாகியமார்புமலையையும் தண்டைசிலம்புதரித்துக்கொஞ்சும்திருவடிகள்தாமரைமலர்களையுமொப்பக்காட்டவும் வெற்றிவேல்தனு சக்கரம் கதைமுதலிய படைகள்விளங்கும் கரதலங்களைக்கொண்டுபொன்னையொத்த கண்களையுடைய கலாபத்தைவிரித்து நடிக்கும் மயில்வாகனத்தின்மீதி லெழுந்தருளிக் குறமகள் நேத்திரோற்சவமாகத் தரிசித்துக்களிக்கும்படியாகப் பாலசுப்பிரமணியன் காட்சிதந்தனன், இத்தகைய மங்களகரமாகிய திருக்கோலத்துடன் வேலாயுதமூர்த்தி தனக்கு எதிரில்நிற்குங்காட்சியை வள்ளியம்மைதரிசித்தவுடன் விழிகளில் ஆனந்தவாரிபெருகத் தேகம்பூரித்து மனமகிழ்ச்சியுடன் மும்முறைவலம்வந்து பலமுறைதிருவடிகளிற்பணிந்து கரங்களைக்கூப்பிக்கொண்டு மெய்ப்பத்தி விசுவாசத்துடன் விசாகப்

பெருமானுடையபெருமைகளையுங் குணாதிசயங்களையுமெடுத்துப் போற்றிப் போதவாரியிலழுந்தி உடல்முற்றும் கம்பிதப்படக் கூத்தாடிப்பெறுதற்கரிய சுகத்தைப்பெற்றவளாய் இந்தப்படி விண்ணப்பஞ் செய்யத் தொடங்கினள்.

சுயஞ்சோதிமயமாய்ச் சர்வாந்தரியாமியாய்க் கோடிசூரியப் பிரகாசம்பொருந்திய வெற்றிவேலைத் தாங்கியிருக்கும் எமதிறைவனே இக்காட்சியை முன்னமேகாட்டி நாயினேனைத் தொண்டுகொண்டு உமதிஷ்டப்படியே போகபாக்கியங்களை யனுபவித்துக் களியாமல் இதுபரியந்தம் பலநடனங்களைக்காட்டி வீண்காலத்தைக் கழிக்குங் காரணமென்னோ! பேதையாகியயான்பெண்மதியினால் தமது பெருமைகளைக்கண்டறியாமல் பலகுறைபாடுகளைச்செய்தேன், அவைகளனைத்தையும் திருவுளத்திற்பாராட்டாமல் க்ஷமித்திரட்சிப்பது உமது பாரமாகும் இன்றுமுதல் நாயினேனை வழியடிமையிற்சேர்த்து ஆட்கொள்ள வேண்டுமென்று திருமேனிநடுநடுங்க பலவகைகளிற் போற்றுகையில் குமாரதேவர் பரிவாய் அவளிடத்திற் கடாட்சவீட்சணியத்தைச் செலுத்திப் பெண்ணரசியே! நீ முன்னம் என்னன்னை சகோதரரும் எனது மாதுலருமாகிய ஸ்ரீவிஷ்ணுவுக்குமகளாய் நம்மைச்சேர்ந்துகளிக்கும் விருப்பத்தைக்கொண்டு அளவற்றகாலம் கடினமாகிய தவங்களைச்செய்தபோது நாமெழுந்தருளிக் கடாட்சித்தபடியே இத்திருவவதாரத்தில் உமக்கு அனுக்கிரகஞ்செய்யவந்தனம், மேலும் நம்மைக்குறித்துப்பேசிய வாசகங்களனைத்தையும் தோத்திரங்களாகக்கொண்டனம், மனம்வருந்தாமற் சந்தோஷித்திருக்கக்கடவாயென் றுதரித்துத்தழுவிப் பரிபூரணகடாட்சத்தைப்பாலித்து வேடர்பாவாய் நீ இவ்விடம் வந்து பொழுதாயிற்று, தினைப்புனத்தைக்காக்கும்படி நீ முன்னேபோகக்கடவாய் நாமும்பின்பற்றிவருவோமென, த்திருவாய்மலர்ந்தருளினர். பின்பு வள்ளிநாயகியாருக்குஅதிகமகிழ்ச்சியுண்டாய்மீட்டும் திருவடிகளிற்சேவித்து விடைபெற்று மனமும்விழிகளும் கணவனிடத்திற்கிடக்க அரிதிற்போய்த் தினைப்புனத்தைச்சேர்ந்து பழையபடியே பரணிமேலேறிக் கவணைத்திருக்கரத்திற்கொண்டு பட்சிகள் மிருகங்கள் மாறியோடத்தக்கதாக ஆயாலோட்டியிருந்தனள், அத்தருணத்தில் அடுத்தகொல்லையிற் போற்றியிருந்த பாங்கியானவள் சிலசந்தேகப்பட்டுத் தலைவியிடத்துக்கு மெல்லவந்துசேவித்துச் சிலபோது வார்த்தையாடிக்கொண்டிருந்து மனமும்தோற்றமும் நடைகொடிபாவனைகளும் பேச்சும் கருத்தும் மற்றகாரணங்களனைத்தும் வேறுபட்டுக்காட்டுவதைக் குறிப்பாய்த் தெரிந்து அதற்கடுத்த விளைவையும் நிதானித்து பாங்கியானவள் தலைவியைப் பார்த்து இதனைவினவுவதாயினள்! தாயே இத்தினைப்புனம்பட்சிகளினாலும் மிருகங்களினாலும் அழிந்துபோகும் படியேவிட்டுத் தனிமையில் நீரெவ்விடத்திற்போயினீர், சொல்லுமெனக்கேட்டபோது தலைவி மிகவும் நாணினவளாய் அடிதோழி வெப்பத்தினாற் சகிக்கப்படாமற் சுனையிற்படிந்து நீராடிவரப் போயிருந்தனனென்ன மறுமொழிதந்தபோது, தோழிநகைத்து நல்லகாரியம் நீர்பேசியது வெகுநேர்த்தியாக விருக்கின்றது மையிட்டுக்கறுத்துக் காதளவு மோடியிருக்கும் விழிகள்சிவக்கவும் கொவ்வைக்கனியினும் பிரகாசித்திருந்த அதரம் வெளுத்துக்காட்டவும் சரீரம்வாட்டமுற்று வியர்க்கவும் பொற்

கலசத்தையொத்த கொங்கைகள் பசலைமூடி விம்மவும் கரங்களிற்பதியப் பூட்டியிருந்தவளையல்கள் தளர்ந்துகலிக்கவும் இத்தகைய மாறுபாடுகளைத் தாவல்லசுனை எத்தலத்திலிருக்கின்றது காட்டக்கடவாயென வினவியபோது பாங்கியைக்கோபித்துப்பார்த்து என்பிராணபதமாகியதோழியென்று உன்னை நினைத்து நம்பி நானிவ்விடத்திலிருக்கும்போது மெல்லவந்து என்னிடத்திலே தோ சிலகுற்றங்களைக்கற்பிக்கவெண்ணினை; இதைப்பார்க்குமிடத்தில் மிகவுங் கடினசித்தமுடையவளாகக்காணுகின்றது, சற்றுமிரக்கமற்று இப்படியெல்லாம் பேசுவையோவெனப் பிணங்கி இவ்விதங்களாகத் தலைவியும் பாங்கியும் வாதாடிக்கொண்டிருப்பதை முன்னம் வேங்கைமரமாகநின்ற சிவசுப்பிரமணிய தேவர்கண்டு இது நல்லதருணமென்றெண்ணி ஒருதிருவிளையாடலைச்செய்ய உத்தேசித்துத் துரிதமாய்ச்சல்லடையுடுத்துத் தட்டியைக்கட்டிச் சிகையைக் கோதிமுடிந்து அதைச்சூழ்வர மயிற்பீலியைச்செருகிப் பலகறைத்தாழ்வடத்தைச்சுற்றி அடிகளில் மிதியடிகளைச்சேர்த்து பிலலையிணைத்து நாரியைமாட்டி யிடக்கரத்திற்கொண்டு வலக்கரத்தில் பாணத்தைப்பற்றிக் குறியாகப்பூட்டி அரையிற்குறிய வாளொன்றைச் சொருகினவராய் வேட்டையாடி வருகின்றவனைப்போலப் பலதிசையினும் விழிகளைச்செலுத்திப்பார்த்து அநட்டிக்கொண்டு பாதங்கள்சிவக்க வேகமாய்வந்து காந்தள் மலரினுஞ்சிவந்து மெல்லியவாகக்காட்டும் கரகமலங்களைப்படைத்திருக்கும் பெண்களே நானசெலுத்திய பாணத்தில் தேகமுற்றுங்காயப்பட்டு உதிரம்பெருகப் பேழ்வாயைத்திறந்து இடியைப்போலவீறிட்டு ஓய்ந்தடையுட ஒருயானையானது இவ்விடத்தில் வரக்கண்டீர்களோ சாடைதான் தெரியுமோ ஒளித்துவைத்தீர்களோ துரத்திவிட்டீர்களோவென்று பற்பலகேள்விகளை வினவிப் பாலசுப்பிரமணியக்கடவுள் நிற்பதைப் பாங்கிகண்டு மாறுரையாடுவதாயினள்,

உம்மையொத்த புயபலபராக்கிரமச்சம்பத்தையுடையவீரர்களுக்கு உமது சூரத்தன்மைகளையும் வெற்றிப்பிரதாபங்களையுஞ் சொல்லுவீராகில அவர்களால்மதித்துப் புகழத்தரும். புல்லிய தினைப்புனத்தைக்காத்துவரும் பேதையராகிய மங்கையரிடத்திற சவுரியவார்த்தைகளையாடி யாதுதென்னையென்று மறுமொழிகூறினவளாய் மேலும் ஐயா வேட்டையாடிவரும் நிலைமைகளையும் தினைப்புனத்தைக்காத்திருக்கும் தலைவியின்நாட்டத்தையும் குறிகுணங்களையும்மதித்து இப்போது பேசியவனைத்தும் மாறுபட்டுக் காட்டுகின்றது. இவ்விருவர் நடத்தையையும் யோசித்துப்பார்க்குமிடத்திற் றழைகளைத் தேகமுற்றினும்மூடி வஞ்சகக் குரலைகாட்டிப் பறவைகளைப்பிடிக்கும் வேடர் நிலைமையாகக் காணுகின்றது. இவர்கள் கொண்டிருக்கும் மையலின்குறிப்பை விழிகளே காட்டுகின்றதெனத் தீர்மானித்தவளாய் இனி இவ்விடத்திலிருக்கலாகாதென்றெண்ணிப் பாங்கியானவள்துரிதமாய் அடுத்தகொல்லையைச்சேர்ந்திருந்தனள். யானையையெய்தேனென்று வீரம்பேசிவந்தசேவகன்தானும் பின்பற்றிப்போய் மேகத்தைப்போலக் கரியகூந்தலையுடைய பெண்ணே என்கருத்தினைக் கேட்டருள்கவெனச் சொல்வதாயினர். தமியேனுக்குறுதியாகிய சுற்றமும்நீங்களே, பிராணபதமான சிநேகிதருநீங்களே, என்னுடலும் உயிரு

மாகவிருக்கின்ற உங்களிருவருக்கும் வேண்டியபொருள்களைத்தன்மையதாயி
னும் இந்நிமிஷத்திற்றருவித்துக் கொடுக்கக் காத்திருக்கின்றேன். நீங்கள்காட்
டிய பணிகளிற் குறைபாடில்லாமல் செய்யவல்லேன், கோபங்கொள்ளாமற்
சற்று நீர் அனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று அழகிய மயில்வாகனன் மொ
ழிந்தவசனங்களின் குறிப்பைத் தோழிதெரிந்துகொண்டவளாய் ஐயனே உம
தெண்ணமிதுவோ சிறந்த எங்கள்குலத்துக்குப் பூமியுள்ளவரையினுந்தீராதபழி
ப்புரையை நாட்டவந்தீராயினும் இழிவாகியமரபி லவதரித்திருக்கின்ற மறவர்
பாவையை உம்மையொத்தகன்னியவான் விரும்புவதழகோ, இதுதகாதனவே
யாதலால் மறந்துவிடுமென்று மறுமொழியாடிய தோழியைப்பார்த்து எனது
நெடியமாமனாகிய ஸ்ரீமகாவிஷ்ணுபெற்ற அமுதத்தை வேடர்வருந்திப்பெற்ற
தவக்கொழுந்தை பெண்கள்நாயகத்தை எனக்குக்காதலைத்தந்து நல்லருள்செ
ய்த காரிகையைக் குறப்பெண்ணெனப்பேசுவது பேதைமையாமெனக் குறித்
தனர். அந்த இனியவாசகங்களைக்கேட்ட பாங்கியானவள்யாதுந்தோன்றாமல்
மயங்கி ஐயனே சற்றுநேரத்தில் வேடர்திரட்சியா யிவ்விடம் வருவர், அவர்கள்
மிகவுங்கொடியர், சிலசந்தேகங்களைக்காண்பாராயின் முன்பின்பாராமல் பழிபாத
கங்களுக்கும் அஞ்சாமற் கொலைசெய்வதற் கையமில்லை, நீரிவ்விடத்தி விரு
ப்பதைக் கண்கூடாகப் பார்ப்பாராயின் எங்கள்பிராணனும் காலிவரும், உம்
மையுமென்ன செய்வரோ தெரியாது, மேலும் நீரிவ்விடத்தி விருப்பதினு
லாவதொன்றுமில்லை. ஆதலால் விண்வாதை னுடின்றியெனப் பல நீதி
களைச் சொல்லித் துரிதமாய் இத்தலத்தைக்கடந்துபோய் வாருமென்று பய
முறுத்தினர். அப்போது சரவணபவன்நகைத்து நல்லகாரியம், செவ்வரிபரந்து
விசாலமாய்க் காதளவுமோடியிருக்கும் விழிகளையுடைய பெண்ணே! உம
திறைவியுடன் என்னைக்கூட்டுறவு செய்யாமற் போனையானால் ஏட்டிலிடத்
தவள்வடிவையெழுதி மடலேறி உங்களூர்வீதிகளி லோட்டத் துணிந்திருக்
கின்றனன், அக்காலத்தில் யாவரும் பகிரங்கமாய்த் தெரிந்துகொள்வர், இதை
யோசித்து என்மனக்கருத்தை முடியாமற்றடைசெய்வையானால் நான்குறித்த
படிக்குநாளைக்கேமுடிக்கக்கடவேன். இதை உண்மையாகநம்பக்கடவையென்று
தேவதேவோத்தமனாகவிருக்கின்ற பாலசுப்பிரமணியப்பெருமான் பேசியதைப்
பாங்கிகேட்டவுடன் இதுவென்ன அநியாயமாகவிருக்கிறதென்று துக்கமிகக்
கொண்டவளாய்ச் சுவாமி! நீர் பனைமடலேறுவது நீதியன்று, மேலும் தீராத
வசையாகும், ஆதலாற்கோபியாமற் சற்றுமனம்பொறுமி அதோகாணுகின்ற மாத
விச்சோலையிற்போய்மறைந்திருப்பீரானால் எங்கள் காதன்மங்கையை அத்தலத்
துக்கழைத்துவருவேனென்று உடன்படிக்கைசொல்லி அனுப்பிவிட்டு அடுத்த
புனத்தை காவல்கொண்டிருக்கின்ற தலைவியிடத்துக்குப்போயினள். அக்காலை
யில்எமதிறைவனும் மனமகிழ்ச்சியுடன்நடந்து மேகங்கள்சஞ்சரிக்கும் உன்னத
முள்ள மாதவிச்சூழலைச்சேர்ந்து மனவெழுச்சியுடனிவர்கள் வரவுக்கெதிர்
பார்த்திருந்தனர். பாங்கியும் தலைவியைக்கலந்து திருவடிகளிற்பணிந்து வேலை
த்தாங்கிய குமரநாயகனுக்கடுத்திருக்கின்ற காதல்மிகுதியையும் அதற்கிசையா
மற்போனால் வரும் அவதூறுகளையும் விவரித்துச்சொல்லி புனத்தைத்தேற்றி

ஒருமைப்படுத்தினவளாய்த் தலைவியைத் தினைப்புனத்தைக்கடக்க மெல்லக் கொண்டுபோய் மயிலினங்கள் களித்தாடும் குளிர்ந்த மாதவிப் பொங்கரில் நுழைந்து களிமிகுதியையுடைய பாவாய்! இவ்வரையைச் சூழவிருக்கும் பரிமளமிகுத்த மலர்களைப்பறித்துவந்து மாலைதொடுத்து உமது கொண்டையி லணிவேன், அதைத்தேடிவருகின்றவரையிலும் இவ்விடத்தில் வேடிக்கைபார்த் துக்கொண்டிருமென்று தோழியானவள் குறிப்பாய்த்தெரிவித்துப்போய்விட் டனள். வள்ளிநாயகியுங் கந்தனைநினைத்து மனமுருகிச்சுற்றிலும் விழிகளைப் பரப்பிப்பார்த்திருந்தனள். அக்காலையில் அளவிறந்தமகிழ்ச்சியுடன்சண்முகப் பெருமாள்பழையகோலங்கொண்டு எதிரில்வந்துநின்றனன். அப்போதுவேலைப் போன்ற விழிகளையுடைய வள்ளிநாயகியார் எமதிறைவன் பாதகமலங்களிற் சேவித்தமாத்திரத்திற் கேசவன்மருகன் திருக்கரங்களை நீட்டி வாரியெடுத் தணைத்து ஒருவிருட்சத்தினடியிற்சேர்ந்து அவளின்பநலங்களை யனுபவித்து இருவரும்தேகபரவசராய்க் களித்திருக்கையில் தேவியைப்பார்த்து உன்பிதா வாகிய அரசன் வேடருடன்வரும்போது உன்னைக்காணாதவனாய்த் தேடி வருவன், ஆதலாற் பாங்கியுடன் விரைவிற்போய்த் தினைப்புனத்தைக் காவல் கொண்டிருக்கக்கடவாய் நாமும் நாளைத்தினம் இவ்விடம் வருவோமென்றனுக் கிரகஞ்செய்து மறைந்தனர்.

அக்காலத்தில் வள்ளியம்மை எமதிறைவன் தோற்றங் காணாமையால் மிகவும்வருந்தி மாதவிப் பொதும்பரைக்கடந்துவரும்போது பாங்கியு மெதிர் சென்று இருவருங்கலந்து தான்பறித்துவந்த காந்தட்புட்பங்களைக்காட்டிக் கொண்டையிற்சூட்டிக் குலவிப்பேசிக்கொண்டழைத்துப்போம்போது வள்ளி யம்மையுந் தன்மனத்துக்கிசைந்தவாறே நடந்துகொள்ளவல்ல தோழியுடன் தினைப்புனத்தைச்சேர்ந்து கிளிகள்முதலாகிய பட்சிகளையோட்டிக்காத்திருந்த னள். அவ்வேளையில் எமதன்னையானவள் கணவனைப்பிரிந்த காரணத்தினால் மனவாட்டத்துடன்தன்தொழிலைச் செய்துவருகையில் தினைக்கதிர் முற்றித் தலைசாய்ந்தது. அத்தருணத்தில் அந்த வேடராசன்முதலானவர்கள் தெரிந்து குறிஞ்சியிலிருப்பவரனைவருந்திரண்டுவரும்படியாகப்பணித்துத் தன்பெண்ணா கிய குறிஞ்சிநிலத்திறைவியைப்பார்த்துத் தினைக்கதிர்களை அறுத்தொப்படி செய்யுங்காலம்நேர்ந்தது, வேங்கைமலர்கள் மலர்ந்ததினால் அக்குறியையுங் காட்டுகின்றது, தாயே யிதுவரையிலும் பனிவெய்யில் குளிர்முதலிய சிறுமை யிற்பட்டு அடவியிலிருக்கின்ற இப்புனத்தில்வீற்றிருந்து மிகவும்வருந்தினை, இனி உன்சிறுகுடிலையைச்சேர்ந்து சகலசவுக்கியங்களையும் அனுபவித்து மனவெழு ச்சியுட னிருக்கக்கடவாயெனப் பிதாமுதலானவர்கள் பரிவாய்ச்சொல்லினர். அவ்வாசகங்களைக்கேட்டவுடன் வேலாயுதமானதுபாய்ந்துபுண்பட்டிருப்பதில் எரிநுழைந்தாற்போலத் திடுக்கிட்டு மனம்வருந்தித் திகைத்துக் கணவனைக் காணப்பெறாத காரணத்தினால் ஊசலாடிய மனத்தளாய்த் தினைப்புனத்தைக் கடந்து தோழியுந்தானுமாய்ப்போகும்வழியிலெதிர்ந்த மான் மரை மயில்குயில் வேங்கைமுதலாயினவற்றைக் கரங்களைக்கூப்பித்தொழுது இதுகாறும்எங்களுக் குத்துணையாகவிருந்த பறவைகாள் மிருகங்காள் எமதிறைவன்வந்து எங்களைத்

தேடுவாராயின் நாங்கள் பதிக்குப்போனசேதியைத் தயைசெய்து மறவாமற் றெரிவிக்கக்கடவீர்களென வேண்டிக் காலெழாமல் மனத்தளர்ச்சியுடன் கொழுநனைநீங்கித் தன்னந்தனியளாய்த் தன்மனையைச் சேர்ந்தபோதுகுறிகுணங்கள்வேறுபட்டுப் பழையபடியே சேடியருடன்கலந்து கொஞ்சிப்பேச மனமில்லாமலும் அவர்களைப்பார்த்து க்ஷேமங்களைவினவாமலும் அம்மனை சிறுவீடு முதலான விளையாடல்களைச்செய்யச்சகியாமலும் அதிகவாட்டத்துடன் மனவருத்தப்பட்டிருக்கையில் குலக்கொழுந்தாகிய வள்ளிநாயகியார் வந்தசேதியைத்தெரிந்த அன்னையும் வளர்த்ததாயும் ஓடிவந்து ஆவலுடன் கட்டியணைத்து மடியில்வைத்துக்கொண்டுமுத்தமிட்டு உச்சியைமோந்து தலையைக் கோதி எங்களைப்பெற்றதாயே பலநாள்களாகக் கொல்லையிற்பட்சிகளைக்காத்து மிகவும்வருந்தினை,வெய்யில் பனி இக்கொடுமையினால் தேகத்தின்காந்திமாறித் தளர்ச்சிகொண்டீராவெனப் பலவிதங்களிற்பாராட்டி வினவுவதைக் காது கொடுத்துக்கேட்டு மிகமுகமலர்ச்சியுடன் பழையபடியேகுலவிக் கோகிலத்தைப்போலக் கொஞ்சிப்பேசாமல் தலையைக்கவிழ்ந்து துக்கசாகரத்திலழுந்தியிருப்பதைக்கண்டனர்; கண்டுதிகைத்துத்தாயே உன்னழகியதிருமேனி வேறுபட்டுக்காட்டவும் யாதொருவார்த்தையையும் களித்துப்பேசாமலும் மதிமயக்கங்கொண்டிருக்கின்றனை, இத்தகையகுற்றம் நேரிடுவதற்குக்காரணமென்னோ அதை மறையாமற்சொல்லவேண்டுமெனப் பயமுறுத்திக் கேட்டும் கோபித்தும் தங்களாற்கூடியவரையிற்பார்த்தும் எதையும் வெளியிடாத காரணத்தினால் பயப்பிராந்திகொண்டு இதுவென்னஅதிசயமாக விருக்கின்றது. மகள் மிக்ககவலையிற்பட்டிருக்கின்றவளைப்போலக் காட்டுகின்றதெனத் துரிதமாய் ஒரு அறையிற்சேர்த்துக் காவற்படுத்திக் காத்துவரும்போது சித்திரப்பிரதமையைப்போன்ற வடிவையும் மயிற்சாயலையுமுடைய வள்ளியம்மை வெற்றிவேலாயுதமூர்த்தியைக் கலந்தின்புற்றிருந்தவள் அவரைக்கண்டு வார்த்தையாடிச் செலவுபெற்றுவாராமற் சடுதியிற்பிரியவந்த காரணத்தினால் மனம் வெந்து சரீரங்கன்றித் தீயிற்பட்ட தளிரேபோலப் பிராணனுண்டோவில்லையோவெனச் சங்கைகொள்ளும்படியாகச்சோர்ந்து பிரக்ஞைதப்பிவிழுந்தனள். இச்சம்பவத்தைக்கண்டசெவிலித்தாயர்முதலாகிய வேடப்பெண்களோடிவந்து அதிகக்கிலேசத்துடன் வாரியெடுத்து மார்புடனணைத்து மடியிற்சேர்த்து யாவருஞ் சூழ்ந்துகொண்டு துக்கசாகரத்தி லழுந்தினவர்களாய் வள்ளியம்மை திருமேனியுறுப்புகளைக் குறிப்பாகப்பார்த்து அழகிய திருமேனி துவண்டு காந்திமங்கிக்காட்டுவதையும் கரங்கள்மெலிந்து அழுத்தமாகவிருந்த தங்க வளையல்கள் தளர்ந்துகழல்வதையும் வேலையொப்பக்காதளவுமோடிசெவ்வரி பரந்திருக்கும் விழிகளில் நீர்பெருகுவதையும் குறிகுணங்கள்முதலிய காரணங்கள் வேறுபட்டுக்காட்டுவதையும் நரம்புகள் பசலைகொண்டு பூரித்திருப்பதையும் கொங்கைகளில் நகக்குறிபட்டுப் பூரித்துவிம்மித்ததும்பியிருப்பதையும் நிதானித்துப்பார்த்தவுடன்சூர்ப்பகையாகிய வேலாயுதக்கடவுள் தொட்டதையறியாம விதனைச்சொல்வதாயினர்.

மலையின்மீதிருக்கும் தினைப்புனத்தைத் தனிமையிற் காவல்கொண்டிருந்தகாலத்தில் இந்தப்பெண்ணரசியைவள்ளிமலைச்சாரலிலிருக்கும் தேவதை சோங்கிற்றோ யாதுந்தோன்றவில்லை. இப்படிப்பட்ட களைபட்டுக் கண்களைத் திறவாமற்கிடப்பதென்னேயெனப் பலரும் பற்பலவிதங்களாற்பேசித் திகைக்கையில் இறைவியைவளர்த்த தந்தையாகிய வேடர்பெருமானும் மற்றசுற்றத்தவரும் இதைக்கேள்விப்பட்டவுடன் ஏகமாய்த்திரண்டுவந்துசூழ்ந்துகொண்டு வள்ளிநாயகியார் நிலைமையைப்பார்த்துக் கிலேசித்தவர்களாய் அக்கணத்திற்றங்கள்குலதேவதையாகிய குறமூதாட்டியையும் முருகனையும்வரன்முறைப்படியே கொடித்துப பூசனைவழிபாடுகளைச்செய்து பணிந்து போற்றியவுடன் வடிவேலை ஸ்தாபித்துப் பத்திரபுஷ்பங்களைச்சாத்தித் தூபதீபங்களைக்கொடுத்துப் பாற்சோறு தினைமாவிளக்குப் பண்டுபலாதிகளைத் திரட்சியாகப்படைத்து வேடரனைவரும் தீர்க்கதண்டன்செய்தவுடன் ஆவேசங்களுண்டாய் வெறியாடல்களைச் செய்துவரும்போது முருகன் மருள்பிடித்திருக்கின்ற ஒருவன்மேல் சுப்பிரமணியர்தோன்றினாறு அவன் முருகாமுருகாவெனக் கூவிக்கூத்தாடுகையில் வேடரிற்சில முதியர் சமீபத்திற்போய்த் தூபங்களைக்காட்டிக் கரங்களைக்கூப்பிக்கொண்டு எங்கள்குலதெய்வமே! முருகப்பிரானே! வெற்றிவேலனே! போற்றிபோற்றி தேவரீர் திருவுளமிரங்கி இந்தக்கன்னிகைக்குச் சம்பவித்திருக்குங் குற்றத்தை இன்னதெனத் திருவாய்மலர்ந்து அதற்கு நிவாரணத்தையுங்காட்டியருளவேண்டுமென்று போற்றிநின்றனர், அதுபோது முருகனமருள்பிடித்தவன் அதட்டி அடா பயமேல உண்மையாகியசம்பவத்தைத்தெரியாமல் மயங்குகின்றீர், இது மற்றொன்றுமல்ல, வேடராசபுத்திரியானவள் தினைப்புனத்திற் றனிமையிற்காவல்கொண்டிருந்தகாலத்தில் அவளுடைய சுந்தரவடிவத்திற் கிசைந்து நாமேவலிற்பற்றிவிட்டனம், எமதுள்ளமகிழும்படியாகச் சகல ஆடம்பரங்களுடனும் பூசைசெய்து அவளையும் நமது வெறியாடலுக்குள்ளாக்குவீராகில் இப்போது கண்டிருக்கும் மயக்கமும் மற்றகுறைபாடுகளும் நிவர்த்தியாய் முன்னைஞானநிலையும் பெற்றிங்கு சவுக்கியப்பட்டு மனவெழுச்சியுட னிருப்பாளெனக் குறிப்பாயினியாகச் சொல்லி முடித்தவுடன் குமாரநாயகனுடையவாக்கியம் வள்ளிநாயகியார் செவிகளில் அமுததாரையைப்போல நுழைந்தமாத்திரத்தில் கண்தெளிந்து கண்களைவிழித்து மெல்லவெழுந்து அவ்வாறாகவே தாயதந்தையருடன் வார்த்தையாடிச் சந்தோஷசாகரத்திலழுந்திக்களித்திருந்தனள்.

இந்தச் சுகுணத்தைக்கண்டமாத்திரத்தில் செவிலித்தாயானவள் மனமகிழ்ச்சியுடன் முருகனைநினைந்து ஐயனே! தேவரீர் திருவுளமகிழும்படியாகத் திருவிழாமுதலிய சிறப்புகளைச்செய்வோம், இவளைப்பாதுகாத் திரக்ஷிப்பது உமது பாரமெனப்போற்றிப் பிரார்த்தனைசெய்து மஞ்சள்வஸ்திரத்துண்டில் செந்நெல்லைச் சேர்த்துமுடிந்து வள்ளியம்மை திருக்கரத்திற்கட்டினள், இவ்விதமாய் எமதன்னையைவளர்க்கும் வேடரனைவரும் தங்கள் தேவியருடன் கலந்துபோய் அரிந்து ஒப்படிசெய்து அரசனுக்குரிய கடமையைக்கொடுத்து யாசகருக்குவேண்டியமட்டும்தந்து மிகுதியையில்லங்களிற்சேர்த்துக்கொண்டு

பந்துவர்க்கங்கள்சினேகிதர் அதிதிகளுடன் சாப்பிட்டுச்சவுக்கியமாகவிருந்தனர். இதன் இடையில் வள்ளிவரையினிடத்தில் வள்ளிநாயகியாரைத் தழுவிக் களவுப்புணர்ச்சியைச்செய்திருந்த குமரநாயகன் மறுதினம் வழக்கப்படியே மாறுவேடத்தைத்தாங்கிக் கம்பீரமாய்வந்து திருத்தேவியைக்காணாமல் தினைப்புனமரிந்திருப்பதைத் தெரிந்தவுடன் மனங்கலங்கி மதிமயங்கித்திப்பிரமை கொண்டவனைப்போலப் புலம்பி, வரைமுற்றினுந்திரிந்தலைந்து யாதுந்தோன்றாமல் திகைத்து வானத்திற்செல்லும் மேகங்களைப்பார்த்து இந்தத்தினைப்புனத்திற் காவல்கொண்டிருந்த என்மனத்துக்கினிய பெண்கொடியானவள் போனவிடந்தெரியுமோவென்றுவினவியும், தாங்கள் உல்லாசமாய்க் காமபோகங்களையனுபவித்துக் களித்திருந்தசோலைகளில் மாதவிப்பொங்கரினிடங்களிற்போய் அத்தலங்களில் மனவெழுச்சியுடன் கலாபத்தைவிரித்தாடும் மயிலினங்களைக் கூவி என் பிராணனைக் கிரகித்துக்கொண்டு மறைந்தநாயகியினது செய்தி தெரியுமாயின் மறையாமல் வெளியிடக்கடவீரென்று கெஞ்சியும் தினைப்புனமே உன்னிடத்திற பலநாட்களாக வாசமாய் இப்பரணிடத்திலிருந்த வேடமங்கை எத்தலத்தைநோக்கிச்சென்றனள்; சந்தேகமில்லாமல் உனக்குத்தெரியுமே மறையாமற்பேசுவாயென்றிரந்தும் அழகிய சிறகுவாய்ந்த பூவைகாள் என்னுன்மானையொத்த வள்ளியின் காரணம் ஏதேனுந்தெரியுமாகில் சொல்லக்கடவீரெனக் கரங்களைக்கூப்பியும், பசியகிள்ளைகாள் பெண்ணரசியைக் கண்டீர்களோவென்று வினவியும், வீறிட்டுச்செல்லும் மதயானைகளைப்பார்த்துப்பொற்பாவையையொத்த மின்னைப்பார்த்ததுண்டோவெனக்கேட்டும், மான்கூட்டங்களின்மீது விழிகளைப்பரப்பி உங்களினத்திலுதித்த மங்கையேதேனும் இக்கூட்டத்திற் சேர்ந்திருக்கின்றனளோ உரைப்பீர்களெனவினவியும், தோப்புகளினிடங்களினுலவித் தென்றற்காற்றுத் தாக்குவதினால் மிகவும்வாடி இத்தலத்தி லிருக்கின்றனளோவென வுரையாடியும், மலைகளினிடங்களிலுலவி அருவிப்பெருக்கைக்கேட்டு ஏதோசில அரவங்காட்டுகின்றதால் அப்பெண்கொடியைக்குறித்துச் சந்தேகிக்கவேண்டிநேரிட்டது அதன்காரணத்தைச்சொல்லென அவ்வொலியைக்கேட்டும், தாம் தாகசாந்திசெய்த சுனையைப்பார்த்து முன்னம் இவ்விடம் நம்முடன்வந்த நாயகியைப்பார்த்திருப்பீரோ பின்பேதேனும் இவ்விடத்தில்வந்து இவ்வழியாய்ப்போகக் கண்டதுண்டோவெனப் பேசியும் இவ்வாறு வரைகள் குன்றுகள் காடுகள் மற்றுமுள்ள விடங்களெங்குஞ் சுற்றிச்சுற்றி வினவி வினவிக்கூவிக்கூவி அலைந்து இளைத்து வாடி மனவூக்கமற்று நெஞ்சுலர்ந்து காமக்கவலையுற்று பெருமூச்செறிந்து நடுநடுங்கி மயங்கிவள்ளியம்மை அடிச்சுவட்டை நாடித்திரிந்து குறமகளை எங்குந் தேடி அலைந்தனன்.

கேட்டீர்களோ! சவுனகாதிரிஷிகளே, இக்காரணங்களை யோசிக்குமிடத்தில் தேவதேவோத்தமனாகிய குமரநாயகனுக்கு இதுவுமொரு திருவிளையாடலாகக் காண்கின்றதல்லது வேறுமுண்டோ; மேற்குறித்தபடித் தனக்கின்பத்தைத்தந்த வள்ளியம்மையைத் தேடுகின்றவனைப்போலப் பகற்போதைக் கழித்து முன்னை இரவிலும் கொல்லைத்தினைப்புனமெங்கணுஞ்சுழன்றுசுழன்று

கடையில் அர்த்தராத்திரி வேளையில் மெல்லமெல்லவேடர் சீறூரிற் புகுந்து
குலஹீனராகிய குறவர்பெருமான் வாசஞ்செய்யும் குடிசைக்கருகிற்போய்ப்
பதுங்கிநின்று கரத்தைத்தட்டிச் சிலசைகைசெய்தனர். இச்சம்பவம் நேரு
மென்று முன்னமேதெரிந்து மனக்கவலையினால் நித்திரைகொள்ளாமல்படுத்துப்
புரண்டுகொண்டிருந்த பாங்கியானவள் இந்த அரவம்தெரிந்தவுடன் மெல்ல
வெழுந்துவெளிவந்து குமரநாயகனைத் தரிசித்தவளாய்த் திருவடிகளில் வண
ங்கித் தேவரீர் இராக்காலத்தில் இவ்விடமவருவது, தகாது நீங்களிருவருங்
கலந்தின்புறுவதற்குத் தகுந்தவிடமுமில்லை அப்படி நேரினும்பின்பு எங்கள்
பெண்கொடியானவள் பிரிந்திருக்கத்தரியாள், இவ்விதசங்கடங்க ளிருக்கிறபடி
யால் வள்ளிநாயகியை உமதிடத்துக்குக் கொண்டுபோய் உமதிஷ்டப்படி
குலவியிருப்பது தகுதியாகக்காண்கின்றதெனச் சம்மதப்படுத்திச் சிவகுமா
ரனை அவ்விடத்தில் நிறுத்தித்திரும்பி குடிசையில்நுழைந்து வள்ளிநாயகியார்
பள்ளிகொண்டிருக்கும் இடத்தைத்சேர்ந்து செவிகளுடன் வாயைப்புதைத்
துத் தாயே நமது மனத்துக்கினிய கொழுநன் நும்பிரிவினால் மிகவும் வருந்தி
மனந்தரியாமல் உம்மைக் கரவடமாய்த் தன்சாலைக்குக் கொண்டுபோம்படித்
துணிவுகொண்டு கடைவாயிலின்புறத்தில் வந்திருக்கின்றனர், துரிதமாய்ப்
புறப்படக்கடவாயென்று மெதுவாய்ச்சொல்லிய வாசகங்களைக்கேட்டமாத்திர
த்தில் மனங்குளிர்ந்து தேகம்பூரிக்கக் களித்தவராய் இதுமிகவும் நன்மையாக
விருக்கின்றது, அவ்வாறே செய்வேனென ஒருமித்துத் தாய்தந்தையர் மெய்
மறந்து தூங்குவதையும் மற்றசுற்றத்தார் கைகால்போனது தெரியாமல் சோர்
ந்துறங்குவதையும் சாடைகளினாலறிந்து திடசித்தராய் விழிகளைமூடாமற்
காத்திருக்கும் வேட்டைநாய்கள் அப்போதுதான் சற்றுக்கண்களைமூடியதைத்
தெரிந்துகொண்டு அண்டை அயலார் சந்தடியில்லாமையையுங்கண்டு ஊரெங்
கணும் ஓய்ந்திருப்பதையும் மதித்துக்கொடிய பேய்களுறங்கும நடுச்சாமத்திற்
பாங்கியானவள் கரத்தைப்பற்றி அரவந்தோற்றுமல மெல்லக்கூட்டிவந்து
நடையைச்சேர்ந்தவுடன் தாழ்ப்பாள்சத்தந்தெரியாமல்விலக்கிக் கதவை ஒருக்
களிப்பாய்த்திறந்து வள்ளியம்மையை வெளியிற்கொண்டுவந்து சேர்த்தகாலை
யில் வேடராசபுத்திரியானவள் ஆவலுடன் எமதிறைவனைஎதிர்கொண்டு வண
ங்கிச் சிறுதொழில்களைச் செய்துவரும்குறவர்குறிச்சியில்நாயினேன்பொருட்
டுச் செந்தாமரைமலர்களையொப்ப மெத்தெனவிளங்கும் பாதங்கள்கன்றிவருந்
தும்படி இராத்திரிக்காலத்தில்யாதொருதுணையுமில்லாமல்தேவரீர்வருவதற்கு
க்காரணமாகிய அடியாள்குற்றத்தைப் பொறுக்கவேண்டுமெனகரங்களைகூப்பித்
தொழுது தவக்கொழுந்தாகிய தேவிநிற்கும்போது தோழியானவள் சுப்பிர
மணியக் கடவுளைப்பார்த்து வில்லையுங்கணைகளையும் இடைவிடாமற் கரங்களிற்
பற்றிக்கொண்டு கொலைக்கஞ்சாமற் றீயதொழில்களையே முக்கியமாகக்கருதிச்
செய்துவரும் கடினசித்தராகியவேடர் இக்காரணங்களைக்காண்பராயிற் கெடுதி
நேருவதற்கையமில்லை ; ஆகையால், காலதாமதஞ்செய்யாமல் இந்நிமிஷத்
திற் நமது சிறந்தபதிக்குக் கொண்டுபோய் இவளைப் பாதுகாத்திரட்சிப்பது
தேவரீருக்குப்பாரம், இப்பெண்கொடியை அருமையாய்ச்சீராட்டிவளர்த்தனம்.

இக்காலத்தில் உமதடைக்கலமாகத் தந்தனமென முத்துக்கோவையை யொத்த தந்தபந்திகளையுடைய தலைவி கரங்களை முருகப்பெருமான் கையில்வைத்துக் கரங்களைக்கூப்பித்தொழுது போற்றியகாலையில் கடப்பமலர்மாலைபுரளும் பன்னிருபுயாசலங்களையுடைய கந்தன் அவளிடத்திற் பரிபூரணகடாட்சத்தை வைத்துக்கிருபையாகப்பார்த்து ஏபெண்ணே நீ நம்மிடத்திற் பரிவாய்ச்செய்த கருணையை ஒருபோதும் மறக்கமாட்டோமெனத் திருவாய்மலர்ந்தபோது மைதிமிர்ந்தவிழிகளையுடைய பாங்கியானவள் வள்ளிநாயகியாரைச்சேவித்துத் தழுவித் தாயே தேவதேவோத்தமனைக் கணவனாகப்பெற்ற வுமக்குயாதொரு குறைவுமில்லை, அவர்மனக்கருத்தின்படியே நடந்துகொள்ளக்கடவை, துரிதமாய்த் தலைவனைப் பிரியாமல் கூடப்போய் வாருமென்று ஐயனுடன்கூட்டித் தலைவி செலவுகொடுக்கப்பெற்றுத் திரும்பி விழவினூற் சோடித்திருக்கும் சிறுகுடிலில்நுழைந்து சந்தடியில்லாமல் மெதுவாய்க் கபாடபந்தனம்செய்து கொண்டு தன்படுக்கையைச்சேர்ந்து நித்திரைசெய்தனள்.

அவள்மீண்டபின்பு அன்னநடைவாய்ந்த தேவியுடன் வெற்றிவேலாயுதமூர்த்தி பாதிராத்திரியிற் காவலனைத்தையுங்கடந்து வேடர் சேரியைத்தாண்டி முல்லை,அசோகு,நீலம்,அல்லி,புன்னை,குருக்கத்தி, கோங்கு சண்பகமுதலாகிய புஷ்பங்கள்மலர்ந்து பரிமளித்துத் தேன்களைத்துளித்துச் சுனைகள்மிகுந்து இருண்டிருக்கும் சோலையிற்சேர்ந்து திருத்தேவியுடன் கந்தன் குலவிக்களித்திருக்கையில், இராத்திரிநீங்கி விடியற்காலமானதால் வேடராஜன்மனைவியானவள் திடுக்கிட்டவளைப்போல வெழுந்தபோது பக்கத்திற்படுத்திருந்த கடககங்கணங்களை யணிந்திருக்கும் புத்திரியைக்காணாமல் வீட்டிலிருக்கின்ற அறைகள் முத்தம் தாழ்வாரமெங்கனுந் தேடிப்பார்த்துக் காணாமல் தோழியைக் கண்டு வள்ளியம்மையெங்கே காண்கிலனென்று வினவியகாலத்தில் தாயே முன்சாமத்தில் அவளும்நானுமாய்த் தேவரீர்பக்கத்திற்படுத்து நித்திரைசெய்ததுண்டு, அதன்பின்பு எனக்கொன்றுந்தெரியாதென மாறுத்தரம்கொடுத்தவுடன் தாயானவள் அனலிற்பட்டமெழுகுப்போலப் பதைபதைத்துக்கிலேசித்தோடிக் கணவனைக்கண்டு என்பிராணநாயகா என்னசொல்வேன்,நமதுபெண்ணரசியைக் காணோம், இதற்கென்னசெய்வேனென்று புலம்புவதைக்கண்டு மறவர்பெருமான் மதிமயங்கி உடனே கோபம்பிரவேசித்து வடவாமுகாக்கினியைப்போலச்சீறி, இந்தச்சேரியில் நாட்டியிருக்கும் காவலைக்கடந்து நம்மனைக் காவலைச் சட்டைபண்ணாமல் மிகுந்த தயிரியமாய்ப்பெண்கொடியைக்கொண்டு போன கள்வன்யாவன் அவனைஇந்த நிமிஷத்திற்பற்றிவந்து தகுந்ததண்டனையைச் செய்வேனெனச்சீறி, உடனே சல்லடத்தைமாட்டித் தட்டியையிடையிலிறுக்கி வாளாயுதத்தை அரையிற்செருகி வில்லையும் பாணங்களையுங் கரங்களிற் பற்றிக்கொண்டு அதிதீவிரமாய்க் குமரியைத் திருடிப்போன திருடன் அடிச்சுவட்டை நாடிக்கண்டறிய அதிகவீராவேசத்துடன் வில்லியர் தலைவன் நடக்கும் சேதியைத்தெரிந்தவுடன் கட்டுக்காவலையுடைய இந்தவூரில் அர்த்தராத்திரியில்வந்து வள்ளியம்மையைக் கொள்ளைகொண்டு மாயமாய்ப்போன சோரனைச்சும்மாவிடலாகாது, தொடர்ந்துபிடித்துக்கட்டுவோம் குத்துவோம்

சிறையிலடைப்போமென்று பற்பலவிரங்களைப்பேசித்தட்டி சல்லடத்தைக் கட்டி வில், பாணம், வாள், வளைதடி, சில்லாக்கோல்முதலாகிய படைகளைத் தரித்து யுத்தசன்னத்தராய்ச் சேரியிலிருக்கின்ற வீரரனைவரும் ஏகமுகமாய்த் திரண்டு பிரசண்டவாயுவினுங் கடுகிப்போய்த் தபதிறைவனைக்கலந்து பறைகளைமுழக்கியும் கொம்புகளையூதியும் நடக்கின்றவர் அம்மார்க்கத்திற் பாதச்சுவடுகளைக் குறிபார்த்துப் பலதிசையினுமோடியும், சிலர்தோப்புகளிற் புகுந்தாராய்ந்தும், பலர்தினைப்புனங்கள் பரந்திருந்த எல்லையெங்கணும்பார்த்தும், மற்றவிடங்களிற்பற்பலவேடர்புகுந்து சந்துபொந்துமூலைமுடுக்குகளெங்கணும நுழைந்துநுழைந்து தேடிவரும் ஆரவாரங்களைஅதற்கடுத்த சோலையினிடத்திற் குமரநாயகனுடன் கொஞ்சி வார்த்தையாடிக்கொண்டிருந்த வள்ளிநாயகியார் தெரிந்தமாத்திரத்தில் திடுக்கிட்டுத் திருமேனி நடுநடுங்கிவியர்க்க மிகவும் பயந்தவளாய்ச் சண்முகப்பெருமான் பாதாரவிந்தங்களில் விழுந்து சேவித்து மனவருத்தத்துடன் இதனைவிண்ணப்பஞ் செய்வதாயினள்.

என்பிராணநாயகா! அதோ வொலிக்கின்ற ஆரவாரங்களைக் கேட்டீரோ? மோசம்வந்தது அடியேனைக்காணாத காரணத்தினால் என்பிதாவும் மற்றவேடருங் கோபாவேசமுடையவர்களாய் வில், வாள், குந்தம், எழு, மழு, பிண்டிபாலம், கப்பணமுதலாகிய பாணவிதங்களைத்தாங்கித் திசாதிசைகளெங்கணுந் தேடிக்கொண்டுவந்து இதோ இந்தச்சோலையின்பக்கத்தில் நெருங்கிவிட்டனர், அவர்கள் கொடுமையையும் கடினசித்தத்தையும்பலநாள்கண்டு பழகினவளாதலால் அடியேன் மனம் பதைபதைத்து நடுங்கியாடுகின்றது, இனிமேல் நாம செய்வதொன்றுந்தோன்றவில்லை, வேடர்மிகவும் பொல்லாதபாவிகள் என்ன செய்வரோ இதற்கடுத்தமுயற்சிகளை விரைவில் நினைந்துவேண்டியசாக்கிரதையுடனிருக்கவேண்டும் கர்த்தனேயென்று பரிபவப்பட்டுப்போற்றுகின்ற திருத்தேவியிடத்திற்கருணைகூர்ந்து உன்பத்திமைக்குக்களித்தனம நீயொன்றுக்கும அஞ்சிப்பயப்படவேண்டுவதில்லை, வருத்தமின்றி மனவெழுச்சியுடனிருக்கக் கடவாய், நீடூழிகாலம் வாழிவாழியென் றுதரித்துப் பெண்கள்சிகாமணியே இதனைக்கேட்டையாக, மாயையில்வல்ல கிரவுஞ்சபருவதத்தையும் ஜயசாலியாக வாழ்ந்திருந்த தாருகாசுரனையும் பிளந்துகொன்ற வெற்றிவேலாயுதமுதலிய சிறந்தபடைகளிருக்கின்றன. நம்மவர்கள் பகைத்துப்போர்செய்யவருவராயின் இமைப்போதில் வாட்டவல்லோம் இந்தவேடிக்கைகளைப் பார்த்துக்கொண்டு நமதுபின்புறத்தி லிருக்கக்கடவாயென்றருளிய வாக்கியங்களைக் குறமகள் கேட்டவுடன் மனமகிழ்ச்சியால் சுப்பிரமணியப்பெருமானுக்குப் பின் போயிருந்தனள்.

அத்தருணத்தில் வேடர் ஆர்ப்பாடங்களைச் செய்துகொண்டு அதட்டியுருட்டிப் பற்பலவசைமொழிகளைப்பேசி எம்மையன் திருத்தேவியுடனிருக்கின்றசோலையிற்சிலர் நுழைந்து உற்றுப்பார்த்துக்கள்வன் அகப்பட்டான்வாருங்கோள் வாருங்கோளென்றுகூவிக் கிராதகத்தொழிலையுடைய குறவரனைவரும் ஏகமாய்க்கூடிச் சோலையைவளைந்து முற்றுகைபோட்டுக்கொண்டு உருத்திராகாரமாகக் கொதித்திருக்கும்போது பின்னணியில்வந்த எயினர்பெருமான்

இச்சேதியைத்தெரிந்தவுடன் ஆலவிடத்திலும் கோபித்தவனாய்த் தன்சேனைகளுக்கு முன்னணியில்முந்தி நமதுபெண்ணை அபகரித்துக்கொண்டுவந்த கள்வன் இத்தகையபெருஞ்சேனையின் வரவைக்கண்டும் சற்றும் அச்சமில்லாமல் மனவெழுச்சியுடன் அசைவற்றிருக்கின்றனன். நமதுவலியையும் வீரத்தன்மையும் ஜயப்பிரதாபத்தையும் அசட்டைசெய்திருக்கின்றனன், இவன்புயவன்மையைத் தீப்பட்டெரிந்து சாம்பராகும் காட்டைப்போல இந்தநிமிஷத்தில் வாட்டுவோமெனப்பொங்கிகுறிஞ்சிநிலத்திற்கிறைவனும்மற்றப்பாதகரும்சமுத்திரப்பெருக்கைப்போல ஆர்ப்பரித்து வில்லைவளைத்து ஆயிரங்கிரண சமூகங்களையுடையசூரியனை மேகங்கள்கவியுமாறுபோலநாலுதிசையினுஞ்சூழ்ந்து, சரவருஷங்களைப்பொழிந்து போர்புரிகையில் அவ்வாளிகள்மேலிட்டுச் சிடசிடென்றும் குறுகுறென்றும் சடசடென்றும் இரைந்துகொண்டு அதிவேகமாய்வந்து பக்தர் அருச்சனைசெய்யும் மலர்களைப்போலக் கிருபைக்கடலாகிய குமாரக்கடவுள் திருமேனியெங்கும் தைத்துத்தைத்துப் பலபலவென்று சுற்றிலும்உதிர்ந்தன. இக்கொடுமையைத் தேவியார் கண்டமாத்திரத்திற் பதைபதைத்து விழிகளில் நீரைப்பெருக்கிக் கிலேசித்தவளாய் இதனை விண்ணப்பஞ்செய்கின்றனள். கடினசித்தமுடைய சத்துருக்கள் கூரியபாணங்களை அமோகமாகச் செலுத்துகின்றனர், அவைவீழ்ந்து தமது மங்களகரமாகிய வடிவிற்குக்கி யாதொரு தீங்குகளைச் செய்யாமற்போனபோதினும் அதனைப்பார்க்க மனந்தாபரிக்கவில்லை ஆதலால் உமதடியாளிடத்திற் கிருபையுற்று வெற்றிவேலாயுதத்தை இந்த நிமிஷத்திற்செலுத்திக் கொடியபாதகரனைவரையும் ஏககாலத்திற்கொன்று என்மனக்கவலையைத் தீர்க்கவேண்டும், வீரபராக்கிரம சமபத்தையுடைய சிங்கம்பாய்ந்து கொல்லாமற் சும்மாபடுத்திருக்குமாயின், மான், யானை, பன்றி, கரடி யித்தகைய மிருகங்கள் நெருங்கிக் காதைப்பற்றியாட்டிப் பரிகாசஞ்செய்யாவோ? ஆதலாற் சற்றுந்தாழ்க்காமல் எம்மவர்களென்னும் இரக்கத்தையொழிந்து கண்டதுண்டமாக்கி நிலத்திற்றள்ளுமென்று வள்ளிநாயகியார், அதிகப்பிரியத்துடன்பேசியபோது நல்லகாரியம் உம்முடைய இஷ்டப்படியே நடக்கப்போகின்றது, அதையும் சற்றுநேரத்திற் பார்ப்பையெனத் திருவுளம்பற்றினவராய்த் தமது வெற்றிக்கொடியை நினைத்தனர், அக்காலத்திற் சிவந்தகொண்டையையுடைய சேவலானது குமரன் குறிப்பின்படிக்கு விசாலமாய்த் தழைத்திருக்கும் சிறகைவிரித்தசைத்து வானவழிக்கொண்டு பறந்துவந்து சிவகுமாரன் சன்னிதானத்தில்நின்று கழுத்தைநீட்டிப் பேரொலியெழ ஒருவிசைகூவிற்று. அந்தமுழக்கமானது பிரளயகாலத்தெழும் பேரிடியினும் மேலிட்டுப் பகைவர்செவிகளிற் கேட்டமாத்திரத்தில் விஷப்பரிசமபட்டவர்களைப்போலப் பொறிகள்கலங்கிப் புலன்களொடுங்கிக் கைகால்கள் தளர்ந்து ஒருவர்மேலொருவர் விழுந்து மாண்டனர். இவர்கள் போராடும்போது செங்கல்வராயனிடத்திற் பரிவாய் அதம்பண்ணிப் போடும்படிக்கு வேண்டிய என்தாய் அவர்களிடத்தில்வளர்ந்து சகலவுபசாரங்களையும்பெற்று மனவெழுச்சியுடன் குலவியிருந்தவளாதலால் இவ்விதமாகப் பிதாவும் சகோதார் எழுவரும் மாமன் மைத்துனன் உறவினர் முற்றும் ஒருமுனையிற்செத்த

கொடுமையைக் கண்ணுரக்கண்டமாத்திரத்தில் திடுக்கிட்டு மனம்பதைபதைத்துத் திருமேனிநடுக்கமெடுக்க விழிகளில் நீரைத் தாரைதாரையாகப் பெருக்கிக்கதறி எண்ணாததெல்லா மெண்ணியெண்ணிச் சோருகின்றபோது, திருத்தேவியன்னைச்சோதிக்கும்பொருட்டு மனக்கலக்கமற்று முருகப்பெருமாள் அச்சோலையைக்கடந்து சிந்தையில் அருள்வெள்ளமானது பெருக்கெடுத்தலைக்கக் கம்பீரமாய் நடந்துபோம்போது தேவியும் நிழலையொப்பப் பின்பற்றிச்சென்றனள். இச்சம்பவங்களனைத்தையும் போதவுணர்விற்றெரிந்த நாரதபகவான் மிகவும் சிந்தாக்கிராந்தராய் மனோவேகத்தினு முந்தி யெதிரில் வந்து குமரநாயகன் திருக்கோலத்தைத்தரிசித்து மனமகிழ்ச்சியுடன் அம்மையப்பர் திருவடிகளில வணங்கி ஜயஜய போற்றியென்று வாழ்த்தினவராய்க் கார்த்திகேயனே! அடியேன் உம்மைக்கண்டு நீங்கிய பின்பு நடந்தசேதிகளைத் திருவுளம் பற்றக்கடவீரென வேண்டுவதற்கிரங்கி நாரதனைப் பரிவாகப்பார்த்துத் தாம் திருத்தணிகை வரையைக்கடந்து வள்ளியம்மையைக்கண்டு தன் வயப்படுத்திய காரணத்தினு மெதிர்த்துவந்த வேடராசன் வமிசநாசமறக்களப் படுத்தியவரையிற் சவிஸ்தாரமாகத் திருவாய்மலர்ந்த சம்பவங்களைக்கேட்ட நாரதர் மனவிரக்கத்துடன் கண்ணபிரான் திருமருகனைவந்தித்துச் சுவாமிகள் சொல்லியகாரணங்கள் வெகுநேர்த்தியாக விருக்கின்றன. தேவரீர் திருவிளையாடலுக்கொரு எல்லைகிடையாதாயினும், இந்த அநியாயமெங்கேனுமுண்டோ! தம்மைக் குறித்துப் பற்பல தவவிரதங்களைச்செய்து வருந்திநோற்ற சிறப்பினுற் கிடைத்தற்கரிய விஷ்ணுவின் திருக்குமாரத்தியைப் பெண்ணாகப்படைத்துச் சீராட்டிப் பாராட்டிப் போற்றிவந்த பிதாவையும் துணைவரையும் மற்ற சுற்றத்தினர்முதலியோரையும் கோபித்துக் கொன்றபோதினும் சற்றும் தயை தாட்சணியமில்லாமலும் அதற்கொரு நிவாரணத்தைக்காட்டாமலும் இதுபரியந்தம் அவர்கள்கிருகத்தில் உண்டுடுத்திவளர்ந்த பதிவிரதாசிரோமணியானவள் மனங்கலங்கி வாடிவருந்தும்படி இட்டுக்கொண்டுபோவது அழகோ! உலக நடைக்கடுப்பதோ மூடராகவிருக்கும்வேடருக்குத் தேவரீர்மகிமைகள் தெரியுமாயின் இப்பெண்கொடியைத் தத்தஞ்செய்து அதிக மரியாதையுடன் பூசித்தனுப்புவதற்குத் தடையுண்டோ கள்ளவேடத்தைத்தாங்கி, பரிந்து வளர்த்த பெண்ணையுந் திருடிக்கொண்டுபோனால் சும்மா விட்டுவிடுவார்களோ காங்கேயனே, தேவியின் மனவருத்தந்தீர்ந்து களித்திருக்கத்தக்கதாக அவர்களிடத்திற் கிஞ்சித்துத் தயைசெய்து கிருபாநோக்கம பாலிக்கவேண்டுமென்று பலவாறுகப்போற்றுகின்ற மஹாரிஷியைப் பரிவாகப்பார்த்தருளி நல்லகாரியம் உம திஷ்டப்படியாகட்டுமெனத் திருவாய்மலர்ந்து திரும்பித் தேவியும் ரிஷியும் பின்பற்றிவரச்சோலையினிடத்திற்சென்று தமதிடத்தில் மெய்ப்பத்தியும்அன்புமிதீ மற்றகளிப்பையும் பூரணமாகப்பெற்றிருக்கின்ற வள்ளியம்மை முகாரவிந்தத்தைப்பார்த்து நம்மிடத்தில் அபலமாகிய போரைச்செய்து மாண்டு நிலத்தில்விழுந்துகிடக்கும் உன்சுற்றத்தினரனைவரையும் எழுப்பக்கடவாயென அம்மையார் பெருமைகள் பலருக்குந்தெரிவதாகத் திருவுளம்பற்றியமாத்திரத்தில் ஆனந்தபரவசத்தளாய் மகாபாக்கியமென்று காமாக்ஷியின் சுபுத்திரனைச்

சேவித்து அவன் திருவடிகளை மனத்திற் றியானித்துப் பத்திபரவசத்தளாய் அரிய பிராணனையிழந்து தேகம்புழுதியிற்பட நிலப்பாயலில் அலங்கோலமாய்விழுந்து கிடக்கின்ற என்னுஞ்சைப்பிதாவே! சீராட்டிவளர்த்த துணைவரே! அருமையாகப் போற்றிவந்த சுற்றத்தாரே! நீங்களனைவருங் கமலக்கண்ணன் மருகன் கட்டளையின்படிக்கு எழுந்திருந்து குலவி என்மனக்கவலையைத் தீர்க்கக்கடவீரென்று பவளவாய்திறந்து பேசியமாத்திரத்தில் உறங்கியிருந்தவர் உணர்ச்சிபெற்றெழு மாறுபோலப்பழையபடி பிராணனையடைந்து துள்ளிக்கொக்கரித்துவேடராசன முதலியோர் எழுந்ததருணத்தில் சிவகுமாரன் அக்காலத்திற்கொண்டிருந்த கோலத்தைமறைத்துக் கிருபாசமுத்திரம்பெருகும சண்முகாரவிந்தங்களையும் பொன்வரையைப் பழித்தோங்கியிருக்கும் பன்னிருபுயாசலங்களையும் வெற்றிவேல் சக்கரம் தனுசுமுதலிய படைகள் கரங்கள்தோறும் துவாத சாதித்தரைப்போலவிளங்கவும் இத்தகைய தமது திருவடிவைத்தாங்கி எதிரில் நின்றருளினர். அந்த அற்புதக்காட்சியை அனைவருந் தரிசித்தமாத்திரத்திற் றிடுக்கிட்டுத் தேகம் நடுக்கமெய்திப் பயப்பிராந்திகொண்டு அடியற்ற பனையேபோல நிலத்தில்விழுந்து பன்முறைவணங்கி வாயில்வந்தவந்தவிதமாகப்போற்றிசெய்து விழிகளில் ஆனந்தவாரியைப்பெருக்கித் தேகம் குதுகுளித்து மயிர்ச்செறிவெழ அளவுபடாதபேரானந்தத்தையடைந்தவர்களாய்க் கரங்களைக்கூப்பிக்கொண்டு இதனை விண்ணப்பஞ்செய்வதாயினர்.

எமது குலதெய்வமே! கொலைத்தொழிலையே முக்கியமாகவிரும்பி நடாத்திவரும் இழிகுலத்தாராகிய அடியேங்கள் வமிசபாரம்பரையாக அடிமைகொண்டு யாதொரு தீங்குகளும் நேராமல் எங்கள் சேரியைப்பாதுகாத்து அந்நிலத்துக்கு அதிதேவதையாகவு மிருக்கின்ற தேவரீரே நாயினேங்கள் முன்னவருடன்செய்த தவமுயற்சியினாற் பெற்றுப் போற்றிவளர்த்திருந்த பெண்கொடியை நள்ளிருளில குறிச்சியிற்புகுந்து சோரத்துவமாய்க்கவர்ந்துகொண்டுபோய்ப் பலருமபுகழவிருந்த எங்கள்குலவரம்பை யழித்து உலகமுள்ளளவுந் தீராதபழிப்புரையொன்றைஉண்டாக்கினீர். பிரசித்தமாக வளர்த்தெடுத்த நற்றாயானவள் பாதுகாப்பதற்குப்பதிலாய்வயிரங்கொண்டு விஷத்தையூட்டுவளாயின் அதைக்கண்டு தடைசெய்யவல்லவர்க ளொருவருண்டோ? இங்காரணந் தேவரீர் திருவுளத்துக்குப் பளிங்குபோலத் தோற்றுமாயின் தமதுவழியடியர் செய்யவேண்டுவதென்னை. இதுநிற்க, எங்கள்குலக்கொடியினிடத்தில் மையல்கொண்டுவந்து விட்டீராதலால் எமதிறைவனே! கிருபையுற்று கன்னிகையுடன் எங்களூரைச்சேர்ந்து அக்கினி, ஆதித்தன், கடவுளர், பந்துக்கள் சாட்சியாய்த் திருக்கலியாணஞ்செய்துகொண்டு எங்கள் மரபுக்கடுத்த சீர்சிறப்புகளுடன் நாங்களனைவரும் சந்தோஷத்துடன் அனுப்பிவைக்கும்படிக்குத் தாராளமாய்த் திருத்தேவியை உம்முடைய வூருக்கழைத்துப்போகலாமென்று விண்ணப்பஞ் செய்தமாத்திரத்தில் குமரக்கடவுள் அவர்கள் கோரிக்கையின்படிக் கிசைந்து அவ்வாறே நடக்கின்றனமெனத் திருவாய் மலர்ந்தவராய் வள்ளிநாயகியாருடன்வர நாரத பகவானுந் தழைந்தோங்கிக் குளிர்ந்த நிழலைப் பரப்பியிருக்கும் மலர்க்காவை நீங்கிப் பாதகமலங்கள்

கன்றி வருந்தும்படிக்குநடந்து வள்ளிமலைக் கருகிலிருக்கின்ற சிற்றூரிற் பிரவேசித்தனர். வேடராசன் மற்றவருடன் மனமகிழ்ந்து ஆனந்தபரவசத்தராய்ச் சூழ்ந்துவந்து தங்கள் சேரியைச்சேர்ந்தவுடன் தம்மினத்தவரைப் பார்த்துச் சங்கரன் குமாரனும் நமது குலதெய்வமாயும் இந்த நிலத்தைப் பாதுகாத்துவரும் சுப்பிரமணியக்கடவுளே வலியவந்து நமது மாதைத்திருடிப் போயினன், இப்போது அடியேன் கோரிக்கையின்படியே திருமணமுன்னிலையில் வள்ளிநாயகியாரைப் பெற்றுப்போகச் சம்மதித்துவந்தானென்று பலருமறியத்தெரிவித்தனன்.

அக்காலத்தில் முன்னம்பொங்கிக்கொண்டிருந்த கோபமும் நாணமுமடங்கி மகிழ்ச்சிமிகுதியினாலே தேகஞ்சிலிர்த்து மயிர்பொடிப்பச் சந்தோஷசாகரத்திலழுந்தி யிப்படிக்கோலிருந்தது நமதையன் திருவிளையாடலென்று கூத்தாடுகின்றபோது வேடராஜன் குறிச்சியிற் றலைமைபெற்றிருக்கின்ற விசாலமாகிய தன்னில்லத்திற் சரவணபவனையும் பரிமளமிகுந்த புஷ்பங்களைச்சூடியிருக்கும் அளகபாரத்தையுடைய வள்ளியம்மையையும் பணைகள்முழங்கப் பறையதிர இத்தகைய வைபவங்களுடன் அழைத்துப்போய்க் குலமுறைமைப்படியே மஞ்சள்நீர் ஆலம் மற்றசடங்குகளைத் தன்தேவிநடத்தி வணங்கிப் போகப் பொற்பிரகாசமாகவிளங்கும் வேங்கைத்தளிர்களினாற் சோடித்தபாயலின்மே லெழுந்தருளச்செய்து நாரதருக்கும் தர்ப்பாசனத்தைக்கொடுத்து முற்றிய பின்பு கலியாண காரியங்களிற் சருவசாக்கிரதைசெய்தும் இந்த மங்களவார்த்தையைப் பக்கங்களிலிருக்கின்ற தன்பந்துக்களுக்குத் தூதின் மூலமாகச் சொல்லியனுப்பியும் திரிகின்றதருணத்தில் வேலாயுதமூர்த்தியானவர் தமதருகில்வீற்றிருக்கின்ற தேவியின்மேல் கிருபாநோக்கத்தைப் பாலித்தமாத்திரத்திற் பழையவடிவும் குறமகளிர் அலங்கரித்திருந்த சிங்காரங்களுமாறி ஆதிமகாவிஷ்ணு புத்திரியாகவிருந்த தெய்வப்படிவத்துடன் நவரத்தினமயமாகிய சர்வாபரண பூஷிதையாய்க்கண்டவர்கள் விழிகளுக்குக் களிப்பைத்தரும் சிறந்தகோலத்துடனிருப்பதைக் கவலைமுற்றுமொழிந்து மனக்களிப்புடனிருக்குந் தந்தையும் தாயும் செவிலியும் தோழிமுதலான பந்துவர்க்கங்களுக்குத் தெரிந்தமாத்திரத்தில் புஷ்பத்திற்பெருகும் தேனைக் கிரகிக்கவரும் வண்டினங்களைப்போலப் பலதிசையினுமிருந்துவந்து பெண்ணரசியினது காட்சியைத் தரிசித்து அற்புதமடைந்து இந்தத்தேவியானவள் குலஹீனராகிய நம்மனையிற்சேர்ந்து குலவியிருந்ததை யோசிக்குமிடத்தில் நமது முன்னவருடன் செய்திருக்கின்ற தவப்பெருக்கும் மற்றொன்றையுங் குறிக்கப்படவில்லையென்று தாமிறைவன் பாக்கியத்துக்குக் கொண்டாடியிருந்தனர், வேடராஜனும் அதிக சந்தோஷத்துடன் தங்களினத்திற் கலியாணமுடிக்கும்போது செய்துவரும் கிரமப்படியே முருகனுக்குப் பூசைகளை நடத்தித் தழைகளினாற் பந்தலிட்டுப் புஷ்பக்கொத்துகளையும் தளிர்களையும் மத்திமத்தியிற்றூக்கி முடிந்தவுடன் பாணத்தைநாட்டி அந்நிழல் அடியைக்காக்கு மத்தியானகாலஞ்சேர்ந்தபோது வேடர்குரவைகளைப்பாடி மலர்களையிறைத்துக் கூத்தாடத்தக்கதாகத் தாலரிதிற்பெற்ற பெண்ணரசியின் திருக்கரத்தைக் குமாரதேவர் அஸ்தத்தில்வைத்து

எங்கள் தவக்கொழுந்தை அக்கினிபகவான் சாட்சியாய் மனப்பூர்வமாகத் தத்தஞ்செய்துவிட்டேன் கமலாசனித்திருமருகனே! தேவரீர் பணிவிடைக்கு ஒப்புக்கொள்ளுமென்று தன்தேவியிடும் கரகநீரை விட்டுப் போற்றினன். பின்பு நாரதபகவான் சிவகுமாரநாயகன் கட்டளையைப் பெற்றுக்கொண்டு ஓமக்கனலை வளர்த்திச் சமித்துக்களையும் ஆவினெய் பால் பொரி முதலிய திரவியங்களினால் நவக்கிரகவோமத்தை நடத்திப் பூரணாகுதி கொடுத்துப்பெண்ணையும் பிள்ளையையும் நிவலஞ்செய்வித்து அருந்ததியைக்காட்டி வேதவிதிப்படிக்குச் சகலசடங்குகளு முடித்தகாலத்தில் ஸ்ரீமகாவிஷ்ணு பிரமன் உருத்திரன் முப்பத்துமுக்கோடிதேவர்கள் நாற்பத்தெண்ணாயிர விருஷிகள் கருடர்காந்தருவர் சித்தர்வித்தியாதரர் ஏகாதசருத்திரர் துவாதசாதித்தர் முதலியரனைவரும் சூழ்ந்து ஜயஜயவெனப் போற்றிவரவும் பூதகணங்கள் மங்கலவாத்தியங்களை முழக்கித்தொடரவும் இத்தகைய ஒலக்கத்தின்மத்தியில் பருவதராசபுத்திரி சமேதராய் விருஷபவாகனத்தி லாரோகணித்துத் தேவதேவோத்தமனாகிய சிவபிரான் வானவெல்லையி லெழுந்தருளித்தமது திருக்குமாரன் குறமகளைப் பாணிக்கிரகணஞ்செய்யும் சம்பிரமங்களைப் பார்த்துத் தம்பதிசமேதராய்க் களித்து பல ஆசீர்வாதங்களைச் செய்துவருங்காலையில் ஸ்ரீமகாவிஷ்ணு பிரம ருத்திரேந்திரர்முதலிய விண்ணவர் கற்பகமலர்களை வாரிவாரிச்சொரிந்து பாலசுப்பிரமணியக்கடவுளைவாழ்த்தி அஞ்சலியஸ்தராய் ஜயஜயவெனப்போற்றினர். இக்காட்சியைச் சரவணபவன் தரிசித்தமாத்திரத்தில் சந்தோஷசாகரத்தில் முழுகினவராய்த் தாய்தந்தையர் மாமன்மாமியை வந்தித்துவாழ்த்தி மற்றையரிடத்திற் கிருபாநோக்கம் பாலித்தனர்.

அதன்பின்பு சிவபெருமான் தம்முடன்வந்த திருக்கூட்டத்துடன் திரும்பி வெள்ளியங்கிரியைச்சேர்ந்து களித்திருந்தனர். நாரதபகவானும் மணப்பந்தலில் நடத்தவேண்டிய சடங்குகளனைத்தையும் நிறைவேற்றியபின்பு வெற்றிவேலாயுதமூர்த்தியை வள்ளிநாயகியாருடன் வணங்கித் துதித்துவரும்போது திருமால்மருகன் திருத்தேவியுடனிருக்கின்ற மணக்கோலத்தை வேடராசன் கண்டுகளித்து இத்தவிழிகளைப்பெற்றதற்குக் கிடைக்கவேண்டும். பலப்பிராப்தியை யித்தினமடைந்தேனென்று கரங்களைக் கொட்டிக்கொண்டு ஆனந்தக்கூத்தாடினன். மற்றசுற்றத்தினரும் தேகபரவசராய் முருகன் வெறியாடல்களைக் கொண்டாடித் தீர்க்கதண்டன்சமர்ப்பித்துக்களித்தனர். கேட்டீர்களோ சவுனகாதியிருஷிகளே! அக்காலத்தில் வேடர்பெருமானுக்கடுத்த சந்தோஷப்பெருக்கை யாவரால் சொல்லிமுடியும்? பின்பு சுகந்தமலர்களையும் மெல்லியதளிர்களையும் கொண்டை நிறையச்சூடி உடுக்கையையொத்த சிறுத்தவிடையைப் பெற்றுப் புஷ்பக்கொம்பைப்போல வுலவிக் கலியாணவாசலில் வந்திருக்கும் வேடமாதர் களித்துக் குலதெய்வமாகிய மருகனும் பெண்ணரசியும் இத்தினத்தைப்போல நாடோறும் மணக்கோலமாகவே யிணைபிரியாமல் வங்கணமாய் வாழ்ந்திருக்கக்கடவதென்று மனப்பூர்வமாக ஏற்றிவாசமிகுத்த வேங்கைமலர் கதம்பப்பொடியையிறைத்துக் களியாடலைக் கொண்டாடினர். மேற்குறித்தபடியே சிசுபாலாதிகள்முதலிய வேடர் மனமகிழ்ச்சியுடனிருக்குங் காலை

யில் பாலசுப்பிரமணியக்கடவுள் ஆசனத்தைவிட்டெழுந்துவேடராஜனைக் கிருபையாகப்பார்த்து இந்தப் பெண்ணரசியுடன் திருத்தணிகைவரையிற் சேர்ந்திருப்போமென்று திருவுளம்பற்றியபோது கந்தனே! தேவரீர் மனத்துக்கினியபடிக்குச் செய்யலாமெனச் சம்மதித்தனன் தாயானவள் பாங்கிசெவிலியுடன் வள்ளிநாயகியாரைப்பார்த்து எமதன்னையே! பலநாள்பழகியிருந்த நீயிக்காலத்தில் நீங்கிக்கணவனுடனேபோகத் துணிந்தனையோவென்று அதிக ஆவலுடன் தனித்தனித்தழுவிச் சுகசீவியாய் வாழிவாழியென்று ஆசீர்வதித்தகாலத்தில் வள்ளியம்மையும் அவர்களைப் பரிவாகவுபசரித்து வெற்றிவேலாயுதக் கடவுளுடன்போக பிரயாணப்பட்டபோது; பிதாவானவன் தன்னிடத்திலிருக்கின்ற சிறந்தபொருள்களை பெண்ணுக்குச் சீதனமாகக்கொடுத்துத் தொடர பாலசுப்பிரமணியதேவர் கலியாணவாயிலைநீங்கி வெளிவந்து மாமனையழைத்துத் தேவர்களுங்கொண்டாடத் தக்கதாக இந்தச்சேரிக் கதிபனாகவிருந்து சகலசம்பத்தையும் அனுபவித்துப் புத்திர மித்திர களத்திர பரம்பரையாய் வாழ்ந்திருக்கக்கடவாயென் றனுக்கிரகஞ்செய்து அவனையும் மற்றவேடரையும் நிறுத்தி வளமையிற்சிறந்த வள்ளிவரையைக் கடந்து மகத்துக்களுக்கு வாசயோக்கியமாகிய திருத்தணிகை வரையைச்சேர்ந்து தெய்வத்தச்சனாற் சோடித்திருக்கின்ற நகரிற்போய்ச் சபாமண்டபத்தில் விளங்கும் சிங்காதனத்தில் பொன்னையொப்பவிளங்கும் தேமல்படர்ந்த தனபாரங்களையுடைய தேவியுடன் உலகங்களனைத்தும் பிழைத்தற்பொருட்டுக் கிருபாநோக்கத்தைப்பரப்பி வீற்றிருந்தனர். அக்காலத்தில் வள்ளிநாயகியார் காதலனைச்சேவித்துப் பிராணவல்லபா! இந்தமலையைப் பார்க்குமிடத்தில் அதிகமேம்பாட்டைக் கொண்டிருக்கின்றது ஆதலால்இதன்மகத்துவங்களைத் தமதடியார்களறிபேறும்பொருட்டுவெளிப்படையாகத் திருவுளம் பற்றவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்து, அவளிடத்திற்பரிவாய் பெண்ணே! இந்த வரையையென்னவென்று மதித்திருக்கின்றாய் பரமசிவகடாட்சத்தினால் உலகங்களுண்டாகியபோது நிர்மிக்கப்பட்டது; இஃதன்றியும் அப்பருவதத்தின் மகத்துவங்களைக் கேட்பையாக, ஆயிரத்தெட்டண்டங்களுக்கு மதிபனாய் நூற்றெட்டுயுகங்கள் தேவர்முதலாகிய சகலரையும் அலைத்துக் கொடுங்கோல் செலுத்திப்பிராணிகளுக் கெமனைப்போல வீற்றியிருந்த சூரபதுமனாகிய அவுணப்பாதகனுடன் கொடிய யுத்தஞ் செய்துகொன்ற சோபதாபங்களை இதன்பெருமைகளை நிதானித்து இவ்விடத்தெழுந்தருளித்தணிந்து மனவெழுச்சியுடனிருந்தனம், மேலும் இக்காலத்திலும் கொடிய தொழிலைச் செய்துழலும் வேடருடன்பேராடி வருந்தியகளையையும் இந்தத் தெய்விகம்பொருந்திய வரையைநெருங்கிய வுடனொழிந்து சவுக்கியமாகவிருக்கின்றனம், அக்காரணங்களினால் செருத்தணியென்னு மொருசிறப்புப் பெயரையும் கிடைத்திருக்கின்றது, இதுவுமல்லாமல் இன்னமும் சிலமகத்துவங்களுண்டு அவற்றின் சம்பவங்களையுந்தெரிவிப்போம், முல்லையரும்புகளைப் பழித்துவிளங்கும் தந்தபந்திகளையுடைய உமையவள் வளைத்தழும்பும் முலைத்தழும்பும் பெற்றுக்களித்திருக்கும் மூலகாரணக்கடவுளாகிய சிவபிரான் மனவெழுச்சியுடன் சதாகாலமும் வீற்றிருக்கத்தக்க நதிவளங்களையும் க்ஷேத்திர

விசேஷங்களாதிய சிறப்புகளைக்கொண்டிருக்கும் திருக்காஞ்சிமாநகர வெல்லையில்விளங்கும் பெருமையினால் இப்பருவதத்தின் பவித்திரத்தையும் மகத்துவங்களையும் சிருஷ்டிகர்த்தனாய் சதுர்வேதபண்டிதனாக விருக்கின்ற பிரமதேவராலுங் கணித்துச் சொல்லக்கூடுமோ, சுகந்தபரிமளங்களைவீசித் தேனைச்சொரிந்திருக்கும் புஷ்பவகைகளிற் றாமரைமலரைச் சிறப்பாகப் புகழுமாறுபோலவும் தன்னிடத்தில் மூழ்கினரைப் பாபரகிதராக்கி முத்தியிற்சேர்க்கவல்ல பல சிறந்தநதிகளினும் காசியிற்பெருகும் கங்கையை விசேஷமாகக் கொண்டாடுவதை யொப்பவும் சமுத்திரஞ் சூழ்ந்திருக்கின்ற பூமண்டலத்திற் சிறந்திருக்கும் தலங்களில் முதன்மைபெற்றுவிளங்கும் திருக்காஞ்சிப்பதிக்கு நிகராகவும் இருஷிகள் ஞானவான்கள் வாச யோக்கியமாக விருக்கின்ற தெய்விகம்பொருந்திய பருவதங்களில் இந்தத் திருத்தணிகைவரையானது அதிகமேம்பாட்டைப் பெற்றிருப்பது. இவ்வித சுகுணங்களை மிகுதியாகப் படைத்திருக்கின்ற பருவதத்தினிடத்தில் நமக்கிருக்கின்ற ஆசையினால் பிரியாமல் இவ்விடத்தில் வீற்றிருந்து கோடுகளை முழக்கியும் புள்ளாங்குழலூதியுக் தந்திரியை வாசித்தும் ஏழிசையையுடைய மகரயாழைமீட்டியும் மனவெழுச்சியுடன் பாடியும் சிறுபல்லியங்களைக் கொட்டியும் பற்பல திருவிளையாடல்களைச் செய்தும் நம்மிடத்தில் மெய்ப்பத்தியுடைய அன்பர்கள் தரிசித்துக் களிக்கும்படியாக ஆனந்த நடனங்களைச்செய்தும்வருகின்றனம். பெண்ணரசியே! இதற்குச்சில திஷ்டாந்தத்தைச் சொல்லுவோம். காளகண்டமூர்த்தியாகிய பரமேசுவரருக்கு மந்தாகிரியும் மேருபருவதமும் வாசஞ்செய்ய யோக்கியமாகவிருந்தபோதினும் அன்பருள்ளத்தைப்போலப் பவுத்திரமாக விருக்கின்ற கயிலாயத்தில்மனவிருப்பமாய்ப் பருவதராசபுத்திரியுடன் ஏக்கேசுகாலமும் வீற்றிருப்பதையொப்ப இந்தப்பூவட்டத்திற் பற்பலமலைகளிருந்தபோதினும் இந்தப் பருவதத்தினிடத்தில் நமக்கு அதிகப்பிரியமுண்டு. அதற்குச்சாட்சி உனக்கு வேறொன்றைச் சொல்லுவதில்லை, நமக்கிருப்பிடமாகிய குன்றுகளனைத்துமுண்டு; அவற்றின் மேலாய் அத்தலத்தில் பலவிருப்பத்துடன் நமதுபூரணைகளையைக் கொண்டு வாசஞ்செய்வோம் இம்மூலமாய் இதன்மகத்துவங்களைத் தெரிந்துகொள்ளக் கடவாய் இதுவுமல்லாமல திரிலோகசக்கிரேஸ்வரனாகிய தேவேந்திரன் இதன் மகத்துவத்தைத் தெரிந்து யஷ்டேஷ்டத்தைப் பெற்றுப்போக விருப்புற்றுப் பொன்னுலகத்திலிருக்கின்ற குவளைச்செடிகளில் மூன்றினையும் இந்தப் பவுத்திரமாகிய சரவணப்பொய்கையில் தாபிதஞ்செய்து அதனிடத்திற்புஷ்பிக்கும் மலர்களைக்கொண்டு பலதினம் நம்மை அருச்சித்து இஷ்டசித்தியைப் பெற்றுப் போயினன், மூழ்கினர் பிணிகள் பாதங்களனைத்தையும் தீயிற்பட்ட பஞ்சே போலப் போக்கிப் பரிசுத்தவான்களாகச் செய்யவல்ல சிறப்பினைவாய்ந்த இந்தச் சரவணப் பொய்கையினிடத்தில் இந்திரனால் தாபித்திருக்கின்ற குவளைச்செடிகள் இக்காலத்தினும் அருணோதயப்போதினும் மத்தியான காலத்தினும் செவ்வானமுமிருளுங்கலந்துவிளங்கும் அந்திப்போதினும் நமது திருவடிகளிற்சாத்தும்படியாக மூன்றுமலர்களைக் கொடுத்துக்கொண்டு வருகின்றது. பிரளயகாலத்திற் சத்தசாகரங்களும்பெருகி உலகங்களை மூடியபோதினும்

சிருஷ்டிகுலைந்து பிரசண்டவாயுவின் மோதலினாலும் ஊழிவெள்ளப்பெருக்கினாலும் குலகிரிகள் அண்டரண்டபுவன சராசரங்களனைத்தும் அதப்பட்டழியும் சருவசங்காரகாலத்திலும் தெய்விகம்பொருந்திய இந்தப்பருவதத்துக்கு யாதொருதுன்பமு மில்லாமல் விளங்கும். அவ்வாறே யிந்தச் சரவணப்பொய்கையும் புனல்நிறைந்ததாய்ப் பரிமளமிகுந்த குவளைமலர்களை முக்காலங்களினும் உதவிக்கொண்டிருக்கும் மாவடுவைப்போல விசாலமாய் செவ்வரிபரந்து காதளவுமோடியிருக்கின்ற விழிகளையுடைய வள்ளிநாயகியே! இவ்வரையின் மகத்துவங்களை நாமல்லது சிருஷ்டிகர்த்தனாலுங்கண்டறியவொண்ணாது. இஃதன்றியும் பூமண்டலத்தி லிருக்கின்றவர்களில் எத்தகையராயினும் இந்தத் தெய்விகம்பொருந்திய பருவதத்தைத் தூரத்திலிருந்து தரிசித்து வணங்கப் பெறுவராயின் அறிந்தும் அறியாமலும் எழுபிறவிகளினும் செய்திருக்கின்ற பாதகங்களனைத்தும் நெருப்பிற்பட்ட பஞ்சைப்போல நசிக்கப்பட்டு எல்லாத் துன்பங்களையும்போக்கிப் பரிசுத்தராய்ச் சவுக்கியத்திலிருப்பர். இவ்வரையினிடத்திற்படிந்து பவுத்திரராய்த் துதித்துக்கொண்டு நமதாலயத்தைச்சேர்ந்து விதிப்படியே மும்முறை வலமவந்து சந்நிதானத்திற்போய் அருச்சனை வழிபாடுகளைச் செய்வித்து நமது திருவடிகளில் வணங்கிப்போற்றி நெய் விளக்குகளிட்டுக் கூடியவரையில் யாசகருக்குக் கொடுத்துத் தன் விடுதியைச் சேர்ந்து அதிதிகளுடனுண்டுகளிக்கின்ற புண்ணியசீலர் தங்கள்கோரிக்கையின் படியே சகல வளங்களையும்பெற்றுக் கற்புக்கரசியாகிய பெண்சாதியுடன் இல்லறத்தையோம்பிச் சுபுத்திரரைப்பெற்றுச் சாதுசங்கமாகிய நன்னெறிகளைக்கடைப்பிடியாக வெண்ணி நடாத்தி இவ்விதங்களில் இம்மைப்போகங்களை யனுபவித்தபின்பு மறுமையினும் தேவபோகங்களிற் திருப்திபெற்றவர்களாய்க் கடையில் ஸ்வரூபசாக்ஷாத்காரத்தைக் காணியாகப்பெற்றுவாழ்வர். ஐந்து நாள்வரையில் இதன்கண் வாசமாய்ப் பொய்கையில் முழுகிப் புதியவஸ்திரங்களையுடுத்து நமது திருவடிகளையே தஞ்சமாகவெண்ணித் தியானித்து ஆலயத்தைச்சேர்ந்து அவ்விடத்தில நடத்தவேண்டிய முறைகளைக் கிரமப்படியே முடித்து நம்மைத் தரிசித்து வழிபட்டுவரும் சிறந்த தவத்தினர் இஷ்டசித்திகளைப்பெற்று அஷ்ட அயிஸ்வரியங்கள் பெண்டுபிள்ளைகள் பந்துக்கள் சிநேகிதருடன் மனவெழுச்சிபெற அனுபவித்துச்சகலராலும் புகழ்வாழ்ந்தபின்பு சாஸ்விதமாகிய பரமபதியிலிருப்பர். பெண்கள்நாயகியே! தவங்களிற் சிறந்த தேவர்களாயினும முனிபுங்கவராயினும மற்றும் நன்னெறியைத் தரிசிக்கப்பெறாமற் போவராயின் கல் விருக்ஷமுதலிய தாவரங்களினும் கடைப்பட்ட தசையை யனுபவிப்பதற்குச் சந்தேகமில்லை தாங்கள் முடித்திருக்கின்ற பிராரத்துவவினைப்போகங்களை நீக்கிக்கொள்ளத்தக்க சூக்ஷுமத்தைத் தெரியாமல் தேகம்வருந்தியலைந்து அன்னபானாதிகளுக்குச் சிறுமைப்பட்டுவாடிப் பூவலம் வந்தபோதினும் அப்பாபத்தொடக்கைப் போக்கவல்லரோ? பிரமகத்தியாதி மகாபாதகங்களைச்செய்தவராயினும் கொலைகளவாதிய குற்றங்களையே முக்கியமாக வெண்ணி தினந்தோறும் முடித்தவராயினும் பவித்திரமாகிய திருத்தணிகை வெற்பைச்சேர்ந்து மெய்ப்பத்தியுடன் நம்மைப்

பூசனைவழிபாடுகளைச் செய்வராயின் காட்டழலிற்பட்ட சருகையொப்ப வல்வினைகளைப்போக்கிச்சிரேஷ்டராய் ஸ்ரீமகாவிஷ்ணு பிரமதேவர்கள் பதங்களில் மேலானவராகவிருப்பர். தவங்களிற்சிறந்தவராகவும் புகழவேண்டும், இப்படிக்கிருக்கச் சதாகாலமும் ஒப்பற்ற திருத்தணிகைப் பதியில் வாசமாகவிருந்து பத்திவயிராக்கியங்களுடன் நம்மைவழிபட்டுச் சோடச மகா தானங்களிலொன்றேனும் மனப்பூர்வமாகப் பாத்திரமறிந்து அகமுமலர்ச்சியுடன்களித்துக்கொடுப்பாராயின் ஒன்றனந்தமாகப் பலித்துப் பிற்காலங்களிற் குபேரசம்பத்தையனுபவித்துவாழ்வர். பற்பலம்காபாதகங்களைச்செய்தவராயினும் அவைகளின் கொடுமைகளனைத்தும் நாளாவட்டத்திற்குறைபட்டு அமரபட்சத்துச்சந்திரன் கலைகளைப்போலத் தேய்ந்து பரிசுத்தவான்களாய் உலகர் புகழவாழ்வர், வள்ளிநாயகியேமேற்குறித்ததன்றியும் இந்தத்திருத்தணிகைவரையின் மகத்துவங்க ளளவற்றதுண்டு, அவைகளை விவரித்துச்சொலலவேண்டுமாயின் பலகாலஞ்செல்லுமென்று குமாரக்கடவுள் போதித்த மகிமைகளைப் பத்தியுடன் கேட்ட தேவியானவள் திருவடிகளிற்பணிந்து மகிழ்நனே! பூமண்டலத்தில் தாமெழுந்தருளியிருக்கின்ற அனந்த பருவதங்களில் முக்கியமாக விருக்கின்ற திருத்தணிகைவரையின் வரலாற்றையும் மகத்துவங்களையும் உள்ளங்கை நெல்லிக்கனியேபோலத் தெளிவுண்டாகும்படியே அடியாளிடத்திற் கருணையுற்று அனுக்கிரகஞ் செய்தமையால் அவற்றினைக்கேட்ட மகத்துவத்தினால் நாயினேன் கிருதார்த்தளாயினேனென்று போற்றினள். வெற்றிவேலாயுதக் கடவுளும் மைந்தீர்ந்த நாதளவுமோடியவிழிகளையுடையதிருத்தேவியும் பின்பு அந்தமலையினொருபாரிசத்திற் பிரமன்விஷ்ணுமுதலாகிய வுருவநான்கும் நாதம் விந்து முதலாகிய அருவநான்கும் உருவாருவமாகிய வொன்றும் ஆகவவுருவங்களுமொன்றாகிய சதாசிவப் பிரமலிங்கத்தைத் தாபித்து ஆகமவிதிப்படி சோடச வுபசாரங்களுடன் பூசனைவழிபாடுகளை நிரப்பிக்களித்து இஷ்டசித்திகளைப் பெற்றவர்களாய் அன்றுமுதல மனவாக்கும் காயமொருமித்துக் கண்ணுதற்பிரானைத் திரிகாலங்களினும்மெய்ப்பத்தியுடன் வழிபட்டிருக்கின்ற காலையில் ஒருதினம் தெய்வவிமானத்தைத் தருவித்து வள்ளிநாயகியுடன் சிவசுப்பிரமணியக்கடவுள் அதனிடத்தினெழுந்தருளி திருத்தணிகைவரையைக் கடந்துபோய்த் திருக்கயிலாயத்துக் கொருபுறத்திலிருக்கின்ற கந்தமாதனத்தைச்சேர்ந்து நவரத்தினகாந்திகளை வீசிக்கொண்டிருக்கும் விமானத்தை விட்டிறங்கிக் கணக்கிறந்த பூதவீரர் காவல்கொண்டிருக்கும் திருமாளிகையிற் பிரவேசித்துத் தேவராசபுத்திரியாகிய தெய்வயானையம்மை யெழுந்தருளிய சொர்ன்மயமாகிய அந்தப்புரத்தில் வள்ளிமணாளனாக வரும்போது வேதங்கள் தேடிக்காணரிய மகத்துவங்களையுடைய கணவன் வரவைக்கேள்விப்பட்ட மாத்திரத்தில் தேவராசபுத்திரிக்கு அதிகசந்தோஷமுண்டாய் ஆவலுடனெதிர்கொண்டோடிக் கணவன்திருவடிகளிற் பணிந்தகாலத்திற் கந்தர் பரிபூரண கடாட்சத்துடன் திருக்கரங்களைநீட்டி யெடுத்துப் பூரணகலசங்களையொத்த கொங்கைகள் மார்பிலிறுகத்தழுவித் தாம் சிலபகல் பிரிந்து பூமியிற் றிருநடனங்களைச்செய்து திரும்பியவ்வாயிலிருந்த தளர்ச்சிகளனைத்தையும் போக்கி

னர், அத்தருணத்தில் வள்ளியம்மையும் தன்முன்னவள் பாதகமலங்களிற் பணிந்த காலையில் பிரிந்த கன்றைக்கண்ட ஆவைப்போலப் பரிவாயெடுத்து ஆசையுடனணைத்து அவ்விடத்திற் றனிமையி லிருப்பவளுக்கு ஒருபாங்கி கிடைத்தது மிகவும அழகாயிருக்கின்றதெனவாழ்த்தினள், பின்பு சூரன்வமிச மென்னுங் கருங்கடலைக் குடித்துத் தேவர்களைக் காத்த வெற்றிவேலாயுத மூர்த்தியானவர் உபயநாச்சியார்களை அணைத்து அந்தப்புரத்துக்குக் கொண்டு போய்ப் பொன்மயமாக விளங்கும் பரந்த கூடத்தில் நவரத்தினங்களினுற் சோடித்திருக்கின்ற சிங்காதனத்தில் திருப்பாற்கடலில் சிதேவி பூதேவி இருமருங்கினும் வீற்றிருக்க மத்தியில் சேஷசயனத்திலமர்ந்தருளும் ஸ்ரீமகாவிஷ்ணுவைப்போலக்களித்திருந்து அவர்களுடன் வார்த்தையாடிக்கொண்டிருக்கின்ற காலையில் இடப்புறத்து லமர்ந்திருக்கும் தெய்வநாயகியானவள் வெற்றிவேலாயுதக்கடவுள் திருமுகமண்டலத்தைப்பார்த்து, எமதிறைவனே தேவரீர்! வலப்புறத்திலிருக்கும கன்னிகையின் வரலாற்றைத் திருவுளம் பற்றவேண்டுமெனப் போற்றுங்காலையில் சுப்பிரமணியர் கிருபையுற்றுக் கிள்ளையையொப்ப வசனிக்கும் சிவந்த வாயையுடைய குறப்பாவையினது சரித்திரத்தை அயிராவதம்போற்றி வளர்ந்த தெய்வயானைக்குச் சொல்லுவதாயினர்.

பெண்கள் சிகாமணியே! உங்களிருவர் காரணங்களைக் கேட்பையாக, வாமனவதாரமெடுத்துஉலகையளந்தருளிய ஸ்ரீமகாவிஷ்ணுவினிடத்தில நீங்களவதரித்து நமது திருப்புயங்களைத் தழுவிக்களிக்க விச்சித்துப் பன்னிரண்டு வயதளவும் சரவணப்பொய்கைக்கருகிலிருந்து அரியதவங்களைச் செய்து வருங்காலையில் உங்கள் பத்திவயிராக்கியங்களுக்கிரங்கிக் காட்சிதந்து உங்கள் கருத்தின் வண்ணமாகின்றது. அதுவனையிலும் பொன்னுலகத்திலும் பூமண்டலத்தினும் அவதரிப்பீர்களென யாம்பணித்தவாறே மூத்தவளாகிய நீ தேவேந்திரனுக்குப்புத்திரியாக வளர்ந்திருந்தனை, நாம சூரசங்காரஞ்செய்து திரும்பிய காலையில் உன்பிதாவானவன் அதிக பிரியத்துடன் பாணிக்கிரகணஞ்செய்து கொடுக்கப்பெற்று மனவெழுச்சியுடனிருந்தனம். அர்த்தசந்திரனையொத்த நுதலையுடைய உன்தங்கையாகிய இப்பெண்கொடியானவள் நமது கட்டளையின்படியே அக்கினிப்பிரவேசமாய்ச் சுந்தரிக்குத்த பழைய உடலைப்போக்கியாதனுதேகத்தைக்கொண்டு கருங்கடல் வளைந்திருக்கும் பூமண்டலவளையிற் சிரேஷ்டமாக விளங்கும் தொண்டைமண்டலத்தி னெல்லையிலிருக்கும் வள்ளி மலைக் கருகிற் றழைத்தோங்கிக் குளிர்ந்த நிழலைப் பரப்பிநின்ற வானத்திற் சேர்ந்து காலங்கருதித் தவவிரதங்களைச் செய்திருக்கின்ற காலையில் அப்பருவதச்சாரலிலமர்ந்து பஞ்சேந்திரியச்சேட்டைகளைவென்று சித்தத்தை சிவத்திற் சேர்த்து யோகசாதனையை முடித்துவரும் மகானுகிய சிவமுனிவனுக்கெதிரில் தெய்வகடாட்சத்தினுல் பொன்னையொப்ப விளங்கும் அழகிய தேகத்தை வாய்ந்த மான்பிணையொன்று சடுதியிற்றுரத்தப்பட்டுக் கந்தும்பொட்டிலவி வருவதைத்தவத்தர்கண்டனர. கண்டவுடன் காமவிகாரமேலிட்டுஅதி ஆவலுடன் பார்த்தகாரணத்தினுல் பெண்மான்கருக்கொண்டது. அந்தச்சம்பவத்தைப்பக்கத்திற்றவஞ்செய்திருந்தஇவள்தெரிந்துமனமகிழ்ச்சியுடன் அதன் கருப்பையிற்

பிரவேசித்து வளர்ந்துவருங்காலையில் பிரசவகாலம்சம்பவித்தபோது வேடர் கல்லிய வள்ளிக்குழியில் ஈன்றதாய் உற்றுப்பார்த்துத் தன்னினமாகத் தோன் றாமையால் பயந்தோடிப்போயினது. பின்பு குழந்தையானது பசியினால் வருந்திக் காவுகாவுவென்றழுதிருக்கும்போது அதனருகில் இருக்கும் குறிஞ்சி யில் வாசஞ்செய்யும் வேடர்களுக்கரசனும் அவன் பத்தினியும் கொல்லைக்கு வந்தபோது கேட்டவர்களாய் அற்புதமடைந்தோடிவந்து பெண்குழந்தை யைக் கண்டவுடன் வேடத்தி அதிக ஆவலுடன் வாரியெடுத்து முத்தமிட்டு மார்புடன் சேர்த்தகாலத்திற் சிவபிரான் கடாட்சத்தினாற் கொங்கைகளிற் சுரந்தொழுகும் அமுதத்தைக்கொடுத்துத் தன்சிறுகுடிசையிற்சேர்ந்து பெற்ற தினும் பதின்மடங்கு பிரியத்துடன் வளர்த்து அக்குலத்தில் முதியவராக விருப்பவர்கள் குறித்தபடியே வள்ளியென்னும் பெயரையிட்டுச் சகல சிறப் புடன் புத்திரியாகப் போற்றிவருங்காலத்தில் இவளுக்குப் பதினோராண்டும் பத்துமாதமும் நிறைந்து மங்கைப்பருவமானபோது தங்குலமுறைப்படியே தினைப்புனத்தை காக்கவைத்தனர். அத்தருணத்தில் நாம் அத்தலத்தைச் சேர்ந்து காமவேட்கையைச்சொல்லியும் அகன்றும் இவள் மையலிற்பட்டு வருந்தியும் அக்குறை முற்றுப்பெற வாழ்த்தியும் இத்தகைய பற்பல மாயவித் தைகளைக்காட்டிக் களவுப்புணர்ச்சியை யனுபவித்துக் கடையிலிவளிடத்தில் நல்லருளைச்செய்து பிதாவின் சம்மதத்தின்மேல் திருக்கலியாண முடித்துக் கொண்டு சிலபகல் திருத்தணிகைமலையில வாசமாகவிருந்து இப்பொழு திவ் விடத்துக் கழைத்துவந்தனமென்று வள்ளிநாயகியார் திருவவதார விர்த்தாந் தங்களைத்தெய்வநாயகியார் கேட்டவுடன் மனமகிழ்ச்சிகொண்டு நாயக! பூர்வ தில் ஸ்ரீவிஷ்ணுபகவானிடத்தில் அவதரித்த இவளும் நானும் சகோதரிகளாய்ப் பிரிந்ததை இக்காலத்திற் றிருவுளம்பற்றிப் பழையபடியே கூட்டிவைத்த தேவரீர் கடாட்சத்துக்கு அடியோங்களாற்செய்யுங் கைம்மாறுண்டோ தமது திருவிளையாடல்கள் யாவராலுங்கண்டு புகழப்படுமென்று புகழ்ந்தனள். இவ்வா றாகச் சிவகுமாரன் அருளிய வாக்கியங்களையும் தேவபுத்திரி வசனத்தை யுங்கேட்ட வள்ளியம்மை மனமகிழ்ந்தவளாய்த் தாயே முன்னம் தேவரீருக் குத்தங்கையாகும் அவ்வாறே இக்காலத்திலு மிளையவளானேன். இம்முயற்சி யினால் சகல சிறப்புகளையும் பெறவிருக்கின்றேன், இனி தமதடியரிற்கூட்டி யிரட்சிக்கவேண்டுமெனப் போற்றித் தமக்கை திருவடிகளில் வணங்கினள், தெய்வநாயகியாரும் அதிக பிரியத்துடன் வாரியெடுத்தணைத்து முதுகைத் தடவிக்கொடுத்து நமது காதலன்கடாட்சவீட்சணியத்தினால் மீண்டும் உன் னைத் தங்கையாகப்பெற்றதுமன்றி எமதிறைவன் அருளையும் கிடைக்கப்பெற் றேன் இனி யிதில் வேண்டும்பொருளொன்றுமில்லை மனோபீஷ்டங்களனைத் தையும் ஒருங்கெய்தப்பெற்றுக் கிருதார்த்தியாயினேனென்று இவ்விதங்களிற் றன்பேற்றைக்குறித்துப் பலவிதங்களிற் கொண்டாடினள்.

ஓ சவுனகாதிமுனிவர்களே! மேற்குறித்தபடிக்குப் பலநாட்களாகப் பிரிந்திருந்த தங்கை தமக்கைகளிருவரும் சரவணபவன் திருவுளப்படியே சேர்ந்த காலையில் அன்றுதொட்டு தெய்வயானையும் வள்ளிநாயகியும் அபேத

மாயினைப்பிரியாமல் கொண்டானை வழிபட்டுக்கொண்டு மனவெழுச்சியுடன் சிந்தையும் செய்கையும்போலவும் உயிரும் உடலுமொப்பவும் மலரும் மணமும் சிகர்த்தும் நீரும் பாலும்போன்றும் மணியும் ஒளியுமொத்தும் ஒருமைப்பட்ட மனத்தினராய்க்கங்கையும் யமுனையும் கடலிற்சேர்ந்து குலவுமாறுபோலவும் சோடசகலைகளையுடைய சந்திரன் ஆயிரங்கிரண சமோகங்களையுடைய சூரியனைக் கூடியதற்கொப்பாகவும் பரமன் நுதல்விழிகளினுதித்துச் சரவணப்பொய்கையிற் றிருவிளையாடல்களைச் செய்திருந்தபாலசுப்பிரமணியதேவரைப் பிரிவின்றிப் போகபோக்கியங்களை யனுபவித்துக் களித்திருக்கவும் வெற்றிவேலாயுதமூர்த்தியும் உபயகாச்சிபாரிடத்திலும் ஏகபட்சமாய் அவர்களிடத்தில் இன்பநலங்களை யனுபவித்துககொண்டு சிரேஷ்டமாகச் சொல்லுங் கந்தமாதனத்தினிடத்திற் சொர்ணமயமாய்ச் சிரோரத்தினக் காந்திகளைவீசி வானவரையினுயர்ந்து பூவட்டப்பரப்பைப்போல் விசாலமாயிருக்கும் திருமாளிகையிலமர்ந்து மன்னுயிர்களினிடத்தில பரிபூரணகடாட்ச வீட்சணியத்தைப்பரப்பித் தம்மைவழிபடும் அடியார் இஷ்டசித்திகளைக் கொடுத்துக்கொண்டு வருகின்றனர். இவ்விதமாகச் சரவணபவனும திருத்தேவிமாருமிருக்குங் காட்சி யெப்படிக்கிருந்ததென்றில, கிரவுஞ்சபருவதத்தைச் சத்தியினாற்பிளந்து வாட்டிய குமாரநாயகன் கற்பகத்தருவாகவும அதனிடந்தோன்றியிருக்கும் வல்லிசாதக கொடியினும்சிறந்து தெய்வநாயகியாரும் வள்ளியம்மையும ஞானம் போகமென்னு மிருகொடிகளும் தாவுமாறு இருமருங்கினும் விளங்கவும் இவையன்றி உமையவளை யிடப்பாகத்திற் கொண்டிருக்கும சிவபிரான் திருநுதலிலிருக்கின்ற திரிநேத்திரங்களைப்போலத் தேவராஜபுத்திரியும வேடப்பாவையும்உபயபாரிசங்களினும் பொருந்தியிருக்கும சந்நிதிமகிமையினால் உலகவாசிகளனைவரும பாபரகிதராய் நன்னெறிகளை யனுசரித்து இம்மைப்போகங்களைப் பெற்றுவாழ்ந்து கடையிற் கிடைத்தற்கரிய மோட்சவீட்டையும பெற்றுப் பேரானந்தசுகத்தையனுபவித்திருக்கவும இத்தகையகாட்சிகளைக்காட்டி ஒப்பற்ற பாலசுப்பிரமணியக்கடவுளானவர் மிகவிபருங் கருள்புரிந்திருந்தனர். அத்தருணத்தில சேவற்கொடியசையும திருத்தேரும நவரத்தினங்களின் காந்திகளை ஏககாலத்தில வீசுவதைப்போலப புள்ளிபட்ட பசியதோகையை வாய்ந்த மஞ்ஞைவாகனமும பூருவத்தில நாரதமுனிவர்செய்தயாகத்திற்றோற்றித் தமக்கு வாகனமாயிருக்கின்ற தகரும் வெற்றிவேலாதியாகிய படைகளும் திருவாயிலமுதலிய தலங்களினமர்ந்து சண்முகப்பெருமாள் கட்டளையின்படி பணிவிடைகளைச் செய்திருந்ததுகளென முடித்த சூதபுராணிகர் நைமிசாரணிய வாசிகளைப்பார்த்து மஹாருஷிகளே, சிவபிரான் நெற்றிவிழிகளிற்றோன்றிய பாலசுப்பிரமணியக்கடவுளினது திருவிளையாடல்களிற் சிலவற்றை நம்மாற் கூடியவரையிற் சொல்லினம, ஸ்காந்தபுராண வரலாற்றைப் போதிக்க வேண்டுமென்று மனமொருமித்துக்கேட்ட உங்களால் மேற்குறித்திருக்கின்ற ஆறுகாண்டங்களின் சரித்திரங்களையும் வரன்முறையாகவோதும் புண்ணியபலப் பிராப்தியைப்பெற்றுக் கிருதார்த்தனுமாயினேன்; மெய்ப்பத்தியுடன் ஏகமனமாய்ச் சிவசுப்பிரமணியக்கடவுளினது உபயசரணாரவிந்தங்களையும்

சிந்தித்துக்கொண்டு அவன்பெருமைகளை விளக்கும் கதாப்பிரசங்கத்தைச் சம்பூரணமாகக் கேள்விப்பட்ட வுங்கள் பெருமைகளையும் பேறுகளையும் நல்லொழுக்கங்களையும் தவமுயற்சிகளையும் நீதிகளையும் ஒருவாயினுற் சொல்லிமுடிவதோ. இந்தப்பூமண்டலத்தை தலைச் சுமையாகத் தாங்கியிருக்கும் ஆதிசேஷனுலும் அறிதற்கரிதென்று மனப்பூரிப்புடன் பேசுகின்ற சூதபுராணிகரைச் சவுனகாதியர்கள் வணங்கிவாழ்த்தினவாகளாய்ச் சுவாமி தேவரீர் அடியேங்கள்செய்த தவமுயற்சியினுல் இவ்விடத்திலெழுந்தருளி, அஞ்ஞானிகளாகிய அடியேங்களிடத்திற் கிருபையாய்ச் சைவபுராணங்கள் பத்தினும் முதன்மையாகவிளங்கும் ஸ்காந்தமென்னுங்கடலை எளிதில் ஞானமுண்டாகும்படிக்குத் தெருட்டினீர். சரவணபவன் திருவிளையாடலின் சரித்திரமுதலாகிய சிவகதைகளைக்கேட்டுக் களித்ததுமன்றி, மோட்சவீட்டுக்குப் பாத்திரருமாயினோம், மேலும்அரியமானிடதேகமெடுத்ததற்குப்பெறவேண்டும் பலப்பிராப்திகளனைத்தையும் ஒருங்கெய்தக்கிடைத்து வாழ்ந்தோம். பலமுனிவர்களினும் சிரேஷ்டராய்ச் சிவநாதன் பாதநீழலில்வீற்றிருந்து மனக்கவலைகளைப் போக்கிச் சுகாதீதச்செல்வத்தையனுபவிப்பதற்கையமில்லை. இத்தகையபேறும் பாட்டைக் கிடைக்கச்செய்த தேவரீருக்கு நாயினேங்களால் முடிக்குங் கைம்மாறேதேனுமுண்டோவென்று பலபலவிதங்களிற் போற்றினர். இவைநிற்க இனிக்குமரகோட்டத்தடிகள் கட்டளையின்படியே இந்தக்கந்தபுராணத்தைப் பாடி முற்றுப்பெற்றகாலத்திற் கச்சியப்பகுருக்கள் வாழ்த்தெடுத்ததையும் சொல்லுவோம். சிவசுப்பிரமணியக்கடவுள் அழகியபுயாசலங்கள்வாழ்க, சோடசகலைகளையுடைய பூரணச்சந்திரோதயத்தை யொப்பத்துலங்குகின்ற சண்முகாரவிந்தங்கள்வாழ்க, பொற்சிலம்பு தண்டை சதங்கை கொஞ்சுந் திருவடிகள்வாழ்க, மாயையில்வல்ல கிரவுஞ்சனையும் வீராதிவீரனுகிய தாருகாசுரனையும் ஏககாலத்திற் பிளந்துகொன்ற வெற்றிவேலாயுதம் வாழ்க, மற்றபடைகளும் வாழ்க, சிவந்தகொண்டையையுடைய சேவற்கொடிவாழ்க, சரவணபவனேறிநடாத்தும் பசியகலாபத்தையுடைய மயில்வாகனம்வாழ்க. தேவராசபுத்திரியாகிய தெய்வநாயகியார் வாழ்க, ஒப்புவமையில்லா வள்ளியம்மை வாழ்க,சிவகுமாரனிடத்திற் பரிவாய்த்தொண்டுசெய்துவரும் அடியாரனைவரும் வாழ்க வென்றேத்தினவராய் அடியேனிடத்திற் கிருபையுற்று பிறந்துமிறந்து மலைகின்ற ஜனன துக்கசாகரத்திற் பட்டலையாமலும் தீயநடைகளினின்றும் விலக்கி ஞானமார்க்கத்திற்குப் பாத்திரமாக்கவல்ல தேசோன்மயமாகிய தரிசனையைக்காட்டித்துக் கடைப்பட்ட நாயினேனையும் தமதடியார் கூட்டத்திற் சேர்த்து பிராரத்வ கர்மவினைகளையொழித்து தடுத்தாட்கொண்ட பன்னிரு புயாசலங்களையுடைய சுப்பிரமணியர் திருவடிகளிற் பத்தியுடன்வணங்கி வாழ்த்தியமுயற்சிகொண்டு வெற்றிவேலாயுதபாணியாகிய அச்சரவணபவன் சரித்திரங்களை அடியேனுசைப்பெருக்கினுற் கூடியவளவிற் சொன்னதாகும். இதில் சொன்னேக்கமும் பொருள்நேக்கமும் வழுவிருக்குமாயினும் கலைகளனைத்தினையும் பூரணமாகக்கற்றுணர்ந்த புலவர்களாக விருப்பவர்கள் அவற்றில்விளக்கும் கடவுளினதுமேம்பாட்டைக்கருதிப் பாலிற்கலந்தசலமும் பயன்

பெறுவதைப்போல அங்கீகரித்துக்கொள்வர். சராசரப்பிரபஞ்சங்களையீன்று முப்பத்திரண்டறங்களையும் வளர்த்துப் பாதுகாத்துவரும் ஜகன்மாதாவாகிய உமையவள் மனமுருகி அன்பாகச்செய்த பூசனையை மகிழ்ந்தாட்கொண்ட தேவதேவோத்தமனாகிய பரமசிவன் பூலோகத்திலிருக்கின்ற பிராணிகள் இல்லறவாழ்க்கையைமுக்கியமாகக்கொண்டபோதினும் யானெனதென்னும்செருக்கிற்பட்டு இறுமாந்திருப்பவர் தங்களாற்கூடியமட்டும் செய்துவரும் வழிபாடுகளைச் சிறந்ததாகத் திருவுளத்திலேற் றிரட்சிக்குங்காரணத்தினால் இயலிசை நாடகமென்னும் முத்தமிழைவளர்த்து மெய்யறிவையும்பெற்றிருந்த நக்கீரதேவர்முதலிய சிறந்தபுலவகர்ளாற் புகழ்ந்துசாத்திய பாமாலைகளைத் திருச்செவிகளுக் கமுதமாகக்கேட்டுக் களிக்கும் குமாரதேவருக்கு புன்சொற் றொடையினிடத்தினும் அன்பாய் ஒப்புக்கொள்வர், அடியேனைத் தடுத்தாட்கொள்ளும் நாயகமாய் சூரபதுமன்முதலாகிய அவுணப்பாதகர் கொடுமைகளைநீக்கித் தேவர்களைப்பாதுகாத்து விண்குடியேற்றிய நாயகமாய் உலகையளந்தருளிய நெடுமால்புத்திரியாகிய தெய்வநாயகிக்கும் பற்பல திருவிளையாடல்களைக்காட்டி வேடகன்னிகையாகிய வள்ளியம்மைக்கும் நாயகமாய் வெற்றிவேலாயுதத்துக்கும் நாயகமாயிராநின்ற சிவசுப்பிரமணியதேவர் கதைகளை விரிக்கும் இப்புராணத்தைப் பூமண்டலவாசிகளனைவரும் காவியங்களனைத்தினும் நாயமாகக்கொள்ளக்கடவர், குறைவற்றகிருபாநிதியாகிய குமாரசுவாமியார் மகத்துவங்களைத்தெருட்டும் சரித்திரங்களைச் சகலருங்கேட்டு மனமகிழ்ந்து இம்மைமறுமைப்போகங்களை எளிதிற்பெற்று வாழும்படியாகப் பிரசங்கித்த புண்ணியசீலரும் இப்புராணவிரலாற்றை யாராய்ந்து ஆனந்தபரவசராய்க்களித்த குணசம்பன்னரும், வழுவின்றி வாசித்துஅதன்பயன்களைத் தெரிந்து மனப்பூரிப்புடனிருக்கின்றமகாத்துக்களும், இக்காதையைவரன்முறையாகக்கற்று முத்திபெற நினைந்த ஞானவான்களும், பத்திபரவசராய் மனமுருகிக் கேட்கப்பெற்ற மேன்மக்களும், பூமியிலிருக்கின்ற பரியந்தம் இலக்குமியையொத்த வனப்பும் அருந்ததியை நிகர்த்த கற்பும் மண்மகளைப்போன்ற பொறுமையும் மற்ற மேம்பாடுளகளைத்தும் பெற்றிருக்கின்ற நற்குணநற்செய்கைகளையுடைய கன்னிகையை மணந்தின்புற்று நன்னெறிகளையனுசரித்துவரும் குணசம்பன்னராகிய புத்திரரைப்பெற்றுத் தனதானியமுதலிய அஷ்ட ஐஸ்வரியங்களையும் மனவெழுச்சிபெற அனுபவித்திருந்து பின்பு அந்தியகாலத்தில் மோட்சசாம்பிராச்சியத்தைப்பெற்று எந்நாளும் பகவான் பாதநீழலிற் குடியாய்வாழ்ந்திருப்பர், அண்டாண்டபுவனங்களாய் மற்றப்பொருள்களனைத்துமாய் உயிருக்குயிராய்க் காரணபூதராய்ப் பிறவுள்ளனவுமாகி அவற்றிற்குக் காட்சியாய் அளவுபடாமல் விளங்கும் தேவதேவோத்தமன் பாதகமலங்களிலிடைவிடாது பத்தியுடன்போற்றி அடைக்கலம்புகக்கடவேன், சராசரப் பிரபஞ்சங்களும் நாசப்பட்டழியும் பிரளயகாலத்தினும் சலனமற்றுச் சகலவளங்களையுங் கொண்டுவிளங்கும் சிறப்பையுடைய திருக்காஞ்சிப்பதியில் நடுநாயகமாய் பருத்தோங்கிய பிராகாரத்தையும் பலநிலைகளைப் பெற்றிருக்கின்ற கோபுரவாயில்களையும் மண்டபங்களாதிய சிறப்புகளைக்கொண்டு மூத்

தழல்சொலித்திருக்கும் யாகசாலைகள் கெற்பகிரகம் மற்றும்வேண்டுவன வனை த்தும் பெருத்துத் தெய்விகமாய்ப் பெற்றிருக்கின்ற திருக்குமர கோட்டத் தில் தெய்வாயகி வள்ளியம்மை யிருமருங்கினும் வீற்றிருக்கத்தக்கதாகப் புவனங்கள்செழித்து விருத்தியடையும்படி எழுந்தருளிய சுப்பாமணியர் திருவடிகளில் வணங்கிப்போற்றினம். ஆயிரத்தெட்டண்டங்களை நூற்றெட்டு யுகவளாயிற் கொடுங்கோல் செலுத்தியாண்டு தேவர்முதலிய சகலரையும்வெ ன்று பிராணிகளை யலைத்திருந்த சூரபதுமனேமுதலிய அவுணக்கடலை வற்றச் செய்து வெற்றிகொண்டிருக்கும் வேலாயுதத்தைத்தாங்கியிருக்கும் சரவண பவன் புராணத்தைப்பத்தியுடன் தினந்தோறும் வாசித்துவரும்புண்ணியவான் கள் இம்மையில் கஜேந்திரபோகங்களை யனுபவித்து மறுமையில் சிவசாரூபப் பதவியிற்சேர்ந்து மனமகிழ்ச்சியுடன் வாழ்வர், இந்தப்புராணத்தைத்தொட ங்கி குறைவற முற்றுப்பெற்ற காலத்தினும் ஐங்கரங்களையும் யானைமுகத்தை யும் பருத்தவயிற்றையும் தண்டைசதங்கை கொஞ்சும் பாதாரவிந்தங்களையு முடைய விகடசக்கர விநாயகமூர்த்தியை மீட்டும் வழிபட்டுப்போற்றினம். சுபம். சுபம்.

வள்ளிநாயகியார்திருமணப்படலம்.

முற்றிற்று.

ஸ்ரீகந்தபுராணவசனம் தேவகாண்டம்

முற்றுப்பெற்றது.

உ

வேலுமயிலுந்துணை.

காஞ்சிபுரம் - கோனேரியப்பமுதலியார்

அருளிச்செய்த

உபதேசகாண்டம்

சூராதிகளொடுக்கப்படலம்.

விநாயகர்துதி.

குழவிவெண்பிறைமிலைச்சியோற்குணித்தமாதவத்தி
னிழைதடம்புனலருவிதாழிமயமீன்றளித்த
மழைமதர்த்தகண்மரகதப்பசும்பிடிபயந்த
தழைமடற்செவித்தந்திபொற்சரணமேசரணம்.

வாழ்த்து.

திங்களஞ்சடைபெம்பிரான்றிருவருள்பெருக
பொங்குதிங்கண்மும்மாரியும்பொழிகபூதலத்தி
லெங்களையகன்றிருக்குமரத்தொண்டரீடேற
தங்குநான்மறைச்சைவநூலோங்கறந்தழைக்க.

உள்ளமோர்ந்தனைகேட்டிழியெம்முழைமொருங்குணர்ந்தொருங்காகப்
பள்ளவார்மடைப்புனலெனத்தொகுத்தனையாமதன்பயன்றுய்த்தேம்
வெள்ளெயிற்றுவெஞ்சூரனைமுதலியோர்விளிந்தபின்னவராவி
கொள்ளைவேற்படையொடுக்கியதன்மையைக்கூறுதியெமக்கென்றார்.

முன்னைப்பழம்பொருட்கு முன்னைப்பழம்பொருளாய், பின்னைப்புதுமைக்கும் பின்னைப்புதுமையாய், அநாதியாய், வியாபகராய், நித்தராய், சச்சிதாநந்தவடிவராய், முத்தராய், இலயபோக அதிகாரகர்த்தராய் அநாதியே மலபெத்தர்களாகிய பசுக்களுக்கு பசுத்வம்நீங்கி கிருபைபுரியும்வண்ணம் அருட்டிருமேனிகொண்டெழுந்தருளிய பசுபதியாகிய முழுமுதற்கடவுளின் அநந்த குணகல்யாண மான்மியங்களைக்கேட்கும் ஆசைமிகுந்த தவத்தாற்றூய நைமிசாரணிய முனிவர்கள் எல்லாம்வல்ல கருணைக்கடலாகிய எம்பெருமானது உபயசரணாரவிந்தங்களிற் பேரன்புவாய்ந்த தவச்சிரேஷ்டராகிய சூதபௌராணிகரைப் பார்த்து விண்ணப்பஞ் செய்வாராயினர். முனிவர்சிகாமணியே! அடியார்கள் வேண்டியவற்றை வேண்டியாங்கருளும் அமலமூர்த்தியாகிய சிவபெருமான் தேவரீடுக்கணகற்றத் திருவுளங்கொண்டு பாலித்தருளிய முருகக்கடவுளின் நிரதிசயாநந்த மான்மியங்களை அடியேங்களுய்யும் பொருட்டுக் கரதலாமலகம்போல் தெளிவுபெறத் திருவாய் மலர்ந்தருளினீர்;

அதனால் அடியேங்களெல்லாம் நித்தியலீலாவிபூதியின் பயனை நன்குணர்ந்தோம். இனித்தேவ கண்டகர்களாகியகொடிய சூரபதுமன், சிங்கமுகாசுரன், தாருகாசுரன் முதலானவர்கள் முருகக்கடவுளா லேவப்பட்ட வெற்றிவேலாயுதத்தினால் மடிந்தபின்பு அவர்களுயிரை அவ்வேலாயுதமானது ஒடுக்கிக்கொண்ட திவ்ய சரித்திரங்களையும் அடியேங்களுக்குத் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று வினவ, ஐம்புலக்குறும்பைப் பற்றறவென்றவராகிய சூதபுராணிகர் அதனைக்கேட்டு, தம்முடைய அழகிய சடைமுடியையசைத்து மிகுந்த பேரானந்தத்தை யடைந்து நைமிசாரணியவாசிகளைப்பார்த்து அன்பர்காள்! அந்தச்சரித்திரத்தை வரன்முறையாகச் சொல்லுகின்றோம் அன்போடு கேட்பீர்களாகவென்று சொல்லத்தொடங்கினார்.

முன்னமொருகாலத்தில் பொன்னைப்போலும் பிரகாசிக்கின்ற கடப்பமலர்மாலையைத்தரித்த எம்பெருமானாகிய குமாரக்கடவுள் கீதங்களைப்பாடுகின்ற வண்டுகள் நீங்காத கற்பகச்சோலைகளால் புடைசூழப்பட்ட கந்தமாதனபருவதத்தினின்றும் புறப்பட்டுப்பசியகலாபத்தையுடையமயிலின்மீது ஆரோகணித்துக்கொண்டு சர்வலோகங்களிலும் திருவிளையாடல்செய்யும்படி எழுந்தருளிய காலத்தில் பர்வதராஜ புத்திரியாராகிய பார்வதிதேவியாருடன் பரமேஸ்வரன் திருவோலக்கங் கொண்டெழுந்தருளி யிருக்கும் திருக்கயிலாசமலையைச்சேர்ந்து மயில்வாகனத்தினின்றும் கீழேயிறங்கிச் சிறியதண்டைகளணியப்பட்ட இரண்டு திருவடிகளும் வருந்த மெல்லென நடந்தபொழுது வெற்றிபொருந்திய கோழிக்கொடியும் மயில்வாகனமும் கைலையங்கிரியின் சாரலினோர் சாரிருக்க, குமாரக்கடவுளானவர் கூட்டமாகிய பேரொளியை வீசுகின்ற கைலாய கிரியிற்சென்று பன்னிரண்டு திருக்கரங்களையும் திருமுடிகளிற் கூப்பித்தொழுது, வாரிதியிற்றோன்றிய விஷபத்தைப் பிரமவிஷ்ணுவாதி தேவர்களுக்கு ஓர் துன்பமுண்டாகா வண்ணம் தம்முடைய கண்டத்திற்றரித்தருளிய காளகண்டராகியும், தம்மையடைந்த சிவஞானிகளின பிறவியாகிய தீமையையொழித்து ஆநந்தமாகிய வமுதத்தையூட்டும் நாதராகியும், வெண்மை நிறம்பொருந்திய இளஞ்சந்திரனைச் சடைமுடியின் மீது தரித்தருளிய ஜகதீசுவரராகியும், தாருகாக்ஷன் - கமலாக்ஷன் - வித்துன் - மாலியென்னும் அரக்கர்களின் திரிபுரங்களை நகைத்தெரித்தருளிய புண்ணியமூர்த்தி யாயுமுள்ள பரமேசுவரனைத் தரிசித்துப் பேரானந்த முற்றவராய்ப் பின்னும் மரகதக்கொம்பைப்போல விளங்கும் உமாதேவியாரையும் சேவித்துப் பெருமகிழ்ச்சியடைந்துநிற்க, வீரகண்டையும் தண்டையுமணிந்த அழகிய திருவடிகளையுடைய குமாரராகிய சுப்பிரமணியக்கடவுளைப் பார்த்துத் திருவுள்ளமுவந்து தேவநாயகனாகியும், முதற்பெருங்கடவுளாகியுமுள்ள சிவபெருமான் ஆனந்த நிருத்தஞ்செய்தருள, அந்நடன தரிசனத்தைக் குமாரக்கடவுள் தங்கண்க ளாரக்கண்டு புளகாங்கிதங்கொண்டு பரவசமடைந்திருந்தனர்; அப்போது வெள்ளியதிரைக் கரங்களினால் கரையினைமோதுகின்ற திருப்பாற்கடலின் மத்தியில் படம்பொறியினையுடைய சேஷசயனத்தில் அறிதுயிலமர்ந்த பசிய துளபமாலையுங் கவுத்துவமணிமாலையுந் தரித்து

விளங்காநின்ற ஸ்ரீமகாவிஷ்ணுவானவர், மகம்மேருவினிடத்தில் கருமைநிறம் பொருந்திய மேகமானது செந்தாமரைமலர்களைப் பூத்துக்கொண்டு வருவது போல, நீண்டசிறையினையுடைய கருடவாகனத்தின் மேலாரோகணித்துக் கொண்டு எழுந்தருளிவர, அவ்வாறு விஷ்ணுவானவர் சென்ற திசைநோக்கி அன்னவாகனத்தின்மீது பிரமதேவனும், கற்பகமுதலியதருக்களின் நீழலில் வாசஞ்செய்யும் தேவேந்திரன்முதலிய தேவர்களெல்லாரும் தம்மைச்சூழ்ந்து வர, திரிபுரதகனராகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் கைலையங்கிரியைச்சேர்ந்து அதன்சாரலினொருபுறத்தில் தங்கள் வாகனமாகிய கருடனையும், அன்னத்தையும் விட்டிறங்கி மகாபிரளயகாலத்திலும் அழியாதமேன்மை பொருந்திய பொற்சிகரங்களையுடைய ஸ்ரீமகாகைலாசத்தில் எழுந்தருளியிருக்கும் பரமேசுவரன் செய்தருளுகின்ற திருநடனத்தைத் தரிசிக்கச்செல்கின்ற மனமுடையவர்களாய் அன்பு மிகுந்து நிற்க அஞ்சலியாகக்கூப்பிய கையையுடையவர்களும் நடுங்கிய சரீரமுள்ளவர்களும் அருவியாற்றைப்போலக் கசிந்தொழுகும் ஆநந்தக்கண்ணீருடையவர்களும் மிகுந்த பேரன்பினையுடையவர்களுமாகச் சென்றபோது, உயர்வாகிய நவரத்தினங்களால் பதிக்கப்பட்ட முதற்கோபுரவாயிலினிடத்தில் எழுந்தருளியிருக்கும்ஞானமூர்த்தியாகிய திருநந்திதேவர் தமது திருக்கரத்திலுள்ள பிரம்பினாலடிக்கப்பட்ட சுவடானது தங்கள் முடிகளில் படும்படிநெருங்கிய நெருக்கத்தினால் ஒருவாறு உள்ளே சென்று நம்பெருமான் செய்த திருநடனத்தைத் தரிசித்துத்தொழுது ஒருபுறமாகநின்று, வேதங்கள் கோஷிக்கும் ஒலியானது எட்டுத்திசைகளையுங்கடந்து அப்பாற்செல்லவும், விஷ்ணு, பிரமன், இந்திரன்முதலிய தேவர்கள்செய்யும் தோத்திரவொலியானது பிரமாண்டகோளகைக் கப்புறத்திற்செல்லவும், ஆநந்தத்தாண்டவஞ் செய்தருளுகின்ற தமது திருவடிகளிலணிந்த வேதமாகிய சிலம்பினொலியானது, பாசபந்தங்களிலழுந்திக்கிடக்கும் ஆன்மகோடிகளுக்கு இனிய திருவருள்பாலித்து அவர்கள்கொண்டிருந்த அஞ்ஞானமாகிய துன்பங்களையொழிக்கவும் ஞானபூரணர்களாயுள்ள சிவகணங்கள்தோத்திரஞ்செய்யும் அரஅர என்னும் பேரோசையானது பூலோகமெங்கும் நிறையவும், தேவதுந்துபிகளும், சிறுபேரிகைகளும், பலதுவாரங்களோடு பருக்கைக்கற்கள் பொருந்தியதுமாகிய பாண்டிலென்னும் வாத்தியத்தை யடிப்பதனாலுண்டாகும் பேரொலியுடன் திமிலைமுதலாகிய வாத்தியங்களொலிக்கவும், தம்முடைய சடாமகுடத்தில் தரித்திருக்கும் கங்காநதியானது ததும்பவும், தேவர்கூட்டங்கள் பக்கங்களிற்சூழவும், திருநந்திதேவர் தமது திருக்கரத்திலுள்ள பொற்பிரம்பினால் மோதுகின்ற அடியினால் தேவர்களுடைய முடியிலணிந்திருக்கும் நவரத்தினங்கள் தெறித்தோடவும், பனியாகிய மேற்போர்வையைத் தரித்துள்ள இமயபர்வத ராசன்செய்த தவத்தினால் புத்திரியாகப்பெற்றெடுத்த பசுமையாகிய திருமேனியையுடைய பார்வதிதேவியார் கனிந்த திருவுள்ளத்துடன் ஒத்துகின்ற தாமரைமலர்போன்ற திருக்கரத்திலிருக்கும் தாளத்தினின்றுமுண்டாகும் தாளவொத்தின்படியே சீர்கள்தோறு முண்டாகும் பாட்டினோசையானது தம்முடைய திருச்செவியில் பொருந்தவும், திருநடனஞ் செய்

தருளுகின்ற சிவபெருமானது திருக்கூத்தினைத் தேவர்களுடன் தொழுது, குழைந்த வுள்ளத்தை யுடையவர்களும், குமிழிஇட்டுப் பாயும் ஆனந்தக்கண்ணீருடைய்வர்களும், மனங்குழைந்த பேரன் பினையுடையவர்களுமாய்த் தங்கள் தங்கள் சிரத்தில் குவித்துவைத்த கைகளை வாங்காமல் மிகுந்த ஆர்த்தியுட னெதிர்நின்று பரவசமடைந்து தேகம் புளகாங்கிதங்கொண்டு மனங்கசிந்து, மிகுந்த சந்தோஷத்துடன் தரிசித்து நின்றார்கள்.

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே! இவ்விதமாகப் பிரமவிஷ்ணுக்கள் பரமசிவன் செய்தருளுகின்ற திருநடனத்தைத் தரிசித்து சந்தோஷித்திருக்குங் காலத்தில் பேரொளியை வீசுகின்ற ஸ்ரீகைலையங்கிரிச் சாரலில் நம்பெருமானாகிய குமாரக்கடவுளின் துவசமாகிய சேவலும், வாகனமாகிய மயிலும், மிகுந்த களிப்புடன் வசித்திருந்தன. அப்போது சூரன், பதுமன், சிங்கமுகன், தீமையோருருக்கொண் டன்னகொடியவனாகிய தாருகன் என்று சொல்லப்பட்ட நான்கு பூதகணத்தலைவர்களும் அழகிய புள்ளிகளையுடைய மயிலுக்குச் சமீபத்தில் வந்து அம்மயிலைப்பார்த்து, ஓ மயிலே! சிவகுமாரனாகிய சுப்பிரமணியக்கடவுளின் கிண்கிணியணிந்த திருவடித் தாமரைகளைத் தாங்கும் பெருஞ்செல்வத்தைப் பெற்ற உன்னுடைய வல்லமையின் திறம் ஒருவரால் எடுத்துச்சொல்லுந் தகுதியையுடையதோ? இதுபோலவே ஜயப்பிரதாபத்தையுடைய கொடியாகிய சேவலின் பராக்கிரமத்தை யெடுத்துச் சொல்லத் தக்கவர்கள் உலகத்தில் யாரிருக்கின்றார்கள்? பதுமாசனனாகிய பிரமதேவனாலும் உம்முடைய திருவடிகளைப் போற்றுதற்கு எளிதல்லவே, அப்படியிருக்க இவைகளையறிந்து மறியாதவர்கள்போல மிகுந்த பலத்துக்குத் தாங்களே சொந்தமானவர்களென்று சிறிய சிறகையுடைய கருடராஜனும் அன்னமும் தங்கள் கருத்தில் நினைந்து உங்களைக் கொஞ்சமேனும் மதியாது அவமதித்திருக்கின்றன. அதனை நீங்களின்னமு மறியவில்லையோ, அவ்வாறவமதித்திருப்பது மல்லாமல் உங்களுடன் சண்டைசெய்ய வருவாரானால், நாங்கள் நால்வரும் கோபாவேசங்கொண்டு யுத்த சன்னத்தராய் உங்களுக்குத் துணையாக நிற்போமென்று பூதகணத்தலைவர்கள் சொன்னவார்த்தைகள் தங்கள்காதுகளிற் புகுந்தவுடன் மயிலானது கண்களில் நெருப்புப்பொறி பறக்கும்படி சிறகையடித்துக்கொண்டெழுந்தது உடனே சேவலும் பெருங்கோபத்துடன் சீறிச்சிறகானது தன்னடி. தொடப்போர்க்கப் பொர்செய்யத் துணிந்தெழுந்தது, அதனைக்கண்டு பூதகணங்களும் கண்களில் வடவாமுகாக்கினியானது தோன்றும்படிக் கோபித்தெழுந்தன. இவ்வாறுமிகுந்த கோபாவேசத்தை யுடையவைகளாய்த் தமக்கெதிரில் போர்செய்யவருவதைக் கருடன்பார்த்து உலகத்தின்மேலோங்கி மோதுகின்ற அலைகளையுடைய சலப்பிரளயத்தைவற்றச்செய்கின்றவலிய சிறகையடித்துக்கொண்டு ஆரவாரித்தது. உடனே பிரமதேவன் வாகனமாகிய அன்னமும்எதிர்நோக்கிச்சென்று மிகுந்த கோபாவேசத்துடன் தனக்குள் போர்விளையும்படியான பேரோசையைக் காட்டி யுக்கிரத்துடன்எதிர்சென்றது.

இவ்விதமாக மயிலும், சேவலும், கருடனும், அன்னமுமாகிய இவைகள் போர்க்கோலங்கொண்டு எதிர்த்து ஒன்றுடனொன்று அதட்டியும் அந்த அதட்டுதலையொத்த கோபத்தினையுடையனவாய்க் கண்களில் நெருப்புப்பொறி சிந்தும்படி யெதிரெதிராகவிழித்தும், ஒன்றை மற்றொன்று கடித்தும், கீழே தள்ளிமிதித்தும், மகாமேருமுதலாகிய பெரிய அலைகளையுடைய சமுத்திரமானது மேலெழும்படிக்குச் சிறகுகளால் சுழலச்செய்தும், மகாமேருமுதலாகிய பெரிய பருவதங்களின் சிகரங்கள் நடுங்கி யதிர்ந் துதிரும்படிக் கோஷித்தும், அப்போர்க்களத்திலுண்டாகிய துகளெழுந்து பரவி அஷ்டதிசைகளையு மூடிக்கொண்டு அங்கிருக்கின்ற திக்குப்பாலகர்களின் மனங்கள் கலங்கவுமாயின, இவ்வாறு இவைகள் ஒன்றுடனொன்று போர்க்கோலங்கொண்டு செல்கின்ற யுத்தத்தைக்கண்டு, சூரியனொளித்தனன். பொன்னுலகவாசிகளாயுள்ள முப்பத்துமுக்கோடி தேவர்களும் துன்பக்கடலின் மூழ்கினவர்களாய்த் தங்களுலகத்தைவிட்டு அப்புறங் குடியோடிப்போகும்படி நினைத்தார்கள். இடிக்குலங்கள் பெருங்குமறலுடனதிர்ந்து பொடிப்பொடியாகச்சிந்தின. அண்டமுகிட்டையளாவிய அநேகமாயிரங் கொடிமுடிகளையுடைய மகாமேருவானது அஷ்டதிசைகளும் அதிரும்படியாக வராநின்ற பிரசண்டமாருதமோவென்று மயங்கிற்று.

கேட்டீர்களோ நைமிசாரணியவாசிகளே! இவ்விதமாகப் பெரும் போர் நடக்கும் காலத்தில் பூதகணத்தலைவர்களாகிய நால்வரும் தங்கள் தங்கள் பற்களையதுக்கிக்கொண்டுகோபமுடையவர்களாய் பலம்பொருந்திய சிறகுகளையுடைய கருடனுடனெதிர்த்துப் போர்செய்தார்கள். மயிலானது கருடனுடைய காலகளையுந் தலையினையுந் துண்டு துண்டாகக்கடித்துப் பெருமுழக்கமுண்டாகும்படிக்குத் தன்சிறகினால் அதன்பிடரியில மோதியடித்தது. நம்பெருமானாகிய குமாரக்கடவுளின் துவசமாகிய கோழியானது பிரமதேவனேறிநடத்துகின்ற விசாலமாகிய சிறகையுடைய அன்னத்தினுடனெதிர்த்துப் போர்செய்ததிறத்தை ஆயிரம் நாவைப்படைத்த ஆதிசேஷனாலும் இன்னதன்மையென் றெடுத்துச் சொல்லக்கூடுமோ? கூர்மையாகிய தன்காலடிச் சுவட்டினால அன்னத்தினுடைய மார்பானது பிளந்த பிளப்பினிடத்தில் உதிரங்கொப்புளித்தெழக்கண்டு சுவர்க்கலோகத்தி லுள்ளவர்களும் நடுநடுங்கும்படி வெற்றிபொருந்திய தன் சிறையை யடித்துக்கொண்டது. இவ்விதமாகப் பெரும்போர் நடந்துகொண்டிருக்கையில், மயிலினிடத்தில சண்டைசெய்துகொண்டிருந்த கருடனே சண்டையிற்றாழ்ந்து தன்சிறகை யுதறிக்கொண்டு ஆகாயத்தில் பறந்துவிட அன்னப்பட்சியு மந்தக் கருடனுக்குப் பின்னே பறந்தோடிற்று. அதனைக்கண்ட கணத்தலைவர் கதாயுதமெடுத்துத் துரத்திக்கொண்டுசெல்ல, அழகிய கலாபத்தையுடைய மயிலும் சேவலும் அவைகள் போனவழியேதொடர்ந்தன, அவ்வாறு அவைகள் செல்லுகின்ற பெருந்திசைகளும் அண்டங்களு மதிர்த்து அவ்விடங்களிலிருக்கும உயிர்களெல்லாஞ் சிந்தைநைந்து கலங்க அன்னமானது பிரமதேவனுலகிற்சென்று ஒளித்துக்கொண்டது. அதுபோலவே வெற்றிபொருந்திய கருடனும் மிகவும் வருந்தி நடுக்கத்

தட்டோடி ஸ்ரீமகாவிஷ்ணுவினுடைய வைகுந்தத்தி லொளிந்துகொண்டது. இவ்விரண்டு மிவ்வாறு ஓடியொளித்துக்கொண்டதைக்கண்ட மயிலானது அத்தம்பட்டில் விட்டுவிலகாமல் மிகுந்த கோபாவேசத்துடன் அதனடியைப் பிடித்துத்தொடர்ந்து ஆயிரமிதழ்களையுடைய பதுமபீடத்தில் எழுந்தருளி யிருக்கும் பிரமதேவனுலகத்திற்போய் ஒருக்ஷணப்போதில் அங்கிருக்கு முயிர்களையெல்லாங் கொன்று அதன்பின் மகாவிஷ்ணுவினுலகத்திற் சென்று ஓடி யொளித்துக்கொண்டிருந்த கருடனையுங் கொன்றதுமல்லாமல், அவ்வைகுந்த நாட்டையும் பொடிப்பொடியாகச் சிதைத்து நாசம்பண்ணி யவ்விடத்தினின்றும் நீங்கிப் பிரமதேவனுலகத்திற்சென்று அவ்வுலகத்தையுமழிக்கக் கோழிக் கொடியானது கோபித்து அவ்விடத்திலிருக்கும் உடல்களையெல்லாங் கொறித்துவிட்டது. இப்படியிருக்க நெருப்புப்பொறிகளைக் கக்குகின்ற கண்களையும், வெண்மை நிறம்பொருந்திய பற்களையுமுடைய நான்குபூதகணத்தலைவர்களும் கோபித்து அவ்விடங்களெங்கும் தங்கள் கோபாவேசத்தைக்காட்டிக் கொடிய போரைச்செய்கின்ற ஆரவாரத்தினால் தேவர்கள் பெரும்பயங்கொண்டு மனங் கலங்கி இனி யெப்படிக் குடியிருப்பதென்று துயரத்துடனிரங்கிப் பயந்து ஸ்ரீகாளகண்டனாகிய பரமேசுவரன் திருநடனஞ்செய்தருளுகின்ற கைலாயங் கிரியைச் சேர்ந்தார்கள். இவ்வாறு தேவர்கள் திருக்கைலையைச் சேர்ந்த பொழுது கொடிய யுத்தத்தைவிளைத்த மயிலும், சேவலும், நான்கு பூதகணத் தலைவர்களும் அவ்விடத்திற்சேர்ந்து ஒருபுறத்திலிருக்க, இங்கிருந்துபோன தேவர்கள் பொற்சிகரங்களையுடைய கோபுரவாயிலைச்சேர்ந்து தங்களுக்கு நேரிட்ட துன்பங்களை யவருடன் சொல்லிக் கொள்ளுவோமென வருந்தித் தங்களுக்குள் எண்ணமிட்டுக்கொண்டிருக்கும்போது, நான்கு வேதங்களிலும் ஆராய்ந்தெடுக்கப்பட்ட வுண்மைப்பொருளாகிய பரமசிவனுடைய திருநடனத் தைத்துதிசெய்து அழகிய தாமரைமலர்போன்ற திருவடிகளைவணங்கித்திரும்பி வருகின்றபொழுது அங்கு வருத்தப்பட்டுக்கொண்டிருந்த தேவர்கள் விஷ்ணு வைக்கண்டு வணங்கித் தங்களுக்கு நேரிட்ட துன்பங்களை யிரந்து சொல்லத் தொடங்கினார்கள்.

ஓர் காலத்துங்கெடாத முதல்வனே! திருநாபியிற்றோன்றிய பிரமனைக் கொண்டு சர்வலோகங்களையும் சிருஷ்டித்த புண்ணியமூர்த்தியே! தேவரீர் தீனராகிய எங்களுயிரைக் காவாவிட்டால் மற்றியாவர் காக்கத்தக்கவர்கள், க்ஷீராப்தியின் மத்தியில் அறிதுயிலமர்ந்தருளும் துளபமாலையைத்தரித்த திருமுடியினையுடைய பெருமானே! பூர்வத்தில் கஜேந்திரனென்னுமொருயானையானது ஆதிமூலமே யென்றோலமிட்டழைக்கச் சென்றோடி நீங்காத வதன்றுன்பந்தீர்த்தொழித்துக் காத்தருளியவீரனே! கோவர்த்தனகிரியைக் குடையாக்கொண்டு பசுக்கூட்ட முதலானவைகளைக் காத்தருளிய இறைவனே! உலகத்தை யோரடியாலளந்தருளின கருணாநிதியே! நெருப்புப்பொறியைக் கக்கும் சக்கராயுதத்தைத்தரித்த திருக்கரங்களையுடைய கடவுளே! ஐயோ! தேவருலகம் அழிந்துவிட்டது, தீனர்களாகிய எங்களைக்காப்பவர்கள் தேவரீரையன்றி வேறொருவருங்கிடையாது பசியிலாபத்தினையுடைய மயிலின

சிறகினால் அஷ்டலக்ஷ்மிகளும் வசிக்கப்பெற்ற தேவரீருடைய பதவியாகிய வைகுந்தமும் அழிந்துவிட்டது, பிரமதேவன் வாழ்ந்துகொண்டிருக்கும் சத்தியலோகமும் தூளிப்படலமாய் போய்விட்டது. இனி தேவர்கள் கதியோ வெளியில், சக்கரவாளகிரிக் கப்புறத்திலோ, பிரமாண்டகோளகைக் கப்புறத்திலோ எங்கு வருத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றார்களோ வொன்றுந்தெரியவில்லை. பரந்த இதழினையுடைய தாமரைமலரில் வசிக்கும் பிரமதேவனுக்குரிய வாகனமாகிய அன்னப்பட்சியுஞ் சிதைந்தொழிந்தது. தாமரைமலர் போலுந் திருக்கண்களையுடைய பெருமானே! சமுத்திரத்தையொத்த கறுத்த திருமேனியையுடைய கண்ணனே! தேவரீர் ஏறிச்செலுத்தும் வாகனமாகிய கருடனும் ஒழிந்துவிட்டது. கொடியவர்களாகிய பூதகணத்தலைவர்கள் நால்வரும் உண்ணத்தொடங்குவாராகில் இந்தவுலகமெல்லா மவர்களிலொருவர் வயிற்றிக்குப்போதுமோ? அவர்கள் செய்யுங்கொடியசெய்கைகள் நினைப்பினிடத்திலடங்குமோ? அடியேங்கள் வசிக்குமிடத்தையெல்லாம் தேவரீருடைய கிருபாநோக்கஞ் சிறிதுண்டாயிருக்குமானால் இப்போதே யதனைத் தடையில்லாமற் பெறுவோமென்று இவ்விதமாகத் தேவர்கள் முறையிட்டு நிற்பதைக்கண்டு மேகம்போலுங் கறுத்த திருமேனியையுடைய விஷ்ணுவும், தாமரைமலரில் வசிக்கும் பிரமதேவனுஞ்சென்று ஒளிபொருந்திய வெற்றிவேலாயுதமேந்திய பன்னிரண்டு திருக்கரங்களையுடைய குமாரக்கடவுள் எழுந்தருளியிருக்கு மிடத்திற்சேர்ந்து தரிசித்துக் கண்களிப்படைந்து கடல்வண்ணனாகிய திருமாலானவர் ஒருபுறத்தில்நிற்கப் பதுமாசனனாகிய பிரமதேவன் தேவருலகங்களிலுள்ளவர்கள் பட்டபெருங் கேட்டையெல்லாம அஞ்சலியஸ்தனாய் இரண்டுகரங்களையும் சிரத்தின்மீது குவித்து இமயபர்வதராஜ புத்திரியாராகிய உமாதேவியார்க்குரிய புத்திரசிகாமணியே! பகைவர்களாகிய யானைக்கூட்டங்களைவேரறத்தொலைத்துவாட்டும இராஜசிங்கமே! தேவர்களடைந்திருந்தபெருந்துன்பங்களை யொழித்து அவர்களுலகங்களைக் காத்திரட்சித்தருளிய புண்ணியமூர்த்தியே! மணம்பொருந்தியகடப்பமலர்மாலையைத்தரித்த கருணையங்கடலே! அவுணர் போரினைக்கடந்த வீரமுள்ளவரே? கலாபத்தையுடைய மயில்வாகனத்தின் மீதெழுந்தருளுகின்ற கிருபாநிதியே! அழகிய வேலாயுதத்தைத்தரித்த கடவுளே! எமபெருந்தெய்வமே! தேவர்களுக்குத் தலைவனாகிய இந்திரனுக்கு அருமையாகக்கிடைத்த வருட்செல்வமே! ஒன்றுக்கும் பற்றாதவனாகிய அடியேனையுமோர்பொருட்படுத்திப் பிரணவமந்திரத்தினுண்மைப் பொருளையெடுத் துபதேசித்தருளிய புண்ணியசொரூபியே! இருக்கு எசுர் சாமம் அதர்வணமென்னும் நான்குவேதங்களின்முடியினின்று மோர்காலத்தும்விட்டு நீங்காத வெம்பெருமானே! சர்வலோகநாயகனே! ஒருவரும் தனக்கோப்பில்லாத ஏகனே! சதுர்வேத சொரூபியே! நாவைப்புரட்டி யுச்சரிக்கப்படாத வேதாந்தமே! பிரணவமந்திரத்தி னுண்மைப்பொருளே! பூதமுதல் நாதமீறாகச் சொல்லப்பட்ட முப்பத்தாறு தத்துவங்களையுங்கடந்த முதல்வனே! வேதசிவாகமங்களின் உண்மைப்பொருளையுணர்ந்த சைவசித்தாந்திகள் தாங்களடைய வேண்டுவதாகிய சிவசாயுச்சியத்திற்குத் துறையாயுள்ளவரே!

கிருபாசமுத்திரமே! மிகுந்த அலைகள்பொருந்திய கங்காநதியிலே மெய்ஞ்ஞானமே! திருவுருவமாகப்படைத்த சரவணமென்னு மோர்வகைத் தருப்பையின்மீது கிருபையோடெழுந்தருளிய தெய்வசிகாமணியே! தண்டையையணிந்த திருவடிகளையுடைய பெருமானே! ஆறுதிருமுகங்களையுடைய வருட்குன்றமே! யமனாலேவப்பட்ட பாசத்தையறுக்கும்படியான சடாக்ஷரமந்திரத்தைக்கொண்டு அடியேங்கள் போற்றுதற்கெளிய கடவுளே! அம்மந்திரத்தைப் போற்றாதவர்களாகிய வன்னெஞ்சர்களுக் கருமையானவரே! புராதனப்பொருளே! ஐம்புலன்களையும் வென்ற முனிசிரேஷ்டர்களா லழைக்கப்பட்ட முப்புரிநூலையணிந்த அழகிய மார்பத்தையுடைய பெருமானேயென்று பலவிதமாகத் தோத்திரஞ்செய்து இதனை விண்ணப்பஞ்செய்யத் தொடங்கினான்.

குமாரக்கடவுளே! நெருப்புப்பொறிபறக்கும் கோபக்கண்களையுடைய நான்கு பூதகணத்தலைவர்களும், தேவரீருடைய கொடியாகிய கோழியும், வாகனமாகிய மயிலுஞ்சென்று அன்னத்துடனும் கருடனுடனும் பெரும்போர் செய்ய அவ்வன்னமுங் கருடனும் போர்செய்வதற்குச் சக்தியில்லாமல் புறங்கொடுத்து ஆகாயத்திற் பறந்தோடிப்போ யொளிக்கவும் விடாமற் பின்றொடர்ந்து அடியேனுலகமாகிய சத்தியலோகத்தையழித்து வாகனமாகிய அன்னத்தையுங்கொன்று, அங்கு நின்றும வைகுந்தத்தையடைந்து அவ்வுலகத்தையு மழித்துக் கருடனையும எலும்புகளுடையுமபடிக்கு நன்றாகப்புடைத்து தேவலோகத்திற்சென்று அங்குமவ்வாறே அதம்பண்ணிப்போயின. எம்பெருமானே அவ்வனர்த்தத்தினா லநேகந் தேவர்களுயிரிழந்தார்கள். தப்பிப்பிழைத்தவர்களோவென்றால மகாமேருவினிடத்திற்போய்ப் பதுங்கியிருக்கின்றார்கள். அக்கொடிய விபரீதத்தை அடியேனோ வகுத்துச்சொல்லத்தக்கவன். கடப்ப மலர்மாலையைத்தரித்த கருணாநிதியே! அப்படிப் பிழைத்தோடிப்போன தேவர்களிற் சிலரிதோ இங்குவந்து பயப்பட்டிருக்கின்றார்களென்று பிரமதேவன் சொல்லிய வார்த்தைகளையெல்லாம் நமபெருமானாகிய சுப்பிரமணியக்கடவுள் செவிகொடுத்துக் கேட்டருளி அந்தப் பூதகணத்தலைவர் நால்வரையு மிங்கழைத்துக்கொண்டுவாருங்களென்று கட்டளையிட்டருள, அவ்வாறே யங்கிருந்த கணத்தலைவர்கள் சீக்கிரத்திலோடி யழைத்தமாத்திரத்தில் கொடிய செய்கையைச் செய்த சூரன்முதலானவர்கள் சுப்பிரமணியக் கடவுளினிடத்தில் வந்துசேர்ந்து நாவும வாயும் வறளவும், குறுகிய கால்கள் நடுங்கவும், நீங்காத வல்லபமொழிந்து உயிர்நடுங்கிப் பெரும்பயங்கொண்டு, கோபாக்கினியானது பொருந்திய கண்களானது பால்போல் வெளுக்கவும் வந்து தம்முடைய் இரண்டு திருவடிகளினும அடியற்ற மரம்போலவிழுந்து பணிந்தார்கள். அவர்களை யொப்பற்ற வேலாயுதமேந்திய நமபெருமான் பார்த்தருளி, ஓ பூதகணங்களே! நீங்கள் பிரமனுலகையும் விஷ்ணுவினுலகையு மழித்துவிட்டதல்லாமலும் நீங்காத பெருஞ்செல்வத்தையுடைய தேவலோகத்தையு மழித்தீர்களாகையா லினி நீங்கள் சமுத்திரஞ்சூழ்ந்த பூவுலகத்திலே போய்க் கொடிய பாவமுள்ள அசுரகுலத்திற்பிறந்து இநததேவர்களுக்குப் பலவிதமாகத் துன்பஞ்செய்யக்கடவீர்கள். அக்காரணத்தினால் முடிவில் நம்முடைய வெற்றி

வேலினுலிறந்து கதியடையக் கடவீர்களென்று குமாரக்கடவுளரிய கொடிய சாபத்தையடைந்த நான்கு பூதகணத்தலைவர்களுங் கேட்டுத் திருவடிகளில் தண்டங்களாகவிழுந்து சேவித்தெழுந்து எம்பெருமானே கொடிய பாவிகளாகிய நாங்கள் அசுரகுலத்திற்பிறந்தாலும் தேவரீரிடத்தில் நீங்காத அன்புபொருந்திய மனத்தை யெங்களுக் கனுக்கிரகஞ் செய்யவேண்டும், இதுவுமல்லாமல் வேறொரு வரமும்வேண்டுகிறோம், அதாவது நாங்கள் பிறக்குங்குலத்தில் செய்யுந்தவத்தால், வேலாயுதத்தினுலிறக்கும்போது மயிலுருவங்கொண்டு திருவடியைத் தாங்கவும், கொடியாகவு மிருக்கவேண்டிய இரண்டுவரங்களையும எங்களுக்குக் கிருபைசெய்ய வேண்டுமென்று, சூரனும், பதுமனென்பவனும், கேட்டுப் பெற்றுக்கொண்டு அந்நால்வரும மாயையின் வயிற்றில்வந்து பொருந்தினார்கள், நீங்காத வல்லமையொழித்து வருந்திய கருடனும் அன்னமும் துகளாயழிந்தொழிந்த தேவருலகமும், பன்னிரண்டு திருப்புயங்களையுடைய நம்பெருமான் திருவாக்கின் மகிமையால் பழையபடியே நிலைபெற்றிருந்தனர், மேலும் தமமைச் சரணுகதியாகச் சேர்ந்த பிரமவிஷ்ணுக்களுக்கு நம்பெருமானுகிய சுப்பிரமணியக்கடவுள் விடைகொடுத்தருளி மயில்வாகனத்தின் மேலாரோகணித்துக்கொண்டு கந்தமாதன பர்வதத்திற் கெழுந்தருளினார். எக்காலத்திலும் இளையவன் சொல்லைக்கடவாத சூரனானவன் தன்னுடைய தம்பியாகிய பதுமனுடன் மாயையின்வயிற்றில் ஒருவுருவமாகச் சூரபதுமனென்னும் பெயரொடு பிறந்தான், மற்ற இருவர்களில் சிங்கமுகனென் றொருவனும் தாருகனென்றொருவனுமாக அவ்வசுரர் குலத்தில் சூரபதுமனுக்குப் பின்பு அம்மாயையின் வயிற்றில பிறந்தார்கள். பின்பு இவர்கள் சுப்பிரமணியக்கடவுளினுடைய வெற்றிவேலினால் சுவாமிகளின் சந்நிதானத்தில் காவலாகவிருக்குங் கணநாதர்களுடன் இருவர கலந்துபோனார்கள். சூரபதுமனோ வெளியில் உயிரிழந்து, கோழிக்கொடியும், மயில்வாகனமுமாகிய பேற்றைப்பெற்றான். ஓ சவுனகாதிரிஷிகளே! இதுகாறும சொல்லிவந்தது தான் சூரன்வந்தவரலாறு. பூர்வத்தில் நடந்ததென்று சூதபுராணிகர் சொல்ல அதனை நைமிசாரணியவாசிகள் கேட்டுத்துதிசெய்து மிகுந்தசந்தோஷித்தர்களாய் விண்ணப்பஞ் செய்யத்தொடங்கினார்கள்.

எங்களைப் பிறவியென்னுங் கடலினின்றும் கடக்கச்செய்ய எழுந்தருளிய தெப்பம்போன்ற கருணையங்கடலாகிய சூதபுராணிகரே! சூரன் முதலானவர்கள் பிறந்த வரலாறித்தன்மைத்தென்று தேவரீர் திருவாய்மலர்ந்தருள நாங்கள் நன்றாகக்கேட்டுணர்ந்தோம. இனி யவர்கள் மடிந்தொழிந்தகாலத்தில் வீங்கிய இரண்டாகிய பணைத்த தனங்களையுடைய கொடியவளாகிய அசமுகியும் அவளைப்பெற்ற தாயாகிய கொடுமையைப்பயக்கின்ற வேல்போன்ற கண்களையும், கருமைநிறந்தங்கிய கூந்தலையுமுடைய மாயையுமாகிய இவர்கள் போனகதியை யடியேங்களுக்குரைத்தருளவேண்டுமென்றுசொல்ல, அதனைக் கேட்ட அருந்தவத்தின் கொழுந்துபோன்ற சூதமுனிவர், புலன்களை வெறுக்கும் புலனைப்பெற்று மேன்மையடைந்த சவுனகாதி ரிஷிகளே! அதனையும் சொல்லுகிறோம். நன்றாய்க் கவனித்துக் கேளுங்களென்று சொல்லுகிறார்.

இன்னிசையுள்ள தண்டையுமணிந்த திருவடித்தாமரைகளையுடைய சுப்பிரமணியக்கடவுளுடன் முன்னாள் போர்செய்த யுத்தகளத்தில மணமவீசுகின்ற அளகபாரத்தையுடைய மாயையானவள் தன் பௌத்திரனாகிய பானுகோபனுக்கு ஒரு இரகசியஞ்சொல்லி மறைந்துபோய்த தனமகளாகிய அசமுகியினிடத்திற் சேர்ந்து அவளைநோக்கி அம்மா மகளே! உனனுடன் பிறந்தவர்களுக்கெல்லாம் இதுவரையில் கிடைத்ததுபோல இனி வெற்றி கிடையாது. ஒப்பில்லாத சுப்பிரமணியக்கடவுளுடைய வேலாயுதத்தினால இறந்துபோவார்கள். அந்தக் காரியம் சமபவிக்கிறவரையிலும நீ இங்கே யிரு, நானோ மந்தரகிரியினிடத்திற போய்ச் சேருகிறேன. நீ யிங்கே யிருந்தால தீய நெறியையுடையவாகளிறக்கின்ற வகையெல்லா மறிவை நான மந்தரகிரியைச சேர்ந்திருந்த பின்பு ஸ்ரீசயிலத்துக்கு வருகிறேன, இந்தப்போரி லிவாகளிறப்பதை யறிந்து பின்பு இங்கே யிராமல வந்துவிடு, வருத்தப்படவேண்டாம நீ இவவிடமவிட்டு வரும போது மற்றெங்கும போகாமல ஸ்ரீசயிலத்தைககுறித்து வந்துசேரென்று சொல்லி, அந்தரவாசிகளாகிய தேவாகளெல்லாம நகைசெய்யுமபடி மாயை யானவள் அவ்விடமவிட்டு நீங்கிப்போயவிட்டாள்.

பின்பு சண்டைசெய்தற்கேதுவான அவுணாகுல முழுவதும கொடிய போர்க்களத்தில வேலாயுதத்தினால போர்செய்த லொழியுமபடி யுயிரிழந்தார்கள். பின்பு மாயை யென்பவளைபபெற்ற அசுரேந்திரனும பொனனுலகத்துத தேவாகளைச் சிறையிட்டுவைத்த சூரனபிள்ளையாகிய இரணியனும பாதாளத்திறபோய்ச சேர்ந்தார்கள். உருகிய செம்பைபபோலத தெளிந்த கண்களையுடைய அசமுகியானவ ளழுதுகொண்டு ஓடி மலையினிடத்தி லிடிவிழுவதுபோலத் தனமுலையினிடத்தில மோதியடித்துககொள்ளுவாள, மயங்கி விழுவாள், ஏங்குவாள, பிலமபோன்ற பெரியவாயைத்திறந்து அண்டமுகடு மதிருமபடி சூரன முதலானவாகளின பெயரையெடுத்துச சொல்லியழுது கூவுவாள், பின்புறத்தில யாராவது தனனைககொல்லுகிறாகளோவென்று பாாத்துக்கொண்டோடுவாள. சூலபாணியாகிய பரமசிவன கொடுத்தவரம இன்றளவுதானோ வென்று சொல்லுவாள. உலைக்களத்திற் பொருந்தியுருகு மெழுகைபபோல வுருகித தனதாயாகிய மாயை யிருககும ஸ்ரீசயிலத்தைநோக்கி யழுது செல்லுகின்றவளைககண்டு அழியாத நமமுடைய பெரியகுலமெல்லாம முடிந்ததென்று அறிந்து எதிர்சென்று மாயையானவள் பூமியிலவிழவும சோகமேலிட்டலைபப அசமுகியு மவளடியில விழுந்தாள். இவவாறு சோகத்துக்கு இருவரும் ஒருதனமையாகளா யுலகமெல்லா மதிருமபடி யொருவரையொருவர் கட்டிக்கொணடழுது ஐயோ! விணணுலகத்திலிருக்கும தேவர்கள் சூரனேவிய சொல்லைச சிரத்திலேற்றுககொணடு செய்யும உடலிளைபபு நீஙகினாகளே; கந்தருவர், யக்ஷர், சித்தர், வித்தியாதரரென்னு மிவாகள் தீராத்துக்கந்தீர்ந்தாாகளே, இந்திராணியானவள் தன்மாரபினைததொட்டு மாங்கிலியத்தைத்தடவிப்பாாத்து நகைத்து முனனிருந்த துயரம நீங்கினளே, இந்திரனமுதலாகிய தேவாகள் நாள்தோறு மீன்சுமந்து நடந்துவந்ததினா லுண்டாயிருந்த கால்தழும்பும, சூரனமுதலானவாகளின் பாதங்களை வருடினதினா

லுண்டாயிருந்த கைத்தழும்புமின்று தீர்ந்தார்களே, பரமசிவனிடத்தில் வரம் பெற்றுக்கொண்டு ஒப்பில்லாத வெண்குடைநிழல் எங்கும் பரவச்செய்த போது நீக்கிப் பலவண்டங்களையும் புவனங்களையும் இனிதாக ஆண்டுகொண்டிருந்த அசுரர்குலம் போர்க்களத்தில் மாண்டுபோனதினுலினிக் கற்பகவிருட்சத்தை யிழந்துவிட்ட இந்திரனுக்காக யுத்தகளத்தி லுன்னுடன் போர்செய்து புறந்தந்து போரை யிழந்துபோன அரசர்களினி முகமலர்ந்து தங்கள் தங்களரசினைச் செய்வார்களே? சிங்கமுகாசுர னெடுத்துச்சொல்லிய ஆலோசனையைக்கேளாமல், ஆயிரத்தெட்டண்டங்களில் செலுத்திய செங்கோலைத்தீயிற் போட்டுவிட்டனையே, பரமேசுவரன் அருளிச்செய்த பெரிய வரங்களையும் மிகுந்த பராக்கிரமத்தையு மிழந்துவிட்டாயே, உங்களைப்போலச் சகோதரர்களிரண்டுடலுக்கும் ஒருயிராய்ப்பிறப்பவர்களுண்டோ? ஆ! கெட்டேன், பரந்த கற்பகவிருட்சத்தி னிழலிலிருக்குந் தேவேந்திரனுடைய அரசினை யபகரித்துக் கொண்ட வுக்கிரமாகிய வேலாயுதத்தையுடைய சூரனே! எக்காலத்துமொழியாத பெருஞ்செல்வங்களும், திரிமூர்த்திகளுக்குஞ்சலியாத பராக்கிரமமும், எந்நாளு மழியாவண்ணம பெற்றவரங்களும, அழித்தனையே; இதுவுமல்லாம லுன்னுடைய சவுந்தரியமு மழிந்துபோய்விட்டதே; சுழிகளையுடைய கங்காநதியைச் சடையிலொளித்தருளிய பரமசிவனுடைய புத்திரன் இந்தச் சுப்பிரமணியனென்று சொன்னசொலலைக் கேளாமற்போயினையே, நீ யிறந்தபின்பும் பழியுள்ள இந்தவுயிரைச் சுமந்துகொண்டிருக்கிறேன் உன்னுடன் பிறந்ததன்மைமிகவும் நன்றாயிருக்கின்றதென்று இவ்வாறழுகின்ற அசமுகியினுடைய இரண்டு கண்களிலுமிருந்து குமிழியிட்டுக்கொண்டொழுகுகின்ற நீரைத் தன்னிரண்டு கைகளாலுந் துடைத்து நீ மனமயக்கத்தை யொழியென்று மாயையானவள் தன்மகளருகிருந்து சோகத்தைத் தீர்ப்பவளாய் மகளே! உன் பெரிய தமையன், சுப்பிரமணியக்கடவுளுக்கு வாகனமாகிய மயிலும், கொடியாகிய சேவலுமாய் பெறுதற்கரிய பெருமபேற்றை யினிதுபெற்று விளங்கினன். அன்னவாகனத்தி லேறிச்செலுத்தும பிரமதேவனும, மகாவிஷ்ணுவும், தொழுமபடியான பேற்றை முனசெய்த தவத்தினால் பெற்றுக்கொண்டான். இனி இதற்குமேலான பதவியுணடோ? சுப்பிரமணியனுடைய அழகிய திருவடிகளில் பொருந்துந் துகள்படுமபடியாகப்பெற்றான். அம்தேந்தத்தவமோவென்று வணடுகளிசைபாடிக்கொணடிருக்கின்ற பூங்கொத்துகளை யணிந்த அளகபாரத்தையுடைய தாயாகிய மாயையானவள் அவள் முகத்தைப்பார்த்துச் சொல்லினள், இவ்வாறு தன் தாய் சொன்னதின்மேல் சேற்கண்டைபோலுங் கண்களையுடைய அசமுகியானவள் தான் கொண்டிருந்த மனத்துயரம் சிறிது நீங்கிச் சொல்லத்தொடங்கினள்.

என்னை யருமையாகப் பெற்றெடுத்த தாயாகிய மாயையே! என் தமையனாகிய சூரபதுமனானவன் பகைவருதிரந் தோயும்படியான புகர்முகத்தையுடைய வேலாயுதத்தினால் தன்பலமிழந்து ஜயம்பொருந்திய மயிலுஞ் சேவலுமாயினனென்று சொல்லினை; பின்பு தாருகாசுரனும், சிங்கமுகாசுரனும் போனதிசை தெரிந்திலேன், அவர்கள் சூலாயுதமேந்திய நமனுடைய

பாசத்தி லகப்பட்டுக்கொண்டார்களோ? அதனையும் எனக்குத் தெரியச் சொல்லவேண்டுமென்று கேட்க, மாயையானவள் அந்தச் சரித்திரமுழுவது மென்னறிந்து ணர்ந்து சொல்லுகிறேன் தெரிந்துகொள்ளென்று அவர்கள் ஸ்ரீகைலாயத்திலிருக்கும கணங்களோடும் வாழ்கின்றார்களென்று சொல்லினள். அதைக்கேட்ட அசமுகியானவள் தீமைகளேயே செய்துகொண்டிருந்தவர்கள் பெறுதற்கரிய பேறுபெற்ற தென்னகாரணமோ? அதனையுஞ் சொல்லவேண்டுமென்ன, இவளைப்பெற்ற தாயாகிய மாயையானவள் தன்மகளாகிய அசமுகிக்குத் தானறிந்த முறைகளைச் சொல்லுகின்றாள். சென்ற நெடுங்காலத்துக்கு முன்னே ஒலிக்கின்ற சமுத்திரங்களின் மத்தியிலிராகின்ற வைத் தீவுகளில்சாகத்தீவென்றொரு தீவுண்டு. அதில அழியாத செங்கோல்செலுத்தி யொருகுடைநிழலி லுயிர்களைக்காத்த அரசாக்கரசன், பொன்னாலசெய்யப்பட்டு விளங்குகின்ற வீரகண்டைபைத்தரித்த பாதங்களையுடைய பிரபாகரனென்றொரு மன்னவனிருந்தான். அவ்வரசனுக்கு உயிரையொத்தவளாகிய மனைவியொருத்தியிருந்தாள், அவள் இலவாழ்க்கைக்குப பழுதுவாராமல் பாதுகாப்பவள், மணிவடமாகிய மேகலாபரணந் தரித்துக்கொண்டிருக்கும் சுகுமாரியென்னும் பெயர்பூண்டவள். மிகுந்தசவுந்தரியமுடையவள். சப்திக்கின்ற வீரகண்டையைத்தரித்தகாலினையுடைய அரசனாகிய தன்கணவன்சொல்லுமுறைக்கு மாறுபடாதவள், மேலும அருந்ததியைப்போலும பதிவிரதைத் தன்மையிலிருக்கும்படி சிந்தித்துக்கொண்டிருக்கும அறிவினை யுடையவள் இத்தன்மையினையுடைய அரசனும் மனைவியுமாகிய இவர்கள் அளவிறந்த நெடுங்கால மரசுசெய்துகொண்டிருக்க இவ்விருவர்களுஞ்செய்த தபோபலத்தினு லினிதாகச் சந்தோஷித்தெடுக்கவும, உச்சிமோந்து முத்தமிடவும், மதுரமான குதலைச்சொலலையுடைய நான்கு புத்திரர்கள் பிறந்தார்கள். இந்தப் புத்திரர்களுக்குச் செங்கோலசெலுத்து மவ்வரசனானவன், சூரனென்றும் பதுமனென்று மிருவர்க்குப்பெயர்கூறி, மற்றை இருவருக்கும், வீரகண்டையைத்தரித்த சிங்கனென்றும், தாருகனென்றும், தன்குலத்தில்வந்த முன்னோர்கள்பெயரைத்தான்பெற்றெடுத்த பிள்ளைகளுக்குமவைத்துபபின்புபொன்னலாகியவீரகண்டையையணிந்த இவர்களுக்குள் முனபிறநத சூரனுக்குத் தன்னரசாட்சியைக் கொடுத்துச் சிங்காதனத்திலிருத்தித் தான் அரியதவஞ்செய்ய வனத்திற்குச்சென்றான். அதன்பின்பு சூரனானவன் ஒருகுடைநிழலி லுலகத்தைக்காத்து உலகங்களுக்கெல்லாம் நன்மையைத்தந்து தருமம்வழுவாமல் செங்கோல்செலுத்தி யிவ்வுலகத்தை யினிதாகக்காக்குநாளில், தென்னாட்டிலிருக்கும் அகஸ்தியமுனிவர், கமண்டலமேந்திய கையினையுடையவரும் விரும்புகின்ற சிறிய குடையினையுடையவருமாய், சதுர்வேதங்களுமோர் தவவடிவங்கொண்டு வந்ததைப்போலத் தன்னிடத்திலவருவதை இராசநீதியுடனுயிர்களைப்பாதுகாக்குஞ் சூரனறிந்து, எதிர்சென்றுபணிந்து அரியதவமே, அருந்தவத்தோர்க்குங் கிடைப்பதற்கரிய அமுதமே, வேதமே, தங்கள் கிருபைக்குரியவர்களாகிய நாங்கள்பெற்ற செல்வமே, பூரணஞானமுள்ள சாஸ்திரக்கடலே, தேவரீரெழுந்தருளப் பாக்கியமதுபெற்றேன், தேவரீர் திருவடிகளைச்

சமுத்திரத்தின் மத்தியிலிருக்கு மிந்தத்தீவுந் தீண்டும்படிப் பூர்வத்திலென்ன தவஞ்செய்ததோ, என்றிவ்வித வுபசாரவார்த்தைகளைச் சொல்லித் தமிழ் வளம்பொருந்திய பொதியமலையிலெழுந்தருளியிருக்கும், அகஸ்தியமுனிவனைத் தன்கோயிலுக் கழைத்துக்கொண்டுபோய், நவரத்தினகசிதமாகிய சிங்காதனத்தி லெழுந்தருளப்பண்ணித் துதித்துச்செய்யவேண்டிய வுபசாரங்களையெல்லாம் தன் தமபியருடன்செய்யத தமிழுக்கிறைவராகிய அகஸ்தியமுனிவர் தம்முடைய திருவுள்ளத்தி லதிக சந்தோஷவெள்ளமதிகப்பட அவர்களை மகிழ்ந்து நோக்கி நமக்குச் சமீபத்திலிருங்கோளென்று சொல்ல, அவர்களு மவ்வாறே தொழுதிருந்தபோது அவர்களுக்குச் சொலலத் தொடங்கினா.

பரிசுத்தமபொருந்திய வெண்கொற்றக் குடைநீழலி லிவ்வுலகத்தை நல்லவுள்ளத்தோடு பரிபாலித்துவரும் குற்றமற்ற சத்துவகுணமுடையவர்களே! உங்களைக் காணவேணடுமென்கிற விருப்பத்துட னிங்குவந்தோமாகிலும நாமுங்களுக்குச் சொலலவேணடியதாகிய பொருளொன்றிருக்கின்றது. அதனைச்சொல்லுகிறோம் கேளுங்கள. அந்தபபொருளை அறிவினால் சித்தசுத்திமுடையவாகளுக் கறிவிக்கலாமேயனறி யறிவிலசிறியவர்களாயிருப்பவர்களுள்ளத்திலெழுதிவைக்கத்தக்கதலல. இன்னு மதனபெருமையைச்சொல்லுமிடத்தில மாட்சிமைபொருநதிய மாநிரங்களிலு முபநிடதத்துச்சியிலுமிருப்பது. மேலும் அந்தப்பொருளை யாவராலு மறிவிக்கபபடாது. கண்களால் காணப்படுகின்ற யாவர் கணபார்வைக்குமெட்டாமல மனதினாற்காண்பதும், எண்ணுகின்ற புலன்களும ஆகாயவெளிபோற் காண்பதும, மேலென்று சொல்லப்பட்ட மேலானபொருள்க ளெவைக்கு மேலானதாகக்காணப்படுவது மந்தப்பொருளேயன்றி வேறொருபொரு ளிருக்கிறதென்றியாவர் சொல்வார்கள். அப்பொருளே சுப்பிரமணியக்கடவுள், அவர் ஆறுதிருமுகங்களுள்ளவர், தீவினைகளையெல்லாம பொருதுவென்றுள்ள பன்னிரண்டு புயங்களையுடையவர், விடியற்காலத்துதிக்கும் ஆயிரஞ்சூரியர்களைப்போல விளங்குவதாய்ப் பகைவருதிரந்தோயுமபடியான வெற்றிவேலாயுதமொன்றினைத் தமது திருக்கரத்தில் வைத்துககொணடிருப்பவா, தெய்வத்தன்மை பொருநதிய வொருமயிலானது அவருடைய திருவடியைத்தாங்கும், அந்தமயிலின் பெருமையையாவராளவிட்டுரைக்கத்தக்கவாகள், இதுவுமலலாமல உலகத்தையெல்லாங்கொறித்துவிடத்தக்க கோழிக்கொடியுமொனறுடையவா, அந்தக்கோழியின்வல்லபத்தையாவர் சொல்லத்தககவர்கள். அபபடிப்பட்ட சுப்பிரமணியக்கடவுளுடையதிருவடித்தாமரையிற்படிந்ததுகளை யொப்பில்லாத பரமசிவனுடைய புஜங்களும், பார்வதிதேவியாருடைய திருத்தனபாரமும சிறிதுகாலம பொருந்திவாழ்ந்தன. பெருமைபொருந்திய மயில்வாகனமும் அந்தத்திருவடியை யிடைவிடாமல் தாங்கிக் கொணடிருந்ததென்றால் அதன்பெருமையை யாதென்றுசொல்வோம். இன்னமும் சிருஷ்டி, திதி, சங்காரமென்று முத்தொழில்களைமுறையே நடத்துகின்றவர்களாகிய பிரமன், விஷ்ணு, உருத்திரனென்னு மூவர்களுக்கும், மற்ற தேவர்களுக்கும், ஐமபுலநுகர்ச்சியையொழித்த முனிவர்களுக்கும், நீங்காத வெண்குணமுடைய அருட்கடலாகிய சுப்பிரமணியக்கடவுளைத் தங்கள் தங்க

ளுள்ளத்திலமைத்தாலல்லது ஒருகாரியமுமுடியாது. இப்போது நாம்சொல்லியவைகளை உங்களுள்ளத்தில் வைத்துக்கொண்டு நம்மிறைவனாகிய சிவசுப்பிரமணியக் கடவுளுடைய திருவடித் தாமரைமலர்களை நாள்தோறுந் துதிசெய்யுங்களென்று மிகுந்த தவசிரேஷ்டராகிய அகஸ்தியமுனிவர் சந்தோஷத்துடன்சொல்லி யாசீர்வதித்து அந்தச் சாகத்தீவினைவிட்டுப் புறப்பட்டு அப்பால் போய்விட்டனர்.

இவ்வாறு அகஸ்தியமுனிவர் தங்களைவிட்டு நீங்கிப்போன பின்பு சூரன், பதுமன் என்னு மவ்விருவரும், நம்பெருமானுக்கு மயில்வாகனமும், சேவற்கொடியும் ஆகவேண்டுமென்று தங்கள் மனத்திலெண்ணங் கொண்டார்கள். இதுநிற்க ; பிரணவிந்துவென்னு மொருமுனிவர் சமுத்திரஞ்சூழ்ந்த சாகத்தீவிலிருக்கு மவர்களுக் கெதிரிற்செல்ல அதையறிந்த சிங்கமுகன், தாருகனென்னு மிருவர்களு மெதிர்கொண்டு வணங்கியுருகிய சிந்தையுடையவர்களாய்த் தங்கள் கண்களினின்றுமானந்தபாஷ்பம் பொழியும்படியாகச் சேவித்து நிறைந்த மகிழ்ச்சியானது மேன்மேலும் பெருகத் தங்களரண்மனைக் கழைத்துக்கொண்டுபோய் நவரத்தினங்கள் பதிந்த சிங்காதனத்தி லெழுந்தருளச்செய்து செய்யவேண்டிய வுபசாரங்களை யெல்லாஞ்செய்து ஐயரே ! தேவரீருடைய திருவடிகளையின்று வணங்கும்படி நாங்கள் முன்செய்த தவம்யாதோ, உலகங்களையெல்லாம் காத்திருந்தோமானாலும், மறுபிறப்பைத் தருவதாகிய தீவினை இன்று தானொழிந்தோமென்று சொல்லிச் சந்தோஷித்தார்கள். அவர்களவ்வாறு சொன்னபோது பிரணவிந்து முனிவர் அந்த வாசரிருவர்களுக்கு மாசீர்வாதஞ்செய்து கைபமைத்து ஒருகுடைநிழலினாலுலகத் துயிர்களுக்கெல்லாமின்பஞ்செய்ததன்றி மனுவிக்கியாநேஸ்வர சாஸ்திரமுறைமைப்படித் தருமநெறியையும் விருத்திசெய்தீர்கள், உங்களுக்கு நாம் சொல்லுவதொன்றிருக்கின்றது அதனையுங்கள் கருத்தில் நன்றாகத்தெரிந்துகொள்ளுங்கள். அதாவது இவ்வுலகத்துயிர்களை யிரட்சிக்கும்படி அரியரர்களுக்கு ஒருபுத்திரன் தோன்றினன். அவனே சந்திரனைத்தரித்த சடாமகுடத்தையுடைய பரமசிவனையும், மணம்பொருந்திய துளபமாலையைத்தரித்த மகாவிஷ்ணுவையும் நீக்கியுயிர்களை ரட்சிக்கத்தக்கவன். அக்கடவுளேறிச் செலுத்துகின்ற மதம்பொருந்திய பெரிய யானையானது உலகமுழுமையு மழிந்துபோம்படி யொலித்து அண்டத்தையு மேல்கீழாகப்புரட்டிச் சப்த சமுத்திரங்களு மொன்றாக வூழிவெள்ளம் பெருகிவரும்போ தெதிர்சென்று தன்றுதிக்கையினா லங்நீரையெல்லா முறிந்துயிர்களைக்காக்கும், இதுவல்லாமலின்னமு மோரிரகசியப் பொருளிருக்கின்றது. அஃதென்னவெனில், மரகதமலையைப்போலு முருவத்தையுடையவள், சூலாயுதத்தைத் தாங்கிக்கொண்டு, மகமேருவையு முலகத்தையுங்காப்பவள், கேடயமும், வாளும் கையிலேந்திக்கொண்டு உயிர்கள் தோறு மறைந்திருந்தொருமுறைகாப்பவள் கங்காநதியைத்தரித்த திருமுடியினையுடைய பரமசிவத்துடன் நிருத்தஞ்செய்தவள், மேன்மையைக் குறிக்குமிடத்துப் பெரியோர்களா யிருப்பவர்களவளையன்றி வேறொருவரையுஞ் சொல்லார்கள். அத்தன்மையுள்ளகாளிகாதேவியின் திருவடிகளைத்தாங்கும்வாகனமாகிய சிங்கத்துக்கு

நான்குபாதங்களாயிருக்கும்படி நான்குவேதங்களுந் தவஞ்செய்து பெற்றுக் கொண்டன. அந்த நான்கு பாதங்களிடத்துங் கூர்மையுள்ள நகங்களாயிருக் கும்படி சந்திரன் தவஞ்செய்து பெற்றது. அச்சிங்கமோ, ஊழிகாலத்தில் வடவாமுகாக்கினி கொதித்துவந்தாலு மெதிர்சென்றதனையும் வாயில்போட் டுக்கொள்ளும் ஓ, அரசர்களே! உங்களுக்கு வேண்டியகதியாவது இந்தவாக னம் தேவர்களுக்கு முறைமைப்படி பூசனைசெய்து போர்முகத்தில் பகையை வென்று பின்பு இந்தப் புன்பிறப்பைத் தீர்த்துக்கொள்வதாகும்; இவ்வாறு போதிக்குங் கடமை எமக்குவேண்டியதென்று சொல்லித் திரண விந்து முனிவரெழுந்தருளிப் போயினர். பின்பு அந்நால்வரும் யோசித்து புதல் வர்களிடத்தில் பூமிபாரத்தைக் கொடுத்துவிட்டுத் தவஞ்செய்யக் கருதி மனை வாழ்க்கையை நீங்கிப்போய் மயில் சேவல் சிங்கம் யானை இவைகளைத் தனித் தனி ஒவ்வொருவரும் தியானித்துக்கொண்டு அவைகளின் பதவியைப் பெற் றுக்கொள்ள நினைந்து மேகங்கள் தவழுகின்ற ஸ்ரீசயிலவனத்தில் பஞ்சாக்கினி மத்தியினின்று சூரியகிரணம் மழை பனித்துளி நஞ்சு இவைகளெதிர்ந்தாலும் அந்நிலையினிற்பதல்லது கொஞ்சமு மஞ்சாதவர்களாய்த் தவஞ்செய்துகொண் டிருந்தார்கள்.

இவ்விதமாகத் தவஞ்செய்து கொண்டிருக்கும்போது பிரமவிஷ்ணு முத லாகிய தேவர்களொன்றாகக்கூடிச் சென்றதுமல்லாமல் சுப்பிரமணியக்கடவுள் மகாகாளி, அரிகர புத்திரன்! இவர்களும் ஸ்ரீகயிலாசத்தில் பரமசிவன் செய்தருளுகின்ற திருநடனத்தைத் தரிசிக்கும்படியே தங்கள் தங்கள் வாக னங்களை அந்தக் கயிலையங்கிரிச்சாரலில்விட்டு நீங்கிச்சென்றார்கள். அப்போது அச்சாரலிலிருந்த கருடனும், அன்னமும் எதிரிற்கண்ட கலாபத்தையுடைய மயிலினிடத்திற்போய்ச் சொல்லுகின்றன. சாகத்தீவிலிருக்கு மரசர்கள் நால்வருங்கூடி மயிலுஞ்சேவலும், காளிவாகனமாகிய சிங்கமும், சாத்தன்வாக னமாகிய யானையுமாக வேண்டுமென்று பஞ்சாக்கினி மத்தியினின்று நாற்பதி னாயிரம் வருடமாகத் தவஞ்செய்கின்றார்கள். அருமையாகப் பெற்றிருக்கு முங்கள் பதவிகளை யிழக்குங்காலம் நேரிட்டன. இன்றோ நாளையோ உங்கள் பதத்திற்குவருவார்கள், அஞ்சத்தக்கதாகிய வெள்ளம்வருவதற்கு முன்னமே யன்றோ, அணைகட்டவேண்டும், ஆகையினால் நீங்கள் சாக்கிரதையாயிருங்க ளென்று சொல்லிக் கருடனுமன்னமும் போய்விட்டது. உடனே மயில்முத லாகிய வாகனங்களொன்றாகச்சேர்ந்து பெருங்கோபங்கொண்டு ஒருநாழிகைக் குள்ளாக அவர்கள் தவஞ்செய்யுமிடத்திற்சென்று நெருப்புப்பொறி சிந்தும்படி யாக அவ்வனத்தை யெல்லாமழித்துத் தவஞ்செய்கின்றவர்களைக் கண்டு நீங்கள் பஞ்சாக்கினிமத்தியில் தவஞ்செய்யுங் காரணமென்னவென்றதட்ட, அச்சொற்கள தவஞ்செய்கின்றவர்கள் காதில்நுழையவும் மிகுந்த ஏக்கங்கொ ண்டு மனம்நடுங்கித் தாங்கள் தியானித்துக்கொண்டிருக்கு முறைமையைச் சொல்ல, அதைக்கேட்ட மயில்முதலாகியநான்கும், மிகுந்த தவஞ்செய்கின்ற அரசர்களை நோக்கிக்கோபித்து நீங்கள் நால்வருமெங்கள் பதவிகளை விரும்பி னீர்களாகையால், பெரிய பூதகணங்களுடன் சேர்ந்திருக்கக் கடவீர்களென்று

சாபங்கூறி மயில்முதலாகிய நான்குந்திரும்பிவந்து கைலையினிடத்திருக்க; பூதகணங்களாயிருக்கிற அரசர்கள் நால்வரும் அக்கயிலையிலிருக்கு மயில்முதலானவைகளைக்கண்டு வணங்கி அடியேங்கள் விரும்பியதவம் எங்களுக்குக் கிடைக்குமாவென்றிரக்க, அதனைக்கேட்ட மயில்முதலாகிய நான்கு மனமிரங்கி நீங்களிந்தக் கயிலையிலிருக்குங் கணங்களுட னநேகநாளிருந்தால் நீங்கள் கருதிய தவப்பயனை யடைவீர்களென்று சொல்ல, உடனே அந்தக்கணங்கள் கைலையங்கிரியிற் சேர்ந்திருந்து பின்பு கருடனும், அன்னமும் நம்முடைய தவத்தையிழக்கும்படி செய்தனவென்னும் பகையைத் தங்கள் சிந்தையில் வைத்துக்கொண்டு மிகுந்த கோபாவேசமாய் மயிலுங் கருடனும் போர்செய்ய மூட்டிவிட்டார்கள்.

இதுநிற்க; பரமசிவன் செய்தருளுகின்ற திருநடனஞ்செய்யப்போயிருந்த விஷ்ணுமுதலானவர்க ளப்பொழுது தங்கள் தங்கள் பதவிகளிற்போய்ச்சேர்ந்தார்கள். அதன்பின்பு அந்த நான்குகணத்தலைவர்களும் ஊழ்வினைத்தொடர்பினால் சுப்பிரமணியக்கடவுள் கட்டளையின்படி சமுத்திரஞ்சூழ்ந்த வுலகத்தில் அசுரர்குலத்திற் பிறந்தார்களென்று மாயையானவள் தன்மகளாகிய அசமுகிக்குச்சொல்ல, அதனைக்கேட்ட அசமுகியானவள், அந்தக்காரணத்தி லசுரர்களாகப் பிறந்தார்களானால் தேவர்களுக்குத் தீங்குசெய்து வருத்திய காரணம் யாதோ அதனையுஞ் சொல்லென்ன மாயையானவள் மீட்டுஞ் சொல்லத் தொடங்கினாள்.

கேளாய் மகளே அசமுகி!, பூர்வத்தில் ஸ்ரீகயிலாயத்திலிருக்கும் பூதகணங்களுடன் இந்நால்வருங் கணங்களாயிருந்தபோது கடோரமாகிய கொடிய கோபத்தையுடைய அசுரரும், தேவரும் போர்க்களத்தில் யுத்தஞ்செய்தபோது அந்தயுத்தத்தில் அசுரர்களுக்குத் தேவர்கள்தோற்றோடிப்போனார்கள். அவ்வாறு தோற்றோடிய தேவர்கள் எங்களைக்காக்கவேண்டுமென்று இவர்களைச் சரணாகதியாக வந்தடைய, அந்நாளில் தேவர்களுக்கு உதவிசெய்ய வேண்டி இந்நிலவுலகத்தில்வந்து இங்கு இருக்கும் பூதர்களுடன்சேர்ந்துபெரும் போர் செய்யச்சென்று கோபித்தெழுகின்ற அசுரர் சேனையைக்கொன்று தேவர்களுக்குப் பேருதவிசெய்து இந்திரனை தேவலோகத்தில் குடியிருத்தினவர்களாய்ப் பின்பு சிறப்புப்பொருந்திய திருக்கயிலைக்குச்சென்றார்கள். அதற்குமேல் கலவைச்சாந்தணிந்த வலிய புயங்களையுடைய அசுரேந்திரனானவன் மனவருத்தத்துடன் தனித்துவந்து வேண்டியவர்களுக்கு வேண்டியபடியே கிருபைசெய்தருளும் சர்வலோகநாயகனாகிய பரமசிவனைத் துதித்து எம்மையனே! எங்கள் குறையொன்றிருக்கின்றது, அதனைக் கேட்டருளவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்யத்தொடங்கினான். ஓ கிருபைக்கடலே! சுவாமிகளுடைய ஆக்கினையினால் விளங்குகின்ற நாலு பூதர்களும், அடியேனுடைய அசுரசேனைகளைக்கொன்று பின்பு இங்குவந்து சேர்ந்தார்கள் என்று சொல்ல; அதனைக்கேட்டருளிய பரமசிவன் அந்தக்குற்றத்தைத் திருவுளத்தில்கொண்டு மிகுந்த கோபங்கொண்டவராய் அவர்களைப்பார்த்து, ஓ பூதகணங்களே!

இங்கு வாருங்கள்; நீங்கள் நால்வரும் நம்முடைய ஆக்கினையை மதிக்காமல் நீங்கித் தேவர்களுக்கு உதவிசெய்து அசுரர்களைக்கொன்றீர்களாதலால் வாளாயுதத்தைப்போலுங் கொடிய தந்தபந்திகளையுடைய அசுரர் குலத்திற்பிறந்து கற்பகவிருட்சங்களையுடைய பொன்னாட்டிலிருக்குந் தேவர்களுக்குத் துன்பஞ்செய்து விசாலமாகிய பூலோகத்தில் சஞ்சரிக்கக்கடவீர்களென்று சாபமிட்டருள, இவர்கள் பரமசிவனுடைய சாபத்தினால் தேவர்களுக்குக் கொடிய கோபத்துடன் மிகுந்த துன்பத்தைச்செய்தார்கள். அவ்வாறவர்களந்நாள் முதல் செய்ததுன்ப மிப்போது நீங்கிவிட்டன. இத்தன்மையனவாக விங்கே நடந்தன.

இதற்கு முன்னாளில் தவஞ்செய்த சாகத்தீவு அரசர்களைத் தவத்தினி னின்று மழித்ததை யொளிபொருந்திய வீரக்கழலையுடைய சுப்பிரமணியக் கடவுள்பார்த்து மிகுந்த கோபங்கொண்டு தமது கொடியாகிய சேவலையும், மேகம்போலும் நீண்டகலாபத்தையுடைய மயிலையும்பார்த்து நீங்கள் போய்க் கோபித்து முடிவில்லாத தவமுயற்சியை யொழித்தீர்கள், அதனால் கொடிய பாவத்தை யடைந்தீர்களென்று திருவுளத்திற் கோபங்கொண்டருளித் தமது மயிலையுஞ் சேவலையும்பார்த்து இனி நீங்கள் நம்மைதாங்கவும் கொடியாயிருப்பதும் வேண்டியதில்லையென்று இவ்விரண்டினையுங் குறித்துச்சொன்னவார்த்தையைக்கேட்டவளவில், சேவலும், மயிலும்வெற்றிபொருந்திய வேலாயுதத்தையுடையசுப்பிரமணியக்கடவுளைப்பணிந்துஇந்தவிதமாக விண்ணப்பஞ்செய்கின்றன எம்பெருமானே! இன்றுவரையிலும் சுவாமிகளுடைய திருவடிகளுக்குத் திருத்தொண்டு செய்துகொண்டிருந்தோம் இனி எந்நாள் தேவரீருடைய திருவடிகளைச் சேர்வதென்று மனத்திலறியோம்; வெற்றிபொருந்திய வேலாயுதத்தைத்தாங்கிய குமாரக்கடவுளே! தீனர்களாகிய அடியேங்களினிச்செய்ய வேண்டுவது யாதோ அதனைத்திருவுளம் பற்றவேண்டுமென்று வணங்கிநிற்க, சுப்பிரமணியக்கடவு ளவர்களைப்பார்த்து நீங்கள் ஸ்ரீகாஞ்சிபுரத்திற்சென்று அங்கிருக்கு மலையின் மீதிருந்து நம்மைத்தியானித்துக்கொண்டு தவஞ்செய்யுங்கள், அவ்வாறுசெய்தால் தஞ்சமாக நம்முடைய திருவடியைத் தருகின்றோமென்று அருள்செய்ய, அவ்வாறே யவ்விரண்டுஞ்சென்று சுப்பிரமணியக்கடவுளுடைய அழகிய சிலம்பணிந்த திருவடிகளைத் தியானித்துக்கொண்டிருந்து அவர்திருவடிகளைச்சேர்ந்தன. இதுநிற்க; சூரனும், பதுமனுஞ்செய்ததவத்தினால் மயிலுஞ் சேவலுமாயினார்கள். கொலைத்தொழிலையுடைய சிங்கமுகனும், அவனுக்குத் தம்பியாகிய தாருகனும் தாங்கள் நினைத்தகாரியத்தை முடிப்பதற்கெண்ணினவர்களாய், ஸ்ரீகயிலையங்கிரியிலிருக்கும் திருநந்திதேவரிடத்திற் சேர்ந்து எம்பெருமானே! தேவரீருடைய திருவடித்தாமரைகளையடைந்த நாங்கள், காளிகாதேவியின் வாகனமாகியசிங்கமாகவும், சாத்தாவின் வாகனமாகிய வெள்ளையானையாகவு மிருக்கவேண்டுமென்று அநேககாலம் அருமையாகிய தவத்தைச்செய்து கொண்டிருந்தோம். தீனர்களாகிய நாங்கள் செய்ததவமானது அப்பிரயோசனமாகாவண்ணம் கிருபைசெய்து அந்தவரத்தை அடியேங்களுக்கு அருள்செய்ய வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, அதனைக்

கேட்ட அருளாளராகிய திருநந்திதேவர் மிகுந்த சந்தோஷசித்தராய் அவ்விருவர் முகங்களைப்பார்த்து ஓ, தவசிகளே! அந்தக்காளிகாதேவிக்கும் சாத்தாவுக்கு மிப்போதிருக்கின்ற வாகனங்களுக்கு மோக்ஷங்கொடுக்குமளவும் நீங்கள் நம்மிடத்திலேயே யிருங்களென்றுசொல்ல, அந்த வார்த்தையைக்கேட்ட அவ்விருவரும் மனமொருமித்து மகிழ்ந்திருந்தார்களென்று மாயையானவள் சொல்ல, அதைக்கேட்ட அசமுகியானவள் தன்தாயைப்பார்த்து அந்தவாகனங்கள் திருநந்திதேவரால் மோக்ஷமடைந்தவகையைச் சொல்லவேண்டுமென்ன, தாயாகிய மாயையானவள் சொல்லத்தொடங்கினாள்.

ஸ்ரீகயிலையங்கிரியினுச்சியில் எழுந்தருளியிருக்கும்பரமசிவன் முன்னொருகாலத்தில் தமதுதேவியாராகிய உமாதேவியாரிடத்திலிருக்கும் துர்க்கையையும், துளபமாலையைத்தரித்த மகாவிஷ்ணுவினிடத்திலிருக்கும் சாத்தனையும் வரவழைக்கவே, அவ்விருவர்களும் சிவபெருமான் திருவடிகளைத் துதித்து எம்பெருமானே! அடியேங்களுக்குச் சிறந்தவாகனங்களைத் தந்தருளவேண்டுமென்றுபிரார்த்திக்க பரமசிவன் திருநந்திதேவரையழைப்பித்து நீயிவர்களுக்கு வாகனங்களைக் கொடுப்பாயாக வென்றருளிச்செய்ய, உடனே திருநந்திதேவர் அக்கயிலாயகிரிச்சாரலில இடைவிடாமல சஞ்சரித்துக்கொண்டிருந்த ஒருசிங்கத்தையும், மதம்பொருந்திய ஒருயானையையும், இவர்களுக்கு வாகனமாகக் கொடுத்தவளவில் அவ்விரண்டும் மிகுந்த துன்பங்கொண்டு எம்பெருமானே! நாங்களிந்தக்கயிலையிலிருந்து தேவரீருடைய திருவடியையடைய அருமையாகிய தவத்தைச்செய்தோம், அப்படியிருக்க மத்தியிலிவ்வாறு நேரிட்டகாரணம் யாதென்றுகேட்க, அதற்குத் திருநந்திதேவர் அவைகளை நெடுங்காலம் நீங்களிவர்களுக்கு வாகனமாய்ச் சஞ்சரித்துக்கொண்டிருந்தால் காலஞ்சென்றபின் உங்களுக்குக்கதிகொடுக்கிறோம, நீங்கள் போங்களென்றுசொன்னபின்பு; துர்க்கைக்கும், சாத்தாவுக்குமவைகள் வாகனங்களாயிருந்து அதன்பின்பு திருநந்திதேவரால் மோக்ஷமடைந்தன. அப்பால துர்க்கையுஞ் சாத்தாவும் திருநந்திதேவரிடத்தில் வந்து நாங்களிப்போது வாகனமில்லாதவர்களாயிருக்கிறோமென்று சொல்ல, அதனைக்கேட்ட திருநந்திதேவர் தம்முடைய திருவுள்ளத்திலாலோசித்து இந்த இருவரையுமவர்களுக்கு வாகனமாகக் கொடுத்தருளினாரென்று மாயையானவள் தன்மகளாகிய அசமுகிக்குச் சொன்னதாகச் சூதபுராணிகர் நைமிசாரணியமுனிவர்களுக்குச் சொல்லியருளினார்.

சூராதிகளொடுக்கப்படலம்
முற்றிற்று.

அசமுகிவரலாற்றுப்படலம்.

ஈதுகேட்டுநின்றசமுகிபின்னருமினிநீ
தாதுவார்குழலன்னையென்னிலைசொலத்தகுமென்
றோதவோதுவன்கேண்மதியென்றனளூனைப்பாள்
சேதவார்பெருங்கடலகத்துளதொருதீவு.

பதினெண்புராணங்களையுங் குற்றமறத்தெளிந்துணர்ந்தவராகிய சூதபுராணிகர் மிகுந்த விசுவாசத்தோடும் சூராதிகளோடுக்க வரலாற்றைச்சொல்ல அதைக்கேட்ட நைமிசாரணியவாசிகள் சேவித்தெழுந்துநின்று பின்னர்நடந்த சரித்திரங்களையும் எங்களுக்குச் சொல்லியருளவேண்டுமென்று பிரார்த்திக்கத் தவச்சிரேஷ்டராகிய சூதபுராணிகர் சொல்லத்தொடங்கினர்.

கேட்டீர்களோ! சவுனகாதிமுனிவர்களே! இவ்விதமாக மாயைசொன்னதைக்கேட்ட அசமுகியானவள் பின்னும் மாயையைப்பார்த்து, என்னன்னையே! என் தமையன்மார்களாகிய சூராதிகளின் பூர்வவிருத்தாந்தத்தைச் சொல்லத் தெரிந்துகொண்டேன். இனி என்னுடைய பூர்வநிலையையும் சொல்லவேண்டுமென்ன, அதனைக்கேட்ட மாயையானவள் அசமுகியைப் பார்த்து, அம்மா மகளே! உன் பூர்வவரலாற்றையும் சொல்லுகிறேன் கவனித்து கேட்பாயாகவென்று சொல்லத்தொடங்கினள். சப்தசமுத்திரங்களின் மத்தியிலிருக்கும் தீவுகளில் கோமேதகதீவென்றொரு தீவுண்டு. அந்தத்தீவில் நான்கு வேதங்களையுமுணர்ந்த வசிட்டனென்றொரு பிராமணனிருந்தான், அவன் ஒப்பில்லாத பெருங்கற்பினையுடைய சுவேதையென்பவளைக் கலியாணஞ்செய்து இல்லறதருமத்தில் வழுவாது வாழ்ந்துகொண்டிருக்கு நாளில் அவ்விருவருஞ்செய்த பெருந்தவத்தினால் சித்திரரேகை யென்றொரு பெண்பிறந்தாள், அப்பெண்ணானவள் சவுந்தரியமெல்லாந்திரண்டு ஒரு வடிவங்கொண்டதை யொத்தவள், அவளுடைய வாய்மொழியாகிய குதலைச் சொல்லைக்கேட்டாலும் உலர்ந்த மரங்களுந்தழைத்தரும்புவிடும், பொன்னினாற்செய்யப்பட்ட அழகிய சிலம்பானது தழைத்த ஓசையாக மெல்லென ஒலிக்கும் தளர்நடை பயின்று தன்னைத் தவஞ்செய்துபெற்ற தாயானவள் கண்களித்திருக்கும்படி வளர்ந்து ஏழுவயதடைந்த காலத்தில் அக்கோமேதகத் தீவிற்குச்சமீபத்தில் பூச்சகிரியென்று சொல்லப்பட்ட ஒருநகரமுண்டு. அந்நகரத்தினிடத்தில் பிராமணகுலசிரேஷ்டனாகிய அரிசன்மனென்பவனுக்குப் புண்டரீகசன்மனென்றொரு புத்திரன்பிறந்து நல்லொழுக்கமுள்ளவனாய் வளர்ந்து அந்தந்தக் காலங்களிற் செய்யவேண்டுவதாகிய உபநயனாதி காமியங்களைச் செய்யப்பெற்று நான்குவேதங்களையும் குற்றமறக்கற்றுவளர்ந்து அந்தச் சித்திரரேகை யென்பவளை விவாகஞ்செய்து அழைத்துக்கொண்டுபோய்த் தன் வீட்டைச்சேர்ந்தான். அதுமுதல் அச்சித்திரரேகையானவள் அழகெல்லாம் ஒருங்குசேரும்படி வளர்கின்றவளாயினள். ஓ சவுனகாதிமுனிவர்களே! எப்படிவளர்கின்றாளென்றால், அவளுடைய கண்களானவை கொடுமை பொருந்திய விஷத்தையும் அமுதத்தையு மெடுத்துக்குழைத்து ஒன்றுபடச்சேர்த்து இருக்கவைத்ததென்று சொல்லும்படி மருட்சியையுடையனவாயும், அரிபரந்தவைகளாயும், குழையளவுஞ் செல்வனவாயும், கருமைநிறமுள்ளவைகளாயும், வெண்மை நிறமுள்ளவைகளாயு மிருக்கும். அவளுடைய கூந்தலோவென்றால், நிறைந்த இருட்கூட்டமானது ஒழுங்குபட்டுநின்றதோ, கருப்பம்நிறைந்த மேகத்தின் கருங்கொழுந்து ஓரிடத்தில் தளிர்த்ததோ, அஞ்சனமானது மயிராக விழுதுவிட்டுநின்றதோ, இன்னவிதமென் றெவ்வாறு

மதிக்கக்கூடும். சிந்தூரப்பொட்டணிந்தநெற்றியானது ஒருகலையுடன்கூடின்த பிறையானது முத்துடன் முற்றியபின்பு இருளை யிரண்டு வடிம்பாகக் கீழே வைத்து அதற்கடுத்த மேற்புறத்தில் அப்பிறையை வைத்திருப்பதுபோலக் கருமை நிறம்பொருந்திய வுருவத்தோடு விளங்கும். காட்டிற் சஞ்சரிக்கும பசுமை நிறம்பொருந்திய மயிற்கூட்டங்கள்கூடி, அவளுடைய சாயலைக்கண்டு மயங்கிக்கொண்டிருக்கும். அவளுடைய குதலைச்சொல்லோவெனில், தளிர்கள்பொருந்திய மாங்கிளைகளிடத்திலிருந்து கூவுகின்ற குயிலினது குரலோசையைத் தேவாமிர்தத்துடன் சேர்த்ததற்கொப்பாகும். அந்தப்பெண்ணின் தந்தவரிசைகள் வெண்மைநிறம்பொருந்திய பூரணசந்திரனைப்பிதிர்ந்து முறை முறையாகத் திருத்தியழுத்தி வைத்தவைகளோ, தேவாமிர்தத்தை முல்லை யரும்பு வடிவாகச்செய்து அதனிடத்துமுதிர்ந்த வெண்ணிலவைப்பொருத்தி வைத்தவைகளோ வொன்றுந்தெரியவில்லை. வட்டமாகிய பொற்சுருளோலை விளங்கிக்கொண்டிருக்கும் வள்ளைததணையொத்தகாதுகள் முன்னெரிறந்து போன மன்மதனுக்கு உயிர்கொடுத்தனவாகும. தோள்களோவெனில், சகரர்களால் தோண்டப்பட்ட சமுத்திரஞ்சூழ்ந்த பூலோகத்திலிருக்கும் உயிர்களைக் சூறைகொண்டுண்ணும்படி எமன் கையினுல் திருத்தஞ்செய்துவைத்த குறியேயாகும். இலவம்பூவிற் பவளக்கொத்தைவைத்து முருக்கமலரிலிருக்குஞ் செம்மைநிறத்தை வழித்துக்கலந்து வீழிப்பழத்திற் கொடுத்ததென்று சொல்லலாய்ப் பாற்கடலிலுண்டாகிய வமுதமூறும்படியான சிவந்த விதழை யுடையவள். மங்கைப்பருவத்தி லுண்டாவதாய்க் கணகறுத்துக் கிடைத்தற்கரிய வமுதத்தை யுள்ளே நிறைபீக்கொண்டு தென்னங்குருமபையினை யொத்து மேற்புறத்திற் தேமல்பரந்து மிகவுஞ்சுருங்கிய விடையானது தாங்கமாட்டாதென் றிரங்காமல் இருபுறத்து மொளிநிறைந்து காமுகரை வருத்துந்தன்மையினை யுடைய விரண்டுதனங்களையுடையவள். அவளுடைய இடையானது மெல்லிய கலையானது சுருங்க அந்தக் கலையுடன்கூடிப் பார்வைக்குத்தெரியுமியல்பில்லாமையைப்பெற்று உலகங்களையெல்லா மயக்கிய மன்மதனிறந்த பின்னெடுத்த அருவமென்று சொல்லலாகியும், அவனுயிராமென்று சொல்லும்படியும் விளங்கும் அரும்பையொத்த தனத்தினிடத்தில் விருப்பம்வைத்துள்ள ஆடவர்களின் விருப்பமானது எவ்வளவு விசாலித்திருக்குமோ அவ்வளவு விரிவையுடையதாயும, அவர்களுள்ளத்தைப்போலவு மகன்றிருக்கின்ற நிதம்பத்தை யுடையவள். குளிர்ச்சி பொருந்திய இவளுடைய பாதமாகிய செந்தாமரைமலரானது சிலம்பாகிய சூரியகிரணத்தாற் கருகித்தன்னொளி கெடாமல் அந்தச்சூரியனுக்குந்தன்னொளியாகிய செந்நிறத்தைத்தந்ததென்று சொன்னுல்அப்பாதத்தின் சிறப்பைச்சொல்லக்கூடுமோ. சந்தனத்தையுடைய பொதியமென்னும் பெண்ணனவள் கருவுயிர்த்தீனத்தவழ்ந்துசென்ற தென்றலாகிய குழந்தையின் தளர்நடையேயாகும். அல்லாமலும்காமுகரைமயங்கச் செய்கின்ற அவளுடைய நடைக்குவமமானது பெட்டையானையின் நடையே யல்லது வேறே யெதைத்தானுவமை சொல்லக்கூடும்.

கேட்டீர்களா! சவுனகாதிரிஷிகளே! இத்தன்மையான அழகுபொருந்திய சித்திரரேகையென்பவளைப் புண்டரீகசன்மனென்னும் பிராமணன் விவாகஞ்செய்துகொண்டபின்பு தன்னுயிர்க்குயிர்போலத் தழுவிவாழ்ந்திருந்தான். அப்பிராமணனே எப்படிப்பட்டவனென்றால் இவ்வுலகங்களை யுண்டுமீட்டும் உமிழ்ந்தும் அளந்தவருமாகிய ஸ்ரீமந்நாராயணமூர்த்தியின் திருவடிகளைத்துதி செய்து தவமுயற்சியினடப்பவனும் தருமநெறியில் வழுவாதவனும், உலக நடைக்கு விரோதமில்லாமல் ஒத்துநடப்பவனும் துளபமாலையணிந்தமார்பினை யுடையவனும், சுருங்கிய வுத்தரீயத்தை யுடையவனும், தாமரைமணியை யணிந்தவனும், அத்தாமரைமலரில்வீற்றிருக்கும் இலக்ஷ்மியின் கேள்வனுகிய நாராயணமூர்த்தியைத் தன்னுள்ளத்தில் தியானித்துத்துதிக்கும் வைணவ சமயத்தில் தலைமைபெற்றவனுமாயிருப்பவன். இப்படிப்பட்ட பெருந்தன்மையையுடைய புண்டரீகசன்மனென்னும் பிராமணன், சித்திரரேகையைப் புணர்ந்து நீங்காத காமக்கடலில்மூழ்கினவனுயிருந்தான். மாறுகிய மனத்தை யுடைய அந்தசித்திரரேகையானவள் சிலநாளிவனுடன் இன்பங்கொண்டிருந்தாள். இவ்வாறு வாழ்ந்துகொண்டிருக்குநாளி லிந்தப் பிராமணனுக்கு வறுமைக்காலம்வர, அவ்வறுமையைக்கண் டிரக்கங்கொண்டு துளபமாலிகாபரணராகிய ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் சிந்தாமணியைக்கொடுக்க அச்சிந்தாமணியானது மிகுந்த திரவியத்தைத் தரப்பெற்றுத் தன்னிடத்திற் கல்விகற்றுக் கொண்டிருந்த பலசீடர்களுக்குக் கொடுத்துச் சிறப்பாக விருக்குநாளில் இவன் மனைவியாகிய சித்திரரேகையானவள் தன்வீட்டிலிருந்து இல்வாழ்க்கைக்குரிய கற்புநிலையையிழந்து அவனுடைய சீஷர்களைவிரும்பிப்புணர்ந்து குறிப்புவேறுகி யொருவழிப்பட்ட மனமில்லாமல் காமமதிகப்படத் துன்பமுறுவாள்; வாளாயுதம்போன்ற கண்களால் காமுகருயிர்கெடும்படி மயக்குவாள்; அவ்வாறு மயக்கித் தனக்குள்ளதிகப்படுகின்ற காமநோய் நீங்கும்படி அவர்களுடன்சேர்வாள். ஒருநாளில் ஒருநாழிகைப்பொழுதிலும் ஆடவரைப் புணராதிராள் மன்மதலீலாவினோதங்களை விரும்புவதொன்றே யல்லாமல் மற்றொன்றையும் வேண்டுமிடத்து விரும்பாள், சமுத்திரஞ்சூழ்ந்த வுலகத்திலுள்ள பல ஆடவர்களும் ஓரிமைப்போதும்விடாது புணருவாளாயினள். அப்போதந்தச் சித்திரரேகையானவள் தனக்குப்பொருந்திய கலவியினால் மனமகிழ்ந்து தேகமருவருத்துக் காமவெள்ளத்தைப் பெருகச்செய்வாள், கரையாற் கட்டப்பட்டிருந்த நீர்வெள்ளமானது அக்கரை யிடியும்படியிடித்துப் பலகால்களாகச் செல்லுதல்போல இவளுடைய வாள்போன்ற கண்களும் மனமும், ஆடவரிடத்துப் பலவழியாகத்தொடரும்; இப்படிப்பட்டகாமவிகாரத்தையுடைய சித்திரரேகையை அந்தப்பூச்சக்கிரமென்னும் நகரத்தில் வாசஞ்செய்யும் ஆடவர்களில் விரும்பிப்புணர்ந்தவர்கள் வீடுகளிழந்தார்கள், மிகுந்த திரவியங்களையிழந்தார்கள், மயங்கிகினைவிழந்தார்கள், மானமிழந்தார்கள், தங்கள் தங்கள் நிலைமையினையுமிழந்தார்கள்; இவ்வாறிழந்ததன்றி அவர்கள்யாவருமெலும்புமேலெழுந்து தோன்றும்படியான சரீரத்தையுடையவர்களாயினைத்தார்கள்.

கேட்டீர்களோ சவுனகாதிரிஷிகளே? அவளிவ்வாறு பலரையும் புணர்ந்துகொண்டிருக்கும்போது அந்தப்புண்டரீகசன்மனென்னும் வைணவப்பிராமணனிடத்தில், மனத்தில் மிகுந்த நேசமும் தம்முடைய சீடவர்க்கங்களுந்தொடர்ந்துவரப் பரிசுத்தம்பொருந்திய துருவாசமுனிவ ரெழுந்தருளிவர, அதைக்கண்ட அந்த வைணவப்பிராமண சிரேஷ்டனெதிர்கொண்டு மனங்களிந்து, ஐம்புலன்களையும் வென்ற மகாதபோதனரே? தேவரீரிங்கெழுந்தருளுவதற்கு அடியேன்பூர்வத்திலென்னமா தவஞ்செய்தேனோவென்று உண்மையாகிய தவசிரேஷ்டரைத்தொழுது சுவாமிகளே? தேவரீர் திருவடிகளைச் சாத்தியதால் ஏழையேன் சிறுகுடிலெத்தவஞ்செய்ததோ! அடியேன் செய்த தவமானது இப்போதுதான் சிறப்பையடைந்ததென்றிவ்வாறு அம்முனிவருடைய புகழையன்புடனெடுத்தேத்தித் தன்மாளிகைக்கு ளழைத்துக் கொண்டுபோய், அவருடனொருமண்டபத்தைச்சேர்ந்து அவருக்கு ஆசனங்கொடுத் தெழுந்தருளப்பண்ணிப் பின்பருச்சனைசெய்து சேவித்துநின்று சுவாமிகளின்றைக்கிங்கே திருவமுது செய்தருளவேண்டுமென்று பிரார்த்தித்துத் தன் மனைக்குட்போய் மனைவியைப்பார்த்து, அடிபெண்ணே? இம்முனிவருக்குத்திருவமுது சமைக்கவேண்டுமென்று சொல்ல அவளுமவ்வாறே சமைத்துத்தெரிவிக்க, அவளைப் பார்த்து இச்சமையலை அம்முனிவருக்குக்கொண்டுபோய்ப் படைக்கக்கடவாயாகவென்று கட்டளையிட, அக்கட்டளையைப் பெற்றுத் திருவமுதெடுத்துக்கொண்டுபோய்மறப்பில்லாதயோகநித்திரை செய்தருளுகின்ற அம்முனிவரைப்பார்த்து விரும்பிய காமக்கலவிசெய்யத் தன்மனத்திலெண்ணங்கொண்டு மேல்விழுந்து அம்முனிவருடையதேகத்தைத்தழுவினள். உடனேதேவர்களுந் துதிசெய்யத்தக்க தவத்தினையுடைய அம்முனிவர் நித்திரைதெளிந்து பார்த்தவளவில்பயங்கொடினவளாய் நாலுதெருவுங் கூடுமிடத்திலிருக்கும் ஓராலமரத்தின் சமீபத்திலிருக்குஞ் செம்மறியாட்டுக்கூட்டத்து ளொளித்துக்கொள்ள, உடனே துருவாசமுனிவர் பெருங்கோபங்கொண்டு தம்முடைய சீடனைப்பார்த்து அவளைத் தேடென்று சொல்ல, அந்தச்சீடன் அதிகவிரைவாகச்சென்று தேடியும் அவளை யவ்விடத்திற்காணாமல் திரும்பிவந்து துருவாசமுனிவருடன் சொல்ல அதைக்கேட்ட முனிசிரேஷ்டர் தம்முள்ளத்தில் இல்லறக்கிரமம் வழுவிக்கற்புநிலையழிந்த பாவியானவள் நாலு சதுக்கங்கூடிய தெருவிலிருக்கும் ஆலமரத்தடியில் நித்திரைசெய்யும் ஆட்டுமந்தையி லொளித்துக்கொண்டிருக்கிறாளென்றறிந்துகொண்டு பழுதில்லாத இல்லறவியல்பினின்றும் வழுவி வேசையைப்போலத்திரிந்து பலரையும் புணர்ந்திருந்த அவளைக்கொண்டுபோயுயர்ந்த அந்த ஆலமரத்தினுச்சியிலேற்றி யுன்தவப்பெருமையை யாவருமறியும்படி செய்வாயாகவென்று துருவாசமுனிவர் கட்டளையிட, சிஷனவனக்கட்டளையைச் சிரசாகவகித்துக்கொண்டுபோய் வேறுபட்ட சிந்தையையுடைய அவளைப்பிடித்து உயர்ந்த ஆலமரத்தினுச்சியிலேற்றினன். அவளோ வடகாற்றடிப்பதனால மெல்லிய கிளைகளாடுந் தோறுஞ்சுழன்று அலறுவாள், அந்தக் கொம்பைப் பிடித்துக்கொண்டு குலுங்குவாள், இறங்கவேண்டுமென்று தன்மனத்தில்நினைப்பாள். இவ்வாறு துன்பப்பட்டிருக்குமந்தச்

சித்திரரேகையை அந்நகரத்திலிருக்கும் ஆடவர்களும், மாதர்களும்பார்த்து ஆகாயவல்லிக்குமுளாகிய விக்கிரமாத்தினுச்சியிலிவ ளெவ்வாறேறினாள். தவ சிரேஷ்டராகிய துருவாசமுனிவருடைய சாபமொழியானது மிகவுங்கொடியதென்றார்கள். அப்போது அவளுக் குயிர்போன்றவனாகிய அந்தப்பிராமணனவளுக்குச்சம்பவித்ததையறிந்து அவளைவிட்டுப் பிரிந்திருக்கமாட்டாதவனாய் மிகுந்த கிருபைபொருந்திய துருவாசமுனிவனைக்கண்டு துதித்து அடியற்று விழுந்த மரம்போலவீழ்ந்து பணிந்து எம்மையனே? தேவரீருடைய திருவருளில்லாமையா லென்மனைவியானவள் உலகத்தாரெல்லாரும் பழிசொல்லும்படியிருக்கிறாள். ஆகையாலந்த ஆலமரத்தை விட்டிறங்குவதற்குத் தேவரீர் கட்டளையிட்டருள வேண்டுமென்று பிரார்த்திக்க, அவனைநோக்கி யில்லறதருமத்தையிழந்தவளுடைய புல்லியவொழுக்கத்திற்குச்சம்மதித்திருக்கும் நீசனே! அவள் தனத்தை யிவ்வுலகத்திலெல்லார்க்குங் கொடுத்தாள். இப்படிப் பட்டவளை அக்கினிதேவன்முன்பாக உனக்கென்று கொடுத்தார்கள். அப்படியிருக்க அவள் தன்னுடைய இன்பம் பிறருக்குப் பயன்படச் சமைந்திருக்கிறாளன்றி உன்னை யொருபொழுதும் நினைப்பவளல்லவென்று சொல்ல, சுவாமிகளே! அவளெப்படிப்பட்ட குற்றஞ்செய்திருந்தாலுந் தேவரீர் திருவுள்ளத்திற் கொள்ளாமல் ஆலமரத்தைவிட்டு அவளிறங்கக்கடவதென் றொருவார்த்தை சொல்ல வேண்டுமென்று வேண்டிக்கொண்டான். அதைக்கண்ட துருவாசமுனிவர் புண்டரீகசன்மனைப்பார்த்து உன்மனைவியானவள் பதிவிரதாதருமத்தில் வழுவுதலில்லாதவளா யிருந்தாளானால் நீசொல்லுஞ்சொற்படி யுயர்ந்த அந்த ஆலமரத்தினின்று மிறங்குவாள் ஆதலால் நீபோய்ச் சூரியமண்டலத்தையளாவிய அந்த மரக்கிளையிலிருந்து இறங்கும்படி சொல்லென்று சொல்ல, அவனு மவர் சொன்னபடியே சென்று ஆலமரத்தினருகில் நின்றுகொண்டு என்மனைவியே வரக்கடவையென்று சொல்ல, அவள் நாலடியிறங்கி இவ்விடத்தி லிருந்திறங்கக் கூடாமையாயிருக்கின்றதென்றாள். அந்தவார்த்தையைக் கேட்டவுடனிளைப்பினால குந்திக்குந்தித் துருவாசரிடத்திற்கோடி சுவாமி! என் மனைவியானவள் நாலடிக்கிளையிறங்கி யாசையை முதலாகக்கொண்ட மயக்கத்தினாலதன் கீழிறங்கமாட்டாமலிருக்கின்றாள். இனி யாதுசெய்வதோ, அனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று சொல்ல, அதைக்கேட்ட துருவாசமுனிவர் அப்படியானா லவளைப்புணர்ந்த ஆடவர்களெல்லாரும் அந்த ஆலமரத்தடியில் வந்து இறங்கென்று சொல்வார்களாகிலிறங்குவாளென்றுசொல்ல, உடனே யவளிடத்து மையல்கொண்டிருந்து மயங்கிப் புணர்ந்தவர்களை யெல்லாமழைத்துக்கொண்டுவரவென, அவர்கள்வந்து பெண்ணேயிறங்கென்றார்கள். அப்போது மாதிமரத்திலிறங்கி யவ்விடம்விட்டுப் புறமிறங்கக்கூடாம லங்கிருக்குங் கிளையைப் பற்றிக்கொண்டிருக்கக் கண்டு மீட்டும் துருவாசரிடத்துக்கோடி நின்று நாணத்தினால் சொல்லுகின்றான். சுவாமிகளே! தேவரீர் இவ்வாறு வேடிக்கை செய்வது யாதுகாரணமோ தெரியவில்லை. இனியவளிடத்தில் கடாக்ஷம்வைத்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க, அதைக்கேட்ட முனிவர் உன்னுடைய பேர்களெல்லா மழைத்தாலிறங்குவாள் போவென்றுசொல்ல, உடனே யந்தச்

சீடரும் தானுமாக அந்தமரத்தின் கீழ்ப்போயிருந்து சீடர்களைநோக்கித் தன் மனைவியை யழைக்கச்சொன்னான்; பின்பு அவர்கள் சென்று அழைத்தவளவில் அந்த ஆலவிழுதின்அடிக்கவட்டில்வந்திருந்தாள். அதைப்பார்த்த அவள்புருஷன் தன் குடுமியிலேயவும் தரித்திருக்குந் தாமரைப்பூமாலை புரண்டுபுரண்டலையவும் பெருந்துன்பத்தோடு மிளைக்க விளைக்கவோடி மீட்டுந் துருவாசமுனிவரிடத்திற்சேர்ந்து ஐயரே! என்மனைவியானவள் இருபிரிவாயிருக்கிற கப்புவரைக்கு மிறங்கினாள். அவளை முழுதுமிறங்கும்படி கட்டளையிட்டருள வேண்டுமென்று அந்தப்பிராமணன் வேண்ட, அதைக்கேட்டுத் துருவாசமுனிவர் சொல்லுகின்றார்.

ஓ பிராமணா! உன்மனைவியைப் புணர்ந்தவர்களின் பெயரையெல்லாஞ் சொல்லிச்சொல்லித்தெரிவித்தாலிறங்குவாளென்று துருவாசமுனிவர்சொல்ல மீட்டுமந்தப்பிராமணன், ஆலமரத்தின்கீழ்ப்போய், அடிபெண்ணே! உன்னைப் புணர்ந்தவர்கள் பெயர்களையெல்லாஞ் சொன்னால் இந்தக்கிளையைவிட்டு அடிமூட்டிலிறங்குவை யென்றுசொல்ல அவளிந்தவார்த்தையைக் கேட்டவுடனே அந்தந்த சோரபுருஷரையெல்லாந் தன்மனத்திலெண்ணித் தனித்தனி யவர்கள்பெயர்களையெல்லாங் கூறினாள். அவ்வாறு கூறியபின்பு அந்தக் கிளையைவிட்டிறங்கி யதிற்சேர்ந்த கீழ்க்கவட்டில் வந்திருந்தாள். அதை அவள் கணவன்கண்டு, துருவாசரிடத்திற்போய், அருந்தவக்கடலே! சரணஞ்சரணம் என்மனைவியானவ ளெவ்விடத்தினு மிறங்கமாட்டாதவளாயிருக்கின்றாளாதலால்இனித்தத்துவாதீதனாகியசிவத்தினுண்மைநிலையை யாராய்ந்தறிந்த தேவரீரவ்விடத்திற்குவந்தா லந்தக்கிளையைவிட் டிறங்குவாளென்று சொல்ல, அந்த வைணவப்பிராமணன் வார்த்தையைக்கேட்ட துருவாசமுனிவர் புன்னகை கொண்டவராய் அவனாசையைநோக்கி மனமிளகித் தம்முடைய சீடர்களோடுமந்த வாலமரத்தருகிற்சேர்ந்து அவளை வேதவிதிப்படி விவாகஞ்செய்துகொண்ட புருஷனாகிய புண்டரீகசன்மன் முகத்தைப்பார்த்து ஓ பிராமணா! உன் செய்கையானது தாழ்ந்த வொழுக்கத்திற் சிறந்தது, வாள்போன்ற கண்ணையுடைய இவள் வேசையென்பதை யுணர்ந்தும் மிகுந்த ஆசையினா லிவளைப் புணர்ந்திருந்தாய், அதனாலுன்னுடைய குற்றமில்லாத தவத்தின் பெருமை குறைந்தனை, இவளித்தன்மையளாயிருப்பதைக்கண்டும் வேறொரு பெண்ணை விவாகஞ்செய்து கொள்ளாமலிருந்தாய், இவளிதுவரையில் செய்த பாதகங்களில் பாதி யுன்னைச்சேர்ந்தன; ஆகையால் நீயும் திரிபுரதகனராயுள்ள பரமேசுவரன் திருவடிகளைச் சேரமாட்டாயென்று துருவாசமுனிவர் சொல்லிய வார்த்தையைப் புண்டரீகசன்மனென்பவன் தன்னறிவில் யோசித்துவேறொரு வார்த்தையுஞ் சொல்லாமல் ஓ முனிவரே! நீர் சமயவிரோதத்தை யுட்கொண்டு எனக்கிந்த சாபங்கூறினீரென்றுசொல்ல, அதைக்கேட்ட துருவாசமுனிவருக்குக் கோபமுண்டு மனத்தி லதிகதுயரமுண்டாக அவனைப்பார்த்து அடா தியானபங்கனே! உன்பெயர் யோனிமனத்தினனென்று வழங்கக்கடவதென்று பின்னுஞ் சபித்து நீ புன்மைத்தன்மையுள்ள புறச்சமயத்திலிருந்து; எலும்புமாலையும் எருக்கம்பூமாலையுமணிந்த செம்பெருமான் திருவடியை யன்ப

கொண்டு போற்றுகின்றவனல்லே. ஆன்மாக்களுடைய பாசபந்தங்களை யறவே யொழிக்கத்தக்கதாகிய விபூதியினையும் விரும்புகின்றவனல்லே. அந்தப்புன் புறச்சமயத்தனுகியே போகக்கடவை போகக்கடவையென்று கூபித்து அவ னருகிலிருக்குஞ் சிடனைப்பார்த்துப் பெருங்கோபங்கொண்டு ; ஓ சீடர்களே! மயங்குகின்ற உங்கள் மனவேறுபாட்டை நீக்கி வேதமோதுஞ் சிந்தையராக் கிய குருவின் பத்தினியை விரும்பினீர்களாகையால் உங்கள் பத்தினிமார்க ளும் வேசையராவார்களென்று சொல்லிக் கண்களில் நெருப்புப்பொறிபறக் கத்தக்க கோபமுடையவரா யவர்களுக்கநேக சாபவசனங்கூறி அப்போது மனம் வருந்திக்கொண்டிருக்கிறவள் தொத்திக்கொண்டிருக்கு மாலமரத்தைப் பார்க்க அவள் நீண்ட கூந்தலானது மேனிமுழுதுங் கவியவும், அந்தப்பெரிய மரத்தைச்சார்ந்திருக்கிற மார்பினிடத் துதிரம்பொங்கவும், சோர்ந்து ஆலமரத் தைத் தொத்திக்கொண்டிருக்க அவளைப்பார்த்து துருவாசமுனிவர் சொல்லு கின்றூர். பலரும் விரும்பத்தக்க குவிந்த முலையினையுடைய சித்திரரேகை யே! நீ இங்கே நம்மேல்விழுந்து நமது மேனியைத்தீண்டினமையால் கொடிய அசுரர்குலத்திற்பிறந்து நீங்காத காமவிகாரம் பெற்றிருப்பை, ஆட்டின் கூட் டத்து ளொளித்திருந்தனையாதலால், உன்முகமாத்திரம், ஆட்டின்முகமாகும், அந்த அசுரகுலத்திற்பிறந்தும் பலரைப் புணருங்காமம் ஒருகாலுமொழியா திருப்பை யென்றுசொல்லி இனி மரத்தைவிட்டிறங்கிப்போவென்று சொல்ல வும் பழிநேரிடச்செய்த அந்தப்பாதகியானவள் அம்மரத்தைவிட்டிறங்கித்துரு வாசமுனிவர் திருவடியையடைந்து என்னையனே! தேவரீர் இப்போது என் னையும், என்கணவனையும், அவருடைய சீடர்களையுஞ் சபித்து நிந்தை செய்தீ ராலும் உம்மிடத்தில் சிந்தையைவைத்த நான் இனி எந்த ஆதாரவைக்கொ ண்டு தேறுவேன். இத்தனை பாடுபட்டும் எளியவளாகிய நான் தேவரீர் திரு வடிகளைப் பரிசிக்கும்படிக்குத் திருவருள்செய்ய வில்லையென்று ஆசையுடன் அவ ளிரந்ததனுல், துருவாசமுனிவர் அவளைப்பார்த்துச் சொல்லுகின்றூர்.

நுண்ணிய இடையினையுடைய சித்திரரேகையே! ஒருவர்செய்த பாதக மெல்லா மவர்களே பகுத்துச்சொன்னுல் தொலைந்துபோமென்று ஆயிரம் பணமுடிகளையுடைய ஆதிசேடனுற் சுமக்கப்பட்ட இந்நிலவுலகத்தில் சொல் லப்படுகிற பழமொழியை நீயறிவையே, ஆதலாலுன்பாவமெல்லாம் நீங்கிப் போய்விட்டன. இனி நீ பெண்ணுருவங்கொண்டு அசுரகுலத்தி லிருக்கு நாளில் காமவிருப்பத்தினு லுன்கண்ணினுக் கின்பமாயிருப்பவர்களைக் கைக் கொண்டு, உன்னழகிய தனங்களால் தழுவிப் புணருவை; அப்படி இருக்குங் காலத்தில் நாமங்குவருவோம். நீ அங்கே நம்மைக்கண்டு தொடர்ந்து புணர் ந்து உன் காமவிருப்பமொழிந்து அந்தக்குலத்திற்குப்பொருந்திய இரண்டு புத் திரர்களைப்பெறுவாய், அன்றியும் பெருமைபொருந்திய சிவகணங்களுடன் சேர்ந்த அரிகரபுத்திரனைக்காக்கும் மாகாளர்கையினுல் மூக்கும் முலையும் கையுமிழந்து விழுந்து துன்பப்பட்டழுவை யென்றுஞ்சபித்து, அம்மாகாளர் தொடுவதினுல் அன்றுவரையில்செய்த பாவமெல்லாம் நீங்கி நல்லுணர்ச்சியை யடைந்து நீர்வளம்பொருந்திய சுனைகளையுடைய ஸ்ரீசைலத்தைச்சேர்ந்து நீக்

குதற்கரிதான தவஞ்செய்துகொண்டிருப்பாயாகவென்று கட்டளையிட்டருளினார். அடிமகளே அசமுகி! அத்துருவாசமுனிவராலனுப்பப்பட்டவள் நீதானாகும், அப்படிப்பட்ட தன்மையையுடைய நீ என்னருந்தவப் புத்திரியாகப் பிறந்தனை. அந்தத் துருவாசமுனிவர்கூறிய சாபமும் விமோசனமாயிற்று, ஆதலாலினிமுதல் பாவத்தினின்றும் நீங்கித்தவஞ்செய்வாயாகவென்று மாயையானவள் தன்மகளாகிய அசமுகிக்குச் சொன்னதாகச் சூதபுராணிகர் நைமிசாரணிய முனிவர்களுக்குச் சொல்லியருளினார்.

அசமுகிவரலாற்றுப்படலம்.

முற்றிற்று.

மாயைவரலாற்றுப்படலம்.

என்றுரைத்துணர்த்துமாயைதன்முகமினிதநோக்கி
வன்றிறமுருட்டுக்கொங்கையசமுகியறித்துங்கேட்கு
நின்றவென்னியற்கையெல்லாநிகழ்த்தினைநிகழ்ந்தாநின்ற
உன்றனதியற்கையெல்லாம்புலப்படவுரைத்தியென்றாள்.

இவ்விதமாகச் சூதபுராணிகர் நைமிசாரணிய வாசிகளைப்பார்த்து, அசமுகி பின் பூர்வவரலாற்றைச் சொல்லக்கேட்டுச் சேவித்தெழுந்து ஓ தவப்பெருங்கடலே! அசமுகியானவள் அசுரர் குலத்தில்வந்த சரித்திரத்தைத் தேவரீர் சொல்லக்கேட்டு நன்றாகத்தெளிந்தோம். பின்னர் நடந்த சரித்திரங்களையும் சொல்லவேண்டுமென்று கேட்க, சூதபுராணிகர் சொல்லத்தொடங்கினார். இவ்வாறு அசமுகியானவள் தன்வரலாற்றைச் சொல்லித்தெரிவித்த தாயாகிய மாயையின் முகத்தைப்பார்த்துச் சொல்லுகிறாள். அன்னையே! என்னுடைய முற்பிறப்பின் செய்கையையெல்லாம் நன்றாகச்சொல்லினை. இனி உன்னுடைய பூர்வ ஜனனத்தின் செயற்கைகளையும் தெரியச்சொல்லவேண்டுமென்றுசொல்ல மாயையானவள் சொல்லுகிறாள்.

பூர்வகாலத்தில், காசிபமுனிவருக்கு நானொருபத்தினியாகி இல்லறநடத்திக்கொண்டிருந்து அவருக்கு பலகோடி புத்திரர்களைப்பெற்றேன். அந்தப் புத்திரர்களெல்லாம் தேவர்களோடு போர்செய்து அவர்கள் கையிலுள்ள ஆயுதங்களாலுயிர்விட்டிறந்தார்கள், அந்தப்போர்முகத்தில் இறந்துபோன புத்திரர்களிடத்தில் சித்தத்தைச்செலுத்தித் துன்பத்திற்கிடனாகிப் பலநாளிரங்கியழுது, கற்பகவிருட்சத்தின் கீழிருக்கும் இந்திரன்முதலாகிய சத்துருக்களை வெல்லும்படியாகநினைத்து, இமயமலையில்வந்து உயர்ந்திருக்கின்ற அசனுச்சியிலேயேவிழுந்து உயிர்விட்டேன். பின்பு அசுரேந்திரனுக்குப் புத்திரியாய்ப் பிறந்து மாயையென்றும் பெயருள்ளவளாய், காசிபமுனிவருக்குப் பத்தினியாகி உங்களையெல்லாம்பெற்றுப் பகைகொண்டிருந்த தேவர்களுடையபொன்னுலகத்தையெல்லாம் மீளாத சிறையிலிருக்கவைத்து என்மனத்திற்கொண்டிருந்த துயரந்தீர்ந்தேன். என்பிள்ளைகள் நால்வரும் யாவருக்கும் பெறுதற்கரியபேறு பெற்றார்கள். வள்ளைத்தண்டையொத்த நீண்ட காதினையுடைய

அசமுகியே! நானுமிந்தப் பெரியமலையினிடத்தில் வந்தேன். இங்கிருந்து நல்ல தவஞ்செய்து கைலையங்கிரியைச்சேர்ந்து மேல்வருநாளில் உமாதேவியார் திருவடிகளைச்சேர்வேன். இனி நீ பெறுங்கதியு மின்னதென்று இப்போதே சொல்லுகின்றேன்.

அஃதென்னவென்றால், நீயும் அந்தப்பெரிய கைலையங்கிரியைச் சேர்வாயென்றுசொல்ல, அதைக் கோபாக்கினியுடன்தோன்றிய அசமுகியானவள் கேட்டு பெருமகிழ்ச்சியடைந்து மாயையைப்பார்த்து அன்னையே! உன்னைப் பிரிந்தபின்பு காசிபமுனிவரானவர் எவ்வாறு தனித்திருந்தனரோ, அதனையுஞ் சொல்லவேண்டுமென்றுகேட்க மாயையானவள் சொல்லுகின்றாள். வளைத்த வில்லிற்பூட்டிய பாணவருஷங்களை மன்மதன் பொழிவதனால் தனியாயிருந்து வருந்தி வாடைவீசுவதினால் வெதும்புகின்றவனும் சந்திரன்வடவாமுகாக்கினியைப்போலத் தீயைவிசுதலால் பதைப்பவனும், தென்றிசையிலிருந்துவருந் தென்றலைநோக்கி மெழுகுபோலமனமுருகுகின்றவனுமாய்க் காசிபமுனிவர்வருந்தப்பட்டுக்கொண்டிருக்க அந்தநிலையைப் பிரமதேவனறிந்துவந்து காசிபமுனிவனைப்பார்த்துத் தவசிகளுக்குள் மேலான தவமுள்ளவனே! கரும்புவில்லிலிருந்து வருகின்ற பஞ்சபாணங்களுக்குக் குறியாயிருந்து துன்பத்திலழுந்தினாய்; இது உனக்குத் தகுதியல்லவென்று பல இனிய வசனங்களைச்சொல்லி இடரை நீக்கி மனத்துன்பத்தை யாற்றினான். பின்பு காசிபமுனிவருந் துயர நீங்கிப் புலத்தியமுனிவர் புத்திரியை விவாகஞ்செய்துகொண்டு மிகுந்த துயரத்துக்கேதுவாயிருந்த விரகாக்கினியை யொழித்திருந்தாரென்று தாயாகிய மாயைசொன்னதை அசமுகிகேட்டு அதிசயமடைந்தவளாய் மாயையைப்பார்த்துத் தாயே! இவைகளையெல்லாம் நீயறியப்பெற்றதற்குக் காரணமென்னமோ அதைச்சொல்ல வேண்டுமென்று வேண்ட மாயையானவள் பொருந்துதற்கரிய தவத்துடன்தோன்றிய சுக்கிரபகவான்சொல்ல இந்த நிலைமையெல்லாமறிந்தேன். இதுவுமல்லாமல் திரிகாலங்களையு மறிவேனென்றுசொல்ல, இவையனைத்தும் நன்றாகக்கேட்டுணர்ந்த அசமுகியானவள் பின்பு மாயையினுடைய பாதங்களைவணங்கித் துதித்துக் குற்றங்களெல்லாமொழியப்பெற்ற நல்ல தவமுயற்சியைப பெற்றவளாய் மாயையுடனிருந்து தவஞ்செய்து தேவர்கூட்டங்களெல்லாஞ்சூழ்ந்து சேவித்திருக்கும் ஸ்ரீகயிலாயத்தைச் சேர்ந்தாளென்று இங்குநடந்த சரித்திரங்களின் தன்மைகளையெல்லாமெடுத்துக்காட்டி மலர்ச்சோலைகள்சூழ்ந்த நைமிசாரணிய முனிவர்களுக்குச் சூதபுராணிகர்சொல்ல அவர்கள் பெருமகிழ்வடைந்து சடைமுடியசைத்து மிகுந்த பேரானந்தங்கொண்டார்கள்.

மாயைவரலாற்றுப்படலம்

முற்றிற்று.

சிவமுனிவர்முதலியோர்வரலாற்றுப்படலம்.

செய்யநாண்மலர்த்தாமரைச்செங்கண்மால்
வையமேழ்தொழவாமனனாகியே
யுய்திறந்தருபேந்திரனென்னவே
பொய்யில்கேள்வியனோடும்பொருந்தினான்.

இவ்விதமாகச்சொல்லிய சூதபுராணிகர் சவுனகாதி முனிவர்களைப்பார்த்துப் பின்னுஞ்சொல்லுகின்றார் கேளுங்கள் முனிவர்களே! செவ்விய தாமரைக்கண்களையுடையவராகிய விஷ்ணுவானவர் உலகமெல்லாம்போற்றத்தக்க மகிமையுடன் வாமனாவதாரங்கொண்டருளிய காலத்தில் அவருக்கு உபேந்திரர் என்னும் பெயருண்டாயிற்று. அதாவது இந்திரனுக்குத்தம்பி என்பதேயாம். அப்படி உபேந்திராவதாரஞ்செய்தபோது பொய்தீர்ந்த கேள்விகளையுடைய ஆசிரியனிடஞ்சார்ந்து நல்ல கேள்விகளைக்கேட்டு, அக்கேள்வியின் பயனையடைந்து வருவாராயினர். இப்படி நடைபெற்று வருங்காலத்தில் ஓர் நாள் துளவமாலையணிந்த அவ்வுபேந்திரமூர்த்தியானவர் தமது அவதாரத்துக்கு அதிஷ்டானப்பொருளாகிய கௌஸ்துவாபரணமணிந்த நாராயணமூர்த்தியை வணங்குதற்கு திருவைகுந்தம் என்னும் அவருடைய உலகத்துக்குப் போயினர். அந்தச்சமயத்தில் கண்ணுவர் என்னுஞ் சிவயோகியானவர் அவ்விடம் விஷ்ணுவை ஆசீர்வதித்தருளும்பொருட்டு வந்தனர். அப்போது மூலமூர்த்தியாகிய ஸ்ரீ விஷ்ணுபகவானும் அவருடைய சத்தியாகிய ஸ்ரீமகாலட்சுமியும் அவருடைய அவதாரமூர்த்தியாகிய உபேந்திரரும் அம்முனிவனைக்கண்டு எழுந்து வணங்காமலுமவந்தவனை உபசரியாமலும், அவரோடொன்றும் பேசாமலும் தங்கள் செல்வங்களையே பெரிதாகமதித்து இறுமாந்திருந்தார்கள். இவ்வதிசயத்தைக்கண்ட முனிவர் கோபத்தீயெழச்சிரித்து அவர்களைப்பார்த்துச் சொல்லுகின்றார். ஓ பேதைகளே? நெற்றியிலே கண்ணையுடையவரும், உமா சகாயருமாகிய சிவபெருமானுக்கு நான்வழித்தொண்டனென்று நீங்கள் அறிவீர்கள் அப்படியறிந்திருந்தும் என்னை அவமதித்தீர்களாகையால், நீங்கள்சிவனையே பழித்தவரானீர்கள், ஆகையால் உங்களுக்குத்தக்க தண்டம் விதிக்கவேண்டியிருக்கின்றது, உங்களுக்குண்டாயிருக்கின்ற செல்வங்களெல்லாம் எப்படியுண்டாயின, சிவபூசையின்பலத்தால் யாவுங்கிடைத்திருப்பதைச் செல்வச்செருக்கால் மறந்தீர்களாகையால், இதோ சாபங்கொடுக்கின்றேன் பிடியுங்களென்று முதல் விஷ்ணுவைப்பார்த்து நீபூமியில் பலசன்மங்களெடுத்துழன்று ஊமையைப்போற் பேதையாய்த் திரியக்கடவாயென்றும், ஸ்ரீமஹாலட்சுமியைப்பார்த்து நீயும் என்னை அவமதித்தாயாகையால் உன்னுடைய தேககாந்தியும், சுபங்களுமொழிந்து கொடியபாலைநிலத்தில் பெண்மானாகப்பிறந்து அலையக்கடவாயென்றும், உபேந்திரனைப்பார்த்து நீயாவரும் பழிக்கத்தக்க வேடுவனாகப்பிறந்து காட்டிலுழன்றுதிரிமூடனாய்த்திரியக்கடவாயென்றும் முறையே மூவருக்குஞ் சாபமிட்டருளித்திரும்பித் தம்முடைய ஆசிரமம் போய்ச்சேர்ந்தனர்.

இவ்வாறு சாபத்தால் கட்டுண்டமூவரும் முனிவர் சொற்படியே எய்தப்பெற்று வருந்தினார்கள்; இவர்களில், விஷ்ணுவானவர் கமலையென்னும் பேருடைய தன்னுடைய மனைவியானவள் முன்னோர்காலத்தில் தானிறக்கக்கண்டு தன்னைப்பிழைப்பூட்டவேண்டிச்சிவனை அர்ச்சித்து அவரிடம் பதிபிக்ஷையடைந்த காரணத்தால் கமலாலயம் என்னும்பேரை வகித்திருக்கும் உத்தமக்ஷேத்திரத்தையடைந்து திரிகரணங்களாலும் வழிபட்டுச்சிவலிங்கத்தை நீங்காமல் தவமியற்றினர். அப்போது சிவபெருமான் அவருடைய அன்பருக்கு எளியராகி வெளிப்பட்டுத் தரிசனந்தந்தனர். அவ்வற்புத தரிசனத்தைக்கண்டு மகிழ்ந்து சங்கமேந்திய கையையுடைய விஷ்ணுமூர்த்தி அவரைக்கண்ட மாத்திரத்தில அடியற்றபனைபோலப் பூமியிலவீழ்ந்து வணங்கி நெஞ்சநெக்குருகக் கண்களில் நீர்ததும்பநின்று இரண்டுகரங்களையுஞ் சிரமேற்குவித்துக்கொண்டு தோத்திரஞ்செய்தனர். அதனால ஸந்துஷ்டியடைந்து சந்திரசூடராய் விளங்குஞ் சிவபெருமான் அவருக்கு இன்பத்தைவிளைத்து, உன்மனத்திற்கொண்ட கவலை யாது! நீ நமக்கு மகிழ்ச்சியுண்டாக எமமைப்பூசித்தாயாகையால், நீகேட்டனவெல்லாந் தருவோமாமகேளென்று திருவுளம்பற்றினார். கன்னிபாகனாகிய சிவனுடைய குளிர்ந்தவசனத்தைக்கேட்டுமகிழ்ந்து பீதாம்பரதாரியாகிய விஷ்ணுமூர்த்தி சொல்லுகின்றார்.

ஓ பரமதயாளுவே! கண்ணுவமுனிவரை நானும், என்னுடைய தேவியும் என்னுடைய அம்சமாகிய உபேந்திரனுமாகிய மூவரும் அவர் ஓர்நாள் என்னுடைய பதியையடைந்தபோது சற்காரஞ்செய்யாமல எங்களறியாமையால் வாளாவிருந்துவிட்டோம, அதற்காக அவர் கோபித்து எங்களுக்குக் கொடிய சாபங்களைத் தந்துபோயினர். கொஞ்சமேனும் இரக்கமின்றி அந்த முனிவர் கோபித்து இந்தப்பூமியில எண்ணிறந்தபிறவியெடுத்து நீ புழலக்கடவாயென்று என்னைப்பார்த்துச் சபித்தனர். என்னுடைய தேவியைப்பார்த்து வெப்பத்தைத்தரும் பாலைநிலத்தில் மானாகப்பிறந்துழல்வாயென்று சபித்தனர். உபேந்திரனைப்பார்த்து ஈனத்தொழிலையுடைய வேடுவனாகப் பிறந்துழல்வாயென்று சபித்தனர் இக்கொடியசாபங்கள் எங்களைத்தொடராதவழி அருள்புரியவேண்டும் எம்மடிகளே யென்று பலவாறுதுதித்து விண்ணப்பஞ்செய்து நின்றனர். அக்காலையில் ஆதிநாதனாகிய சிவபெருமான் அவைகளைக்கேட்டறிந்து உள்ளங்கனிந்து அவர்களுக்கு அருள்செய்வாராயினர். எங்ஙனமெனின் உடனே கண்ணுவமுனிவரை அங்கழைத்து இந்தவிஷ்ணுவுக்கு நீகொடுத்த சன்மங்கள் பலவற்றைமாற்றி ஒருஜன்மமாக்கி விடுவாயென்றனர். அந்தச்சிவாஜ்ஞையைச் சிரசாகவகித்து அம்முனிவரப்படியே யாகுகவென்று செப்பலும், சங்கபாணியாகிய விஷ்ணுவானவர் ஓர்காட்டில் சிவமுனிவர் என்னும் பேர்தாங்கி ஊமராய்ப்பிறந்தனர், அந்தக்காட்டிலே தானே உபேந்திரனானவன் வேடுவனாகப் பிறந்து அலைந்தான். தாமரைப்பூவிலுறையு நங்கையானவள் அவ்வனத்திற்றானே பெண்மானாகப்பிறந்துழன்று திரிந்தனள். இப்படி மூவருஞ்சாபத்தால் மொத்துண்டு எண்ணிறந்த காலமுழன்று கொண்டிருக்கையில் மிகுந்த சீலத்தையுடைய சிவமுனிவருக்கெதிரக ஓர்நாள் அங்கு சஞ்சரித்திருந்த பெண்

மானானது சேர்பட அம்மானைச் சிவமுனிவர் ஆசையோடு பார்த்தனர். அப்படியே அம்மானும் அம்முனிவரை ஆசையுடன்பார்த்து இரண்டு பார்வையுமொத்தமையால் மானுக்கு அப்போதே கர்ப்பமுண்டாயிற்று. இவ்வாறு கர்ப்பத்தையடைந்த மானானது தன்னிச்சையாய்த்திரிந்து சூல்முதிர்ந்துவருகையில் ஓர்நாள் வேடர்கள் கிழங்குகளைத் தோண்டியெடுக்கு மோர்பள்ளத்தில் பிரசவித்துவிட்டது. பிரசவித்தவுடன் கீழேவிழுந்த கன்றைப்பார்த்தது. அது தன்னினமாகக் காணப்படாமையால், இது யாதோவென்று மருண்டு அதை அவ்விடத்திலே தானே விட்டுத்தான்போய்விட்டது. பின்பு உபேந்திரனாகிய வேடன் வில்லெடுத்து வேட்டையாடி மலைச்சாரலிலுள்ள தன்னுடைய குடிசையையடைந்து அதற்குச்சமீபத்தில் வள்ளிக்கிழங்குகளைத் தோண்டியெடுத்துக் கொண்டதனாலுண்டாகிய வோர்பள்ளத்தில் ஓர் தெய்வப்பெண்குழந்தையிருக்கக்கண்டு அதிசயித்து, அதையெடுத்துக்கொண்டு இது யாருடைய குழந்தையோ ? எந்தத் தெய்வமகளிர் இங்கே இதைப் பெற்றுவிட்டுப் போயினார்களோ ஸ்ரீமஹாலட்சுமியே இங்குதித்திருக்கின்றனளோ? என்று பலவாறு சிந்தித்துத் தன்னுடைய இருக்கையிற் கொண்டுபோய் மயிலைப்போலுஞ் சாயலும், குயிலைப்போலும் இனிய குதலைமொழியும் பெற்று வளர்ந்துவரும் அக்குழந்தைக்கு வள்ளியென்னும் பெயரிட்டுத் தன்னினத்தவர் கொண்டாடிக் களிகூர மகிழ்ந்திருந்தனள்.

இவ்வாறு அவ்வள்ளியென்னும் பெயரையுடைய குழந்தையை வேடுவர்களெல்லாம் தங்கள் கண்ணாக்கொண்டுபசரித்து வளர்த்துக்கொண்டு வருகையில், மேல்நடந்த விருத்தாந்தத்தைச் சொல்லுகிறேன் ; கேளுங்களென்று நைமிசவன முனிவர்களைப்பார்த்துச் சூதர்சொல்லுகின்றார்.

ஓ முனிவர்களே! எமதன்னையாகிய வள்ளியம்மையார் ஓராண்டு, ஈராண்டு, மூவாண்டாகவளர்ந்து பன்னிரண்டுவயது அடைந்தபோது வேடுவர்கள் அவரைத் தினைப்புனங்காக்கும்படி வைத்திருந்தார்கள். அப்போது நாரதபகவானால் ஸ்ரீகுமாரநாயகன் அம்மையினது நிலையையறிந்து அவர்பால் வேடுவக்கோலத்துடன் றோணைறித் தம்மைக்கூடி இன்புறக்கேட்டனர். அதற்கவரிசையாமையால் அவர்பால் கெஞ்சி இரந்துநின்றனர். அப்போது வேடுவர்கள் வரக்கண்டு வேங்கைமரமாயினர். பின்னொருதடவையும் அவர்கள் வரவையறிந்து ஓர் தவமுதியர் கோலங்கொண்டணுகினர். இவ்வாறு திருவிளையாடல்பலபுரிந்து, அம்மையார் தம்பாலிரங்கியருளக்கேட்டும் அவரிசையாமையால் தமது முன்னவராகிய விநாயகப்பிரானைத் தமக்கு உதவிசெய்யும்படி வேண்டினர். அப்படியே அவர் அப்போது ஓர் தடமருப்பியானையாகத்தோன்றி அம்மையார் முன்வந்து அச்சுறுத்தினர். அதனால் அம்மையார்பயந்து குமரநாயகனை அடைக்கலம்புகுந்து அவர் வேண்டுகோட்கிசைந்து அணுகலும் அம்மையைக்கூடி குமரப்பெருமான் இன்புற்றனன். இதனை அம்மையினது தாய்தந்தைகளறிந்து எங்கள் குலக்கொடியை நாங்கள் தத்தஞ்செய்யப்பெற்று எழுந்தருளவேண்டும் என்று முருகப்பிரானைக்கேட்டார்கள்.

[illegible]யே எங்கள் தாயை இறைவனை அருட்குருவனை யெய்துகொண டின்று [illegible] மகிமையை முன்னொருமுறை உங்களுக்கு யாமவிரி வாக [illegible] சொல்லினோம்; கேளுங்கள் உலகமாதாவாகிய வள்ளிநாயகி யைச் சிவமுனியாகிய விஷ்ணுபகவானும் பெண்மானாகிய ஸ்ரீமஹாலட்சுமி யும் பெற்றதனாலும், வேடனாகிய உபேந்திரன் எடுத்துவளர்த்ததனாலும், அவ் வெம்பிராட்டியை எமது கந்தவேள் மணந்ததனாலும், மேற்சொன்ன மூவர் களுஞ் சாபங்களிங்கிய பழமையாகிய தத்தந் தெய்வவடிவங்களையடைந்து இன்புற்றார்களென்று சூதபௌராணிகர் சௌனகாதிமுனிவர்கள் மகிழும்படிச் சொல்லிமுடித்தனர்.

வேலுமயிலுந்துணை.

சிவமுனிவர் முதலியோர் வரலாற்றுப்படலம்

முற்றிற்று.

ஸ்ரீகந்தபுராணவசனம்

உபதேசகாண்டம் முற்றுப்பெற்றது.

கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள்

திருவடிவாழ்க.